224172
600 008

Reg., No. M - 2527.

MAR 1931







# யாதவ மித்திரன்.

யாதவமக்களின்
முன்னேற்றங்கருதிவெளிவரும்
மாதப்பத்திரிகை.

தொகுதி 2 || பிரமோதூத ௵ மாசி௴ 1931 ௵ பிப்ரவரி௴ || பகுதி 7





## பொருள் அடக்கம்.

| | |
|---|---|
| கடவுள்வணக்கம் | 198 |
| ஹொய்சள விஷ்ணுவர்த்தனன் | |
| பசு | 200 |
| வீணைக்கொடியோன் வீரத்தம்பியர் | 205 |
| மன்னார்குடி யாதவகுல சங்கம் | 211 |
| மனிதர் வாழ்வு | 212 |
| ஞானகலா விலாசம் | 215 |
| யாதவ வாலிப சங்கங்களும், அவற்றின் அவசியமும் | 218 |
| முக்கிய கவனிப்பு | 220 |
| பெரியார் உரை | 221 |
| மாதர் பரிசு | 223 |
| தஞ்சை யாதவ சங்கம் | 224 |







Managing Editor.
இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
புத்தகவியாபாரம், மதுரை.

# யாதவமித்திரன்.

## ஆசிரியர் கூட்டத்து அங்கத்தினர்கள்

## (Editorial Board Members.)

### தலைவர்.

1. திருவாளர், ஆ. கார்மேகக்கோனார் அவர்கள்
தலைமைத்தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

---

2. ,, ச. செல்லம் அவர்கள் (யாதவர்) சுசீந்திரம்.
3. ,, J. சக்கரபாணி நம்பியார் அவர்கள், பி. எ., பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வைஸ் பிரசிடெண்டு.
ஜில்லாபோர்டு, திருநெல்வேலி.
4. ,, V. கிருஷ்ணரெட்டியார் அவர்கள் (யாதவர்) பி. ஏ. பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வேலூர்.
5. ,, தி. அ. முத்துசாமிக் கோனாரவர்கள், வித்வான்,
திருச்செங்கோடு.
6. ,, K. வீராசாமிப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், முனிசிபல் உயர்தர கலாசாலை,
திண்டுக்கல்.
7. ,, R. வேங்கடா சலம்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர்,
S. P. G. உயர்தரக் கலாசாலை, தஞ்சாவூர்.
8. ,, M. V. வேணுகோபாலப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், E. L. M. F. ஹைஸ்கூல்
புரசபாக்கம், சென்னை.
9. ,, ஐயம்பெருமாள் கோன் அவர்கள், தமிழாசிரியர்,
ஸெயின்ட் ஜோஸப் காலேஜ், திருச்சிராப்பள்ளி.
10. ,, K. கோபால கிருஷ்ணன் அவர்கள், B. Sc. (Hons.)
M. R. A. S. பர்மா.


## வேண்டுகோள்.

வியாசங்கள் எழுதுவோர் தெளிவாகவும் தூஷணைகளின்றியும் முழுவிலாசத்துடன் சமூக முன்னேற்றத்திற்குரியனவும் அறிவு வளர்ச்சிக்குரியனவுமாகிய பொது விஷயங்களைப்பற்றிச் சுருக்கமாகவும், நடை எளிதாகவும் எழுதியனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோரும், விளம்பரங் கொடுக்க விரும்புவோரும் அடியிற்காணும் விலாசத்திற் கெழுதுக.

யாதவமித்திரன் ஆபீஸ், ஸ்ரீ கோபால் மஹால்,
வடக்குச் சித்திரைவீதி, மதுரை.

## நேயர்களுக்கோர் வேண்டுகோள்.

---

இவ்வாண்டுச் சந்தாத் தொகையை அனுப்பும்படி முன் பத்திரிகையில் தெரிவித்து இருக்கிறோம். சந்தாத் தொகை அனுப்பாதவர்கள் தயைசெய்து உடனே அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம். இம்மாதம் அனுப்பத் தவறினால் அடுத்த மாதம் சஞ்சிகையை வீ.பி.யில் அனுப்பப்படும். வீ பி. யில் அனுப்புவதானால் அதிகச் செலவு 3-அணா ஏற்படும். முன்போல் தபா லாபீசில் 10-நாளைக்கு வைத்து இருக்கமாட்டார்கள். 3 நாளைக்கு மேற்பட்டால் திருப்பிவிடுவார்கள்.

மானேஜர்.

# யாதவமித்திரன்.

## ஒரு மாதப்பத்திரிகை.

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

| தொகுதி | பிரமோதூத ௵ மாசி ௴ | பகுதி |
| --- | --- | --- |
| 2 | 1931-௵ பிப்ரவரி-௴ | 7 |


### கடவுள் வணக்கம்.

*பாருருவி நீரெரிகால் விசும்புமாகிப்*
*பல்வேறு சமயமுமாய்ப் பரந்துநின்ற*
*ஏருருவில் மூவருமே யெனநின்ற*
*இமையவர்தம் திருவுருவே றெண்ணும்போது*
*ஓருருவம் பொன்னுருவம் ஒன்றுசெந்தீ*
*ஒன்றுமா கடலுருவம் ஒத்துநின்ற*
*மூவுருவும் கண்டபோது ஒன்றும்ஜோதி*
*முகிலுருவம் எம்மடிக ளுருவந்தானே*

(திருமங்கையாழ்வார்)

# ஹொய்சள விஷ்ணுவர்த்தனன்,

## ஓர் யதுகுலப் பேரரசன்.

(கி. பி. 1111—கி. பி. 1141)

ஆதியில் யது வம்சத்தோர் வடமதுரைப் பிரதேசத்தில் வசித்து வந்த காலத்தில், அன்னோர் ஜராசந்தன், கம்ஸன் முதலிய பகைவர்களால் துன்புறாது வாழ்தல்வேண்டி யாதவகுலத் தலைவரான கண்ணபிரான் மேற்குக் கடற்கரையில் துவாரகையைப் புதிதாக நிருமித்து அங்கேயும் அதன் பிரதேசத்திலும் யாதவர்களைக் குடியேற்றினர். இவர் காலத்திற்குப் பிறகு, யாதவர்களுக் கிடையில் பெருங்குழப்பம் நேரிட்டமையால் இவர்களில் பலர் தக்கணத்திற்குச் சென்று பற்பல இடங்களில் குடியேறலாயினர். இவர் தென்னாடு போந்தமையைச் சில தமிழ் நூல்கள்

சுட்டுகின்றன. இருங்கோவேள் என்ற வேளிர்குலச் சிற்றரசனைக் கபிலர் பின்வருமாறு விளித்துக் கூறுகிறார்:—

"நீயே—வடபான் முனிவன் தடவினுட் டோன்றிச்
செம்பு புனைந்தியற்றிய சேணெடும் புரிசை
உவரா வீகைத் துவரை யாண்டு
நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே". (புறம் 201.)

இன்னும், அகத்தியனார் துவராபதிப் போந்து, நிலங்கடந்த நெடுமுடியண்ணல் வழிக்கண் தோன்றிய அரசர் பதினெண்மரைத் தென்னாடு கொணர்ந்த செய்தி நச்சினார்க்கினியரால் தொல்காப்பியப் பாயிரவுரையில் குறிக்கப்படுகிறது.

இவ்வாறாகத் தென்றிசைக்கண் போந்த யாதவர்களில் ஓர் பகுதியினர் மேல்கடலை யொட்டி ஓடும் மேல்காத்து மலையையடுத்த முல்லை நிலங்களிற் குடியேறி, காடு கெடுத்து நாடாக்கி, உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத உழு தொழில், நிரையோம்பல் முதலிய தொழில்களை விருத்தி செய்து வந்தனர். 'சோஸவூர் அல்லது சாஸகபுரம்' * என்னுமோர் நகரையும் நிருமாணித்தனர். இவர்களது தலைவன் சளன் என்பவன். இவன் முதன் முதல் மேலை மலைப் பிரதேசங்களில் வசித்த மலைப்பிரர் என்ற ஒரு ஜாதியினரை அடக்கித் தனது தலைமைக்குட்படுத்தினான் என்பது இவனும் இவன் சந்ததியினரும் அணிந்திருந்த ஒரு விருதிலிருந்து தெரிகிறது. இவன் ஒரு சமயம் தனது குலதேவதையாகிய வசந்திகாதேவி கோவிலில் தவஞ்செய்து கொண்டிருந்த முனீந்திர ரொருவரிடம் சென்று, ஞானோபதேசம் பெற்றுக் கொண்டிருக்கையில் திடீரென ஆங்கோர் வரிப்புலி தோன்றியது. அதனைக்கண்டு நடுக்குற்ற முனிவர் அதனை அடித்து வீழ்த்துமாறு சளனை ஏவினர். சளனும் அவ்வாறே செய்தனன். இக்காரணம்பற்றி, கன்னட பாஷையில் 'சள! அடித்து வீழ்த்து' எனப் பொருள்படும் 'ஹொய்சள' என்னும் சிறப்புப் பெயர் பெற்றான். இவன் வம்சத்தினரும் ஹொய்சள ரென்றே அழைக்கப்படலாயினர்.

---

* இந்நகருக்கு இப்பொழுது அங்காடி என்னும் பெயர் வழங்குகிறது. விஜய நகர மன்னரான அச்சுததேவராயர் காலத்தில் இப் பெயரிடப்பட்டது. இப்போது மைசூர் இராஜ்ஜியத்தில் கடூர் ஜில்லாவிலுள்ளது.



இவ்வம்சத்தை முதன் முதல் மேல் நிலைமைக்குக் கொண்டு வந்தவன் விநயாதித்தியன் ஆவன். இவன் மேலைச்சளுக்கிய வேந்தனுக்குக் கப்பங்கட்டும் குறுநில மன்னர்களி லொருவனாய் கி. பி. 1047-முதல் 1100-வரை அரசு புரிந்தான். இவனது இளையோனான எறயங்கன் (செம்மேனியன்) இளங்கோவாகவும் தண்டத்தலைவனாகவும் விநயாதித்தியனுக்குப் பேராதரவளித்து வந்தான். இவன் பிரசித்தி பெற்றதற்கு அக்காலத்து அரசியல் நிகழ்ச்சிகளே முக்கிய காரணமாகுமாதலின் அவற்றை ஈண்டுச் சுருங்கக் கூறுவாம். 11-ம் நூற்றாண்டில் மேலைச் சளுக்கியர் (குந்தளர்) கல்யாணி என்னுமிடத்தில் தங்கள் இராஜதானியை அமைத்து, தற்போது விந்தியமலைக்குத் தென்பாலுள்ள பம்பாய் இராஜதானி (இரட்டபாடி ஏழரை லக்கம் நாடு) யையும் நைஜாம் ராஜ்ஜியம், மத்திய மாகாணங்கள் ஆகியவற்றின் பெரும் பகுதியையும் ஆண்டுவந்தனர். இவர்களது தாயாதிகளாகிய கீழைச் சளுக்கியர் தற்போதைய சென்னை இராஜதானியின் வட பாகத்தில் தெற்கே நெல்லூர் வரையுள்ள தேசத்தில் ஆட்சி புரிந்தனர். கிருஷ்ணவேணி, துங்கபத்திரை நதிகளுக்குத் தெற்கணுள்ள நிலப் பகுதி தமிழ் மன்னரான சேர, சோழ, பாண்டியர் ஆளுகைக்குட்பட்டிருந்தது. குந்தளர் மன்னனான ஆகவமல்ல சோமேசுரன் கி. பி. 1069ல் ஜலசமாதி யடையவும், அவனது மூத்த மகனான புவனேகமல்ல சோமேசுரன் அரியணை யேறினான். இவன் நெறிதவறி நடந்தபடியால் இவனது இளையோனான விக்கிரமாதித்தியன் அவனைத் திருத்த முயன்றும் முடியாது போகவே, அவனுடன் பிணக்குற்று, தலைநகரினின்றும் புறப்பட்டுப் போய் பல மஹாமண்டலேஸ்வரர்களின் ஆதரவைப் பெற்றுச் சோமேசுரனுக்கு விரோதமாகக் கலாம் விளைவித்து வந்தான். ஓர் சமயம் தென்னாட்டின்மீது படை யெடுத்துவந்து சேரலனைப் புறமுதுகிட்டோடும்படி செய்துவிட்டு, சோணாட்டிலும் பிரவேசித்தான். இதனையறிந்த சோணாட்டரசனான வீரராஜேந்திர சோழன் (கி. பி. 1062—1070) அவனுடன் சிநேகஞ் செய்து, அச்சிநேக பான்மைக் கறிகுறியாகத் தனது மகளையும் விவாகஞ் செய்து கொடுத்தனன். இச் சோழனுக்குப் பின் இவனது மகனான அதிராஜன், தனது சகோதரி கணவனான விக்கிரமாதித்தியனின் ஆதரவு பெற்று, சிம்மாதன மேறினன். ஆனால் சின்னாட்களுக்குள் ஏற்பட்ட பெருங் குழப்பத்தில் இச்

சோழன் கொல்லப்பட்டான். இச்செய்தியறிந்த மேலைச் சளுக்கிய மன்னனான வெங்கிநாதராஜிகன் என்ற இராஜேந்திரன் உடனே சோணாடு வந்து, வெகு சுலபமாக அந்நாட்டிற்குத் தன்னை அரசனாக்கிக் கொண்டான். இவன் கங்கைகொண்ட சோழனின் புதல்வியும், இராஜாதிராஜன், இராஜேந்திரன், வீரராஜேந்திரன் ஆகிய சோழமன்னர்களின் உடன் பிறந்தாளுமான அம்மங்கதேவியின் புதல்வன். இவனே முதலாங் குலோத்துங்கன் என்ற பெயருடன் சோழ நாட்டை கி. பி. 1070 முதல் 1118 வரை வெகு சிறப்புடன் ஆண்டவன். இவன் பெரியதோர் ராஜ்ஜியத்திற்கு அதிபனாது தான் ஸ்தாபிக்க உத்தேசிக்கும் மேலைச் சளுக்கிய சாம்ராஜ்ஜியத்திற்குப் பெருந் தடையாகவிருக்கு மென்பதை யுணர்ந்த விக்கிரமாதித்தியன் குலோத்துங்கன் மேல் போர் தொடுத்தான். குலோத்துங்கன் விக்கிரமாதித்தியனுக்கு விரோதமாகத் தனக்கு உதவி புரியும்படி சோமேசுரனை வேண்டவும் அவனும் பெரும் சைன்னியத்துடன் வந்து சேர்ந்தான். அவ்விரு துணையரசுகளும் கி. பி. 1076-ல் போராற்றுக்கொப்பத்தில் விக்கிரமாதித்தியன் சேனையோடு பொருதின. விக்கிரமாதித்தியன் * தனது போர்த்திறத்தால் சோமேசுரனும் குலோத்துங்கனும் ஒன்றுசேர வொட்டாமல் தடுத்து, தனது மூத்தோனான சோமேசுரனைச் சிறைப் படுத்திக் கொண்டு, வடக்கே போய் கல்யாணியில் ஆறும் விக்கிரமாதித்தியனாக முடிசூடிக் கொண்டான். இந்த யுத்தத்தின்போது இவனுக்குத் துணைநின்று பேராதரவளித்தவர்களில் முக்கியமானவர்கள் சேவுண யாதவ மன்னனும் ‡ ஹொய்சள விநயாதித்தியனின் இளையோனும் தண்டத்தலைவனுமான எறயங்கனுமாவார். மிகச் சாதாரண நிலைமையிலிருந்த ஹொய்சள வம்ஸம் இதுமுதல் மஹாமண்டலேஸ்வரனைவரின் நன்மதிப்பைப் பெற்றுத் தலைசிறந்து விளங்கலாயிற்று. எறயங்கன் விக்கிரமாதித்தியனின் வலதுகை போன்றவன் எனவும், புவனேகமல்ல (சோமேசுர)னது வாளை உறையிலிடும்படி செய்தவன் எனவும் ஹொய்சள சாஸனங்கள் அறிவிக்கின்றன. இவ்வாறாக விநயாதித்தியனும் எறயங்கனும் சோழராதிக்கத்திற்குட்

* மூன்றுமிடத்தில் சூரியனை யுடையவன் என்பது இப்பெயரின் பொருள். மூன்றுமிடத்தில் சூரியனையுடையோர் மிக வைதூரியம் படைத்தவர்களென்பது சோதிட நூலார் துணிபு.

‡ இவன் பின் சந்ததியினரே தேவகிரி யாதவர்களென இந்திய சரித்திரத்தில் பிரசித்தி பெற்றவர்கள்.



பட்டதுபோக எஞ்சியிருந்த கங்கவாடி, 96,000 நாட்டினோர் சிறிய பகுதியை ஆண்டுவந்தனர்.

## விஷ்ணுவர்த்தனனின் வென்றி மேம்பாடு.

கி. பி. 1101-ல் எறயங்கனின் மூத்த மகன் முதலாம் வல்லாளனாக முடிசூடினான். இவனது இளையோனான பிட்டிதேவன் (விட்டலதேவன்) அரசகாரியங்களில் வல்லாளனுக்கு உதவி புரிந்து வந்தான். இவ்வரசிளங்குமரனே விஷ்ணுவர்த்தனன் என்னும் பெயர் புனைந்து பெருஞ்சிறப்புடன் அரசுபுரிந்த விறல்வேந்தன். இவன் கி. பி 1111-ல் சிம்மாதனமேறினான். போராற்றுக்கொப்பத்தில் நிகழ்ந்த யுத்தத்தின் பலனாய், கங்கவாடி தொண்ணூற்றாறாயிரம் நாட்டில் சோழராதிக்கங் குன்றியதையறிந்து, அந்நாட்டைக்கைப்பற்றுவதற்குவேண்டிய ஆயத்தஞ்செய்து, காலங்கருதிக் கொண்டிருந்தான். தக்கசமயம் வாய்த்ததும் சுமார் கி. பி 1116-ல் தனது தானைத் தலைவர்களான கங்கராஜன், கேத்தையதண்டநாயக்கன், புணீஸன் முதலியவர்களை அனுப்பினான். இம்மூவரும் அதியமான், தாமோதரன், நரசிம்மவர்மன் என்ற சோழதளபதிகளைப் போரில் புறங்கண்டு, தெற்கே காவிரிக்கரையிலுள்ள தலைக்காடு என்னும் நகரையும் கைப்பற்றினார்கள். இந்நகரில் தனது அரசிருக்கையை ஏற்படுத்திக் கொங்கு நாடு (சேலம், கோயம்புத்தூர்) உட்பட்ட கங்கவாடி 96,000. நாடு முழுவதையும் ஒரு குடைக்கீழ் சுக ராஜ்ஜியம் பண்ணியதாக இவனது கி. பி. 1117-ம் ஆண்டுச் சாஸனங்கள் கூறுகின்றன. துவாரசமுத்திரமே* இவனது பிரதான இராஜதானியாக விருந்தும், தலைக்காட்டிலும் பின்னர் யாதவ புரியிலும் வீற்றிருந்து இவன் அரசு புரிந்து சோழர் இந்நாட்டின்மேல் மறுபடியும் படையெடுத்து வராமலிருக்கும்படி செய்வதற்கே எனத் தெரிகிறது. இதுமுதல், இவன் 'வீரகங்கன்,' 'தலைக்காடுகொண்ட' என்னும் விருதுகளைச் சூடிக்கொண்டதாக இவனது தங்க நாணயங்களும் வேறு சாஸனங்களும் அறிவிக்கின்றன. இவனது தண்டத்தலைவர்களிலொருவனான புணீசன் நீலகிரியில் வசியாநின்ற தோதவர்களையும் அச்சுறுத்தியதாக மற்றொரு சாஸனப்பகுதியிலிருந்து அறியக் கிடக்கிறது. இதே காலத்தில், வடக்கே நுளம்பவாடியிலுள்ள உச்சங்கி துர்க்கத்தின்மீது விட்டலதேவராயனே நேரில் படைகொண்டுபோய், அந்நாட்டின் அதிபனைத்

* ஹொய்சளர்களின் ஆதிமுன்னோர் துவாரகையினின்றும் குடியேறி வந்தவர்களென்பதை அறிவிப்பதற்காக இந்நகருக்குத் துவாராவதிபுரம் அல்லது துவாரசமுத்திரம் எனப்பெயரிடப்பட்டது.

தோல்வியுறச் செய்து, வெற்றி சூடினான். இதனை யுணர்ந்த விக்கிரமாதித்தியன் தனது ஏகாதிபத்தியத்தின் கீழுள்ள மஹாமண்டலேஸ்வரனொருவனை மற்றொரு மஹாமண்டலேஸ்வரன் தோற்கடித்ததைச் சகியாதவனாய், விட்டலதேவராயனைத் தண்டிப்பதற்குப் பெரிய சைன்னியமொன்றை அனுப்பினான். மகா வீரபுருஷனான கங்கராஜன் அச்சைன்னியத்தை நாலுதிசையிலும் ஓடும்படியாகச் சிதறடித்தான். தனது சக்கரவர்த்தியின் சைன்னியத்தையும் வென்றுவிட்டோம் என்ற தைரியமே பூரண சுயேட்சையடையும்படி நாடோறும் விட்டலதேவராயனைத் தூண்டிற்று. படைத் தொழில் மிக்கவனான விக்கிரமாதித்தியன் குந்தள சிம்மாதனத்திலிருக்கும் வரை இவ்விடுதலை முயற்சி பயன் பெறவில்லை. ஆனால் இவன் கி பி. 1126ல் இறந்துபோகவும், விட்டலதேவன் மறுபடியும் மண் பறிக்கும் முயற்சியில் ஈடுபட்டான். கி. பி. 1131ல் வடக்கேயுள்ள வனவாசி, ஹானுகல், உச்சங்கி இவன்வசப்பட்டன. முடிவில் நுளம்பவாடி முழுவதும் இவன் ஆளுகைக்குட்பட்டது. இவ்வாண்டில், விட்டலதேவராயன் 'துளம்பவாடி கொண்ட'வன் என்னும் பட்டம் பெற்றான். இச் செய்தி இவனது நாணயங்களில் பொறிக்கப்பட்டுள்ளது. இவனது நாட்டெல்லையை ஒரு சாஸனம் கீழ்வருமாறு வரையறுத்துக்கூறுகிறது:—கிழக்கு நங்குலி; தெற்கு கொங்கு, சேரம், ஆனைமலை; மேற்கு பரக்கனூர், வடக்கு சுவாமிமலை இவ்வாறாக நுளம்பவாடி, வனவாசி, கங்கவாடி எனும் முப்பெரும் மாகாணங்களைத் தன் வெண்கொற்றக் குடைக்கீழ் ஆண்டு, ஏகச்சக்ராதிபத்தியம் செலுத்தும் அடலேறுபோல் விளங்கினான் எனினும் குந்தளரது ஆதிக்கத்தினின்றும் பரிபூரண விடுதலையடைய இவனால் முடியாதுபோயிற்று. இவனது ஆதிக்கம் மென்மேலும் பெருகிக்கொண்டு வந்ததைக்கண்டு சகியாத பல குறுநிலமன்னர்கள் இவனுக்கு விரோதமாக ஒன்றுகூடியதே இவன் முயற்சி சித்தி பெறாததற்கு முக்கிய காரணமாகும்.

## மதக்கோட்பாடு.

இவனது ஆளுகைக்குட்பட்டிருந்த நாடுகளில் கி. மு. 3-ம் நூற்றாண்டு முதல் சமணமும் பௌத்தமுமே எங்ஙனும் வியாபித்திருந்தது. இவனது முன்னோர்களெல்லாம் சமணமதத்தைச் சேர்ந்தவர்களே. கி. பி. 1004-ம் ஆண்டிலிருந்து சைவமும் இப்பிரதேசங்களில் ஒருசிறிது பரவ ஆரம்பித்தது. கி. பி. 1116-ல் தென்னிந்திய



சரித்திரத்தில் முக்கியமானதோர் சம்பவம் நிகழ்ந்தது. இச்சம்பவத்தின் பலனாய், ஸ்ரீவைஷ்ணவமதம் என்றுமிலாப் பெரும் சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்தது. ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீவைஷ்ணவ ஆச்சாரிய பீடத்தமர்ந்து வைஷ்ணமதத்தை வளர்த்து வந்த இராமாநுஜர் "சிவனேபரம் பிறிதில்லை யெனுதாற்சிரந்துணிக்க உவந்தனன் சோழன்" என்பதையறிந்து வடக்கே சென்று, திரிதண்ட காஷாயாதிகளைத் தரித்து மாறுவேடம் பூண்டு வசித்து வரலாயினர். இங்ஙனமாகப் பன்னீராண்டு கழித்து, ஒருநாள் தொண்டனூர் என்னும் யாதவபுரியை நண்ணினர். அங்கு விட்டலதேவராயன் தனது தண்டுதளங்களுடன் தங்கியிருந்ததை யறிந்து, அக்காலத்து வழக்கப்படி, அரசன் சமுகத்தில் வைஷ்ணவ சமணவாதசபை கூட்டுவித்து, தன்னை எதிர்த்த சமணரை வாதில் வென்று, ஸ்ரீவைஷ்ணவமதத்தின் உண்மையை நிலை நாட்டினார். இம்மதத்தின் மேன்மையையுணர்ந்த விட்டலதேவனும் தனது மூதாதையரது மதமாகிய சமணத்தைத் துறந்து ஸ்ரீவைஷ்ணவ மதத்தைத் தழுவினான். இதுமுதல்தான் இவன் விஷ்ணுவர்த்தனன் என்னும் பெயர் பெற்றது. வீரசைவர்களால் துன்புறுத்தப்பட்டு, சோழர்களால் வெறுக்கப்பட்ட சமணம் ஹொய்சளரின் ஆதரவையும் இழந்தது. சமணம் தென்னிந்தியாவில் குன்றத் தலைப்பட்ட காலமுமிதுவேயாகும். விஷ்ணுவர்த்தனன் நீதிவழுவா நெறிமுறையினன்.

வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின்'.

என்னும் உண்மையை நன்குணர்ந்தவன். ஆதலின், மதப்பொறை மிக்கவன். சமணம், சைவம் ஆகிய ஏனைய மதங்களை நன்கு மதித்துவந்தான். துவாரசமுத்திரத்தில் ஹொய்சளேஸ்வரர் தேவாலயம் கி. பி. 1121-ல் எடுப்பிக்க அநுமதித்தான். பலசிவாலயங்களுக்கு மானியம் முதலியன வழங்கினான். இவன் காலத்தில் பல ஜினாலயங்கள் தோன்றின. இவனது பட்ட மகாதேவியும், அரசிளங்குமரியும் சமணமதத்தையே பின்பற்றி வந்தனர். இவனுக்கு உற்றவிடத்தில் உயிர் வளங்கும் தன்மையினனான கங்கராஜனும் சமணனே. இவனது ராஜ்ஜியம் சகலமதங்களின் கலம்பகமாகவே விளங்கியது. இவ்வாறாக, இவன் ஆட்சியில், சமணம், சைவம், வைஷ்ணவம் ஆகிய சமயங்கள் நாட்டின் அமைதியைக் குலைக்காது, ஒன்றோடொன்று தோழமை பூண்டு, திகழ்ந்ததறிந்து மகிழத்தக்கதாகும்.

## அரசியல் முறை.

இவனது இராஜதானியாகிய துவாரசமுத்திரத்தில் அரசுகட்டிலில் வீற்றிருந்து, துஷ்டநிக்கிரஹ சிஷ்டபரிபாலனம் பண்ணி, சுகராஜ்ஜியமாண்டதாக சாஸனங்கள் இவனை வெகுவாய்ச் சிறப்பித்துக் கூறுவதினின்றும், இவ்வரசன் குற்றங் கடிந்து குடிபுறங்காத்தோம்பும் மாநிலமன்னன் என்பது சொல்லாதே அமையும். இவன் சப்தாங்கராஜ்ஜியத்தையும், பஞ்சாங்க சன்மந்திரிகளையும் உடையவனெனவும், சதுர்வித உபாயங்களில் கைதேர்ந்தவனெனவும் வேறொரு சாஸனப் பகுதியிலிருந்து அறியப்படுகிறது. பஞ்சபிரதானிகளைப் பற்றிய பிரஸ்தாபம் இன்னுமோர் சாஸனத்திலும் காணப்படுவதை நோக்குங்கால், அரசகாரியங்களில் இவனுக்கு யோசனை கூறுதற்கு ஐம்பெருங்குழுப்போன்ற மந்திராலோசனை சபையொன்றிருந்ததாக ஏற்படுகிறது. இச்சபையில் யுவராஜனும், சேனாபதியும், ஆச்சாரியனும், சந்திவிக்கிரஹியும், பிரதம காரியதரிசியும் இடம் பெற்றிருந்தனர். இன்னும் அரசனுக்குப் பல தண்டநாயக்கர்கள் உதவி புரிந்தனர். தறுகண் ஆண்மை படைத்த தானைத்தலைவர்கள் பலருமிருந்தனர் என்பது முன்னரே சுட்டப்பட்டது. சைனியத்தில் முன்னணி வீரர் 'கருடர்' என்னும் பெயர் பெற்றனர்.

விஷ்ணுவர்த்தனன் அதிகாரஞ் செலுத்திய நாட்டின் எல்லைகளை உற்று நோக்குமிடத்து, இவ்வெல்லைகளுக் குட்பட்ட நாட்டின் பெரும் பகுதியே தற்போதைய மைசூர் இராஜ்ஜியம் என்பது எளிதில் புலனாகும். வெவ்வேறாகச் சிதறிக்கிடந்த நாடுகளை ஒன்று சேர்த்து, தனிராஜ்ஜிய மொன்றை தோற்றுவித்த பெருமை இவ்வரசனுக்கே உரியது. குந்தளரது ஆதிக்கத்தினின்றும் பூரணவிடுதலை பெறவேண்டுமென இவன் கண்டுகொண்டிருந்த கனா இவனது மகனாகிய விஜயநரசிம்மன் காலத்தில்தான் பலித்தது. குந்தளர் ஆட்சியும் அப்போதுதான் மெலிவுற்றது. "சாளுக்கியாபரணன், யாதவ குலாம்பரத்துய்மணி, சோளகுல பிரளயபைரவம்...... கேரள ஸ்தம்பேரம ராஜகந்தீரவம். பாண்டியகுலபயோதி படவானளம்..... காஞ்சிகொண்ட விக்கிரம கங்க விஷ்ணுவர்த்தனதேவர்' என, இவன் பலவாறாக விதந்து கூறப்படுகிறான்.

சி. முத்து, பி. ஏ.,

1. Cm. 160. EP. Car, Vi.

## பசு.

24 M[illegible] 1931

### பசுவே பெருந்தனம்.

(திரு. ச. செல்வம்.)

பசுவே பெருந்தனம். இதைப் பண்டைக்காலப் பார்த்திபர்கள் செய்கையால் நன்கு அறியலாம். மன்னர் தம்முள் பகை மூண்டு போரிடக் காரணமாக நின்றது பசுவே. நாடு பிடித்து அரண் வளைவதிலும் ஆனிரை கவர்தலே முக்கியமானது. நிரையைக் கவருவோரும் மீட்போரும் தங்கள் போர்க்கோலமாக மாலைகளை அணிந்து கொள்வது வழக்கம்.

"வெட்சி நிரை கவர்தல் மீட்டல் கரந்தையாம்" இது புறப்பொருளிலக்கணத்தில் கண்டது. பொருளிலக்கணத்தில் புறப்பகுதியில் முதல் முதலில் பொறிக்கப்பட்டிருப்பதும் நிரை கவர்தல் நிரை மீட்டல் என்பவைகளே. முற்கால மன்னர் பசுவைப் பெருந் தனமாகக் கருதிவந்தனர் என்பது இதனால் புலனாகிறது. தொன்மைத் தமிழிலக்கண நூலாகிய தொல்காப்பியம், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற முறையை விட்டுப் பசும்புல் முல்லையையே முதலில் குறிப்பிட்டுள்ளது. இது சிறப்புப்பற்றி வைத்ததென உரையாசிரியரும் நன்கு விளக்கியுள்ளார்கள். இனி தமிழ் நூல்களிலே பசுவைப்பற்றிக் கூறியிருக்கும் கூற்றுக்களைக் காண்போமாக. காவியங்களிலே நாட்டுப் படலங் கூறுகையில் நானில வருணனையை மேற்கொள்வது மரபு. அவைகளில் முல்லை நில வருணனையில் பசுவினங்களையும் அதைப் பாதுகாக்கும் கோபாலர்களையும் சிறப்பித்துக் கூறப்படுவதைக் காணலாம்.

"கொன்றை வேய்ங் குழற் கோவலர் முன்றிலில்
கன்றுறங்கும்"

(கம்பர் இராமாயணம்)

தோயும் வெண்டயிர் மத்தொலி துள்ளவும்
ஆய வெள்வளை வாய்விட் டரற்றவும்
தேயு நுண்ணிடை சென்று வணங்கவும்
ஆய மங்கைய ரங்கை வருந்துவார்.

(கம்பர் இராமாயணம்)

முல்லையங் கோதை நல்லார், முகமதி வியர்வு தோன்ற
வல்லிநுண் மருங்குல்நோவ வால்வளைவாய்விட்டார்ப்ப
மெல்விரல் காந்தள் சேப்ப வெண்டயிர் கடையுமோதை
கொல்புலி முழக்கமன்ன வயின் வயின் குளிறு மாதோ

(நைடதம்)

கோவு நிரைகவர் மறு கெலாம்.

(காந்தபுராணம்)

பால் பல ஊறுக பகடு சிறக்க

(ஐங்குறு நூறு)

கருங் கோட் டெருமை செங்கட் புனிற்றுக்
காதற் குழவிக் கூறு முலை மடுக்கு
நுந்தை நும்மூர் வருதும்
ஒண்டொடி மடந்தை நின்னை யாம் பெறினே.

(ஐங்குறு நூறு)

பல்லான் கோவலர் படலர் கூட்டு
மன்பின் மாலையு முடைத்தோ
அன்பில் பாண வவர் சென்ற நாடே

(ஐங்குறு நூறு)

வாழ்க வந்தணர் வானவ ரானினம்

(தேவாரம்)

இஃதன்றியும் மூவாசையை முற்றும் வெறுக்கும் முனிவரும் பசுவை ஒரு பாசப் பொருளாக மதித்துப் பாடியுள்ளனர்.

மாடுண்டு கன்றுண் டென்று மகிழ்வ தெல்லாம்

(பட்டினத்தடிகள்)

ஊடு கட்டியே வேங்கையை
அலைப்படுத்து மாறு போல்
மாடு கட்டியே யென்னை நீ
மதி மயக்க லாகுமோ?

(சிவவாக்கியர்)

மாடு மக்கள் சிற்றிடையார் செம் பொன்னுடை.

(தாயுமானவர்



மேற்சொன்ன செய்யுள்களில் மாடு என்பது பசுவைப்பற்றிய தாகும். இவற்றால் பசு மாந்தருக்கு எத்தகைய உதவியை அளித்து வருகிறதென்பதை உய்த்துணர்ந்து கொள்ளலாகும். பசுவை மூவகை ஆசைகளுக்கு ஒப்பவைத்து முனிவர்கள் இயம்பியுள்ள பாடல்களைப் பலவாகக் காணலாம். திருமகள் நிலவும் இடங்களைக் குறிப்பிடுகின்ற குமரேச சதக ஆசிரியர் குறிப்பிடும் இடத்தில் பசுவின் கூட்டத்தையும் அடக்கியுள்ளார். அது

"கடவார ணத்திலுங் கங்காஜ லத்திலும்
கமலா சனந் தனிலும்
கர்குத்தன் மார்பிலும் கொற்றவ ரிடத்திலும்
காலியின் கூட்டத்திலும்" என வருமாறு காண்க.

வட நாட்டிலும் பசு முக்கிய தனமாகக் கருதப்பட்டிருந்த தெனக் கூறவேண்டுவதில்லை. ஆரிய மக்களின் சரித ஆரம்பமாகிய பஞ்பாச வாழ்விலே அவர்கள் அப்போது இயற்றிய இருக்கு முதலிய வேதங்களில் பசுவைப்பற்றின பாடல்கள் பல காணப்படுகின்றன. ஆரியருக்குப் பசு பரிபாலனமே முக்கிய தொழிலாக இருந்துவந்த தென்பது சரித்திர பூர்வமான கொள்கை. யாகம், தானம் என்ற வைதிக கருமங்களுக்கு அவர்கள் பசுவையே பெரிதும் உபயோகித்து வந்தனர். ஆரிய அரசர்களின் சம்பத்தை விவரிக்குமிடங்களில் பசுவிற்குப் பிரதான ஸ்தானங் கிடைத்திருக்கிறது. தமிழ் நாட்டு அரசரைப்போல வடநாட்டு மன்னரும் பசுவால்தான் போர் புரிந்து வந்தனர். பெயர்போன பாரதப் போரும் மாடுபிடி சண்டையாலன்றோ தொடங்கிற்று. பாண்டவர் உருக்கரந்து விராட தேசத்தில் வதியும்போது உண்மை நிலையை உணர எண்ணிய பாம்புக் கொடியோன் படைகளை யேவி நிரை கவர்ந்தான். அப்போது அந்நாட்டு அரசர் அயல் தேசஞ் சென்றிருந்தபடியால் அருச்சுனன் அப்போருக்கு ஆயத்தமாக வேண்டியதாயிற்று. இதுவே பாரதப் பெரும் போருக்கு அடிப்படை. மஹாபாரதம் சாந்திபர்வத்தில் பீஷ்மர் தருமபுத்திரருக்கு உபதேசிக்கும்போது திரவியந்தேடும் வழிகளைக் குறிப்பிடுகையில் அதில் முக்கியமாகப் பசுவைத் தேடும் வழியைக் கூறுகிறார். அன்றியும் அரசன் பசுவைப் பரிபாலனஞ் செய்யக் கடமைப்பட்டவன் என வற்புறுத்திக் கூறுகிறார். கவி திலகராகிய காளிதாஸர் தமது காவியங்களில்

பசுவைப் பெரிதாகப் பாராட்டியிருப்பதோடு தாம் இயற்றிய ரகு வம்சம் என்ற காவியத்தில் பசுவின் மேன்மையைத் தனியே எடுத்துக் காட்டியுள்ளார். பவபூதி முதலான வடநூல் ஆசிரியர்கள் பலரும் தங்கள் நூல்களில் பசுவைச் சிறப்பாகக் குறிப்பிட்டிருக்கின்றனர்.

இனி ஆரிய மொழியில் பசுவைக் குறிப்பிடும் சில வாக்கியங்களால் பசு பாரத நாட்டவருக்கு எங்ஙனம் சிறந்த தனமாக இருந்ததென்பதை விளக்கிக் காட்டலாமென எண்ணுகிறேன். அவைகளின் தமிழ் வாக்கியங்கள் வருமாறு.

“ஒரு மனைவியும் மூன்று புத்திரர்களும் ஒரு ஏரும் நடுவூரில் வீடும் பத்துப் பசுக்களும் உடையவன் புண்ணியவான்”

“கல்வி பசுவைப் போலப் பயனைத் தருகிறது.”

“பதினான்கு உலகங்களும் பசுவில் அடங்கியிருக்கிறது.”

இவை பசுவை எந்நிலையில் குறிப்பிட்டிருக்கின்றன என்பதை ஊன்றிக் கவனிக்குமாறு வேண்டிக் கொள்ளுகிறேன். அப்போது பசுவின் நிலை புலனாகும். முன்னர்ப் பிருதுவிச் சக்கிரவர்த்தி நாட்டில் விளைவு குன்றி வறுமை மிஞ்சியதுகண்டு கடுங்கோபங் கொண்டு பூமியை நாசஞ் செய்கிறேனென்று வில்லைக் கையிலெடுத்த போது பூமாதேவி அஞ்சி நடுநடுங்கிப் பசு ரூபத்தை மேற்கொண்டு நின்றாளெனவும் பின்னர் அப்பசுவிலிருந்து அவரவருக்குத் தேவையான பொருள்களைக் கறந்து எடுத்துக்கொண்டார்கள் எனவும் ஒரு புராண கதையுண்டு. இதில் இயற்கை கொடுக்கவல்ல எல்லாப் பொருள்களையும் பசு கொடுக்க வன்மையுடையதென்கிற உண்மை விளங்கவில்லையா? மாந்தருக்குரிய நல் வாழ்வு எல்லாம் ஈயவல்லது பசுவென அறிந்தோம். ஆகவே வட நாட்டவரும் தென் நாட்டவரும் பசுவைப் பெருந் தனமாக மதித்து வந்தனர்.

(தொடரும்)

# “வீணைக்கொடியோன் வீரத்தம்பியர்”

திரு. தொ. மு. பாஸ்கர தொண்டைமான், பீ. ஏ.

இலங்கைவேந்தனது தம்பியாய்த் திகழ்ந்தவர் இருவர் என்பதும் அவர்களில் முன்னவன் கும்பகர்ணன், பின்னவன் விபீடணன் என்பதும் இராமகாதை உணர்ந்தோர் அறிவர். வீணைக் கொடியோன் வீரத்தம்பியர்களாய் இலங்கிய இருவரது வரலாறும் அவர்தம் உள்ளத்தின் உயர்வும் கற்றோர்க்குக் கழிபேருவகை தருவதாகும்.

இராவணன் உடன் பிறந்த கும்பகர்ணனது பெயர், இன்றும் இந்நிலவுலகில் பரிகாசப்பெயராக வழங்கிவருகின்றது. சாவாவரம் கேட்கப்போய் நித்ரத்வம் கேட்டு அதன்பயனாக நெடிய உறக்கமொன்றையே தன்வாழ்க்கையின் வளனாகக்கொண்டு, இலங்கைநகரில் வாழ்ந்துவந்த தன்மையே இவனுக்கு இந்நிலவுலகில் இன்றும் நித்யத்வம் நல்கியிருக்கிறது. ஆனால் கம்பர் தங் கவிதை உணர்ந்த பெரும்புலவர் பலரும். இவனடைந்திருக்கும் இந்த நித்யத்வத்தைவிட உயர்ந்தபெருமையே நம்வீரனுக்கு நல்குவர் என்பது நாமறியாததொன்றன்று. “புனலையும்” கனலையும் பிழிந்துசாறெடுக்கும் பெற்றிவாய்ந்தவன் கும்பகர்ணன் என்பதைக் கவிஞர் அழகாக எடுத்துரைத்து மகிழ்கின்றார். இன்னும் இவனது வலியை.

“ஊனுயர்ந்த உரத்தினான்
மேனிமிர்ந்த மிடுக்கினான்
தானுயர்ந்த தவத்தினான்
வானுயர்ந்த வரத்தினான்” என்று கவியரசர் போற்றியுரைக்கின்றார்.

இவ்வீரனது வீரஉருவைச்சித்திரிக்க விரும்பிய கம்பர்,
“விண்ணினை இடறுமோலி விசும்பினை நிறைக்குமேனி
கண்ணெனும் அவையிரண்டும் கடல்களிற் பெரியவாகும்
எண்ணினும் பெரியனான இலங்கையர்வேந்தன் பின்னோன்
மண்ணினை அளக்க நீண்டமாலென வளர்ந்துநின்றான்”

என்று நலஞ் சான்ற மொழிகளால் போற்றியுரைக்கின்றார். “மேருமால்வரை யென்ன விளங்கிய இராவணன்” நின்ற நிலை கும்பகர்ணன் இருந்தநிலைமையை ஒக்கும் என்று கூறும் கம்பர்.

“கல்லன்றோ நீராடுங்காலத்து கால்தேய்க்க
மல்லோன்று தோளாய் வடமேரு” என்று நயம்பட உரைக்கின்றார். இக்காவியத்தில் பலவிடங்களிலும் இராவணனை வடமேருவிற்கு உவமையாகவைக்கும் கம்பரே அவ்வடமேருவைக் கும்பகர்ணன் நீராடுங்காலத்து கால் தேய்க்கவைக்கப் பெற்ற கல்லுக்கு உவமை கூறுகின்றார். இம்மாற்றத்தால், இவன் பெரியஉருஅமைந்த பெருமகன் என அறிஞர் ஆராய்ந்தறியத்தக்கதாய் அமைந்துள்ளது.

கவியரசர்கம்பர், இத்தகையவீரனை, நமக்கு நித்திரை நிலையில் தான் முதன் முதலில் காட்டுகின்றார். செவிக்குத் தேனென இராகவன் புகழினைத்திருத்தும் கவிக்கு நாயகனான அனுமன், சீதையைத் தேடி இலங்கை வந்தவன் கும்பகர்ணனைக் “கயக்கமில்துயிற்சி” நிலையில் காண்கின்றான். வானவர்மகளிர் கால்வருட உறக்கமெய்திய நிலையில் அவன்றன் நாசியில் எழுந்த சுவாசம் உலகெலாம் துடைக்கும் மாருதம் ஊழியின் வரவுபார்த்து உழல்வதொத்தது. என்று கவி கூறும் திறன் கம்பருடையதேயாகும். இவன் விடுகின்ற மூச்சு,வீதியோடு செல்லும் வலியுடைய வாயுபுத்திரனையும் திடீரெனத்தடுத்து நிறுத்தி அவன்றன் மூக்குவரையிலும் இழுத்துச்செல்லும்வலியுடையதாயிருந்த தென்றும், அடல்மிகுந்த அனுமன் கூசிக்குதித்து விதிர்த்துத் தப்பிக்கொள்கின்ற அவ்வளவு திறமுடையதாயிருந்த தென்றும் கம்பர் தங்கவிநலத்தால் அமைந்த பொருளாகும்.

இனி இவ்வீரன், மந்திரக்கிழவர் அமைந்த அரக்கர் கோன் அவையை அழகுசெய்கின்றான். ஆழ்ந்த உறக்கத்திறகுப்பின் அறிவு தெளிந்தெழுந்த இக்குன்றாத வலியுடைய கும்பகர்ணன், அரக்கர் கோனுக்கு அறிவூட்டவிரைகின்றான். அறத்தின் வழிநின்ற ஆரியர் கோனது மனைவியை வஞ்சனையால் கவர்ந்து அசோக வனத்தில் சிறைவைத்த அரக்கர் கோனது அடாத செயலை,

“ஓவியமமைந்த! நகர் தீயுண உணர்ந்தாய்
கோவியல் அழிந்ததென வேறொரு குலத்தோன்
தேவியை நயந்து சிறைவைத்த செயல் நன்றோ
பாவியர் உறும் பழி இதிற்பழியு முண்டோ.” என்று கடிந்து கூறும் கும்பகர்ணனது குறைவிலா அறநெறி போற்றுதற்குரியதேயாகும். இராவணன் இயற்றிய இவ்வொரு செயலால் அரக்



கர் தம்புகழே அழிந்து அவர் தம் குலமே ஒழிந்து தேய்வதற்கிடமாயிற்று என்று வீரன் வலியுறுத்துகின்றான்.

“என்றொருவன் இல்லுறைதவத்தியை இரங்காய்
வன்றொழிலினாய் மறைதுறந்து சிறைவைத்தாய்
அன்றொழிவதாயின அரக்கர் புகழையா
புன்றொழிலினைசை பொறுத்தல் புலமைத்தோ?” என்று குரைகழல் அணிந்த கும்பகர்ணன் கொதித்துக் கூறும் மொழிகள் நலஞ்சான்றதாகும். அறநெறி தவறா அந்தணனான கும்பகர்ணன். இராவணன் இயற்றிய இழிவுடைச் செயலை அறவே கடிந்துரைத்த காலத்தும் சிறை செய்த சீதையை விடுத்தால் அதனால் ஆற்றலற்றவர் அரக்கர் என்னும் பெரும்பழி தன்னையும் தன்னினத்தையும் சுற்றும் என்னும் மானத்தை நினைந்து, சீதையை விடுத்துத் தன் பகைவனிடம் அடிபணிவதைவிடப் போரேற்றுப் போரில் மாண்டு மடிவதே நீடிய பெரும் புகழெனக் கருதுகின்றான்.

“சிட்டர் செயல் செய்திலை குலச்சிறுமை செய்தாய்
மட்டவிழ் மலர்க்குழலி னாளை இனி மன்னா
விட்டிலது மேலெளிய மாதும் அவர் வெல்லப்
பட்டிலது மேல் அதுவும் நன்று; பழியன்றால்” என்று அரக்கவீரன் பெருமிதத்தோடு கூறுஞ் செஞ்சொற்கள் அவனுடைய புகழ்குன்றாத பெரிய உள்ளத்தைப் பெரிதும் விளக்குவதாகும்.

இத்தகைய வீரனது இளையதம்பியாய விபீடணன் இலங்குகின்றான்; வேந்தர் வேதியர் மேலுளோர் கீழுளோர் விரும்பப் போந்த புண்ணியனான வீடணனை முதல் முதல் கண்ட அனுமனும் குற்றமில்ல தோர்குண முள்ள” இவனெனக் கொண்டு போற்றும் பான்மையொன்றே அவன்றன் புகழை இனிது விளக்கும்.

“பொய்யும்களவும், பாதகமும், பொல்லாவொழுக்கும் அவைகடிந்து
மெய்யும் தயாவும் தருமமுடன் விளங்கும் பொறையு மிவைபூண்டு
செய்யுஞ் செயல்களெல்லாமே சிட்டர் செய்யுஞ் செயலாகி
ஐயன் புகழ்வீடணன் மறைகளறைந்த அறத்தின் வழிநின்றான்”

என்னும் பெற்றியொன்றே அவன் அறநெறி தவறா அருந்தகையாளன் என்பதை வலியுறுத்தப் போதிய சான்றாகும்.

இராவணன் அவைக் களத்தே அங்கம் பெற்றவீரன் அரக்கர் கோனுக்கு ஏற்ற இடந்தோறும் உற்ற நீதிகளை எடுத்தெடுத்துரைத்து அவனை இடித்து வந்தான். நீதியின் நெறிவழாது நின்ற வீடணன் தன் அண்ணல், தூதுவந்த அநுமனைக் கொல்ல எண்ணிய காலத்தும் தூதுவனைக் கொல்லுதல் அரசதருமம் அன்று என்பதை அவனறிவிற் புகுமாறு அழகாக எடுத்துரைக்கின்றான்.

"அந்தணன் உலகமூன்றும் ஆதியின் அறத்தினாற்றல்
தந்தவன் அன்புக்கான்ற தவநெறியுணர்ந்த தக்கோய்!
இந்திரன் கருமமாற்றும் இறைவநீ இயம்பு தூது [என்றும்
வந்தனென் என்றபின்பும் கொல்லியோ மறைகள் வல்லோய்"

'பூதலப்பரப்பின் அடைப் பொகுட்டின் உட்புறத்தும் பொய்தீர்
வேதமுற்றியங்கு வைப்பின் வேறுவேறிடத்து வேந்தர்
மாதரைக்கொலை செய்தார்கள் உளரெனவரினும் வந்த
தூதரைக்கொன்றுள்ளார்கள் யாவரே தொல்லை நல்லோர்"

என்றும், அறநெறியை அண்ணலுக்கு எடுத்தோதி, அவனை அது சமயம் நெறிதவறு நீர்மை உடையவனாக்கி மகிழ்கின்றான். இதையுணர்ந்த அநுமனும் மற்றுமோர் சமயம்

"மாதரைக் கோறலும், மறத்துநீங்கிய
ஆதரைக் கோறலும் அழிவுசெய்யினும்
தூதரைக் கோறலும் தூயதன்றுமென
ஏதுவிற்சிறந்தென எடுத்துக் காட்டினான்"

என்று இராமவீரனிடத்து இவன்றன் புகழை எடுத்தியம்புவானாயினான். இன்னும் இலங்கைமாநகர் எரியினுக்கிரையாய் அழிந்ததற்காக ஏங்கி வருந்தும் இராவணனை நோக்கி,

"கோனகர் முழுவதும் நினது கொற்றமும்
சானகி யெனும்பெய ருலகின் றம்மனை
ஆனவள் கற்பினால் வெந்ததல்லதோர்
வானரஞ் சுட்டதென் றுணர்தல் மாட்சியோ"

என்று, சீதையின் நிறையின் திட்பத்தைஎடுத்துவிளக்கி

"இசையுஞ் செய்கையும் உயர்குலத்தியற்கையும் எஞ்ச
வசையும் கீழ்மையும் மீக்கொளக்கிளையொடும் மடியாது



அசைவில் கற்பின் அவ்வணங்கை விட்டருளிதி" என்று அறிஞரின் மிக்கோனான வீடணன் வலியுறுத்திக் கூறும் அறநெறி மிகுந்த அழகுடையதாகவே அமைந்துள்ளது.

இவ்விடத்து வீணைக்கொடியோன் வீரத்தம்பியரான கும்பகர்ணனையும், வீடணனையும் ஒப்பிட்டு நோக்கினால் ஒருவரில் ஒருவர் எத்துணை ஏற்றமுந் தாழ்வும் உடையவர் என்பது காண்போம். இரு தம்பியரும் அண்ணலுக்கு அறநெறியெடுத்தோதுகின்றார்கள். வீரமே பெரிதெனநினைத்த வீரன், அறநெறிஉணர்ந்த பெருமகனாயினும், சீதையை விடுத்து, அதனால் அரக்கர்குலத்திற்கே அழியாப்பழி பூணுவதைவிட, தன் ஆவியை விடுத்தேனும் அரக்ககர்தம் புகழை நிலை நிறுத்த நினைக்கின்றான். அறநெறிநின்று அதன்வழியொழுகலே பெரும்புகழெனநினைத்து வாழும் அறிஞர்பெருமகன், பகைவன் கால்பணிந்தேற்கும் பழியைவிட அறநெறிநின்று தன் கடனாற்றுதலே தன் கருமமென நினைக்கின்றான். இருவர்தம் மனநிலையும் ஏற்றமுடையதேயாகுமெனினும், இவ்விருவரிலும்,நன்றிமறவா நல்லாக்கனாய் விளங்கிய பெருமை கும்பகர்ணனுக்கே உரியதாகும். தருமமல்நெறியில் தலைப்படும் தமையனைத்திருத்தமுயன்ற தலைவன் தன் முயற்சி பயன்படாமை கண்டு, அதனால் அவனை அறவே விடுத்து பகைவனின் பாதம்பணிதலை விட அவன்பொருட்டு அமர்புரிந்து ஆவிதுறத்தலே தன் கடன் என்று கொள்ளும் வீரனது மனநிலை வான்புகழத்தக்க மாண் புடையதேயாகும்.

"கருத்திலா இறைவன் தீமை கருதினால் அதனைக்காத்து
திருத்தலாமாகில் நன்றே திருத்துதல் தீராதாயின்
பொருத்துறு பொருளுண்டாமோ பொருதொழிற்குரியராகி
ஒருத்தரின் முன்னஞ் சாதல்உண்டவர்க்குரிய தம்மா." என்று

கூறும் அறநெறி தலைநின்ற அண்ணல்தன் மொழிகள் நலஞ்சான்றதாகும். ஆனால் இவன்றன் தம்பியாய் எழுந்த வீடணன் மனநிலை வேறு விதமாக அமைந்துள்ளது. அஞ்சாதவலியுடைய அரக்கர் கோன், தம்பிசொன்ன நீதியின் நெறிநிற்க நினையாது அவனையே

"அஞ்சினையாதலின் அமர்க்கு மாளலை
தஞ்சென மனிசர்பால் வைத்த சார்பினை
வஞ்சனைமனத்தினை பிறப்பு மாற்றினை

நஞ்சினை யுடன்கொடு வாழ்தல் நன்றரோ" என இகழ்ந்துரைத்து, தன்முன்னின்று உடனே நீங்கும்படி ஏவவும் அதையே காரணமாகக் கொண்டு, உடனே நாயகன்மலர்க்கழல் நணுகவிரைகின்றான். தமையன் தீ நெறி செல்கின்றான் என்பதை உணர்ந்தும், அவனைத்துறந்து பகைவரைச் சேர்ந்துவாழ இறையளவும் இசையாத நன்மிமறவா நல்லாக்கனது உள்ளத்தையும், தன் தமையன் தான் கூறிய அறநெறி ஓராது, தன்னைக் கடிந்ததற்காகப் பகைவன் பக்கல் சென்று அவன்றன் அடிபணியும் அறிஞன் உள்ளத்தையும் ஒப்பிட்டால் புகழ்பெறுதற்குரியார் யாவர் என்பது காண்போம்.

"தருமமும் ஞானமும் தவமும் வேலியாய்
மருவரும் பெருமையும் பொறையும் வாயிலாய்
கருணையங் கோயிலுள் இருந்த கண்ணனது" கழலடி

இறைஞ்சி வாழும் இலங்கை வேந்தன் தன் அண்ணனை கும்பகர்ணனையும் தன் பக்கத்தே சேர்த்துக் கொள்ள எண்ணுகின்றான். அறநெறிதுறந்த அரக்கர் கோனைக் கைவிட்டு, இருமையுந் தரும் பெருமானாய இராமனைச் சேர்ந்து வாழ்வதே சிறப்புடையதாகும் என்றுரைத்த தம்பியை நோக்கி

"நீர்க்கோல வாழ்வை நச்சி,
நெடிது நாள் வளர்த்துப் பின்னைப்
போர்க்கோலஞ் செய்து விட்டார்க்கு
உயிர்கொடாது அங்குப் போகேன்"

என்று கூறும் உறுதி மொழியும்.

"செம்பிட்டுச் செய்தஇஞ்சித் திருநகர்ச் செல்வம் தேறி
வம்பிட்ட தெரியல் எம்முன் உயிர்கொண்ட பகைக்கை வாழ்த்தி
அம்பிட்டுத்துள்ளங்கொண்ட புண்ணுடை நெஞ்சோடுஐய!
கும்பிட்டு வாழ்கிலேன் யான் கூற்றையு மாடல் கொண்டேன்"

என்று மரணமே பெரிதென நினைந்து கூறும் "குணங்களால் உயர்ந்த" கும்பகர்ணனது செம்மை சான்றசொற்கள் அழகுடையதேயாகும். கூற்றையும் ஆடல் கொள்ளும் தனது வாழ்க்கையையும், பகைவனைக் கும்பிட்டுவாழும் தம் தம்பியின் வாழ்க்கையையும் ஒப்பிட்டுப்பார்த்த, குலத்து மானந் தீர்ந்திலாத கொற்றவனது உள்ளத்தில் தனது வாழ்க்கையே உயரியதெனத் தோன்றுகின்றது. அவன்றன் உள்ளத்தின் உயர்வே பெருமையுடையதும் ஆகும். மாற்றாரைத் தொழுது வாழ்வதிலும் மானங் காப்பதே தன் கடனெனக் கொண்ட திருமகன் அமர்க்களத்தே தன் அரிய ஆவியை விடுத்து என்றென்றும் அழியாப் புகழெய்துகின்றனன்.



மானமே பெரிதெனக் கொண்டு அதனால் புகழ்பட வாழ்ந்தவன் கும்பகர்ணன் என்பதும், வாழ்க்கையின் நலனையே பெரிதும் கருதி அதனால் குலமானம் போற்றாததலைவனாய் இலங்கியவன் வீடணன் என்பதும் இதுவரை எடுத்துக்காட்டிய ஒன்றிரண்டு குறிப்புகளால் இனிது விளங்கும்.

---


## மன்னார்குடி யாதவர்குல சங்கம்.

இச்சங்கத்தின் 4-வது ஆண்டு விழா நாளது பிரமோதூதஃரு பங்குனிமீ 11உ (24—3—31) பிரமோர்ச்சவ நவநீத சேவையன்று சென்னை யாதவகுல வாலிபர் சங்கத் தலைவர் திரு. T. S. வேணுநாதக்கோன் அவர்கள் தலைமையில் நடைபெறும். அது சமயம் நமது யாதவகுல சமூகத்தினர் அனைவரும் விஜயஞ்செய்து சமூக முன்னேற்றத்திற்குரிய மார்க்கங்களை எடுத்தியம்பி மகாநாட்டைச் சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

காரியதரிசி
N. கோதண்டபாணி பிள்ளை.

தலைவர்
R. ஜெகநாதபிள்ளை.

# மனிதர் வாழ்வு.

(திரு. தி. அ. முத்துசாமிக் கோனார்.)

உலகத்தில் உள்ள எல்லாப் பிறவிகளைவிட, மனிதப் பிறவி உயர்ந்தது, மிருகங்களுக்கும் காண்டல், கேட்டல், மணத்தல், உருசித்தல், பரிசித்தல், என்னும் ஐந்து முதலறிவு உண்டென்றாலும் அந்த ஐந்து அறிவுகளுடன் யுக்தி என்னும் அகஇந்திரியமும் சேர்ந்து ஆறறிவு உடையராய், ஒவ்வொன்றையும் பகுத்தறியும் வன்மை கொண்டுளதால் மனிதர்கள் சிறந்தவர்கள் என்பது மறுக்க முடியாதது. தங்கும் வசதி, ஆகாரம் முதலியன அக்காலத்து எப்படி இருந்ததோ அப்படியே மிருகங்கள் இக்காலத்தும் கொண்டிருக்கின்றன. மனிதர்களோ அப்படி இல்லை. காலத்துக்குக் காலம் எல்லாவற்றுள்ளும் மாறுபாடு உள்ளவர்களாக நடக்கிறார்கள். மனிதரின் பகுத்தறியுந்தன்மை அவனவன் சார்ந்திருக்கும் இனத்துக்கேற்றபடி இருப்பதல்லது, அவனுக்கும் பகுத்தறிவு இயற்கையிலேயே கிடையாதென சில மனோதத்துவ சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். மனிதனது இயற்கையறிவு, சேர்க்கைக்குத் தக்கதாய் உண்டாவதென்பதுண்மை. சீலராக வேண்டுவோன் ஒவ்வொருவனும் சன்மார்க்க சங்கத்தைச் சேரவேண்டுமென்றும், நல்லாரை நாடவேண்டுமென்றுந் தீயாரை விட்டகலவேண்டுமென்றும், பெரியோர்கள் வற்புறுத்தியிருக்கிறார்கள் என்பது கருதற்பாலது. இயற்கையும் செயற்கையும் சேர்ந்த சமூகமே மக்களின் அறிவாகும். உடம்பு வளர வளர மூளையும் விசாலித்து அறிவு விருத்தியடைகிறது. மக்களின் மூளை வளர்ச்சிக்குத் தக்கபடியே அறிவும் பொருந்தியுள்ளது. அறிவின் விசாலத்தாலன்றோ உலகத்தையே அழித்துவிட வருதல் போலவரும் பல பெரிய ஆறுகளை மடக்கியடங்கும்படி அணை கட்டிவிடுகிறான். பஞ்ச பூதங்களையும் அடக்கி ஏவலாளி போல வேலை செய்யச் செய்கிறான். பல மயிலுக்கப்பால் பூமிக்குள்ளிருக்கும் கனிகளைக் கண்டெடுத்தல், பெரிய பர்வதங்களைக் குடைந்து செல்லல், ஆகாயத்தில் ரதத்தை ஓட்டிச் செல்லல் எத்தனையோ தூரத்திலிருந்து தெரிவிக்கும் செய்தியைக் கம்பி முதலிய பிடிப்பு இல்லாது இங்கிருந்து ஒலிவடிவைக்கொண்டு காணுதல், ஆகாயத்திலுள்ள கிரகங்களின் சலனம் அங்குள்ள ஆறு, நிலம்,



ஜீவராசிகள் முதலியவற்றை இங்கிருந்து சோதித்துக் காணல், மழை இல்லாத காலத்தில் மழை பெய்யச் செய்தல், விசித்திரமான பிறவிகளை வேறுபல பிராணிகளிடத் துண்டாக்கல் முதலியவற்றைச் செய்து வருதலை நோக்குகின்ற பொழுது மனிதனைத் தேவனுக்குச் சமமாகச் சொல்லலாம், என்று சிலர் சொன்னாலும், மனிதச் செயல்களைப் பார்க்கிறபொழுது அதி அற்புதமாக இருக்கிறதல்லவா? பெரிய உருவமும் கோபமுமுள்ள யானை, அந்த யானையைக் கொல்லும் சிங்கம் முதலியவற்றைக் கூத்தாடச் செய்யும் வலிமை கொண்டவன். எல்லாவற்றையும் அடக்கும் ஆற்றலுடையவன் மனிதனே, அவனுக்கு ஒப்பாக யாரைச் சொல்லலாம் என்று திகைக்கிறார்கள்.

எல்லா வகையாலும் வன்மை பெற்ற மனிதப் பிறவியையும் கேவலமாக மதித்திருக்கும் பறவை, விலங்கு முதலிய அற்பப் பிறவியையும் ஒப்பிட்டுப் பார்க்கிறபொழுது அவைகளுக்குக் கடவுள் அவயவ உதவியமைப்பு இயற்றியிருப்பது போல மனிதனுக்கு வடிவ அமைப்புக் கொடுக்கவில்லை. அதனால் ஆதரவற்ற உடலமைப்புப் பெற்றுளது மனித தேகம் என்பதில் தடையில்லை. பட்சி, மிருகங்களுக்கு வெயில் எரியினும் குளிர் நடுக்கினும் பிறர் துன்பஞ்செய்யவரினும் தங்களுக்குள்ள சிறகு, மயிர், தோல், கொம்பு முதலியவற்றால் வாதையின்றிக் காத்துக் கொள்ளுகின்றன. மனிதனோ அவ்வகை இல்லாமையால் ஆ! ஆ! மனிதநிலை இவ்வளவு தாழ்விலிருக்கிறது! சிந்திக்கத் தகுந்தது. ஆனால் மற்றவற்றைவிட இவ்வளவு கேவலமாகப் படைத்தல் நீதியோவெனில், மற்ற பிராணிகளிடத்திலில்லாத விசேஷப் பொருளொன்று மனிதனுக்கு அனுக்கிரகிக்கப்பட்டுள்ளது. அது பகுத்தறிவு. அந்தப் பகுத்தறிவால் தன் கை கால் முதலிய அவயவங்களைக் கொண்டு ஆகவேண்டுவனவெல்லாம் செய்துகொள்க என்பதே முழுமுதற் கடவுளின் திவ்விய சித்தம் எனக் கொள்ளுதலே ஏற்புடைத்து.

ஆதலின் மனிதனுக்கு வேண்டுவனவெல்லாம் தானே அமைத்துக்கொண்டு ஜீவிக்க வேண்டுபவனாகின்றான். எனவே மனிதன் தன் நல்வாழ்வின் பொருட்டுச் சோம்பலின்றி முயற்சிகொண்டிருக்க வேண்டியவன். மற்ற விலங்கினங்களோ, ஏதோ கண்டவற்றை உண்டு கவலையற்றுத் தூங்கிச் சுகித்துவாழும் இயல்புள்ளன. அவைகள் பிறவற்றின் சகாயம் ஓர் அணுவளவும் எதிர்பார்ப்பதில்லை.

மனிதன் வாழ்தற்கு மறைவு வேண்டும்; நிழல் வேண்டும், குடை வேண்டும், செருப்பு வேண்டும், துணி வேண்டும், அரிசி வேண்டும், நெய் வேண்டும் இன்னும் வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களெல்லாம் இருந்தாலொழியக் காலம் நடைபெறாது. இவற்றையெல்லாம் தானாகவே செய்துகொள்ளலாம் என்றால் எவ்வாறு ஜீவிக்க முடியும்? ஆதலின் ஒவ்வொன்றும் தோற்றுவிக்கும் ஒவ்வொருவனிடமும் உள்ளவற்றைச் சேர்க்க வேண்டும். ஒவ்வொருவனும் பல பேர்களால் ஆக்கப்படும் பொருள்களைத் தேட வேண்டியிருக்கிறது. பிறருடைய சகாயமின்றி வாழ்தல் முடியாது. தன்னால் உண்டாக்கியவை பிறர்க்கும், பிறர் பலரால் உண்டாக்கப்படுவன தனக்குமாக அத்தியாவசியம் வேண்டுவனவாக இருக்கின்றன. இயற்கைப் பொருள்களேயன்றிச் செயற்கைப் பொருள்களே அதிகம் வேண்டிருக்கின்றன. இவற்றை நன்றாக யோசிக்கின்ற பொழுது இந்தப் பூமிதான் பெரிது. இதில் பல ஜீவராசிகள் வாழ்கிறார்கள் என்றால் இந்தப் பூமி எப்பக்கமும் நகர்தற்கின்றி எல்லாப் பக்கங்களிலிருந்தும் பிற அண்டங்களும் மற்றைக் கவர்ச்சியும் இதனை இழுத்துக் கொண்டிருப்பதால் இப்பூமி நிற்கிறது. மற்றை அண்டத்துக்கு இது ஒரு ஆதாரமாய் நிலவுகின்றது. இதனால் ஒன்று பெரியது ஒன்று சிறியது என்று சொல்லுதற்கு இயலாது. ஒன்று மற்றொன்றிற்கு ஆதாரவாக இருக்கிறது. மனித வாழ்க்கை நடைபெறுதற்கு நடக்குங்காலைப் பெரிதென்னலாமா? கையைப் பெரிதென்னலாமா? கண்ணைப் பெரிதென்னலாமா? மற்று எந்த அவயவத்தைப் பெரிதென்னலாம்? அல்லது சிறிதென்னலாம். எல்லா அவயவங்களும் சேர்ந்தல்லது வாழ்க்கை நடைபெறுவதில்லை. ஆதலின் எந்தத் தொழிலுடையானும் பிறனை எதிர்பாராது தன் தொழிலை நடத்தமுடியாது. உழவன் என் உழைப்பு இல்லாது உலகம் ஜீவியாது என்றான், கருமான் என் துணையின்றி எத்தொழிலும் இயங்குவதில்லை என்றான். இதுபோல ஒவ்வொருவரும் தன் தொழிலைப் பெரிதென்கிறார்கள். இவர்களும் மற்றுள்ள தொழிலாளரும் சொல்வதெல்லாம் உண்மையுள்ளவே என்றாலும் எல்லாத் தொழிலாளரும் அவரவர் தனித்தனி இயற்றுவதைப் பெற்றே நடைபெற வேண்டியது மனிதர் வாழ்வு.

---

# ஞான கலா விலாசம்.

## திரு. ஐயன்பெருமாள் கோன்.

“முயற்சி உயர்ச்சிதரும்”—முயற்சியாவது மனம் வாக்குக் காயம் எனும் மூன்று கரணங்களும் தத்தம் கிரமமான தொழில்களில் கிளர்ச்சியுடைமையாம். இவற்றுள் மனம் சிந்தித்தலும், வாக்குச்சொல்லுதலும், காயம் செய்தலும், முறையேயுடையன. இவை மூன்றும் நன்மை தீமைபற்றி நற்சிந்தனை-தீச்சிந்தனை, நற்சொல்-தீச்சொல், நற்செயல்-தீச்செயல், என அறுவகைப்படும். இவற்றுள் நமது மூவித கரணங்களையும் தீமை பயப்பனவற்றில் முயலவிடாது, நன்மைபயப்பனவற்றில் மேன்மேலும் கிளரச்செய்வதே உயர்ச்சியைத் தரத்தக்க முயற்சியாம். தேவர், மனிதர், விலங்கு, பறவை, நீர்வாழ்வன, தாவரம், எனப்படும் எழுவகைத்தோற்றங்களுள்ளும் தாழ்ந்த தாவரத்திற்கும் மனிதர்க்கும் வேற்றுமையாது? மரத்திற்கு நல்லறிவுங் காரியமுயற்சியும் இல்லை, மனிதர்க்கு அவ்விரண்டும் நிறைந்துள்ளன. மரங்கள் முயற்சி இலதேனும், உயிருள்ளதுபோன்று தன்னிடமாகப்பழ முதலியவற்றைத்தந்துதவி, இறந்து பட்டபொழுதும், ஆலயம், வீடு, மரக்கலம் முதலியவை செய்தற்குக் கருவியாகியும் உபயோகமாகும். முயற்சியற்ற மனிதரோ அவ்விருகாலத்தும் தமக்கேயன்றிப் பிறருக்கு எள்ளளவேனும் பயன் படார். நீர்ப் பூவின் தாள் அந்நீரளவே உயர்வதுபோல, மனிதர்முயற்சி அளவிற்கே உயர்வடைவர். அவ்வண்ணமே உயர்ச்சியைக் கருதிமுயலுவோர்க்கு விதியின்பயனால்அம்முயற்சியின்உயர்ச்சியைக்கொடாவிடினும்,அவர் முயற்சியில் தவறில்லாமையால் கீழ்ப்போகாது மேல் நிலையில் நிற்றலாகிய பயனை அடைவர். அன்றியும் முயற்சியில் வந்த மூவித கரண வருத்தத்திற்கேற்ற அரிய பிரயோசனத்தையாயினும் அடைவர்.

ஆகவே முயற்சியொடு விதியுங் கூடுமாயின் மிக்க பயனையடைதல் சொல்லாமலே பெறப்படும். ஒருவழி, இருவழிகளில் மாறாக நிற்கும் ஊழ்வினைக்குப்பயந்து, முயற்சியைவிடாது பலவழிகளிலும் முயலுவோர் தப்பாது பலனெய்துவார். தாம் இயல்பாகவே பெறத் தகும் பொருள் முதலியவற்றை மதித்து, முயற்சியை லௌகிகம் மதியாதார், அதன் பயனாகத்தாம் ஈட்டிய பொருள்களைக் காப்பாற்றிக்கொள்ளும் வலிமையுங்கூட இல்லாதவர்களாய், ஒருகாலத்து அவற்றையும் இழந்து திண்டாட நேரிடும்,

முயற்சி ஒன்றையே உறுதிப்பொருளாக வுடையவர், பொருள் முதலியவற்றைப் பெற்றிருந்து இழந்தகாலத்தும் அவற்றின் நிலைமையையும் முயற்சியின் வலிமையையும் அறிந்து ஒருபொழுதும் வருத்தமடையார். "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" அன்றோ! "ஊக்கமது கைவிடேல்"

*　　*　　*　　*

"செல்வஞ் சதமல்ல"—பொருள் ஈட்டுதலில் கண்ணுங்கருத்துமாயிருப்பவர், தன் சுற்றத்தார், நண்பர், என்பது ஒருசிறிதுங் கருதாது, பொருளேபிரதானமெனநினைந்து, அதனைச்சேர்த்து தீயவழிகளில் செலவிட்டுக் கண்ணிருந்துங் குருடராய், வாயிருந்தும் ஊமைகளாய்ச் செவியிருந்துஞ் செவிடர்களாய்த் தாம் தாம் உண்பதும் உடுப்பதுமேயன்றிப் பிறிதொன்றும் அறியாராய் உலகில் இயங்குகின்றனர். "செல்வம் வந்துற்றகாலைத் தெய்வமுஞ் சிறிதுபேணார், சொல்வன அறிந்து சொல்லார் சுற்றமுந்துணையும் நோக்கார்...... மண்ணின்மேல் வாழுமாந்தர்" ஆகவே செல்வம் நிலையற்றது, ஆறு இடும் மேடும், மடுவும் போன்றது, சகடக்கால்போன்று வருவது என்பதை அறிந்து, இறைவன் நமக்குதவிய செல்வத்தைப் பிறருக்கும் கொடுத்து வாழ்தலேசிறந்தது. நம்மால் உதவக்கூடியபொருள் மிகச்சிறிதேயாயினும், "இன்றைக்கிருப்பாரை நாளைக்கிருப்பரென்று எண்ணவோ திடமில்லை" யாகையால் பிறகுசெய்வோமென்று நினையாது, பிறருக்குதவி ,நாமும் அனுபவித்து, சுற்றந்தழுவி இன்புறுதலே செல்வம் உடையோர்க்கழகாம். "செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்" அன்றோ!

அளவற்ற செல்வமுடையவரான பட்டினத்தடிகள் "காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே" என்ற இவ்வாசகம் எழுதிய ஓலையைக் கண்டமாத்திரத்தே, தனக்குச்சொந்தமான அளவற்ற நிதியங்களை மண்ணாகமதித்துத் துறவுபூண்டு, தாம் அறிந்ததை உலகறிய வேண்டி அறிவுறுத்தியது யாது?

"பிறக்கும் பொழுது கொடுவந்ததில்லை பிறந்துமண் மேல்
இறக்கும் பொழுது கொடுபோவதில்லை இடைநடுவில்
குறிக்குமிகச் செல்வம் சிவன்தந்த தென்று கொடுக்கறியாது
இறக்குங் குலாமருக்கென்சொல்லுகேன்இறைவாகச்சியேகம்பனே"



ஆதலால், செல்வமிக்குடைமையால் நாமே மகிழ்ந்து உண்டு உடுத்துச் செருக்கடையாது சுற்றத்தாருக்கும் ஏழைகளுக்கும் நம்மாலியன்ற உதவி புரிந்து வாழ்வோமாக.

*　　*　　*　　*　　*

"வறுமையில் செம்மை"— "கொடிது கொடிது வறுமை கொடிது" என ஔவையார் கூறிய வறுமையின் கொடுமையை அனுபவித்தோரேயன்றி அனுபவியார் அறியார். செல்வத்திற் சிறந்து வாழ்ந்து சுகமுறுங்காலத்து, அச்சுகத்தினைப் பிறருக்கு ஒருசிறிதேனும் வெளியிடார். ஆனால் வறுமையுற்றுத் துன்புறுங்கால், அதனைப் பலருக்கும் வெளியிட்டுவருந்துவர். இது உலக இயற்கை.

வறுமை வந்தகாலத்துத் துன்பம் பல அடுக்கிவரினும் செம்மனமுடையவராய்ப் பிறரையும், தெய்வத்தையும் இகழாது, இது நாம் முன்செய்த தீவினைப்பயன் என நினைந்து பொறுமையடைதலே அவ் வறுமையுடையார்க்குச் சிறப்பையளிக்கும்.

அன்றி "அறிவிலும், வல்லமையிலும் என்னிலும் மிகத்தாழ்ந்தவன் செல்வமிக் குடையவனாய், சுகமாய்வாழ யான்மட்டிலும் துன்பப்பட்டு வறுமையடைதல் தருமமோ" எனப்பொறாமை கொள்ளுதலும், மனைவி, மக்கள் வறுமையின் மிகுதியால் உண்ணவுணவின்றி வருந்துவதைக்கண்டு "பெண்ஜாதி கால்விலங்கு பிள்ளையெல்லாஞ் சுள்ளாணி" எனக் கருதிக் கோபங் கொள்வதும் ஏழைமைத்தன்மையை அதிகரிக்கச் செய்யுமேயன்றி வேறல்ல.

வறுமையைப் போக்கக் கருதி நெறியல்லா நெறியில் உழன்று பொய்சொல்லி, மானமழிந்து, மதிகெட்டும் பாவமூட்டையைச் சுமையாக்கிக் கொள்ளாது, மானத்தைக்காப்பாற்றி, மறந்தும் பிறன்கேடு சூழாது, எம்பெருமானைத்துதிப்போமாகில், வறுமை, ஆதவனைக்கண்ட பனியெனநீங்கு மென்பதற்குச் சந்தேகமில்லை.

வறுமையெனுங்கடலுள் ஆழ்ந்தும் இருபத்தேழு மக்களுடன், செம்மனச்செல்வராய் விளங்கிய சுதாமா, அருட்கடலாங் கண்ணபிரான், திருவடிக் கமலங்களைச் சதா துதித்த தன்மையான், வறுமைக்கடல்கடந்து செல்வக்கடலில் ஜில்லெனக் குளித்து முடிவில் முத்திக்கரையாம் அழியாப் பெரும் பதமுமடைந்தனரன்றோ!

## காசின் மகிமை.

——(*)——

கல்விதருவாள் கலைமங்கை * கருமைதருவாள் மலைமங்கை
செல்வந்தருவாள் திருமங்கை செயத்தைத்தருவாள் + செயமங்கை
எல்லாந்தருதற் கெவராலும் ஏலாதென்பர் இவ்வுலகில்
எல்லாந்தரவல் லதுபணமே யென்னிற்பணத்துக் கிணையென்னே (1)

கல்வியுமறியான் கேள்வியுமறியான் கற்றவர்பாலிருந்தறியான்
பல்லலங்காரக் காவியம்படித்த பாவலன்றானெனப் பகர்வான்
நல்லவையொன்றுங் கனவிலுநவிலான் தீயவை நாடொறுமியற்றும்
புல்லறிவாளனாயினுமிவனைப் புருடனாப்புரிந்தது பொருளே (2)

பணமுடையான் குணமுடையான்
பணமுடையான் மணமுடையான்
பணமுடையான் உணர்வுடையான்
பணமில்லான் பிணமொப்பான். (3)

(பணமுப்பது)

[தொடரும்.]

## யாதவ வாலிப சங்கங்களும் அவற்றின் அவசியமும்.

(திரு. நா. கு. இராமஸாமிக் கோனார்.)

ஒரு தேசத்தின் எதிர்கால முன்னேற்றம் அத் தேசத்து வாலிபர்களையே பெரிதும் பொறுத்திருக்கிற தென்பது உலகறிந்த உண்மையாகும். இன்றைக்கு வாலிபர்களாக உள்ளவர்களே நாளைக்குப் பெரியவர்களாகித் தேச காரியங்களில் ஈடுபடுகிறவர்களாகையால், வாலிபர்களைச் சரியான வழியில் பழக்க வேண்டுமென்பது வெளிப்படை. இளவயதிலேயே சரியான கல்வி போதித்துப் பழக்கினால்தான் வாலிபர்கள் பிற்காலத்தில் சிறந்த தேசாபிமானிகளாகவும் சமூகத் தொண்டர்களாகவும் ஆக முடியும். வாலிபர்களின் முன்னேற்றத்திற்கு வாலிப சங்கங்கள் மிக முக்கியமான சாதனங்கள் என்பதும் உலகறிந்த உண்மையே. இவ்வுண்மையை உணர்ந்தே பல நாட்டினர் வாலிப இயக்கங்களைத் தோற்றுவித்து, அவைகளின் மூலம் வாலிபர்களின் அபிவிருத்திக்கான வழிகளை ஆராய்ந்து வருகின்றனர். தேசத்தொண்டே மிகச் சிறந்த தொண்டு என்றாலும், தற்போது நம்மில் பலர் இத்தொண்டு புரிவதற்கு ஒருவாறு முடியாத நிலைமையிலிருக்கிறோம். ஆனால் சமூகத் தொண்டு ஆற்றுவது நம்மில் பலருக்கு சாத்தியமானதே. ஆதலால் யாதவ வாலிப சங்கங்கள் மூலம் யாதவர்களுக்கிடையே சமூக ஊழியர்களை நன்கு பழக்கி வைக்கலாம்.

வாலிப சங்கங்களினால் உண்டாகும் நன்மைகள் பல. அவற்றை முழுவதும் விவரிக்க நம்மித்திரன் இடந்தரான். சிலவற்றை மாத்திரம் இங்கு குறிப்பிடுகிறேன். நமது வகுப்பாரில் மிகச் சிலரே எழுதப்படிக்கத் தெரிந்தவர்களென்பது யாவரும் அறிந்ததே. கிராமாந்தரங்களில் வசிக்கும் நமது யாதவ சகோதரர்கள் மத்தியில் யாதவ வாலிபசங்கத் தொண்டர்களை அனுப்பிப் பிரசாரஞ் செய்யலாம். 'கல்வியானது ஒரு திவ்விய தேவாமிர்தம் போன்றது. 'வாருங்கள், நாமெல்லோரும் அத் தேவாமிர்தமாகிய கல்வியை உண்டு ஆனந்திப்போம்' என்று ஜனங்களிடத்து எடுத்துச் சொல்லுவதற்கு வாலிப சங்கங்கள் அவசியமாகும்.

கிராமவாசிகள் சுகாதார விதிகளைப் பெரிதும் கவனிப்பதில்லையென்றே சொல்லவேண்டும். அவர்கள் நீர் நிலையங்களைப் பரிசுத்தமாக வைப்பதில்லை. பல வழியிலும் அசுத்தமாக்கப்படும் கிணறு, குளம், கேணி முதலியவைகளிலிருந்து குடிக்கத் தண்ணீர் எடுக்கிறார்கள்: அசுத்தமான தண்ணீரே சகல நோய்களுக்கும் பிதா என்பதை இவர்கள் உணர்வதில்லை. தியாக புத்தியுடைய யாதவ வாலிபத் தொண்டர்கள் மூலம் ஜனங்களிடம் சென்று சுகாதாரத்தைப் பற்றிப் பிரசாரஞ் செய்யும்படி செய்யலாம்.

சுருங்கக் கூறுமிடத்து, ஒவ்வொரு கிராமத்துக்கும் வேண்டிய சமூகச் சீர்திருத்த முதலியவற்றைச் செய்து ஜனங்களை முன்னுக்குக் கொண்டுவருவது அவ்வவ்விடங்களிலுள்ள யாதவ வாலிப சங்கங்களின் கடமையாகும். கிறிஸ்தவ வாலிப சங்கங்கள் (ஒய். யம்.

* கருமை-பலம்

\+ செயமங்கை-துர்க்கை

ஸி. ஏ.) போன்ற பல கிளைச் சங்கங்கள் ஏற்படுவது நமது முன்னேற்றத்திற்கு மிக அவசியமானதாகும். இது விஷயத்தில் யாதவப் பெரியார்கள் உதவி செய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நிதிமிகுந்தவர் பொற்குவை தாரீர்!
நிதிகுறைந்தவர் காசுகள் தாரீர்!
அதுவுமற்றவர் வாய்ச்சொ லருளீர்!
ஆண்மையான குழைப்பினை நல்கீர்!
மதுரத்தேமொழி மாதர்க ளெல்லாம்
வாணிபூசைச் குரியன பேசீர்!
எதுவும் நல்கியிங் கெவ்வகை யானும்
இப் பெருந்தொழில் நாட்டுவம் வாரீர்!

---

## முக்கிய கவனிப்பு.

இராமநாதபுரம் ஜில்லா யாதவர்களுக்குள் சிலர் மதுரை ஜில்லா தஞ்சாவூர் ஜில்லா முதலிய இடங்களுக்கு ஆட்டு மந்தைகளை மேய்ச்சலுக்கு ஓட்டிப் போகிறவர்கள் பெண் பிள்ளைகளை அழைத்துப் போகக்கூடாதென்று இரண்டு முறை இராமநாதபுரம் கோவைசிய யாதவகுல தர்மபரிபாலன சபையில் செய்த தீர்மானத்தில் அந்த ஜில்லா யாதவர்கள் யாவரும் கட்டுப்பட்டிருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்துக்கு விரோதமாகப் பெண் பிள்ளைகளைக் கூட்டிப் போகும் பக்ஷத்தில் அச்சபைக்குச் செய்து கொடுத்திருக்கும் நஷ்ட ஈடு ஒப்பந்தத்துக்கு அவர்கள் கட்டுப்பட்டவர்கள் என்பதைக் கட்டாயமாய் ஞாபகப்படுத்தப்படுகிறது.

மதுரை, தஞ்சாவூர், மன்னார்குடி, நாகப்பட்டணம் முதலான பாகங்களில் வசிக்கும் நமது யாதவ குலாபிமானிகள் இந்தத் தீர்மானத்துக்கு விரோதமாக யாரேனும் பெண்பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு வந்திருந்தால் திரும்ப அனுப்பி வைப்பதற்குரிய ஏற்பாடுகள் செய்யக் கேட்டுக் கொள்ளுகிறோம். பரமக்குடியை அடுத்த அதிகரை நெடுங்குளத்து யாதவர்கள் சிலர் சங்க ரிசலூஷனுக்கு விரோதமாகச் சில பெண் பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு போனவர்கள் திரும்பத் தங்கள் வீடுகளுக்கு மாசி மீத்துக்குள் அனுப்பிவிடுவதாகச் சங்கத்தில் கேட்டுக்கொண்டு போயிருக்கிறபடி செய்வார்கள் என்று உறுதியுடன் எதிர்பார்க்கிறோம். (ப-ர்)

## பெரியார் உரை.

—:000:—

(திரு. சு. ஆண்டியப்பா)

ஜாக்கிரதையுடனும், செவ்வையாகவும் செய்யப்படுகிற விஷயங்களுக்குப் பயம் என்பது கிடையாது. (ஷேக்ஸ்பியர்)

பழமையும் புதுமையும் காலந்தோறும் ஆராயப் பெற்று வாழ்விற் கலந்து மிளிர்ந்தாலன்றி எந்தச் சமூகமும் புத்துயிர் பெற்று இனிது வாழ முடியாது. (குமரன்)

பார்ப்பனரல்லார்களின் தாழ்வான நிலைக்குக் காரணம் அவர்கள் பெண் கல்வியை நிராகரித்ததேயாகும். (கிருஷ்ணபாய்)

தீண்டாமை தங்கள் மதத்தின் ஒரு பாகமென்று இந்துக்கள் கொள்ளுகின்ற வரையில் சுயராஜ்யம் என்பது அடையமுடியாத முயற்கொம்பு போன்ற தொன்றேயாகும். (காந்தி)

தன் பேச்சுக்கெல்லாம் ஆம், ஆம் என்று தாளங்கொட்டுபவனை நம்புவதைவிடத் தன் வார்த்தையை ஆட்சேபித்துப் பேசுவனிடத்தில் நம்பிக்கையை வைப்பதில் நன்மையுண்டு. (அமிர்தகுண போதினி)

சங்கீதமும், சிரிப்பும் உணர்ச்சியின் வளர்ச்சிக்குரிய சிறந்த அப்பியாசங்களாகும். சிரிப்பு மனச்சோர்வை ஓட்டுகின்றது. மனச் சோர்வுள்ளவன் எந்தத் துறையிலும் வெற்றியடைய மாட்டான் என்பது அநுபவந்தானே. (டக்ளஸ் பேர்பாங்ஸ்)

மண் பாதையிலுள்ள எந்த ஒரு பொருளை உற்று நோக்கி ஆராய்ந்தாலும் அது நமது ஐம்புலன்களில் ஒன்றுக்கோ அன்றி இரண்டுக்கோ மட்டுந்தான் இன்பந்தருகின்றது. ஆனால் ஒரு பெண் நமது ஐம்புலன்களுக்கும் ஒரே காலத்தில் இன்பத்தைத் தருகின்ற அதிசயப் பொருளாய் மிளிர்கின்றாள். (மதுரை வீ. மூ. பொன்னையா)

இந்நாளில் வேதமென்றும், மதமென்றும், கடவுளென்றும் சொல்லிக்கொண்டு கொலைவேள்வி புரிவது அநாகரீகமாகும். (நவசக்தி)

நம் நாடு இளைஞர்களால் முற்போக்கடைய வேண்டியிருக்கின்றது. அவர்களாள்தான் மூடப்பழக்க வழக்கங்கள் ஒழிதல் வேண்டும் என்பதை நாம் சொல்லவும் வேண்டுமோ? (திராவிடன்)

ஒரு பக்கம் அந்நியர் ஆட்சியில் அடிமைப்பட்டு அழுந்திக் கிடப்பதுபோலவே, மதத்தின் பெயரால் வைதீகர்களின் பிடிவாத, அர்த்தமற்ற, பொருத்தமற்ற, கால தேசவர்த்தமானத்திற்கு ஒவ்வாத கொள்கைகளால் மற்றொரு பக்கம் நம் தேசம் அடிமைப்பட்டுக் கிடக்கிறது. மூடக்கொள்கைகளை யார் நிர்மூலஞ் செல்கிறார்களோ அவர்களை வருங்காலத்தில் தேசாபிமானிகளெனப் போற்றுகிறோம்.
(ஏலவிவசாயி)

மக்கள் நல்வாழ்க்கைக்கு ஒவ்வாத ஆலயங்களும், வேதங்களும், சாத்திரங்களும் வேண்டாமென்றே தற்கால சோதிடஞ் சொல்லுகிறது.
(நாடார்குல மித்திரன்)

நமது குறைகளை நாம் முதலில் முதலுணர்ந்தாலன்றித் திருந்த வழி ஏற்படாது. குறைகளை அச்சமும் அவமானமுமின்றி எடுத்துக் காட்டி நமக்கு நலமிடித்துரைக்கும் நட்புடையாரே தற்காலம் தலைவராதல் தகவுமிகவுடையதாகும். நடுநிலை நின்றாராய்ந்து உண்மைகளை உரைப்பவரும், உண்மையினைக்கு நோக்கமுடையார் உரைகளுக்கு இடம் தருபவருமான நாயக்கரவர்களுடைய "குடி அரசுக்கும்" நாயக்கரவர்களுக்கும் நல்வரவுகூறத் தமிழகம் கடமைப்பட்டுள்ளது.
(மதுரை. எஸ். எஸ். சோமசுந்தர பாரதியார்)

அன்பு, அன்பு; அந்த ஒரே வஸ்துவே உனது ஆத்ம பொக்கிஷம்.
(சுவாமி விவேகானந்தர்)

மாணவர்களே! உங்கள் விடுமுறை நாட்களில் கிராமாந்தரங்களுக்குச் சென்று தெருப் பெருக்கும் வேலையிலீடுபட்டேனும் சமுதாய ஊழியம் புரியுங்கள்.
(மஹாத்மாகாந்தி)

உங்களுள் எவரொருவரால் மனிதகோடிகளுக்கு மிகுதியான நன்மை விளைகிறதோ அவரே சர்வ சிலாக்கியமானவராவார்.
(குர்ஆண்ஷரீப்)

"சமூக ஊழியம் ஈஸ்வர கைங்கரியம். (ஸி. ஆர். தாஸ்)

உன்னால் செய்யக் கூடியவற்றை உனது சர்வ சக்தியுடன் செய்து முடிப்பதே மனிதத்துவம்
(எமர்ஸன்)

அன்பர் பணிசெய்ய வெனை யாளாக்கி விட்டுவிட்டா லின்ப நிலைதானேவந் தெய்தும் பராபரமே.
(தாயுமானவர்)



"எவரையும் பகைத்துக் கொள்ளாதே, எல்லோரிடத்திலும் பிரியமாயும் நட்புடனும் இரு"
(கீதை)

நாம் வழிபடவேண்டிய முதற் கடவுளர் நமது சொந்த தேசத்தாரேயாவார்.
(சுவாமி விவேகானந்தர்)

வேதியராயினும் ஒன்றே—அன்றி
வேறு குலத்தின ராயினு மொன்றே (பாரதியார்)

"ஏழை யென்றும் அடிமை யென்றும் எவனுமில்லை ஜாதியில்
இழிவு கொண்ட மனித ரென்பர் இந்தியாவில் இல்லையே
தாதரென்ற நிலைமைமாறி யாண்களோடு பெண்களும்
சரி நிகர் ஸமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"
(பாரதியார்)

ஸ்ரீ

## மாதர் பரிசு!

(1) மாதர் கடமை!
(2) பெண்மக்கள் நிலை!
(3) மாதர்கள் முன்னேற்றம்!
(4) பெண்கல்வி அவசியமா?
(5) விதவா விவாசம் வேண்டியதா?
(6) கலப்பு மணம்!
(7) யாதவர்களும் பெண்மக்களும்!
(8) பெண்ணுரிமை!

என்னும் எட்டுக் கட்டுரைகளையும் பெண்ணுலகு என்னுந் தலைப்பில் யாதவ சமூகப் பெண்மக்கள் "யாதவ மித்திரன்" பத்திரிகையில் எழுதி யனுப்புவோர்க்கு எட்டுப் பரிசு வழங்கப்படும். கட்டுரை வரைவோர் இருபது வயதுக்கு உட்பட்டவர்களாக இருக்கவேண்டும். முதற்பரிசு மித்திரன் மூன்றாம் ஆண்டு ஆரம்ப தினத்தன்று "ஸ்ரீ கோபால் மஹாலில்" வழங்கப்படும். மற்ற பரிசுகளும் மாதாமாதம் கொடுக்கப்படும். கட்டுரை வழங்குவோர் இவ் எட்டனுள் எதை வேண்டுமானாலும் முதலில் எழுதியனுப்பலாம். ஆண்மக்கள் இதில் கலக்கக் கூடாது. பின்பு ஆடவர்களுக்குத் தனியாக இடமளிக்கப்படும். இது சம்பந்தமாய் எவ்வித கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளப்படமாட்டாது. சந்தா நம்பரையும் குறிப்பிடுக.

M. K. காந்திதாஸ், பர்மா.

# தஞ்சை யாதவர் சங்கம்.

யாதவமக்களின் மாபெருந் தலைவர்களும்
தொண்டர்களுமாகிய மதுரை திருமிகு செல்வர்,
இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன் அவர்கட்கும்,
பண்டிதர், திரு. ஆ. கார்மேகக் கோன் அவர்கட்கும்

## தஞ்சை யாதவமக்கள் கூறியவரவேற்பு.

ஐயன்மீர்!

நமது யாதவ சமூகத்தினரின் இருகண்ணனைய நீங்கள் இருவீரும் இங்கெழுந்தருளப் பெற்றமையின் எங்கட்கு, இன்றே, உலக முன்னேற்றம், நமது சமூக நிலை ஆகியவற்றைக் கண்டறியும் நன்னாளாகும்; இன்றே யாங்கள் செல்வத்தினும் கல்வியினும் சிறந்துயர்வதற்கு மடிகட்டி யெழும் நன்னாளாகும்; இன்றே, இவ்விந்தியா முழுவதும் விரிந்துகிடக்கும் நமது சமூகத்தின் முன்னேற்றங் கருதியுழைக்கும் உங்களைப்போன்ற பெரியார்கள் செய்துவரும் பெருந்தொண்டில், யாங்களும் கலந்துகொண்டு எம்மாலியன்ற சிறு குற்றேவல்களைச் செய்யப் புறப்படும் நன்னாளாகும்.

பெருந்தகையீர்!

திருமகளும் கலைமகளும் கலந்து வாழ்வதெனக் கூறவல்ல உங்கள் செல்வப் பெருக்கு, கல்விப் பெருக்குகளை அளவிட்டுரைக்க வல்லார் யாவர்? அப்பெரு வாழ்வுகளை யெல்லாம் நமது சமூக முன்னேற்றத்திற்கே பயன்படுமாறு செய்து, ஓய்வொழிவின்றி உங்கட்கு, நமது சமூகம், உங்கள் நல்வாழ்வு குறித்துத் தவங்கிடத்தலன்றி, வேறு எது செய்யவல்லது? ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு வழியாகப் பயன்படப் பல அரிய காரியங்களைச் செய்துவரும் நீங்கள், அப் பற்பல அலுவல்களையும் விட்டு, எளிய எங்கள் வேண்டுகோளைப் பொருட்படுத்தி இங்கெழுந்தருளியிருப்ப துணர்ந்த யாங்கள் அடையும் மகிழ்ச்சிக்கும், ஊக்கத்திற்கும், நன்றியறிவிற்கும் ஒரு எல்லையுண்டோ? உயர் திருவாளர்களே! ஒன்று கூறுகின்றோம்! நீங்கள் செய்துவரும் நமது சமூகத் தொண்டில் இனி யாங்களும் கலந்துழைத்து, எங்கள் கடமைகளைச் செய்துவர நாங்கள் உறுதி கொண்டுள்ளோம். அதுபற்றி நீங்கள் இப்போது எங்கட்குக் கூறும் அரிய பெரிய அருளுரைகளை நாங்கள் எதிர்பார்த்திருக்கின்றோம்.

தங்கட்குச் செல்வம், ஆயுள் முதலிய எல்லாப் பேறுகளும் இனிதோங்க, நமது கண்ணபிரான் திருவருளை வேண்டி நிற்கின்றோம்.

தஞ்சை
1—3—31

இங்ஙனம் தங்களன்பினை என்றும் மறவாத,

தஞ்சை யாதவர்.

---

வைகாசி௴ கடைசிக்குள் ஆர்டர் கொடுப்பவர்களுக்கு விலை ரூ. 2.

ஸ்ரீராமஜெயம்.



### யாதவமித்திரன் சந்தாதாரர்களுக்கோர்

## அறிவிப்பு.

மயர்வற மதிநல மருளப்பெற்ற பரமகாருண்யரான ஆழ்வார்கள் பன்னிருவர்களால் அருளிச்செய்யப்பெற்ற தமிழ் வேதமாகிய

## நாலாயிர திவ்யப்பிரபந்தம்.

பெரியவாச்சான் பிள்ளை, மணவாள மாமுனிகள் முதலான பூர்வாசாரியர்கள் அருளிச்செய்த வியாக்யானங்களுடனும் ஆழ்வாராதிகள் ஆப்டோன் கலர்ப்படங்களுடனும் சுத்தப் பதிப்பில் வெளியாயிருக்கிறது. யாதவமக்களது ஒவ்வொரு கிருகத்திலும் பிரபந்தம் இருந்து தீரவேண்டியது அவசியமாகையால், இதன் விலை ரூபா நாலுக்கு நமது சந்தாதாரர்களுக்கு மாத்திரம் பிரதி ஒன்றுக்கு ரூபா இரண்டுவீதம் கொடுப்பதாகத் தீர்மானித்திருக்கிறது. பிரபந்தத்திற்கு ஆர்டர் கொடுப்பவர்கள் விபரமான விலாசத்தையும் சந்தா நம்பரையும் குறித்தனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மானேஜர்.

| | விலை | | | சந்தாதாருக்குக் குறைந்த விலை. | | |
|---|---|---|---|---|---|---|
| வால்மீகி ராமாயணம் வசனம் | 15 | 0 | 0 | 13 | 0 | 0 |
| கம்பராமாயணம் வசனம் | 4 | 0 | 0 | 2 | 8 | 0 |
| பாரதம் வசனம் | 8 | 0 | 0 | 6 | 0 | 0 |
| பாகவதம் வசனம் | 4 | 0 | 0 | 2 | 8 | 0 |
| பக்தவிஜயம் வசனம் 6 பாகம் | 6 | 0 | 0 | 4 | 8 | 0 |
| அஷ்டப்பிரபந்தம் | 3 | 8 | 0 | 3 | 0 | 0 |
| குருபரம் பரா ப்ரபாவம் | 3 | 0 | 0 | 2 | 4 | 0 |
| பகவத்கீதை | 1 | 8 | 0 | 0 | 12 | 0 |
| விஷ்ணு புராணம் | 3 | 0 | 0 | 2 | 4 | 0 |
| வில்லிபாரதக்கவி (அரும்பத உரையுடன்) | 4 | 0 | 0 | 2 | 8 | 0 |
| கம்பராமாயணக் கவி | 8 | 0 | 0 | 5 | 0 | 0 |
| ராமர் அஸ்வமேதயாகம் | 2 | 0 | 0 | 1 | 0 | 0 |
| ஆதிபர்வம் | 2 | 0 | 0 | 1 | 0 | 0 |
| விராடபர்வம் | 1 | 4 | 0 | 0 | 12 | 0 |
| ஆனந்த ராமாயணம் | 6 | 0 | 0 | 5 | 0 | 0 |
| நித்யானு சந்தானம் | 0 | 12 | 0 | 0 | 8 | 0 |
| முதலாயிரம் | 1 | 0 | 0 | 0 | 12 | 0 |
| விநோதரச மஞ்சரி | 1 | 8 | 0 | 1 | 0 | 0 |
| நைடதம் (விசேட உரையுடன்) | 4 | 0 | 0 | 3 | 0 | 0 |
| திருக்குறள் (தெளிபொருள் விளக்க விரிவுரையுடன்) | 3 | 8 | 0 | 2 | 8 | 0 |
| நாலடியார் (உரை) | 1 | 8 | 0 | 1 | 2 | 0 |
| நளவெண்பா (மூலமும் விருத்தியுரையும்) | 2 | 8 | 0 | 1 | 14 | 0 |
| அகத்திய தேவாரத் திரட்டு | 1 | 4 | 0 | 1 | 0 | 0 |
| ராமலிங்கஸாமி அருட்பா | 4 | 0 | 0 | 2 | 8 | 0 |
| மூவர் தேவாரம் அடங்கன்முறை | 5 | 0 | 0 | 3 | 8 | 0 |
| கந்தபுராண வசனம் | 4 | 0 | 0 | 3 | 0 | 0 |
| விநாயகபுராண வசனம் | 4 | 0 | 0 | 3 | 0 | 0 |
| சூடாமணி நிகண்டு 1-முதல் 12 | 1 | 8 | 0 | 0 | 14 | 0 |

இன்னும் மற்ற வைஷ்ணவ சம்ப்ரதாயப் புத்தகங்களும் தமிழ், தெலுங்கு, நாகரம், கிரந்தம், இங்கிலீஷ் நாவல்களும் இருக்கின்றன. வேண்டியவைகளுக்கு விபரமாக எழுதினால் சகாயமாக அனுப்பி வைக்கிறோம்.

## யாதவ மித்திரன் சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| இந்தியா, சிலோன், பர்மா முதலிய உள்நாட்டிற்கு வருஷம் 1-க்கு | ரூ | 1—0—0 |
| பினாங்கு சிங்கப்பூர், முதலிய வெளிநாட்டிற்கு வருஷம் 1-க்கு | ரூ | 1—8—0 |

தனிப்பிரதி விலை அணா 2.

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தாக் கிடையாது.

மாதிரிப் பிரதி வேண்டுவோர்
இரண்டரையணா, தபால் தலை அனுப்பவேண்டும்.

1. சந்தாதாரராய்ச் சேர்கின்றவர்கள் பெயரையும் விலாசத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

2. எப்பொழுதும் சந்தாத் தொகையை முன் பணமாகச் செலுத்தவேண்டும். வி. பி. மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். சந்தாத்தொகையை முன்பணமாக மணியார்டர் செய்தால் 2-அணாத்தான் செலவாகும். வி. பி. மூலம் பத்திரிகையை வரவழைப்பதில் 3-அணா அதிகச் செலவாகும். ஆதலால் முன்னாடி மணியார்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்வதே நலம்.

3. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் அவ்வருஷ ஆவணி மாதம்முதல் கணக்கு வைக்கப்பட்டு ஆவணி மாதப் பத்திரிகை முதல் சேர்த்தனுப்பப்படும்.

4. யாருக்கேனும் சஞ்சிகை வந்து சேராவிட்டால் அம்மாதமுடிவிற்குள் தங்கள் சந்தா நம்பருடன் தெரிவித்துப் பெற்றுக் கொள்ளலாம். அதற்குப் பின்னர் தெரிவித்தால் விலை செலுத்தியே பெற்றுக் கொள்ளவேண்டும்.

5. இடம் மாறும் சந்தா நேயர்கள் தங்கள் புது விலாசத்தைத் தெரிவித்து, அது விபரத்தைத் தபாலாபீஸாரிடமும் அறிவித்துவிட வேண்டும்.

6. சந்தா நம்பரைக் குறிப்பிடாத கடிதங்களைக் கவனிக்க முடியாது. பதில் விரும்புவோர் தபால் தலை அனுப்பவேண்டும்.

## விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| 1-பக்கத்திற்கு | ரூ | 10—0—0 |
| ½-பக்கத்திற்கு | ரூ | 5—8—0 |

நீண்டகால விளம்பரங்களுக்கு யாதவ மித்திரன் ஆபீஸிற்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

---

ஐந்தாவது யாதவமகாநாடு போட்டோ படங்கள்.

வேண்டியவர்கள் யாதவமித்திரன் ஆபீஸுக்கு விபரமாகத் தெரியப்படுத்துவதுடன் முன் பணமாக ரூ 1—5—0 மணியார்டர் மூலம் அனுப்பிவைக்கவும்.

224 D

# இந்தியவிவசாயம்

ஓர் விவசாய மாதப் பத்திரிகை.

வருட சந்தா ரு. 1.

இதில் கமத்தொழில், கால் நடை பரிபாலனம், கூட்டுறவு, சிறு தொழில்கள் முதலிய கிருஷிகருக்கு வேண்டிய சகல விஷயங்களும் பிரதி மாதமும் வெளிவரும். மாதிரிப்பிரதி இனும்.

மானேஜர்,
இந்திய விவசாய ஆபீஸ்,
தெப்பக்குளம் போஸ்டு, திருச்சி.

# "Young Yadava"

**An Engish Monthly.**

Annual Subscription Rupee One.

Will be published by the YADAVA YOUTH LEAGUE, MADRAS. Sample copies will be sent on request. All educated yadavas are requested to send the addresses of their English educated relatives and friends so that an attempt can be made to enrol them as subscribers.

Yadavas who send their subscriptions in ADVANCE will go a long way in helping the Community.

APPLY TO:—

**T. S. Venunadha Kone**, F. C. I, M. R. A. S.,
*Kilpauk P. O. Madras*

**Printed & Published by E. M. GOPALAKRISHNA KONE**
**at the** Excelsior Press, Madura.

**Reg., No. M - 2527.** 224



# யாதவமித்திரன்.

யாதவமக்களின்
முன்னேற்றங்கருதிவெளிவரும்
மாதப்பத்திரிகை.

| தொகுதி 2 | பிரமோதூத வருஷம் பங்குனிமீ 1931 வருஷம் மார்ச்சுமீ | பகுதி 8 |
|---|---|---|

## பொருள் அடக்கம்.

| | |
|---|---|
| கடவுள் வணக்கம் | 225 |
| கிராமச் சீர்திருத்தம் | ,, |
| வாழ்க்கைத் துணைவி | 229 |
| மன்னார்குடி 4ஆண்டு யாதவகுலசங்கம் | 232,7 |
| பசு | 240 |
| கால்நடை வைத்தியம் | 244 |
| வீரபங்கன் | 247 |
| சென்னை யாதவகுல மகாசங்கம் | 252 |
| ஓர் வேண்டுகோள் | 254 |
| புதுவை யாதவகுல சங்கம் | 255 |
| சென்னை மாகாண 6-வது மகாநாடு | 256 |
| மாதர் பரிசு | ,, |



Managing Editor.
இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
புத்தகவியாபாரம், மதுரை.

224 F

# யாதவமித்திரன்.


## ஆசிரியர் கூட்டத்து அங்கத்தினர்கள்
(Editorial Board Members.)

தலைவர்.

1. திருவாளர், ஆ. கார்மேகக்கோனர் அவர்கள்
தலைமைத்தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

2. ,, ச. செல்லம் அவர்கள் (யாதவர்) சுசீந்திரம்.
3. ,, J. சக்கரபாணி நம்பியார் அவர்கள், பி. எ., பி. எல். ஹைகோர்ட் வக்கீல், வைஸ் பிரசிடெண்டு. ஜில்லாபோர்டு, திருநெல்வேலி.
4. ,, V. கிருஷ்ணரெட்டியார் அவர்கள் (யாதவர்) பி. ஏ. பி. எல். ஹைகோர்ட் வக்கீல், வேலூர்.
5. ,, தி. அ. முத்துசாமிக் கோனரவர்கள், வித்வான், திருச்செங்கோடு.
6. ,, K. வீராசாமிப்பிள்ளை அவர்கள், (யாதவர்) தலைமைத் தமிழாசிரியர், முனிசிபல் உயர்தர கலாசாலை, திண்டுக்கல்.
7. ,, R. வேங்கடா சலம்பிள்ளை அவர்கள், (யாதவர்) தலைமைத் தமிழாசிரியர், S. P. G. உயர்தரக் கலாசாலை, தஞ்சாவூர்.
8. ,, M. V. வேணுகோபாலப்பிள்ளை அவர்கள், (யாதவர்) தலைமைத் தமிழாசிரியர், E. L. M. F. ஹைஸ்கூல் புரசபாக்கம், சென்னை.
9. ,, ஐயம்பெருமாள் கோன் அவர்கள், தமிழாசிரியர், ஸெயின்ட் ஜோஸப் காலேஜ், திருச்சினப்பள்ளி.
10. ,, K. கோபால கிருஷ்ணன் அவர்கள், B. Sc. (Hons.) M. R. A. S. பர்மா.


## வேண்டுகோள்.

வியாசங்கள் எழுதுவோர் தெளிவாகவும் தூஷணைகளின்றியும் முழுவிலாசத்துடன் சமூக முன்னேற்றத்திற்குரியனவும் அறிவு வளர்ச்சிக்குரியனவுமாகிய பொது விஷயங்களைப்பற்றிச் சுருக்கமாகவும், நடை எளிதாகவும் எழுதியனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோரும், விளம்பரங் கொடுக்க விரும்புவோரும் அடியிற்காணும் விலாசத்திற் கெழுதுக.

யாதவமித்திரன் ஆபீஸ், ஸ்ரீ கோபால் மஹால்,
வடக்குச் சித்திரைவீதி, மதுரை.

224 G


சென்னை மாகாண

## 6-வது யாதவ மகா நாடு.

இம்மகாநாடு நாளது பிரஜோத்பத்தி௵ சித்திரை௴ 30, வைகாசி 1௳களில் (13, 14௳ மே௴) சென்னை அட்வகேட் மகா-௱-௱-ஸ்ரீ N. K. மோஹனரங்கம் பிள்ளை B. A., B. L. அவர்கள் தலைமையில் திருவாங்கூரைச் சேர்ந்த செங்கோட்டையில் நடைபெறும். அவ்வமயம் நமது யாதவகுல சமூகத்தினர் அனைவரும விஜயம் செய்து மகாநாட்டைச் சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

வரவேற்புக்கழகத்தலைவர்,

S. சட்டநாதகரையாளர், M. A., B. L.

# யாதவமித்திரன்.

## ஒரு மாதப்பத்திரிகை.

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

| தொகுதி 2 | பிரமோதூத ௵ பங்குனி ௴<br>1931-௵ மார்ச்சு-௴ | பகுதி 8 |
|---|---|---|


### கடவுள் வணக்கம்.

பொன்னானாய் பொழிலேழும் காவல் பூண்ட
புகழானாய் இகழ்வாய தொண்டனேன் நான்
என்னானாய் என்னானாய் என்னலல்லால்
என்னறிவன் ஏழையேன் உலக மேத்தும்
தென்னானாய் வடவானாய் குடபாலானாய்
குணபால மதயானாய் இமையோர்க் கென்றும்
முன்னானாய் பின்னானாய் வணங்குஞ் சோதி
திருமூழிக் களத்தானாய் முதலானாயே

திருமங்கை யாழ்வார்.

## கிராமச் சீர்திருத்தங்கள்.

திரு. K. C. கிருஷ்ணன்.

இந்தியாவில் 6,85,665 கிராமங்களும் 2316 நகரங்களும் இருக்கின்றன. இந்தியாவின் ஜனத்தொகை சுமார் 32கோடி. இதில் நூற்றுக்குத் 90 பேர் 6,85,665 கிராமங்களிலும், நூற்றுக்குப் 10 பேர் மட்டும் 2,316 நகரங்களிலும் வசித்துவருகின்றனர். கிராமங்களில் வசிப்பவர்களில் நூற்றுக்கு 72.5பேர்கள் விவசாயிகளாகவும், நூற்றுக்கு 5.3 பேர்கள் கன்றுகாலிமேய்த்துப் பிழைப்பவர்களாயுமிருக்கின்றனர். இந்தியாவில் பயிராகும் நிலம் சுமார் 22½ கோடி ஏக்கர். தரிசுகளாய்க்கிடப்பது 15 கோடி ஏக்கர்நிலம். இந்தியாவில் ஏக்கர் ஒன்றின் சராசரிவிளைவு இத்தாலிதேசத்தின் விளைவில் பாதியும், பிராஞ்சு

தேசத்தின் ஐந்திலொருபங்கும் எகிப்துதேசத்தின் மூன்றிலொரு
பங்கும் ஜப்பான்தேசத்தின் விளைவில் கால் பங்குமாகக் காணப்படுகி
றது. டாக்டர் கில்பர்ட் சிலேடர் மதிப்பின்படி இங்கு கிராமங்களில்
ஐந்து குடும்பத்தார்கள் சேர்ந்து விளைவிக்கும் விளைவு சுமார் எட்டு
அல்லது ஒன்பது குடும்பத்தார்களுக்குப் போதிய உணவாகிறது.
ஆனால் ஐரோப்பா, வட அமெரிக்கா முதலிய தேசங்களில் ஐந்து
குடும்பங்களின் விளைவு ஐம்பது குடும்பங்களுக்குப் போதிய உணவா
கிறதென்றால் நம் நாட்டின் விவசாய ஸ்திணதிசையின் முற்போக்கை
எவ்வாறெடுத்துரைப்பது?

கிராமத்தில் வசிப்பவர்கள் வறுமைப் பிணியால் வாட்டப்
பட்டு வருகின்றனர். கிராமத்தார்கள் பட்டணங்களுக்கு வெகுதூரங்
களில் தனிப்பட்டுவசித்துவருவதால் நாகரிக விருத்தியின்றி, சுகா
தாரமுறையின்றி, சகலவியாதிகளுக்கும் ஆளாகிச் சந்தோஷவாழ்க்
கையில்லாமலும், காலையிலிருந்து மாலைவரைநெற்றித்தண்ணீர் நிலத்
தில்விழும்படி பாடுபட்டும் சரியானவிளைவின்றி,சதாகஷ்டப்படுவதை
யார்தான் கவனிக்கிறார்கள்? கிராமத்தார் கல்வி வாசனையின்றி,
காலத்திற்குத் தகுந்தபடி தங்கள் வாழ்க்கை, விவசாயம் முதலிய
கைத்தொழில்களைச் சீர்படுத்திக்கொள்ளாமல் தங்கள் முன்னோர்
நடந்துசென்ற அந்நெறியையேபின்பற்றிச் சென்றுவருவது மிகவும்
வருந்தத்தக்கது. கிராமச்சீர்திருத்தங்களில் பல உள. அவைகளில்
கல்வி அபிவிருத்தி அவசியமானது.

## கல்வி விருத்தி.

கிராமமுன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைகளாயிருப்பவைக
ளில் தலைசிறந்து விளங்குவது கிராமத்தார்களின் கல்வியின்மையே.
கிராமவாசிகள் இந்நிலையிலிருக்கும்வரையில் நகரவாசிகளின் முன்
னேற்றம் ஓர் முன்னேற்றமாகா. வறுமை, விளைவின்மை, சுகாதார
முறையின்மை முதலிய சிறுமைகளைச் சீர்படுத்தக் கல்வியேமிகவும்
இன்றியமையாத சாதனமாயிருக்கிறது. கல்வியைவிருத்திசெய்யாது
சமூக சீர்திருத்தம், பொருளாதாரம், சமயம் முதலியவைகளில்
முன்னேற்றம் பெறமுடியாதென்பது கண்கூடு. மேடைகளிலும்,
வீதிகளிலும் எவ்வளவெடுத்துரைப்பினும் அவைகள்வெகு தூரங்க
ளில் வசிக்கும் கிராமத்தார்களைப்போயடையா. சீர்திருத்தங்களுக்கு
முக்கியமான முறைகளைப் பிரசங்கிப்பதைவிடப் பத்திரிகைவாயிலாக



வெளியிட்டால் மாத்திரம் எல்லாரையும் போயடையும். இதனால்
கிராமத்தார் ஒவ்வொருவரும்-ஆணும் பெண்ணும்-கல்வியில் விருத்தி
யடைந்திருக்க வேண்டியதவசியமாயிருக்கிறது. "குதிரையுடையவர்
கள், குதிரை கால்களைத்தூக்க அதின் வயிறே ஆதாரமாயிருக்கிற
தென்று கூறினாற்போன்று ஜனங்களைச் சீர்தூக்கக் கல்வியே காரண
மாயிருக்கிறது" * கானடாதேசத்து வேளாண்மை மந்திரி "அப்
பெரிய(கிராமச்சீர்திருத்த) வேலைக்குத்தாராளமாய்ப் பெருந்தன்மை
யுடன் கல்வியின் விருத்திக்கு வேண்டிய உதவிசெய்வதாய் முடி
வுக்கு வந்திருக்கிறோம்," என்று கூறியிருக்கிறார்.

கிராமங்களுக்குத் தகுந்த பாடசாலைகள் முறையுடன் நிறுவப்
படவில்லை. கல்வியைக் கிராமங்களுக்குத் தகுந்த விஷயமாய்
விருத்தி செய்வதில் கவனஞ் செலுத்துவ தவசியமாயிருக்கிறது.
"மிகவும் உஷ்ணமான சீதோஷ்ணத்தில் வசித்துவர நீக்ரோ ஜாதி
யாரைத் தகுதியாக்கப் பட்டிருப்பது போலவும், மிகவும் குளிர்ந்த
சீதோஷ்ணத்தில் வசித்துவர எஸ்கிமோ ஜாதியாரைத் தகுதியாக்கப்
பட்டிருப்பது போலவும், கிராமப் பிள்ளைகள் கிராம வாழ்க்கைக்குத்
தகுதியாகக் கற்பிக்கப்பட வேண்டும்." * முற்காலத்தில் ஆரம்பக்
கல்வியைப் பிள்ளைகளின் இடம், காலம், நோக்கம் முதலியவை
களைத் தழுவிச் சரியான முறைகளில் கல்வி போதித்து வந்திருக்
கின்றனர். வெகு காலத்திற்கு முன் விஷ்ணு சர்மா வென்ெறாரு
உபாத்தியாயிருந்தார். அவருக்கு இராஜ குமாரர்களுக்குக் கல்வி
கற்பிக்குந் தொழில். அவரிடம் பயின்ற இராஜகுமாரர்களுக்குப்
புறுக்கள் வளர்த்துப் பரிபாலிப்பதில் மிகுந்த ஆசை ஏற்பட்டிருந்
தது. ஆதலால் விஷ்ணு சர்மா இராஜகுமாரர்களுக்குப் புறுக்களுக்கு
இரை கொடுத்து வளர்ப்பதும், அவைகள் தங்க வீடுகட்டுவதுமே
வேலையென்று உத்தரவிட்டார். இயற்கையாகவே இராஜகுமாரர்
கள் வெகு சந்தோஷமடைந்தனர். புறுக்கள் தொகையில் பெரு
கியவுடன் விஷ்ணு சர்மா புறுக்களின் இறக்கைகளில் A. B. C.
என்று சிவப்புக்குறி இட்டார். இராஜ குமாரர்கள் புறுக்களைக்
குறிப்பிடும்போதும் எண்ணும்போதும் இவ்வெழுத்துக்களை உப
யோகிக்க நேரிட்டு ஆங்கில எழுத்துக்களையும் கூட்டுதல் முதலிய
ஆரம்பக் கணிதங்களையும் விளையாட்டாகவே கற்கத் தொடங்கினர்.
வீடுகட்டும் சாஸ்திரத்தைப் புறுக்களுக்குச் சிறிய அறை கட்டுவதின்

* I bid * I bid

மூலமாய்க் கற்றுக்கொள்ளத் தொடங்கினர். இவ்வாறு சமயசந்தர்ப்பங்களை யனுசரித்துக் கிராமவாசிகளுக்குக் கைத்தொழிலோடு கூடிய கல்வி போதிக்க வேண்டும்.

பாடசாலைகளமைத்து இளமையானவர்களுக்குக் கல்வி கற்பித்தால் இப்பிள்ளைகள் ஆளாகித் தங்கள் காலங்களில் சீர்திருத்தங்கள் செய்து கொள்வார்கள். ஆனால் தற்போது கல்வி வாசனையற்ற பெரியோர்களுக்கு எவ்வாறு சீர்திருத்த முறைகளைப் போதிப்பது? இவர்களுக்கு அவர்கள் கண், செவி இவைகள் மூலமாகப் போதிக்க வேண்டியதாயிருக்கிறது. வேளாண்மை காட்சி சாலைகள் ஆங்காங்கு அடிக்கடி ஏற்பட்டுக் கல்வியற்ற கிராமவாசிகளுக்கு நன்றாய்க் கற்றுணர்ந்தவர்களைக் கொண்டு வேளாண்மை செய்யவும் சரியான முறைகளைக் கையால் செய்து காட்டி, அம்முறைகளைக் கையாண்டு வரும்படி செய்யவும் முயலவேண்டும். உப்பு வாயு, மர உப்பு, அம்மோனியா முதலிய உர சம்பந்தமான வஸ்துக்களைப்பற்றி எவ்வளவு தூரம் எழுதினாலும் எடுத்துச் சொன்னாலும் அவைகளால் அவர்களுக்குப் பிரயோஜனமில்லை. சிறு சிறு வயல்களில் மேல் குறித்த செயற்கை உப்பு உரங்களைக் கணக்குடன் கலந்து நிலத்தில் சேர்த்து வேளாண்மை செய்து காட்டவேண்டும். மேலும் நல்ல விதைகளைச் சேகரித்து அம்மாதிரியான விதைகளைக்கொண்டு விவசாயஞ் செய்யும்படி போதிக்க வேண்டும். நன்றாய் வளர்த்த ஆடு மாடுகளையும் ஆயுதங்களையும் காய் கிழங்குகளையுங் காட்டி அவைகளை அம்மாதிரி வளர்க்கும் முறைகளையும் நன்றாய்த் தெரிவிக்க வேண்டும். இதேவிதமான கல்வியை அசோகன் காலத்தில் (கிறிஸ்துவுக்கு முன் மூன்றாம் நூற்றாண்டில்) கற்பித்துச் சீர்திருத்தங்கள் செய்து வந்திருப்பதாகத் தெரிகிறது. படக் காட்சி முதலியவைகளைக் கொண்டு கிராமவாசிகளுக்கு விவசாயம், சுகாதாரம் முதலியவைகளைப் போதிக்க வேண்டும். சாஸ்திர சம்மந்தமான உழவு, பயிர் வளர்த்தல், கதிர் அறுத்தல், பால் கறத்தல் முதலிய வேலைகளை இயந்திரங்களைக்கொண்டு காண்பிக்க வேண்டும். புகைவண்டிகளில் காட்சிசாலைகளமைத்து ஆங்காங்கு விவசாய விருத்திகளை எடுத்துக்காட்ட வேண்டும். சாஸ்திர வளர்ச்சிக்கு வெகுதூரம் விருத்தியடைந்தும் நம் நாட்டில் வேளாண்மையில் சாஸ்திரீகமுறைகளைக் கையாடாதது மிகவும் விசனிக்கத்தக்கதே. கைத்தொழில் விருத்திக்கு உபயோகமற்ற சாஸ்திர வளர்ச்சியால் பிரயோஜன மென்ன? அமெரிக்கா தேசத்தின் வறுமையைப் போக்கியதின் காரணம் சகல கைத்தொழில்களிலும் சாஸ்திரீக முறைகளை அவர்கள் கையாண்டதாலே யல்லவா? (தொடரும்)

# வாழ்க்கைத் துணைவி.

திரு. தி. அ. முத்துசாமிக்கோனார்.

ஒப்பாக மணம்புரிந்த வாழ்க்கைத் துணைவியானவள் கணவனின் பாதிப்பங்காவள். நண்பர்களில் உயர்ந்தவள். களிப்புக்கும் செல்வத்துக்கும் நீதிக்கும் ஆதாரமாவள். இப்பவக்கடல் க்ஷேமமாகவும் கண்ணியமாகவும் கடப்பதற்கு அவள் துணையாவள். மனைவி கணவனுடைய செல்வம், உலக யாத்திரை செய்யும்போது கூடவருந் துணைவி, வியாதியும் ஆபத்தும் வந்தகாலத்துக் கணவனுக்கு மருந்தாவள். நீதியாய்க் காலங்கழிக்க விரும்பும் ஒருவனுக்கு அவளைப்போன்ற துணை கிடைக்கவே மாட்டாது.

மனுகூறுவது:—"இது எல்லா வருணங்களுக்கும் உத்தம தருமமென்றறிந்து புருடர்கள் எவ்வளவு சக்தியற்றவர்களாயினும் பெண்களை ரட்சிக்க முயலவேண்டும். தமது வமிசத்தையும், சந்ததியையும், ஆசாரத்தையும், தொழிலையும், தம்மையும், இப்பெண்டீர்களை ரட்சிப்பவனே ரட்சிக்கிறான். எவ்வளவு குணமுள்ள புருஷனை ஒரு ஸ்திரீ அடைவாளோ அவ்வித பிள்ளைகளையே பெற்றிடுவாளாதலின் சந்தான சித்திக்காகப் பெண்களை ரட்சிக்கவேண்டும். ஒருவனும் பெண்களைக் கட்டாயப்படுத்தி ரட்சிக்க முடியாதாயின், வீட்டுக்கு வேண்டிய ஆதாயஞ் செலவுகளிலும் வீட்டைச் சுத்திசெய்வதிலும், ஆசார பரிபாலனத்திலும், அன்னம் செய்வதிலும், பந்தியிலும் வீட்டுக்கு வேண்டிய பொருள்களைக் காப்பாற்றுவதிலும், அவர்களுக்கு நியமனம் செய்யவேண்டும். பெண்களுக்கு இதம்செய்ய விரும்பும் புருஷர்கள், அவர்களை இல்லத்திற்றானே தடைபடுத்துவதிற் பிரயோசனமேதுமில்லை. அவர்கள் தம்மைத்தான் ரட்சித்துக் கொள்வதே மிகவும் மேலாம். எவ்வித குணமுள்ள புருஷருடன் விதியுடனோர் பெண் சேருவாளோ, கடலிற் கலந்த நதிபோல் அவளுமக்குணங்களையே பெறுவாள். நல்ல சந்தானத்துக்கென சிருஷ்டிக்கப் பெற்றவர்கள், பாக்கியவதிகள், பூஜைக்கு யோக்கியர்கள். வீட்டுக்கு விளக்குப் போன்றவர்கள். இவர்களே வீட்டுக்கு இலட்சுமி யெனலாம். ஏதுங் குறைவில்லை. சந்தானத்தைத் தரித்தற்காகப் பெண்களையும், உண்டாக்கப் புருடர்களையும் ஈசன் சிருஷ்டித்தமையால், சாஸ்திரங்கள் இருவருக்

கும் சமானமான தருமத்தைக்கோரி நின்றன. சந்ததிகளைப் பெறுதல், பெற்றதைக்காத்தல், நாடோறும் ஆகார விவகாராதிகளைச் செய்தல், இவைகளெல்லாம் பிரத்யட்சமாய் ஸ்திரீகளால் நடத்தத் தக்கனவே. குழந்தைகளைக்காத்தல், தர்மகாரியங்களை நடத்தல், கணவன் சரீரத்துக்கு சிஸ்ருஷை செய்தல், நித்திய சந்தோஷம் இவை எப்பெண்ணிடம் நிலைக்குமோ, அந்தத் தாரத்தால் தனக்கும், தன் பிதுர்களுக்கும் சொர்க்கமுண்டு. நல்ல தருமங்களையனுஷ்டிக்கும் தம்பதிகள் என்றும் ஒன்றித் திரிந்து இருவரும் கற்பு நிலை குன்றாதிருக்க முயற்சிக்கவேண்டும்'' என்றனர்.

தக்கர் "பெண்களவசியமாயிருந்தால், அறம் பொருளின்பமென மூன்று புருஷார்த்தங்களும் கைகூடும். இல்லறத்துக்குமேல் நல்லறம்'' வேறில்லை. மனைவி அனுகூலமாயிருத்தலே சொர்க்கமாம்; பிரதிகூலமாயின் அஃதே நரகமாமெனத்தடையில்லை, இருவரும் அன்புடன் வாழும் நல்வாழ்வு சொர்க்கத்திலும் கிடையாது. ஒரிரவேனும் அன்பிலாதுவாழும்துயரம், நரகத்திலுமில்லை. இல்லறத்தாற் சுகத்தைப் பெறுபவன் எச்சுகத்தைப்பெறினும், அது பத்தினி மூலமாய்த்தானிருக்கும். சாஸ்த்திரவிதியறிந்தவளும், சித்தமறிந்து வசமாய் நடப்பவளுமே பத்தினியாம். பெருத்ததோர் துயரம், கலகம், வெறுப்பு, மனத்திற்கோய்வு, இவையெல்லாம் களத்திரம் பிரதிகூலமானல் இருவர்க்கும் விளையும். இரண்டு பெண்களை மணந்தவர்களுக்கு இவை சமமாம். அனுகூலையும், என்றும் மகிழ்ச்சியுள்ளவளும், சாமர்த்தியமுள்ளவளும், பதிவிரதையும், சந்தானமுள்ளவளுமாயுமுள்ள, பெண் மகாலக்ஷட்சுமி என்பதற்குத்தடையில்லை. என்றும் மனச்சந்தோஷமுள்ளவளும், தன் நிலைமையில் அளவறிந்தவளும், கணவனுக்குப் பிரீதியாய் நடப்பவளுமே கிழத்தியாம். மற்றவள் கிழத்தனமேயாம். கணவன், உடன்பிறந்தவன், பிதா, ஞாதி, மாமனர், மாமியார், மைத்துனர், பந்துக்கள் இவர்களெல்லோராலும் வஸ்திரம் ஆபரணம் ஆகாராதிகளால் பெண்கள் பூசிக்கப்படத் தக்கவர்களாம். வீட்டுக்குவேண்டிய விஷயங்களைச் சேர்த்துச் செலவழிப்பதில் பிடித்தமுள்ளவளாயிருக்கவேண்டும்.

மனு: "என்றும் மகிழ்ந்தவளாய், வேண்டியபொருள்களைச் சேர்த்தவளாய், செலவழிப்பதில் பிடித்தமுள்ளவளாய் இருக்க வேண்டும். வீட்டின் செலவுக்காக எந்தத்திரவியத்தைப் பத்தினியின் ஹஸ்தத்திற் பர்த்தா கொடுப்பானே, அதில் அவன் ஆணைப்படிவேலை முடித்து மிகுதியைத் தன்புத்தியாற் சிறிதுசேர்க்கவேண்டும். புருஷன் தூங்கியபின் தூங்கியும், அவன் விழிப்பதற்குமுன் விழித்தும், வேறெவனையும் மனதிலும் நினைக்காதவளே பதிவிரதையாம். தர்மகாரியத்தி லனுகூலியமும், அர்த்தகாரியத்திற் கைப்பிடித்தமும், காமகாரியங்களில் சுதந்திரமும், சரீத்திற் சுத்தியும், கணவனுக்குச்சம்மதமான மங்களாசரணங்களும், நல்ல வார்த்தைகளும், மங்களகாரியங்களைச்செய்து கொண்டும், வீட்டைச் சுத்திசெய்தும், வீட்டுக்கு வேண்டிய பொருள்களைச் சம்பாதித்தும் அதைச் செலவழிக்கும் வழி அறிந்தவளாயும், வெளியில் சஞ்சரித்துவரும் கணவனை எழுந்தெதிர்கொண்டு உபசரிப்பவளாயு மிருப்பவளே உத்தமியாம். நல்லபாண்டங்களில் நல்ல ஆகாரத்தைக் காலத்திற் சேர்த்து உசிதமான காலத்திலுபயோகித்துத் தானியங்களையும் கிரகத்தில் சேர்த்துவைத்து வீட்டைப் பரிசுத்தஞ் செய்திருக்கவேண்டியது ஸ்திரீகளின் தருமம்'' என்ருர்.

வியாசர். "மஞ்சள், குங்குமம், சிந்தூரம், மை, சவிகை தாம்பூலம், மங்களாபரணம், தலைபின்னல் முதலியனவும் கையிலும் காதிலும் பூஷணமும், இவைகளைப் பர்த்தாவின் தீர்க்காயுளை இச்சிக்கும், பதிவிரதை தள்ளக்கூடாது'' என்பதாதி அனேகவசனங்கள் ஸ்மிரிதிகளில் உள்ளன. சுருதிகளிலும் பத்தினியில்லாதார்க்கு யக்ஞமில்லை. பத்தினிதொட்டால் யக்ஞம் பரிபூர்த்தியாகும்; பத்தினி யக்ஞத்திற்குச் செய்வதே சிறக்கும்;பத்தினியே வீட்டினுபகாரணங்களுக்குச் சுதந்திரமுள்ளவள்; பத்தினியென்பது சரீரத்தின் பகுதியாகும். உத்தமஸ்தானத்தை யடைந்து தன் பாபஉடைமைத் தொலைப்பவள் என்பதாதி பல வசனங்களுள்ளன. இங்ஙனம் அநேக வாக்கியங்கள் ஸ்திரீகளின் சிரிஷ்டியையும் சுபாவத்தையும் அனுசரித்து அவர்களின் ரட்சகத்தனத்தை விதிக்கின்றனர்.

இதனல் மனைவிக்கு இவ்வளவு சுதந்திரமிருக்கிறது. புருஷனுக்கு இவ்வளவு ஆண்மை இருக்கிறது என்பதை மனைவியும் மணவாளனும் அறிந்து நடப்பது உத்தமம்.

உ

மன்னார்குடி

# 4-ம் ஆண்டு யாதவகுல மகா சங்கத்தில்

வரவேற்புக்கழகத்தலைவர்

## K. ஜெகநாத பிள்ளை அவர்கள்

நிகழ்த்திய

# வரவேற்பு உரை.

நல்லாண்மை மிகு தலைவரவர்களே!

கல்லாமை களையுங் கனவான்களே!

உங்கள் வரவு நல்வரவாகுக! இறைவணக்கத்தோடு வரவேற்புக்கழகச்சார்பாகவும் என் சார்பாகவும் என் மனமார்ந்த வந்தனத்தை உங்களுக்குச் செலுத்துகின்றேன்.

நீர்வளம், நிலவளமிக்க சோழவளநாட்டின்கண் சிறப்பு மிகுந்த செண்பகாரண்யமென்னும் இவ்விஷ்ணுவம்பதியிலே ஸ்ரீ இராஜகோபாலசுவாமியின் பிர்மோற்சவ வெண்ணெய்த்தாழி விழாவாகிய ஓர் முக்கியதினத்திலே இங்கு நாம் கூடியிருக்கின்றோம். இம்மகாநாட்டிற்குச் சென்னை, மதுரை, திருச்சி, இராமநாதபுரம் முதலிய ஜில்லாக்களிலிருந்து தத்தம் மேலான அலுவல்களினின்றும், குலாபிமான மேலீட்டால் நம் முன் விஜயஞ்செய்திருக்கும் கனவான்களது பெருமை போற்றற்குரித்தாகும்.

இம் மகாநாட்டிற்குத் தலைவரான உயர் திருவாளர் T. S. வேணுநாதக்கோன் F. C. I., M. R. A. S. அவர்களை நாம் அளவற்ற குதூகலத்தோடும் மிகுந்த உற்சாகத்தோடும் வரவேற்கின்றோம். ஒப்புயர்வற்ற இம்மாபெருந்தலைவர் நமது குல மாகாண வாலிபசங்கத்தின் தலைமை ஏற்றுத் தங்கடமையைச் செவ்வனே ஆற்றிவருவது கண்கூடு. இப்பெரியாரது அருமை பெருமைகளை நமது குல சீர்திருத்த நோக்கத்துடன் மாதாமாதம் வெளிவரும் யாதவமித்திரன் நாமறியச் செய்து வருகின்றான். இவண்



வதியும் நமது குலப் பெருமக்கள் நமது தலைவரவர்களைக் கண்டளவளாவக் கொண்ட எண்ணத்தை யீடேற்றிவைத்த பெருமை நமது தலைவரைச் சார்கின்றது. அன்பு, உண்மை, ஈகை, விசுவாசம், சமரசம் முதலிய மனித இலக்கணத்தோடும், உயர்தர தமிழ் ஆங்கிலக் கல்வியோடும் விளங்கிவருவது நமது குலத்திற்குத் தகுந்த பெருமையை அளித்துவருவதாகும். மேலும் நமது அண்ணல் அவர்கள் தென்னிந்தியா நலவுரிமைச் சங்கம்போன்ற பல பொது ஸ்தாபனங்களிலும் அங்கம் பெற்று நமது சமூகத்திற்கு உயர்வளித்து வருகின்றார்கள். குலநலம் பேணுமிக்கொற்றவர் இம்மகா நாட்டைச் சிறப்பாக நடத்தவும், மாறாப் புகழ்பெற்ற இந்நிலவுலகில் நெடுநாள் வாழவும் கண்ணபிரான் இன்னருள் புரிவானாக!

### மகாநாடு.

மகாநாடு என்றால் மக்கள் கூட்டம் என்று பொருள்படும். பகுத்தறிவுடைய மக்கள் ஒன்று சேர்ந்து வாழ்விற்குரிய நலன்களைக் காலதேச நிலைமைக்கேற்ப ஏகமனதாகத் தேர்ந்து கைக்கொள்ளவே மகாநாடு கூடுவதாகும். நாம் பெயரளவில் மகாநாட்டைக்கூட்டி வாயளவில் தீர்மானங்களைக்காட்டி ஏட்டளவில் அவைகளைத் தீட்டிவீட்டுப் பெட்டியில் பூட்டிவைப்போமானால் நம் மக்களை வஞ்சித்த பாதகத்துக்காளாவோமென்பது நாமறிய வேண்டுவதாகும். இம்மகாநாடு வேண்டும் நலமெய்தி வெற்றி பெறுவதில் நாம் முனைவோமாக!

### சமூக முன்னேற்றம்.

நமது சமூக முன்னேற்றத்திற்குக் கலைவிளக்கம், சங்கப்பழக்கம், பொருளாதாரம், பொது நலம் முதலியன இன்றியமையாதனவாகும். கலை விளக்கத்தைப்பற்றி இதற்குமுன் நமது சமூக சம்பந்தமான கிராமாந்தர, தாலூகா, ஜில்லா மாகாணச் சங்கங்களிலும், மகாநாடுகளிலும் தீர்மானங்களை இயற்றியுள்ளோம். அவைகள் நாம் முன்சொன்னபடி ஏட்டளவிலேயே இருக்கின்றன. இனி நாம் கலைவிளக்கம் பெற நேர்முகமான முறைகளைக் கையாளவேண்டும். இதற்குப் பின்வரும் பாரதியார் கீதம் பெரிதும் வலியுறுத்தும்.

*வீடுதோறும் கலையின் விளக்கம் வீதிதோறும் இரண்டொரு பள்ளி*
*நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள் நகரங்க ளெங்கும் பல பல பள்ளி*
*தேடு கல்வி யிலாததோ ரூரைத் தீயினுக் கிரை யாக மடுத்தல்*
*கேடு தீர்க்கு மமுதமென் அன்னை கேண்மை கொள்ள வழியிவை கண்டீர்!*

## சங்கப் பழக்கம்.

மக்கள் சமூகத்தில் தனித்தனியாய்ப் பிரிந்து நின்று ஒரு காரியத்தைச் சாதிப்பதைவிடப் பலர் ஒன்று சேர்ந்து செய்யுங் காரியம் சிறந்த வலிமையையும் மிக்க பலனையுமளிக்கும். இங்ஙனம் பலர் ஒன்றுகூடுமிடத்திற்கே சங்கம் என்று பெயர். சங்கம் மக்களுக்குக் கல்வியறிவொழுக்கத்தையும், உறுதிப்பாட்டையும், அஞ்சாமையையும் நல்கும். சங்கப் பழக்கமில்லாவொருவனை மக்கள் கூட்டத்தில் வைத்து எண்ணப்படாது. மாக்கள் விலங்குக் கூட்டத்தில் சேர்க்கப் படுவன். "ஒன்றுபட்டாலுண்டுவாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கிடி லனைவர்க்குந் தாழ்வு" என்னும் அருமையான பாரதியார் வாக்கு இங்கு ஒவ்வொரு யாதவரும் மனதில் பதிப்பித்துக்கொள்ள வேண்டியதாகும்.

## பொருளாதாரம்.

பொருளாதாரமின்றி ஒரு சமூகமும் முன்னேற இயலாது. மேய்ச்சற்றொழிலும், விவசாயத்தொழிலும் நாம் எதிர்பார்க்குமளவு பொருளாதார நிலைமையை உண்டுபண்ணா. பொருளாதார அபிவிருத்திக்குரிய வழிகளை நன்கு ஆராய்ந்து அவைகளைக் கையாளும் முறைகளையும் நாம் நன்கு வகுக்கவேண்டும். கைத்தொழிலிலும், வாணிபத்திலும் நாம் பெரிதும் ஈடுபடவேண்டும். நமது குல மாணவர்கள் உயர்தர ஆங்கிலக் கல்வி கற்று, அவ்வாற்றால் மேல் நாடுகள் போந்து கைத்தொழில், வாணிபம் முதலியவைகளில் பயிற்சி பெற்று நமது குலத்தையும் நாட்டு நலத்தையும் காக்க முன் வருவார்களாக! சிக்கனம் நமது நிலையை உயர்த்துவதாகும். சிக்கனமில்லா நமது பெருங்குடும்பங்கள் இன்று சிதைந்து கிடக்கின்றன. மூடப்பழக்க வழக்கங்களும், வீண் ஆடம்பரச்செலவுகளும் நம்மைச் சிக்கனத்தினின்றும் பிரித்து நம்மை வறுமைக்குள்ளாக்குகின்றன. இவைகளையொழித்து பொருள்நிலையை உயர்த்த முன்வருவோமாக.



## பொதுநலம்.

நலத்தில் சுயநலம், பொதுநலம் என இருவகைப்படும். சுயநலம் கேவலம் சுயப்பிரயோசனத்தைக் கருதியது. பொதுநலம் பிரதிப்பிரயோசனத்தைக் கருதாதது. அருள்நிலையையளிக்க வல்லது. கடவுள் நம்மைப் பொதுநலத்தின் சார்பாகவே படைத்திருக்கின்றார். கடவுளது படைப்புக்கு விரோதமாக நாம் சுயநலத்தில் வேட்கைகொண்டலைவது பெருங்குற்றமாகுமன்றோ! "எல்லோரு மின்புற் றிருக்க நினைப்பதுவே யல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே" என்னுந் தாயுமானார் வாக்கும் "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்னும் அப்பர் திருவாக்கும் இங்கு குறிப்பிடத்தக்கன. "பொதுநலம் புரிவதே என்கடன்" என உலகுக்குணர்த்திய காந்தியடிகள் இன்று உலகம் போற்றும் உத்தமராய் விளங்குவது நிதரிசனமன்றோ!

பொதுநலங்களைக் கவனித்துழைக்க வல்ல நம்குல வாலிபர்களுக்கு ஒரு சிலவார்த்தைகள்கூறி நீங்கள் வெகு ஆவலோடும் பரபரப்போடும் எதிர்பார்க்கும் உயர்நலமுடைய தலைவர் பிரசங்கத்தைக் கேட்டானந்திப்பதற்காக எனது வெற்றுரைகளை முடித்துக்கொள்கின்றேன். நமது சமூக வாழ்வு; அஞ்சா நெஞ்சமுந் தளரா ஊக்கமுடைய வாலிபவீரர்கள் கையிற்றானிருக்கின்றன. நமது முன்னேற்றத்திற்கு நம்குல வாலிபர்கள் மார்புதட்டி உழைக்க முன் வரவேண்டும். அர்த்தமற்ற மூடப் பழக்க வழக்கங்களை அறவே யொழிக்க நமது வாலிபர்களது உழைப்பு மிகமிகத் வேவை.

வாலிபர்காள்!

வயோதிகர்களாகிய நாங்கள் எங்களது வைதிகக்கொள்கைகளை உங்களுள் புகுத்தி உங்களது சீர்திருத்த வேகத்தைத்தணிக்க ஒருப்படாது, காலவகையையொட்டி எங்களது பிற்போக்கான செயல்களினின்று விடுபடுமுகத்தான், நமது வாலிபர்களது துயர் நீங்க எழுந்த பெருந்தகை **T. S.** வேணுநாதக்கோன் அவர்களைத் தலைவராகத் தேர்ந்துள்ளோம்.

இனி நமது வாலிபரேற்றின் தலைமையின்கீழ் நீங்கள் நடத்தப்பெறுவீர்களாக! உங்களது உணர்ச்சிக்கும், கிளர்ச்சிக்கும் நாங்கள் உறுதுணை செய்வதாக இங்கு உறுதி கூறுகின்றோம். விழிமின்! விழிமின்!

இம்மகாநாட்டிற்கு நமது வேண்டுகோட்கிணங்கி நம்மை முன்னேற்றுதற்குரிய அரியவிஷயங்களைத் தன்னகத்தேகொண்டு இன்று நம் முன்னிலங்கும் முக்கடலது சங்கமத்தில் நாம் கலக்கப்போகின்றோம். கல்விக்கடலான மதுரை கார்மேகமும் செல்வக்கடலான மதுரை கோபாலகிருஷ்ணனும், குணக்கடலான தஞ்சை வேங்கடாசலமும் இங்கு சங்கமமன்றோ. இம்முக்கடலது சங்கமத்தால் நாம் ஆனந்தக்கடலில் ஆழ்ந்தவர்களாவோம். என்னே! நம் மகாநாட்டின் பெருமை! நமக்கு வாய்ந்த இச்சந்தர்ப்பம் அருமையிலும் அருமையே! இவ்வரிய சந்தர்ப்பத்தை நமக்களித்த கண்ணனுக்கு மீண்டும் நமது வணக்கம் உரியதாகுக

சபையோர்களே!

உங்கள் அனைவரையும் ஒருங்கே வரவேற்கும் பாக்கியம் எனக்கும் என் வரவேற்புக்கழகத்தாருக்கும் கிடைத்தது மட்டிலடங்கா மகிழ்வை உண்டுபண்ணி யிருக்கின்ற தென்றாலும் உங்களை உபசரிக்கும் முறையில் நாங்கள் தவறினுந்தவறலாம். உபசரிப்பில் நாங்கள் அறிந்தோ அறியாமலோ இழைக்கும் தவறுகளை உங்களது இயற்கையான பெருந்தன்மையில் மன்னிக்குமாறு பெரிதும் வேண்டிக்கொள்கின்றோம்.

இம்மகாநாடு எதிர்பார்க்குமளவு வெற்றியோடு இனிது நிறைவேற எல்லாம் வல்ல இறைவன் தன்னருள் பாலிப்பானாக. சுபம்! சுபம்!! சுபம்!!!

இங்ஙன்,
தங்கள் அன்புள்ள,
**K. ஜெகநாத பிள்ளை,**
வரவேற்புக்கழகத்தலைவர்.

மன்னார்குடி
24—3—31

---

1931-ஞு மார்ச்சு 24-வ தேதியில்
மன்னார்குடியில் கூடிய
4-வது ஆண்டு யாதவ மகாசங்கத்தில் திருவாளர்
**T. S. வேணுநாதக்கோன், F. C. I., M. R. A. S.**
அவர்கள் அவைத்தலைமை வகித்துச் செய்த

# விரிவுரை.

வரவேற்புக் கழகத் தலைவரவர்களே, கனவான்களே,

நீங்கள் என்னை இம் மகாநாட்டுக்குத் தலைவராக ஏற்படுத்தியதற்காகவும், எனக்குக் கூறிய வரவேற்புக்காகவும் நான் என் மனமார்ந்த வந்தனத்தை உங்களுக்கு மனமுவந்து அளிக்கின்றேன். எல்லாம் வல்ல திருக்கண்ணபிரானார் திருவருளினாலும், உங்கள் நல்லுதவியினாலும், திருந்திய ஒற்றுமையினாலும் இம்மகா நாட்டின் நடவடிக்கைகள் செவ்வனே நடைபெறுமெனக் கருதுகின்றேன்.

இதற்கு முன் மன்னார்குடியில் மூன்று மகாசங்கங்கள் நடந்தனவென்பதை நான் அறிகிறேன். ஆனால், இது வரையில் இவ்விடம் நடைபெற்ற மகாநாடுகளைப்பற்றிய செய்தி, சென்னை வாசிகளுக்குத் தெரியாது. அதற்குக் காரணம் பல. அவற்றுள் குறிப்பிடத் தகுந்தவை இரண்டு: சென்ற மூன்று மகாநாடுகளைப் பற்றியும் தகுந்த முறையில் விளம்பரம் செய்யாதது ஒன்று; வெளியூர்களிலிருந்து மகாநாட்டுக்குத் தெரிந்தெடுக்காதது மற்றொன்று.

சென்னையம்பதியில் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் ‘ஸ்ரீ யதுகுல மகாசங்கம்,’ என்னும் பெயரால் ஒரு சங்கம் நிறுவப்பட்டது. அச்செய்தி உங்களுக்குத் தெரியாதெனக் கருதுகின்றேன். அதற்கும் விளம்பரம் இன்மையே காரணம் என ஒருவாறு கூறலாம். ஆனால், சென்ற ஆறு ஆண்டுகளில் சென்னையை அடுத்த கிண்டியிலும், ஸ்ரீரங்கத்திலும், மதுரையிலும், திருநெல்வேலியிலும், இராமநாதபுரத்திலும் ஐந்து மகாநாடுகள் நடைபெற்றன. அதனால், அந்தந்த ஜில்லாக்களில் உள்ளவர்களுக்கு மட்டுமே அச்சங்கத்தைப் பற்றிய செய்தி தெரிய வந்தது.

இத்தகைய மகாநாடுகள் கூடுவதால், எண்ணிறந்த நன்மைகள் உண்டாகும்: பல்லாயிரம் யாதவர்கள் இம் மகாநாடுகளுக்கு வரு

கின்றார்கள்; பல தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றன. அவற்றை உடனே நடைமுதலுக்குக் கொண்டுவர நம்மால் இயலாவிட்டாலும், அவை நமது இக்கால நிலையை வெளியாக்குவதுமன்றி, மற்றச் சமூகங்களோடு நமது சமூகத்தை ஒப்பிட்டுப் பார்க்கவும், நம்மிடம் உள்ள குறைகளை அறிந்து அவற்றை நீக்கிக் கொள்ளவும், நமக்கு அவை ஒருவிதப் பரபரப்பை உண்டு பண்ணுகின்றன; நமக்குள் நட்பையும் உடன் பிறப்புணர்ச்சியையும் ஏற்படுத்துகின்றன. இத்தகைய மகாநாடுகள் நடை பெறுவதால்தான் என்னைப்போன்ற வெளியூர் மக்கள் கலந்துரையாடவும் ஒருவரை யொருவர் அறிமுகப்படுத்திக் கொள்ளவும் இயலுகின்றது.

நமது சமூகம் மிகப்பழைமையானது என்று கற்று ஆராய்ந்த பெருமக்கள் கருதுகின்றார்கள். மற்ற சமூகத்தவரைப் போல நமது சமூகத்தவர் நமது சமூகத்தைப்பற்றி மற்றச் சமூகத்தார்கள் மிகத் தெளிவாகவும், பெருமையாகவும் எழுதியிருக்கின்றார்கள். நம்மவர் அரசராகவும், அமைச்சராகவும், போர்வீரராகவும் இருந்ததாக நாம் சரித்திரவாயிலாக அறிகின்றோம்.

நமது குலத்தவரை இதுவரையில் தமிழ் நாட்டார் இடையர், போதுவர், தோறுவர், யாதவர், எனவும்; ஆந்திரர் கோல்லா' எனவும்; கன்னடையர் 'கௌடா; எனவும்; பின்னும் பலர் பலவாறாகவும் வழங்கி வந்தனர். இடையர் என்னும் சொல், பசுக்களைக்காப்பவர், குறிஞ்சி மருதம் என்னும் நிலப்பகுப்பிற்கு இடைப்பட்டதாகிய முல்லை நிலத்தில் வசிப்பவர் என்னும் சிறந்த பொருளை முற்காலத்தில் வழங்கி வந்ததை கற்றோர் பலரும் அறிந்ததே. இடை, தொறு, யாதம் அல்லது யாதவம் என்னுமிச் சொற்கள் தமிழ் மொழியில் பசு என்னும் பொருளைத் தருகின்றன, ஆதலின், பசுக்களைக் காப்பதனாலேயே நம் சமூகத்தவர்களுக்கு இப்பெயர் சிறப்புற அமைந்து வழங்கியது என்பது வெளிப்படை. நம் சமூகத்தவர் அறம்புரி கொள்கை வாய்ந்தவர் என்பதை, 'அறவை நெஞ்சத்து ஆயர்,' என்றும், 'அறவை ஆயர்.' என்றும் தமிழ்ப்பெரும் புலவர்கள் கூறிய நல்லுரைகள் வெளிப்படுத்துகின்றன. தமிழ்மொழியிலுள்ள ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றாகிய சிலப்பதிகாரத்தில், அதன் ஆசிரியராகிய இளங்கோவடிகள் என்பவர், நம் சமூகத்தவர் வாழ்ந்த குற்றமற்ற வாழ்க்கையை விளக்குமிடத்தில்,



'ஆகாத் தோம்பி ஆப்பயன் அளிக்கும்
கோவலர் வாழ்க்கையோர் கொடும்பாடு இல்லை'

என்று கூறி இருக்கின்றனர், நம் சமூகப் பெருமையை உள்ளங்கை நெல்லிக்கனி போல் எடுத்துக் காட்டும் நல்லுரைகள் கணக்கிலவாகத் தமிழ் நூற்களிலும் வழக்காற்றிலும் காணப்படுகின்றன. ஆயினும், ஒருகாலத்து ஏற்றம் உற்று விளங்கிய இடையர் என்னும் சொல், இப்பொழுது இழிவினை உணர்த்தும் சொல்லாகப் பலரால் கருதப்படுவதற்குக் காரணம் என்ன? நாமே அதற்குக் காரணம் என்று நான் சொல்வேன். நம் சீரிய ஒழுக்கங்களெல்லாம் இந்நாளில் சிதைவுற்றுக் கிடப்பதை நாமே உணர்கிறோம் அல்லவா? ஆதலின், இடையர் என்னும் சொல் இழிபொருளுக்கு இடமாயிற்று. எனினும், ஸ்ரீயதுகுல மகாசங்கத்தின் பேராற்றலினாலும், பல யாதவ மகா நாடுகளில் நிறைவேறிவருந் தீர்மானங்களினாலும் சென்ற டிசம்பர் மாதம் 13-ம் தேதி நம் அரசாங்கத்தார் - இடையர், கொல்லா, கோபா, கௌடா என்னும் பெயர்களுக்குப் பதிலாக - யாதவர் என்னும் ஒரே பெயரால் நமது சமூகத்தவரை அரசாங்க தஸ்தாவேஜுகளில் குறிக்கவேண்டுமெனத் தீர்மானித்தனர். இனி நம் சமூகத்தவர் இடையர் எனும் பெயரை யொழித்து, யாதவர் என்னும் பெயரால் தம்மை வழங்கி வரவும், இடையர் எனத் தம்மை இழிவுப்பொருள் தொனிக்க அழைப்பவரைக் கண்டித்து அவர்கட்கு அறிவுறுத்தவும் அதிகாரம் ஏற்பட்டுள்ளது என்பதை நான் தெரிவிக்கிறேன். இஃது ஒன்றே நாம் செய்துவரும் கிளர்ச்சியின் பயனைத் தெரிவிக்கின்றது. யாதவர் என்பதை வட நாட்டில் தோன்றிய யதுவமிச பரம்பரையும் தெரிவிக்கின்றது. இதனால், நமக்குச் சிறப்பு ஏற்பட்டபோதிலும், இதை நாம் காப்பாற்றிக் கொள்ளப் பெரிதும் முயலவேண்டும். அங்ஙன மன்றி, நாம் இப்பொழுது உள்ளபடி ஒழுக்கம் இன்றிக் குருட்டு நம்பிக்கையுடன் இருந்தால் நமக்குப் பெரிதும் இகழ்ச்சியே யுண்டாகுமென நான் எச்சரிக்கை செய்கிறேன்;

"நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும், தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும், நிலையினும்
மேன்மேல் உயர்த்து நிறுப்பானும், தன்னைத்
தலையாகச் செய்வானும் தான்."

என்னும் நாலடியார் என்னும் தமிழ் அறிவு நூலில் காணப்படும் செய்யுள் நாம் எல்லோரும் இங்குப் பெரிதும் சிந்திக்கத் தக்கதாம்.

கனவான்களே! நம்மை நாம் உயர்த்திக்கொள்ள நாம் செய்ய வேண்டிய செயல்களில் முதன்மையானது, நம் சமூகத்தினர்க்கு இடையில் காட்டுத்தீயைப்போல விரைந்து பரவும்படி கல்வியைப் பரவச் செய்வதேயாகும். காட்டுத் தீப் பரவினால் காட்டையழிக்கும்; கல்வி பரவினால் நம் சமூகத்திலுள்ள அறியாமையைப் பொசுக்கும்.

தொடரும்.

## பசு.

### பசுக்காத்தலே பேரறம்.

(திரு. ச. செல்வம்.)

பாரத நாட்டவர் பசுக் காத்தலையே பேரறமாகப் பாவித்து வருகின்றனர். பசுவிற்கு எவ்வாற்றானும் ஊறு செய்யாதிருத்தலோடு அதற்கு வேண்டிய உதவியுஞ் செய்து வருகிறார்கள். பசுவை ஊறு செய்பவனுக்கு எவ்விடத்தும் துன்பம். அவனை யாவரும் பெரும் பாவியெனப் பகர்வார்கள். நீங்காப் பெரும் நிரையத்திற்கு ஆளாவார்கள் என அவர்களைப்பற்றி அறிவிக்கப்பட்டு வந்தது. நம் நாட்டில் எப்பாகத்திலும் பசுக்களுக்காகத் தண்ணீர்த்தொட்டிகளும் ஆவுரிஞ்சிகளும் காணலாம். இவை இரண்டும் எண்ணான்கு அறங்களைச் சார்ந்தன. பசுவிற்கு வயிறார அருந்த வாயுறை வழங்குவதும் பல்கிப்பெருக ஏறு விடுத்தலும் இதைச் சார்ந்தனவே. பாரதப் பெரு நாட்டவர் தனித்தனி போற்றும் எண்ணாங்கு அறங்களில் பசுவிற்காக நான்கு ஒதுக்கப்பட்டிருக்குமானால் அதன் பெருமையை யாரால் எடுத்தோத இயலும்? ஆலயங்களில் பசு மடங்கள் அமைக்கப்பெற்றிருக்கிற விவரம் யாவருக்கும் தெரிந்ததேயாம். கோவிற் காளை, கோவிற் பசு என்ற சொற்றொடரைச் சிந்திக்க வேண்டுகிறேன். சில வைதீகர்கள் காலையில் பசுவின் முகத்திலேயே விழித்து வருகின்றனர்.

முற்கால மன்னருள்ளே பசு நிரை கவர்தல் என்ற வழக்கும் உண்டென முன்னர் குறிப்பிட்டிருந்தது. அதில் பசுவினங்களைத் துன்புறுத்துவதில்லையோ வென்ற ஐயம் எழலாம். பசுவினங்



களுக்கு ஒருவிதமான ஊறுமின்றியே போர் புரிந்துகொள்வது வழக்கமெனத் தெரிகிறது. ஒரு மன்னன் தன் பகைவர்கள் நிரை மீட்க விரைந்து வருதலைக் கண்டு பசுவைத் துன்புறுத்தாது கொண்டு செல்லுக என்ற கட்டளையை ஏவலாளரிடம் பிறப்பித்தலைக் கீழ் வரும் செய்யுளால் காண்க.

புன்மேய்ந் தசை இப் புணர்ந்துடன் செல்கென்று
வில்மே லசைஇய வெல்கழலான்-தன்மேன்
கடுவரை நீரிற் கடுத்துவரக் கண்டு
நெடுவரை நீழ நிரை.

வில்லையும் வீரக்கழலையும் உடையவனான தலைவன் செங்குத்தான மலையிலிருந்து மண்டிப் பாயும் நீர்வீழ்ச்சியைப் போல் பகைவர் கடிது வருதலைக் கண்டும் நீண்டவரை நிழலிலே ஆநிரையை மேய்த்து இளைப்பாற்றிக் கொண்டு போங்கள் என்று கட்டளையிட்டான்.

(புறப்பொருள் வெண்பா மாலை)

மன்னர் போர் புரியும்போது பசுவிற்கு ஒருவித இன்னலும் அணுகாதவாறு பாதுகாத்துக் கொள்வார்கள். இல்லையேல் அம் மன்னன் பெரும் பாவியென யாவராலும் இகழப்படுவான்.

"நன் பாற் பசுவே துறந்தார்
பெண்டீர் பாலர் பார்ப்பார்
என்போரை யோம்பே னெனில்
யானவனாக வென்றான்.

(சீவகசிந்தாமணி)

தன் கணவன் கொடுமையால் கொல்லப் பட்டதை அறிந்த கண்ணகி கோபத்தோடு மதுராபுரியை எரியூட்ட எண்ணிய போதும்

பார்ப்பார் அறவோர் பசு
பத்தினிப் பெண்டீர்
மூத்தோர் குழவிய ரென்னு
மிவரைக் கைவிட்டு
தீத்திறத்தார் பக்கமே, சேர்கென்று

அக்கினி தேவனுக்கு ஆணையிட்டாரெனில் பசுவின் பெருமையைப் பற்றி இன்னும் பல பேசவும் வேண்டுமோ?

மனுச்சோழனது ஒரு குலத்திற் கொரு மகனும் வீதிவிடங்கன் ஆலயஞ் செல்லத் தேரில் சென்றான். குதிரை விரைந்து சென்று கொண்டிருந்தது. அப்போது பச்சிளம் பசுங்கன்று துள்ளி வந்து தேர்க்காலில் விழுந்து மாண்டது. இதைக்கண்ட தாய்ப்பசு கதறிச் சென்று அரமனை ஆசார வாசலில் கட்டியிருந்த மணியைக் கொம்பால் அடித்தது. மணியொலியைக் கேட்ட மன்னன் விரைந்து வெளியே வந்தான். அப் பசுவின் ஆற்றொண்ணுத் துன்பத்திற்குத் தன் மகனே காரணமென அறிந்தான். அவனையும் தேர்க்காலி லிட்டுக் கொல்லக் கட்டளையிட்டான். அது நிறைவேறியது, இவனைச் சிலப்பதிகாரம் "கறவைக்கு முறைசெய்த காவலன்" எனக் கூறுகிறது.

பசுவை ஊறு செய்பவர்களுக்குக் கிடைக்கும் தண்டனையை அடியில் வரும் சில செய்யுள்களால் அறியலாம்.

"ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்" இங்கே ஆவுரித்துத் தின்னும் புலையனின் கீழ்மையைக் காண்க.

விசுவாச வஞ்சனை செய்பவன் பெறும் பேற்றைக் கம்பர் குறிப்பிடும்போது,

"கன்று தேய்ந்துகக் கறந்து பாலுண்டோன்" என்பவனோடு சேர்த்துக் கூறியிருப்பதைக் காண்க. நீதிவெண்பா ஆசிரியர் பெரும் பாவிகளை முறையே கூறிக்கொண்டு வருகையில் "ஆன் அந்தணர் மகளிர் அன்பாங் குழந்தைவதை" எனப் பசுவையே முதலில் கூறுகிறார். பசுவை அறியாது கொன்று விட்டவர்களும் பெரும் பிராயச் சித்தங்கள் செய்ய வேண்டுமென வேதம் விதித்திருக்கிறது. பசுக் காத்தலே பேறறமெனப் பல நூல்கள் புகலுகின்றன. அவைகளை எடுத்துக் கூறிக்கொண்டு போனால் பெருகுமென அஞ்சுகிறேன். ஆயினும் சிலவற்றைக் குறிப்பிட எண்ணுகிறேன்.

ஆசாரக் கோவையில் பசுவின் பாதுகாப்பைப்பற்றிய பாடல்கள் பல காண்கின்றன. உலகியல் விளக்கத்தில் பசுவிற்குப் பாதுகாப்பளித்தால் செல்வமுண்டாகும் என ஒரு வரலாறு காணப்படுகிறது. பாரதம் சாந்தி பர்வத்தில் பிராமணன் தனக்கு ஆபத்து நேரிட்ட போதும் பசுவை விற்கக்கூடா தெனக் கூறுகிறது. பசுவை நன்கு பாதுகாவாத ஒரு யாதவனை நோக்கிப் பார்ப்பனராகிய சண்டேசுவரர் கூறுவது காண்க.



கன்றுபயிலா நிரைகாக்கு மிதன்மேற் கடனதுவே
மன்றுளாடுஞ் சேவடியை வழுத்தும் நெறியா வழுத்துமென்று
நின்றவாயன் தனைநோக்கி நிரைமேய்ப் பொழிக நீயென்றான்

பசுவைப் பாதுகாத்தலின் பெருமையை அறிந்த அந்தணர் ஒருவரின் மொழி நமக்கு ஆதாரமாகக் கிடைத்தது.

பசுக் காத்தலே ஆயர்களுக்குப் பெருமைக்குக் காரணமெனச் சொல்வதும் சாலவும் பொருந்தும் என்பதில் சந்தேகமில்லை. பிறர்க்கு இன்பமூட்டும் பேரறம், எவர்க்கும் இன்னல் இல்லாதது.

"ஆ காத்தோம்பி ஆப்பய னளிக்குங்
கோவலர் வாழ்க்கையோர் கொடும்பாடில்லை."

(சிலப்பதிகாரம்)

யாவரும் எளிதிலே செய்யத் தகுந்த நல்லறங்களைச் செய்து உய்யும் வழிகளை உணர்த்தும் திருமூல நாயனார் சொல்லும் அறங்களில் பசு பரிபாலனத்தையும் குறிப்பிட்டிருக்கிறார். அது அடியில் வருமாறு.

"யாவர்க்குமா மிறைவர்க் கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவிற் கொரு வாயுறை
யாவர்க்குமா முண்ணும் போ தொரு பிடி
யாவர்க்குமாம் பிறர்க் கின்னுரை தானே"

இவைகளால் பசுவைத் துன்புறுத்தினால் வரும் இன்னல்களையும் பாதுகாத்தால் வரும் இன்பத்தையும் விளக்கினேன். பசுவிற்கு ஏற்பட்டிருக்கும் ஏனைய பெருமைகளை இன்னும் விளக்கலாமென எண்ணுகிறேன்.

தொடரும்

# முகவுரை.

(திரு. எஸ். பெருமாள்கோன்,)

கால்நடைகளைச் சரியாகப் பாதுகாத்துத் தீனி போட்டால் அவைகள் வியாதியடைவது அபூர்வம். அவைகளுக்கு அளவு மீறி அதிகமாகவாவது தகாதவிதமாகவாவது தீனி போட்டாலும் எவ்வளவாகிலும் பட்டினிகிடக்கும்படி விட்டாலும் அவைகள் சுகவீனட்பட்டு வியாதி அடைகின்றன.

இந்த வியாசத்தில் சொல்லியிருக்கிற வியாதிகளெல்லாம் பெரும்பாலும் தடுக்கக்கூடியவைகள். கால் நடைகளில் சொந்தக்காரர்கள் இனி விவரிக்கப்படும் முறைகளைக் கவனித்து நடப்பார்களானால் வியாதியினால் இப்போது நேரிடுகிற கால் நடைகளின் மரணத்தை முழுவதும் தடுப்பது சாத்தியமாகாவிட்டாலும் பெரும்பாலும் குறைப்பது சாத்தியமாகும்.

சில வியாதிகள் தொத்துதல் காரணமாக உண்டாகின்றன. கால்நடைகளைப் பாதுகாப்பதிலும் அவைகளுக்குத் தீனி போடுவதிலும் அஜாக்கிரதையாயிருப்பதுதான் மற்ற வியாதிகள் வருவதற்குக் காரணமாகும் என்பதை மறந்துவிடக்கூடாது.

அந்த வியாதிகளின் காரணங்கள் விவரித்துக் கூறப்பட்டிருக்கின்றன. அந்தக் காரணங்கள் பெரும்பாலும் தடுக்கக்கூடியவைகளாயிருக்கிறபடியால் ஷெ வியாதிகளிலேதாகிலும் கால்நடைகளுக்கு வரும் பட்சத்தில் பெரும்பாலும் அவைகளின் சொந்தக்காரர்களுடைய பிசகினால்தான் வந்ததாகக் கொள்ளவேண்டும்.

கால்நடை வைத்திருக்கின்றவர்கள் வெயிற் காலத்திலாவது மழை காலத்திலாவது வெக்கை முதலிய கொள்ளை நோய் பரவியிருக்கிற துர்ப்பாக்கியமான காலத்திலாவது உபயோகப்படும்படியாக வைக்கோலை அறுத்துக் காயவைத்த புல் அல்லது வைக்கோலைச் சேகரித்து வைப்பது முக்கியமான காரியம். மேற்கூறிய காலங்களுக்காக வேண்டிய அளவு அல்லது அதிற்கதிகமான தீனியைக் கால்நடைகளின் சொந்தக்காரர்கள் சேகரித்து வைத்திருக்கவேண்டும். அப்படிச் சேகரித்துவைத்து அவர்கள் தங்கள் வீட்



டிலே சௌக்கியமான கொட்டகையில் கால் நடைகளைக் கட்டி வைத்துச் சரியாகத் தீனி போட்டால் அவைகள் வியாதிக்குட்படாமல் தப்பித்துக்கொள்ளும் என்பதில் ஐயமில்லை.

அன்றியும் வருஷத்தின் சில பருவங்களிலே வெயிலாவது கனத்த மழையாவது கால்நடைகளின் மேல் படாதபடி அவைகள் தங்குவதற்கு நிழலாக வேணும் குளிருள்ள இராக் காலங்களில் அவைகளுக்குப் பாதுகாப்பாக வேணும் இருக்கிற மாட்டுக் கொட்டம் அல்லது கொட்டில்கள் வேண்டியிருக்கின்றன.

கால்நடைகளின் மேல் கனத்த மழை படும்படிவிட்டாலும் அவைகளைத் தண்ணீர் தங்கியிருக்கும் நிலங்களில் கட்டியிருந்தாலும் கோடை நாளில் மத்தியான காலத்துக் கடுவெயிலிலாவது (குளிர் காலத்தில்) ஈரமும் உறைபனியுமுள்ள இராக்காலத்துக் கொடுங்குளிரிலாவது தங்குவதற் கிடமில்லாமல் விட்டிருந்தாலும் அந்தக் கால் நடைகள் சுகவீனமடையாமலிருப்பது சாத்தியமல்ல.

கால்நடைக் கொட்டிலின் தளம் சுற்றிலும் உள்ள தரையைக் காட்டிலும் நன்றாய் உயர்ந்ததாகவும் அதன் மேல் விழுந்த நீர் வடிந்தோடக் கூடியதாகவும் அதன் கூரை வெயிலும் மழையும் உள்ளே பிரவேசியாமல் தடுக்கக்கூடியதாகவும் அதன் சுவர்கள் ஈரமும் குளிருமுள்ள இராக் காலத்துக் காற்றானது கால்நடைகளின் மேல் அடிக்காமல் தடுக்கக் கூடியவைகளாகவும் இருக்கவேண்டும்.

ஜன்னல்கள் போதுமான வெளிச்சம் தரத்தக்கவைகளாகவும் கதவுகள் கால்நடைகள் சுலபமாக உள்ளே போவதற்கும் வெளியே வருவதற்கும் ஏற்ற விசால முடையவைகளாகவும் இருக்க வேண்டும். நல்ல காற்று அடிப்பக்கமாக உள்ளே பிரவேசிப்பதற்கும் கெட்ட காற்று மேற்பக்கமாக வெளியே போவதற்கும் சரியான காற்றோட்ட வசதி இருக்க வேண்டும்.

கால்நடைக் கொட்டிலையும் அதைச் சுற்றிலுமுள்ள நிலத்தையும் சுத்தமாக வைத்திருக்கவேண்டும். மூத்திரத்தையும் சாணத்தையும் அடிக்கடி அப்புறப்படுத்த வேண்டும்.

நமது தேசத்திலுள்ள கால்நடைகளுக்குச் சுத்த ஜலம் கிடைக்கிறதில்லை. ஆகையால் அநேக சந்தர்ப்பங்களில் அவைகள் மிகவும் அசுத்தமான தண்ணீரைக் குடிக்கும்படி நேரிடுகிறது. அவைகளைப் பாதுகாப்பதில் இதைப்போன்ற குறைபாட்டினால் அநேக சந்தர்ப்பங்களிலே வியாதி சம்பவிக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லை.

# கால் நடைகளுக்குக் காணும் நோத்து வியாதிகளைத் தடுக்கும் வழிகள்.

| (1வது) அத்தியாயம். | (2வது) அத்தியாயம். | (3வது) அத்தியாயம். |
|---|---|---|
| வெக்கை | கால் நோய் | தழுட்டி |
| அம்மை | வாய் நோய் | தொண்டை அடைப் |
| சுரக்கழிச்சல் | கால் கோமாரி | பான் |
| பிச்சைநோவு | காற்காணை | பென்னை அடைப்பான் |
| வெதுப்பு | காணை | |

| (4வது) அத்தியாயம். | | |
|---|---|---|
| | கோமாரி | அடைப்பான் |
| | வாய் காணை | திருட்டு நோவு |
| | வாய் கோமாரி | தைரியான் |

| (5வது) அத்தியாயம். | (6வது) அத்தியாயம். | (7வது) அத்தியாயம். |
|---|---|---|
| சந்தடைப்பான் | தொத்துகிற ஆழ்ச்சி | ஆட்டு வைசூரி |
| சப்பை நோய் | | செம்மறியாட்டம்மை |
| படை நோய் | | பொக்கள நோய் |

| (8வது) அத்தியாயம். | (9வது) அத்தியாயம். | (10வது) அத்தியாயம். |
|---|---|---|
| விழுங்கக் கூடாமை | வயிற்று உப்புசம் | மூதல் இரைப்பை |
| | வயிற்றுப் பொருமல் | அடைப்பு |

| (11வது) அத்தியாயம். | (12வது) அத்தியாயம். | (13வது) அத்தியாயம். |
|---|---|---|
| மூன்றும் இரப்பை- | இரத்த மூத்திரம் | கழிச்சல் |
| அடைப்பு | இரத்த மூறி | எரிக்கல் |
| | | பேதி |
| | | வயிற்றுப்போக்கு |
| | | வயிற்றோட்டம் |

| (14வது) அத்தியாயம். | (15வது) அத்தியாயம். | (16வது) அத்தியாயம். |
|---|---|---|
| சீதபேதி | செம்மறியாடுகளுக்கு | இருமல் |
| இரத்த பேதி | வழ்த்தல் நோய் | குரல்வளை அழற்சி |
| வயிற்றளைச்சல் | | செருமல் |
| வயிற்றுக் கடுப்பு | | புகைச்சல் |

(17வது) அத்தியாயம்.

நஞ்சிடுவது

---

# வீரரங்கன்.

அல்லது

## இளைஞர் உள்ளம்.

திரு. ரா. தேசிகன்.

"அம்மா! இன்றிரவு நான் வீட்டிற்குச் சாப்பிடவரமாட்டேன்" என்று தாயைநோக்கிக் கூறினான் வீரரங்கன்.

"சரி மைந்தா! உன் இஷ்டபடிசெய். நீ வரும்போது அதிக சந்தடிசெய்யாமல் வந்து படுத்துக்கொள். ஏனெனில் சொற்பசப்தமும் நம்மில்லத்தில் திருடர்கள் இருப்பதாக எனக்கு ஞாபகம் தந்து என்னைப் பயமுறச்செய்கிறது, என்று பதில்கூறினாள் கமலம்மாள்.

வீரரங்கன் சற்று சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். தாயே! நான் .......நான் சந்தடி செய்ய இன்றிரவு......முடியாது. ஏனென்றால் இன்றிரவு புகைவண்டியில் பிரயாணஞ் செய்வேன்.

எந்தப் புகைவண்டியில் அப்பா?

பம்பாய் வண்டியில்.

மைந்தா, பம்பாய்க்கா போகிறாய்! அங்குச்சிலநாள் தங்கி இருக்க வேண்டுமென்பது உனது விருப்பமா?

அப்படியில்லை என் அருமைத்தாயே! நான்பம்பாயைக்கடந்து செல்வேன். அங்கு கப்பல் ஏறுவேன். நான் உன்னிடத்தில் சொல்லாமல்போக எனக்குப்பிரியமே இல்லை. நான் கொண்ட நோக்கத்துக்கு அனுமதிக்கும்படி உன்னைக்கேட்டால் பழங்காலத்துக் குருட்டு விஷயங்களைப் பிடிவாதமாகக் கொண்டு என்னைத்தடுப்பாயென்று அஞ்சினேன். ஆகவே தான் கடைசி நேரத்தில் அறிவித்து விட்டுச் செல்லவேண்டுமென்று விஷயத்தை இப்போது பிரஸ்தாபித்தேன். நான் சிலகாலம் ஐரோப்பாவில் தங்கியிருக்க ஆவல்கொள்ளுகிறேன்.

ஆ! தெய்வமே! என்று கதறினாள் கமலம்மாள். இருகைகளாலும் தன் முகத்தை மூடிக்கொண்டு, பெருமூச்செறிந்து, மெல்லிய துக்கக் குரலால் முணுமுணுக்கலானாள்.

இப்போதுதான் நீ இலங்கைக்குப் போய்வந்தாய்?

ஆம். மெய்தான் என் சொல்வது. அதுஎன் குற்றமன்று. நான் ஒரே இடத்தில் இருப்பதற்கு முடியவில்லை. நான் வெளிச்சென்று வந்தால்தான் எனக்கு நிம்மதிஏற்படுகிறது. நான் யாத்திரைசெய்தல் வேண்டும். அது இல்லையானால் என் பிராணனே போய்விடும்.

இது கொடுமை வீரரங்கா. இது தகுதியன்று. நான் இந்தவயதில் தனித்திருக்கவேண்டும் போலும். நீ சதா யாத்திரை செய்துகொண்டிருக்கும் ஒரு குடும்பத்தில் தோன்றினவனல்லன். உன் தந்தை வியாபாரவிஷயமாக இரண்டுநாள் சென்னையில் இருக்கநேரிட்டால் அது அவருக்கும் எனக்கும் ஒரு பெரிய பயங்கரக்கனவே. உன் பாட்டனார் உன் தந்தைக்கும் எனக்கும் அடிக்கடி என்ன சொல்வது தெரியுமா? ரங்கவமிசத்தாரெல்லாம் இந்தப் பழைய தங்கள் இல்லத்திலேயே உயிர் நீத்தார்கள் என்பார்.

நான் எவ்வளவு நீண்டகாலம் ஜீவித்திருக்க முடியுமோ அவ்வளவுகாலத்துக்குப்பின் இந்தப் பழைய பெரிய வீட்டிலேயே உயிர் துறக்க விரும்புகிறேன். ஆனால் அன்னாய்! அதற்குள் நான் சற்று அங்கும் இங்கும் அசைவதற்கு அனுமதி தருவாயாக.

சற்று அசைதலா வேண்டும் என்றுகூறி, கமலம்மாள் கண்ணீர் உகுத்தாள். உன் இளமைதொட்டே நீ அசைந்துகொண்டுதானிருக்கிறாய். உன்னைத் திருப்திசெய்ய உன் தந்தையும் நானும் உன்னை அழைத்துக்கொண்டு எங்கெங்கெல்லாம் சென்றோம். சென்னைக்குச் சென்றாய். பம்பாயைப் பார்த்தாய். டில்லியில் தங்கினாய். காசியையும் கண்டாய். விஞ்ஞானசாஸ்திர ஆராச்சி நிமித்தம் கல்கத்தாவிலும் சிறிதுகாலம் கடத்தினாய். இலங்கைக்கும் போய்வந்தாய். இப்போது வெகுதூரம் கடந்துசெல்லத் துணிந்துவிட்டாய்.

ஆ! என் துர்ப்பாக்கிய அன்னையே!

ஆம். நான் துர்ப்பாக்கிய அன்னைதான். ஏனெனில் மற்றன்னைகள் தங்கள் குடும்பங்களில் நிகழ்ந்த பெரிய சுபசம்பவங்களைப்பற்றி எண்ணி மகிழ்ந்திருப்பார்கள். "இன்ன காலத்தில் என் பிள்ளைக்குக் கலியாணமாயிற்று. இன்ன சமயத்தில் அவனுக்கு முதன் மகவு தோன்றிற்று. இன்னவருடத்தில் இரண்டாவது புத்திரன் உதித்தான். இன்ன காலத்தில் என் பேரப்பிள்ளைக்கு வித்தியாப்பியாசஞ் செய்யப்பட்டது." என்று பலவாறாகச்சொல்லி உண்மைக் குடும்பத்தைப்பற்றி மகிழ்வார்கள். நானோ. என்குடும்பத்தின் நிலையை உன்னி உருகுகிறேன். வீரரங்கன்பிறந்தான்-வளர்ந்தான்-சென்னைக்குச் சென்றான். பம்பாயிக்குப்போனான்-டில்லியிலிருந்தான்-காசி தங்கினான்-கல்கத்தாவில் வசித்தான்-அவன் தந்தை விண்ணுலகஞ் சென்றார். இப்போது அவன் ஐரோப்பாவுக்குச் செல்லுகிறான். இவ்வளவுதான் என் குடும்பம், இதுதான் என் மகிழ்வு.



நீ மணம்புரிந்துகொண்டு உனது முன்னோர்கள் வதிந்த பழம்பெரும் வீட்டிலே இல்லறம் நடத்துவாயென்று பேராவல் கொண்டிருந்தேன். அஃதெல்லாம் பாழாய்ப்போயிற்று.

அம்மா அழாதே, பழங்கொள்கையைஇன்னும் பிடிவாதமாகக் கொண்டிருக்கவேண்டாம். விவாகம் இப்போது எனக்கு வேண்டியதில்லை. அதற்குமுன் நான் செய்யவேண்டிய காரியங்கள் பல உள. அவை எனக்கும் நாட்டிற்கும் பயன்பட வேண்டும். என் வேலைகள் முடிந்தவுடன் நான் உன்னோடு இவ்விடத்தில் தங்கியிருக்க முடிவுகட்டியிருக்கிறேன். உன் துக்கத்தைவிடு • என் பிரயாணத்துக்கு வேண்டுவன விரைந்து செய்.

ஐயோ! எது சொல்லியும் உன் கொள்கையில் பிடிவாதமாக இருக்கிறாய். உன்னையன்றி வேறு துணையில்லாத ஒரு தாயை நிராதரவுபடுத்தி நீண்டதூரப்பிரயாணத்தை நிர்ணயத்துவிட்டாய், உன் தந்தை உயிரோடிருந்தால் நீ இங்ஙனஞ்செல்வதற்கு இசைவாரோ! உன்னைக்குறிக்கொண்டு ஏதேதோ நினைத்துக்கொண்டிருந்தேன். என் எண்ணங்கள் பாழாயின. நம் குடும்பத்தின் பேர்மறைந்துபோகுங்காலமும் வந்துவிட்டதுபோலும்.

"வீண் பிரலாபங்கள் ·இவைகட்கு நாம்செவிசாய்த்தல்கூடாது" என்று சொல்லிக்கொண்டே வீரரங்கன் இரண்டு கைப்பெட்டிகளை எடுத்துக்கொண்டு அப்பொழுதே வெளியில் புறப்பட்டுவிட்டான்.

* * * * *

கமலம்மாளுக்கு மகனைப்பற்றிய செய்தியே இல்லை. கண்ணீரும் கம்பலையுமாகக் காலத்தைக் கழித்து வருகிறாள்.

இரண்டாண்டு கழிந்தன-காலை ஆறுமணி-கமலம்மாள் வீட்டின் கதவு வழக்கம்போல் இன்னும் திறக்கப்படவில்லை-அண்டை வீட்டுப் பெரியார் பத்திரிகை ஒன்றைக் கையில்கொண்டு, கதவைத்தட்டினார். நித்திரையிலிருந்த கமலம்மாள் விழித்துக்கொண்டாள். 'என்றுமில்லாமல் காலையில் இன்று கதவு தட்டுஞ்சப்தம் ஏது? வீரரங்கன் வீடு திரும்புகிறானோ" என்று தனக்குள் கூறிக்கொண்டே கமலம்மாள் விரைவிற் சென்று கதவைத்திறந்தாள்.

"அம்மா கமலம் உனக்கு ஒருநல்ல செய்திகொண்டுவருகிறேன். இதோபார்! வீரரங்கனை. பிரான்சுதேசத்தில் ஆகாயவிமானப்போட்டிப் பரீக்ஷையில் முதன்மையாகத்தேறி உயர்ந்தபட்டமும் பெருங்

தொகையும் பெற்றானும்" என்று அண்டை வீட்டுப்பெரியார் சொல்லிக்கொண்டே தான் கையில் வைத்துப் படித்துக்கொண்டிருந்த பத்திரிகையைக் கமலம்மாளிடம் தந்தார்.

பத்திரிகையைவாங்கின கமலம்மாள் அதில் தன் மகன் உருவத்தைக் கண்டாள். அவன் பக்கத்தில் ஆகாயவிமானம் ஒன்று அலங்காரத்தோடு அமைந்திருப்பதையும் அதைச்சூழ்ந்து பல பெரியார் நின்றுகொண்டிருப்பதையும் பார்த்தாள்.

"நான் செய்தபாக்யமே பாக்யம். ஏ! வீரரங்கா, நீ இக்கீர்த்தி பெறுவாயென்று நான் கிஞ்சிற்றும் நினைத்ததில்லை. நீ இந்நிலைமையில் வீடுதிரும்புவதொன்றையே நான் விழைக்கின்றேன்." என்றாள்.

அண்டைவீட்டுப்பெரியார் அப்போதுகூறலுற்றார். "உன் மைந்தன் உன்குடும்பத்துக்கும் நம் நாட்டிற்கும் நல்ல பெயரைத்தேடிவிட்டான். இந்தியன் எவனும் இதுவரையில் இவனைப்போல்தேர்ச்சி பெற்றதில்லை. நீ எதற்கும் அஞ்சவேண்டாம். விரிகடற் புவிபுகழ் வீரரங்கன் விரைவில் வந்து சேருவான்."

* * * * *

ஒரு மாதம் கடந்தது. காலை பத்துமணி-தபாற்காரன் கமலாம்பாள் வீட்டில் நுழைந்தான். கடிதம் ஒன்றை அவளிடம் கொடுத்தான். நீண்டநாளாய் எதிர்பார்த்திருந்த அந்நிருபத்தை அவள் ஆவலாக வாங்கி அவசரமாகப் பிரித்துப் படித்தாள்.

பாரீஸ் மே-20.

அன்புருவாய அன்னாய்!

திருவருள் துணைசெய்தது. என் நோக்கங்கள் நிறைவேறின. இப்போது என்னைக்குறித்து உனக்கு எழுதுகிறேன். இங்குஆகாயவிமானப்பயிற்சிபெற்று, போட்டிப்பரீக்ஷையில் தேறினேன். வரும் மாதத்தில் அமெரிக்கா முதலிய நாடுகளைப்பார்த்துக்கொண்டு இந்தியா வந்து சேருகிறேன். தெய்வத்திருவருளால் உன் கோரிக்கைகள் அப்போது நிறைவுறும்.

உன்னை மறவாதமைந்தன்
வீரரங்கன்

இச்செம்மொழிகள் கமலம்மாளுக்குப் பேருவகை அளித்தன. கடிதத்தை அண்டைவீட்டுப் பெரியாரிடம் எடுத்து ஓடினாள். பெரியாரும் பார்த்தார்-பெருமகிழ்ச்சி கொண்டார்.



கடிதம்வந்து இன்னும் இரண்டுநாழிகை ஆகவில்லை-தெருமுழுதும் வீரரங்கன்பேச்சு.

* * * * *

மூன்றுவாரங்கள் முடிந்தன. வீரரங்கன் வரவைப்பற்றி வர்த்தமானப் பத்திரிகைகள் வரம்பின்றிஎழுதஆரம்பித்துவிட்டன. அவன் நகர் சேரும் நாளும் அறிவிக்கப்பட்டது.

நகரத்துக்கு இரண்டுமைல் தூரத்தில் ஒருபெரிய திறந்தவெளி. கும்பல் கும்பலாக ஜனங்கள் அங்கு வந்து சேருகிறார்கள். ஒரு பக்கலில் அலங்கரிக்கப்பட்ட நீண்ட பந்தல். அதன்கீழ் அமைக்கப்பட்டுள்ள நாற்காலிகளில் அரசாங்க உத்தியோகஸ்தர்களும் பிற கவுரவப் பிரபுக்களும் அமைந்திருக்கின்றனர். முன் வரிசையில் கமலாம்மாள் துரைத்தனப்பிரதிநிதி ஒருவரோடு காணப்படுகிறாள்.

வானத்தில் ஓர் பேரிரைச்சல். கூட்டத்திலுள்ள அனைவரும் அண்ணாந்து பார்க்கின்றனர். அதோ இதோ என்று ஆர்ப்பரிக்கின்றனர்-நெடுந்தூரத்தில் ஒரு பறவை உருவம்.

"அப்பா வீரரங்கா வந்துவிட்டாயா!" என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டாள் கமலம்மாள்.

ஆகாயவிமானம் திறந்த வெளியில் இறங்கியது. வீரரங்கன் விமானத்திலிருந்து வெளிப்பட்டான். கமலம்மாள் கட்டி அணைத்து முத்தமிட்டாள்.

வரவேற்புகளுக்கும், வாழ்த்துமொழிகளுக்கும், பரிசுகளுக்கும் கணக்கேயில்லை.

"எனக்குச் செய்யும் உபசாரங்களுக்கு நான் பெரிதும் நன்றி பாராட்டுகிறேன். நம் நாட்டு இளைஞர்கள் என்னைப்போன்று பிறநாடு சென்று நமக்குத் தேவையானவைகளைக் கற்றுத்தேர்ந்து, திரும்பிவந்து நாட்டுக்கு நலன் செய்வார்களாக" என்று இரண்டொரு வார்த்தையில் பதில் கூறினான் வீரரங்கன்.

அரசாங்கப் பிரதிநிதி வீரரங்கனையும் அவன் தாயாரையும் ஓர் அழகிய வண்டியில் அமர்த்தி அரண்மனைக்கு அழைத்தேகினர்.

* * * * *

அரசாங்கத்தாரால் நிறுவப்பெற்ற ஆகாயவிமானப் பயிற்சி சங்கத்திற்குத் தலைவராகவும் போதகராகவும் உயர்ந்தசம்பளத்தில் நியமிக்கப் பெற்ற வீரரங்கன், ரங்கவமிசத்தார் வதிந்த பழம் பெரும் வீட்டிலே, இன்று தன் தாயாரோடும், தான்தேடி மணந்துகொண்ட மனைவியோடும், அவள் வயிற்றில் தோன்றிய மக்களோடும் பல்லோர் மெச்சு நல்வாழ்வு நடாத்தி வருகிறான்.

—— —

# சென்னை யாதவகுல மகா சங்கம்.

## யாதவர் பொதுக்கூட்டம்.

1931ம் வருஷம். ஜனவரிமாதம் 25 தேதி ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணிக்கு, சென்னை, புரசவாக்கம், ராவ்பகதூர் இரத்தினவேலு செட்டி பெண் பாடசாலையில் சென்னை யதுகுல மகா சங்கம் ஆதரவின் கீழ் திருவாளர் ராவ் சாயிப் டி. சி. ஆதிகேசவலுப் பிள்ளை பி. ஏ. பி. எல்., அவர்களின் தலைமையின் கீழ் ஒரு யாதவப் பொதுக் கூட்டம் கூடியது. திருவாளர் ராவ் சாயிப் டி. சி. ஆதிகேசவலுப் பிள்ளை அவர்கள், சங்கம் செய்துவரும் நன்மைகளைப் பற்றியும், உற்பத்தியைப் பற்றியும் அதன் விருத்தியையும் எடுத்துத் தெளிவாகவும், விரிவாகவும் கூறினார். சங்கத்தை விருத்தி பண்ணவும், சங்கத்திற்கு ஒரு மூலதனம் உண்டாக்க வேண்டுமென்றும், அதற்காக யாதவர்கள் அனைவரும் தம்மாலியன்ற உதவிகளைப்புரிய வேண்டுமென்றும், குறைந்த உபகாரம் வீடு ஒன்றுக்கு ரூபாய் ஒன்றுவீதம் கொடுத்தால் போதுமானது; அதுவே ஏராளமான பணம் ஆகுமென்றும் கூறினார். அங்கத்தினர்கள் ஓர் தீர்மானம் நிறைவேற்றி யிருப்பதாகவும் அதன்படிக்குச் சங்கமானது நகரத்தில் பற்பல பாகங்களிலும் பொதுக்கூட்டங்கள் கூடி யாதவமக்கள் அனைவரும் உதவிபுரிய வேண்டுமென்று கூறினார். அதன்படி முதல் பொதுக்கூட்டம் புரசைவாக்கத்தில் கூடும்படி நேரிட்டது. ஏழை மாணவர்களுக்குப் படிப்பிற்காக நமது குலப் பெரியார் திருவாளர். இ. எம். கோபாலகிருஷ்ணக்கோன், அவர்கள் மேற்படி சங்கத்திற்கு ரூபாய் 500. வருஷா வருஷம் கொடுப்பதாக வாக்களித்திருப்பதையும், அவர் தற்சமயம் அதன்படி கொடுத்து வருவதையும் தெரிவித்தார். பிறகு திருவாளர். எம். அப்பாத்துரைப் பிள்ளை அவர்கள் தமது நீண்ட உரையில் இச்சங்கத்தின் கொள்கைகளைத் தெளிவாகவும் விரிவாகவும் எடுத்துரைத்தார். திருவாளர்கள். எஸ். வெங்கடாசலம் பிள்ளை, பி. ஏ. பி. எல், பண்டிட் எம். வி. வேணுகோபால் பிள்ளை, சி. வி. திருவேங்கடம் பிள்ளை, இச்சங்கத்திற்கு ஒவ்வொருவரும், ஏழை மக்களுக்காக உதவிபுரிய முன்னுக்கு வரவேண்டுமென்று கேட்டுகொண்டார்கள்.



திருவாளர் எம் கே. ஆராவமுது பிள்ளை, எம். ஆர். ஏ. எஸ். அவர்கள் இந்தக் கூட்டத்தில் வந்திருந்தவர்கள்,ஏழை மாணவர்களுக்காக ரூபாய். 1010க்கு யாதவர்கள் உதவிசெய்ய வாக்களித்திருக்கிறார்கள் என்றும் கூறினார். பின்னும் கல்வி நம்குல மக்களுக்கு அதி இன்றி யமையாதது என்றும் அதை நமது குலத்தாராகிய யாதவ ஏழைமக்களுக்கு ஊட்டுவதற்கே இச் சங்கம் ஏற்பட்டுள்ளதென்றும் விரிவாகப் பேசினார்.

### பணஉதவி கொடுப்பதாகக் கையொப்பமிட்டவர்கள் பெயர்.

| | ரூபாய். |
|---|---|
| திருவாளர். ராவ் சாயிப் டி. சி. ஆதிகேசவலுப் பிள்ளை, பி. ஏ. பி. எல், | 100—0—0 |
| திருவாளர். பி. பெருமான் பிள்ளை, | 100—0—0 |
| ,, எம். அப்பாத்துரை பிள்ளை, | 100—0—0 |
| ,, சி. ஆதிகேசவலு நாயுடு. | 100—0—0 |
| ,, பி. முத்துசாமிபிள்ளை, | 100—0—0 |
| ,, பி. எம். இராமகிருஷ்ண பிள்ளை, | 100—0—0 |
| ,, வி. கண்ணுப் பிள்ளை, | 100—0—0 |
| ,, டி. எம். சீனுவாசப் பிள்ளை, | 100—0—0 |
| ,, எம். கே. ஆராவமுதுபிள்ளை, M.R.A.S. | 50—0—0 |
| ,, எம். சி. தீனதயாலு நாயுடு. | 50—0—0 |
| ,, டி. எஸ். வேணுநாதக் கோன், | 50—0—0 |
| ,, டி. ஏ. வேணுகோபால் பிள்ளை, | 50—0—0 |
| ,, சி. ராதாகிருஷ்ண பிள்ளை, | 10—0—0 |

பிறகு திருவாளர் சி. தீனதயாலு நாயுடு. பி. ஏ. பி. எல், அவர்கள் அனைவர்களுக்கும் வந்தனோபசாரம் கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

தமிழ்ப்பண்டிதர்களாலும் சங்கீதவித்வான்களாலும் பாகவத பக்த கோடிகளாலும் பெரிதும் புகழ்ந்துரைக்கப்பெற்ற ஸ்ரீமத் பாலகிருஷ்ண பஜனார்ஜிதம் என்னும்

**அமிர்த கானம்.**

**விலை அணா 5.**

ஜமீன் சிறுவாலை சமஸ்தானம். வித்வானந்தபாஷிய வீ. எஸ். வீ. கோனார் அவர்களால் இயற்றப் பெற்றது.

குறிப்பு:—வியாபாரிகளுக்கும் மொத்தமாக வாங்குபவர்களுக்கும் கமிஷன் உண்டு.

விலாசம்.
ஸ்ரீ பாலகிருஷ்ண விலாசம், அம்பலத்தாடி
சமயநல்லூர் போஸ்டு, மதுரை ஜில்லா.

# ஒரு வேண்டுகோள்.

## யாதவ இளைஞர் சங்கம் (கிளைச்சபை)

### நாகபட்டணம்.

---

இச்சென்னை ராஜதானிக்குள் 16½ லட்சம் ஜனத்தொகை கொண்ட யாதவகுலத்தினர்களின் பொது நலத்திற்கும் அன்னோர் அபிவிருத்திக்குரிய சாதனங்களுக்கும் அரும்பாடுபட முன் வந்து சில பெரியோர்கள் சென்னையில் 1917-ம் வருஷம் முதல் யாதவ மகா சங்கம் ஒன்று ஸ்தாபித்துத் தொண்டுபுரிந்து வருகின்றனர்.

1930-ம் வருஷம் யாதவ இளைஞர்கள் பலர்கூடி "இளைஞர் சங்கம்" ஆரம்பித்து நடத்திவருகின்றனர். இம்மாகாணத்தின் பல பெரிய நகரங்களிலும் கிளைச்சங்கங்கள் நிறுவி மகா நாடுகளும் நடைபெறுகின்றன. சமீபத்தில் ராஜமன்னார்குடியில் நடைபெற்ற மகா நாட்டிற்குத் தலைமை வகித்த கனம் T. S. வேணுநாதகோன் அவர்கள் சென்ற வாரத்தில் இந்நகருக்கு விஜயம் செய்து சில யாதவ நண்பர்களிடமும் உரையாடிக்கொண்டிருக்கையில் இவ்வூரில் ஒரு கிளைச்சங்கம் ஏற்படுத்தவேண்டிய அவசியத்தைப்பற்றித் தெரிவித்தார்கள். ஆகவே அடியிற் கையொப்பமிட்டிருக்கும் நாங்கள் இந்நகரின் கண் வாழும் யாதவ சகோதரர்களுக்கு அவசியமானதும் பொதுநல ஊழியத்திற்கு இன்றியமையாததுமான ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தவேண்டியதற்காக நாளது 14—4—31 மங்களவாரம் பிற்பகல் 5 மணிக்கு நாகபட்டணம் மதுவிலக்குக் கமிட்டி ஆபீசுக் கட்டிடத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும். அச்சமயம் அபிமானிகள் யாவரும் வந்திருந்து இயன்றவளவு ஊக்கம் காட்டியும் எங்களுக்கு உற்சாக மூட்டியும் முன்னின்று ஆதரவு அளித்தும் கிளைச்சங்கம் ஒன்று நிறுவியும் நம்மவர்களின் முன்னேற்றத்திற்குத் தகுதியான முயற்சிகளை எடுத்துக்கூறியும் உதவிபுரியுமாறு கேட்டுக்கொள்ளுகின்றனம்.

1. **A. K.** கோபாலசாமிபிள்ளை
2. **T. M.** ராஜகோபால்பிள்ளை
3. **K.** குப்புசாமிபிள்ளை
4. **K.** கோவிந்தராஜலுபிள்ளை
5. **A.** கலியப்பெருமாள்பிள்ளை

நாகபட்டணம்,
1—4—31.

# புதுவை யாதவகுல சங்கம்.

---

புதுச்சேரி யாதவர்களின் முன்னேற்றங்கருதி, குலாபிமானிகளிற் சிலர் பெருமுயற்சி செய்து, சென்ற ருத்ரோத்காரி ஸ்ரீ ஆவணி மீ 18 உ கிருஷ்ண ஜெயந்தி தினத்தன்று இச்சங்கத்தை நிறுவினர். பிராஞ்சித்திய துரைத்தனத்தாரின் அங்கிகாரம் பெற்ற இச்சங்கம் நான்காண்டுகள் செவ்வனே நடைபெற்றுவந்தது. நான்காவதாண்டின் இறுதியில் ஏற்பட்ட ஒரு சில பொறுப்பாளர்களின் தவறுகளினால் அதன் அபிவிருத்தி தடைப்பட்டது. அங்ஙனம் தடைப்பட்டதை நிவர்த்திப்பான் வேண்டி குலப்பற்றுடையார் பலர் சமீபத்தில் செய்த நன்முயற்சியால் நிகழும் பிரமோதூத ஸ்ரீ தைமீ 26-(8-2-31) ஞாயிற்றுக் கிழமை ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. அக்கூட்டத்தில் சங்கத்தின் நிர்வாக சபை புதிதாக அமைக்கப்பட்டது. அவ்வமைப்புப் பின் வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| திருவாளர். | மா. அப்பாசாமி பிள்ளை அவர்கள். | | அக்கிராசனர் |
| ,, | அ. வேணுகோபால பிள்ளை | ,, | உதவி அக்கிராசனர் |
| ,, | ரா. தேசிக பிள்ளை | ,, | பொதுக் காரியதரிசி |
| ,, | அ. இராதாகிருஷ்ண பிள்ளை | ,, | உதவிக் காரியதரிசி |
| ,, | N. சீனிவாசபெருமாள் பிள்ளை | ,, | பொக்கிஷாதிபதி |
| ,, | R. நாராயணசாமி பிள்ளை | ,, | கணக்குப் பரிசோதகர் |
| ,, | கி. அப்பாசாமி பிள்ளை | ,, | ,, |
| ,, | ர. ராமசாமி பிள்ளை | ,, | ,, |
| ,, | ல. ராசுபிள்ளை | ,, | பிரதிநிதி |
| ,, | சீ. பாலகிருஷ்ண நாயுடு | ,, | ,, |
| ,, | லே. ராமசாமி பிள்ளை | ,, | ,, |
| ,, | வீ. கேசவ பிள்ளை | ,, | ,, |
| ,, | கி. பாலசுந்தரம் பிள்ளை | ,, | ,, |
| ,, | சி. நாராயணசாமி நாயுடு | ,, | ,, |
| ,, | சீ. கோதண்டபாணி பிள்ளை | ,, | ,, |

பின்னர் சங்கத்தின் மூல தனம், சங்கம் செய்யவேண்டிய வேலை முதலியவை குறித்துப் பேசப்பட்டது. அடுத்த நிர்வாக சபையின் கூட்டத்துக்குள் சங்க முன்னேற்றத்துக்குரிய அவசியமான பிரசாரத்தைப் புதுவையின் கண்ணும் அதன் சுற்றுப் புறங்களிலுள்ள ஒவ்வொரு கிராமங்களிலும் செய்ய வேண்டுமென்று முடிவு செய்யப்பெற்றது.

ரா. தேசிகன்,
காரியதரிசி.

## திருவிதாங்கூர் வொஜைன்.

சென்னை மாகாண 6-வது யாதவ மகாநாடு வருகிற மேமீ 13-ம் 14ம் டிகளில் செங்கோட்டையில் நடைபெறும். சென்னை ஹைக்கோர்ட் வக்கீலும், நம் குலப் பெரியாருள் ஒருவருமான உயர் திருவாளர் M. R. மோஹனரங்கம்பிள்ளை அவர்கள் B. A. B. L தலைமை வகிக்க அன்புடன் இசைந் துள்ளார்கள். மகாநாட்டிற்கு ஏராளமான பிரதிநிதிகள் எதிர்பார்க்கப்படுகிறார்கள் பிரதிநிதிகள் தங்குவதற்கும் சாப் பாட்டிற்கும் வரவேற்புக் கழகத்தார் ஏற்பாடு செய்வார்கள். இத்துடன் சென்னை மாகாண 2-வது யாதவ இளைஞர் மகா நாடும் நடைபெறும். (பிரஜோற்பத்தி சித்திரை 30 வைகாசி 1உ)

S. சட்டநாதகரையாளர், B. A. B. L. மிட்டாதார்.
வரவேற்புக்கழகத்தலைவர்.

ஸ்ரீ

## மாதர் பரிசு!

(1) மாதர் கடமை!
(2) பெண்மக்கள் நிலை!
(3) மாதர்கள் முன்னேற்றம்!
(4 பெண்கல்வி அவசியமா?
(5) விதவா விவாகம் வேண்டியதா?
(6) கலப்பு மணம்!
(7) யாதவர்களும் பெண்மக்களும்!
(8) பெண்ணுரிமை!

என்னும் எட்டுக் கட்டுரைகளையும் பெண்ணுலகு என்னுந் தலைப்பில் யாதவ சமூகப் பெண்மக்கள் "யாதவ மித்திரன்" பத்திரிகையில் எழுதி யனுப்புவோர்க்கு எட்டுப் பரிசு வழங் கப்படும். கட்டுரை உதவுவோர் இருபது வயதுக்கு உட்பட்ட வர்களாக இருக்கவேண்டும். முதற் பரிசு மித்திரன் மூன்றும் ஆண்டு ஆரம்ப தினத்தன்று "ஸ்ரீ கோபால் மஹாலில்" வழங்கப் படும். மற்ற பரிசுகளும் மாதாமாதம் கொடுக்கப்படும். கட்டுரை வழங்குவோர் இவ் எட்டனுள் எதை வேண்டுமானாலும் முதலில் எழுதியனுப்பலாம். ஆண்மக்கள் இதில் கலக்கக் கூடாது. பின்பு அவர்களுக்குத் தனியாக இடமளிக்கப்படும். இது சம்பந்தமாய் எவ்வித கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளப்படமாட் டாது. சந்தா நம்பரையும் குறிப்பிடுக.

M. K. காந்திதாஸ், பர்மா.

## யாதவ மித்திரன் சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| இந்தியா, சிலோன், பர்மா முதலிய உள்நாட்டிற்கு வருஷம் 1-க்கு | ரூ | 1—0—0 |
| பினங்கு சிங்கப்பூர், முதலிய வெளிநாட்டிற்கு வருஷம் 1-க்கு | ரூ | 1—8—0 |

தனிப்பிரதி விலை அணா 2.

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தாக் கிடையாது.

மாதிரிப் பிரதி வேண்டுவோர்
இரண்டரையணா, தபால் தலை அனுப்பவேண்டும்.

1. சந்தாதாரராய்ச் சேர்கின்றவர்கள் பெயரையும் விலா சத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

2. எப்பொழுதும் சந்தாத் தொகையை முன் பணமாகச் செலுத்த வேண்டும். வி. பி. மூலமாகவும் பெற்றுக் கொள்ள லாம். சந்தாத்தொகையை முன்பணமாக மணியார்டர் செய்தால் 2-அணாத்தான் செலவாகும். வி. பி. மூலம் பத்திரிகையை வர வழைப்பதில் 3-அணா அதிகச் செலவாகும், ஆதலால் முன்னடி மணியார்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்வதே நலம்.

3. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் அவ்வருஷ ஆவணி மாதம்முதல் கணக்கு வைக்கப்பட்டு ஆவணி மாதப் பத்திரிகை முதல் சேர்த்தனுப்பப்படும்.

4. யாருக்கேனும் சஞ்சிகை வந்து சேராவிட்டால் அம் மாதமுடிவிற்குள் தங்கள் சந்தா நம்பருடன் தெரிவித்துப் பெற்றுக் கொள்ளலாம். அதற்குப் பின்னர் தெரிவித்தால் விலை செலுத்தியே பெற்றுக் கொள்ளவேண்டும்.

5. இடம் மாறும் சந்தா நேயர்கள் தங்கள் புது விலாசத் தைத் தெரிவித்து, அது விபரத்தைத் தபாலாபீஸாரிடமும் அறி வித்துவிட வேண்டும்.

6. சந்தா நம்பரைக் குறிப்பிடாத கடிதங்களைக் கவனிக்க முடியாது. பதில் விரும்புவோர் தபால் தலை அனுப்பவேண்டும்.

## விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| 1-பக்கத்திற்கு | ரூ | 10—0—0 |
| $\frac{1}{2}$-பக்கத்திற்கு | ரூ | 5—8—0 |

நீண்டகால விளம்பரங்களுக்கு யாதவ மித்திரன் ஆபீஸிற்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

ஐந்தாவது யாதவமகாநாடு போட்டோ படங்கள்.

ஐந்தாவது யாதவமகாநாடு போட்டோ படங்கள் வேண்டியவர்கள் யாதவமித்திரன் ஆபீஸுக்கு விபரமாகத் தெரியப்படுத்துவ துடன் முன் பணமாக ரூ 1—5—0 மணியார்டர் மூலம் அனுப்பிவைக்கவும்.

# இந்தியவிவசாயம்

ஓர் விவசாய மாதப் பத்திரிகை.

—*—

வருட சந்தா ரூ. 1.

இதில் கமத்தொழில், கால் நடை பரிபாலனம், கூட்டுறவு, சிறு தொழில்கள் முதலிய கிருஷிகருக்கு வேண்டிய சகல விஷயங்களும் பிரதி மாதமும் வெளிவரும். மாதிரிப்பிரதி இனாம்.

மானேஜர்,
இந்திய விவசாய ஆபீஸ்,
தெப்பக்குளம் போஸ்டு, திருச்சி.



# "Young Yadava"

**An English Monthly.**

Annual Subscription Rupee One.

Will be published by the YADAVA YOUTH LEAGUE, MADRAS. Sample copies will be sent on request. All educated Yadavas are requested to send the addresses of their English educated relatives and friends so that an attempt can be made to enrol them as subscribers.

Yadavas who send their subscriptions in ADVANCE will go a long way in helping the Community.

APPLY TO:—

**T. S. Venunadha Kone,** F. C. I, M. R. A. S.,
*Kilpauk P. O. Madras.*



**Printed & Published by E. M. GOPALAKRISHNA KONE**
at the Excelsior Press, Madura.



13 **Reg., No. M-2827.**









# யாதவ மித்திரன்.

யாதவமக்களின்
முன்னேற்றங்கருதிவெளிவரும்
மாதப்பத்திரிகை.


| தொகுதி 2 | பிரஜோற்பத்தி சித்திரைமீ 1931 ௵ ஏப்ரல்மீ | பகுதி 9 |
|---|---|---|



**பொருள் அடக்கம்.**


| | |
|---|---|
| கடவுள்வணக்கம் | 257 |
| கிராமச் சீர்திருத்தங்கள் | ,, |
| இடைக்காடர் | 261 |
| மன்னார்குடி 4ஆண்டு யாதவகுலசங்கம் | 266 |
| குசேலர் | 271 |
| கோகிலகிருஷ்ணன் | 277 |
| கால்நடைவைத்தியம் | 282 |
| பாரிதிருநாள் | 286 |
| யாதவ வாலிப சங்கம் | 287 |
| விசேஷ அனுதாபம் | 288 |



22 MAY 1931









Managing Editor.
ஈ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
புத்தகவியாபாரம், மதுரை.

## யாதவமித்திரன்.

ஆசிரியர் கூட்டத்து அங்கத்தினர்கள்

(Editorial Board Members.)

தலைவர்.

1. திருவாளர், ஆ. கார்மேகக்கோனார் அவர்கள்
தலைமைத்தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

---

2. ,, ச. செல்லம் அவர்கள் (யாதவர்) சுசீந்திரம்.
3. ,, J. சக்கரபாணி நம்பியார் அவர்கள், பி. ஏ., பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வைஸ் பிரசிடெண்டு.
ஜில்லாபோர்டு, திருநெல்வேலி.
4. ,, V. கிருஷ்ணரெட்டியார் அவர்கள் (யாதவர்) பி. ஏ பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வேலூர்.
5. ,, தி. அ. முத்துசாமிக் கோனாரவர்கள், வித்வான்,
திருச்செங்கோடு.
6. ,, K. வீராசாமிப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், முனிசிபல் உயர்தர கலாசாலை,
திண்டுக்கல்.
7. ,, R. வேங்கடா சலம்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர்,
S. P. G. உயர்தரக் கலாசாலை, தஞ்சாவூர்.
8. ,, M. V. வேணுகோபாலப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், E. L. M F. ஹைஸ்கூல்
புரசபாக்கம், சென்னை.
9. ,, ஐயம்பெருமாள் கோன் அவர்கள், தமிழாசிரியர்,
ஸெயின்ட் ஜோஸப் காலேஜ், திருச்சிராப்பள்ளி.
10. ,, K. கோபால கிருஷ்ணன் அவர்கள், B. Sc. (Hons.)
M. R. A. S. பர்மா.

### வேண்டுகோள்.

வியாசங்கள் எழுதுவோர் தெளிவாகவும் தூஷணைகளின்றியும் முழுவிலாசத்துடன் சமூக முன்னேற்றத்திற்குரியனவும் அறிவு வளர்ச்சிக்குரியனவுமாகிய பொது விஷயங்களைப்பற்றிச் சுருக்கமாகவும், நடை எளிதாகவும் எழுதியனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோரும், விளம்பரங் கொடுக்க விரும்புவோரும் அடியிற்காணும் விலாசத்திற் கெழுதுக.

யாதவமித்திரன் ஆபீஸ், ஸ்ரீ கோபால் மஹால்,
வடக்குச் சித்திரைவீதி, மதுரை.



# யாதவமித்திரன்.

## ஒரு மாதப்பத்திரிகை.

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

| தொகுதி 2 | பிரஜோத்பத்தி௵ சித்திரை௴ 1931-௵ ஏப்ரல்-௴ | பகுதி 9 |
| --- | --- | --- |


### கடவுள் வணக்கம்.

மாற்றரசர் மணிமுடியும் திறலும் தேசும்
மற்றவர்தம் காதலிமார் குழையும் தந்தை
கால்தளையும் உடன்கழல வந்துதோன்றிக்
கதநாகம் காத்தளித்த கண்ணர்கண்ணர்
நூற்றிதழ்கொ ளரவிந்தம் நுழைந்த பள்ளத்து
இளங்கமுகின் முதுபாளை பகுவாய் நண்டின்
சேற்றளையில் வெண்முத்தம் சிந்துநாங்கூர்த்
திருத்தெற்றி யம்பலத்துஎன் செங்கண்மாலே

திருமங்கை யாழ்வார்.

## கிராமச் சீர்திருத்தங்கள்.

(228-ம் பக்கம் தொடர்ச்சி.)

---

இதுவரை கல்வி அபிவிருத்தியைப்பற்றி ஆராய்ந்தோம். கிராமங்களில் தகுந்த பாடசாலைகளமைத்துப் பிள்ளைகளுக்குக்கல்விகொடுக்கக் கிராமவாசிகளிடம் தக்க திரவியமில்லாமல் கஷ்டப்படுகின்றனர். கிராமவாசிகள் நல்ல நிலைமையிலிருந்தாலன்றோ தகுந்தசம்பளமுதவி உயர்ந்தகல்விமான்களைக்கொண்டு சிறந்த பாடங்களைத் தற்காலத்திற்குத்தகுந்த முறையுடனுதவக்கூடும்? அப்படியின்றி மிகவும் தரித்திரர்களாயிருந்தால் தங்கள் பிள்ளைகளை எவ்வாறு கல்விபயிலச்செய்வார்கள்? ஆகவே முதலாவதாகக் கிராமவாசிகளின் விளைவை அதிகரித்து நல்ல இலாபம் பெறும்படியான மார்க்கங்களை அனுஷ்டித்து

வரப் போதிக்கவேண்டும். தற்போதுள்ள விவசாயிகளுக்கு விளைவை அதிகரித்துத் தக்க இலாபம் பெறும் முறையில் கற்பித்தால் அதனாலேற்படும் முன்னேற்றத்தால் அவர்களின் பிள்ளைகளாகிய எதிர்காலவிவசாயிகளுக்குப் போதிய கல்வி கிடைத்துப் பலவழிகளிலும் தங்கள் நிலைமைகளைச் சீர்திருத்தஞ்செய்து கொள்ளுவார்கள். கிராமவாசிகள் தங்கள் விவசாயமுறைகள் தகுந்தவைகளல்லவென உணரும் வரையில் எவ்வளவுதான் எழுதினாலும், எடுத்துச்சொன்னாலும் புதிய முறைகளைக் கைக்கொள்ளார்களென்பது திண்ணம். தற்காலப் புதிய முறைகளைக் கைக்கொள்ளும்வரை கிராமவாசிகள் தரித்திரதிசையை விட்டகலமாட்டார்கள். தரித்திரதிசை யொழியும்வரை கிராமச்சீர்திருத்தங்களேற்படா. ஆகவே ஓர் சீர்திருத்த சங்கமேற்பட்டு ஒவ்வொரு கிராமங்களிலோ அல்லது முக்கிய கிராமங்களிலோ தங்கி விவசாய முறைகளைப் பிரத்தியட்சமாகக் காட்டியூட்டவேண்டும். முற்காலத்தில் அமெரிக்கா ஐக்கியதென்மாகாணங்கள் இவ்வாறே தரித்திரதிசையில் பீடிக்கப்பட்டிருந்தன. அப்பொழுது மேற்குறித்த முறைகளைக் கையாண்டு வருஷாவருஷம் விளைவை அதிகரித்தவுடன் பாடசாலைகளமைத்து ஏராளமாய்ச் செலவிடக்கூடிய நிலைமைக்குக் கொண்டுவந்தனர். ஆங்கு 1901௵ 2,461,053 டாலர்களைக் கிராமபாடசாலைகளுக்குச் செலவு செய்தனர். ஆனால் 1913௵ 8,579,478 டாலர்கள் செலவு செய்யக்கூடிய அவ்வளவு உயர்ந்த நிலைமைக்கு வந்தனர். ஆகவே இந்தியாவும் அமெரிக்காவைப் பின்பற்றவேண்டும். தற்கால விவசாயிகளின் நல்லுணர்ச்சிகொண்ட ஒற்றுமையினாலேதான் பிற்காலவிவசாயிகள் முன்னணியில் வரவேண்டியிருக்கிறது. போதிய அறிவுகுன்றி வேண்டாவிருப்பமுடைய கிராமவாசிகளின் குழந்தைகளிடம் கல்வியைக் கட்டாயப்படுத்திப் புகுத்துவதனாலாகும் பயனேதுமுளதோ? கிராமவாசிகள் தங்கள் க்ஷீணதிசையை யுணர்ந்து தங்கள் முன்னேற்றத்திற்குரிய வழிகளைப் பின்பற்ற ஆசைகொண்டு தங்கள் பிள்ளைகள் உண்மையிலேயே கல்விபயிலவேண்டுமென அறிந்து கல்விக்கு வேண்டிய ஒத்தாசைகளை மனமுவந்துதவும் வரையில் சீர் திருத்தக்காரர்களின் முயற்சி வீண்முயற்சியே.

இந்தியாவின் 685,665கிராமங்களில் முக்கால்பாகம் பாடசாலையில்லாதவைகள், 100க்கு 92 பேர் கல்வியற்றவர்களாயிருக்கின்றனர். போலீஸார்களில் பாதிப்பேர்கள் எழுதவும் வாசிக்கவும் கூடாத



வர்கள். கிராமவாசிகள் தங்கள் பிள்ளைகளை எழுதப்படிக்கப் பாடசாலைக்கனுப்புவதில்லை. தங்கள் பிள்ளைகள் வீணாக ஓடியாடித்திரியாமல் பத்திரமாய்த்தங்கி வீடுவந்து சேருவதற்கென்றே பாடசாலைக்கனுப்புகிறார்கள். பிறகு தங்கள் பிள்ளைகள் கொஞ்சம் ஆளாகிவிட்டால் ஆடுமாடுகளை மேய்த்துவரும் "அரிய" வேலையிலமைத்து விடுகிறார்கள். இப்படியே எல்லாக்கிராமங்களிலும் தங்கள் பிள்ளைகளைப் பாழாக்கி விடுகின்றனர். இவ்வாறு நடந்து கொள்ளும் மூடக்கிராமவாசிகளுக்காகப் பாடசாலைகளில் எவ்வளவுதான் செலவிட்டாலும் பிரயோஜனமேது? எல்லாம் விழலுக்கிறைத்தநீரே.

கிராமவாசிகளின் குழந்தைகள் தாங்களே நன்னெறி பற்றி நடக்கவேண்டிய அறிவைப் பாடசாலைகளிலிருந்து பெறுவதவசியம். கிராமப்பிள்ளைகளுக்குத் துவக்கத்தில் நன்றாய் எழுதவும் வாசிக்கவும் கணிதப்பயிற்சிகளிலும் சிறிது தேர்ச்சியடைந்தபிறகே விவசாயக் கல்வியைப் புகட்டவேண்டும். கல்விவிருத்திக்குக் கிராமத்திலுள்ள ஆணும் பெண்ணும் நல்லறிவு கொண்டு ஊக்கம், விடாமுயற்சிகளுடன் வேலை செய்தும் சீர்திருத்தக்காரர்களுக்கு வேண்டிய உதவிகளைப் புரிந்தும் வருவது அத்யாவசியமாயிருக்கிறது.

## போக்குவரத்துச் சாதனங்கள்.

கிராமச் சீர்திருத்தங்களுக்கு எப்படிக் கல்வியின்மை முட்டுக்கட்டையாயிருக்கிறதோ அப்படியே கிராமங்களோடு கூட்டுறவு, போக்குவரத்தின்றித் தனி நிலைப்பட்டிருப்பது கல்வியை வளர்ப்பதற்கும் மற்றவேலைகளுக்கும் பெருந்தடையாயிருக்கிறது. கிராமங்கள் வெகு சமீபத்திலிருந்தும் அதேசமயத்தில் வெகுதூரத்திலுமிருக்கின்றன. கிராமங்களின் தூர அளவுப்படி பார்த்தால் வெகு சமீபத்திலேயே இருக்கின்றன. ஆனால் அக்கிராம வாசிகளின் கூட்டுறவு, சகவாசம், ஒற்றுமை, உதவி முதலியவைகளைக் கவனித்தால் அவைகள் வெகுதூரத்திலிருக்கின்றன. கிராமங்கள் பெரிய நகரங்களின் அருகில் கொண்டுவரப்படாததால் கிராமங்கள் கல்வியிலும் செல்வத்திலும் முன்னேற்றமடைவது கூடாததாயிருக்கின்றன. ஓர் கிராமம் மிகவும் செழிப்படைந்திருக்கும்போது அதற்கு வெகு சமீபத்திலுள்ள மற்றோர் கிராமம் பஞ்சத்தால் வறட்டப்படுவது மிகவும் ஆச்சரியப்படத்தக்கது. இதற்குப் போக்குவரத்துச் சாதனங்களேற்படாததே காரணமாகக் கூறலாம். வெகுதூரத்திலிருக்கும் கிராமங்களையும் நக

ரங்களையும் வெகுசமீபத்தில் கொண்டுவந்து விடுவது சரியானபாதைகளென்பது சாலப்பொருந்தும். இப்படி ஒழுங்கானபாதைகளமைக்கப்படாததாலேயே கிராமவாசிகளுக்குள் ஒற்றுமை, கூட்டுறவுகளின்றித் தனி நிலைப்பட்டு க்ஷீணதிசையடைகின்றனர்.

வேளாண்மை நிலைமையை அறிய ஏற்படுத்திய ராயல்கமிஷன் கிராமங்களுக்கு நல்ல போக்குவரத்துக்கான பாதைகளேற்படுவது மிகவும் அத்யாவசியமென்பதை அழுத்தமாய்க் கூறியிருக்கிறது. அப்படியிருந்தும் அவைகளின்மீது கவனஞ்செலுத்துவது மிகக் கொஞ்சமே. புகைவண்டிப் போக்குவரத்து, கிராமங்களுக்கு அவ்வளவு அனுகூலமாயிருப்பதாகக் கூறமுடியாது. புகைவண்டிப்போக்குவரத்தை நோக்கினாலும் வருந்தத்தக்கதாகவேயிருக்கிறது. தென்னிந்தியாவில் அநேகமாய் ஒரே ஒரு இருப்புப்பாதையே போடப்பட்டிருக்கிறது. ஒரு வண்டி புறப்படப்போகும்போது எதிர்நோக்கி வரும் வண்டி அதேபாதையில் வந்து மற்றவண்டிபோவதற்குப் பக்கத்து ஸ்டேஷனில் தங்கிநிற்கநேரிடுகிறது. இதனால் எவ்வளவோ நேரம்வீணாகி வியாபாரம் போக்குவரத்து முதலியவைகளின் விரைவு குறைந்துபோவதினாலுண்டாகும் நஷ்டத்தைக் கண்ணோக்குவார் யாருமுளரா? ஆகவே ஒரேமார்க்கத்தில் இரண்டு வண்டிகள் வரவும் போகவும் இரண்டு இருப்புப்பாதைகள் அமைப்பது மிகவும் அத்யாவசியமாயிருக்கிறது.

மழைகாலங்களில் ஒரு கிராமத்திலிருந்து மற்றோர் கிராமத்திற்கு மாட்டுவண்டிகளில் பிரயாணஞ் செய்வது கூடாதகாரியம். வண்டிகளின் சக்கரங்கள் ஒருகெஜ தூரம் சேற்றில் பதிந்துகொள்ளுவதன்றி சிலசமயம் வண்டியே சாய்ந்துவிடுகிறது. இப்படியே வியாபார வண்டிகளும் அளவிலாக் கஷ்டங்களடைந்து வருவது கண்கூடு. அப்படி வண்டிகளில் ஏற்றிச்செல்லாது தனித்தனியாகச் சாமான்களைச் சுமந்துசென்று சந்தைகளிலோ மற்றநகரங்களிலோ விற்றுப் பிழைப்பதில் கஷ்டப்பட்டுச் சுமந்து சென்றதே பயனன்றி வேறு பயனைக் காண்பதரிது. ஆகவே சரியான உறுதியான பாதைகள் ஆங்காங்கமையாததால் கிராமமுன்னேற்றம் தடைப்பட்டு விடுவதை எவரும் ஒப்புக்கொள்ளுவார்கள். மண்ணை மாத்திரம் போட்டமைத்த பாதைகளால் யாதொருபயனுமில்லை. அவைகள் தற்சமயத்திற்கு உபயோகமாயினும் மழைகாலங்களில் மிருகங்களுக்கும்,



இயந்திரவண்டிகளுக்கும் மிகுந்த பிரயாசையையும், கஷ்டத்தையும், விளைவிக்கின்றன. ஆகவே கல்களையும் மண்ணையும் சேர்த்து உறுதியாக இடித்துப் பாதைகளுண்டாக்கி அவைகளின்மேல் தாரை Tar)க்காய்ச்சியூற்றி அதன்மீது கல் தூளை இறைத்து விட்டால் பழுதில்லாமல் எக்காலத்திற்கும் உதவக்கூடிய ரப்பர்ப்பாதைகள் போலாகிவிடுகின்றன.

(சுகாதாரம், வீட்டுக்கைத்தொழில் முதலியவை)

(தொடரும்.)

திரு. K. G. கிருஷ்ணன். B. Sc., (Host.)

---

# இடைக் காடர்.

## திரு. தி. அ. முத்துசாமிக்கோனார்

இவர், கடைச்சங்கப்புலவரில் சிறப்புடையவர் "கடுகைத்துளைத் தேழ் கடலைப்புகட்டிக், குறுகத்தறித்த குறள்" எனத் திருக்குறளைப் பற்றி மிகு சுருக்கமாகச் செய்யுள் கூறிய ஆசிரியர். இவர் பார்ப்பனகுலத்தினரான புலவர் கபில தேவநாயனாருக்குத் தோழர் என்பதைப் "பின்னாளில் கபிலன் றோழன் பெயரிடைக்காடனென்போன், இன்னியல் வாணர்க்கெல்லா மிதவியோன் கவியான் மிக்கோன்" எனப் பழய திருவிளையாடலிற் புகழ்ந்து கூறப்பட்டுள்ளவர். முல்லைத்திணையை மிக அழகு பெறப்பாடியிருக்கிறார். தமிழ்நாட்டு ஆயர்குலமணி. குலேசபாண்டியன் ஆட்சிபுரிந்து வந்தான். அவன் இலக்கணமும் இலக்கியமும் வரம்புகண்டவன் பல வகையான பெரும் நூல்களெல்லாம் முடிவு கண்டவன். அதனால் தமிழ்ச் சங்கப்பலகை, இடங் கொடுத்தது. இதனால் பெருங்கேள்வியாளன் எனத்தெரிந்து, இவ் அரசனைக்காணலாம் என மனத்து நினைந்து அழகிய ஒருகவி பாடிக்கொண்டு இடைக்காடர் பாண்டிய வேந்தன் அவைக்களத்து எய்திக்கவிதையை வாசித்தார். சொற்சுவை பொருட்சுவை கண்டு அருந்தும் திறமை மிக்கோனான அரசன், இதனைக் கேட்டுத் தலையசைத்தல், முகமலர்ச்சி காட்டல் முதலிய ஒன்றும் செய்யாது பொறாமையால் வாளா இருந்தனன். இதனால் நன்காய்ந்த அப்புலவர் நாணங்கொண்டு வெட்கி ஒன்றும் தோற்றாதவராய்த் தலைசாய்ந்து குனிந்து நிலத்தைப் பார்த்தபடி இறைவன்

ஆலயத்துட் புகுந்தனர். திருமுன் விழுந்து பணிந்து, தமிழறியும் பெருமானே, அடைந்தோர்களுக்கு நல்ல நவநிதியே, திருவாலவாயுடைய நாயகனே, மீனாக்ஷிசுந்தரேசப் பெருமானே, என் அப்பா, இந்த அரசன் தமிழறிந்தவனென்று கவியெழுதி வாசித்தேனையா, கல்மரமான அம்மன்னனைப் பொருளைப்போற் செம்மாந்து இருந்தானே அன்றி சிறிது முகமலர்ச்சியுங் காட்டவில்லையே. நிறைந்துள்ள அழுக்காற்றினால் அவமதித்திருந்தனன். அவ்வாறு அவமதித்தது என்னை, நான் கூறிய பாடலின் உட்பொருள் உமது இடப்பால் மேவும்எனது அன்னையாகிய உமாதேவியே ஆதலால் உங்களைத்தான் அழுக்காற்றால் அவமதித்தான் எனப் பலவாறு தோத்திரம் புரிந்து புலம்பி வெளியே புறப்பட்டார். சொக்கநாயகன் அங்கயற்கண்ணியோடும் நடுக்கமுற்றுத் திடுக்கிட்டு நொந்து சென்ற இடைக்காடர் முன்னடக்க அன்புக்கெளியோனை சொக்கலிங்கப் பெருமான் தன் இலிங்கத்திருவுருவை மறைத்து இடைக்காடர் பின்னே நடந்தனர். தன் ஆலயத்துக்கு வடக்கே, வைகையாற்றின் தென் கரையில் ஒரு கோயில் கண்டு அங்கு அமர்ந்தருளினர். தமிழ்ச் சங்கத் தெய்வப் புலவர்களும் அங்கே அமர்ந்து வீற்றிருந்தருளினர். நிற்க.

அன்று விடியற்காலை உத்தம அடியார் திருப்பள்ளி எழுச்சி காணுதற்கு ஆலயத்துள் புகுந்தனர். அங்குச் சொக்கலிங்கமூர்த்தி காணப்படவில்லை. எல்லோரும் மன நடுக்குற்று, இவ்விசயத்தை வேந்தன்பால் அறிவிப்போமெனக் கூட்டமாக அரசன் பாலெய்தி அவனை வணங்கி, அரசே! ஒருநாளும் அறியாத அதிசயத்தைக் கூறுதற்கு நடுக்கமுறுகின்றது அண்ணலே, ஆலயத்தில் சிவலிங்கப்பெருமானில்லை. கோயிலும் நகரும் பொலிவு இழந்து காணப்படுகிறது என்று நடுங்கி முறையிட்டார்கள். இச்சொல் செவியிற் புகுந்தவுடன் அரசன் திடுக்கிட்டு அடியற்ற பனைமரம் போல் தரையில் விழுந்து மூர்ச்சைகொண்டனன். சிறிது பொழுதகலவே, ஒடுங்கிய உயிரும் உணர்வும் சிறிது இயங்க எழுந்து அஞ்சலியஸ்தனாய் அழுது இரண்டு விழிகளினும் கண்ணீர் பெருகிவழிய அழுது அடியேன் என்னபிழை செய்தேன். அண்ணால், அண்ணால் என்னபிழை செய்தேன். எங்குப்போய் ஒளித்தாயப்பா என ஓலமிட்டனன். அப்பொழுது சிலர் ஓடிவந்து மன்னா ஒரு அதிசயங் கண்டோம். நமது சொக்கலிங்கப்பெருமானும் அங்கயற்கண்ணித் தேவியாரும் வைகை நதியின் தென்கரையில் எழுந்தருளி இருக்கக்கண்டோம் என்றார்கள். இம்மாற்றங் கேட்டவுடன் அரசன் அச்சத்திலாழ்ந்து வைகையை நடந்து கடந்து தென்கரையில் வீற்றிருந்தருளும் கருணாநிதி அம்மையோடும் எழுந்தருளி இருக்கக்கண்டான். தரையில் விழுந்து பணிந்து இருகண்களிலும் ஆநந்த நீர் வடியப்பணிந்து தேகம் சிலிர்க்க நாக்குளறத் தடுமாறி, ஐயா! என் குலதெய்வமே வேதமும் காண்பரிய திருப்பாதம் நோவ அன்னையாரும் தேவரீரும் இங்கு எழுந்தருளக் காரணம் என்னை? அடியேன் பிழைத்தேனா அல்லது என் பரிசனங்கள், என் பகைவர், கள்வர், மற்றை உயிர்கள் முதலியவற்றால் ஏதேனும் இடையூறு நேர்ந்ததா? இல்லறத்தார், துறவறத்தார் பெரியோர்கள் ஒழுக்கங்குன்றினார்களா? முக்கண்ணக்கா! தீனதயாளா எனப் பலவாறு துதித்தனன். அப்பொழுது ஆகாயத்திருந்து "அன்பனே உன் தோத்திரத்துக்கு மகிழ்ந்தனம். எனக்கு உன்னைப்போற் பத்தர்களில்லை. இந்தத்தலமும் எனக்குவிருப்புடைத்தல் ஆதும். உன்னிடத்து எனக்கு வருத்தமில்லை, ஆனால் இடைக்காடன் கூறிய கவிதை, சொல்லிலும் பொருளிலும் குற்றமற்றிருப்பதை ஆராயாமல் உன்னுடைய மதச்செருக்கால் அதை அவமதித்தாய். பொறாமையுடையவன் தன்னுடைய துன்பத்துக்குத்தானே காரணனாகின்றான். பொறாமை யாகிய துர்க்குணம் மனிதனுக்கு இயல்பாகும் அது தோன்றும் பொழுதே நல்லறிவாகிய கருவியால் அதைக் களைந்து விடல் வேண்டும் எனல் நீ அறிந்திலாயோ? சிறந்த கவிதையைக் காரணமின்றி உன் பொறாமை காரணமாக அற்பர்களைப்போல அவமதித்தாய். அவ்விடைக்காடன் கல்வியில் மாத்திரமன்று, மிகுந்த அன்புள்ளவன். மனம் நொந்து எம்மிடத்து வந்து முறையிட்டனன். அதனால் எமக்கும் இடப்பால் நீங்காத மாதுக்கும் தோன்றிய வருத்தம் சொல்லத்தக்கதல்ல. ஆதலின் அங்கு நின்றும் பெயர்ந்து இங்குற்றனம்" என ஆகாய வாக்கு எழுந்து செவியிற் புகுதவே அரசன் சோர்ந்து அப்படியே தரையில் விழுந்தனன். பின்னர் எழுந்து அண்ணலே எனது அறியாமையாலே செய்தனன். என் பரமபிதாவே! பொறுத்தருளல் வேண்டுமெனப் பலவாறு துதித்தனன். பிழை பொறுக்கும் ஆதிமுதல்வன் கருணைகொண்டு, மன்னவா! இனிய புலவர்களோடும் இடைக்காடனோடும் வருகின்றனம் செல்வாயாக என விடையீந்தனர். நின்ற தலத்துக்கு "வடதிருவாலவாய்" எனப் பெயராயிற்று. இதனைக்கண்ட அன்பர் கூட்டங்கள் ஆடினார்கள் பாடினார்கள். சோமசுந்தரக்கடவுளுடன் இடைக்காடனும் சங்கப்புலவரும் திருக்கோயிலை அடைந்தனர்.

மணிமுடிவேந்தனாகிய குலேசபாண்டியன் இடைக்காடரைக் கண்டு தன் குற்றத்தைக்கூறிப் போற்றிசெய்து வணங்கினான்.

முறைப்படி வாழை கமுகு மேற்கட்டு தீபம் நிறைகுடம் முதலியவற்றாலலங்கரித்த அரசமாளிகைக்கு இடைக்காடர் கபிலர் முதலிய சங்கப்புலவர்களைப் பரிவாரங்கள் சூழ அன்போடு அழைத்துச் சென்றனன். முன்னே இடைக்காடர் இயற்றியந்த தமிழ்க் கவியைப் பட்டத்து யானைமேலேற்றி வீதி வலம் செய்து பொன்னாலான அழகிய தன் அரண்மனைக்குக் கொண்டு வந்தனர். சங்கப்புலவர்கள் சூழ ஆடை மலர்மாலை சந்தனம் முதலியவற்றால் அலங்கரித்துப் பொற்பீடத்து இடைக்காடனாரை ஏற்றிச் சங்கப்புலவர்களையும் ஆசனங்களில் அமர்வித்துச் சிங்கங்களால் சுமந்துள்ள பொற்பீடத்து மீது அழகிய வெள்ளை ஆடை, வெண்மை மலர், வெள்ளிய ஆபரணங்கள் அணிந்து, மங்கள வாத்தியங்கள் முழங்க வேதியர் ஆசிகூறப் பெண்கள் பல்லாண்டுகூற அரசனிருந்து இடைக்காடனார் தமிழ்க்கவிதை கூற மகிழ்ச்சியோடு கேட்டு மகிழ்ந்தனன். பின்பு அறிவான் முதிர்ந்த இடைக்காடனாருக்கும் மற்றைச்சங்கப் புலவருக்கும் ஆரம், ஆடை, நிதிக்குவை யானை குதிரை விளைநிலம் முதலியன நிரம்பக்கொடுத்தனன். பின்னர் அவர்கள் பின்னே ஏழடி நடந்துசென்று நின்று அரசன் கூறுகின்றான்.

புண்ணியப் புலவீர்காள்,

எளியேன் இடைக்காடனார்க்குப் பண்ணிய குற்றங்களையெல்லாம் பொறுத்தருளல் வேண்டுமென்று வேண்டித்தாழ்ந்தனன். நுண்ணிய ஞானவான்களாகிய புலவர்களெல்லோரும் அரசே, இப்பொழுது கூறிய குளிர்ந்த இனிய வாக்காகிய அமுதத்தால், எங்களுக்கு உண்டாயிருந்த கோபத்தீ தணிந்தது. இன்னமும் சொக்கநாதனருளால் அளவிடற்கரிய பாக்கியங்கள் உனக்குப் பெருகி பெருவாழ்வு பெறுவாயென வாழ்த்திப் புலவர்கள் சென்றார்கள்.

---

"புண்ணியப்புலவீர் யானிப் போழ்திடைக்
காடனார்க்குப்
பண்ணிய குற்றமெல்லாம் பொறுக்கெனப்
பரவித்தாழ்ந்தான்
நுண்ணிய கேள்வியோரு மன்ன நீ நுவன்ற
சொல்லாந்



தண்ணிய வமுதாலெங்கள் கோபத்தீ
தணிந்ததென்னா,"
"இன்னமு மாலவா யெம் பிறையவன்
கருணை நோக்கால்
மன்னனும் புகழ்மைகுன்றாப் பாக்கிய
முனக்குண்டாக
என்ன நல்லாக்கங் கூறியேகினர்"

---

இந்த இடைக்காடர் பாடியன நற்றிணையில் (3) பாடல்கள். குறுந்தொகையில் (1) அகத்தில் (5) புறத்தில் (1) திருவள்ளுவர் மாலையில் (1) ஆகப்பதினொரு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

---

இக்கதை பழைய திருவிளையாடல் என்னும் திருவாலவாயுடையார் திருவிளையாடல், (20) பரஞ்சோதிமுனிவர்- திருவிளையாடல் (டுக) படலங்களில் கண்டது.

விவாகமாகாதபிராய நண்பனே, உந்தன் வாழ்க்கையில் நீ தனிமையாய் வாழும்போதே சுத்தம் ஊக்கம் தைரியம், நட்பு, ஈவு, இரக்கம், தயை, தாட்சணியம், பொறுமை, சிக்கனம், சிக்கனத்தில்சிறப்பு, ஆகியஉயர்ந்த நற்குணங்களோடு நடக்கப் பழகிக்கொள். இவ்விதம் பழகிய பழக்கம் நீ ஒரு துணைவியைக் கொண்டு அவளுடன் இல்லறம் நடத்தி வாழவும் பாரத்தைச் சுமக்கவும் உற்ற உயிர்த்துணையாகும்.

மா. ஷண்முகம்.

## 1931-௵ மார்ச்சுமீ 24உ-யில்
## மன்னார்குடியில் கூடிய
## 4-வது ஆண்டு யாதவகுல மகாசங்கத்தில் திருவாளர்
## T. S. வேணுநாதக்கோன், F. C. I., M. R. A. S.
## அவர்கள் அவைத்தலைமை வகித்துச் செய்த
# விரிவுரை.

(முன் 240-வது பக்கம் தொடர்ச்சி.)

வரவேற்புக் கழகத் தலைவரவர்களே, கனவான்களே,

ஏழை யாதவ மாணவர்களுக்கு நாம் நம் சங்கங்களின் மூலமாக உபகாரச்சம்பளம் கொடுத்து உதவி செய்ய வேண்டும். இத்துறையில் உங்கள் சங்கம் பெரு வேலை செய்யலாம். இதுவே உங்கள் முதற்பெருங்கடமை.

இக்காலத்தில் உயர்தரப் படிப்புப் படித்தவர்க்கெல்லாம் உத்தியோகம் கிடைப்பது அருமைதான். ஏனெனில், 450 இலட்சம் மக்கள் வாழும் சென்னை இராஜதானியில் மாதம் 5,000 ரூபாய் சம்பளமளிக்கும் உத்தியோகத்திலிருந்து மாதம் 10 ரூபாய் வருமானமளிக்கும் உத்தியோகம் வரையில் உள்ள உத்தியோகங்கள் மொத்தத்தில் இரண்டு இலட்சங்களேயாகும். ஆகையால், 225 பேரில் ஒருவருக்குத்தான் உத்தியோகம் கிடைக்கும். நாம் நமது பழங் கொள்கைப்படி நமது தொழிலிலும் உழவுத் தொழிலிலும் ஈடுபட்டுப் படிப்பைக் கவனிக்காமல் இருந்து விட்டபடியாலும், மற்றச் சமூகத்தினர் தமக்குத் தனியாக வேறு தொழில் இல்லாமையாலும், பிச்சை புகுந்தேனும் கல்வியைக் கற்று அரசாங்க உத்தியோகங்களில் அமர்ந்து விட்டார்கள். இரண்டு இலட்சம் உத்தியோகஸ்தர்களில் நம்மவர்கள் சிலரே யாவர். இதுபற்றிப் பேசும் பொருட்டு நமது வாலிப சங்கம் தனக்குப் பேட்டி தரவேண்டுமென்று நம் கவர்னர் பெருமானுக்கு எழுதியபோது, அவர் நம்மைப் பார்ப்பனர் அல்லாதாருடன் சேர்த்துவிட்டதாகவும், ஆகையால், அவர்களுடன் போட்டிபோட்டு நாம் உத்தியோகம் பெற



வேண்டும் எனவும் தெரிவித்துவிட்டார். ஆகையினால், படிப்பதனால் மாத்திரம் நமக்கு உத்தியோகம் கிடைக்குமெனக் கூற நான் முன் வரவில்லை. ஆனால், எத்தொழிலைச் செய்தாலும், படித்தவன் படிக்காதவனைக் காட்டிலும் மிகவும் சிறப்பாகச் செய்வான் என்பதை உங்களுக்குத் தெரிவிக்க வேண்டுவதில்லை.

## நமது தொழில்.

நான் முன் கூறியபடி நம் முன்னோர் முன்னாளில் பசுக்காத்தலிலும் உழவிலும் ஈடுபட்டிருந்தனர். ஆனால், பழைய காலத்தில் போற்றப்பட்டு வந்த பசுக்காத்தல் இந்நாளில் நம்மவர்களிடையில் பசுக்கொலையாக மாறியிருத்தல் வருந்தத் தக்கதே. பசுக்களினால் தம் வாழ்க்கை நடத்தும் நம்மவர் பசுக்களுக்குப் போதுமான தீனி போடுவதில்லை. மிகுதியாகப் பாலைக்கறந்து விலைப்படுத்த வேண்டும் என்று கருதி, அப்பேராசையால் சிலர் இளங்கன்றுகளுக்குக் கடவுள் அவற்றின் தாய்மடியில் அமைத்து வைத்த பாலை அவை பருகி வளர விடாமல், சொட்டக் கறந்து விட்டு, அக்கன்றுகளை யமனுலகுக்கு அனுப்பி விடுகின்றனர். வாயில்லாப் பிராணிகளை இவ்வாறு வதைத்தால், நம் வாழ்க்கையைக் கடவுள் எவ்வாறு சீர்பெறச் செய்வார்? கொடுமை! கொடுமை!! ஆதலின், மிகவும் உயரிய நம் தொழிலானது இக்காலத்தில் பெரும்பாவத் தொழிலாக மாறிவிட்டது. ‘கோவலர் வாழ்க்கையோர் கொடும்பா டில்லை,’ என்ற இளங் கோவடிகளின் வாக்கை நம்மவர் அவலமாக்குகின்றனர் அன்றோ?

நமது நாடு உழவுத் தொழிலிற் சிறந்தது, உழவுக்குங் காளை மாடுகள் இன்றியமையாதவை. எனினும், நாம் கன்றுகளுக்குச் செய்யும் கொடுமையால், இந்நாளில் நமக்கு உழவு செய்யப் போதுமான காளை மாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை. 450 இலட்சம் குடிமக்கள் வாழும் இவ்விராஜதானியில் 20 இலட்சம் கால் நடைகளே இருக்கின்றன. அதனால், இருபது குடிமக்களுக்கு ஒரு கால் நடை வீதம் கணக்கு ஏற்படுகிறது. அந்த ஒன்றும் பசுவோ, எருமையோ, எருதோ, கடாவோ, கன்றோ, தெரியாது. ஆகவே, பால் தருவதில் 100 பேருக்கு ஒரு பசுவோ, எருமையோ இருக்கிறது என்று சொல்லலாம். இவ்விதமிருந்தால், பால், தயிர், மோர்,

நெய் ஆகிய இவற்றை மிகுதியாக உபயோகிக்கும் மக்களுக்கு எப்படிப் போதும். இதை நீங்கள் பெரிதும் கவனிக்க வேண்டும். மகாத்துமா காந்தியடிகளும், இர்வின் பிரபுவும் சேர்ந்து செய்த உடன்படிக்கையின்படி இன்னம் சில மாதங்களுக்குள் இந்தியாவில் பல புதிய மாறுதல்கள் ஏற்படப் போகின்றன. அவற்றால், கால் நடை, உழவு, கைத்தொழில் இவற்றின் விருத்தி முக்கியமாகக் கவனிக்கப்படும். அதற்குள் நாம் நம் நடைகளை விருத்தி செய்வதில் அடிகோலிக்கொண்டால், இந்திய நாட்டுப் பல சமூகத்தவர் படையில் முன்னணியில் நிற்போம் என்பதில் ஐயம் இல்லை.

அமெரிக்காவிலும், ஸ்விட்ஸர் லண்டிலும் பால் வியாபாரத்தால் மக்கள் அடையும் இலாபத்தையும், இங்குள்ள நம்மவர் அவ்வியாபாரத்தால் அடையும் இலாபத்தையும், ஒப்பிட்டுப் பார்த்ததில் நம்மவர் அடையும் இலாபம் எவ்வளவோ குறைவாக இருக்கின்றது.

நாம் நல்ல பசுக்களையும் எருதுகளையும் வாவழைக்க வேண்டும். கோதுமைத் தவிடும் பருத்திக் கொட்டையும் அவற்றிற்குத் தீனியாகப் போட வேண்டும். சாஸ்திர முறையில் அவற்றைப் பாதுகாக்க வேண்டும். இதற்குப் பெருமுயற்சி வேண்டுவது இல்லை. இப்படிச் செய்தால் நம் தொழில் மிகவும் பயன் தருவதாகும்.

மக்களுக்கு வைசூரி வருவதைத் தடுக்க அரசாங்கத்தார் அம்மை குத்துவதைக் கையாண்டு வருகின்றனர்; அதைக் கட்டாயப் படுத்தியும் இருக்கின்றனர்; கால் நடைகளுக்கு வரும் வெக்கை நோயை நீக்கவும் அவற்றிற்கு அம்மை குத்துகின்றனர். இப்போது குத்தும் அம்மையால், கால் நடைகளுக்கு எப்போதுமே வெக்கை வராதென்பது கண்டு பிடிக்கப் பட்டிருக்கின்றது. அப்படி இருந்தும், நம்மவர் பழைய கொள்கையினாலும் அறியாமையினாலும் அரசாங்கத்தார் இலவசமாகச் செய்யும் நன்மையையும் உபயோகப் படுத்திக்கொள்ளாமல், தங்கள் கால் நடைகளை இழந்து பரிதவிக்கின்றனர். இனிமேல் நாம் இம்மாதிரி நடத்தல் கூடாதென உறுதி செய்து கொள்ளும்படி நான் உங்களை மிகவும் மன்றாடி வேண்டிக் கொள்ளுகிறேன். இது நிற்க.

சில ஜில்லாக்களில் கால் நடைகளுக்கு அம்மை குத்திக்கொள்வது மிகவும் ஓங்கி வருகின்றது. சென்ற நவம்பர், டிசம்பர் மாதங்களில் சென்னையில் வெக்கை நோயால் பல ஆயிரக் கணக்கான கால்



நடைகள் இறந்தன. நம்மவரில் பலர் இதனால் வறுமையுற்று வாடுகின்றனர். நமது வாலிப சங்கம் ஜனவரி மாதம் 17-ஆம் தேதி "பொங்கல்" திருநாளைப் பப்ளிக் ஒர்க்ஸ் மந்திரியாராகிய திருமிகு. P. T. இராஜன் அவர்கள் தலைமையின் கீழ்க் கொண்டாடியது. அவ்வமயம், கால் நடைகளுக்கு அம்மை குத்துவதற்காகப் போதுமான 'சீரம்' என்னும் மருந்து கிடைக்கவில்லையென யான் எடுத்துக் கூறினேன். அதற்குக் கனம் மந்திரியாரவர்கள், இப்போது முக்தேஸ்வர் என்னும் ஊரிலிருந்து அம்மருந்து வருவதாகவும், ஆகையால், அது போதுமான அளவு கிடைக்கவில்லையெனவும், சென்னையிலேயே அதைச் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகவும் தெரிவித்திருக்கிறார். ஆகையால், இவ்விஷயத்தை உடனே நடைமுறைக்குக் கொண்டு வந்து, அம்மருந்து செய்யும் சாலையை உடனே திறந்து விடவேண்டுமென நாம் இம்மகாநாட்டுத் தீர்மானத்தால் தெரிவித்துக் கொள்ளவேண்டும்.

## நகர சபை, சட்ட சபைத் தேர்தல்.

ஒரு சமூகத்தார் நகர சபை அங்கத்தினராகவும் சட்ட சபை அங்கத்தினராகவும் இருப்பதால், அச்சமூகத்திற்கு ஏற்படும் அளவிறந்த நன்மைகளைப் பற்றி நான் இந்நாளில் விவரமாகத் தெரிவிக்கவேண்டிய அவசியம் இல்லை. அவ்விதமிருந்தும், நம்மவர் அறியாமையினாலும் முயற்சியின்மையினாலும் இச்சபைகளில் அங்கத்தினராக இயலவில்லை. சட்ட சபைக்கு 'நாமினேஷன்' தரவேண்டுமெனப் பல ஆண்டுகளாக நமது சங்கத்தின் மூலமாகவும், மகாநாடுகளின் தீர்மானங்களின் மூலமாகவும் நாம் அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொண்டும், இதுகாறும் நன்மையொன்றும் விளையவில்லை. இந்நாளில் நகர சபைகளிலும், லோகல் போர்டுகளிலும் தாழ்த்தப் பட்ட வகுப்புக்கும் பிற்போக்கடைந்த வகுப்புக்குமுரிய மக்களுக்காகத் தனித்தொகுதி ஒதுக்கி வைக்கப்பட வேண்டுமென அரசாங்கத்தாரால் தீர்மானிக்கப்பட்டு, அங்ஙனமே ஒதுக்கிவைக்கப் பட்டும் வருகின்றது. ஆனால் நமக்காக அம்முறை செய்வார் எவருமில்லை; அங்ஙனம் செய்தல் வேண்டுமெனும் எண்ணமும் ஒருவருக்குமில்லை. சிறிது காலமாவது நமக்கு ஒரு தொகுதி அவ்வாறு ஒதுக்கி வைக்கப்பட்டு, நம்மவர்கள் இச்சபைகளுக்குச் சென்றாலன்றி, நாம் உலகியலில் முன்னேற்றமடைய வழியில்லை. ஆகையால், நாம் இது சம்பந்தமாக ஒரு தீர்மானம் செய்வதுடன், நாமும் தேர்தலினால் முன்னுக்குவர முயலவேண்டும்.

## முடிவுரை.

குலப் பெருமக்களே, நம் சமூகத்தவர் இன்னஞ் சில சீர்திருத்தங்களைச் செய்துகொள்ளவேண்டும்; குடியைக் கெடுத்துக் குற்றமே விளைக்கும் குடி முதலிய தீய பழக்கங்களை அடியோடு விட்டு ஒழிக்கவேண்டும். கலப்பு மணமுறை விரும்புவோர் அதைக் கைக்கொண்டு சீர்திருத்த வேண்டும். நம்நாட்டின் முன்னேற்றத்தைக் கருதி, நம்மவர் பலரும் நம்நாட்டில் செய்யப்பட்ட பொருள்களையே கூடுமான வரையில் வாங்கிப் பயன்படுத்த வேண்டும். கைத்தொழில்களைக் கிளர்ந்தோங்கச் செய்யவேண்டும்.

இப்பொழுது தென்னிந்தியாவில் நம் சமூக முன்னேற்றத்தைக் கருதி இரண்டு மாதச்சஞ்சிகைகள் வெளிவருகின்றன. அவற்றுள் ஒன்று 'யாதவமித்திரன்' என்பது. அது மதுரையில் பிரபல புத்தக வியாபாரியும், நம் சமூகமாணவரின் இலவசச் சம்பளத்துக்கெனச் சென்னை ஸ்ரீ யதுகுல மகா சங்கத்துக்கு 500 ரூபாய் நன்கொடையளித்து இனி ஆண்டு தோறும் அவ்வாறே ஐந்நூறு ரூபாய் அளிப்பதாக ஒப்புக்கொண்டுள்ள நம் குலப்பெருவள்ளலுமான திருவாளர் இ. மா. கோபால கிருஷ்ணக் கோன் அவர்கள் பொருளுதவியால் நடைபெற்று வருகின்றது. அதன் ஆண்டுச் சந்தா ரூபாய் ஒன்றே. அது மதுரை அமெரிக்கன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திருவாளர் அ. கார்மேகக் கோனூர் அவர்களைத் தலைமைப் பதிப்பாசிரியராகவும், மற்றும் பல நம் குல அறிஞர்களை உதவிப் பதிப்பாசிரியர்களாகவும் கொண்டு நடை பெற்று வருகிறது. மற்றொன்று சென்னையிலுள்ள யாதவ இளைஞர் சங்கத்தின் ஆதரவில், யாதவ இளைஞன் என்னும் பொருள் கொண்ட 'யங் யாதவா' என்னும் பெயருடன் ஆங்கிலத்தில் நல்லறிஞர்கள் நம் சமூக முன்னேற்றத்தைக் கருதி எழுதும் சிறந்த கட்டுரைகளைக் கொண்டு விளங்குவது. அதற்கும் ஆண்டுச் சந்தா ரூபாய் ஒன்றே. சமூக முன்னேற்றத்தைக் கருதி உழைக்கும் இவ்விருமாதச் சஞ்சிகைகளுக்கும் நம்மவர் பல்லாயிரக்கணக்கில் சந்தாதாரர்களாகிப் பயன் பெற வேண்டுகிறேன்.

முடிவாக நம்குல முன்னேற்றங்கருதி யாதவ மகா நாடுகளைப் பலவிடங்களில் கூட்டியும், மற்றும் பல திருத்தொண்டுகள் புரிந்தும் உழைத்துவரும் சென்னைத் திருவாளர் M. அப்பாத்துரைப் பிள்ளையவர்களுக்கும், நம் குலப் பெருங்கொடையாளர் திருவாளர்



இ. மா. கோபால கிருஷ்ணக் கோன் அவர்களுக்கும், ஸ்ரீ யதுகுல மகா சங்கம் தொடங்கிய நாள் தொட்டு இந்நாள் வரையில் சூத்திரதாரியைப்போல் மறைந்து நின்று பெருஞ்செயல் பல புரிந்து இடையறாது உழைத்து வருபவரும், ஸ்ரீயதுகுல மகா சங்கக் காரியதரிசியும், எனது இன்னுயிர் நண்பருமாகிய திருவாளர் M. K. ஆராவமுது பிள்ளை எம். ஆர். ஏ. எஸ். அவர்களுக்கும் மற்றும் பல கொடையாளர்க்கும் அறிஞர் பெருமக்களுக்கும் நம் சமூகத்தவர் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அன்பர்களே, என்னை இம்மகாநாட்டில் தலைமை வகிக்கக் கேட்டுக் கொண்டமைக்காக மீண்டும் என் வந்தனத்தை உங்களுக்கு அளித்து, 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்று சொல்லி அமர்கின்றேன்.

'பொங்கும் மங்களம் எங்குந் தங்குக.'

## குசேலர்.

(151-ம் பக்கத் தொடர்ச்சி)

(திரு. வீராசாமி பிள்ளை)

காமக், குரோத, லோப, மோக, மத, மார்ச்சரிய மென்னும் அறுபகையை வென்று, கடல் வண்ணனின் கமலபதத் துணையை மறவாத மாண்புடையீர்! மனைவி மக்களிடம் கொண்ட ஆசாபாசத்தால் பிறரிடம் போய், யாசித்து, எம்மைக் காத்தலை யொழித்திருக்கும் அடிகளே! அடியாள் தேவரீர் குணம் செயல்களை ஒருவாறு உணர்ந்துள்ளேன். எனினும், துன்பமே குடிகொண்ட அடியேன் மனதிலுள்ள விஷயங்களைச் சிறிது செவி சாய்த்தருள வேண்டுகின்றேன். நமது சிறுவர் பசிப்பிணியாகிய பெருந் துன்பக் கடலில் ஆழ்ந்து சோற்றுக்கு வழியின்றி அழுங்குகின்றார்கள். அந்தோ! என் செய்வது? அலைக்கடலைக் கடந்துள்ள பெரியோர் இந்த தேகத்தை "அன்னமய கோசம்" என்பர் (சோற்றின் மயமாய பொதிக்கும்மை) அன்னமில்லாமல் உயிர் வாழ்தல் ஒண்ணாது என்பது தாங்கள் அறியாததல்ல; "உலகிலுள்ள உயிர்களெல்லாம் அகத்தால் மன மகிழ்ந்து வாழ்க" என்று வேதம் கூறும். அக்கூற்று மெய்யாகும்

படி மழலை பயிலும் நம் புல்வர்களை அருளுதல் தங்கள் கடமையாகும். இவ்வுலகில் வறுமையாளர் பாவிகளும் செல்வவான்கள் புண்ணியவான்களு மல்லவா? வறுமையின் கொடுமை தாங்கள் அறியாததல்லவே "கொடிது கொடிது வறுமை கொடிது அதனினும் கொடிது இளமையில் வறுமை" என்றபடி நம் சிறுவர்கள் உண்ண உடுக்க வழியின்றித் தவிக்கின்றனர். 'தாங்கள் யாரைப் போய் யாசிப்பேன் எவரிடம் குறை யிரப்பேன்" என்று மயங்க வேண்டாம். தாங்கள்

"யாதவர் குலத்துட்டோன்றி யிமையவர்க் கிடர்கள் செய்யும்
பாதகர் மடியவே பார்ப் பாரம தொருவப் பார்த்தன்
தூதனாய் ஐந்தூர்வேண்டிச் சூதனாய்த் தேருமூரும்
சிதரனைவாதி தேவனே டொருங்கு கந்தீர்" என்று அடியாள்

பலர் சொல்லக் கேள்வியுற்றிருக்கிறேன். ஆதலால், அப்பீதாம்பரதாரனை கோபால கிருஷ்ணனை அணுகி அப்பெருமானால் செல்வம் பெற்று, நம் சிறுவர்களின் வறுமை நோயை அகற்ற வேண்டும்; இளமையில் தங்களோடு ஒப்பக் கலைகளைப் பயின்ற அக் கார்மேக வண்ணல் தங்களைக்கண்ட வப்பொழுதே, எல்லா வளமும் நமக்கு அளிப்பான். "குற்றமற்றசெல்வமாகிய நண்பனொருவனைப் பெற்றிருந்தால் பெரிய திரவியக் குவியலைப் பெற்றது போலும்" என்று சொல்லுவர் பெரியோர். அம் மொழியும் பொய்யாகாது, கம்சன் முதலிய கொடிய துஷ்டர்களைக் கொன்று நன்னெறியில்ஒழுகும் நல்லோர்க்கு இன்பத்தை நல்கும் குணமுடைய அப் பெருமானின் சன்னிதியிற் சென்றாலே நமக்குப் போதுமான பொருள் கிடைக்கும். இல்லையேல் அவன் திருவடி சேவை ஒன்றே போதும் அதுவே முத்தியின்பத்தை நல்கும்.

கண்ணனைத் துளபமாலிகை நிறத்திற் கமலைவாழ்தர வருள்புரிந்த
மண்ணிய மணியைத் தினந்தினம் போற்று மாசறு தவத்தினருள்ளத்
தெண்ணிய வெண்ணியாங் களிப்பவனை யெய்தி நஞ்சிறுருயச் செல்வ
நண்ணிவா வென்னு நங்கை சொற்றிடலு நற்றவக் குசேல ஸ்ரீ துரைக்கும்"

மக்களுக்காக இரக்கமுற்று வாடும் பேதாய்! நான் சொல்வதைக் கேள். பூர்வ ஜென்மத்தில் நல்ல தருமத்தைச் செய்தவர் இப் பிறப்பில் சுக போகங்களை அனுபவிப்பார். அங்ஙனமில்லாதவர் கொடிய துன்பக்கடலில் அழுந்துவார்கள். இதற்காக என் மனம் வருந்துகின்றாய். உலகத்திற் பிறந்த உயிர்கள் எல்லாம் மிகவும் பெரிய எண்ணங்களைக் கொண்டு மனோராஜ்யமும் செய்வார்கள். அப்படி எண்ணியபடி எவ்வாறு முடியும்? எம்பெருமான் ஒருவனுக்கேயன்றி மற்றையோருக்கு முடியாது என்க. அவ்வாறு எண்ணியபடி முடியுமாயின், ஏழைகள், ஐஸ்வரியவான்கள் என்னும் வகுப்புண்டாகுமோ? உண்டாகா. முற்பவத்தில் செய்த நன்மை தீமை என்னும் இரு வினைக்குத் தக்கவாறு வறுமையையும், செல்வத்தையும் அச்சக்கராயுதனாகிய எம்பெருமான் அளித்துக் காப்பாற்றுகிறான்; உன் புதல்வரைக் காப்பாற்ற நீ பொருள்வேண்டுமென்கிறாய். உலகத்தில் பறந்து சஞ்சரிக்கும் பக்ஷிக் கூட்டங்களுக்கும் காட்டை விரும்பி அதில் வாழும் மிருகங்களுக்கும் இன்னும் உலகிலுள்ள சீவராசிகளுக்கும் காவலாகிய புதை பொருள் உண்டோ? அல்லாமல் வேறு வருமானங்கள் உண்டோ? எங்கேனும் சென்று யாசித்தலுண்டோ? அன்றி நாளைக்கு என்ன செய்யப் போகிறோமென்ற விசனமுண்டோ? ஒன்றினொன்று இடியுண்டு உயிர் பிழைத்ததுண்டோ? ஆகாரமில்லாமல் உயிர் நீங்குதலுண்டோ சொல் பேதாய்! கல்லுக்கு உள்ளேயிருக்கிற சிறிய தேரைக்கும், கருப்பையிலும் அண்டத்திலும் உள்ள உயிர்கட்கும் தக்கபடி உணவளித்துக் காக்கும் துழாய் மாலையணிந்த பெரியோன் ஆயர்குலக் கொழுந்துமான ஸ்ரீ கண்ணபிரான் உன் புதல்வர்களை மாத்திரம் காக்காமல் ஒழிவனோ; கைவிடமாட்டான். இது சத்தியம் நங்காய். நீ கொண்ட துன்பத்தை இப்போதே ஒழித்து விடுக. மறந்தும் இங்ஙனம் நினையாதே. கல்லிலும் முட்டையிலும் உணவில்லாமல் உயிர் வாழ்தல் இயல்பே என்று நீ நினைப்பாயாகில், அவை பூமியிற் பிறந்தவுடனே, மலம் நீர் கழிக்கின்றனவே, அவை உணவில்லாமல் மலம் நீர் எங்ஙனம் வெளிப்படுத்தும், பிரமனால் எழுதி வைத்த ஆயுள் நாளுள்ளவரைக்கும் அவரவர் கருமத்துக்குத் தக்கவாறு உணவு வழங்குவதால் உடம்பில் உயிர் வாழ்கின்றது. இல்லையேல் இல்லையாகும் என்று பெரியோர் கூறுவர்.

முத்துப்போன்ற முறுவலும் மயிலுங்கண்டு மருளும் மேனியுடைய பூம்பாவாய்! உன் புதல்வர் ஆயுள்நாளுள்ள வரைக்கும் வினைக்குத் தக்கபடி உணவு உண்டு. மதிமயக்கம் கொள்ளாதே. எது வந்த போதிலும் ஊழின் வலிமை என்று எண்ணுக. "ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று சூழினுந் தான்முந்துறும்" அன்றோ?

உண்மை ஞானுணர்ச்சியில்லாத மாந்தர் தாம் வளமுள்ள செல்வத்தைப் பெற்றிருக்கிறோம், கணக்கற்ற புத்திரப்பேறும், சுகானுபவமும் அமைந்துள்ளோம், இளமைப் பருவத்திலும் அழகிலும் சிறந்திருக்கின்றோம், நமக்கு நிகராவார் எவர்? என்று மனமகிழ்ச்சி கொள்வார்கள். மற்றுஞ் சிலர் உயிர்க்கொலை செய்தல் உண்ணும் உணவை மாறாட்டஞ் செய்தல், தம்மிடத்துச் சந்தேகமில்லாத நண்பரிடத்திலும் கொடிய வஞ்சமியற்றல், நல்லோர் மனம் வருந்தக் கூறல், பொய்யுரைத்தல், ஆலயங்களில் களவாடல் முதலிய பல தீச் செயல்களைச் செய்து நாள் கழிக்கின்றார்கள். ஏன் எனில் எல்லாம் பொருளுக்காகவன்றோ? இப்பொருளைப் பெற்ற மாந்தர்கள் குவியலாகப் பூமியிற் புதைத்தும் இருப்புப் பெட்டியிற் பூட்டி வைத்தும் மகிழ்ச்சியோடும் அச்சத்தோடும் காப்பாற்றிக் குற்றமுள்ள பணப்பேய் என்று பெயரையும் பெறுகின்றார்கள். இவர்கள் ஒரு சிறிய தருமத்தையும் செய்கிறதில்லை; கர்ப்பகத்தரு போன்ற வள்ளலே! என்று யாசகர் வந்து இரந்தபோதிலும் சிறிதும் இரக்கமன்றி எல்லைகடக்கத் துரத்தி மீளுவர்; சுற்றத்தையும் காப்பதில்லை, ஏன்? பொருள் செலவழிந்து விடுமாம்; ஆகையால் செல்வம் பெற்று மென்னபேறு பெற்றவராவர்?

இன்னும் இப் பொருளால் செங்கோல் வழுவிய கொடுங்கோன் மன்னரது கோபத்துக்கும், களவு செய்வார் கைக்கும், நெருப்புக்கும், பங்காளிகள் நெருக்கத்துக்கும் அச்சம்; ஆகையால், இப் பொருளைப் பெற்றவர் அச்சத்தைப் பெற்றவரேயாவார். பாழான இப் பொருள், தன்னுடைய அன்பரையும், நல்லொழுக்கமுடைய உத்தமரையும், தீயோர் என்று சொல்லச் செய்யும். கொலை பழி பாவங்கட்குச் சிறிதும் அஞ்சாமையை உண்டாக்கும். கற்புவாய்ந்த மாதரது கற்பை அஞ்சாமல் கெடுக்கும். இன்னும் பல துன்பங்களை உண்டாக்கும். பாவாய்! இன்னும் கேள் "கோடிப் பொன் தருகிறேன் இப்பொழுதே கொள்க; ஒரு நொடிக்குள் என் உறவினரிடம் ஒரு ஆறுதல் சொல்லி வருகிறேன்" என்று கெஞ்சி வருந்திச் சொன்ன போதிலும் தேடி வந்த எமதூதர் பாசத்தால் கட்டுதல் ஒழிந்து நீங்குவரோ? பேதாய்! பெருமை வாய்ந்த செல்வத்தின் பெருமையைக் கேட்டாயா? ஆசாபாசங்களையும் உண்டாக்கித் தெய்வ சிந்தையை நீக்கும். நித்திராபங்கம் உண்டாக்கும், பல பிறப்புக்கும் ஏதுவாகும். இதனால் அல்லவா இப்பாழும் பொருளுக்குப் புலவர்



கள் வெறுக்கை என்று பெயர் கூறுகின்றனர். கீழ்மக்கள் மதிக்கும்படியான இப் பொருள் நல்வினையால் வந்தபோது, அற்பமாகிய செருக்கைப் பெற்று, வாயுள்ளவர்கள் ஏழைகளைக் கண்டால் ஊமையாகவும், பொன்னாபரணம் பூட்டிய காதுள்ளவர்கள் செவிடராகவும் நன்றாய்ப் பார்க்கும் கண்ணுள்ளவர்கள் குருடராகவும் ஆகின்றனர்.

சூரியன் காலையில் உதித்து மாலையில் மறைவதுபோல உலகிற் பிறந்து இறக்கின்ற உமது கைவிட்டுப்போவே மென்பதற்குச் "செல்வம்" என்னும் பெயர் அழகாய் அமைந்திருக்கிறது. பெறுதற்கரிய பொருட்செல்வம் மிகப் பொல்லாதது. தேனிரம்பிய துழாய் மாலை யணிந்து, பூரணச்சந்திரன் போன்ற வதனமுடைய இலக்குமிப் பிராட்டியின் சிவந்த மலர்க் கரங்களால் மெல்லென வருடச் சிவந்து தன்னை எப்போதும் அன்புடன் பக்தி பண்ணும் அன்பர்களின் இருதயத்தே நித்திய வாசம் பண்ணும் எம்பெருமானது திருவடியைப் பெறுதலே பெருஞ் செல்வம் ஆகும். அவரவர் செய்த நல்வினைக்குத் தக்கவாறு பொருள் பெற்றால் தேவாலயங்கட்கீந்து, உண்மையுள்ள புராண நூல்களை விருப்பத்துடன் கேட்டு, இரப்போர்க்கு உவப்புடன் ஈந்து வருவாராயின் எமதண்டனைக்குத் தப்பி ஸ்ரீ வைகுந்தமாநகரில் வசிப்பார்கள். பெண்மணீ! உலகத்தார் பெண் மயக்கத்தில் விழுவதற்கு இப் பொருளே காரணமாகும். உன் வார்த்தைக்குச் சிறிதும் நான் மயங்கமேட்டேன். 'எனது பிள்ளைகள் வருந்துகின்றார்கள்" என்று பல முறை கூறி அழுகின்றாய். முற்பிறப்பில் புதல்வர்கள் எத்தனை பேர் முறை கொண்டாடினார்களோ? இன்னும் எத்தனை பேர் மதலை முறை பாராட்ட இருக்கின்றார்களோ? அத்தகைய புதல்வர்களைத் தமது புதல்வரென்று சொல்வது விவேகமல்லவே, இக் குழந்தைகளைப் பெறுங் காலத்திலும், அவை வளருங் காலத்திலும், நோய்வந்த காலத்திலும், பருவ காலத்திலும் துன்பம். எமதூதர் வந்து மதலையை உயிர் கவரும் காலத்தில் கணக்கில்லாத துன்பம். எக்காலத்தும் துன்பமானால் புதல்வரால் சுகமாவது எக்காலம்? பிறவிதோறும் தாய் தந்தையர் எத்துணையர்? பிறக்கிற ஊர், உறவினர், பெற்ற பேர்கள் இவை அநேகம். கர்மமோ கணக்கில்லை; கொண்ட சிறப்பும் அநேகம், இந்தப் பிள்ளைகள் யார்? நீ யார்? இஃதுரைக்கும் நான் யார்? இந்நிலையற்றவுலகில் காப்பாற்றுவதற்கு நான் திரு நெடுமால் அல்ல; நீயோ மைந்தராசையால் கட்டுண்டு மனம் வருந்துகிறாய். பெரி

யோர் பொருளிடத்தும் மைந்தரிடத்தும் ஆசை வைத்து மயக்கங் கொள்ளார். அது உலகத்திலுள்ள பைத்தியங் கொண்டவர்களுடைய செய்கையாகும். முற்பிறப்பின் நல்வினைப் பயனால் சுகமும் தீவினைப் பயனால் துன்பமும் வருகின்ற அனுபவங்கள் ஊழ்வினைப் பயன் என்பர். ஈதிப்படியிருக்க அற்பர்கள் தம் முயற்சியால் செல்வம் வருமென்று நினைப்பர். தாம் தாம் செய்தவினை தாமே யனுபவிப்பர். இம்மையில் தானதருமங்களை நன்கு புரிந்தவர் மறுமையில் தேவராய், அமிர்தமுண்டு, தேவபோகங்களை நுகர்வர். நுகர்ந்த பின்னர் பூமியில் மறுபடியும் தந்தையர் தாயார் என்று அபலரைத் தழுவிப் பிறப்பார்கள், நல்லூழால் தேவ போகத்தையும் மானுட போகத்தையும் பெறுவர், தீயூழால் பூமியில் வறுமை முதலிய துன்பங்களைப் பெறுவர். அறிவால் முதிர்ந்த பெரியோர் இத்தகைய சுகதுக்கங்களை விரும்பார். எம்பெருமானிடம் பக்திகொண்டு அருச்சனை இயற்றி யாதொன்றிலும் பற்றின்றி நிஷ்காமிய தவமியற்றிக் கார்மேக வண்ணனுடைய திருநாடடைந்து இன்பக் கடலில் மூழ்குவர்.

இளமைப் பருவத்தில் அழகுக்காக மனங்களித்து மகிழ்பவர் வாய் நீர் சள சள வென்று தடையில்லாமல் ஒழுகவிட்டுப் பற்கள் கழன்று உடம்பிளைத்து, மனந்தளர்ந்து, முதுகு கூனலுற்று, ஊணின்றியுலர்ந்து, முற்றி, ஒய்யார நடைபோய் "முதுகைப்பற்றிக் கைத்தலத்தால் முன்னொரு கோலூன்றி விதிர்விதிர்த்துக் கண் சுழன்று மேற்களை கொண்டிருமி இருமி, இவர் மூத்தவரொன்று இளையவர் ஏச" உண்டாகும் கிழத்தனத்தின் தன்மையை அறியாராக. இத்தேகம் எழுபத்தீராயிரம் நாடிகளும் மூன்றரைக் கோடி உரோமங்களும் 32 பற்களும், நகங்கள், வீரியம், கபம், பித்தம், நிணம், தோல், மாமிசம், மூளை இவைபோல்வன பிறவுஞ் சேர்ந்து ஆயிரம் பலம் எடையுடையதாய் உள்ளதென்று நூல்கள் சொல்லாநின்றன. மற்றும் இரண்டு மூக்கின் வழியாய் ஓடி இலங்கும் சுவாசங்கட்கு அளவேயில்லை யல்லவா?

(தொடரும்.)

# கோகிலகிருஷ்ணன்.

S. குருசாமி அய்யர், திருச்சி.

(190-ம் பக்கம் தொடர்ச்சி)

அங்கம் 2.] [காட்சி 3.

காலம்—மாலை.

இடம்—யாதவபுரியின் அருகாமையிலுள்ள திருநகரி என்ற ஒரு சிறு ஊர்.

[திருநகரியிலுள்ள யாதவ வாலிபர் சங்கத்தின் நிர்வாக ஸபையாரின் கூட்டம்]

## நிர்வாக சபையார்.

1. மகா-ள-ள-ஸ்ரீ வேணுகோபாலக் கோன் B, A,. B, L. (Retired Sub Judge) (அக்கிராஸனர்)
2. ,, ஐயம்பெருமாள் கோன் (காரியதரிசி)
3. ,, இராஜரத்தினக்கோன், மிராஸ்தார் (பொக்கிஷதார்)
4 ,, முத்துகிருஷ்ணக்கோன் B, A,. (Hons)
5 ,, நாராயணக்கோன் B, A, B, Sc.,

வேணு:—(எழுந்து நின்று) ஐயா, நமது திருநகரியிலுள்ள யாதவ யுவர் சங்கம் ஏற்பட்டு, சுமார் நாலைந்து ஆண்டுகள் ஆனபோதிலும் இப்போது இரண்டொரு முறைகளாகவே சிறப்பாயும், சிரத்தையாயும் நடைபெற்று வருகிறது. இதை நாம் நன்கு அறிவோம். இம்முறை நமது சங்கத்தில் ஐந்தாவது வருஷ பூர்த்திக் கொண்டாட்டம் நடத்த வேண்டுவதைப்பற்றி ஆலோசிக்கவே இன்று நாம் இங்கு கூடியிருக்கிறோம். ஆகவே, நமது காரியதரிசியான மிஸ்டர், ஐயம்பெருமாள் அவர்கள், அதற்கென நடத்த வேண்டியவற்றைக் கூறும் பக்ஷத்தில் ஒருவாறாக அவைகளைப்பற்றித் தீர்மானம் செய்யலாம். ஆனால் முதலில், இன்னும் எத்தனை நாட்களில் அதை நடத்தவேண்டும் என்று தெரிவித்தால், பிறகு அதைப்பற்றிய தீர்மானங்கள் எல்லாவற்றையும் ஆய்ந்தோய்ந்து செய்ய நலமாயிருக்கும்.

ஐய:—இந்த விஷயத்தை மாதக் கடைசியில் வைத்துக் கொண்டால் அனுகூலமா யிருக்குமென எனக்குப் புலப்படுகிறது. அதைப் பற்றித் தங்களுடைய அபிப்பிராயம் என்னவோ?

வேணு:—என்ன பிரமாதம்! என்ன மிஸ்டர் ராஜரெத்தினம், உங்களுடைய அபிப்பிராயம் என்ன?

இரா:—என்னைப்பற்றிய மட்டில் ஸரி. ஆனால் நமது முத்துகிருஷ்ணக்கோன் அவர்கள் சௌகர்யம் எப்படியோ? என்ன ஸார்! வாட் டு யூ திங்க்? ஆம் ஐ ரைட்? (What do you think? Am I right?)

நாரா:—ஓ! பரவாயில்லே! ஆயினும் நான்கூடக் காசிக்குப் புறப்பட்டுக் குடும்பத்துடன் போகலாமென உத்தேசித்தேன். அதற்கென்ன? அடுத்தமாதம் போய்க்கொள்கிறேன்.

வேணு:—பேஷ்! அதுதான் ஸரி. அந்த மாதிரி நமது சங்கத்திற்காகத் தனது ஸொந்தக்காரியத்தையும் சற்று ஒதுக்கிவைப்பது மகா சிலாக்கியமானதுதான். எல்லாருமே அவ்வாறு செய்ய மாட்டார்கள். அது மிகவும் அரிதுதான்.

ஐயம்:—அவரது குணம் தெரியாமலா நம்மவர் அவரை நிர்வாகஸபைக்குத் தேர்ந்தெடுத்தனர்?

நாரா:—அடாடா! நன்று நன்று! யாதவராகப் பிறந்த நமது முதற் கடமையன்றோ, நம்மவர்க்காகப் பாடுபடுவது?

முத்து:—ஐயா! தாங்கள் கூறுவது ஸரியல்ல. தங்களைப்போன்ற மனோபாவ முடையவர்கள் ஏராளமாயிருக்கலாம். ஆனால் அவ்விதமே அனுஷ்டித்துக் காட்டும் இயல்புடையவர் சிலரே.

இரா:—மெய்தான்! இல்லையேல் நம்மவர் எவ்வளவோ முன்னேற்றமடைந்திருப்பார்களே இவ்வளவு காலத்திற்குள்ளாக.

முத்து:—அவர் உரைப்பது வாஸ்தவந்தான். தற்காலம், நமது சிறுவர்களுக்காகவும், குலத்தின் முன்னேற்றத்திற்காகவும் பாடுபடவேண்டிய அனேகர்கூட, அகங்காரமும், பொறாமையும் உள்ளவர்களாகவே காணப்படுகின்றனர். அத்தகையோர் தாங்கள் உழைக்காததுமன்றி, ஊக்கமுள்ள சிறுவர்கள் யாவ



ரேனும் முன் வந்திட்டாலும், "ஆஹா! அந்தச் சிறுவனும் பலர்போற்றிய முன்வருவதா" என்ற எண்ணமும் உடையவர்களாகி அவர்கள் பற்பல தூஷணைகளுக்கும் ஆளாகின்றனர் என்பதும் நமக்கு நன்றாகத் தெரியக்கூடும். எனினும் பொதுஜன ஊழியத்திற்கென முன் வந்தவர் இவர்களுக்காக அஞ்சிப் பின்னடையப் போகின்றனரா?—இல்லை.

இராஜ:—ஓஹோ! ஸரி! ஸரி! சென்ற வருடத்தில் நமது இனத்தார் கூடிய கூட்டத்தில் சில அஸம்பாவிதமான ஸம்பாஷணைகள் பிறந்ததே அதைப்பற்றிக் கூறுகின்றீர்களா! பேஷ் இப்போதுதான் நினைவிற்கு வந்தது.

ஐயம்:—ஆம்! அதைப்போல நடந்துகொள்பவர் இங்கு நம்மவரில் ஒருவருமில்லை யெனினும் நமது சங்கக் கொண்டாட்டத்திற்கெனத் தன் பிரயாணத்தை மாற்றி வைத்துக்கொள்வதாகத் திரு நாராயணக்கோன் அவர்கள் கூறியதும், அது ஸம்மந்தமாக அவ்விஷயங்கள் நினைவிற்கு வந்தனபோலும், ஸகஜந்தானே.

வேணு:—ஸரி! ஆனால் இந்த மாதக் கடைசியாக 28-லிருந்து 30-க்குள் வைத்துக்கொள்ளலாம் என்று தீர்மானிப்போமா?

எல்லோரும்:—ஸரி! ஓ எஸ்.

வேணு:—ஆனால் அவ்வமயம் நடத்தவேண்டிய விஷயங்களை ஒருவாறாக நமது காரியதரிசி அவர்கள் கூறினால் அதன்மேல் அவற்றைப்பற்றி ஒருங்கே நாம் யோசிக்கலாம்.

ஐயம்:—வருஷாந்திர அறிக்கைப்பத்திரம் வாசித்தல்.

வேணு:—ஸரி! அதுதான் எப்போதும் உள்ளதாயிற்றே பிறகு?

ஐயம்:—ஓட்டங்கள்—பந்தயம்—வியாஸப்பந்தயம்—

இராஜ—ஆம்—இந்தப் பந்தயங்களுக்குப் பரிசளிக்கும் பொறுப்பு யாருடையதோ?

ஐயம்:—நமது குலத்திய பிரபுக்கள் சிலர் அச்செலவை ஒப்புக்கொள்ளுவதாக இசைந்திருக்கின்றனர்.

இராஜ:—Oh! that is alright (ஓ-தட்-ஈஸ்-ஆல்-ரைட்) பிறகு?

ஐயம்:—ஆங்கிலத்திலும், தமிழிலும் சொற்பொழிவுகள் நிகழ்த்துதற்கு யாரையாவது தேர்ந்தெடுக்க வேண்டும்.

முத்து:—ஆனால்! அக்கிராஸனம் வகிக்க யாராவது தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்களோ?

இராஜ:—இல்லை—அதையும் நிர்ணயிக்க வேண்டியதுதான்.

[எல்லோருமாகக் கலந்து பேசிக்கொண்டபின்]

நாரா:—ஏன்! நமது முத்துசாமிக் கரையாளர் அவர்களை வரவழைத்தால் போகிறது.

வேணு:—அவரை அடிக்கடி சிரமப்படுத்துவது தர்மமல்ல. சென்ற வருடம் மே மாதத்தில்தானே நமக்காக இராமநாதபுரம் வந்து மகாநாட்டைச் சிறப்புற நடத்திச் சென்றார்.

இராஜ:—உண்மைதான்! ஆனால் கோயம்புத்தூரில் தலைமை உபாத்தியாயராக இருக்கும் ராமகிருஷ்ணக் கோனார் அவர்கள், தன் ஸொந்தக் காரியமாகவே இவ்விடம் வரப்போகிறாராமே ஒரு வேளை அவரே இந்த வருடம்—

ஐயம்—எனக்கும் அதே உத்தேசமிருந்தது. ஆனால் அவர் அடுத்த மாதம்தான் வரப்போகிறாராம்.

முத்து:—நமது அட்வேகேட், ராமஸ்வாமிக் கோனார் அவர்களைக் கேட்டுக்கொண்டாலோ?

ஐயம்:—திருநெல்வேலிதானே?

வேணு:—ஆம்.

ஐயம்:—அவர் பெண்ணுக்குக் கலியாணம் முடிக்கத் தேதிவைத்திருக்கிறார்களாம், ஆகவே வீட்டைவிட்டு இம்மாதம் அவர் எங்கும் செல்ல முடியாதாம்.

வேணு:—(யோசித்து) எனக்கு ஒன்று தோன்றுகிறது. நமது யாதவபுரியில் பெண் பாடசாலை வைத்திருக்கும் கோகிலத்தின் புருஷன் மணவாளக் கோனார் அவர்களை வரவழைத்தால் என்ன?

ஐயம்:—(திகைத்து) அவரையா—

இராஜ:—அவருக்கு எழுத்து வாஸனையே தெரியாதென்று ஒரு பிரஸ்தாபமே—

வேணு:—கடிதம் எழுதுவதென்றால் இன்னும் சிலருக்கும் சேர்த்து எழுதிவிடுங்கள். நமது தேதிக்கு யாருக்குச் சௌகர்யப்படுகிறதோ அவரை வரவழைத்தால் போகிறது.



வேணு:—சே! சே! நீங்கள் தெரியாமல் சொல்லுகிறீர்கள். நானும் முதலில் அப்படித்தான் கேள்விப்பட்டேன் அது சுத்தத் தவறெனப் பிறகுதான் தெரிய வந்தது.

முத்து:—அப்படி இருந்தால் தடையின்றி வரவழைக்கலாமே. கோகிலமும் பி. ஏ. பாஸ் பண்ணினவள். அவளுக்குப் புருஷனாயிருக்கக்கூடியவன் ஸாமான்யமாயிருப்பானோ? அத்துடன் அவர்கள் அந்தஸ்திலும் சிலாக்கியமானவர்கள்தான். குணத்திலும் விசேஷமானவர்கள் தான்.

ஐயம்:—நமக்கு இவ்வளவு விவகாரமென்ன? அவருக்கே ஒரு கடிதம் எழுதித் தெரிந்துகொண்டுவிட்டால் போகிறது.

இராஜ:—எல்லோரும் ஸம்மதித்துவிட்டால்?

வேணு:—மகாசிலாக்கியம்—எல்லோரையும் அழைத்து வெகு சிறப்பாக நடத்திவிடுகிறது.

இராஜ:—ஸரி!

ஐயம்:—இன்று யாராருக்கு எழுதுவதோ?

வேணு:—(யோசித்து)

1. மிஸ்டர் டி. எஸ். வேணுநாதக்கோன் F. C. I., M. R. A. S.
2. Captain வி. கிருஷ்ணஸ்வாமிபிள்ளை L. M. S. விருதுநகர்.
3. மிஸ்டர் எஸ். சக்ரபாணிநம்பியார், பி.ஏ. பி. எல். திருநெல்வேலி.
4. மிஸ்டர் மணவாளக்கோனார், மிராஸ்தார், யாதவபுரி.

ஐயம்:—(குறித்துக்கொள்கிறார்) பிறகு! சொற்பொழிவிற்கு.

முத்து:—தலைவரையே ஆங்கிலத்தில் பேசச்சொல்லுகிறது. தமிழில் பேச நமது மிஸ்டர், கார்மேகக்கோன் இருக்கிறார் அவரை வரவழைப்போம்.

(அனைவரும் ஆலோசிக்கிறார்கள்)

வேணு:—ஸரி! இனித் தீர்மானங்களையெல்லாம் சேர்த்து எழுதிவிடுங்கள். நாங்கள் கையெழுத்துப் போட்டுவிடுகிறோம்.

ஐயம்:—தாங்கள் இதற்காகக் காத்திருக்க வேண்டுவதில்லை. நான் எழுதி உங்களுக்கு அனுப்புகிறேன் நமது சங்கச் சேவகனிடம். கையொப்பமிட்டு அனுப்பிவிடுங்கள்.

வேணு:—பேஷ்! அதுவும் ஸரி! ஆனால் நாம் போகலாம்
(எல்லோருமாகக் கூடி, அவரவர் வேடிக்கையாகப் பேசிக்கொண்டு நிஷ்கிரமித்தல்)

# கால் நடை வைத்தியம்.

(246-வது பக்கம் தொடர்ச்சி.)

(பேதி மருந்துகள்.) மருந்துப் பட்டிகள்.

(1 நிர்.)

| | |
|---|---|
| கறியுப்பு அல்லது பேதியுப்பு | 12 அவுன்ஸ் = 30 ரூபாயெடை. |
| கரியபோளம் | 4 ட்ராம் = $1\frac{1}{4}$ ரூபாயெடை |
| சுக்கு | 4 ட்ராம் = $1\frac{1}{4}$ ரூபாயெடை |
| வெள்ளப்பாகு | 8 அவுன்ஸ் = 20 ரூபாயெடை |

இவைகளை ஒரு க்வார்ட் அல்லது அரையே அரைக்காற் படி வெந்நீரில் நன்ருகக் கலந்து இளஞ்சூடா யிருக்கும்போது கொடுக்க வேண்டும்.

வயது வந்த எருது அல்லது எருமைக்குக் கொடுக்கவேண்டிய அளவு அரை வளர்ச்சியுள்ள சிறு மாட்டுக்கு இதில் பாதியும் வயது வந்த ஆட்டுக்கு ஆறிலொரு பங்கும் கொடுக்கவேண்டும்.

(2 நிர்.)

| | | |
|---|---|---|
| ஆமணக்கெண்ணெய் | 10 அவுன்ஸ் | அரைக்கால் அரைவீசம்படி |
| நல்லெண்ணெய் | 10 அவுன்ஸ் | அரைக்கால் அரைவீசம்படி |
| நேர்வாள எண்ணெய் | 30 துளி | |

இவைகளைக் கலந்து வயது வந்த பிராணிகளுக்குப் பேதி மருந்தாகக் கொடுக்கலாம். இதில் ஆறிலொரு பங்கு ஆட்டுக்குக் கொடுக்க வேண்டிய அளவு.

(3 நிர்.) மலத்தைப் போக்கத் தக்க சுகபேதி மருந்துகள்.

| | | |
|---|---|---|
| கறியுப்பு | 4 அவுன்ஸ் | 10 ரூபாயெடை |
| கந்தகப்பொடி | 3 அவுன்ஸ் | $7\frac{1}{2}$ ரூபாயெடை |
| சுக்குப் பொடி | 4 ட்ராம் | $1\frac{1}{4}$ ரூபாயெடை |
| வெள்ளபாகு | 3 அவுன்ஸ் | $7\frac{1}{2}$ ரூபாயெடை |



(4 நிர்.)

| | | |
|---|---|---|
| ஆமணக்கெண்ணெய் | 10 அவுன்ஸ் | அரைக்கால் அரைவீசம் படி |
| ஆழிவிரை யெண்ணெய் | 6 அவுன்ஸ் | ஒன்றரை வீசம் படி |

இவைகளைக் கலந்து சுகபேதி மருந்தாகக் கொடுக்கலாம்.

(5 நிர்) காய்ச்சல் மருந்துகள்.

| | | |
|---|---|---|
| கர்ப்பூரம் | 2 ட்ராம் | 6 அரைக்கால் ரூபாயெடை |
| வெடியுப்பு | 3 ட்ராம் | 1 ரூபாயெடை |
| சாராயம் | 2 அவுன்ஸ் | அரைவீசம்படி |

கற்பூரத்தைச் சாராயத்தில் கரைத்தபின் அதில் வெடியுப்பைச் சேர்த்து அரையே அரைக்காற் படி குளிர்ந்த ஜலத்தில் விட்டுக் கொடுக்க வேண்டும்.

(6 நிர்.)

| | | |
|---|---|---|
| கறியுப்பு | 1 அவுன்ஸ் | $2\frac{1}{2}$ ரூபாயெடை |
| வெடியுப்பு | 4 ட்ராம் | $1\frac{1}{4}$ ரூபாயெடை |
| நிலவேம்புப்பொடி | 1 அவுன்ஸ் | $2\frac{1}{2}$ ரூபாயெடை |
| வெல்லப்பாகு | 4 அவுன்ஸ் | 10 ரூபாயெடை |

அரையே அரைக்காற் படி தண்ணீரில் கொடுக்க வேண்டும்.

(7 நிர்.) உற்சாக மருந்துகள்.

| | | |
|---|---|---|
| காட்டுச்சாராயம் | 4 அவுன்ஸ் | வீசம்படி. |
| சுக்குப் பொடி | 1 அவுன்ஸ் | $2\frac{1}{2}$ ரூபாயெடை |
| சாதாரண மிளகுப் பொடி | $\frac{1}{2}$ அவுன்ஸ் | $1\frac{1}{4}$ ரூபாயெடை |

அரையே அரைக்காற் படி தண்ணீரில் நன்ருகக் கலந்து கொடுக்க வேண்டும்.

(8 நிர்.)

| | | |
|---|---|---|
| நவச்சாரம் | $\frac{1}{2}$ அவுன்ஸ் | $1\frac{1}{4}$ ரூபாயெடை |
| சுக்குத் தூள் ஓமம் | 3 ட்ராம் | 1 ரூபாயெடை |

அரையே அரைக்காற்படி குளிர்ந்த ஜலத்தில் கலந்து கொடுக்க வேண்டும்.

(9 நிர்.) பலவிருத்தி மருந்துகள்.

| | | |
|---|---|---|
| அன்னபேதி | 3 ட்ராம் | 1 ரூபாயெடை. |
| கறியுப்பு | 1 அவுன்ஸ் | $2\frac{1}{2}$ ரூபாயெடை |

இவைகளைப் பொடியாக்கிக்கலந்து தினம் ஒருவேளை கொடுக்க வேண்டும். இதில் ஆறிலொரு பங்கு ஆட்டுக்குத் தினந்தோறும் கொடுக்க வேண்டும்.

(10 நிர்.)

பெருஞ்சீரகம் அல்லது

| | | |
|---|---|---|
| சோம்பு | 3 ட்ராம் | 1 ரூபாயெடை |
| நிலவேம்பு | 1 அவுன்ஸ் | $2\frac{1}{2}$ ரூபாயெடை |
| ஏலம் | 3 ட்ராம் | 1 ரூபாயெடை |
| ஓமம் | 3 ட்ராம் | 1 ரூபாயெடை |

நன்றாகக் கலந்து தினந்தோறும் ஆகாரத்தோடு சேர்த்துக் கொடுக்க வேண்டும்.

(11 நிர்.) உடற்குணம் மாற்றும் மருந்துகள்.

| | | |
|---|---|---|
| வெடியுப்பு | 3 ட்ராம் | 1 ரூபாயெடை |
| கந்தகம் | 1 அவுன்ஸ் | $2\frac{1}{3}$ ரூபாயெடை |
| சுக்கு | 1 அவுன்ஸ் | $2\frac{1}{2}$ ரூபாயெடை |

நன்றாகக் கலந்து நீர்மயமான கஞ்சியிலாவது ஆகாரத்திலாவது சேர்த்துத் தினம் ஒரு வேளை அல்லது இரண்டு வேளை கொடுக்க வேண்டும்.

(12 நிர்.)

| | | |
|---|---|---|
| கரியபோளம் | 3 ட்ராம் | 1 ரூபாயெடை |
| கறியுப்பு | 1 அவுன்ஸ் | $2\frac{1}{2}$ ரூபாயெடை |
| சுக்கு | 1 அவுன்ஸ் | $2\frac{1}{2}$ ரூபாயெடை |
| கந்தகம் | 1 அவுன்ஸ் | $2\frac{1}{2}$ ரூபாயெடை |

இவைகள் எல்லாவற்றையும் நன்றாகப் பொடி பண்ணின பிறகு 4 அவுன்ஸ் அல்லது 10 ரூபாயெடை வெல்லப்பாகு சேர்த்துச் சூடான நீர் மயமாயுள்ள அரிசிக் கஞ்சியில் ஒரு க்வார்ட் அல்லது அரையே அரைக்காற் படியோடு கலந்து இளஞ்சூடாயிருக்கும் போது கொடுக்க வேண்டும். இப்படி இரண்டு நாளைக்கு அல்லது மூன்று நாளைக் கொருமுறை கொடுக்க வேண்டும்.



(13 நிர்.) உள்ளுக்குக் கொடுக்கும் துவர் மருந்துகள்.

பொடி செய்த சீமைச்

| | | |
|---|---|---|
| சுண்ணாம்பு | 1 அவுன்ஸ் | $2\frac{1}{2}$ ரூபாயெடை |
| காசுக்கட்டி | $\frac{1}{2}$ அவுன்ஸ் | $1\frac{1}{4}$ ரூபாயெடை |
| சுக்கு | $\frac{1}{2}$ அவுன்ஸ் | $1\frac{1}{4}$ ரூபாயெடை |
| அபின் | 1 ட்ராம் | 3 அரைக்கால் ரூபாயெடை |
| நாட்டுச் சாராயம் | 2 அவுன்ஸ் | அரை வீசம் படி |

நன்றாகக்கலந்து (ஒரு பயின்ட் அல்லது) காலே வீசம்படி ஆழிவிரைக் கஞ்சியில் கொடுக்க வேண்டும். கழிச்சல் நிற்கும் வரையில் இந்தப் படி தினம் காலையிலும் மாலையிலும் கொடுக்கலாம். மேற் குறித்த அளவில் நாலிலொரு பங்கு கன்றுக்கும் ஆறிலொரு பங்கு ஆட்டுக்கும் பன்னிரண்டிலொரு பங்கு ஆட்டுக் குட்டிக்கும் கொடுக்கலாம்.

(14 நிர்.)

| | | |
|---|---|---|
| மயில் துத்தப்பொடி | 3 ட்ராம் | 1 ரூபாயெடை |
| தண்ணீர் | 1 க்வார்டர் | அரையே அரைக்காற் படி |

நன்றாகக் கரைத்தபின் கொடுக்க வேண்டும்.

(15 நிர்.) வேதனை குறைக்கும் மருந்துகள்.

கஞ்சா இலை அல்லது

| | | |
|---|---|---|
| கஞ்சாச் சத்து | 3 ட்ராம் | 1 ரூபாயெடை |
| பெருங்காயம் | 3 ட்ராம் | 1 ரூபாயெடை |
| நாட்டுச் சாராயம் | 4 அவுன்ஸ் | வீசம்படி |

அரையே அரைக்காற் படி ஜலத்தில் நன்றாகக்கலந்து கொடுக்க வேண்டும்.

(16 நிர்.)

| | | |
|---|---|---|
| கற்பூரத்தைலம் | 1 அவுன்ஸ் | கால் வீசம்படி |
| ஆழிவிரை எண்ணெய் | 1 பயிண்ட் | காலே வீசம்படி |

கலந்து கொடுக்க வேண்டும்.

(தொடரும்)

# பாரி திருநாள்.

வீரஞ்செறிந்த தமிழ் நாட்டு வீரனும், கொழு கொம்பின்றித் துவண்டு வருந்திய முல்லைக் கொடிக்கு எல்லையில் நல்லருளீந்தவனும், கடையெழுவள்ளல்களில் முதன்மை பெற்றவனும், தமிழ்ப் பெருமூவேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டியர்களின் கீர்த்தியைத் தமது அறக்கீர்த்தியால் மழுங்குவித்தவனும், அம்மூவர்கள் முறைக்கிரங்கித் தன்னுயிரையே தியாகஞ் செய்தவனும், அடியார்க்கடியாராகிய ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளாலும் திரு அருணையம்பதியில் வரப்பிரசாதியாக எழுந்தருளியிரா நின்ற ஸ்ரீ அருணகிரி நாதராலும், முற்காலப் புலவர்களாகிய ஔவைப் பிராட்டியாராலும், மண்டல புருடனாலும், காலஞ்சென்ற கவிச்சக்கிரவர்த்தி ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியாராலும், தற்கால மற்றைப் புலவர்களாலும், அறிஞர்களாலும், போற்றிப் புகழப்பட்டவனும், தென்னாட்டு மேருகிரி யென்றும், தமிழ் நாட்டு இமயகிரி யென்றும் எல்லோராலும் கொண்டாடப்பட்டு வருகிற பறம்புமலை (பிரான்மலை)யை இராஜதானியாகக் கொண்டு பறம்புநாட்டைப் பரிபாலனஞ் செய்தவனுமாகிய பறம்புக் கோமான் பாரிவள்ளல் திருநாள் நாளது பிரஜோற்பத்தி௵ வைகாசி௴ 18௳-க்குச் சரியான (31—5—31)ல் வருகிறது. ஆனதால் அந்நாளை நன்னாளாக எண்ணிப் பொதுவாகப் பாரத மக்களும், சிறப்பாகத் தமிழ்மக்களும், பெருமையாகப் பறம்புநாட்டு மக்களும், தங்கள் தங்கள் கிராமங்கள் தோறும், சாதிப்பூசல், சமயப்பிணக்கு, அபிப்பிராய பேதம் முதலியவைகளைக் காட்டிக் கொள்ளாமல், அவ்வவ்வூர்களிலுள்ள பூஞ்சோலைகளிலும், பொதுஸ்தாபனங்களிலும், புதுப்பந்தலமைத்துப் பசுந்தழைகளாலும், மலர்களாலும், வாழை, கமுகு, புன்னை, அசோகு முதலிய செடிகளாலும், கொடிகளாலும், அலங்கரித்துப் பாரியின் புகழைப் பேசி ஏழைகளுக்கு அன்னமளித்து, ஆடைவழங்கிக் களிப்பதே பாரியின் திருநாளாகும். இத்திருநாளுக்குப் பணச்செலவில்லை, பொருள் தேவையில்லை. ஆதலால் தமிழ்நாட்டுப் பெரியோர்களே! சகோதரிகளே! சகோதரர்களே! கிராமங்களெல்லாம் உங்கள் ஒற்றுமையையே நாடி நிற்கிறபடியால் ஒன்று கூடி மேற்குறித்த நாளில் இத்திருநாளைப் பெருநாளாக்கிச் சிறப்புடன் கொண்டாடும் படியாகக் கோருகின்றேன்.

வேரகோட்டகாரி காந்திதாசன்.

பர்மா.

# யாதவ வாலிபர் சங்கம்.

அகத்தாரிருப்பு, அபிராமம்.

நிகழும் பிரமோதூத ஆண்டு பங்குனித் திங்கள் ஆதித்த வாரம் (5—4—31) அபிராமம் அகத்தாரிருப்பு, யாதவ வாலிபர்களின் பொதுக்கூட்டமொன்று திருவாளர் கு. இராமச்சந்திரக் கோனாரவர்களின் தலைமையின் கீழ் கூடியது. உபகாரியதரிசி ஆ. சி. நா. நாராயணக் கோனார் கல்வி என்னும் விஷயம் பற்றியும் கி. வே. நாராயணக் கோனார் சுகாதாரம் என்னும் விஷயம் பற்றியும் பேசிய பின்னர் கீழ்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுச் சபையினரால் ஏகோபித்து அங்கீகரிக்கப் பட்டன.

நிறைவேறிய தீர்மானங்கள்.

1. நம் சங்கத்திற்குச் சொந்தமானகட்டடம் இல்லாததால் அடுத்த ஆண்டுக்குச் சொந்தமாகக் கட்டடம் ஒன்று ஏற்படுத்த முடிவு செய்யப் பெற்றது.

2. இரங்கூனிலிருக்கும் நமது சகோதரர்களை நமது சங்கத்திற்கு அங்கத்தினர்களாகச் சேர்க்கவும் ஷெயார்களிடம் பிரவேசக் கட்டணம், சந்தா, நன்கொடை, முதலியவற்றை வசூலிக்கவும் திரு. நா. கு. இராமசாமிக் கோனாரை நியமித்திருக்கிறது.

3. நமது சங்கத்திற்குப் பிரவேசக்கட்டணம், சந்தா முதலியன கொடுக்காதவர்கள் பங்குனித் திங்கள் கடைசிக்குள் கொடுக்கும்படி சங்க மெம்பர்களைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது. பிறகு தலைவர் முடிவுரை கூறியதின் பின் கூட்டம் இனிது கலைந்தது.

இப்படிக்கு

அ. சி. நா. நாராயணக் கோன்.

## விசேஷ அனுதாபம்.

### முப்பெருந் துக்கங்கள்.

1. மதுரை வடக்குமாசிவீதி ஸ்ரீமான் S. தக்ஷிணாமூர்த்திக் கோனார் அவர்கள் நாளது 1931-ம் வருஷம் மார்ச்சுமீ 22உ ஞாயிற்றுக்கிழமை யன்று பரமபதமடைந்த செய்தி யறிந்து மிக்க துக்கமுறுகின்றோம். இவர் சில ஆண்டுகளுக்கு முன் மதுரையில் முனிஸிபல் கௌன்ஸிலராக இருந்து பொது மக்கள் பொருட்டுப் பல நன்மைகள் செய்தவர். சிறந்த தயாள குணமுடையவர். இவரது பிரிவு யாதவமக்களுக்குப் பெருந்துக்கம் விளைப்பதாகவிருக்கிறது. இவரது ஆத்மா சாந்தியடையக் கண்ணபிரான் திருவருளைச் சிந்திப்போமாக.

2. திருநெல்வேலியில் யாதவகுலத் தலைவராய் விளங்கிய ஸ்ரீமாந் டி. எஸ். துரைசாமிக்கோனார் அவர்கள் நாளது 1931-ம் வருஷம் மேமீ 2உ காலை வைகுந்தபிராப்தி யடைந்துவிட்ட செய்தி யறிந்து மிகுந்த துக்கத்துள் ஆழ்கின்றோம். இவர் திருநெல்வேலி டிஸ்டிரிக்ட் போர்டு மெம்பராகப் பல வருடங்கள் இருந்து பொதுஜன ஊழியம் புரிந்து வந்தார். திருநெல்வேலியில் நடந்த சென்னை மாகாண நான்காவது யாதவ மகாநாட்டிற்கு வரவேற்புக்கழகத் தலைவராக விருந்து மகாநாட்டைச் சீர்பெற நடத்திக் குலத்தொண்டு புரிந்த பெரியாருமாவர். இத்தகைய பெரியார் இறந்தது யாதவ சமூகத்துக்கே ஒருபெரும் நஷ்டத்தை விளைவிப்பதாகவிருக்கின்றது. இவரது பிரிவாற்றாமையாலேற்படும் எமது துக்கத்தை இவர் குடும்பத்தார்க்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

3. திருநெல்வேலி ஸ்ரீமான் சுந்தரக்கோனார் அவர்கள் நாளது 1931 வருஷம் ஏப்ரல்மீ 12உ ஞாயிற்றுக்கிழமை முள்ளிக்குளம் என்கிற கிராமத்தில் தமது இல்லத்தில் தேகவியோகமடைந்தனர் என்கிற விஷயமறிந்து ஆற்றொண்ணுத் துக்கத்துள் ஆழ்கின்றோம. இவர் நமது சமூகத்திற்கும் தாலூகாவிற்கும் ஜில்லாவிற்கும் தமது ஊருக்கும் பல அரிய பெரிய நற் காரியங்களைச் செய்து பொதுஜன சமூகத்தின் நன் மதிப்பைப்பெற்றுத் துலங்கிய பெருஞ் செல்வராவர். இப்பெரியார் இறந்தமையால் ஏற்பட்ட எமது அனுதாபத்தை ஷெயார் குமாரர் ஸ்ரீமான் இராமசாமிக் கோனார், B. A., B. L. அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**வைகாசிமீ கடைசிக்குள் ஆர்டர் கொடுப்பவர்களுக்கு விலை ரூ. 2.**

ஸ்ரீராமஜெயம்.



### யாதவமித்திரன் சந்தாதாரர்களுக்கோர்

## அறிவிப்பு.

மயர்வற மதிநல மருளப்பெற்ற பரமகாருண்யரான ஆழ்வார்கள் பன்னிருவர்களால் அருளிச்செய்யப்பெற்ற தமிழ் வேதமாகிய

## நாலாயிர திவ்யப் பிரபந்தம்.

பெரியவாச்சான் பிள்ளை, மணவாள மாமுனிகள் முதலான பூர்வாசாரியர்கள் வியாக்யானங்களுக்கிணங்கிய குறிப்புரையுடனும் ஆழ்வாராதிகள் ஆப்டோன் கலர்ப்படங்களுடனும் சுத்தப் பதிப்பில் வெளியாயிருக்கிறது. யாதவமக்களது ஒவ்வொரு கிருகத்திலும் பிரபந்தம் இருந்து தீரவேண்டியது அவசியமாகையால், இதன் விலை ரூபா நாலுக்கு நமது சந்தாதாரர்களுக்கு மாத்திரம் பிரதி ஒன்றுக்கு ரூபா இரண்டுவீதம் கொடுப்பதாகத் தீர்மானித்திருக்கிறது. பிரபந்தத்திற்கு ஆர்டர் கொடுப்பவர்கள் விபரமான விலாசத்தையும் சந்தா நம்பரையும் குறித்தனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மானேஜர்.

184



| | விலை | | | சந்தாதாருக்குக் குறைந்த விலை. | | |
|---|---|---|---|---|---|---|
| வால்மீகி ராமாயணம் வசனம் | 15 | 0 | 0 | 13 | 0 | 0 |
| கம்பராமாயணம் வசனம் | 4 | 0 | 0 | 2 | 8 | 0 |
| பாரதம் வசனம் | 8 | 0 | 0 | 6 | 0 | 0 |
| பாகவதம் வசனம் | 4 | 0 | 0 | 2 | 8 | 0 |
| பக்தவிஜயம் வசனம் 6 பாகம் | 6 | 0 | 0 | 4 | 8 | 0 |
| அஷ்டப்பிரபந்தம் | 3 | 8 | 0 | 3 | 0 | 0 |
| குருபரம் பரா ப்ரபாவம் | 3 | 0 | 0 | 2 | 4 | 0 |
| பகவத்கீதை | 1 | 8 | 0 | 0 | 12 | 0 |
| விஷ்ணு புராணம் | 3 | 0 | 0 | 2 | 4 | 0 |
| வில்லிபாரதக்கவி (அரும்பத உரையுடன்) | 4 | 0 | 0 | 2 | 8 | 0 |
| கம்பராமாயணக் கவி | 8 | 0 | 0 | 5 | 0 | 0 |
| ராமர் அஸ்வமேதயாகம் | 2 | 0 | 0 | 1 | 0 | 0 |
| ஆதிபர்வம் | 2 | 0 | 0 | 1 | 0 | 0 |
| விராடபர்வம் | 1 | 4 | 0 | 0 | 12 | 0 |
| ஆனந்த ராமாயணம் | 6 | 0 | 0 | 5 | 0 | 0 |
| நித்யானு சந்தானம் | 0 | 12 | 0 | 0 | 8 | 0 |
| முதலாயிரம் | 1 | 0 | 0 | 0 | 12 | 0 |
| விநோதரச மஞ்சரி | 1 | 8 | 0 | 1 | 0 | 0 |
| நைடதம் (விசேட உரையுடன்) | 4 | 0 | 0 | 3 | 0 | 0 |
| திருக்குறள் (தெளிபொருள் விளக்க விரிவுரையுடன்) | 3 | 8 | 0 | 2 | 8 | 0 |
| நாலடியார் (உரை) | 1 | 8 | 0 | 1 | 2 | 0 |
| நளவெண்பா (மூலமும் விருத்தியுரையும்) | 2 | 8 | 0 | 1 | 14 | 0 |
| அகத்தியர் தேவாரத் திரட்டு | 1 | 4 | 0 | 1 | 0 | 0 |
| ராமலிங்கஸாமி அருட்பா | 4 | 0 | 0 | 2 | 8 | 0 |
| மூவர் தேவாரம் அடங்கன்முறை | 5 | 0 | 0 | 3 | 8 | 0 |
| கந்தபுராண வசனம் | 4 | 0 | 0 | 3 | 0 | 0 |
| விநாயகபுராண வசனம் | 4 | 0 | 0 | 3 | 0 | 0 |
| சூடாமணி நிகண்டு 1-முதல் 12 | 1 | 8 | 0 | 0 | 14 | 0 |

இன்னும் மற்ற வைஷ்ணவ சம்ப்ரதாயப் புத்தகங்களும் தமிழ், தெலுங்கு, நாகரம், கிரந்தம், இங்கிலீஷ் நாவல்களும் இருக்கின்றன. வேண்டியவைகளுக்கு விபரமாக எழுதினால் சகாயமாக அனுப்பி வைக்கிறோம். தபால் செலவு வேறு.

288 C

## யாதவ மித்திரன் சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| இந்தியா, சிலோன், பர்மா முதலிய உள்நாட்டிற்கு வருஷம் 1-க்கு | ரூ | 1—0—0 |
| பினங்கு சிங்கப்பூர், முதலிய வெளிநாட்டிற்கு வருஷம் 1-க்கு | ரூ | 1—8—0 |

தனிப்பிரதி விலை அணா 2.

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தாக் கிடையாது.

மாதிரிப் பிரதி வேண்டுவோர்
இரண்டரையணா, தபால் தலை அனுப்பவேண்டும்.

1. சந்தாதாரராய்ச் சேர்கின்றவர்கள் பெயரையும் விலாசத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

2. எப்பொழுதும் சந்தாத் தொகையை முன் பணமாகச் செலுத்தவேண்டும். வி பி. மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். சந்தாத்தொகையை முன்பணமாக மணியார்டர் செய்தால் 2-அணாத்தான் செலவாகும். வி. பி. மூலம் பத்திரிகையை வரவழைப்பதில் 3-அணா அதிகச் செலவாகும், ஆதலால் முன்னடி மணியார்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்வதே நலம்

3. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் அவ்வருஷ ஆவணி மாதம்முதல் கணக்கு வைக்கப்பட்டு ஆவணி மாதப் பத்திரிகை முதல் சேர்த்தனுப்பப்படும்.

4. யாருக்கேனும் சஞ்சிகை வந்து சேராவிட்டால் அம் மாதமுடிவிற்குள் தங்கள் சந்தா நம்பருடன் தெரிவித்துப் பெற்றுக் கொள்ளலாம். அதற்குப் பின்னர் தெரிவித்தால் விலை செலுத்தியே பெற்றுக் கொள்ளவேண்டும்.

5. இடம் மாறும் சந்தா நேயர்கள் தங்கள் புது விலாசத்தைத் தெரிவித்து, அது விபரத்தைத் தபாலாபீஸாரிடமும் அறிவித்துவிட வேண்டும்.

6. சந்தா நம்பரைக் குறிப்பிடாத கடிதங்களைக் கவனிக்க முடியாது பதில் விரும்புவோர் தபால் தலை அனுப்பவேண்டும்

### விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| 1-பக்கத்திற்கு | ரூ | 10—0—0 |
| ½-பக்கத்திற்கு | ரூ | 5—8—0 |

நீண்டகால விளம்பரங்களுக்கு யாதவ மித்திரன் ஆபீஸிற்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

ஐந்தாவது யாதவமகாநாடு போட்டோ படங்கள்.

வேண்டியவர்கள் யாதவமித்திரன் ஆபீஸுக்கு விபரமாகத் தெரியப்படுத்துவதுடன் முன் பணமாக ரூ 1—5—0 மணியார்டர் மூலம் அனுப்பிவைக்கவும்.

# இந்தியவிவசாயம்

ஓர் விவசாய மாதப் பத்திரிகை.

—*—

வருட சந்தா ரூ. 1.

இதில் கமத்தொழில், கால் நடை பரிபாலனம், கூட்டுறவு, சிறு தொழில்கள் முதலிய கிருஷிகருக்கு வேண்டிய சகல விஷயங்களும் பிரதி மாதமும் வெளிவரும். மாதிரிப் பிரதி இனாம்.

மானேஜர்,
இந்திய விவசாய ஆபீஸ்,
தெப்பக்குளம் போஸ்டு, திருச்சி.



# "Young Yadava"

**An Engish Monthly.**

Annual Subscription Rupee One.

Will be published by the YADAVA YOUTH LEAGUE, MADRAS. Sample copies will be sent on request. All educated Yadavas are requested to send the addresses of their English educated relatives and friends so that an attempt can be made to enrol them as subscribers.

Yadavas who send their subscriptions in ADVANCE will go a long way in helping the Community.

APPLY TO:—

**T. S. Venunadha Kone,** F. C. I, M. R. A. S.,
*Kilpauk P. O. Madras.*



**Printed & Published by E. M. GOPALAKRISHNA KONE**
**at the Excelsior Press, Madura.**



Reg., No. M-2527.






# யாதவ மித்திரன்.

யாதவமக்களின்
முன்னேற்றங்கருதிவெளிவரும்
மாதப்பத்திரிகை.



| தொகுதி 2 | பிரஜோ-வை, ஆனி, ஆடி மீ<br>1931-மே, ஜுன், ஜுலை | பகுதி 10,11,12 |
| --- | --- | --- |





பொருள் அடக்கம்.

இதன் உட்புறம் பார்க்க.



Managing Editor.
இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
பக்கவியாபாரம், மதுரை.

288 F


# யாதவமித்திரன்.

## ஆசிரியர் கூட்டத்து அங்கத்தினர்கள்

## (Editorial Board Members.)

### தலைவர்.

1. திருவாளர், ஆ. கார்மேகக்கோனார் அவர்கள்
தலைமைத்தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

---

2. ,, ச. செல்லம் அவர்கள் (யாதவர்) சுசீந்திரம்.
3. ,, J. சக்கரபாணி நம்பியார் அவர்கள், பி. ஏ., பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வைஸ் பிரசிடெண்டு.
ஜில்லாபோர்டு, திருநெல்வேலி.
4. ,, V. கிருஷ்ணரெட்டியார் அவர்கள் (யாதவர்) பி. ஏ. பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வேலூர்.
5. ,, கி. அ. முத்துசாமிக் கோனாரவர்கள், வித்வான்,
திருச்செங்கோடு.
6. ,, K. வீராசாமிப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், முனிசிபல் உயர்தர கலாசாலை,
திண்டுக்கல்.
7. ,, R. வெங்கடா சலம்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர்,
S P. G. உயர்தரக் கலாசாலை, தஞ்சாவூர்.
8. ,, M. V. வேணுகோபாலப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், E. L M F ஹைஸ்கூல்
புரசபாக்கம், சென்னை.
9. ,, ஐயம்பெருமாள் கோன் அவர்கள், தமிழாசிரியர்,
ஸெயின்ட் ஜோஸப் காலேஜ், திருச்சிறுப்பள்ளி.
10. ,, K. கோபால கிருஷ்ணன் அவர்கள், B. Sc. (Hons.)
M. R. A. S. பர்மா.


## வேண்டுகோள்.

வியாசங்கள் எழுதுவோர் தெளிவாகவும் தூஷணைகளின்றியும் முழுவிலாசத்துடன் சமூக முன்னேற்றத்திற்குரியனவும் அறிவு வளர்ச்சிக்குரியனவுமாகிய பொது விஷயங்களைப்பற்றிச் சுருக்கமாகவும், நடை எளிதாகவும் எழுதியனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோரும், விளம்பரம் கொடுக்க விரும்புவோரும் அடியிற்காணும் விலாசத்திற் கெழுதுக.

யாதவமித்திரன் ஆபீஸ், ஸ்ரீ கோபால் மஹால்,
வடக்குச் சித்திரைவீதி, மதுரை.

288 G

## பொருள் அடக்கம்.


| விஷயம். | | | பக்கம். |
|---|---|---|---|
| கடவுள் வணக்கம் | ... | ... | 289 |
| கிராமச்சீர்திருத்தங்கள் | .... | .... | ,, |
| பசு | ... | ... | 295 |
| மனிதர்வாழ்க்கை | ... | ... | 297 |
| கால்நடை வைத்தியம் | ... | ... | 300 |
| நைனியப்பபிள்ளை | ... | ... | 303 |
| ஆராவமுதுபிள்ளை | ... | ... | 306 |
| தமிழ்மொழி | ... | ... | 308 |
| வித்தியாதருமம் | ... | ... | 316 |
| யாதவர் நிலைமை | ... | ... | 318 |
| | | | |
| கடவுள் வணக்கம் | ... | ... | 321 |
| மகாநாட்டின் நடவடிக்கைகள் | ... | ... | ,, |
| மன்னார்குடி யாதவர் மகாநாட்டுத் தீர்மானங்கள் | | ... | 323 |
| செங்கோட்டை 6-வது யாதவ மகாநாடு ... | | ... | 327 |
| செங்கோட்டையிற்கூடிய 2-வது யாதவர் வாலிப சங்கம் | | | 342 |
| | | | |
| கடவுள் வணக்கம் | ... | ... | 353 |
| செங்கோட்டை 2-வது வாலிபர் சங்கம் (தொடர்ச்சி)... | | | ,, |
| சென்னைமாகாண 6-வது யாதவமகாநாட்டுத் தீர்மானங்கள் | | | 361 |
| சமுதாயக்கிளர்ச்சிகள் | ... | ... | 365 |



திரு. M. K. ஆராவமுதுபிள்ளை அவர்கள்.
(யாதவர்)

[ 306-ம் பக்கம் பார்க்க. ]

# யாதவமித்திரன்.

## ஒரு மாதப்பத்திரிகை.

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

தொகுதி 2 } பிரஜோத்பத்தி௵ வைகாசிமீ 1931-௵ மேமீ { பகுதி 10

### கடவுள் வணக்கம்.

திருவுக்கும் திருவாகிய செல்வா
　　தெய்வத்துக் கரசே செய்ய கண்ணா
உருவச்செஞ் சுடராழி வல்லானே
　　உலகுண்ட ஒருவா திருமார்பா
ஒருவற் காற்றி யுய்யும் வகையின்றால்
　　உடனின்று ஐவர் என்னுள் புகுந்தொழியாது
அருவித் தின்றிட அஞ்சி நின்னடைந்தேன்
　　அழுந்தூர் மேல்திசை நின்ற அம்மானே

திருமங்கை ஆழ்வார்.

## கிராம சீர்திருத்தங்கள்.

(261-ம் பக்கம் தொடர்ச்சி.)

### சுகாதாரம்.

நகரங்களில் வீசும் காற்றுப் பலவித துர்நாற்றங்களுடன் கலந்து அசுத்தமாவதால் நோயினால் வருந்தும் நகரவாசிகள் நல்லகாற்று உட்கொண்டு சுகமடையக் கிராமங்களுக்குச் சென்று வசித்துவ(ரு)வது சுகாதாரமுறை. ஆனால் நமது கிராமங்களில் சுத்தமான காற்று வாங்கிச் சுகமடைவது எவ்வளவு தூரம் உண்மையென்பதை ஆரா[illegible] ஆசாபங்கமாய்; கிராமவாசிகள் தங்களுக்கிசைந்த உணவுகளை [illegible]டு, வேண்டிய அளவு நித்திரை செய்து, தகுந்த நேரங்களில் வயல்களில் வேலைசெய்து வருவதால் அவர்கள் தேகாரோக்கியத்தில் சிறந்து விளங்கவேண்டியதவசியம். அந்தோ! அப்படிக்கில்

லாமல் அவர்களின் தோற்றங்களைக் கவனித்தால் கிராமங்களில் வசிப்பதனாலுண்டாகும் நன்மை இதுதானாவெனத் திடுக்கிட்டு அச்சமுறுவண்ணம் காணப்படுகின்றனர். "வியாதியடைந்து தோல் மூடியிருக்கும் கால்கைகளும், வாடி வதங்கிய நெஞ்சுகளும், விட்டு விட்டு வரும் இருமல்களும், ஆழமான பள்ளங்களையுடைய கன்னங்களுமே உங்களைக் கிராமங்களில் வரவேற்கின்றன" *வியாதியஸ்தர்கள் கிராமங்களுக்குச் சென்று வசித்து வியாதியைப் போக்கடிக்க வேண்டியதுபோக அவன் அநேக வியாதிகளுக்குப் பின்னும் ஆளாக வேண்டியதானால் இந்தியக் கிராமங்களின் சுகாதார நிலையின் கொடுமைதானென்னை?

வீடுகளின் அமைப்பு மிகவும் அருவருக்கத் தக்கதாயிருக்கிறது. கிராமவாசிகள் உடுத்தத் தகுந்த துணியில்லாமலிருப்பது போலவே வீடுகளும் சரியாகக் கட்டப்படாமலிருக்கின்றன. ஒரே வீட்டில் இரண்டு மூன்று குடும்பத்தார்கள் வசிப்பதல்லாமல் ஆடு மாடுகளும் இரவில் தங்குமிடமாகிறது. கிராமத் தெருக்களெல்லாம் ஆடுமாடுகளின் சாணங்கள் ஆங்காங்கு குவிந்து அழுகித் துர்க்கந்தம் கமழ்ந்துகொண்டிருப்பதல்லாமல் வீடுகளிலும் ஆடு மாடு தங்குவதால் சிறுநீரு சாணம் நிறைந்து துர்நாற்றம் மணந்துகொண்டிருக்கும். மேலும் ஒவ்வொரு வீட்டினருகிலும் மாட்டுச் சாணம் முதலிய கழிவுகளை உரத்திற்காகக் கும்பல் கும்பலாய் அப்படியே கொட்டி வைத்திருப்பார்கள். *அதனாலுரத்தின் குறைவும், துர்நாற்றத்தால் கெடுதியும் உண்டாவது கண்கூடு:

காற்றுதான் அப்படியானால் அருந்தும் நீரும் சரிபாகமாக அசுத்தமானதாகவே இருக்கிறது. முதலாவது கிணற்றுத் தண்ணீரைக் கவனித்தால் அந்தோ! அதைவிட அசுத்தமான ஜலத்திற்கு வேறெங்கும் போகவேண்டியதில்லை. ஓர் கிராமத்திற்கு ஓர் இரு கிணறுகளே இருக்கின்றன. இவைகள் பூமியில் நல்ல தரையிலிருந்து ஊறிவரும்படி அதிக ஆழமாய் வெட்டப்படுவதில்லை. அநேகமாய்க் கிணறுகள் வீட்டோரங்களில் கிராமத்தண்ணீர் தங்கி நிற்கும் சிற்சிறு கால்வாய்களுக்கருகில் தோண்டப் படுகின்றன. பக்கங்களில் கிட தண்ணீராய்த் தங்கும் அசுத்த நீர் இக்கிணறுகளில்

*Edward Carpenter—"Towards Industrial Democracy"

*மக்கை உரச் சேகரிப்பின் முறையை "யாதவமித்திரன்" பக்கம் 37-ல் (1930 ஆகஸ்ட்—செப்டம்பர் சஞ்சிகை) பார்க்க



கசிந்து பாயும் தன்மையாயிருக்கிறது. மேலும் கிணறுகளைச் சுற்றிக் குறைந்தது மூன்றடி உயரமான சுவரெடாமல் தரை மட்டத்திற்கு வெட்டிவைத்துக் கொள்ளுகின்றனர். அப்படி யிருப்பதால் வழிந்தோடும் அசுத்தமான தண்ணீர் இக்கிணறுகளில் வந்து பாய்ந்து கிணற்றுத் தண்ணீரை அசுத்தமாக்கி விடுகிறது. அன்றியும் கிணற்றருகே பாத்திரங்களையும் தேகத்தையும் சுத்திசெய்யும் அசுத்த நீர் உட்சென்று விடுகிறது. இப்படியாகக் கிணற்றுநீர் அசுத்தமாக்கப் படாமல் கிணற்றைச் சுற்றிச் சுவரெடுத்து, தண்ணீர் வழிந்தோடி விடும்படி கிணற்றைச் சுற்றி 'சிமிண்ட்' தரையாக்கவேண்டும். கிணற்றோரங்களில் பெரிய மரங்கள் உண்டாக்கக் கூடாது. இம்மாதிரியாகவே குளத்து நீரும் ஆடு, மாடு, கால், கை, துணி முதலியவைகளைச் சுத்தஞ் செய்வதிலும், தண்ணீர் வருஷம் ஒரு முறையாவது வெட்டிவிட்டுப் புதிய தண்ணீரைச் சேர்க்காமலும் அசுத்தமாக்கப் படுகிறது. உபயோகத்திற்காக ஓர் குளத்தை ஒதுக்கி வைத்து மேல் குறித்த குறைவுகளொன்றும் வாராமல் குளத்தைச் சுற்றி ஆடுமாடுகள் வாராமல் வேலிகளமைத்து, மரங்களின் இலைகள் உதிர்ந்து காற்றினால் குளத்தினுளடித்துக்கொண்டு போகப்பட்டு அழுகித் தண்ணீரைக் கெடுத்துவிடாமல் பக்கங்களில் மரங்களை வளரவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது.

வீட்டின் அசுத்தத் தண்ணீர் வீட்டுப் பக்கங்களில் தங்கி நிற்பதால் கொசு முதலிய பூச்சி புழுக்கள் வாழுமிடமாகி அவைகள் கிராம வாசிகளைத் தீண்டியும், உணவுகளில் பிரவேசித்தும் அநேக கொடிய வியாதிகளை உண்டுபண்ணுகின்றன. இப்பூச்சிகள் அதிகரியாவண்ணம் அப்பாகங்களில் மண்ணெண்ணெயை ஊற்றிக் கொன்றுவிட்டு மறுபடியும் தண்ணீர் வீட்டுப் பக்கங்களில் தங்காவண்ணம் பார்க்கவேண்டும்.

மேலும் கிராமவாசிகள் கடைகள், சந்தை முதலியவிடங்களுக்குச் சென்று அழுகிப்போன காய், பழம், கிழங்குகளையும், துர்நாற்றம் பொருந்திய பலவஸ்துக்களையும் குறைந்த விலைக்கு வாங்கிப் புசிக்கின்றனர். இப்படியாக உணவிலும் உடுக்கையிலும் மனம் வருந்தும் நிலைமையிலிருக்கின்றனர். அவர்களே அப்படியானால் அவர்கள் குழந்தைகளைப்பற்றிக் கூறுவானேன்? இவர்கள் சுகாதார முறை தெரியாமல் கண்டவைகளை யெல்லாம் வாங்கிப் புசித்து வருவது காரணமாயிருப்பதுபோலவே இவர்களைத் தரித்திரம் வருத்து

வதும் மற்ருெரு காரணமாயிருக்கிறது. இப்படிச் சுகாதாரமில்லா வாழ்க்கை கிராமவாசிகளின் தேகங்களில் பற்பல வியாதிகளை நுழைத்து அவர்களின் மனோவல்லமையை அடியோடு அழித்து விடுகிறது. முன்னேற்றத்திற்கான பேராசைகளை அதமாக்கி விடுகிறது. சதா உழை உழையென்னும் உழைப்புக்கான ஊக்கம், விடாமுயற்சி, இவைகளைப் போக்கடித்து, சோம்பேறித் தன்மையை விருத்தி செய்கிறது. சுய மரியாதையையும், பொறுப்பு, கடமை முதலியவைகளைக் களைந்து விடுகிறது. சதா மனச் சஞ்சலத்தையுண்டுபண்ணி வேலை செய்வதற்குத் தகுதியற்றவர்களாக்கிக் கடைசியாகத் தரித்திர திசையைக் கொண்டுவந்து விடுகிறது.

முகமலர்ச்சி பொருந்திய சந்தோஷ வாழ்க்கை யென்பதே கிடையாது. கிராமவாசிகளின் தரித்திரம் நீங்கிச் சுகாதார முறைகளை அநுசரித்துத் திடகாத்திரர்களாய் மனோவல்லமை யடைந்து சந்தோஷ வாழ்க்கையடையும்வரை, கிராமங்கள் முன்னேற்றமடைந்ததாகக் கூறுவது வீண்பேச்சு.

## வீட்டுக்கைத் தொழில் விருத்தி.

ஆதிகாலத்தில் கிராமவாசிகள் தங்கள் விவசாயகாலங்கள் போக மீதியான சமயங்களில் தங்கள் நிலைமைக்குத் தகுந்த கைத்தொழில்கள் செய்துவந்ததால் அவர்களுக்கு விளைவில்லாமல் பஞ்சமுண்டான காலத்திலும் தாங்கள் செய்த சாமான்களைக்கொண்டு தங்களுக்கு வேண்டியசாமான்களை மாற்றி வாங்கிச் சுகமாய் வசித்து வந்தனர். அக்காலங்களில் பஞ்சமென்பதே கிடையாது. ஆனால் தற்காலங்களில் பஞ்சங்களதிகரித்து ஜனங்கள் கையில் திரவியமில்லாது அவஸ்தைப்படுகின்றனர். வேளாண்மை செய்வோர்களின் தொழில் இல்லாமையாலேயே விளைவில்லாமல் பஞ்சம் அதிகரித்த காலங்களில் உண்ண உணவு வாங்கமுடியாது பெரும்பாலோர் வருந்தி மாண்டிருக்கின்றனர். பிரிட்டிஷார் வருகை இந்தியக் கைத்தொழில்களனைத்தையும் தலையெடுக்க வொட்டாமல் தடுத்து இந்தியர் எப்பொழுதும் மேனாட்டுச் சாமான்களை எதிர்பார்க்க வைத்துவிட்டது. இந்தியரின் ஆதிகாலத்துக் கைத்தொழில்களின் நுட்பத்தையும், அலங்காரத்தையும் கண்டு ஆச்சரியப்படாத மேனாட்டார்



ஒருவருமிரார். அப்பெருமையிழந்து இச்சிறுமைப்பட நேர்ந்ததற்கு நாம் யாரைக்குறை கூறுவது?

டாக்டர் கில்பர்ட் ஸ்லேட்டர் (Sometimes Professor of Economics at the University of Madras) சொல்லுகிறபடி இந்தியாவில் ஒரேவித விவசாய நிலத்தில் ஓர் விவசாயி வருஷத்தில் ஐந்து மாதங்களுக்கு வேலைசெய்வதாகவும், இரண்டுவித விவசாய நிலங்களில் வருஷத்தில் எட்டுமாதங்களுக்கு வேலை செய்வதாகவும் கூறுகிருர். ஆகவே விவசாயிகளுக்கு ஓய்வுகாலங்கள் நிரம்பவுண்டென்பது கண்கூடு. இவ்வோய்வுகாலங்களை வீணுகக்கழிக்காமல் ஏதாவதோர் கைத்தொழிலில் செலவழித்தால் வருமானம் அதிகரிக்குமல்லவா? 1880-ம் ஆண்டில் ஏற்படுத்திய "பஞ்சவிசாரணைக் கமிஷன்" அடிக்கடி பஞ்சமேற்படாமல் தடுப்பதற்கு ஜனங்கள் வெவ்வேறு கைத்தொழில்களில் ஈடுபட்டுவரவேண்டியது அவசியமென்று அழுத்தமாகக் கூறியிருக்கிறது. ஆதலால் கிராமத்தார்கள் ஒவ்வொருவரும் தங்கள் விவசாயவேலை நேரங்கள் போக மீதியான காலங்களில் தங்களுக்குத் தெரிந்த கைத்தொழிலைச் செய்துவரவேண்டும்.

ஆண்களும் பெண்களும் நெசவுத்தொழிலை வெகு சுலபமாகச் செய்யலாம். உண்மையில் இக்காலங்களில் வீடுதோறும் அக்காலத்து நெசவுத்தொழிற்கருவிகள் மூலைகளில் பூசணம்பிடித்துக் கிடப்பதைக் காணலாம். இதனால் அக்காலத்துக் கைத்தொழில்கள் க்ஷீணதிசையடைந்ததைக் காண்கிறோமல்லவா? தற்போது இந்தியாவெங்கும் சுதந்தர உணர்ச்சி ததும்பி கைராட்டைச்சுற்றி நூலெடுத்து நெசவுத்தொழில் விருத்தியாகி ஏழைகளுக்குப் பிழைப்புக்கிடமானதைக்கண்டும் அநேக கிராமத்தார்கள் அதைக் கைப்பற்றாது வீணுகக் காலங்கழித்து வருவது மிகவும் வெட்கத்துக்கிடமாகிறது. இந்தியாவுக்கு வருஷம் 1-க்கு 169 கோடி ரூபாய் விலையுள்ள 4, 479, 000, 000 கெஜத்துணிகள் வேண்டியதாயிருக்கிறது. சுமார் 116 கோடி கெஜத்துணிதான் நம்நாட்டில் நெய்யப்படுகின்றனவாம். இதைப் பெரும்பாலும் இயந்திரசாலைகளே செய்கின்றன. இயந்திரசாலைகளிலநேகம் மேனாட்டாரின் நிதியைக்கொண்டு நடைபெறுவதால் இலாபம் கடைசியாக மேனாட்டாரையே போயடைகிறது. ஆதலால் கிராமவாசிகள் ஆண் பெண் இருபாலரும் குழந்தைமுதல்

முதியோர்வரை வெகு எளிதில் செய்யக்கூடியதாகவும், ஏழைக் குடியானவர்களுக்குப் பசியின்றி ஆகாரமளிக்கக்கூடியதாகவும், இந்தியாவிலிருந்து வரும் சமார் 60 கோடி ரூபாய் (துணிவகையில்) மேனாடு சென்று வறட்சி ஏற்படாமலும் தடுக்கக்கூடிய கைத்தொழில் ; கைராட்டைக்கொண்ட நெசவுத் தொழிலென்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

கலப்பை முதலிய விவசாயக் கருவிகள் செய்யலாம். சுருட்டு செய்வது மிக எளிது. மரவேலை, வெண்கலவேலை, மண்பாத்திரம், ஓலைப்பிரம்புகளால் கூடைகள் முதலியவைகளை அதிகச் செலவின்றிச் செய்து விற்கலாம். பெண்கள் தையல் வேலைகள் செய்துவரலாம். மரவள்ளிக்கிழங்கின் மாவினால் சவ்வரிசியும், பாலைக்கட்டியாக்கித் தூள்செய்து, சீனியையும் வாழைக்காயின் மாவையுஞ் சேர்த்து "மெல்லின்ஸ் பூட்" (Mellins food) என்ற மேனாட்டுச் சாமானைச் செய்து விற்கலாம் வாழைக்காயின் மாவிற்குப் பதிலாய் சோளத்தின் மாவைச் சேர்த்து "ஹார்லிக்ஸ் மால்டட் மில்க்" (Horlics-malted milk) செய்யலாம். இப்படி இன்னும் அநேக விதக் கைத்தொழில்களைக் கற்றுச் செய்து விற்று வரலாம். சில கிராமங்களில் ஆண்கள் வீடுகளில் படுத்துறங்கப் பாவம்! பெண்கள் வெகுதூரங்களுக்குச் சென்று மண், கல் சுமக்கும் வேலைகளை வெகு சொற்பக் கூலிக்குக் காலையிலிருந்து மாலைவரை செய்து கஷ்டப்படுவதைக் காண்பது யார் மனதைத்தான் புண்ணாகப்பண்ணாது? இப்படிக் கஷ்டப்பட்டுப் பிழைப்பதைவிட ஏதாவதோர் வீட்டுக் கைத்தொழிலைச் செய்து அதனால் ஓய்வுகாலங்களில் வருமானத்தைத் தேடிக் கொள்ளக் கூடாதா? எல்லாம் அறியாமை யென்னும் அந்தகாரம் இவர்களை மூடிக்கொண்டிருக்கிறது. இவ் வந்தகாரத்தைக் கல்வி யென்னும் சூரியோதயத்தால் அதமாக்க வேண்டியது சீர்திருத்தக்காரர்களின் முக்கியவேலை யென்பதை இங்கு அழுத்தமாய் அறைவோம்.

K. G. கிருஷ்ணன், B. sc (Hons

---

## பசு.

### பசுவே தெய்வம்.

இந்துக்களுக்குப் பசு முக்கிய தெய்வம். எவ்வித வைதீக கருமங்களுக்கும் பசு இன்றியமையாத் தேவையாகிறது. பசுவுக்குத் தெய்வத் தன்மையை இந்துக்கள் கற்பிக்கிறார்கள். அதைச் சிறிது ஆய்வோமாக. உலகில் பசுக்களுடைய உற்பத்தியைப்பற்றிக் கூறும் விவரம் அடியில் வருமாறு—தேவாசுரர்கள் பாற்கடலைக் கடையும் போது அனேக திவ்வியமான பொருள்கள் தோன்றின. அவைகளில் காமதேனு வென்ற உத்தமமான பசுவும் ஒன்று. அக் காமதேனுவிலிருந்தே உலகிலுள்ள பசுக்களெல்லாம் தோன்றின.

பொற்பமரும் பாற்கடலில் உற்பவமாஞ் சுரபி
புகலிதன் கோமயத்தாற் கூவிளந்தானுளவா
மற்புதமாந் திருமகளவ் வில்வமதில் பொருந்து
மகிலாரம் பளிதமத னைப்பதனி லுளவாங்
கற்பமருஞ் சுராமுதம் நவநீதத் துதிக்குங்
கதிருடனே செந்நெல்தின் பாலதினிற் றேன்றுஞ்
சொற்பயில்குங் குலியமறை யுற்பல நீரதனில்
தோன்றி விடும் ரோசனையு மதனுதரத் துதிக்கும்.

(சிவஞான தீபம்)

இனிப்பசுவின் ஒவ்வொரு அங்கங்களும் தேவதைகளின் அம்சமெனக் குறிப்பிடும் வேதவியாச முனிவரின் பாடலில் கருத்து அடியில் வருமாறு - முகத்திலே திருமாலும் கழுத்திலே உருத்திரனும் மத்திய பாகத்திலே தேவகணங்களும் ரோமங்களிலே முனிவர்களும் வாலில் சர்ப்பங்களும் குளம்புகளுடைய அடியில் மஹேந்திராதிகளாகிய குலபர்வதங்களும் மூத்திரத்திலே கங்கை யமுனை காவேரி, சிந்து கோதாவிரி முதலியன தீர்த்தங்களும் கண்களில் சூரிய சந்திரர்களும் முலைகளில் தேவர்களும் வசிக்கிறார்கள். இதை வேறு விதமாகவும் குறிப்பிடுகிறார்கள். எங்ஙனமாயினும் அவைகளும் பசுவின் அங்கங்களில் கடவுள் இருப்பதாகவே கூறுகின்றனர்.

வேறொரு வரலாறு பசுவைப் பற்றிப் புராணங்களிலே பரக்கக் காணலாம். வசிட்ட மாமுனிவரது ஆசிரமத்திற்கு விருந்தினராக வந்த விஸ்வாமித்திரன் அவரிடமுள்ள நந்தினி (பசு) யால் நன்கு உபசரிக்கப்பட்டதைக் கண்டு தமக்கு அப் பசுவைக் கொண்டுபோக எண்ணங் கொண்டார். வசிட்டமுனிவரின் மனமில்லாமல் பசுவைப் பிடிக்கச் சென்ற விசுவாமித்திரனின் நேரே பசுவிலிருந்து தோன்றின பல போர்வீரர்கள் போர் செய்யத் தொடங்கினார்கள். அதைக் கண்டு அரசன் அஞ்சி அகன்றான். பசுவிற்குப் பெரும் சக்தி உண்டென்ற தோற்றம் இவ் வரலாற்றில் பொதிந்திருக்கிறது. சூரிய குலமன்னராகிய திலீபச்சக்கிரவர்த்திக்கு நந்தினியின் அருளாலேதான் ரகுவென்ற புதல்வர் பிறந்தார். திலீபச் சக்கிரவர்த்தியும் அவர் மனைவியாரும் நந்தினியை வழிபடும் முறையைக் காளிதாஸர் மிகவாக வருணித்திருக்கின்றார். அவைகளைக் கவனிக்கில் பசுவின் பெருமையும் அதன் பாலுள்ள தெய்வத்தன்மையும் நன்கு புலனாக்கும். ஆகவே பசுவை நமது முன்னோர்கள் எங்ஙனம் பாதுகாத்துவந்தனரென்பதனை நன்கறிந்தோம். அது போல நாமும் பசுக்களை நன்கு பாதுகாத்து அதன் பயனைப் பெறுவோமாக.

ச. செல்வம்
சுசீந்திரம்.

---

## வேண்டுகோள்.

ஐயன்மீர்!

நமது மித்திரன் பிறந்து இன்றைக்கிரண்டாமாண்டு நிறைந்து மூன்றாமாண்டு முன் வரப்போகிறபடியால் சந்தாதாரர்கள் இதன் மூன்றாமாண்டுச் சந்தாத் தொகையை முன்னரே மணியாடர் மூலம் அனுப்பிவைத்தால் மிக்க நலமாயிருக்கும். மேலும் அவரவர் சந்தாக்களை வி. பி யில் வசூலிப்பதனால் அணா ஐந்து அதிகமாகச் சந்தாதாரர்களுக்கே செலவு நேருவதோடு வீண் சிரமமும் ஏற்படுகிறது என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளுகிறோம்.

ப. ர.

# மனிதர் வாழ்க்கை.

(திரு. கு மணிவண்ணன், யாதவன்.)

"அரிது அரிது மானிடராதலரிது
மானிடராயினும், கூன், குருடு, செவிடு, பேடு
நீங்கிப் பிறத்தலரிது,
பேடு நீங்கிப் பிறந்தகாலையும், ஞானமுங்
கல்வியும் நயத்தலரிது
ஞானமுங் கல்வியும் நயந்த காலையில்
வானவர் நாடு வழி திறந்திடுமே"

என்ற ஔவையார் செய்யுளில் மானிட சென்மம் உயர்ந்ததென்றும், அச்சென்ம வாழ்க்கைக்கு அத்தியாவசியங்கள் இன்னின்னவை என்றும் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. எல்லாப் பிறவிகளிலும், மானிடப் பிறவியே மேலானது என்றும், அப்பிறவிக்கு அப்பால் பிறவியேயில்லை யென்றும் சொல்லலாம். புண்ணிய வசத்தினால் மானிடப்பிறவி கிடைக்கிறது. மனிதப்பிறவியோ நுண்ணறிவும், பகுத்தறிவும், கூடியது. ஆனதினால் இம்மையிலும், மறுமையிலும் இன்பத்தையே அனுபவிக்கும் நன்மை மனிதனுக்கே உரித்தாகும். ஸ்ரீசர்வேச்வரன் மனிதர்களைத் தம் தொண்டுக்காகவே ஏற்படுத்தி இருக்கின்றார் என்றும் சிலர் அபிப்பிராயம் கொள்ளுகின்றனர். அது மிகவும் சரியே. ஏனெனில் நாமும் அசேனப் பொருள்களைப் போல ஒரு சிருஷ்டியே. சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்னும் முக்காரியங்களுக்கும் ஸ்ரீமந் நாராயணனாகிய அவனே காரணனாகின்றான். ஔவையாரும், 'பாரம் அவனுக்கு அன்னாய், நெஞ்சமே அஞ்சாதே நீ' என்று சொல்லியிருக்கிறாள். ஆகையால் எல்லாம் அவன் செயல், திருவுள்ளம் என்று நாம் முதலில் கொண்டு இவ்வுலகின் கண் எவ்வாறு வாழ்வது என்பதை ஆராயவேண்டும். அவ்வாறு ஆராயுங்கால் கல்வியே வாழ்க்கைக்கு அத்தியாவசியமென்றும், அக்கல்வியினால், அறம், பொருள் இன்பம் வீடு என்னும் நான்குவித புருஷார்த்தங்களும் கிடைக்கும் என்றும் புலப்படுகிறது. கல்வியில் இரண்டு விதமுண்டு, லௌகிகக்கல்வி, வைதீகக்கல்வி, இவ்

விரண்டும் மனிதர் வாழ்க்கைக்கு அவசியமே. லௌகிகக்கல்வி நாம் பள்ளிக்கூடங்களில் கற்பதுவே. அது இவ்வுலக வாழ்க்கைக்கு ஏற்பட்டது. மறுமைக்கு ஏற்பட்டது வைதீகக்கல்வி. ஒன்று இல்லாவிட்டால் ஒன்றும்பிரயோசன மில்லை. இரண்டும் ஏற்பட்டால்தான், மானிடப்பிறவிக்குரித்தான சாயுஜ்யம் கிடைக்கும். லௌகிகக்கல்வி நம்மை நல்வழிகளில் திருப்பி, நற்செயல்களைக் கற்பித்து, அன்பு, பொறை, தயாளம், உண்மை, முதலிய சிறந்த குணங்களையும் போதித்து மறுமை வாழ்க்கைக்கு ஏற்றவர்களாகச் செய்கிறது. ஸ்ரீமந் நாராயணனே பல அவதாரங்கள் இவ்வுலகின் கண் புரிந்து தம் சிருஷ்டிகளான மானிடர்களுக் கெல்லாம் எவ்விதம் இவ்வுலகில் நடந்து கொள்ளவேண்டும் என்பதை நிர்ணயித்திருக்கிறார். ராமாவதாரமென்ன!, கிருஷ்ணாவதாரமென்ன! அவைகளைப்பற்றிச் சற்றுச் சிந்திக்குங்கால் நாம் எம்மாத்திரம், அவன் பெருமையைச் சொல்லவும் ஆகுமோ என, ஆச்சரியப்பட வேண்டியதாக இருக்கிறது. நாம் எல்லோரும் அவன் அடியார்கள் என்ற ஒற்றுமைச் சம்பந்தமும் ஏற்படுகிறது. அதுதான் மனிதவாழ்க்கைக்கு முதலாவதாக வேண்டுவது. நாம் எல்லோரும் சகோதரர்கள் என்றும், நமக் கெல்லாம் ஒருதலைவர் இருக்கிறார் என்றும், அவரை நாம் அறியவேண்டுவதே நம்கடமையாகு மென்றும் நாம் நன்கு உணரவேண்டும்.

லௌகிக முறையில் அதிகம் விவரிக்க எனக்கு இஷ்டமில்லை. என்றாலும் சிறிது தெரிந்தவரையிலும் எழுதத்துணிகிறேன். அவையத்து முந்தியிருப்பச் செய்யக்காரணராகிய தந்தைக்கு இரண்டாவதாகக் கடமைப்பட்டவராவோம். இது பற்றியே ஔவையும், 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று அன்னையை முதல் வைத்துச் சொன்னார். நமக்குக் கல்வியை ஊட்டிய குருவும் ஒரு பிதா. 'கற்கக் கசடறக் கற்பவை, கற்றபின் நிற்க அதற்குத் தக' என்று திருவள்ளுவர் கூறியபடி, கற்றவழியிலே நிற்கவேண்டும். 'சக்கரநெறிநில்' என்று ஔவையாரும் கூறியுள்ளார். பிறரு நட்புக் கொள்ளுங்கால், ஆலோசித்துச் செய்தல் வேண்டும், "உடுக்கையிழந்தவன் கைபோலே ஆங்கே, இடுக்கண் களைவதாம் நட்பு" என்ற உண்மையை நாம் சிநேகம் பண்ணும் பொழுதும், கிரகிக்கும் பொழுதும் அனுஷ்டிக்கவேண்டும். தீயவர் சிநேகத்தை அறவேயொழித்தல் வேண்டும். பெரியோர் சிநேகத்தை நாடல் வேண்டும். பொருளைத் தேடுங்கால், சத்விஷயங்களில் சேகரிக்க வேண்டும். சேகரித்த பொருளை நிதானமாகச் செலவிடல் வேண்டும்.



"ஆன முதலில் அதிகம் செலவானால்,
மானமழிந்து மதிகெட்டு; போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய்; ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு"

என்றபடி செலவை வருமானத்திற்கு மேல் அதிகரிக்க விடுவது தவறு. தேடினபொருளை அறஞ்செய்ய வேண்டும். சற்பாத்திரத்திலும், உசிதமான வழிகளிலும் செலவிடுவது நல்லது.

இவ்வித தர்மங்களை யெல்லாம் உலகில் அவதரித்து நடத்திக் காட்டிய எம்பெருமானை நினைக்கவும், துதிக்கவும் இதுவே தருணம். இதற்குமுன் நினைக்கவேண்டுவதில்லையா என்றால் அப்பொழுதும் அவசியந்தான். ஆனால் இப்பொழுதைப் போல் நம் காலமுழுமையும் எம்பெருமான் விஷயத்தில் செலவிடுவது அசாத்தியமாகும். பக்தி என்பது ஒவ்வொருவருக்கும் முக்கிய அம்சமாக அமைந்து இருக்கவேண்டும். அது கடவுளுக்கும் நமக்கும் உள்ள ஒருவித மனப் பான்மையைக் காட்டுகிறது. ஆசாரங்கள் பக்தியாகமாட்டா. ஆனால் அவைகள் பக்தியை வளர்க்கவும் சேர்க்கவும் திருத்தவும் சாதனங்களாகும். கண்ணப்ப நாயனாருக்குக் கதியில்லையா, மார்க்கண்டேயருக்கு முக்தியில்லையா, சபரி என்ன அனுமான் என்ன! துருவன் என்ன! நம்முடைய சித்தாந்தத்தில் இப்பக்திக்கு அனுகூலமாக இருப்பவர்கள் ஆழ்வார்களே யாவர். அவர்கள் பக்தி வைராக்கியத்தைப்பற்றி அடுத்த வியாசத்தில் வெளிவரும்.

(தொடரும்.)

---

யாதவ குலாபிமானிகளே!

நமது குலம் மேலும் மேலும் விருத்தியடைய வேண்டுமல்லவா! அதற்கு அத்தியாவசியமான கல்வியை நமது சமூகத்தில் வளர்ப்பதிலேயே நாம் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டு மல்லவா? இதுவரை நம்மை அடிமைப்படுத்திக் கொண்டு வந்த மிடிமைத்தனத்தை அடியோடே ஒழியுங்கள். முன்னேறுதற்கு முயன்று பாடுபட முந்துங்கள். நமது குலநலங்கருதியே உங்களோடு குலவிப் பரவுகின்ற குழந்தையாகிய நமது மித்திரனை ஆதரியுங்கள். சீக்கிரமாக இதில் சந்தாதாரராகச் சேருங்கள். சேர்ந்துள்ள சந்தாதாரர்கள் வருஷம் ஒன்றுக்கு ரூபா ஒன்றினைப் பெரிதாகக் கருதி மலைத்து நமது மித்திரனை நிறுத்திவிட வேண்டுமென்று நினையாதீர்கள். முந்துங்கள்! நடந்துங்கள்! முற்போக்கடையுங்கள். ப-ர்.

# கால் நடை வைத்தியம்.

பதிப்புரிமை செய்யப்பட்டது.

திரு S. பெருமாள்கோன்.

(250-வது பக்கம் தொடர்ச்சி.)

(பேதி மருந்துகள்.) மருந்துப் பட்டிகள்.

( 17 நிர். )

| | | |
|---|---|---|
| அபின் | 3 ட்ராம் | 1 ரூபாயெடை |
| பெருங்காயம் | 3 ட்ராம் | 1 ரூபாயெடை |
| சுக்கு | 3 ட்ராம் | 1 ரூபாயெடை |
| சாதாரணமிளகு | 3 ட்ராம் | 1 ரூபாயெடை |
| நாட்டுச்சாராயம் | 4 அவுன்ஸ் | 4 அவுன்ஸ் |

எல்லாமருந்துகளையும் நன்றாகப் பொடி பண்ணினபிறகு சாராயத்தில் கரைத்து அரையே அரைக்கால் படி ஜலத்தில் கலந்து கொடுக்கவேண்டும்.

( 18 நிர். ) வாய்கழுவும் மருந்துகள்.

| | | |
|---|---|---|
| படிக்காரம் சீனக்காரம் | 4 ட்ராம் | $1\frac{1}{4}$ ரூபாயெடை |
| தண்ணீர் | 1 பயிண்ட் | காலே வீசம்படி |

கரைத்து வாய்கழுவும் நீராகவாவது புண் ஆற்றும் நீராகவாவது உபயோகிக்கலாம்.

( 19 நிர். )

| | | |
|---|---|---|
| வெண்காரம் | 4 ட்ராம் | $1\frac{1}{4}$ ரூபாயெடை |
| தண்ணீர் | 1 பயிண்ட் | காலே வீசம் படி |

கரைத்து வாய்கழுவும் நீராகவாவது புண் ஆற்றும் நீராகவாவது உபயோகிக்கலாம்.

( 20 நிர். ) கிருமிகளை அகற்றுவதற்கான மருந்துகள்.

| | | |
|---|---|---|
| கற்பூரத்தைலம் | 2 அவுன்ஸ் | அரை வீசம் படி |
| ஆழிவிரை யெண்ணெய் | I பயிண்ட் | காலே வீசம் படி |

பிராணியைப் பன்னிரண்டுமணிநேரம் பட்டினி போட்டுவைத்திருந்து பிறகு கொடுக்கவேண்டும்.



( 21 நிர். )

| | | |
|---|---|---|
| கரியுப்பு | 2 அவுன்ஸ் | 5 ரூபாயெடை |
| அன்னபேதிப்பொடி. | $\frac{1}{2}$ அவுன்ஸ் | $1\frac{1}{4}$ ரூபாயெடை |
| கந்தகப்பொடி | 1 அவுன்ஸ் | $2\frac{1}{2}$ ரூபாயெடை |

அரையே அரைக்காற்படி தண்ணீரில் தினம் இரண்டு வேளையாகச் சுமார் ஒருவாரம் வரையில் கொடுத்தபிறகு 1 நிர். மருந்து பட்டியிற் கண்டபேதி மருந்தைக் கொடுக்கவேண்டும்.

( 22 நிர். )

| | | |
|---|---|---|
| பெருங்காயம் | $\frac{1}{2}$ அவுன்ஸ் | $1\frac{1}{4}$ ரூபாயெடை |
| கந்தகப் பொடி | 1 அவுன்ஸ் | $2\frac{1}{2}$ ரூபாயெடை |

21 நிர். மருந்துப்பட்டியிற் சொல்லியிருக்கிறபடி கொடுக்கவேண்டும்.

( 23 நிர். ) சொறிக்குப் போடும் மருந்துகள்.

| | | |
|---|---|---|
| கந்தகப் பொடி | 4 அவுன்ஸ் | 10 ரூபாயெடை |
| கெரொஸின் எண்ணெய் | 4 அவுன்ஸ் | வீசம் படி |
| வேப்பெண்ணெய் | 1 பயிண்டு | காலே வீசம் படி |

கலந்து வைத்துக்கொண்டு கொஞ்சம் எடுத்துச் சொறியுற்ற இடங்களில் தினம் இரண்டுவேளை அரக்கித் தேய்க்கவேண்டும்.

( 24 நிர். )

| | |
|---|---|
| பினைல் | 1 பங்கு |
| தண்ணீர் | 100 பங்கு |

இது ஆடுகளுக்கு நல்ல முழுக்கு மருந்தாகும்.

( 25 நிர். )

| | |
|---|---|
| புகையிலை | 1 பங்கு |
| தண்ணீர் | 10 பங்கு |

புகையிலையைத் தண்ணீரில் போட்டுச் சுமார் அரைமணிநேரம் கொதிக்கவைத்து இறுத்து ஆடுகளுக்கு முழுக்கு மருந்தாக உபயோகிக்கலாம்.

( 26 நிர். ) புண்ணுக்குப் போடும் மருந்துகள்.

| | |
|---|---|
| கற்பூரம் | 1 பங்கு |
| நல்லெண்ணெய் | 4 பங்கு |

( 27 நிர். )

| | |
|---|---|
| வெனிஸ் டர்ப்பென்டைன் | 1 பங்கு |
| நல்லெண்ணெய் | 8 பங்கு |

எண்ணெயில் டர்ப்பென்டைனை உருகும்படியாகக் காய்ச்சி இறுத்துக்கொள்ள வேண்டும்.

( 28 நிர். )

| | | |
|---|---|---|
| மயில் துத்தப்பொடி | 1 ட்ராம் | 3 அரைக்கால் ரூபாயெடை |
| வெந்நீர் | 1 பயிண்ட் | காலே வீசம் படி |

கரைத்துக் குளிர்ந்தபின் வேண்டிய மட்டில் போடலாம்.

( 29 நிர். )

| | | |
|---|---|---|
| சீமைச்சுண்ணாம்புப்பொடி | 1 அவுன்ஸ் | 10 ரூபாயெடை |
| கரிப்பொடி | 1 அவுன்ஸ் | $2\frac{1}{2}$ ரூபாயெடை |
| சீனிக்காரப்பொடி | $\frac{1}{2}$ அவுன்ஸ் | $1\frac{1}{4}$ ரூபாயெடை |
| மயில் துத்தப்பொடி | $\frac{1}{9}$ அவுன்ஸ் | $1\frac{1}{4}$ ரூபாயெடை |

இவைகளைக் கலந்து வைத்துக்கொள்ள வேண்டும். புண்களிலும் முக்கியமாகக் கால் நோய் வாய் நோயில் உண்டாகும் கால்புண்களிலும் தூவிப் போடுவதற்கு இது உதவும்.

( 30 நிர். ) மருந்து தைலம்.

டர்ப்பென்டைன் கற்பூரத்தைலம்<br>கடுகெண்ணெய் } சமபாகங்கள்.

கலந்து அரக்கித் தேய்க்க வேண்டும்.

வியாதிகளின் தன்மையும் செய்யவேண்டிய சிகிச்சைகளும் இனிமேல் விவரிக்கப்படும்.

பிராணிகளுக்கு ஏற்படும் வியாதிகளுக்கும் சிகிச்சை செய்வதற்கும் வியாதிக்குத் தகுந்தாற்போல் மேல்கண்ட நெம்பர்களைக் குறிப்பிட்டுத் தான் சொல்லமுடியும். மருந்துகளைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. மருந்துகளை அந்த நெம்பர்களில் பார்த்துக்கொள்ளலாம்.

ஆகையால் மருந்து பட்டியில் மருந்துகளின் நெம்பர்களைத் தெரிந்து கொள்ளவேணும். நெம்பர்களுக்கு நேராக இருக்கும் மருந்துகளையும் தெரிந்து கொள்ள வேண்டியது.

(தொடரும்.)

# நைனியப்ப பிள்ளை.

## (ஆனந்தரங்கப்பிள்ளையின் மாமன்)

(திரு. ரா. தேசிகன் பிள்ளை)

பிரான்சுவா மர்த்தேன் (Francois Martin) ஆளுகையின் கீழ் 1690ம். ஆண்டில் புதுச்சேரி சிறிது அபிவிருத்தியடைந்தது. பிரான்சுக்காரரின் இந்தியா கம்பெனிக்குத் துவிபாஷியாக இருந்து வந்தவரைச் சுதேசப் பிரஜைகளுக்குத் தலைவராக நியமிக்கப்பட்டது. அக்காலையில் பிரான்சுவா மர்த்தேன் பிரான்சுதேசத்தின் பேரால் ஓர் பிரசித்த அறிக்கை வெளிப்படுத்தினான். புதுச்சேரியில் குடியேறும் குடும்பங்களின் பழக்க வழக்க ஆசாரங்கள் யாவும் போற்றப் படுமென்றும், அக்குடும்பங்கள் அனுஷ்டித்துவரும் மதங்களில் தலையிடப் படாதென்றும் அவ்வறிக்கையில் கூறப்பட்டிருந்தது. அதுகண்ட பல தொழிலாளர்களும், தனவந்த வர்த்தகர்களும் புதுச்சேரி போந்தனர்.

பிரான்சுவா மர்த்தேனுக்குப் பின்னர், அவன் ஸ்தானத்தில் நியமிக்கப்பெற்ற ஹெபேர் (Hebert) என்பவனும் மேற்சொன்ன வாக்குறுதிகளைத் தந்ததோடு அவரவரும் தத்தம் இஷ்டப்படி வியாபாரஞ் செய்யலாமென்றும் விளம்பரப்படுத்தினான்.

சென்னையில் அச்சமயம் வர்த்தகஞ் செய்து கொண்டிருந்த நைனியப்ப பிள்ளை அதை விட்டுவிட்டுப் புதுச்சேரிக்கு வந்து சேர்ந்தார். 1704 ஆ செப்டம்பர்மீ 24உ வெற்றிலை புகையிலை இவ்விரண்டின் குத்தகையைச் சர்க்காரிடமிருந்து வாங்கிக்கொண்டு, ஆண்டொன்றுக்கு 2400 வராகனாக இரண்டாண்டு அக்குத்தகையை நடத்தி வந்தார். 1708 ஆண்டில் ஜவுளி வர்த்தகர்கள் தங்கள் சரக்குகளின் விலையில் 100க்கு 12 அதிகப்படுத்தித்தரவேண்டுமென்று இந்தியா கம்பேனியாளரைக் கேட்டுக் கொண்டனர். அப்போது நைனியப்ப பிள்ளை குறைந்த விலைக்கு ஜவுளிகள் கொடுப்பதாகத் தான் ஒப்புக்

* இது புதுவையிலுள்ள பிராஞ்சிந்திய சரித்திர ஆராய்ச்சி சங்கத்தாரின் பிராஞ்சு வெளியீடுகளினின்று தொகுத்தது.

கொண்டு அவ்வாறே கொடுத்துதவினர். சிலகாலஞ் சென்றபின் கம்பெனியாரிடமிருந்த பவழங்களை விற்கவேண்டி வந்தது. அப்போது கம்பெனியின் துவிபாஷியாக விருந்த இந்தியக் கிறிஸ்தவரான லஜார் தெ மோட்டா (Lazarede Motta) என்பவரால் அப் பவழங்களை விற்கமுடியாது போயிற்று. அதுகாலை நைனியப்பபிள்ளை அவைகளை விற்றுத் தருவதாக உடன் பட்டு, அவ்வாறே விற்றுத் தந்தார். இவ்வுபகாரத்தின் நன்றிக் கறிகுறியாக ஹெபேர் நைனியப்ப பிள்ளையைக் கம்பெனியின் துவிபாஷியாக, லஜார் தெ- மோட்டாவுக்குப் பதிலாக, 1708 ௵ டிசம்பர்மீ 18௳ நியமித்தான்.

இந்நியமகம் வெகு கிலாக்கியமானதாக இருந்தது. அந்நாளில் வியாபாரம் விருத்தியடைந்தும் இந்துக்கள் தொகை பெருகியும் இருந்ததால் ஒரு இந்துவை துவிபாஷியாக நியமித்தது கம்பெனியாரின் வேலைகளுக்குப் பெருந்துணையாயிற்று. மேலும் நைனியப்ப பிள்ளை அப்பதவிக்குப் பெரிதும் பொருத்தமானவரா யிருந்தார். ஹெபேர் அவரைப்பற்றிப் பேசும்போது "அதிக செல்வாக்குள்ளவரும், அறிவிற் சிறந்தவருமான நைனியப்ப பிள்ளை" என்று குறிப்பிடுவதே அவரின் உயர்வைத் தெற்றெனத் தெரிவிக்கிறது.

நைனியப்ப பிள்ளை துவிபாஷியாக நியமிக்கப்பட்டது முதல் மதப்பிரசாரஞ் செய்யவந்த கிறிஸ்தவக் குழுவினர் அவர்மீது பொறாமை கொண்டு, அவருக்கும் அவரைச்சேர்ந்த இந்துக்களுக்கும் இன்னல்கள் பல செய்தனர். நைனியப்ப பிள்ளையை எவ்வாற்றானும் விலக்கி ஒரு கிறிஸ்தவரையே அவர் ஸ்தானத்தில் அமர்த்த வேண்டுமென்று பல சூழ்ச்சிகள் செய்து, கடைசியாக அவரை ஆதரித்து வந்த ஹெபேர் மீதும் பல குற்றங்கள் சுமத்தி பாரீஸ்(Paris) நகரத்திற்கு அறிவித்தனர். பாரீஸ் அரசாங்கம் ஹெபேரை திரும்பி வரும்படி அழைத்ததுமன்றி துய்லிவியே (Dulivier) என்பாரைப் புதுச்சேரிக்குக் கவர்னராக நியமித்தனுப்பிற்று.

நைனியப்ப பிள்ளை மீது நடவடிக்கை ஒன்றும் இல்லாததால் கிறிஸ்தவர்கள் திருப்தியடையவில்லை. வெர்சாய்(Versailles) அரசமன்றத்துக்கு வேண்டுகோள் ஒன்று அனுப்பினர். இந்துக்கள் புதுச்சேரியிலுள்ள சிவன் கோயில் விஷ்ணுகோயில் இவ்விரண்டு தவிர, மற்றவற்றிற்குப் போகாவண்ணம், பிற இந்து கோவில்கள் எல்லாவற்றையும் மூடிவிட வேண்டுமென்றும், நைனியப்ப பிள்ளையைத் துவிபாஷி வேலையினின்று உடனே விலக்கிவிட வேண்டுமென்றும், அவ்வேலைக்கு எப்போதும் ஒரு கிறிஸ்தவரையே நியமிக்க வேண்டுமென்றும் அவ்வேண்டுகோளில் குறிப்பிட்டிருந்தனர். அதை அங்கீகரித்து 14வது லூய் (Louis XIV) சிவன், விஷ்ணு கோவில்கள் தவிர மற்ற இந்து ஆலயங்கள் யாவையும் மூடிவிட வேண்டுமென்றும், நைனியப் பிள்ளை ஆறுமாதத்துக்குள் கிரிஸ்தவமதத்தைத் தழுவாவிட்டால் அவரை விலக்கி அவர் ஸ்தானத்தில் ஒரு கிறிஸ்தவரை நியமகஞ் செய்யப்படுமென்றும் பிரான்ஸிலிருந்து உத்திரவு பிறப்பித்தான்.



இந்தியா கம்பெனியின் நிர்வாகஸ்தர்கள் இவ்வித உத்திரவினால் புதுச்சேரியில் கம்பெனிக்குப் பாதகம் ஏற்படுமென்று அஞ்சிச் சிறிது காலம் அதை விளம்பரப் படுத்தாமல் வைத்திருந்தனர். மேற்படி உத்திரவு பகிரங்கப் படுத்தப்பட்டால் இந்து சமூகம் முழுதுமே புதுச்சேரியை விட்டு வெளிச் சென்று விடுமென்று அவர்களுக்குத் தெரியும். ஆகவே, அவர்கள் கவர்னருடன் தங்கள் ஆலோசனை சபையில் தந்திரமானதொரு முடிவு செய்தனர். நைனியப்ப பிள்ளை செய்துள்ள அரிய பெரிய உபகாரங்களையும், அவர் அறிவின் முதிர்ச்சியையும், வேலைத்திறனையும் பலரறியப் பாராட்டவேண்டுமென்றும், அரசர் விரும்புமாறு கோவில்களிலொன்றை நைனியப்ப பிள்ளை உதவியைக்கொண்டே இடித்துவிட ஏற்பாடு செய்யவேண்டுமென்றும், அவரோடு அவர் வேலைகளுக்கு அனுகூலமாக உதவிப் பிரதானிகர் ஒருவரை நியமிக்க வேண்டுமென்றும், அவ்வுதவிப் பிரதானிகர் கிறிஸ்து மதத்தினராய் இருத்தல் வேண்டுமென்றும் இவர்களால் தீர்மானிக்கப்பட்டன.

(தொடரும்)

---

யாதவ குலாபிமானிகளே!

நமது மித்திரன் பிறந்த ஆண்டு மிகுந்த காப்பிகளும் அதன் இரண்டாம் ஆண்டு குறைந்த காப்பிகளும் செலவாகி மூன்றாம் ஆண்டு பிறக்கப்போகும் இச் சமயம் சிறிது காப்பிகளே செலவாகின்றன. அதிலும் வீ-பி என்றால் விரும்பாமல் திரும்பிவந்து விடுகின்றன. "நாளேற நாளேற நமது சமூகம் எவ்வளவில் முன்னேறி வருகின்றது" என்று அளந்தறிவதற்கு நமது மித்திரன் ஒரு அளவு கருவியாகவும் துலங்குகின்றான் அல்லவா? பரிதாபம்! பரிதாபம்! ப-ர்.

திருவாளர்.

# எம். கெ. ஆராவமுது பிள்ளை

## அவர்கள், எம். ஆர்., ஏ. எஸ்.,

இவர் செங்கற்பட்டு ஜில்லாவில் தாசில்தாராகவிருந்து யாவராலும் புகழ்ப்பெற்றுக் காலஞ்சென்ற திருவாளர் எம். கோதண்டராமப் பிள்ளையவர்களின் புதல்வர்; பெருமதிப்பும் கலைநலமும் வாய்ந்த யாதவ குடும்பத்தில் தோன்றியவர். இவர் சைதாப் பேட்டையிலுள்ள ஆசிரியக் கல்லூரியில் (Teacher's College) கல்வி பயின்றார்; 1910-ஆம் ஆண்டில், காஸ்லி டிபார்ட்மெண்ட், அக்கவுண்டெண்டு ஜெனரல் ஆபீஸில் உத்தியோகத்தில் அமர்ந்தார்; இளமையிலே பொதுநல உழைப்பில் கருத்தைச் செலுத்தி உழைக்க ஆரம்பித்தார். உத்தம குணங்களும் உயர்தரச் செயல்களும் அமையப் பெற்றவர். இவரது ஊக்கத்தினாலும், விடாமுயற்சியின் பயனாலும் 1917-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12-ஆம் தேதி சென்னை ஸ்ரீயதுகுல மகா சங்கத்தை ஸ்தாபித்தார். பொதுவாக இந்தியர் முன்னேற்றத்தைப்பற்றியும், சிறப்பாக யாதவ சமூகத்தைப் பற்றியும் சென்னையிலுள்ள பல தினசரிப் பத்திரிகைகளுக்கும் அடிக்கடி அறிவு நிரம்பிய கட்டுரைகள் பல எழுதி வருகின்றார். இவர் தம் ஒழுக்கத்தைப் பற்றியும் வேலையைப் பற்றியும் தென்னிந்தியாவிலுள்ள சிறந்த தலைவர்களிடமிருந்து பல நன்மதிப்புப் பத்திரங்களைப் பெற்றிருக்கின்றார்; இந்தியா முழுவதும் பிரயாணம் செய்திருக்கின்றார். சென்ற 20 ஆண்டுகளாகச் சென்னைச் சுகுண விலாஸ சபையில் சிறந்த நடிகராகவிருந்து வந்தனர். இவரது நடிப்பின் திறம் சிலோன்வாசிகளாகிய அறிஞர்களாற் பெரிதுங் கொண்டாடப்பட்டது. இவர் பல துறைகளிலும் ஆற்றுந் தொழிலின் திறம் நிகரற்றதாகும். இவர் பொதுநலத் தொண்டில் கருத்தூன்றியவராகவும் 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்பதை நல்லுபதேசமாகக் கொண்டவராகவும் விளங்குகின்றார்.



இராஜா ஸர் இராமசாமி இலவச வாசகசாலைக்கு இவர் பொக்கிஷதார்; சென்னைபுரி அன்னதான சமாஜத்திலும், திருவல்லிக்கேணியிலுள்ள அன்னதான சமாஜத்திலும் இவர் ஓர் அங்கத்தினராகவுமிருந்தனர்; கோமளாம்பிகை பக்தகான சபையின் காரியதரிசியாகவும், தருமராஜாகோவிலின் பொறுப்பாளராகவும் இருப்பதுடன் பல கூட்டங்களிலும் பொதுக் கழகங்களிலும் சம்பந்தப்பட்டிருக்கின்றார். இவரது இளைய சகோதரர் J. K. ராம் என்பார் ஆங்கிலேய பட்டங்கள் பெற்று இலண்டன்மாநகரில் 15 ஆண்டு தங்கியிருந்து தொழிலாளர் பகுதியிற் சேர்ந்துழைக்கும் அரும்பேறுபெற்றவராகக் காண்கின்றார். இவர் பாட்டனாராகிய காலஞ்சென்ற மெய்யூர் சந்திரசேகரப் பிள்ளை அவர்கள் வைணவப்பற்று மிகுதியுமுடையவராவர்; அவர் செங்கற்பட்டு ஜில்லாவிற் பிரபலமான அப்காரி கண்டிராக்டராக இருந்தவர். அவர் பல்லாவரத்தில் ஒரு சத்திரமும், பறங்கிமலையில் ஒரு பள்ளிக்கூடமும் கட்டியுள்ளார்; ஸ்ரீ பெரும்பூதூரில் ஸ்ரீராமாநுஜர் திருவிழாவின்போது பாகவதர்களுக்குத் ததியாராதனை ஸ்ரீமான் பரசமயக்கோளரி முடிச்சூர் அப்பாரியர் பணித்த ஸ்ரீ ஆதி இராமாநுஜ கூடத்தை ஆதரித்தும் உதவிபுரிந்தும் இப்பொழுது 109-வது வருஷத்திய கைங்கர்யம் பலர் உதவியினால் நடைப்பெற்று வருகிறது.

திருவாளர். எம். கெ. ஆராவமுது பிள்ளை அவர்கள் நம் குலத் தலைவர்களுள் சிறந்து விளங்குபவர். ஸ்ரீ யதுகுல மகா சங்கம் தொடங்கிய நாள்முதல் இந்நாள் வரையில் 14 ஆண்டுகளாகப் பெருஞ்செயல் பலபுரிந்து இடையறாது தளரா ஊக்கத்துடன் உழைத்துவருகின்றார். இவர் மேற்படி சங்கத்தில் காரியதரிசியாகவும், சென்னை யாதவ வாலிப சங்கத்தில் உபதலைவராகவும் இருந்து வருகிறார். இத்தகைய குலாபிமானியேதான் நாம் ஒவ்வொரு வருஷமும் யாதவ மகாநாடுகள் கூட்டியும் பலகிளைச் சங்கங்கள் ஏற்படுத்தியும் பொதுவான முன்னேற்றத்திற்குவர நேர்ந்திருக்கிறதற்கும் முக்கியமான காரணம் என்னலாம். இவர் இன்னும் இத்தகைய பல உயரிய பதவிகளையும் கௌரவங்களையும் அடைந்து பல்லாண்டு வாழ நம் பெருமானது திருவடித் தாமரையை இறைஞ்சுவோமாக.

# தமிழ் மொழி

திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை,

உலகத்தி லுள்ள மக்கள் முதல் முதல் ஒருவர் கருத்தை மற்றொருவர் அறிந்துகொள்ளும் பொருட்டு ஏற்படுத்திக்கொண்ட சொற் கூட்டமே மொழி எனப்படும். அது முதல்முதல் ஏற்படுத்தப் பட்டபோது ஒலி வடிவில் அமைந்தது. பின்னர், மக்கள் தொகுதியினர் இறைவனால் தமக்களிக்கப்பட்ட பகுத்தறிவின் துணைகொண்டு, ஒலி வடிவில் அமைந்த மொழிக்கு வரி வடிவும் ஏற்படுத்திக் கொண்டனர். மொழிகள் வரி வடிவு பெற்ற பின்னரே மக்கள் நூல்கள் இயற்றத் தொடங்கினார்கள். எம்மொழி சிறந்த கருத்துகளடங்கியனவும் மக்களுக்கு உறுதி பயக்கத் தக்கனவுமாகிய சீரிய நூல்களைக் கொண்டு விளங்கியதோ, அம்மொழியே சிறந்த மொழியெனக் கொண்டாடப்படுவதாயிற்று. இது நிற்க.

ஒரு நாட்டார் தம் குழவிப் பருவம் தொடங்கித் தம்மை ஈன்றெடுத்த தாய்மார் தம்முடன் எம்மொழியில் உரையாட ஆரம்பித்தாரோ, அம்மொழியையே, தாய்மொழி என்னும் தரவுடைப் பெயரால் வழங்கலாயினர். ஆதலின், பண்டைக் காலந் தொடங்கி இந்தியாவில் வடக்கில் வேங்கட மலை முதல் தெற்கில் கன்னியா குமரி வரையிலும் இருந்த நிலப் பகுதியில் வாழ்ந்து வந்த மக்கள் தமிழ் என்னும் மொழியைத் தம் தாய் மொழியெனக் கொண்டு, அதனை அமிழ்தினும் இனிதெனப் போற்றி வரலானார்கள். ஆதலின், இந்நாள் தமிழர் எனக் கூறிக்கொள்ளும் நாமும் அம்மொழிக்கு உரிமை பூண்டவரே யாவோம். இனி இம்மொழியின் உயர்வைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்:

இம்மொழியிற் புலமை பெற்று விளங்கிய பண்டைக் காலப் புலவர் பெருமக்கள், கூட்டம் கூடியிருந்து, ஆராய்ச்சிகள் பல புரிந்து, நூல்கள் பல இயற்றி வந்தார்கள் என்பர். அங்ஙனம் கூடிய கூட்டமே சங்கம் எனப்பட்டது. அது முதற் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் என முவ்வேறு காலங்களில் வெவ்வேறு இடங்களில் விளங்கித் தமிழ் மொழியை வளப்படுத்தி வந்ததென்பர். முதற் சங்



கத்தில் சிவ பெருமானும் புலவர்களும் ஒருவராக வீற்றிருந்து தமிழாராய்ந்து வந்தனர் என்பர் ஒரு சாரார். இம்மொழியிற் புலமை பெற்று விளங்கிய பெருமக்கள், இதன் உதவி கொண்டு, தெய்வச் செயல் பல புரிந்தனர் என்பர் ஒரு சாரார். இக்கருத்துகள் மனத்திற்கொண்டு, தமிழ்ப் பெரும்புலவர் ஒருவர்,

'கண்ணுதற்பெருங் கடவுளும் கழகமோ டமர்ந்து
பண்ணுறத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமிழ் ஏனை
மண்ணிடைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ?

'தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும், முதலை
உண்ட பாலனை அழைத்ததும், என்புபெண் உருவாக்
கண்டதும், மறைக் கதவினைத் திறந்ததும், கன்னித்
தண்டமிழ்ச்சொலோ, மறுபுலச் சொற்களோ? சாற்றீர்.

என்று கூறினர்.

'இவை யாவும் பொய்ப் புராணங்கள் புனைந்து கூறும் வெறும் பொய்கள்; கட்டுக்கதைகள்; ஏட்டுச் சுரைக்காய்; என நீட்டிப் பேசுவார் இந்நாளில் தம்மைத் தாமே ஆங்கிலப் பெருங்கவிகளாக எண்ணித் தருக்கி நிற்போர் சிலர். ஆதலின், இவை நிற்க.

சின்னாட்களுக்கு முன்னர் இந்நாட்டில் தமிழ் நலம் நுகர்ந்து தம் பெயர் நிறுவிய சி. சுப்பிரமணிய பாரதியார் என்னும் நற்றமிழர்,

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்.

என்றும்,

'யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மைவெறும் புகழ்ச்சி இல்லை.

என்றும் கூறியது உண்மை யாகாதோ?

'வெகு நன்று! தமிழ்ப் புலவர்களுக்குப் பேசத்தான் தெரியாது! அகழியில் விழுந்த முதலைக்கு அதுதானே வைகுந்தம்? தமிழ் என்பர்; அது தனி மொழி எனச் சாதிப்பர்; அது கடலென்பர். இன்னும் என்னதான் கூறார்? இவர் என்ன சொல்வது? நம்

பனைவிட வம்பு பேச வேறு யார் வல்லவர்? அப்புலவன், தமிழ் எனும் அளப்பருஞ் சலதி, 'என்று கூறவில்லையா? இந்தப் புரட்டுகளை இருபதாம் நூற்றாண்டில் எவர் நம்புவர்? தமிழ் கற்றோர் சோற்றுக்குத் தாளம் போடுவதை நாம் பார்க்கவில்லையா? இதுவொன்றே தமிழின் ஏற்றத்தைத் தெரிவிக்கிறதே! 'என வாய் மதம் பேசுவர் சிலர். ஆதலின், தமிழராவார் கூறுவன கிடக்க. இனிப் பிற மொழிப் புலவர்கள் இம்மொழியைப்பற்றிக் கூறுவனவற்றைக் கவனிப்போம்:

இந்நாள் உலக முழுதும் மகாத்மா எனக் கொண்டாடும் உத்தமராகிய காந்தி என்னும் பெரியார், தாம் எழுதிய சிறைச்சாலை அநுபவங்கள்' என்னும் கட்டுரையில் பின் வருமாறு கூறுகின்றார்:

இந்நாள் போராட்டத்தில் தமிழர் செய்தது வேறு எவ்விந்திய சமூகத்தினரும் செய்திலர். ஆகவே, வேறு காரணத்திற்காக அல்லாவிடினும், என் நன்றியறிதலைக் காட்டுதற்கேனும், யான் அவர்கள் நூல்களைக் கருத்து ஊன்றிப் படிக்க எண்ணினேன். ஆதலின், அவர்கள் மொழியைக் கருத்து ஊன்றிக் கற்பதில் சென்ற மாதத்தைக் கழித்தேன். எவ்வளவுக்கதிகம் கற்றேனோ, அவ்வளவுக்கதிகம் அதன் அழகுகளை உணர்ந்தேன். அது விரும்பத்தக்கதும் இன்பமானதுமான மொழி. நான் கற்றதிலிருந்து தமிழர் தங்களுக்கு இடையில் பண்டும் இன்றும் அறிவும் சாதுரியமும் ஞானமும் வாய்ந்த மக்களைக் கொண்டவர்கள் என்பதை அறிகிறேன். பின்னும், இந்தியாவில் மக்கள் தொகுதி ஒன்றாகுமானால், சென்னை இராஜதானிக்குப் புறம்பே வாழும் மக்கள் தமிழ் அறிதல் வேண்டும்.' *

* What the Tamils have done in the struggle no other Indian community has done. So I thought that if for no other reason than to show my sincere gratefulness to them, I should seriously read their books. So I spent the last month in attentively studying their language. The more I studied the more I felt its beauties. It is an interesting and sweet language, and from what I read, I saw that the Tamils had in their midst, in the past and even now, many intelligent, clever and wise persons. Again, if there is to be one nation in India, those who live outside the Madras Presidency, must know Tamil."
From "Mahatma Gandhi's Jail Experiences."



'மகாத்துமா காந்தியும் இந்தியர்தானே!' என்றும் சிலர் கூறலாம், காலம் சென்ற ஜி. யூ. போப்பையர், அயல் நாட்டவர் என்பதை யாவரும் அறிவர். அப்பெரியார் தமிழ்மொழியைத் தம் தாய்மொழியினும் சிறந்ததாகக் கருதி, விரும்பிக் கற்றார்; தமிழில் உயர்தனி நூலாக விளங்கும் திருக்குறளையும், மணிவாசகப் பெருந்தகையார் இயற்றிய திருவாசகத்தையும், சைனப் பெரும்புலவர்கள் இயற்றிய நாலடியார் என்னும் நீதி நூலையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்; அதனால், தமிழறியாதாரும் தமிழின் மாட்சிமையை அறியச் செய்தார். தாம் இறப்பின், தம்மை அடக்கம் செய்யும் கல்லறையில் கல் நாட்டும்போது. அக்கல்லில் தாம் ஒரு தமிழ் மாணவர் என்பதைக் குறிப்பிடுமாறும் தம் சுற்றத்தினர்க்கு அறிவித்தனர் என்றால், தமிழின்மீது அப்பெரியாருக்கிருந்த பெருமதிப்புத்தான் என்னே!

மொழியாராய்ச்சியில் வல்லுநராகிய டாக்டர் கால்ட்வெல்* என்பாரும், கனம் டெய்லர்† என்பாரும் தமிழை எவ்வளவு போற்றிப் பேசுகின்றனர்!

இவர்கள் மட்டுமா? இன்னும் எத்தனையோ அயல் நாட்டு அறிஞர்கள் இம்மொழியைப் பன்னாள் முயன்று கற்று, இதிலிருக்கும் அருமை பெருமைகளை வியந்து பாராட்டுகின்றார்கள். அவர்தம் கொள்கைகள் எல்லாம் விரித்தெழுத முயன்றால், இவ்வியாசம் இடந்தராதே என அஞ்சுகின்றோம்.

இந்நாட்டுத் தமிழ்ப் பெரும்புலவர் கூற்று ஒரு புறமிருக்க, இந்நாட்டிலேயே தம் தாய் மொழியாம் தமிழ் மொழியினும், அயல் நாட்டு மொழிகளாகிய ஆங்கிலம் முதலிய பிற மொழிகளினும் மாசறு புலமை பெற்று விளங்கியவரும் (விளங்குகின்றவருமாகிய நல்லறிஞர் பலரும் பிற மொழிகளினும் தமிழ் மொழியே சாலச் சிறந்த தனி மொழி என்று போற்றினர்-போற்றுகின்றனர்:

* Tamil the most cultivated, *ab-intra*, of all the Dravidian idioms, can dispense with the Sanskrit altogether, if need be, and not only stand alone but flourish, without its aid."
DR. CALDWELL.

† "It is one of the most copious, refined, and polished languages spoken by man."
Mr. TAYLOR.

திருவனந்தபுரம் மகா ராஜா கல்லூரியில் தத்துவநூற் போதகாசிரியராக விளங்கியவரும், மனோன்மணீயம் என்னும் மாண்புறு நாடகமொன்றை இன்பம் கனியுஞ் செந்தமிழ்ப் பாவா லியற்றியவருமாகிய காலஞ் சென்ற பேராசிரியர் இராய்பகதூர் பி. சுந்தரம்பிள்ளை அவர்கள், எம். ஏ., எப். ஆர். எச். எஸ்., எம். ஆர். ஏ. எஸ். எப். எம். யூ., மனோன்மணீயத்தில் தமிழ் மொழியைத் தம் வழிபடு கடவுளாக அமைத்து வணங்கினாரென்றால், அவர் இம்மொழியை உயர் தனிச் செம்மொழியெனப் போற்றினர் என்பதைச் சாற்றவும் வேண்டுமோ? அச்செய்யுள் கற்றோர் மனத்தை யுருக்கும் பெற்றி வாய்ந்தது. ஆதலின், அதனை நாமும் ஈண்டு ஒரு முறை உள்ளங் குளிர எடுத்து ஓதுவோம்:

## தமிழ்த் தெய்வ வணக்கம்.

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக்
    கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத
    கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந்
    திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல்
    திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும்
    இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந்
    தமிழணங்கே!
பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத்
    துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி
    இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா
    ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல
    வாயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து
    சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து
    வாழ்த்துதுமே.



கடல்குடித்த குடமுனியுன் கரைகாணக் குருநாடில்
தொடுகடலை உனக்குவமை சொல்லுவதும் புகழாமே?
ஒருபிழைக்கா அரனார்முன் உரையிழந்து விழிப்பாரேல்
அரியதுன திலக்கணமென் றறைவதுமற் புதமாமே?
சதுமறையா ரியம்வருமுன் சகமுழுதும் நினதாயின்
முதுமொழிநீ அநாதியென மொழிகுவதும் வியப்பாமே?
வேகவதிக் கெதிரேற விட்டதொரு சிற்றேடு
காலநதி நினைக்கரவாக் காரணத்தின் அறிகுறியே?
கடையூழி வருந்தனிமை கழிக்கவன்றோ அம்பலத்துள்
உடையாருள் வாசகத்தில் ஒருபிரதி கருதினதே?
தக்கவழி விரிந்திலகுஞ் சங்கத்தார் சிறுபலகை
மிக்கநலஞ் சிறந்தவுன்றன் மெய்ச்சரித வியஞ்சனமே?
பத்துப்பாட் டாதிமனம் பற்றினர் பற்றுவரோ
எத்துணையும் பொருட்கிசையும் இலக்கணமில் கற்பனையே?
வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மநுவாதி ஒருகுலத்துக் கொருநீதி?
மனங்கரைத்து மலங்கெடுக்கும் வாசகத்தின் மாண்டோர்கள்
கனஞ்சடையென் றுருவேற்றிக் கண்மூடிக் கதறுவரோ?

இச்செய்யுட் பகுதிகள் தமிழர் மனத்தைக் கனிந்துருகச் செய்கின்றன அல்லவா?

'ஐயன்மீர், நீர் கூறுவன அனைத்தும் உண்மை எனவே கொள்ளுவோம். எனினும், இந்நாள் உயர் தனிச் செம்மொழியெனக்கொண்டு இத்தமிழ் மொழியைக் கற்பதனால், மக்களுக்கேற்படும் பயன் யாது? உண்ண உணவு கிடைக்குமா? உடுக்க உடை கிடைக்குமா? இருக்க இருநில மாளிகை கிடைக்குமா? நீதி மன்றத்தில் வாதமிடத் தகுந்த நீதி வாதி யாதல் முடியுமா? பாராளும் மன்றத்தில் போராட்டஞ் செய்யும் அங்கத்தின ராகும் ஆற்றல் உண்டாகுமா? பழங்கதை பேசிப் பயனென்ன? இப்பொழுதுள்ள நிலையைப் பாரும்,' என்று ஆராய்ந்து பேசும் அறிஞர்களைப்போலப் போரா

வாரம் செய்து பேசுவர் ஒரு சாரார். அன்னார், அங்கிலம் முதலிய அயல் நாட்டு மொழிகளிற் பெரும்பட்டங்கள் பல பெற்றும், 'வேலை ஒன்றும் அகப்படவில்லையே! என் செய்வோம்? இறைவனே, எங்களை இவ்வுலகத்தில் ஏன் படைத்தாய்?' என்று வாடியழும் மக்கள் நிலைமையைச் சிறிதும் நாடி யறியாமல் இங்ஙனம் பேசுதல் தம் மறிவைத் தாமே ஏசுதல் ஆகுமல்லவா? கல்விக்கும் கருந்தனம் தேடும் முயற்சிக்கும் என்ன சம்பந்தம்? நைந்நாட்டுப் பேர்வழிகள் செல்வத்திற் சிறந்த சீமான்களாக விளங்குவதையும் ஓரோவிடத்து நாம் பார்க்கவில்லையா? அதுகொண்டு கல்லாதிருத்தலே கருந்தனந் தேடுதற்கு நல்லவழி யென்று சொல்லலாமா? இதுவென்ன பேதைமை!

'இருவே றுலகத் தியற்கை: திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு.'

என்னுந் திருவள்ளுவப் பெருந்தகையாரின் ஆன்றமைந்த அநுபவம் வாய்ந்த இக்கருத்தை உணர்ந்தவர் இங்ஙனம் பேசுவரோ?

இங்ஙனங் கூறியதால், கற்றார் அனைவரும் வறியவர் ஆகி வாடுவர் என்று எண்ணவும் இடமில்லை. கல்வி யறிவோடு பொருள் தேடும் ஊக்கமும் பெற்ற புலவர் பெருமக்களில் எத்தனையோ பேர் ஆக்கமும் பெற்று விளங்குகின்றனர் அல்லவா? அன்றேல்,

'அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும் - உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்கும் கல்வியின் ஊங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை.'

என்று கூறிய புலவர் மொழி பொய்படும் அன்றே?

எனினும், கல்வி கற்றல் மக்கள் அறிவு விளக்கம் பெறுதற்காக என்று எண்ண வேண்டுமே யொழியப் பொருளொன்றைச் சம்பாதிப்பதற்கே என்று எண்ணுதல் கூடாது. எத்தொழிலைச் செய்யத் தொடங்கினும், அத்தொழிலைச் சரிவரச் செய்து முடித்தற்குக் கல்வியறிவு இன்றியமையாதது என்பது அறிஞர் கொள்கை. மக்கள் ஒழுக்கத்தைச் சீர்திருத்தி, அவர்களை நாட்டின் நற்குடிகளாக வாழச் செய்வதும் கல்வியேயாகும். மக்கள் தங்கள் வாழ்க்கையைச் சீர்திருத்திச் சிறப்படைய விரும்புவார்களானால், அவர்கள், 'பிச்சை



புகினும் கற்கை நன்றே.' கல்லாத ஒருவன் குல நலம் பேசுதலிற் பயனில்லை. வாழ்க்கை நலம் உணர்ந்தவனே மனிதனாவான். அவனே தெய்வமாகவும் கருதப்படுவான். இதுபற்றியே தெய்வப் புலவரும்,

'வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.'

என்று கூறினார். போலிக் கல்வியாளன் வையத்து வாழ்வாங்கு வாழ்தல் இயலாது. அவன் குடும்பம் நரகினும் இழிந்ததாய் விளங்கும். இது நிற்க.

இதுகாறும் கூறியவற்றால், தமிழராவார்க்குந் தாய் மொழி தமிழ் என்பதும், அஃது உயர் தனிச் செம்மொழி என்பதும், ஆதலின், தமிழரனைவரும் அரும்பாடு பட்டேனும் அதனைத் தம்மையீன்று வளர்த்த தாயினும் பெரிதாகக் கருதிக் கற்றல் வேண்டுமென்பதும், கல்வி கற்றலை அறிவு விளக்கத்திற் குறுதுணையாமென்றெண்ணிக் கற்றல் வேண்டுமென்பதும், கல்வி கற்றார் ஊக்கமுடையவராகவு மிருப்பின், அவர்கள், பாலினின்று தயிரும், தயிரினின்று வெண்ணெயும், வெண்ணெயினின்று நெய்யும் பெறலாவதுபோல், கல்வியினின்று பொருளையும், பொருளால் அறத்தையும், அறத்தால் இன்பத்தையும், இன்பத்தால் மோட்சத்தையுங்கூட அடைதல் இயலுமென்பதும் பெறப்பட்டன.

ஆதலின், தமிழ் மக்களே, பொருள் நலம் முதலிய கருதிப் பிற மொழிகளையும் நீங்கள் பயில்வதைத் தடுப்பார் எவரு மில்லை. நீங்கள் உங்கள் விருப்பம்போல எத்தனை மொழிகளாயினும் கற்கலாம். அவற்றோடு அமையாமல், நம் தாய் மொழியாகிய தமிழ் மொழியையும் கற்றல் வேண்டும் என்பதை என்றும் மறவாதீர்கள். மனைவி மக்களையும் சுற்றத்தாரையும் பரிந்து பாதுகாக்கும் ஆற்றல் வாய்ந்த ஒருவன், 'யான் என் தாயை மட்டும் ஆதரியேன்,' என்று கூறுவானானால், அவனை உலகம் என்னதான் சொல்லாது? பிற மொழிகளிற் பெரும்புலமை பெற்று விளங்குவோர், 'எம் தாய் மொழியில் எமக்கு ஒன்றுந் தெரியாது,' என்று கூறுதல் எவ்வளவு இழிவு!

காலஞ் சென்ற திருவாளர் சி. சுப்பிரமணிய பாரதியார் உபதேசத்தை இன்னும் ஒரு முறை ஓதி, நம் மனத்திற் பதித்து, அவ்வழி நின்று நாம் ஒழுகுவோமாக:

'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்.

பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு,

நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்வீர்!

தேமதுரத் தமிழோசை உலகெல்லாம்
செழிக்கும்வகை செய்தல் வேண்டும்.'

---

# வித்தியா தருமம்.

(V. S. குழந்தைவேல்சாமி, வித்வான்,)

(யாதவர்)

"உலகமக்கட்கு இன்றியமையாது வேண்டப்படும் பொருள்களுள்ளே உயரிய சிறப்புடைய பொருள் கல்விப்பொருளேயாகும்" கல்வியைப்பற்றி எழுதாதாருமில்லை, பேசாதாருமில்லை, அதனருமை அறியாதாருமில்லை, அது, பங்காளிகள், வலியவர், அரசர், இவர்களாலே கொள்ளப்படாமலும் அடுத்தவர்க்குக் கொடுத்தலால் வளருதலொழிய குறையப்படாமலும் அறிவுடன் ஒன்றிக்கலந்து பிறவிதோறும் நின்றுதவும் சிறந்ததோர் பொருளானது பற்றி மக்கட்குக் கல்விப்பொருளினும் உயரிய பொருள் பிறிதொன்று மில்லையென்பது பெறப்படும். இதற்கிணங்கத் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரும்.

கண்ணுடைய ரென்பர்கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர், எனக்கூறினார்.

முகத்திலமையப்பட்ட கண்களிரண்டும் ஊனக்கண்ணென்றும் எண் எழுத்து என்ற கல்விக்கண்களிரண்டுமே ஞானக்கண்ணாகுமென்னும் பொருள் கொள்ளக்கிடக்கின்றது. இம்மையிலே சொற்சுவை பொருட்சுவைகளை நல்கச் செய்து புகழும் பொருளும் ஒரு



ங்கே பெறச் செய்வித்தும், பின்னே தருமத்தையும் மோக்ஷத்தையும் அடையச் செய்தலால் மக்களனைவரும் இத்தகைப் பெருமையும் சிறப்பும் பொருந்திய கல்விப்பொருளை விரைந்து கற்றுக் கொள்ளல் வேண்டும்" இது மருவியே நமது கல்வி மூதாட்டியராகிய ஔவைப் பிராட்டியார் தாம் அருளிச்செய்த—

மூதுரையில்

மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னற்குத்
தன்றேச மல்லால் சிறப்பில்லைக் கற்றோர்க்குச்
சென்றவிட மெல்லாம் சிறப்பு.

என்று உரை செய்தனர். அரசனைப் பார்க்கிலும் கற்றறிந்த மக்களே சிறப்புடையர்" அரசர்கட்குத் தங்கள் தங்கள் தேசத்திலேயே செல்வாக்குண்டாம். கற்றவர்கட்குத் தன்தேசமன்றி ஏனைய நாடுகளிலும் சிறப்பும் செல்வாக்கும் உண்டு" உதாரணமாக—

2. கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பரது வரலாற்றில் குளிர் தரு சந்திரவட்டக்குடையின் கீழிருந்து உலகத்தாரெல்லாம் தலைவணங்கும்படி செங்கோல் செலுத்திவரும் அரசரினும் கற்றறிந்த கல்வி அறிவுடைய மக்களே மேம்பட்டவரென்றும் அக்கல்விச் செல்வர்களைப் பற்பல நாட்டு அரசர்களும் மதித்துப் புகழும் பூசையும் புரிவார்களென்றும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெள்ளெனத் தெரிந்துகொண்டோம். சரஸ்வதிதேவியின் இருப்பிடம் பிரமதேவர் முகமேயாயினும் அப்பிரமதேவர் கற்றறிந்த தமிழ்ப்புலவர்க்கு ஒப்பாகமாட்டார். ஏனென்றால் பிரமதேவர் படைக்கின்ற புலால் பொதிந்த வுடம்பு அழிந்து படுவதுபோல் கல்வியறிவுடைய தமிழ்ப்புலவர் செய்கின்ற செய்யுள் அழிந்து போகாதாம்.

கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்—மலரவன் செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு"—

என குமரகுருபர சுவாமிகள் நீதி நெறிவிளக்கத்தில் கூறியிருக்கின்றாரென்றால் கல்வியின் பெருமையை என்னென்று சொல்வது. தற்காலத்தில் ஐரோப்பியர் காணக்கிடைத்திருப்பனவான (Railway

train) புகைவண்டி (Aeroplane) ஆகாயவூர்தி (motar car) இரதம் (Telegram) தந்தித்தபால் (Telephone) சிரவணயந்திரம் இந்திரவிமானம் ஆகாயவிமானம் புஷ்பகவிமானம் சத்திவிமானம் இன்னும் அம்பு குண்டுகள் ஆகாயகுளிகை முதலிய அரியபுதுமைகளும் அறிவிற்கு இருப்பிடமாகிய கல்வி வலிமையைக் கொண்டே நம்பழந்தமிழ் மக்களும் வேறு வேறு முறையில் கையாளப் பெற்றுவந்ததாகு மென்பதும் யாவருமறிந்தது.

ஆதலால் மக்கட்கு இம்மையின்பத்தையும் மறுமையின்பத்தையும் பயக்க வல்லதாகிய கல்விப்பொருளை வளர்த்தல்போன்ற சிறந்த தர்மம் பிறிதொன்றில்லை "ஆனகாரணம்பற்றிச் செல்வமக்களனைவரும் நாடெங்கணும் பாடசாலைகளை நிறுவி ஆங்காங்கு மாணவர்கட்கு அறிவுநூல் கருவிநூல்களைக் கசடறக்கற்பிக்க வல்லகலை வல்லுநரைக்கொண்டு கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்து நாட்டை நலமடையச் செய்வது அவர்களது கடமையாகும். இத்தகைய கல்வி நம்நாட்டில் மிகவும் குறைவாகவே இருந்துகொண்டிருக்கிறது. அதிலும் யாதவமக்களிடையில் மிகவும் குறைவாக இருக்கிறது. ஞானவொளி ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு குக்கிராமத்திலும் பரவினாலன்றி தேசம் முன்னேறுமென்பது திண்ணம்.

*

---

# "யாதவர் நிலைமை."

## (கிராம வாழ்க்கை)

திரு. K. P. திருவேங்கடம்.

யாதவர் நிலைமை என்ற தலையங்கத்தின்கீழ் கட்டுரை எழுதப் புகும்போதே என் மனோ நிலைமை இவ்வாறுதான் இருந்ததென என்னால் கூறமுடியாது. இக்கட்டுரை முழுதும் படித்தறிந்தோரே சுலபமாய்க் கூறிவிடலாம்.

முத்தோர் முதுமொழிகளிலும், யாதுகுல நிதிகளிலும் யாதவர் நிலைமையைப்பற்றிப் படித்தும் இருக்கிறேன், கேட்டும் இருக்கிறேன், ஆனால் நேரில் பார்த்தது மாத்திரம் இல்லையே? இதற்குக் காரணம்



என்னவென்று பார்க்கில், நம்மவர்களின் தற்கால அநாகரிகம் என்பதில் ஐயமில்லையென ஈண்டுக்கூறல் வேண்டும். அவ்வநாகரிகங்களை எடுத்துரைப்பின், உள்ளம்பதறும், ஆவிதுடிக்கும் நாவுலரும். எனினும் நேரில்கண்டும், குலமுன்னேற்றத்தின் நோக்கம் கொண்டும் உள ஒருவன், அதை வெளியிட்டுக்கூறாது விடுவானாகின், காயத்தை மூடிவைத்து அபாயத்துக்குள்ளாவதுபோல, நம்மதத்தை சீர்குலையச் செய்வதோடு ஒரு மதத்துரோகியுமாவான். ஆகையால் நானும் சென்ற சிலமாதங்களாக, நம்மவர்களின் நிலைமையறியப் பற்பல கிராமங்களுக்கும் சென்று, வாழ்க்கையை நேரில்கண்டு வந்ததால், எனதுண்மையுள்ளம் உண்மையை உணர்த்த முன்வந்தது.

அந்தோ! அவர்கள் கிராம வாழ்க்கையின் பரிதாபம்! என்னென்றுரைப்பது. பெரும்பாலர் கல்வி வாசனையே அற்றவர்களாயிருக்கிறார்கள். நாகரிகமற்றுக் காடுகளிலும், தோட்டங்களிலும், அல்லும் பகலும் அரை வயிறு குடித்துக்கொண்டு காலங்கழிக்கிறார்கள். இவ்வித நிலைமையில் ஒவ்வொரு கிராமங்களிலும், மாடன், நாட்டான், பட்டக்காரன், தளவாயன், இளந்தாரி, எனப் பலபட்டங்கள் வைத்துக்கொண்டிருக்கும் பட்டதாரிகள் செய்வதோ, கொடுமை! கொடுமை! நாகரிகம் தலையெடுக்க வொட்டாமல் நசுக்கி விடுகிறார்கள். உதாரணமாக, யாதவ வாலிபர்கள் விவாகத்திற்கு முன் தலைமயிர் களைந்தால் குற்றம் பெண்மணிகள் கையில் சங்கு போடாவிடில் குற்றம். எனப் பலவேறு குற்றங்களைச் சாட்டி அபராதம் விதிக்கிறார்கள். ஐயோ! பாவம் "கறப்பது உழக்குப்பால் உதைப்பது பல்போக" என்பதுபோல, ஏழைமக்கள் தினம் சம்பாதிப்பது குறைந்தகூலி, அபராதம் கொடுப்பதோ பெருந்தொகை, அபராதம் கொடுக்க மறுத்தாலோ, அவனுக்கு நெருப்பு நீர் கிட்டாது. ஊரைக் கட்டுமானம் செய்கிறார்கள். இவ்விதமிருக்கையில் கல்வி, நாகரிகம் எங்ஙனம் தழைக்கும்? இது நிற்க,

நமது பெண்களின் வாழ்க்கை எடுத்துக் கொண்டாலோ பரிதாபத்திலும் பெரும் பரிதாபம்! அவர்களிடம் கல்வியோ மருந்துக்கும் கிட்டாதே! ஐந்து வயதாகுமுன்னே ஆடுமாடு மேய்க்கவும், பத்து வயதாகுமுன்னே பால் தயிர் விற்கவும், மற்றும் கேவலமான கூலிவேலைகளுக்கும் அனுப்பப்படுகிறார்கள்.: அடடா அம்மணிகளின் ஆடைகள் என்ன? அணிகலங்கள் தான் என்ன! [illegible] கன்னியர்கள் மலிந்துகிடந்த நன் நாடன்றோ இந்நாடு. சுருங்கச்சொல்லில்

இவ்வநாகரீக, ஆச்சாரங்களுக்குப் பெற்றோரே காரணம் என்பதில் சற்றும் ஐயமில்லை. 'தந்தை மதியெ', 'தாயைப் போன்றபிள்ளை' என்பதற்கிணங்கப், பெற்றோர்களின் மூடப்பழக்க வழக்கங்களில் ஈடுபட்டு உண்ண உணவும், உடுக்க உடையும், இன்றிச் சுதந்தரமற்று அநாகரீக அடிமைகளாகத் தவிக்கிறார்கள்.

பெரும்பாலான இடங்களில் பெற்றோர்கள் மூடப்பழக்க வழக்கங்களால், சனீடக் கருப்பன், சங்கிலிக் கருப்பன், மயானக் கருப்பன், மசராயன், பொம்மன், திம்மன், குட்டிச் சாமிகளை வணங்குவதால், அப்பழக்கங்களில் பெண்மணிகளும் ஈடுபட்டு, அவர்களை இக்குட்டிகளும், பேய் பிசாசுகளும், பிடித்துக்கொண்டு ஆட்டுவதும் ஆடி ஆவேசம் உண்டாவதுபோல் பாடிப்பழகிக் கொள்கிறார்கள். இவை பெரியோர்களுக்கும், கிராமவாசிகளுக்கும், வேடிக்கையும், பெருமையும் போலிருக்கிறது. அந்தோ! பரிதாபம்! அவர்கள் நிலைமை. (இக்காட்சியை 2, 3, கிராமங்களில் சின்னாளிருந்து நேரிற் கண்டேன். அவ்விடங்களில் பேய் பிடியாத பெண்மணிகள் இருப்பதே அரிது) இதனால், பெற்றோர்களும், அப்பேய்களை ஓட்டுவதும், ஆட்டுவதும், அதற்கு ஆடு கோழிகளைப் பலியிடுதலுமான தீஞ் செயல்களுக்கு ஆளாகி விடுகிறார்கள். இதனைக் கண்ணுற்ற கல்வியறிவுடைய யாதவப் பெண்மணிகள், பகையும், நகையும் கொள்ளாது "ஐயோ நம் சகோதரிகள் இந்நிலையில் இருக்கின்றார்களே!" என உள்ள உணர்ச்சியோடு, அவர்களின் முன்னேற்றத்தின் பொருட்டுப் பாடுபட முன் வருவார்களாக.

இந்நிலையில் கிராமங்களில் சென்று நாகரிகம் எங்கே? கல்வி எங்கே! நாணயம் எங்கே? நம்பிக்கை எங்கே? எனக்கேட்டுக்கொண்டிருப்பதைவிட, நம் யாதவ இளஞ்சியென்று கேட்டு, அவர்களை நித்திரையை விட்டெழுப்பினால், அவர்கள் முன்வந்து, எங்கே! எங்கே! என்பதை இங்கே, இங்கே; என நேரில் காட்டிவிடுவார்கள். அதுபோது தான், "ஆஹா! கம்சனை வதை செய்த வம்சம் இது தானா? அன்னோர் அம்சத்தாலோ இவ்வம்சம் இந்நிலை" எனப்பல வேறு ஜனங்கள் பரிகசிக்கும். வக்ரோக்தி (Irony)ச் சொல்லானது உண்மையில் பிரகாசிக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆதலால், தற்காலம் நம் யாதவமக்களின் முன்னேற்றங்கருதி உலவி, உழைத்துவரும், உத்தம யாதவ மித்திரன் இவையனைத்தும் கல்வியுற்ற மக்களுக்கு அறிவித்து, சமூக முன்னேற்றத்தின் பொருட்டு முன்வரச் செய்வானாக. இக்கொற்ற நண்பனை ஆக்கியோர், ஆசிரியர், அன்புடன் ஆதரிப்... ...ழ்வாழ்க நாம் எல்லாவல்ல பரமபொருளை... ...துதிக்கின்றோம்.

---

Missing Pages. 321 To End



# யாதவமித்திரன்.

யாதவமக்களின்
முன்னேற்றங்கருதிவெளிவரும்
மாதப்பத்திரிகை.

| தொகுதி 3 | பிரஜோற்பத்தி ஆவணிமீ 1931ளு ஆகஸ்டுமீ | பகுதி 1 |
|---|---|---|






பொருள் அடக்கம்.


| | |
|---|---|
| கடவுள் வணக்கம் | 1 |
| பெரிய குடித்தனங்களில் பல மணமடையக் காரணமென்ன | 1 |
| திருவாங்கூர் செப்பேடுகள் | 5 |
| மனிதர் வாழ்க்கை | 7 |
| வள்ளல் பாரி | 12 |
| அங்கதன் அருந்திறல் | 16 |
| குசேலர் | |
| கால்நடை வைத்தியம் | 25 |
| சமுதாயக் கிளர்ச்சிகள் | 27 |
| காமாக்ஷிபாய் | 29 |


2 SEP 1931



Managing Editor.

இ. மா. கோபால...

320

# யாதவமித்திரன்.

ஆசிரியர் கூட்டத்து அங்கத்தினர்கள்

(Editorial Board Members.)

தலைவர்.

1. திருவாளர், ஆ. கார்மேகக்கோனர் அவர்கள்
தலைமைத்தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

---

2. ,, ச. செல்லம் அவர்கள் (யாதவர்) சுசீந்திரம்.
3. ,, J. சக்கரபாணி நம்பியார் அவர்கள், பி. ஏ., பி. எல்.
ஹைகோர்ட் வக்கில், வைஸ் பிரசிடெண்டு.
ஜில்லாபோர்டு, திருநெல்வேலி.
4. ,, V. கிருஷ்ணரெட்டியார் அவர்கள் (யாதவர்) பி. ஏ. பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வேலூர்.
5. ,, தி. அ. முத்துசாமிக் கோனரவர்கள், வித்வான்,
திருச்செங்கோடு.
6. ,, K. வீராசாமிப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், முனிசிபல் உயர்தர கலாசாலை,
திண்டுக்கல்.
7. ,, R. வேங்கடாசலம்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர்,
S. P. G. உயர்தரக் கலாசாலை, தஞ்சாவூர்.
8. ,, M. V. வேணுகோபாலப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், E. L. M. F. ஹைஸ்கூல்
புரசபாக்கம், சென்னை.
9. ,, ஐயம்பெருமாள் கோன் அவர்கள், தமிழாசிரியர்,
ஸெயின்ட் ஜோஸப் காலேஜ், திருச்சிராப்பள்ளி.
10. ,, K. கோபாலகிருஷ்ணன் அவர்கள், B. Sc. (Hons.)
M. R. A. S. பர்மா.

## வேண்டுகோள்.

வியாசங்கள் எழுதுவோர் தெளிவாகவும் தூஷணைகளின்றியும் முழுவிலாசத்துடன் சமூக முன்னேற்றத்திற்குரியனவும் அறிவு வளர்ச்சிக்குரியனவுமாகிய பொது விஷயங்களைப்பற்றிச் சுருக்கமாகவும், நடை எளிதாகவும் எழுதியனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோரும், விளம்பரங் கொடுக்க விரும்புவோரும் அடியிற்காணும் விலாசத்திற் கெழுதுக.

யாதவமித்திரன் ஆபீஸ், ஸ்ரீ கோபால் மஹால்,
வடக்குச் சித்திரைவீதி, மதுரை

1

# யாதவமித்திரன்.

## ஒரு மாதப்பத்திரிகை.

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

தொகுதி 3 } பிரஜோத்பத்தி௵ ஆவணி௴ 1931-௵ ஆகஸ்டு௴ { பகுதி 1

## கடவுள் வணக்கம்.

எங்காணும் ஈது ஒப்பதோர் மாயமுண்டே
நரநாரணனாய் உலகத்து அறநூல்
சிங்காமை விரித்தவன் எம்பெருமான்
அதுவன்றியும் செஞ்சுடரும் நிலனும்
பொங்கார் கடலும் பொருப்பும் நெருப்பும் நெருக்கிப்
புகப் பொன்மிடறு அத்தனைபோது
அங்காந்தவன் காண்மின் இன்று ஆய்ச்சியரால்
அளைவெண்ணெய் உண்டு ஆப்புண்டிருந்தவனே

திருமங்கையாழ்வார்.

2 SEP 1931

## பெரிய குடித்தனங்களில் பல

### க்ஷீணமடையக் காரணமென்ன?

பிரபலமாக வந்த பெரிய குடும்பங்களிற் பல நசித்துப் போவதற்குக் காரணமென்ன? என்பதைப்பற்றிச் சற்று ஆலோசித்துப் பார்ப்பது அவசியமாகக் காணுதலின் கவனிப்போம்.

சிறு வயதிலேயே சிறுவர்களைச் சீர்படுத்தாத காரணமென்றே சுருக்கமாகச் சொல்லலாம். அருமையாகப் பிறந்தபிள்ளையென்று

அக்குழந்தையின் இஷ்டப்படி ஆடப்பாட, இஷ்டமானவர்களுடன் கூட விட்டுவிடுகிறார்கள். அக்குழந்தை தான் சொந்த இனத்தாரின் சார்பாகச் சில கெட்டமார்க்கங்களில் தலையிட்டுக் கெட்டுப்போகின்றது. குழந்தைகளை வெகு ஜாக்கிரதையாக வளர்த்தல் பெற்றோர்களின் கடமை. விக்டோரியா ராணியாரின் சரித்திரத்தை நன்றாகக் கவனித்தவர்களுக்குக் குழந்தைகளை வளர்க்கும் முறை நன்றாய் விளங்கும். ஆகாரம் முதலிய சிலவற்றில் மாத்திரம் தங்களுக்குள்ள செல்வாக்கை உபயோகிக்கவேண்டும். கல்வி பயிலல், தொழில் கற்பித்தல், தேகப்பயிற்சி முதலியவைகளில் சாமானியப் பிள்ளைகளைப் போலவே உபாத்திமார்களுக்கடங்கி நடக்கும்படி செய்ய வேண்டும் படிப்புமுதலியவற்றில் போட்டி போட்டுக்கற்கும்படி மற்றைப்பிள்ளைகளுடன்கூட்டி அக்கரையை விளைவிக்கவேண்டும். ஜமீன்தார், மிட்டதார் ஜாகீர்தார்கள் முதலான கனவான்களின் குமாரர்களுக்கு இறுமாப்பதிகமாய் இருக்கும். ஏனென்றால் தன்னூரில், தான் பெரிய அந்தஸ்து உள்ளவனென்றுகொள்ளும் எண்ணமே. அவ்வித எண்ணம்கொள்ளாதபடி, இக்குமாரனைவிட வாசித்தல், தொழில் செய்தல், தேகப்பயிற்சி முதலியவைகளிற் சிறந்த பிள்ளைகளைச் சுட்டிக்காட்டி இவனுடைய தாழ்வை அறிவிக்கவேண்டும். 'கர்வம் வந்தகாலத்தில் தன்னினுயர்ந்தோரையும் சோர்வு நேர்ந்தபோது தன்னிற்றாழ்ந்தோரையும் பார்க்கவேண்டும்' என்பது நீதியன்றோ? சிறுநகர்களில் வசிப்பவர்களுக்கே அகங்காரமுண்டாவது இயல்பு "கூவலாமை குரைகடலாமையைக் கூவலோடொக்குமோ கடல் என்னல்போல" என்னும் திருவாக்கின்படி ஒரு சிறு கிணற்றிலுள்ள ஆமை, கடலிலிருந்துவந்த ஆமையைப் பார்த்து ஏ! நண்பனே! சமுத்திரம் இந்தக்கிணற்றளவு இருக்குமா? என்று கேட்டதுபோலவே சிறு நகரங்களிலிருப்பவர்கள் பேரூராம் அவ்வூர்களில் உள்ள கனவான்களின் நிலைமை முதலியவற்றையுமறியாதவர்களானதால் தனக்குச் சமானம் ஒருவரும் இருக்கமாட்டார்கள் என்று நினைப்பதுண்டு. இவ்விதமான குக்கிராமவாசிகளைப் பெரிய பட்டணங்களுக்கனுப்பி, தொழிற்சாலை, ஆகாரம் யோக்கியம், மற்றுமுள்ள பலவற்றையும் கவனிக்கும்படிசெய்ய வேண்டும். அப்படிப் பார்ப்பதில் கர்வம் தானாகவே கழன்றுவிடும். ஐயோ! நம் வீட்டைப்பெரிதென்று நினைத்தோமே! ஆகாரத்தைப் பெரிதென்றோமே! இங்கே இவர்களைப் பார்க்கிறபொழுது, நமது



வீடும் செல்வமும் தொழிலும் ஆகாரமும் எவ்வளவு கேவலமாக இருக்கிறது என்ற எண்ணம்வரும். இவ்வளவு உயர்ந்தவர்களாக இருந்தும் நம்மிடத்தில் எவ்வளவு மரியாதை காட்டினார்கள்! நாமும் அவ்வாறு மரியாதையாக நடக்கவேண்டுமென்னுமெண்ணம் தங்கள் தங்கள் மனதினில் ஜனிக்கும்.

அவர்கள் பூமியைப் பண்படுத்தும் முறையும், மார்க்கமும், பொருளை வளர்க்கும் துறையும், காரிஸ்தர்களை அன்புடன் ஏவித் தொழில் செய்வித்து அநுகூலங்களை அடையும் துறைகளும் நன்றாகப்பதியும். இதுபோலக் குமாரர்களுடைய மனது, தொழில் விருத்தியிலும், பொருள்தேடும் நல்வழிகளிலும், பதியும்படி மனதைப்பண்படுத்தவேண்டும். இளமையில் மனது திருந்துமாயின் அறிவு விசாலமாய்த் தன்தொழிலை நல்ல யோசனையுடன் நடத்த இடமாகிறது. அப்பாலடிக்கடி வெளியேபோய் அவ்வக்காலத்துக் கேற்ற முறைகளைக் கையாட வேண்டிவரும். இப்படியில்லாதவர்களே மனம்போனபடி நடந்து, துன்மார்க்கர்களுடன் கூடி, குடி, விபசாரம், துர்வழக்கம், பொய், இன்னும் பல தீயகாரியங்களில் தலையிட்டுத் தனக்குத்தெரியாது, தன்னைச் சார்ந்தோர் செய்யும் பொல்லாங்குகளாற் கலவாதிருந்தும், தான் உடன்பட்டும், பொருளிழந்து பழிபாவத்துக்கும் ஆளாகவேண்டி நேருகிறது. ஆண்மக்கள், மாத்திரமன்று பெண்மக்களையும் பெற்றோர், சகோதரர் அல்லது கணவன் முதலியோர், நல்லசிநேகித பந்துவர்க்கங்கள் வீடுகளுக்குப் போம்போது அழைத்துக் கொண்டுபோய்ப் பெரியோர்களிடத்து நடந்துகொள்ளும்முறை, மாமன், மாமி, கணவனுடன்பிறந்தார் அவர்களின் பாட்டிமார், அவர்களின் குழந்தைகள், சிநேகிதவர்க்கங்கள் முதலியவர்களிடத்து அவர்கள் நடந்துகொள்ளுமாதிரி, சமயற்பாகம், ஆனவற்றைப் பரிமாறச் செய்தல், உணவருந்துவித்தல், உபசரித்தல், வரவேற்றல், வழியனுப்பல், முதலிய வற்றையும், சிக்கனமாகக் குடித்தனம் நடத்தல், ஊழியக்காரர்களை நடத்தல் முதலிய பல விஷயங்களையும் நன்றாகக் கிரகித்துக் கொள்ளும்படி செய்ய வேண்டும். இதனால் தங்களுக்குள்ள எல்லாச் செருக்குகளும் போய்

மரியாதையுடையவர்களாயும் நன்கு மனைவாழ்க்கையை நடத்தும் திறமுள்ளவர்களாயும் இருப்பார்கள். இவ்வாறில்லாது ஆண் மக்கள் மாத்திரம் நாகரிக புருஷர்களுடன் பழகியிருந்து வீட்டிற் பெண்கள் அஃதறியாமலிருந்தால் தங்கருத்துக்கு ஒவ்வவில்லை என்று வெறுத்து எல்லா வகையினும் மாறுபாடாக நடக்கும்படியாகிறார்கள். இதனால் ஆண் பெண்களிருதாத்தாரிடத்தும் தீயவர்கள்கூடித் தீயபழக்கங்களைப் பழகி "எறும்பூரக் கற்குழியும்" என்றபடி வேறுபாடு செய்யக் கூடுமன்றோ?

இதுவுமன்றித் தானே எஜமானனென்றும், தன்னெதிரில் பிறர், உட்காரல், உலாவல், உண்ணல், வாசித்தல், மற்றை நலங்களையனுபவித்தலில் அசூயை கொண்டும் கெட்டுப் போகிறார்கள். ஏழைகளை வருத்தலும் அவர்களிடத்தில் தண்டம் பிடித்தலும் செய்து, வீண் வழக்குகளிலும், பல தீங்குகளிலும் பொருள் நஷ்டம், பிறர் அவமதிப்பு, முதலியவற்றிற்குப் பல விதத்திலும் நஷ்டம் கொண்டு நாளுக்குநாள் க்ஷீணதிக்கு வருகிறார்கள். இதுதான் காரணமாகும்.

தி. அ. முத்துசாமிக்கோனார்.

---

நமது யாதவ சமூகத்தவர்கள் வருஷம் ஒன்றுக்கு ரூபா ஒன்று செலுத்தி "நமது குலம் முன்னேற்றமடைதற்கென்றே" உழைத்துவரும் மித்திரனை ஆதரிக்க ஊக்கமற்றவர்களாக இருக்கிறார்கள்! இம் மட்டுந்தானா! நமது பத்திரிகைக்குச் சந்தாதாரராகச் சேர்ந்து புக்போஸ்டில் வரும்போதெல்லாம் அதனை வரவேற்றுப் பிறகு வி-பியில் வரும்போது ஈவு இரக்கமின்றி அதனை விரட்டி விடுகிறார்கள். திரும்பிவருகிற மித்திரனை நாங்கள் ஆதரித்துக்கொண்டு வருகிறோம். நாங்களும் இரக்கமற்றவர்களானால் நமது மித்திரனின் கதி என்ன ஆகிறது? ப-ர்

## திருவாங்கூர், செப்பேடுகள்.

திரு. ச. செல்லம்.

"சேரநாட்டு யாதவ அரசகுலம்" என்ற தலைப்பின் கீழ் நான் ஒரு நீண்ட கட்டுரை நமது யாதவமித்திரனில் வெளியிட்டிருப்பது நண்பர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அதற்கு ஆதாரங்கள் பல உண்டாயினும் திருவாங்கூர் செப்பேடுகளே மிக முக்கியமானவை. அவற்றைப்பற்றித் திருவாங்கூர் சிலா சாசன இலாகாவிலிருந்து 1931-மார்ச-17உ. கெஜற்றில் குறிப்பெழுதியிருக்கிறார்கள். அது எனது "சேரநாட்டு யாதவ அரசகுலம்" என்ற கட்டுரைக்குப் பேராதரவு அளித்திருக்கிறது. அன்றியும் யாதவ சமூகத்தின் முற்காலநிலையும் ஒருவாறு விளங்கக் காணலாம். ஆகையால் அதை மொழிபெயர்த்துத் தரலாமென எண்ணுகிறேன். அது அடியில் வருமாறு— திருவாங்கூரில் புராதனப் பொருள் பாதுகாப்பு இலாகாவென 35-வருஷங்களுக்கு முன் ஏற்படுத்தப்பட்டது.

இவ்விலாகாவில் மிகப் பழமையானது ஆய் அரசர்களுடைய செப்பேடுகளே. தொன்மைத் தமிழ்நூற்களில் யாதவ வம்சத்தைச் சேர்ந்த இந்த ஆய் அரசர்களுடைய பெயர்கள் காணப்படுகின்றன. ஆய்குல அரசர்களுடைய செப்பேடுகளும் கல்வெட்டுகளும் தென் திருவாங்கூரில் பார்த்திவசேகரபுரம், திருவிடைக்கோடு முதலிய இடங்களிலிருந்தே முக்கியமாகக் கிடைத்தன. ஆனால் ஆய்--அரசனாகிய கோ—குருநந்தடக்கனுடைய ஒரு செப்பேடு ஹஜூர் கச்சேரியிலிருந்து கிடைத்தது. அதிலிருந்து கலி— 1449087-வது நாட்டுச்சரியான குருநந்தடக்கனுடைய 9-வது அரசாட்சி ஆண்டில் 15-வது நாள் மூஞ்சிறைச் சபைக்காருடைய உழக்குடிவிளை என்ற பெயருள்ள பூமிக்குப் பதிலாக வேறு பூமியை விட்டுக் கொடுத்துவிட்டு அதைக் கைக்கொண்டு ஒருபிடி யானையால் எல்லையை

நிர்ணயஞ்செய்து அங்கே ஒரு ஆலயம் உண்டுபண்ணினான். அவ்வாலயத்தில் திருமாலைப் பிரதிட்டை செய்து ஆலயத்தைச் சுற்றிலுமுள்ள இடத்திற்குப் பார்த்திவசேகரபுரம் என்று பெயரிட்டதாகவும் காணப்படுகிறது. அதன்பிறகு அவர் காந்தளூர் சாலையிலுள்ள வழக்கப்படி 90-சீடர்களுக்கு வசிக்க ஒரு சாலையுண்டுபண்ணி ஆலயத்தினுடையவும் அச் சாலையினுடையவும் நடப்பிற்காகப் பொருள்களையும் விட்டுக் கொடுத்தார். இதன்றியும் கோவிற் பணியாட்களுடைய வேலையும் திட்டப்படுத்தப்பட்டது. அவர் பங்குனி விசாகத்தில் ஆறாட்டாகத் திருமானப்படுத்தி ஏழுநாளத்தையத்திருநாள் நடாத்தினர். திருநாள் சமயத்தில் சீடர்களில் முக்கியமானவர்களுக்கும் ஆலயப்பணியாட்களுக்கும் இருமடங்கு ஊதியம் கிடைத்து வந்தது.

முடால நாட்டார், செங்கழு நாட்டார், வள்ளுவ நாட்டார் முதலியோர் தருமஸ்தாபனத்தின் பரிபாலகராவார்கள். அங்குள்ள சாலையில் வியாகாணம், மீமாம்சை, பௌரோஹித்தியம், திறை ராஜ்யவியவஹாரம். முதலியவற்றில் சரியான அறிவுள்ளவர்க்குத்தான் சேர்ந்துகொள்ள உரிமையுண்டு. 5-சீடர்கள் இது உண்மையெனச் சான்றுப்பத்திரங் கொடுக்கவேண்டும். தர்மசாலையிலாவது ஆலயத்திலாவது சீடர்கள் யாதொருவிதமான குற்றமுஞ் செய்யக்கூடாது. குற்றவாளிகளுக்குத் தண்டனையுண்டு. ஆயுதங்களைக் கொண்டு ஒருவன் மற்றவனைத் தாக்கினால் அவனைச் சாலையைவிட்டு வெளியேற்றிவிடுவார்கள். ஆலயத்திலும் ஒருவித அனாசாரங்களும் செய்யக்கூடாது. பணிமக்களும் சீடர்களோடு குற்றஞ் செய்தால் தண்டனையுண்டு."

இச்செப்பேடுகளின் முடிவில் சாத்தன் முருகன் என்ற பெயருள்ள தெங்கநாட்டுக் கிழவன் கட்டளையிடுபவராகவும் திரையன் சிங்கன் குன்றப்போழன் என்ற உமைநாட்டுக் கிழவன் எழுத்தாளராகவும் காணப்படுகிறது. இச்செப்பேடுகள் தற்போது திருவனந்தபுரம் காட்சிசாலையில் வைக்கப்பட்டிருக்கின்றன.

---

# மனிதர் வாழ்க்கை.

## ஆழ்வார்களின் பக்திப் பிரபாவம்.

(299ம்-தொடர்ச்சி)

கு. மணிவண்ணன்.

'உலகம் யாவையும் தாமுள வாக்கலும்' என்றபடி இப்பூவுலகுக்கும் இதன் கண் அடங்கியுள்ள எல்லா ஜீவராசிகளுக்கும் முதற்காரணனாகிய ஸ்ரீமந் நாராயணனை நாம் வணங்கும்பொழுது நம்மனம் இயற்கையாகவே அப்பரம்பொருளைக் காட்டிக்கொடுத்தும், பாடிக்கொடுத்தும் உள்ளவர்களாகிய ஆழ்வார்களிடம் நாடுகிறது. ஆழ்வார்கள் பதின்மரையும் திருமாலின் அபிநவ தசாவதாரங்கள் என்று சொல்லலாம். எவ்வாறு சர்வேஸ்வரன் பூலோகத்தில் துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனஞ்செய்து, சத்காரியங்களை நிறைவேற்றி வைக்கும்படி தசாவதாரங்கள் செய்தனனோ, அதுபோலவே ஆழ்வார்கள் பதின்மரும் எம்பெருமான் பெருமையை விளக்கி, ஸ்தாபிதஞ்செய்து மானிடர்களைப் புனிதர்களாக்கவே அவதரித்தனர் எனலாம். இன்னும் ஆழ்வார் என்ற பதத்திற்குப் பக்தியாகிற கடலில் எப்பொழுதும் ஆழ்ந்து அதனாலுண்டாகும் பரமானந்தத்தை இடைவிடாமல் அனுபவிப்பவர் என்றும் பொருள் ஏற்படும்.

முதலில் பக்தி என்பது என்ன என்று ஆராய்வோமானால், 'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்பதுபோல் பகவத் கைங்கரியத்தைச் சரிவர முடித்து, எல்லாம் அவன் மயம் எல்லாம் அவன் சொரூபம், எல்லாம் அவனடிகளுக்கே அர்ப்பணம் என்று பூரணதிட உறுதியைக் கொள்ளுதலே சிறந்த பக்தியாகும். இடுக்கண்கள் பலவும் நிறைந்த இக்கலியுகத்தில் ஞானபக்தி எல்லோருக்கும் சித்திப்பது அரிது. தொண்டைமான் காலத்தில் உள்ள ஒரு குயவன், தன் வேலையெல்லாம் முடிந்தபிறகு தன் கையில் ஒட்டியிருக்கும் களிமண்ணைச் சேர்த்து ஒரு பூப்போல்செய்து இது அவனுக்கே அர்ப்பணம் என்று திருவேங்கட முடையானுக்குத் தினந்தோறும் சமர்ப்பித்து வருங்காலையில், அது தொண்டைமான் சக்கரவர்த்தி சமர்ப்பித்த பொன்னாலாகிய புஷ்பங்களுக்கெல்லாம்

மேலேயிருந்து சக்கரவர்த்திக்கு வியப்பையும், உண்மையான பக்தி எதுவென்பதையும் காட்டிக் குயவனுக்கு மோக்ஷத்தைக் கொடுக்க வில்லையா? ஆண்டாள் திருப்பாவையில் பக்தி இன்னதென்பதைச் சுருக்கமாகச் "செய்யாதன செய்யோம், தீக்குறளைச் சென்றோதோம், ஐயமும், பிச்சையும், ஆந்தனையும் கைகாட்டி உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய்" என்று வேதவாக்காக அருளியுள்ளாள். பட்டர் பிரானாகிய பெரியாழ்வாரும் "மார்வமென்பதோர் கோவி லமைத்து, மாதவனென்னும் தெய்வத்தை நாட்டி, ஆர்வமென்ப தோர் பூவிடவல்லார்க்கு அரவ தண்டத்தில் உய்யலுமாமே" என் றும் கொள்ளையாய் உள்ளங் கரைந்து கூறியுள்ளார்.

அப்படிப்பட்ட ஆழ்வார்களுடைய பக்தியை என்னென்று எடுத்துரைப்பது? நாமும் அவர்களைப் போல ஒரு ஆழ்வாராக ஆனா லொழிய அவர்களுடைய பக்திப்பிரபாவத்தைச் சரிவர அறிய முடி யாது, இனிது சுவைக்க முடியாது. தாய்க்குக் குழந்தையிடத்திலும், மனையாளுக்குத் தன் கணவனிடத்திலும் என்ன வியாபகம், என்ன அன்பு, என்ன பக்தி இருக்குமோ அதேபோல ஆழ்வார்களுடைய பக்தியும் இருக்கிறது. அவர்கள் திருவாய் மலர்ந்தருளியுள்ள பாசு ரங்களை நாம் சாதாரணமாக நோக்கும்பொழுதே அவர்கள் உடல் பொருள் ஆவி மூன்றும் அம்மாதவனையே கவிழ்ந்து நிற்கின்றன வென்றே சொல்லலாம். தங்கள் குழந்தையைப்போல எம்பெரு மானைத் தாலாட்டிச் சீராட்டுதலிலும், அந்தந்த அவதாரங்களின் இளமைப் பருவங்களைப்பற்றி வியாமோகித்து, ஊடாடலும், கண வனைப்போல எம்பெருமானுக்குப் பல்லாண்டு பாடுவதிலும், துயி லுணர்த்துதலிலும், துயிலமைப்பதலிலும், நீராட்டி வைப்பதிலும் மிக்க அன்பும் ஆர்வமும் உள்ளவர்கள் ஆழ்வார்கள். பெரியாழ்வா ருக்கு கிருஷ்ணாவதாரத்தில் வியாமோகம் அதிகம், திருமங்கை ஆழ் வாருக்கு அர்ச்சா ரூபியாகிய எம்பெருமான்மேல் வியாமோகம். தொண்டரடிப்பொடியாழ்வாருக்குத் திருவரங்கன்மீது வியாமோகம். இப்படி ஒவ்வொரு ஆழ்வாருக்கு ஒவ்வொரு அவதாரத்தில் வியா மோகம் உள்ளங்கொள்ளாவகையில் அதிகம் உண்டு.

ஆழ்வார்கள் மனம் எம்பெருமானைத் தவிர வேறெதையும் நாடுவதே இல்லை. நாவோ அவன்புகழைத் தவிரப் பாடுவதே இல்லை.



பெரியாழ்வார்.

"அனந்தன்பாலும், கருடன்பாலும்
ஐது நொய்தாக வைத்தென்
மனந்தனுள்ளே வந்துவைகி
வாழச் செய்தாய் எம்பிரான்"
"கடல் கடைந்து அமுதம் கொண்டு
கலசத்தை நிறைத்தாற் போல
உடலுருகி வாய் திறந்து
மடுத்துன்னை நிறைத்துக் கொண்டேன்"
"பொன்னைக் கொண்டு உரைகல் மீதே
நிறமெழ உரைத்தாற் போல்
உன்னைக் கொண்டென் நாவகம்பால்
மாற்றின்றி உரைத்துக் கொண்டேன்
உன்னைக் கொண்டு என்னுள் வைத்தேன்
என்னையும் உன்னிலிட்டேன்"
"பனிக் கடலில் பள்ளி கோளைப்
பழகவிட் டோடி வந்தென்
மனக் கடலில் வாழவல்ல
மாயமணாள நம்பீ"

என்று சொல்லி யிருக்கிறார். ஆழ்வார்களுக்கெல்லாம் சிறந்தவராய், நாயகமாய் விளங்கும், வேதந் தமிழ் செய்தமாறன் என்று போற் றும் நம்மாழ்வாரும் "திருமாலிருஞ்சோலை மலையென்றேன் என்ன, திருமால் வந்தென்னெஞ்சு நிறையப்புகுந்தான்" என்று கூறியுள் ளார். சகல போகங்களையும் அனுபவித்தும், எல்லா பாக்கியங்களை யும், உரிமையையும் பெற்ற குலசேகரனும்.

"எம்பெருமான் ஈசன் எழில்வேங் கடமலைமேல்
தம்பமாய் நிற்கும் தவமுடையே னாவேனே"
"கூனேறு சங்க மிடத்தான் தன் வேங்கடத்துக்
கோனேரி வாழும் குருகாய்ப் பிறப் பேனே"
"தேனார் பூஞ்சோலைத் திருவேங்கடச் சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதியுடையே னாவேனே"
"தேனார் பூஞ்சோலைத் திருவேங்கட மலைமேல்
கானாறாய்ப் பாயும் கருத்துடையே னாவேனே"

"வெறியார் தாள் சோலைத் திருவேங்கட மலைமேல்
நெறியாய்க் கிடக்கும் நிலையுடையே னாவேனே"
"அடியாரும் வானவரும் அரம்பையரும் கடந்தியங்கும்
படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே"
"செம்பவள வாயான் திருவேங்கட மென்னும்
எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனு மாவேனே"

என்பது கவனிக்கத்தக்கது. இது, என்ன பக்தி! பக்தியின் கூர்மையினால் 'ஏதேனு மாவேனே', என்றால் அப்பக்தியை என்னவென்று புகழுவது! கேவலம் வழிபறித்தல் தொழிலை மேற்கொண்டிருந்த திருமங்கை மன்னனும் பக்தி மேலிட்டால்

"தாயே தந்தை யென்னும் தாரமே கிளை மக்களென்னும்
நோயேபட்டொழிந்தேன் உன்னைக் காண்பதோ ராசையினால்
வேயேய் பூம்பொழில் சூழ் விரையார் திருவேங்கடவா!
நாயேன் வந்தடைந்தேன் நல்கி ஆளென்னைக் கொண்டருளே"

என்று கதறியுள்ளார்.

மற்றும் ஆழ்வார்களெல்லோரும் எம்பெருமானுக்குப் பல்லாண்டு கூறுவதையே பெரிய கைங்கரியமாகக் கொண்டுள்ளார்கள். மானிடராகிய நமக்கு அதுதான் சுபாவம். பகவான் தன் ஆதியஞ்சோதியோடு சேவைசாதித்த பொழுது பெரியாழ்வார் பல்லாண்டு பாட ஆரம்பித்து

"பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு
பல கோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா உன்
சேவடி செவ்வி திருக் காப்பு"

என்று தொடங்கி, ஜீவாத்மாவாகிய தனக்கும் பரமாத்மாவாகிய எம்பெருமானுக்கும் உள்ள சம்பந்தம் பல்லாண்டாக நீடித்திருக்க வேண்டும், வலது மார்பினில் பிராட்டியைக் காண, அவன் பல்லாண்டாய் வாழவேண்டுமென்றும், கைகளில் உள்ள ஆழியையும், சங்கையும் கண்டதும் அவனுக்கு ஏதாவது கெடுதல் நேரிடுமோ என்று எண்ணி அவைகள் பல்லாண்டாக வாழவேண்டுமென்றும் பாட ஆரம்பித்தார். கோதைப்பிராட்டியாரும் தன் தோழிமார்களுடன் எம்பெருமானைத் துயிலினின்று எழுப்பின பிறகு



'அன்றிவ் வுலகளந் தாய் அடி போற்றி
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல் போற்றி
பொன்றச் சகடம் உதைத்தாய் புகழ் போற்றி
கன்று குணிலா எறிந்தாய்! கழல் போற்றி
குன்று குடையாய் எடுத்தாய் குணம் போற்றி
வென்று பகைகெடுக்கும் நின் கையில் வேல் போற்றி
என்றென்றுன் சேவடியே ஏத்திப் பறை கொள்வான்
இன்றுயாம் வந்தோம் இரங்கேலோ ரெம்பாவாய்.

என்று எம்பெருமானுடைய ஒவ்வொரு அவயவத்துக்கும் பல்லாண்டு சமர்ப்பித்தாள். என்னே! இவள் பக்தி!

ஆழ்வார்களின் பெருமையையும் அவர்களுடைய பக்தியின் பெருமையும் எடுத்துச் சொல்லச் சொல்ல முடியாதவது. அதனால் ஔவையார் "இறைவரோ தொண்டருள்ளத் தொடுக்கம், தொண்டர் தம் பெருமையைச் சொல்லவும் பெரிதே" என்று கூறியுள்ளார். என்றாலும் பொதுவாக இவ்வளவு தூரம் ஆராய்ந்த பிறகு "தொண்டு பூண்டு அமுத முண்ணாத் தொழும்பர் சோறுக்கு மாறே" என்றபடி தொண்டர்களுக்கு அடிமைபூண்டொழுகின பக்தோத்தமரான தொண்டரடிப்பொடியாழ்வார் (விப்ரநாராயணன்) என்பவருடைய சரித்திரத்தை அடுத்த வியாசத்தில் கவனிப்போம்.

(தொடரும்)

குறிப்பு:—நமது மித்திரனுக்கு வியாசம் எழுதி ஆதரித்து வருகின்ற பெரியோர்கள் தனித்தனி எழுத்தாக ஒரு பக்கமாக மையால் எழுதியனுப்பினால் அது பெரும்பேருதவியாகும். (ப-ர்.)

## வள்ளல் பாரி.

### அமைச்சனும் அருந்தோழனும்.

(286-ம்பக்கம் தொடர்ச்சி.)

திரு. காந்திதாசன்.

இத்தகைய வள்ளற்றன்மை வாய்ந்த பாரி வேந்தற்கு, "தென்மொழியோ தேன்மொழியோ வென்னுந் தெய்வத் தமிழ் மொழி" வளரும் திருப்பாண்டி நாட்டிலே, திருவாதவூர் என்னுந் திவ்ய திருநாமம் பெற்ற திருநகரில், ஒழுக்கத்திற் சிறந்தவரும், கவிபாடும் வல்லமை வாய்ந்தவரும், குறிஞ்சி நிலத்தை வர்ணித்துப் பாடுவதில் மிக்க வல்லவரும், பத்துப் பாட்டிலுள்ள குறிஞ்சிப் பாட்டும், குறுநூற்றிலுள்ள குறிஞ்சிநூறும், கலித் தொகையிலுள்ள குறிஞ்சிக் கலியும், இயற்றியவரும், இவைகளன்றி, இன்னா நாற்பதும், நற்றிணை முதலிய நூல்களிற் சில செய்யுட்களும் பாடியவரும், புலவர்களிற் சிறந்த புலவர் பெருமானும், மலையை வர்ணித்துக் கவி இயற்றுவதில் அபாரசக்தி வாய்ந்தவரும், அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிற்குஞ் செந்தண்மை பூண்டொழுகலான்" என்னும் அறப் புலவரும் தமிழ் மொழிக்கோர் அணிகலனு யமைந்தவருமாகிய, அந்தணப் பெரியார் "கபிலர்" என்பவர் மீது பாரிவேந்தற்கு அளவற்ற நட்புண்டாயிற்று. பாரி வேறு கபிலர் வேறு என்று யாருங்கருத வொண்ணாத நட்புப் பூண்டிருந்தனர். இவ்விருவர் நட்பானது உடலும் உயிரும் போன்றும், மரமும் நிழலும் போன்றும், தண்ணீரும் தாமரையும் போன்றும், பிணைக்கப்பட்டிருந்தது. பாரியானவன் கபிலமா முநிவரைத் தனது அவைக்களத்துப் புலவராக இருத்தி எந்நாளும் அவரைப் பாராட்டி வந்தான்.

செஞ்சொற்சுவை யறிந்த செல்வனும், செழுங் கவிபாடவல்ல கவிஞனும், நண்பராயமையப் பெற்றிருத்தல் ஓர் சிறந்த நலமாகுமன்றோ? செவிச் சுவையும் கவிச்சுவையும் கலந்தாற் போலவும், செல்வமும் கல்வியும் பூத்தாற்போலவும், பொன்மலர் மணம்



பெற்றாற்போலவும், புவிச்செல்வமும் கவிச்செல்வமும் கலந்து விளங்குங்காட்சி எல்லையற்ற இன்பந்தருமல்லவா? அதற்கொப்பப் பெருந்தமிழ் மன்னர் பிரானும், செவிச்சுவையுடைய செல்வனும், கற்றறிந்த கவிஞரையன்றி மற்றையோரையும், கண்ணும் ஆவியுமாய்க் கருதிப்போற்றுவோனுமாகிய பறம்புக்கோமான் பாரிமாவேளுக்குப் புலனழுக்கற்ற புலவராய்க் கபிலர் நண்பராக அமையப் பெற்றதோடல்லாது, நல்லிசைப் புலவருடன், மெல்லியாதருமை யறிந்த நல்லானுக்கு, "மந்திரி" யாயும் விளங்கினர் கபில முனிவரானவர். "அமைச்சனும் அருந்தோழனு"மாகப் பாரியினது அவைக்களத்திலேயே அமர்ந்து தன் வாழ்நாளைக் கழித்துவந்தார்.

### நீதி நிர்வாகம்.

என்றும் இளநலம் வாய்ந்து விளங்கும் இனிய தமிழ் மாதின் ஆக்கத்திற்கோர் ஆரமாகி விளங்கும் பாரி வேந்தனானவன்,

"கருவியுங் காலமுஞ் செய்கையுஞ் செய்யு
மருவினையு மாண்ட தமைச்சு" (குறள்)

என்னும் நாயனார் வாக்குக்கோரிலக்கியமாய்க் கருத்துக்களை வருத்தமின்றி விளக்கும் பளிங்குநடை பயின்று, இளகியொளிரும் வெண்பொன்னொழுக்கும், இனிய ஓசையும், திட்பமும், சுவையுமுடைய அணியினம் அனைத்துக்கும் தாயான உவமையைக் கையாளுவதில் ஒப்புவமை யற்ற புலவரும்,

"பிறப்பொக்கு மெல்லாவுயிர்க்குஞ் சிறப் பொவ்வாச்
செய்தொழில் வேற்றுமையான்" (குறள்)

என்னும் அமிழ்தினுமினிய தமிழ்மறைக் கிணங்க, "ஞானி உயர்ந்த ஜாதி அஞ்ஞானி தாழ்ந்த ஜாதி; மேலும், சர்வ வல்லமையுமுடைய கடவுள் கருணையினால் சிருஷ்டித்த உலகில் எண்பத்தி நான்கு லட்சஞ் ஜீவபேதங்களில், மனித ஜென்மமெடுத்த மக்களிடை, பிறப்பில் வேற்றுமை காட்டாமல், எக்குலத்தினனானாலும் நான் என்ற "ஆணவம் மாயை காமியம்' மூன்றையும் ஒழித்துச் சகல ஜீவன்களும் தன்னைப்போல் சமம் என நேசித்துப் பாராட்ட வேண்டும். அவன்தான் சாத்வீக புருடன்" என்னும், குணம் வாய்ந்த முனிவரும் ஆகிய கபிலரென்னும் நன் மந்திரியால் பேரிற் சிறந்த பாரிவள்ளல் நீதி பரிபாலனம் புரிந்து வந்தான்.

## நிர்வாகப் பிரிவினை.

அவனது நீதி பரிபாலனத்தின்கீழ், "காணியில்லாதவன் மாணியில்லாதவன் என்றும், பொருளில்லாதவன் அருளில்லாதவன்," என்றும் புகலப்படும் பாரதநாட்டுப் பழமொழிக்கொப்ப, "காணி நிலமும் கறவையும்" இல்லாத மக்கள் இல்லை என்பது குற்றமாகாது. குடிஜனங்கட்குச் சொந்தமாக நிலங்களைப் பிரித்துவிட்டிருந்ததோடல்லாது, அதற்கேற்பவே நிர்வாக அதிகாரத்தையும் தனித் தனியே ஒதுக்கிவிட்டிருந்தான்.

அவனது ஆட்சியில், நிரந்தர உத்யோகஸ்தர்களைத் தவிர, கௌரவ அதிகாரிகள் பலர் நியமிக்கப்பட்டு வேலைசெய்து வந்தார்கள். இதைத்தவிர பறம்பு நாட்டிலே பாரி மன்னவன் காலத்தில் வழங்கப்பட்ட தங்க நாணயம் அப் பிரதேசத்திலே பூமியிலிருந்து கிடைத்துள்ளது. இதுமட்டுமன்றிப் பல விசித்திர ஆயுதங்கள் கற்கோட்டைகளை உடைத்துத் தகர்த்தெறியும் பீரங்கிகள் பீரங்கிக் குண்டுகள் பல கிடைக்கும். பறம்பு மலையிலுள்ள பாரிகாலத்துக் கோட்டைக்குள்ளிருக்கும் குகையில் ஒரே அடுக்காகப் பதினெட்டுப் பீரங்கிகள் ஒன்றின்மேலொன்றாக அடுக்கிவைக்கப்பட்டிருக்கின்றது. இன்றும் மலையுச்சியில் ஒரு பீரங்கியைப் பகிரங்கமாகப் பார்க்கலாம். இதுவும் பாரி காலத்தில் செய்யப்பட்டதே. இவைகளன்றி, உயர்ந்த மூலிகைகளும் அம்மலையில் உண்டு. வரிசையாக அடுக்கப்பட்டிருக்கும் பீரங்கிக் குகையின் முன்னால் படர்ந்திருக்கும் கத்திபோன்ற உருவமுடைய செடியின் இலைகளை வைத்து விஷஉபத்திரவங்கட்குக் கட்டினால், எவ்வித விஷமும் மாறி விடும். உயிர்தரும் மூலிகைகளும் அங்கிருக்கின்றது. அது மகான்களுக்கே தெரியும். மகாத்மாக்கள் மூலம் மற்றையோர் அவற்றைத் தெரிந்துகொள்ளலாம்.

நாணயம் அச்சடிக்கும் இடங்களில் வரக்கூடிய வழக்குகளை விசாரணை செய்ய, ஒரு தனி நீதிபதியையும் நியமித்திருந்தான். அரசரின் சொந்த நிலங்களில் ஏற்படக்கூடிய வழக்குகளை விசாரிக்கப் பல உத்யோகஸ்தர்களிருந்தார்கள். இவர்கள் "நீதி நிர்வாகம்" இரண்டு வேலைகளையும் பார்த்து வந்தார்கள். இவ்விரு அதிகாரங்களும் பறம்பு நாட்டில் பிரிவினை செய்யப்பட்டதின் பயனாக, இவ்விரு இலாக்காக்களின் வேலைத்திறமை வெகுதூரம் பரவி இருந்தது. பொதுஜன சம்பந்தமான வழக்குகளைப் பரிசீலனை செய்யவும், தேகப்



பயிற்சிக்கூடம், சிலம்பக்கூடம் பல ஆரம்பக் கலாசாலை, நடுத்தரக் கலாசாலை, கைத்தொழிற் கலாசாலை, சட்ட கலாசாலை, ராணுவ கலாசாலை, வைத்ய கலாசாலை, ஜோதிஷ கலாசாலை, வேதாந்தக் கலாசாலை, உயர்தரக்கலாசாலை, ஜனரட்சக சபை, நகரபரிபாலன சபை மராமத் இலாக்கா முதலியவைகளையும் நியமித்து, தனித்தனியே அதிகாரிகளை வகுத்திருந்தான். இத்துடனல்லாது, கல்வி இலாக்காவைத் திறமையாகப் பார்வையிடக் கல்விமந்திரியையும் நியமித்து, செவ்வனே நடைபெறச் செய்துவந்தான். இராணுவப்பயிற்சியும், கல்வி கற்பித்தலும், பெரும்பாலும் பெண்மக்களும் கற்றிருந்தார்கள். சில உத்யோகங்களில் பெண்மக்களே தலைமை வகித்திருப்பார்கள். வேணுமென்றவர்கட்குப் போதும் போதுமென வாரி வாரி வழங்கியும், அரசாங்கத்தின் சேமநிதியில் இருப்பு அதிகரித்தேவரும். அதனால் அவ்வப்போது புதிய புதிய திட்டங்களை ஏற்படுத்தி, அதிகமாக வேலைசெய்ய ஏற்பாடு செய்துவந்தான். அவ்விதம் செய்துவந்ததின் பயனால், புதியமுறையானது நல்லபலனை யளித்து வந்தது. நில சம்பந்தத்திற்காகத் தனியாக அதிகாரிகளை நியமித்திருந்தான். உத்யோகஸ்தர்கள் எப்பொழுதும் அரசனுக்கு நல்லவர்களாகவே நடந்து வந்தார்கள். புதிய புதிய முறைகளைக் கையாண்டு வந்ததால், பொது ஜனங்களுக்குப் பலவழிகளிலும் நன்மையையே கொடுத்து வந்தது. எக்காலத்திலும் நிர்ப்பட்சயான நியாயம் வழங்கக் கூடாதென அதிகாரிகளுக்குக் கண்டிப்பான உத்திரவிட்டிருந்ததோடல்லாமல், ஒவ்வொருநாளும் இரவுநேரங்களில், முதற்சாம நேரத்தை நிர்வாக அதிகாரிகள் செய்துவந்தது சரிதானாவென, அன்றாடகப் பதிவுகளைப் பார்த்துவருவான். முந்நூறு கிராமங்களிலுமுள்ள, தர்மஸ்தாபனங்களின் வரவு செலவு இருப்பு, முதலிய கணக்குகள் மாதந்தோறும் கடைசிநாளில் முடித்து, அடுத்த மாதம் இரண்டு மூன்று தேதிகளில், தலைநகராகிய பறம்புநகருக்கு வந்துவிடும். வாராந்தத்திற் கொருமுறையாகக் கிராமங்களுக்கு முகாம்போட்டு, நேரே விசாரணை செய்வான். வாரத்திற் கொருமுறைவரும் இராமயாதாஸ்து, தர்ம ஸ்தாபனங்களின் யாதாஸ்து, முதலியவைகளைத் தலைநகர் வந்தவுடன் அதிகாரிகள் எடுத்துவந்து வாசித்துக் காட்டுவார்கள். விஷயங்களைக் கிரகித்துக்கொண்டு, உடனைக்குடன் பதில் அனுப்பிவிடுப்படியாக உத்திரவிட்டு விடுவான். (தொடரும்.)

# "அங்கதன் அருந்திறல்"

திரு. தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், பீ. ஏ.

"அன்பு அறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு,
இன்றியமையாத மூன்று" என்பது வள்ளுவர் இன்குறள்.

பண்டைத் தமிழகத்தின் அரசியலை, ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும் அழகு செய்தன என்பதைச் சரித்திரம் உணர்ந்த பலரும் அறிவர். ஐம்பெருங்குழுவின் ஒரு பகுதியினராய் அமைந்த தூதுவர்க்குத் தான் "அண்டிவாழும் அரசனிடத்து அன்புடைமையும் அவனுக்கு ஆங்காரியங்களை அறியும் அறிவுடைமையும் அவைகளை மாற்றாரிடத்துச் சொல்லும்போது ஆராய்ந்து சொல்லுதற்குரிய சொல்வன்மையும் இன்றியமையாது வேண்டப்படும் நலமாகும்" என்று தமிழ்ப் பெருமகனும் வள்ளுவர் இலக்கணம் கூறுகின்றார். இவ்விலக்கணத்திற்குப் பொருத்தமாய் அமைந்த தூதுவன் கவியரசர் கம்பர் கவிதையில் அநுமனும் அங்கதனுமாவர் என்று கூறுவது எவ்வாற்றானும் மிகையாகாது.

வானர நாட்டின் வீரனாய் விளங்கிய வாலியின் மைந்தனாய் அங்கதன் அமைந்து வாழ்கின்றான். கடல் கடைந்த வெங்கரதலங்களையுடைய வாலி இராமனது அம்பிற்கு இலக்காகி, அமர்க்களத்திடை அலமந்து வீழ்ந்து கிடப்பதைக் கண்ட ஆற்றல்மிகுந்த அங்கதன் அகங்குழைந்து அழுகின்றான்.

"தறையடித்தது போல் தீராத் தகையவித் திசைகள் தாங்கும்
கறையடிக் கழிவு செய்த கண்டகன் நெஞ்சமுன்றன்
நிறையடிக் கோலவாலின் நிலைமையை உள்ளுந்தோறும்
பறையடிக்கின்ற அந்தப் பயமறப்பறந்தவன்றே" என்றும்

"குலவரை நேமிக்குன்ற மென்று வானுயர்ந்த கோட்டின்
தலைகளும் நின்பொற்றாளிற் றழும்பினில் தவிர்ந்தவன்றே



மலைகொளுமாவும் மற்றும் மதியமும் பலவுந்தாங்கி
அலைகடல்கடைய வேண்டின் ஆரினிக்கடைவாரய்யா."

என்று கலங்கியழுது, தன்தாதையின் அரிய செயல்களின் அருந்திறன் அறிந்து போற்றும் அங்கதன் உள்ளம் கற்றார் உளத்திற்குக் களிபேருவகை தருவதாகும். மருமத்திடை ஊறு தாக்கி மயங்கிக் கிடக்கும் வானரவீரன் தன் அருமை மகனை அன்புடன் அழைத்து, அவனுக்குத் தேறுதல் மொழிகள் பலகூறி இராமனது பெருமையினை எடுத்துரைத்து அவனை "மால் தரும் பிறவி நோய்க்கு மருந்தென" நினைந்து அவனடிவணங்கி வாழ்வாயாக என்று ஆசிகூறுகின்றான். இத்துடன் தன் அருமந்தமகனைப் பொய்யுடை உள்ளத்தார்க்குப் புலப்படாப் புலவனிடம், அடைக்கலம் என்று ஒப்புவித்துப் பின் உயிர் நீத்தனன் என்பர் கவியரசர். அங்கதனும் தந்தையின் மொழியைத் தலைமேற்கொண்டு, இராமவீரனது பாதம் பணிந்து அவனது பணியாற்றுதலே தன் பெருந் தவம் என உறுதியுடன் மனதில் நினைந்து ஒழுகுவானானான்.

இராமனது பணியைத் தலைமேற் கொண்ட அங்கதன் சிறையிருந்த செல்வியாம் சீதையைத் தேடும் செம்மை சான்ற செயலில் ஈடு பட்ட வானர வீரர்களில் தென்திசை நோக்கிச் செல்லும் தானைத் தலைவனாய் அமைந்து, புறப்படுகின்றான். இவனுடன் சேர்ந்தவீரர் அனைவரும் காடும் மலையும் கடந்து, மகேந்திரமலையின் அடியில் வந்து சேர்கின்றார்கள். இதுவரை புகை புகா வாயிலிலும் புகுந்து தேடிச் சீதையைக் காணாது அகம் நொந்து அங்கதன் குழைந்து சாய்கின்றான். தான் ஏற்றபணியைச் செய்து முடிக்க வலியற்று, இராமனிடம் சென்று சீதையை எங்குந் தேடியும் காணவில்லை என்று சொல்லி அவனுக்குத் துயர் விளைப்பதைவிடத் தான் உயிர் துறந்து விடுதலே சிறந்ததென வீரன் கருதுகிறான்.

"எந்தையுமுனியும் எம்மிறை இராமனும்
சிந்தனைவருந்து மச் செய்கை காண்குறேம்
நுந்துவென்னுயிரினை நுணங்கு கேள்வியீர்
புந்தியினன்னது புகல் வீராம்" என்று

அங்கதன் அலமந்து கூறும் உரை சாலவும் அழகுடையதாகும். பின்னும் சாம்பன் முதலியோரிடம் கலந்து ஆலோசிக்கு மளவில், தான் புரிய விரும்பிய செயல் நன்றன்று என்பதை உணர்கின்றான்.

தான் ஏற்றபணியில் வெற்றி பெறாது மாண்டதை அறிந்தால் தாயாகிய தாரையும் தந்தையாகிய சுக்கிரீவனும் உயிர் துறப்பார். அவ்விருவரும் உயிர் துறந்ததைக் கண்டு மனம் பொறாது, இராமனும் லக்குவனும் உயிர் துறக்க நேரிடலாம். இவ்விருவீரரும் உயிர் துறக்க நேரின். அயோத்தியில் அமைந்து அரும் தவம் புரியும் அண்ணலாகிய பரதனும் இளைய கோவும் மற்றுளோரும் உயிர் தரித்திருப்பர் என்பது ஐயமேயாகும். ஆகவே சீதை எனும் ஒரு பெண்ணால் எத்தனை பேர் நைந்து வருந்துகின்றார்கள் என்பதை ஆழ்ந்து அறிந்து அடங்குகின்றான் அங்கதன்.

"எல்லை நம்பி றுதியாய்க்கும் எந்தைக்கும் யாவரேனும்
சொல்லவுங் கூடும் கேட்டாற் றஞ்சவும் மடுக்கும் கண்ட
வில்லியும் இளைய கோவும் வீவது திண்ணம் அச்சொல்
மல்லனீர் அயோத்தி புக்கால் வாழ்வரோ பரதன் மற்றோர்"

"பரதனும் பின்னு ளோனும் பயந்தெடுத்தவரு மூரும்
சரதமே முடிவர் கெட்டேன் சனகியென் றுலகஞ்சாற்றும்
விரத மாதவத்தின் மிக்க விளக்கினால் உலகத்தியார்க்கும்
கரைதெரி விலாத துன்பம் விளைந்தவாவெனக் கலுழ்ந்தான்"

எனக்கவியரசர் கவியாற்றுகின்றார். இந்த நிலையில் இவர்முன் சடாயுவின் தமையனான சம்பாதி தோன்றி

"பாகொன்று குதலை யாளைப் பாதக அரக்கன் பற்றிப்
போகின்ற பொழுதுங் கண்டேன் புக்கனன் இலங்கை புக்கு
வேகின்ற உள்ளத்தாளை வெஞ்சிறை யகத்துவைத்தான்
ஏகுமின் காண்டிரங்கே யிருந்தனள் இறைவியின்னும்"

என்று சீதையின் நிலைமை எடுத்துரைத்ததைக் கேட்ட அங்கதன் மனந்தேறி அனுமனை இலங்கைக்கு அனுப்பி அவன் இலங்கை சென்று திரும்பிவருமளவும் இராமன்முன் செல்ல இசையாது மலையடியிலேயே இனிதிருக்கின்றனன்.

"ஈரமென்றொரு பொருள் இலாத நெஞ்சினர்" வாழும் இலங்கையில் அசோகவனிதையில் அணங்கைக் கண்டு அயலார் ஊரைத் தீக்கிரையாக்கித் திரும்பிய அனுமனைக்கண்ட அங்கதன், தாய்வரக் கண்ட கன்ன உவகையில் தளிர்த்தான். சீதையைக் கண்டு அவளிடம் அனுமன் அடையாளம் பெற்று வந்ததை அறிந்த அங்கதன்



ஆரா உவகையெய்தி அந்த நற்செய்தியை இராமனுக்கு அறிவிக்க உடனே புறப்படுகின்றான். இவனுடன் புறப்பட்ட வானர வீரர்கள், அங்கதன் அனுமதி பெற்று அருகேயிருந்த மதுவனத்தில் புகுந்து அவரவரால் இயன்றமட்டும் மதுவைமாந்தி, மகிழ்ந்தனர். மதுவனம் அழிந்ததை அறிந்த ததிமுகன், அங்கதனுடன் பொருது அவனது அறை ஒன்றுக்காற்றாது அல்லற் படுகின்றான்.

"மதுவனந்தன்னை யின்னே மாட்டுவித்தனை நீயென்னுக்
கதுமென வாலி சேய்மே லெறிந்தனன் கருங்கற்பாறை
அதுதனைப் புறங்கையாலே யகற்றி அங்கனுஞ் சீறித்
ததிமுகன் தன்னைப்பற்றிக் குத்தினன் தடக்கைதன்னால்."

என்று கவியரசர் கூறும் செம்மைசான்ற சொற்கள் அங்கதனது வலியை ஒருவாறு விளக்குவதாகும். பின்னர் கதிரோன் மைந்தன் தன்னை வந்தடைந்த ததிமுகனுக்குச் சமாதானம் பலகூறி அனுப்பவும் ததிமுகனும் தந்தவற்றை உணர்ந்து வாலிசேயைத் தொழுதபோது அவனும் மயக்கம் தெளிந்து அவனை யெடுத்து மார்புடனணைத்து "உம்மை யான் சூழ்ந்ததும் பொறுக்க" எனப்பணிந்து கூறினான். தான் அரசிளங்குமரன் என்றும் அகந்தையிலாது அங்கதன் ததிமுகனிடம் தாழ்ந்து கூறிய சொற்கள் அவன்றன் சிறந்த உள்ளத்தின் பெருமையை இனிது விளக்குவதாகும்.

இனிக் கடல் கடந்து இலங்கை சென்ற இராமன் போர் தொடங்குமுன், அரசியலுக்கு மாறுபடாத முறையில் தூதனுப்ப எண்ணுகின்றான், "தன்செய்ய செங்கைத் தனுவென" விளங்கும் அனுமனையே தூதனுப்ப முதலில் இராமன் எண்ணினனேனும், பின்னர் மாருதிமுன்னம் ஒருதரம் தூதுசென்று செயற்கருஞ் செயல்கள் பல நிகழ்த்தி மீண்டவன். அவனையே திரும்பவும் அனுப்பினால் இவனைத் தவிர வலிமையுடையார் வானரப்படையில் ஒருவரும் இலர் என்று பலர் கருத இடந்தரும். ஆதலின் அவனையொத்த ஆற்றல் பொருந்திய அங்கதனையே அனுப்புவோம். வீரஞ் செறிந்த அங்கதன் ஒருவனே பகைவர் அறந்தவறித் தூதனுக்கு இடையூறு செய்த காலத்தும் அவர்களிடம் போர்செய்து வெற்றி பெற்று, மீளும் ஆற்றல் படைத்தவன் என்று இராகவன் தன் மனத்தினுட் கருதி அங்கதனையே தூதுவனாக அனுப்பவிழைகின்றான். (தொடரும்)

# குசேலர்.

(276-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. வீராசாமி பிள்ளை.

வில்போன்று விளக்கமாகிய கரும்புருவப்பாவாய்! அற்பமாகிய இந்த மாமிசவுடம்பு (பொல்லாப் புழுமலி நோய் புன்குரம்பை) இதைச் சதமென்று எண்ணி இதனிடம் அன்பு பூண்டு காத்து அலைந்து திரிவது அறிவீனர் தொழிலாகும். ஆகையால் (இவ்வுடம்பு பேணற்காக) யான் பாற்கடலில் வாழும் மீன்கள் அப்பாலை விரும்பாமல் அதில் உள்ள நண்டு, நத்தை, தவளை இவைகளை விரும்புவது போல யதுகுலப்பெருமான் கொண்டல் வண்ணன் கோவலனாய் வெண்ணெயுண்ட வாயன் என்னுள்ளங்கவர்ந்த அண்டர்கோன் ஆகிய கண்ணபிரானிடம் நாற்கதிகளையும் கடக்கும் சுகபோகமாகிய செல்வத்தை விரும்பாமல் துக்கரூபமாகிய செல்வத்தையா யான் அவாவுவேன்? வேறெங்காவது செல்வந்தரிடம் பொருள் பெறலாமென்றால், தூநகை கரிய வாட்கண் சுடர்த்தொடீஇ! மானமின்றித் தாழ்வை மேற்கொண்டு வீடுகளின் கடைவாயில்தோறும் இழிவாகச் சென்று யாசகம்செய்து இவ்வுடம்பைப் பெருக்கச் செய்தாலும் நிலைத்ததல்லவே. நீர் மேற்குமிழியான நிலைபற்றதும் நலமில்லாததுமாகிய இவ்வுடம்பைப் போற்றல் நல்லோரின் செய்கையல்ல; மலக்குழியில் வீழ்ந்து சுகமாயிருக்கிறது என்று, நினைப்பதுபோல வலிய சம்சாரத்துக் கடற்சேற்றில் யான் சுழன்று வருந்தமாட்டேன். இனி யாரிடமும் எது வேண்டியும் செல்லேன் என்று தவராஜ சிங்கமாகிய குசேலர் சொல்லிமுடித்தார்.

இங்ஙனம் தன் ஆருயிர்த்தலைவனாகிய குசேலர் கூறிய அனைத்தும் வணக்கமுடன் செவியில் ஏற்ற சுசீலை தன் நாயகன் கூறிய அனைத்தும் உண்மையென்று உணர்ந்தாளாயினும்,புதல்வர் மாட்டுக்



கொண்ட அன்பும் ஆசையும் நீங்காளாய்த் தன் நாயகன் மலரடியைத் தொழுது நின்று பின்னும் சொல்வாளாயினள். "உறுதி நூலாய்ந்து குற்றங்கள் சிறிதும் அணுகவிடாத தவவொழுக்கமுடைய என் பிராணநாதரே! ஆதிசேடனாற் சுமக்கப்பட்ட இப்பூமியில் முயற்சி செய்யாத ஒருவற்கு எந்தப்பாக்கியமும் எவ்வாறு கிடைக்கும்! பூமியை நன்றாய் உழுது விதைத்துப் பயிர் செய்யாத ஒருவனுக்குப் பயன் எவ்வாறு எய்தும்!, மனிதர் செல்வம் வேண்டும் என்று முயன்றால் தெய்வமும் இரங்கித் தந்தருளும். "முயற்சி திருவினையாக்கு முயற்றின்மை, இன்மைபுகுத்திவிடும்" (முயற்சி செல்வத்தையுண்டாக்கும் முயலாமை வறுமையில் புகுத்திவிடும்) என்று ஆன்றோர் கூறுவர், மக்கள், தேவர், நரகர். என்று புலவரால் வகுத்துக் கூறும் உயர்திணைமுதலிய எல்லாவுயிர்களுக்கும், சங்கு, திகிரி, வாள், தண்டு, வில் என்னும் பஞ்சாயுதங்களைத் தாங்கிய கருங்கடல் வண்ணன் ஆயர் தம் குலக்கொழுந்து தீன தயாளனுமாகிய எம்பெருமான் வேண்டிய வேண்டியாங்கு கொடுத்தருளுவனென்று தாங்கள்பலதடவைகளில்திருவாயமலர்ந்துகூறினீர்கள். அஃதுண்மையே. முயற்சியல்லாமல் அப்பெருமான் எப்படிக் கிருபைசெய்து ஈவான். குணப்பெருங்கடலே! செய்யவேண்டிய முயற்சிகளைச் செய்தால் இலக்குமி வசிக்கும் வலமார்பன் மனமிரங்கி அவரவர் செய்த முயற்சிக்குத்தக்கப் பயனளிப்பான் "அங்ஙனம் முயலாமல் வாளாவிருப்பாராயின். விரும்பிய போகத்தை எய்துவது யாங்ஙனம்? இங்ஙனம் தங்களைப் போன்ற பெரியார் கூறுவர். அடியாளிடம் முற்பிறப்பில் புண்ணியகருமம் புரிந்தவர் முயற்சியில்லாமலே நினைத்த யாவையும் அனுபவிப்பர் என்று தாங்கள் அறிவித்தீர்கள் அஃது உண்மையெனினும் சரீரசுகத்துக்கு ஏதுவாகிய அரிசி, உப்பு, விறகு, நீர், முதலிய உபகரணங்கள் சரியாய் இருந்தும் சமைத்தலாகிய முயற்சியில்லாமல் போய்விடில் அவை அனைத்தும் பசியாகிய நெருப்புத் தணியத்தக்கதோர் உணவாவது எங்ஙனம்?

ஐயனே! கடவுள் ஈவானென்று நாள்தோறும் ஒருவன் முயலானாகில் செல்வம் உண்டாகுமோ! அரிய உண்கலத்திட்டபாற்சோற்றை ஒருவன் கையாலெடுத்து உண்ணாவிடில் பசி எங்ஙனம் நீங்கும்? முன் ஒரு முதலையால் வலியிழந்த கஜேந்திரனும் இரணியனால் துன்புற்ற பிரகலாதனும் துதித்து அழைத்த முயற்சியாலேயே பகவான் ஆண்டருளின் என்பது தாங்கள் அறியாதவை யல்லவே,

முக்குறும்பெறிந்த முனிவரே யாயினும் அவர் விரும்பாமல் திருமால் எங்ஙனம் முத்தியளிப்பான். மலமற்ற முனிவரேறே, தாங்கள் விரும்பியதை விரும்பியவாறே அப்பெருமான் அளித்தருள்வன். அப்பெருமான் நமக்கீவதினால் நமக்குப் புகழேயாம். அந்தப் பரந்தாமனது திருவடிகளேயன்றி வேறு ஆதரவு இல்லையென்று கடைப்பிடித்து, துராசை பொய்புகழல் கோபங்கொள்ளல் இவற்றை முழுதும் ஒருவிய முதல்வ! ஈசன் பிரமன் இந்திரன் முதலிய தேவ தேவர்கள் வணங்கும் பெருமான் நந்தகோபன் திருமாளிகையில் அவன் புதல்வனாய் அவதரித்து அற்புதத் திருவிளையாடல்கள் பலவியற்றி எழுந்தருளியிருக்கிற துவாரகாபுரியை அடைந்து சிறிது செல்வங்களை அருள்வாயென்று அப்பெருமானை வேண்டினால் அது இழிவாகுமா?

குற்றமற்ற "குலமகட்குத் தெய்வம் கொழுநனே" என்று கூறிய பெரியோர் வாக்கின்படி பாசபந்தங்களை யகற்றி அறநூல்கள் பலவற்றை ஓதியுணர்ந்த தாங்களே அடியேற்குச் சொல்லற்கரிய தெய்வமாக விளங்குகின்றீர்கள். அடியேங்களை அன்போடு காத்தருளல் தேவரீர் கடமையே யாகும். மடல் விரிந்த திருத்துழாய் மாலையணிந்த ஆயன். யசோதைப்பிராட்டியின் திருமகன். பாதாரவிந்தத்தைத் தியானித்து இருவினைகளைப் போக்கும் பெருந்தகைபோய்! அறியாமையையுடைய பேதையாகிய அடியேற்குத் தெய்வமும் நீரே; போற்றற்குரிய தலைவனும் நீரே. எல்லாத் தவங்களும், கைங்கிரியங்களும் தேவரீருக் குரியவையே.

கடல் சூழ்ந்த எல்லா உலகங்களையும் அதில்வாழும் ஜீவராசிகளையும் திருமகள் கொழுநனாகிய திருமால் காப்பானாயினும் தேவரீர் தாங்கள் பெற்ற அருமையாகிய 27 மக்களையும் என்னையும் காப்பது தங்கள் கடமையேயாகும். வேறு எந்தச் செல்வவானிடமும் போயிருந்து பொருள் பெற்று வருமாறு அடியாள் வேண்டிக்கொள்ளவில்லையே. தாங்கள் துவாரகை சென்று கண்ணபிரானைத் தரிசித்தீர்களாயின் குறிப்பறிந்து வளங்கள் யாவையும் நமக்கு அருள்வன் என்று கற்பரசியாகிய சுசீலை வேண்டிக்கொண்டனள்.

மக்களைக் காப்பதற்கு இன்றியமையாத பொருளின்மையால் முகம்வாடி இரங்கி அழுது புலம்புகிற கற்புடைய சுசீலையின் தேன்போலும் இனிய சொல்லைக்கேட்டு ஒருவாறு மனமிசைந்து குசே



லர் "கண்ணபிரானைக்கண்டு சேவித்தால் நமக்குப் பெருமைவாய்ப்பதோடு அந்தமில் பேரின்பத்தழியாவீடும் கிட்டும். சிறிய புதல்வர்களால் மனம்வாடும் சுசீலையின் எண்ணமும் நிறைவேறும்" என்று சிறிது நேரம் ஆலோசித்து வாழ்க்கைத் துணைவியாகிய சுசீலையின் முகம் நோக்கிக் கூறுவாராயினர். வறுமையையுடையவர் செல்வமுடையாரிடத்துச் செல்வாராயின் மதிக்கவே மாட்டார்கள். அவர்கள் ஏதாவது ஒரு குற்றத்தை ஏற்றி அவமானத்தையும் செய்வார்கள். சென்ற வறியவர் மானம் உள்ளவராயின், உடனே உயிரை விடுகின்ற கொள்கையை மனத்திற் கொள்வர். "இல்லாரை எல்லாரும் எள்ளுவர், செல்வரை எல்லாருஞ் செய்வர் சிறப்பு" என்ற பெரியார் கூற்றின் உண்மையை அறிவாயாக: அன்றிக் "கல்லானேயானாலும் கைப்பொருளொன்றுண்டாயின் எல்லாருஞ் சென்றங் கெதிர் கொள்வர் இல்லானை இல்லாளும் வேண்டாள் மற்றீன்றெடுத்த தாய்வேண்டாள் செல்லாதவன் வாயிற் சொல்" இத்தகைய கைப்பொருளுடையாரிடம் வறுமையாளர் ஒன்றையும் விரும்பாமற் சென்றபோதிலும் இவர் எதை யாயினும் கருதி வந்திருப்பாரென்று அவ்வறியவர் மனம் வருந்தும்படி குறிப்புரைகள் பல நவிற்றுவார்கள். ஆகையால், ஆசையோடு செல்வர்களிடம் போய்வந்தால் தாழ்வேயாம்.

இங்ஙனம் பலபட நம் நாதன் கூறுவதற்குக் காரணம் என்னவென்று ஐயங் கொள்ளேல். எக்காலத்தும் பிறவித்துன்பங்களையுடைய மாந்தரது தன்மை இன்னவெனக் கூறினேன் சந்தமுடைய வேதத்தின் சிரப்பொருளும் பரம்பொருளும் தலைவனுமாகிய ஸ்ரீகண்ணபிரானிடம் செல்வது தகாதென்று சொன்னேனென்று நினையாதே. காணிக்கைப் பொருளில்லாமல் ஐயனிடம் யான் எப்படிச் செல்லுவேன்? தெய்வசன்னிதி, ஆசிரியர் சன்னிதானம், அரசசமுகம் இவைகட்கு ஏகுவோர், அன்னார் கிருபையைப் பெற விரும்பினால் அவர்கட்குப் பிரியமாகிய கையுறை ஏதாவது கொண்டு செல்லவேண்டும். மையுண்டகண்களையுடைய சுசீலா! இனிதாகிய என்ன பொருளைக் கையுறையாகக் கொண்டு சகல சம்பன்ன சர்வவியாபியாக வீற்றிருக்கும் ஸ்ரீகண்ணபிரானிடம் செல்லுவேன்.

மலைபோன்ற தெய்வத்துக்கு மலையளவு நிவேதனம் வேண்டியதில்லை. சப்தசமுத்திரங்கட்கு நிறைய நீர்வேண்டியபோது ஒரு சிறிய புல்நுனியில் தங்கிய பனித்துளி என்ன சந்தோஷத்தைச்

செய்யும். இளங்கன்னியர் தங்களுக்குத் தக்கவரன் கிடைத்து மணவினை நிகழக்கருதினால் அவர்கள் மூன்றாம்பிறையாகிய சந்திரன் தோன்றுங் காலத்தில் தங்கள் முன்தானையின் மெல்லிய நூலிழையைப் பறித்து அருச்சித்துப் போற்றுவார்கள். ஆகையால் "வாயுள் வையகம் கண்ட" ஆயர் புத்திரனாகிய அருந்தெய்வத்துக்கு யான் என்ன கையுறை கொண்டுகாண்பேன். எம்பெருமானுக்கு "திருக்கண்ணமுது" என்னும் பாயாசமும் அவலும் விருப்பம், விதுர மகாராஜன் பாயச நிவேதனம் செய்து சதுர்ப்புஜ தெரிசனம் பெற்றான். இதற்கு நாம் எங்கே செல்வது என்செய்வேன்; கையுறையின்றிக் கண்ணனிடம் போகேன்" என்று கூறினார்.

வேதங்களிற் கூறிய ஒழுக்கந்தவறாத கற்புடைய சுசீலை இதைக் கேட்டதும் மனங்களித்து அன்றுமுதல் தான் உணவின்றி நோன்பு கொண்டு பக்தியோடு தன்கணவன் அரிதில் தேடிக்கொடுக்கிற தானியத்தில் தன்னுடைய பங்கை வேறாக எடுத்து ஆய்ந்து சேர்த்து நல்லநாளில் பரிசுத்தமான நீரில் நனைத்து மணமுறவறுத்தெடுத்து உரலிற்சேர்த்து உலக்கைகொண்டித்து உமிபோக்கி நிறைந்த அவலாகச்செய்து குசேலமுனிவரது பலதுவாரங்களையுடைய கிழிந்த ஆடையை ஆராய்ந்து ஒரு பக்கத்தில் முடிந்து கொடுத்து ஐயனே! இக்கையுறை கொண்டு எம்பெருமான் சன்னிதி போய்வருக எனக்கூறி வழியனுப்பினாள். (தொடரும்.)

## வேண்டுகோள்.

ஐயன்மீர்!

நமது மித்திரன் பிறந்து இற்றைக்கிரண்டாமாண்டு நிறைந்து மூன்றாமாண்டு முன் நிகழ்ந்து வருகிறபடியால் சந்தாதாரர்கள் இதன் மூன்றாமாண்டுச் சந்தாத் தொகையை முன்னரே மணியாடர் மூலம் அனுப்பிவைத்தால் மிக்க நலமாயிருக்கும். மேலும் அவரவர் சந்தாக்களை வி. பி யில் வசூலிப்பதானால் அணா ஐந்து அதிகமாகச் சந்தாதாரர்களுக்கே செலவு நேருவதோடு வீண் சிரமமும் ஏற்படுகிறது என்பதைச் சந்தா நேயர்களுக்கு ஞாபகப்படுத்திக் கொள்ளுகிறோம். ப. ர்.

# கால்நடை வைத்தியம்.

(302-ம் பக்கம் தொடர்ச்சி)

## வெக்கை.

பதிப்புரிமை செய்யப்பட்டது.

ஸ்ரீ S. பெருமாள் கோன்.

இந்த நோய்க்கு வெதுப்பு சரக்கழிச்சல் பிச்சைநோவு அம்மை முதலிய பலபெயர்கள் வழங்குகின்றன. வெக்கை என்பது சுரமும் பேதியும் கலந்து மனிதருக்கு வரும் டைபாயட் என்னும் விஷசுரத்தின் தன்மையுள்ள தொத்து வியாதி. அது வெகு விரைவாகத் தொத்துந் தன்மையுள்ளவைகளென்று தெரிந்த வியாதிகளில் ஒன்று. இந்த வியாதிகண்ட கால்நடைகளின் இரத்தத்திலும் தேகத்தின் சதை முதலிய பாகங்களிலும் பரவியுள்ள குறித்த ஒரு விஷவஸ்து இந்த வியாதிக்கு ஆதாரமாயிருக்கிறது. இந்த வியாதிகண்ட கால்நடைகளின் நான்காம் இரைப்பையிலும் குடலிலும் சில குறிப்பான மாறுதல்கள் தவறாமல் காணப்படுகின்றன. ஒரு பிராணி இந்த வியாதி சம்பந்தத்துக் குட்பட்டதுமுதல் வியாதியின் விஷம் உள்ளேயே விருத்தியடையுங் காலம் அதாவது வியாதிக்குறிகள் வெளிக்குத் தோன்றும் வரையில் செல்லுங்காலம் மூன்று நாளுக்குமேல் ஏழுநாளுக்குட்பட்டதாக இருக்கிறது. முதலிலே காணப்படும் குறி வியாதிகண்ட பிராணியின் தேகச்சூடு அதிகப்படுவது, உற்சாகமின்மை, நடுங்குவது, மயிர் சிலிர்த்து நிற்பது, வாய் சூடாயிருப்பது வாயின்தோல் இரத்த சுரப்பினால் சிவந்திருப்பது, குறுகின வறட்டிருமல், காதுகள் சோர்ந்து தொங்குவது, சாதாரணமாய் மலச்சிக்கு, சாணி சீதத்தினால் மூடியிருப்பது, அரைகுறையான பசி, அநேக சந்தர்ப்பங்களில் அதிகமான தாகம், தேகத்தின் பல பாகங்களிலுள்ள சதைகளிலும் முக்கியமாக முதுகு முன் சப்பைகள் பின்சப்பைகள் இவைகளிலுள்ள சதைகளில் வலியும் இழுப்பும், முதுகு வில்போல் வளைவது, நாலுகால்களும் வயிற்றுக்குக் கீழாக நெருங்கிக்கொண்டு வரப்படுவது, தாமதமாகவும் ஒழுங்கில்லாமலும் அசைபோடுவது,

பல்லை நெறநெறென்று கடிப்பது, கொட்டாவி விடுவது, முதுகெலும்பை அழுத்தினால் நோவது, நாடித் துடிப்பு துரிதப்படுவது, வாய் காதுகள் கொம்புகள் கால்கள் தேகத்தின் மற்றபாகங்கள் ஆகிய இவைகள் சில சமயங்களில் உஷ்ணமாகவும் சீதளமாகவும் சீதோஷ்ண வேறுபாடுகள் அடைவது, அவசரம் மிகவும் துரிதப்படுவது, பசியில்லாமற்போய்விடுவது, அசைபோடுதல் நின்றுவிடுவது, கண்களிலிருந்து சொற்பமாக நீர் வடிவது, முதுகெலும்பை அழுத்தினால் உண்டாகும் நோவு அதிகப்படுவது, தலையை விலாப் பக்கம் நோக்கித் திரும்பவைத்துப் படுத்துக் கிடப்பது, மிகுதியான சுரம் மிகுந்த தாகம் விழுங்குவதற்குக் கஷ்டப்படுவது, சதைகளிலே இழுப்பும் வலிப்பும் விசேஷமாய்க் காணப்படுவது, நாடித்துடிப்பு மிகவும் துரிதமாயும் ஒழுங்கில்லாமலும் இருப்பது, அசைவதற்குக் கஷ்டப்படுவது, ஈறும் கன்னங்களின் உட்பக்கத்துத் தோலும் நாக்கின் தோலும் மிகச்சிவந்திருப்பது, நாக்கின்மேல் அழுக்குப்படிவது, மலபந்தம் அதிகப்படுவது, உண்டைஉண்டையாகத் துண்டுபட்டுப் போடப்படும் சாணியின்மேல் சீதமும் ரத்தமும் மூடியிருப்பது, மலக்குடல் மறைஸ்தானம் இவைகளின் உட்பக்கத்துத் தோல் மிகச் சிவந்து வறண்டிருப்பது, மூலக்கடுப்பு ஏதோ சில சந்தர்ப்பங்களில் மலக்குடல் மறைஸ்தானம் இவைகளின் உட்புறம் வெளிக்குத்தள்ளப் படுவது, கண்கள் மூக்குத்துவாரங்கள் வாய் இவைகளிலிருந்து பிசுபிசுப்பான நீர் அதிகமாக வடிவது, சுவாசம் மிகவும் துர்க்கந்தமாவது, ஈறு கடைவாய் கன்னத்தின் உட்பக்கம் வாயின் மேற்புறம் வாயின் அடிப்புறம் நாக்கு இந்த இடங்களிலும் சில சமயங்களில் மூக்குத்துவாரத்து உட்பக்கத்திலும் கண் ரெப்பைகளின் உட்பக்கத்திலும் கூடத் தோலுரிபடுவது, மஞ்சள் நிறமான புண் கொஞ்சமாகவோ அதிகமாகவோ உண்டாவது, முன்வாய்ப் பற்கள் ஆடிப் போவது, இப்போது பேதி ஆரம்பிக்கும். முதலில் சீதமும் ரத்தமும் மூடிய கடினமான சிறு சாணி உண்டைகளும் குழம்பான மலமும் விழும். பின்பு வெறுநீர்மயமாய்ச் சீதக்கட்டும் இரத்தமும் ரணமான சதைத்துண்டுகளும் கலந்தமலம் விழும். அது மிகவும் துர்நாற்றமுடையதாயிருக்கும். ஏதோ சில சந்தர்ப்பங்களில் காற்று உள்ளடங்கிய வீக்கங்கள் தோலுக்கடியிலே காணப்படும். மிகுந்த தளர்ச்சிதோன்றும். இடைவிடாமல் தாகமுண்டாகும். ஆயினும் விழுங்குவதற்கு அதிக கஷ்டமாயிருக்கும். பின்பு இருமலுண்டாகி



தோல் கொம்புகள் காதுகள் கால்கள் வாய் இவைகள் சில்லென்று போகின்றன. கர்ப்பமாயுள்ள பசுவாயிருந்தால் கர்ப்பம் பெரும்பாலும் கரைந்துபோகும். வியாதியுள்ள பிராணி படுத்துக்கொண்டு எழுந்திருக்கச் சக்தியேயில்லாமல் வருத்தத்தோடு சத்தம் செய்யும். சுவாசம் விடுவதற்குக் கஷ்டப்படும். அடித்தொண்டையினால் பன்றி உறுமுதல்போல் குறுகுறுப்பான சத்தமிடும். அதற்குத் தெரியாமல் ஜலரூபமான இரத்தக்கழிச்சல் ஒழுகும். நாடி அகப்படாமற் போய்விடும். மரணம் பெரும்பாலும் இரண்டுநாளுக்குமேல் ஆறு நாளுக்குள் சம்பவிக்கும். சில சமயங்களில் அலைதாடி பால்மடி தொடையிடுக்கு தோட்பட்டை விலாப்புறம் இவ்விடங்களில் கொப்புளங்கள் தோன்றும். ஆனால் இந்தக்கொப்புளங்கள் இந்த வியாதியில் தவறாமல் காணப்படுகிற குறி அல்ல. அவைகள் எப்போதாயினும் தோன்றினால் கோடைகாலத்தில் இந்த வியாதி காணும் கால்நடைகளுக்குத்தான் தோன்றுகின்றன. இந்தக் கொப்புளங்கள் அனுகூலமான குறியாகக் கருதப்படுகின்றன. ஏனென்றால் அவைகள் அதிகமாகக் காணப்பட்டால் அப்படிக் காணப்படும் பிராணிகளுக்குச் சீதபேதிக் குறிகள் தோன்றுவது அபூர்வம்.

தொடரும்.

---

## சமுதாயக் கிளர்ச்சிகள்.

நாகை.

1. 21—5—31ல் நடந்த கமிட்டி மீட்டிங் தீர்மானங்கள் வாசிக்கப்பட்டன.

2. சென்ற மீட்டிங் தேதியில் மெம்பர்களின் எண்ணிக்கை 14. ஆக இருந்தது. நாளது தேதியில் 32க்குக் கூடுதலான விபரம் மீட்டிங்கில் சொல்லப்பட்டது.

3. காரியதரிசியால் பிரேரேபிக்கப்பட்ட தீர்மானம்.

“நிர்வாக கமிட்டி மெம்பர்கள் தங்களால் கூடுமானவரையில் சங்கத்துக்கு அதிகப்பற்றான மெம்பர்களைச் சேர்த்து சங்கத்தை அபிவிர்த்திக்குக் கொண்டு வரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்”

திரு A. கலியபெருமாள் பிள்ளை அவர்களால்
ஆமோதிக்கப்பட்டது.
தீர்மானம் ஏகமானதாய் நிறைவேறியது.

4. மெம்பர்களிடமிருந்து இன்னும் பாக்கியாக வைத்திருக்கும் சந்தாவை வசூல் செய்ய நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்படி காரியதரிசி கேட்டுக் கொள்ளப்படுகிறார். நோட்டீஸ் கார்டு எல்லா மெம்பர்களுக்கும் அனுப்ப அனுமதி கொடுக்கப்பட்டது. தீர்மானம் தலைவரால் பிரேரேபிக்கப்பட்டு நிறைவேறியது.

5. நாகை தாலுகாபோர்டு பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் ஏழை யாதவ மாணவ மாணவிகளுக்கு இலவசமாகப் புஸ்தகங்கள் சப்ளை செய்வதற்குக் குழந்தைகளைத் தெரிந்தெடுக்கவும் கமிட்டியின் அங்கீகாரத்தை முன்னிட்டுச் சப்ளை செய்யவும் அனுமதியளிக்கப்பட்டது.

தீர்மானம் தலைவரால் பிரேரேபிக்கப்பட்டு ஏகமனதாய் நிறைவேறியது

எம். ராஜகோபாலன், செக்ரடெரி.

தஞ்சை:-

29—8—31 சனிக்கிழமை காலை 8 மணிக்கு இச்சங்கத்தின் நிறைவேற்றுக் கழகக் கூட்டம் கூடி அடியிற்கண்ட விஷயங்களைத் தீர்மானிக்கலாயிற்று.

1. சென்ற ஜூலை மாத வரவு செலவுகள் அங்கீகரிக்கப்படும்;

2. 1i7 முதல் 141முடிய உள்ள உறுப்பினர்கள் பட்டியலில் கண்ட திருவாளர்கள் சங்கத்தின் அங்கத்தினர்களென அங்கீகரித்தும்;

3. மகர்நோம்புச்சாவடி யாதவாள் தெரு கோவிந்தசாமி பிள்ளை சம்சாரம் கிருஷ்ணம்மாளின் குமாரன் கிருஷ்ணனுக்கு 8-வது வகுப்பு படிப்புக்கு வருஷம் ஒன்றுக்கு ரூ 6. சங்கத்திலிருந்து உதவி செய்யும்படி கொடுத்த விண்ணப்பத்தை விசாரித்தனுப்பும்படி ஷை மகர்நோம்புச்சாவடி டைரக்டர்களுக்கு உதவி காரியதரிசி G. கந்தசாமி பிள்ளையவர்களது வாயிலாக அனுப்பப்படும்;

4. உதவி காரியதரிசி T. A. பொன்னுசாமியவர்கள் கொடுத்த யாதாஸ்தில் காரியதரிசி உதவி காரியதரிசிகளின் வேலையைத் தெரிவிக்கும்படி கோரப்பட்டதை ஷை யாருக்குச் சங்கசட்டத்தின் 8-வது பாராவைத் தெரிவிக்கப்படும்;

5. அடுத்த கூட்டம் 19-9-31 சனிக்கிழமை குறிப்பிடப்படும்

தீர்மானங்களாயின.

ஆர். லெட்சுமிநாராயணன், செக்ரடெரி.

# காமாக்ஷிபாய்,
அல்லது
# காதலர் வெற்றி.

## முதலத்தியாயம்.

தாய் தந்தை குரு தெய்வம்.

திரு. ரா. கோவிந்தராஜன்.

சென்னையில் தங்கசாலை வீதியில், ஒரு மச்சு வீட்டில் நமது கதை ஆரம்பமாகிறது. அவ் வீட்டைப் பார்த்தால் அவ்வளவு பெரிய பட்டிணத்தில் அவ்வீடு ஒரு ஏழையினுடையதாக நினைக்கலாம். ஒரு நாள் காலை, சுமார் ஒன்பதுமணி நேரமிருக்கலாம், அவ் வீட்டிலுள்ள ஒரு பெரிய அறையில் மாட்டப்பட்டிருந்த, ஒரு கௌரி படத்தின் எதிரில் ஒரு பெண்மணி மிகவும் துக்கத்துடன் மண்டியிட்டுக்கொண்டு ஸ்ரீ கௌரியைத் துதித்துக்கொண் டிருந்தாள். அவளைப் பார்த்தால் சுமார் 20 வயதுடைய யௌவனப் பெண்ணாகக் காணப்பட்டாலும், உண்மையில் அவளுக்கு வயது 35க்கு ஏறக்குறைய ஆகிறது. தாமரை மலரையொத்த அவளுடைய வதனம், அப்போது ஏதோ நெடுநாளையத் துயரத்தினால் சூழ்ந்து அதிகத் துக்கக்குறியை விளக்கிற்று. வேலையொப்பத்தக்க அவளது விழிகளிரண்டும், வில்லையேற்ப அவளது இரு புருவங்களும் பிரகாசமாகஇருப்பதற்குப்பதில் மிகவும் சோர்வுற்றுச் சோகச் சாயலைக்கொண்டிருந்தது. அவளது மனதிலிருந்து எழும் துக்கத்தினால் தூக்கத்தினின்றும் விழித்தவள் கண்கள்போல அவளது கண்களும் புலப்பட்டன. முத்துச்சரத்தைப்போன்ற அவளது பல் வரிசைகள், நகைமுகத்தைக் காண்பிக்கப் பிரயத்தனப்பட்டாலும், அவளுடைய துக்கம் மேன்மேலும் அதிகரிக்க, மார்படைக்க நெஞ்சு துடிக்க அவைகள் பெருந் துயரத்தையே வெளிப்படுத்தின.

இவ்வளவு வனப்புடைய ரதிதேவிக்கொப்பான, ஆத்மாபாய் என்னும் பெயருடைய அவ்வனிதையின் அழகிய ஒவ்வொரு அங்கங்களும் துக்கமென்னும் சாகரத்தி லாழ்ந்திருந்தது. அவ்விதம் துயரத்துடன் வாய்விட்டலறி, தனக்கு எதிரேயுள்ள ஸ்ரீ கௌரி தேவியினிடம் மெய்மறந்திருக்கும்போது, அவளுடைய புதல்வனான கோபிநாதன், என்னும் யௌவனன் கையிலோர் கடிதத்துடனும், வெகு துடிதுடிப்புடனும் அந்த அறைக்குள் ஓடி வந்தான். அவன் பின் அவனது ஆருயிர் நண்பன் சீனிவாசன் என்பவனும் தொடர்ந்துவந்தான். தனது தாய் கௌரி படத்தின் எதிரில் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக இருந்ததைக் கண்ணுற்ற கோபிநாதன் தன் நண்பனை சத்தம் போடாமலிருக்கச் சைகை செய்து மறைவிலிருந்தவாறே, தன் தாயார் ஸ்ரீ கௌரியினிடம் அவள் முறையிடுவனவற்றைக் கவனித்தான்.

ஆத்மாபாய்:—ஹே கௌரி, ஜகதாம்பிகே, கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்ற மேலோர்களுடைய அமிர்த மொழியைப்போல், நான் என் பதியை விட்டுப்பிரிந்த இப் பதினறு வருஷகாலமாகத் தங்களையே நம்பி யிருந்தும் ஒரு பயனும் காணவில்லையே. சென்ற ஜென்மத்தில் நான் யாருக்கு என்ன பாபங்கள் செய்தேனோ? யார் யாரைப் பிரித்திடும்படி செய்தேனோ? அதன் பயனாக இச் ஜென்மத்தில் என்னை அக்னி சாக்ஷியாக மணந்த என் பர்த்தாவை விட்டுப் பிரிந்திடச் செய்தீரோ? ஐயோ இத்துன்பம் போதாதென்று, என் வயிற்றெரிச்சலைக் கிளப்ப என் கணவனின் உயிர் நண்பன்போலிருந்த அச்சண்டாளன் பாபுராவ், என்னிடம் வரும்போதெல்லாம், என் கணவன் இறந்துபோ யிருப்பாரென்றும், அப்படியவர் இறக்காமல் உயிருடனிருக்கும் பக்ஷத்தில் இதுவரையில் தன் மகனையும் காண எவ்வளவோ ஆவலுடன் திரும்பி வந்திருக்க மாட்டாராவென்றும், பற்பல விதமாகக் கர்ணகடூர மொழிகளைச்சொல்லி அச் சண்டாளன் என்னைப் பெண்டாள நினைக்கின்றானே. வீண்வார்த்தைகளைத் தகாதவாறு சொல்லி என்னைக் கஷ்டப்படுத்துகின்றானே. தங்களிடம் புஷ்பமும் துளசியும் வைத்துப் பார்த்ததில் என் பர்த்தா இறக்கவில்லை என்பதற்கறிகுறியாக எனக்குத் துளசியைக் கொடுத்தீரே! இன்னும் என்பதியை எக்காலத்தில் காணும்படி செய்

# ஸ்ரீ சுப்ரஹ்மண்யர்

சகஸ்ரநாம பாஷ்யம் (புதிய பதிப்பு) விலை அணா—6

இதில், ஸ்ரீ சுப்ரஹ்மண்யக் கடவுளின் அர்ச்சனைக் குரிய சகஸ்ர (1000) நாமங்கள், அஷ்டோத்தர சத (108) நாமங்கள், ஷோடச (16) நாமங்கள், ஸ்ரீ சுப்ரஹ்மண்யர் சகஸ்ரநாம ஸ்தோத்திரம், சிவ அஷ்டோத்தர சதநாமங்கள், ஸ்ரீ விநாயக அஷ்டோத்தர சத நாமங்கள், ஸ்ரீ விநாயக ஷோடச நாமங்கள்: இவை சமஸ்கிருத உச்சரிப்புக் கிணங்கத் தமிழில் திருத்தி அச்சிடப் பெற்று, ஒவ்வொரு நாமத்தின் அர்த்தமும் சமஸ்கிருதத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

அதிவீரராமபாண்டியன் அருளிச்செய்த

# நைடதம்

மூலமும் விருத்தியுரையும் புதிய பதிப்பு: உயர்ந்த கிலிட்டுப் பயிண்டு: ரூபா 4

நைஷதம் என்பது சம்ஸ்கிருதத்தில் பஞ்ச காவியங்களுள் ஒன்று; இதனை ஸ்ரீ கர்ஷன் என்பவர் சம்ஸ்கிருத பாஷையில் இயற்றியுள்ளார். நிஷத தேச ராஜனாகிய நளனுடைய சரித்திரத்தைக் கூறுவதால், இதற்கு நைஷதம் எனப் பெயர் வந்தது. தமிழில் இந் நைஷதம் சொன்னயம், பொருணயம், வர்ணனை, அலங்கார முதலிய அமைய, வெகு சாதுர்யத்துடன் அதிவீரராம பாண்டியனால் சமஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

அதிவீரராம பாண்டியன் என்பவர் பாண்டிய வம்சத்தில் தோன்றிய ஓர் அரசர். இவர் வரதுங்க பாண்டியன் தம்பி; தமிழில் மஹாபாண்டித்திய முள்ளவர். இந் நைடதம் தவிர, தமிழில் வெற்றிவேற்கை முதலிய இன்னும் அநேக நூல்களை இவர் இயற்றியுள்ளார்.

இதிலடங்கிய விஷயங்கள்:

1. அன்னமும், தமயந்தியும் அமைந்த அழகிய ஆப்டோன் படம். 2. நைடத நூலாசிரியராகிய அதிவீரராம பாண்டியன் வரலாறு. [S. அநவரத விநாயகம் பிள்ளை, M. A., L. T., அவர்களால் நூதனமாய் எழுதப்பட்டது.] 3. நைடதத்தில் சொல்லப்பட்டுள்ள நளமஹாராஜன் சரித்திரம். 4. நைடதச் செய்யுள்களில்வரும் அணிகளின் விவரம். 5. நைடதச் செய்யுட்களின் யாப்பிலக்கண விவரம். 6. நைடதத்தில் வரும் படலங்களின் அகராதி. 7. நைடதம் மூலமும் உரையும். [வித்வசிரோமணி சரவணப் பெருமாளையர் எழுதிய விருத்தியுரையோடு, மஹாவித்வான் இராமாநந்த யோகிகளால் நூதனமாய்ச் சேர்க்கப்பெற்ற விசேஷ குறிப்புகளுடன் கூடியது]; 8. நைடதச் செய்யுட்களின் முதற் குறிப்பகராதி.

நைடதம் மூலம்: (செய்யுள் முதற் குறிப்பகராதியுடன் கூடியது): விலை ரூபா 1.

# விவேக சிந்தாமணி

மூலமும் உரையும்: 2 பாகம் சேர்ந்தது: விலை ரூபா 1—2—0

'விவேக சிந்தாமணி' என்பதற்கு விவேகத்தைத் தருவதாகிய சிந்தாமணி போன்ற நூல் என்பது பொருள். 'சிந்தாமணி' என்பது வேண்டியவற்றையெல்லாம் தருவது ஒருவகைத் தெய்வமணி. இம்மணி வேண்டியவற்றைத் தரும் தன்மையதாயிருத்தலின் போல், இந்நூலும் வேண்டிய விவேகங்களையெல்லாம் தரக்கூடியதா யிருத்தலின் இதற்கு 'விவேகசிந்தாமணி' என்னும் பெயரிடப்பட்டிருக்கின்றது. இந் நூல் சிறுவரும் கற்றுணர்வதற்குத் தகுதியான தெளிவான பாடல்களை யுடையதாகவும், நீதிகளை எளிதிற் போதிக்கக்கூடியதாகவும், இருத்தலால், இது கல்வி பயிலும் மாணவர்களுக்கும், மற்றவர்களுக்கும் மிக உபயோகமான நூலாகும். 1-ம் பாகம் விலை அணா 8. 2-ம் பாகம் விலை அணா 10.

சங்க மருவிய நூல்களில் ஒன்றாகிய நாலடி நானூறு என வழங்கும்

32 F

# நாலடியார்

[மஹா வித்வான் கோமளபுரம் இராஜகோபாலப் பிள்ளை அவர்கள் இயற்றிய பதவுரை, பொழிப்புரை, விசேஷவுரை, இலக்கணக்குறிப்பு முதலியவற்றுடன் ஒவ்வொரு செய்யுளுக்கும் அதனதன் கருத்தை விளக்கும் ஆங்கில மொழிபெயர்ப்பும் கூடியது]

[கிளேஸ் காகிதம்: உயர்ந்த கிலிட்டு பயிண்டு: விலை ரூபா 2]

நாலடியார் என்பது பது முதலிய இந்து தர்ம சாஸ்திரங்களையும் சமண சாஸ்திரங்களையும் தழுவிக் கூறப்பட்ட ஓர் சிறந்த நீதிநூல். தமிழ்ப் பாஷையில் வழங்கும் நீதி நூல்களுள் திருவள்ளுவ நாயனார் அருளிய திருக்குறள் முதலாவதாகவும், நாலடியார் இரண்டாவதாகவும் மதிக்கப்படுவன வாகும்.

இந் நாலடியார் மதுரைமாநகரத்தில் அரசாய் வீற்றிருந்த உக்கிரப் பெருவழுதி என்னும் பாண்டிய ராஜனால் ஆதரிக்கப்பட்டு வந்த புலவர் கூட்டத்துள் ஓர் பகுதியினராகிய சமணமுனிவர்களால் இயற்றப்பட்டதென்ப. இது ஓர் அரிய பெரிய சிறந்த நூலென்பது இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர், அடியார்க்கு நல்லார் முதலிய உரையாசிரியர்களால் போற்றப்படுவதாலேயே நன்கு விளங்கும்.

அன்றியும், தமிழ்மொழியை அளவுகடந்த ஆர்வத்தோடு கற்று, அதன் மாட்சியை ஆங்கில மறிந்தார்க்கு உணர்த்த வெண்ணிப் பல தமிழ் நூல்களை ஆங்கில பாஷையில் காட்டியுள்ள டாக்டர் போப் துரையவர்கள் இந் நாலடியாரை ஆங்கிலத்தில் வெளியிட்டிருப்பதாலும் இந் நூலின் உயர்வு வெளியாம்.

இவ் அரிய நூல் சமண முனிவர்களால் இயற்றப்பட்டதாயினும், சமண மதத்தின் சிறப்பியலைக் கூறாது பொதுவியலையே கூறுவதாலும், அப் பொதுவியல்பு நமது ஆரிய மதத்தின் பொதுவியல்புக்கு மாறுபடா திருப்பதாலும், இதிற் கூறப்பட்டுள்ள நீதிகள் நம் ஆரிய மதத்தினராலும் பிரமாணமாக அங்கீகரிக்கப்படுவன வாகும்.

இஃது திருக்குறளைப் போலவே அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூப்பகுதிகளாக வகுக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதியினும் தர்ம சாஸ்திர நீதிகளைப் போதிக்கும் பவ்வத்து வெண்பாக்கள் கொண்ட அதிகாரங்கள் அடங்கப் பெற்றது.

இந் நாலடியாருக்குப் பதுமனார் என்னும் ஓர் பிற்காலத்துப் புலவர் ஒரு பொழிப்புரை இயற்றியிருக்கின்றனர். இவரே இந்நூலுக்குத் திருக்குறளைப்போலவே பால், இயல், அதிகாரம் என்னும் பாகுபாடு ஏற்படுத்தினரென்றும் கூறப்படுகின்றது. ஆயினும், இப் பொழிப்புரை எளிதில் பொருள் விளக்கக்கூடிய தன்றாய் இருத்தலால், இந் நூலில் அடங்கிய சொல்லாற்றல், பொருளாற்றல்களை எல்லோரும் உணருமாறு நன்கு விளக்கும் பொருட்டு, சென்ற நூற்றாண்டின்கண்ணிருந்த சிறப்புற்ற வித்வான்களுள் ஒருவராயும், மஹா பிரசித்தி பெற்று விளங்கிய அஷ்டாவதானம் வீராசாமி செட்டியாரவர்கள் மாணாக்கருள் ஒருவராயும், சென்னைப் பிரசிடென்ஸி காலேஜில் தமிழ்ப் புலமை நடாத்தியவருமான கோமளபுரம் இராஜகோபாலப்பிள்ளையவர்கள் ஓர் தெளிவான உரை இயற்றி யிருக்கின்றனர்.

## யாதவ மித்திரன் சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| இந்தியா, சிலோன், பர்மா முதலிய உள்நாட்டிற்கு ௵ 1-க்கு | ரூ | 1—0—0 |
| பினங்கு சிங்கப்பூர், முதலிய வெளிநாட்டிற்கு ௵ 1-க்கு | ரூ | 1—8—0 |

தனிப்பிரதி விலை அணா 2.

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தாக் கிடையாது.

மாதிரிப் பிரதி வேண்டுவோர்
இரண்டரையணா, தபால் தலை அனுப்பவேண்டும்.

1. சந்தாதாரராய்ச் சேர்கின்றவர்கள் பெயரையும் விலாசத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

2. எப்பொழுதும் சந்தாத் தொகையை முன் பணமாகச் செலுத்தவேண்டும். வி பி. மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். சந்தாத்தொகையை முன்பணமாக மணியார்டர் செய்தால் 2-அணாத்தான் செலவாகும். வி பி. மூலம் பத்திரிகையை வரவழைப்பதில் 3-அணா அதிகச் செலவாகும். ஆதலால் முன்னாடி மணியார்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்வதே நலம்.

3. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் அவ்வருஷ ஆவணி மாதம்முதல் கணக்கு வைக்கப்பட்டு ஆவணி மாதப் பத்திரிகை முதல் சேர்த்தனுப்பப்படும்.

4. யாருக்கேனும் சஞ்சிகை வந்து சேராவிட்டால் அம்மாதமுடிவிற்குள் தங்கள் சந்தா நம்பருடன் தெரிவித்துப் பெற்றுக் கொள்ளலாம். அதற்குப் பின்னர் தெரிவித்தால் விலை செலுத்தியே பெற்றுக் கொள்ளவேண்டும்

5. இடம் மாறும் சந்தா நேயர்கள் தங்கள் புது விலாசத்தைத் தெரிவித்து, அது விபரத்தைத் தபாலாபீஸாரிடமும் அறிவித்துவிட வேண்டும்,

6. சந்தா நம்பரைக் குறிப்பிடாத கடிதங்களைக் கவனிக்க முடியாது. பதில் விரும்புவோர் தபால் தலை அனுப்பவேண்டும்.

### விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| 1-பக்கத்திற்கு | ரூ | 10—0—0 |
| ½-பக்கத்திற்கு | ரூ | 5—8—0 |

நீண்டகால விளம்பரங்களுக்கு யாதவ மித்திரன் ஆபீஸிற்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

---

ஐந்தாவது யாதவமகாநாடு போட்டோ படங்கள்.

வேண்டியவர்கள் யாதவமித்திரன் ஆபீஸுக்கு விபரமாகத் தெரியப்படுத்துவதுடன் முன் பணமாக ரூ 1—5—0 மணியார்டர் மூலம் அனுப்பிவைக்கவும்.

32 H

## யாதவ மகா ஜனங்களுக்கு ஒரு
# வேண்டுகோள்.

---

யாதவ சகோதரர்களே!

நமது யாதவ மித்திரன் கல்வி, பொருளாதாரம், ஆசாரச் சீர்திருத்தம் முதலிய துறைகளில் சிறந்த அறிஞர்களால் எழுதப் பெற்ற அருமையான கட்டுரைகளைக்கொண்டு யாதவ மக்களின் முன்னேற்றத்தையே முக்கியமாகக் கருதி மாதம் ஒருமுறை வெளி வருகின்றது.

எல்லா யாதவ மக்களும் உடனே சந்தாதாரராய்ச் சேர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

எல்லா யாதவ மக்களிடமும் யாதவமித்திரனைப் பரவச் செய்தல் சமுதாயப் பற்றுடையவரின் முதற்கடமையாகும்.

யாதவமித்திரன் நம்மவர் வாழும் ஒவ்வொரு கிராமங்களிலும் உலாவவேண்டும். ஒவ்வொரு யாதவரிடத்திலும் யாதவமித்திரன் மாதாமாதம் சமுதாய விஷயங்களைத் தெரிவிக்கும்படி செய்ய வேண்டும். இதுவே சமுதாயச் சீர்திருத்தத்திற்கு அறிகுறி.

இப்பொழுது விலாசந் தெரிந்த சிலருக்கே பத்திரிகை அனுப்பப்பட்டிருக்கிறது. ஏனையோர் விலாசந் தெரிவித்துப் பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆகையால் யாவரும் பத்திரிகை படித்துப் பயன் பெறுமாறும், இப்பத்திரிகையை வாசிக்கும் அன்பர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்குத் தெரிந்த பத்திரிகை படிக்கும் ஆற்றலுள்ள நமது யாதவ சகோதரர்களின் விலாசங்களைத் தயைசெய்து எழுதியனுப்புமாறும் வேண்டுகிறோம்.

மானேஜர்,
**யாதவ் மித்திரன் ஆபீஸ்,**
ஸ்ரீ கோபால் மஹால்.
வடக்குச்சித்திரை வீதி, மதுரை.

எக்ஸெல்ஸியர் பவர் பிரஸ், மதுரை:-1931.



விரோ? இன்னும் எவ்வளவு காலம் இக்கஷ்டங்களை யெல்லாம் அனுபவிப்பதோ? எறும்புமுதல் யானைவரை யாவற்றையும் படைத்துக் காத்தழிக்கும் ஆற்றலுடைய தாங்கள் இவ் வேழைகளைப் பதினாறுவருஷகாலமாகக் கஷ்டங்களினிடையே உழலும்படியாகவிட்டுப் பார்த்துக்கொண்டிருக்கலாமோ? இவ் வேழைகளைக் காப்பாற்றலாகாதா? நொந்துவந்தோமென் றாயிரம் சொல்லியும் கேளாததுன் செவிகள் என்ன மந்தமோ?— என் மைந்தன்— தாங்கள் எனக்கன்புடன் அளித்த ஒரே ஒரு குழவியான என் புதல்வன்—கோபிநாதனுக்கோ ஏறக்குறைய வயது 20 ஆகிறது. படிப்பில் பி. ஏ, (B. A.) பாசாகி விட்டான். அவன் அடிக்கடி என்னை உற்று நோக்குகின்றான்; எதையோ கேட்பவன்போல் தோற்றுகின்றான். அவனுக்கு எதைத்தான் நான் சொல்லித் தேற்றுவது? அறிவு முற்றி உலகானுபவம் பெற்றவனாகி விட்டதால், அவன் என்னை நோக்கி, "அம்மா, என் தந்தையார் யார்? அவர் இப்போது எங்கே இருக்கின்றார்?" என்று கேட்பானாகில் நான் என்னவென்று சொல்லுவது? நான் உண்மையை அவனிடம் உரைப்பின், அவனும் எனது துயரத்தில் ஈடுபடும்படியாகுமே? இதுவரையில் ஹே கௌரி, தங்களை நம்பியன்றோ நான் உயிருடன் வாழ்ந்துவருகின்றேன். மேலும் என் குமாரன் ஒருவித நிலைக்குவந்து தானே சம்பாதித்து வாழும்படியான திறமை வருங்காலம் வரையன்றோ என்கடமையென நான் உயிர்விடா திருக்கிறேன்! இல்லையேல், என்கணவன் என்று என்னை விட்டுப்பிரிந்தாரோ, அன்றையதினமே, நான் என் உயிரைத் தற்கொலை செய்துகொண்டாவது மாண்டுபோய் இதுவரையில் மண்ணோடு மண்ணாகிப் பூமிக்குப்பாரமில்லாமல் ஒருவிதக்கஷ்டத்திலும் அகப்படாமல் அழிந்துபோயிருப்பேனே! ஏன் இப்பொழுதானென்ன? என் மகன் பி. ஏ., பாசாகியிருப்பதால், தானே ஜீவிக்கும்படியானதோர் வழியுண்டாகிவிட்டது. இனி இவ்வுலகில் நமக்கென்ன வேண்டியிருக்கிறது? இனியும் நாம் உயிருடனிருப்போமாகில் அச்சண்டாளன் என் பர்த்தாவின் போலிநேச வஞ்சகன் பாபுராவ் என் கற்பிற்குப் பங்கம் தேடுவான் என்பதில் சந்தேகமில்லை. "நற்குலப்பெண்டிர்கள் தங்கள் கற்பைக் காத்துக்கொள்ளும்பொருட்டு,

தங்கள் உயிரை ஒரு திரணமாக எண்ணுமல்; தங்கள் உயிர் என்னும் ஆசையான பாசத்தைவிட்டு, தங்கள் கற்பு என்னும் விலையுயர்ந்த ஆபரணம் அழியுமுன் தற்கொலை செய்துகொண்டிறந்தலே நலம். கற்பழிந்து அவமானம் பொறுக்க முடியாது தற்கொலைசெய்துகொண்டிறத்தலைவிடத் தங்கள் கற் பழியுமுன்; கற்பைக் காத்துக்கொள்ளும் பொருட்டு இறத்தல் மேன்மையினும் மேன்மையாகும். அவ்விதம் ஒரு பெண்மணி தன் கற்பைக் காத்துக்கொள்ளுவளானுல் அவள் மோக்ஷ சாம்ப்ராஜ்யம் பெறுவாளென்பதில் சந்தேகமில்லை. ஆகையால் என் பத்தா போனபிறகு எனக்கு இவ்வுலகில் எல்லாமற்றவளாயினேன். இனி நாம் நம் கதியைத் தேடும்பொருட்டு நம் விதியை நாடுவோம். சந்தோஷத்துடன் தற்கொலைசெய்துக்கொண்டு சர்வேஸ்வரனின் பாதமடைவோம். இனிப் படமுடியாது துபரம். பட்டதெல்லாம்போதுமிந்தச் சதமிலா வாழ்வு. ஹே கௌரி இதோ ஒரு இமையில் உமதடி அடைகின்றேன்.'' என்று சொல்லிக்கொண்டே தற்கொலை செய்துகொள்ளுவதற்கு எழுந்தாள். அதே சமயம் கௌரிபடத்தருகில் எரிந்துகொண்டிருந்த தீபம் சடக்கென அணைந்துவிட்டது. இதுவுமோர் அபசகுனமெனக் கருதிய ஆத்மாபாய் ஐந்து நிமிடம் வரை ஒன்றும் தோன்றுதவளாகி முடிவில் அடியில்வருமாறு சபதம் செய்துகொண்டாள். "ஹே, கௌரிதேவி! அம்பிகே! ஜகத்ரக்ஷணி! நான் இவ்வுலகில் இன்னும் கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டிருப்பதைவிட இறத்தலேமேன்மையென்று தற்கொலைசெய்துகொள்ளவேண்டி எண்ணியசமயம் துர்ச்சகுனமாக தீபத்தையணைத்துவிட்டீர்கள். இதுவும் என்கணவன் உயிருடனிருப்பதற்கோர் அறிகுறியென நினைக்கின்றேன். இன்னமும் தங்களையே நம்புகின்றேன். ஆதலால் இன்றுமுதல் இன்னும் ஒருவருடம்வரை எவ்வளவு கஷ்டங்கள் நேர்ந்தபோதிலும் உமதுபொருட்டு யாவற்றையும் பொறுத்துக்கொண் டிருப்பேன். அதற்குள் என் பத்தாவை நான் திரும்பவும் அடையும்படி செய்யாவிடில் நான் தங்கள் எதிரிலேயே தற்கொலை செய்துகொண்டிறப்பேன். இது சத்தியம். எனது மாங்கல்யத்தின் மீதாணையாக இது முக்காலும் சத்தியம்'' என்று கூறிவாய்மூடுமுன், "ஆ அம்மா!'' என்று அவளுடைய அருமந்தக்குமாரன் கோபிநாதன் மறைவிடமிருந்து அலறிக்கொண்டோடி அவள்முன் வந்துநின்றான். (தொடரும்)

32 A

வைகாசிமீ" கடைசிக்குள் ஆர்டர் கொடுப்பவர்களுக்கு விலை ரூ. 2.

ஸ்ரீராமஜெயம்.



யாதவமித்திரன் சந்தாதார்களுக்கோர்

# அறிவிப்பு.

மயர்வற மதிநல மருளப்பெற்ற பரமகாருண்யரான ஆழ்வார்கள் பன்னிருவர்களால் அருளிச்செய்யப்பெற்ற தமிழ் வேதமாகிய

## நாலாயிர திவ்யப் பிரபந்தம்.

பெரியவாச்சான் பிள்ளை, மணவாள மாமுனிகள் முதலான பூர்வாசாரியர்கள் வியாக்யானங்களுக்கிணங்கிய குறிப்புரையுடனும் ஆழ்வாராதிகள் ஆப்டோன் கலர்ப்படங்களுடனும் சுத்தப் பதிப்பில் வெளியாயிருக்கிறது. யாதவமக்களது ஒவ்வொரு கிருகத்திலும் பிரபந்தம் இருந்து தீரவேண்டியது அவசியமாகையால், இதன் விலை ரூபா நாலுக்கு நமது சந்தாதாரர்களுக்கு மாத்திரம் பிரதி ஒன்றுக்கு ரூபா இரண்டுவீதம் கொடுப்பதாகத் தீர்மானித்திருக்கிறது. பிரபந்தத்திற்கு ஆர்டர் கொடுப்பவர்கள் விபரமான விலாசத்தையும் சந்தா நம்பரையும் குறித்தனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மானேஜர்.

32 B



| | விலை | | | சந்தாதாருக்குக் குறைந்த விலை. | | |
|---|---|---|---|---|---|---|
| வால்மீகி ராமாயணம் வசனம் | 15 | 0 | 0 | 13 | 0 | 0 |
| கம்பராமாயணம் வசனம் | 4 | 0 | 0 | 2 | 8 | 0 |
| பாரதம் வசனம் | 8 | 0 | 0 | 6 | 0 | 0 |
| பாகவதம் வசனம் | 4 | 0 | 0 | 2 | 8 | 0 |
| பக்தவிஜயம் வசனம் 6 பாகம் | 6 | 0 | 0 | 4 | 8 | 0 |
| அஷ்டப்பிரபந்தம் | 3 | 8 | 0 | 3 | 0 | 0 |
| குருபரம் பரா ப்ரபாவம் | 3 | 0 | 0 | 2 | 4 | 0 |
| பகவத்கீதை | 1 | 8 | 0 | 0 | 12 | 0 |
| விஷ்ணு புராணம் | 3 | 0 | 0 | 2 | 4 | 0 |
| வில்லிபாரதக்கவி (அரும்பத உரையுடன்) | 4 | 0 | 0 | 2 | 8 | 0 |
| கம்பராமாயணக் கவி | 8 | 0 | 0 | 5 | 0 | 0 |
| ராமர் அஸ்வமேதயாகம் | 2 | 0 | 0 | 1 | 0 | 0 |
| ஆதிபர்வம் | 2 | 0 | 0 | 1 | 0 | 0 |
| விராடபர்வம் | 1 | 4 | 0 | 0 | 12 | 0 |
| ஆனந்த ராமாயணம் | 6 | 0 | 0 | 5 | 0 | 0 |
| நித்யானு சந்தானம் | 0 | 12 | 0 | 0 | 8 | 0 |
| முதலாயிரம் | 1 | 0 | 0 | 0 | 12 | 0 |
| விநோதரச மஞ்சரி | 1 | 8 | 0 | 1 | 0 | 0 |
| நைடதம் (விசேட உரையுடன்) | 4 | 0 | 0 | 3 | 0 | 0 |
| திருக்குரள் (தெளிபொருள் விளக்க விரிவுரையுடன்) | 3 | 8 | 0 | 2 | 8 | 0 |
| நாலடியார் (உரை) | 1 | 8 | 0 | 1 | 2 | 0 |
| நளவெண்பா (மூலமும் விருத்தியுரையும்) | 2 | 8 | 0 | 1 | 14 | 0 |
| அகத்தியர் தேவாரத் திரட்டு | 1 | 4 | 0 | 1 | 0 | 0 |
| ராமலிங்கஸாமி அருட்பா | 4 | 0 | 0 | 2 | 8 | 0 |
| மூவர் தேவாரம் அடங்கன்முறை | 5 | 0 | 0 | 3 | 8 | 0 |
| கந்தபுராண வசனம் | 4 | 0 | 0 | 3 | 0 | 0 |
| விநாயகபுராண வசனம் | 4 | 0 | 0 | 3 | 0 | 0 |
| சூடாமணி நிகண்டு 1-முதல் 12 | 1 | 8 | 0 | 0 | 14 | 0 |

இன்னும் மற்ற வைஷ்ணவ சம்ப்ரதாயப் புத்தகங்களும் தமிழ், தெலுங்கு, நாகரம், கிரந்தம், இங்கிலீஷ் நாவல்களும் இருக்கின்றன. வேண்டியவைகளுக்கு விபரமாக எழுதினல் சகாயமாக அனுப்பி வைக்கிறோம். தபால் செலவு வேறு.

# அஷ்டோத்தர சத நாமாவளி

சமஸ்கிருத உச்சரிப்புக் கிணங்க தமிழில் திருத்தி அச்சிடப்பட்ட
தேவதைகளின் அர்ச்சனைக் குரிய நாமாவளிகள் அடங்கியது.

## முதல் பாகம் விலை அணா 6

[இதில் அடங்கிய நாமாவளிக ளாவன]

1. விநாயகர் ஷோடச (16 நாமங்கள்)
2. விநாயகர் அஷ்டோத்தர சத (108)
3. சிவன் நாமங்கள்
4. சிவகாம சுந்தரி ஷை
5. சுப்ரஹ்மண்யர் ஷை
6. கிருஷ்ணன் ஷை
7. ராமர் ஷை
8. லக்ஷ்மி ஷை
9. ஆஞ்சநேயர் ஷை
10. சரஸ்வதி ஷை
11. நவக்கிரஹம்: சூரியன்
12. சந்திரன்
13. அங்காரகன்
14. புதன்
15. குரு
16. சுக்ரன்
17. சனி
18. ராகு
19. கேது
20. வெங்கடேசர் அஷ்டோத்தரம்
21. ரங்க நாதர் ஷை
22. பார்த்த ஸாரதி ஷை
23. வரத ராஜர் ஷை
24. நருஸிம்ஹர் ஷை
25. அநந்த பத்மநாபர் ஷை
26. ஸம்பத் குமாரர் ஷை
27. சங்கராசாரியர் ஷை
28. வித்யாரண்யர் ஷை

சமஸ்கிருத உச்சரிப்புக் கிணங்க
தமிழில் திருத்தி அச்சிடப்பட்ட

## சகஸ்ர (1000) நாமங்கள்

ஸ்ரீ சிவ சகஸ்ரம் விலை அணா 2
,, விநாயகர் ஷை விலை அணா 2
,, சுப்ரமண்யர் ஷை விலை அணா 2
,, விஷ்ணு ஷை விலை அணா 2
,, ராமர் ஷை விலை அணா 2
,, நருஸிம்ஹர் ஷை விலை அணா 2
,, ஹநுமார் ஷை விலை அணா 2
,, காயத்ரீ ஷை விலை அணா 2
,, தேவீ ஷை விலை அணா 2
,, லலிதா ஷை விலை அணா 2
,, சரஸ்வதி ஷை விலை அணா 2
,, லக்ஷ்மீ ஷை விலை அணா 2

## 2-ம் பாகம் விலை அணா 8

[இதில் அடங்கிய நாமாவளிக ளாவன]

1. காயத்ரீ அஷ்டோத்தரம்
2. தேவீ ஷை
3. தேவீ கட்க மாலா ஷை
4. லலிதா ஷை
5. உமா ஷை
6. கங்கா ஷை
7. பாலா ஷை
8. காவேரீ ஷை
9. அந்நபூர்ணி ஷை
10. வல்லீ ஷை
11. தேவ சேநா ஷை
12. சிவகாமி ஷை
13. காளி ஷை
14. துர்க்கா ஷை
15. அர்த்தநாரீச்வரர் ஷை
16. உமா மஹேச்வரர் ஷை
17. கைலாஸ நாதர் ஷை
18. தக்ஷிணா மூர்த்தி ஷை
19. நந்திகேச்வரர் ஷை
20. ஹரிஹரர் ஷை
21. ஹரிஹர புத்ரர் ஷை
22. மிருத்யுஞ்ஜயர் ஷை
23. பைரவர் ஷை
24. சண்டேச்வரர் ஷை
25. ஸோமாஸ் கந்தர் ஷை
26. வீரபத்ரர் ஷை
27. நடேசர் ஷை
28. கணேச ஷோடச மூர்த்தி நாமம்
29. கணேச அஷ்டோத்தர சத நாமம்
30. ஷண்முக ஷோடச நாமம்
31. ஷண்முக ஸப்த விம்சதி நாமம்
32. ஷண்முக ஏக பஞ்சாசந் நாமம்
33. ஷண்முக அஷ்டோத்ர சத நாமம்
34. ஸ்ரீமந் நாராயணர் ஷை
35. சடகோபர் ஷை
36. ராமாநுஜர் ஷை
37. வேதாந்த தேசிகர் ஷை

## சகஸ்ர நாம கதம்பம்

ஷை 12 சகஸ்ரங்களும் ஒரு கட்டடம்
விலை ரூபா 1-8-0

சகஸ்ரங்கள் எல்லாவற்றிலும் முதன்மை
பெற்ற ஓங்கார சகஸ்ரம் என்னும்
பிரணவ ஸ்தோத்திரம்: விலை அணா 2

இ. மா. கோபால கிருஷ்ணக்கோன், புஸ்தக ஷாப், புதுமண்டபம், மதுரை

32 D

# சிவக்ஷேத்திர விளக்கமும், சிவக்ஷேத்திராலய மகோத்ஸவ உண்மை விளக்கமும்

காலிகோ பயிண்டு கிலிட்டுடன்: விலை ரூபா 1—8—0

## சிவக்ஷேத்திர விளக்கத்தில் அடங்கிய முக்கியமான விஷயங்கள்

(1) இந் நூலில் காட்டப்பட்டுள்ள சிவ ஸ்தலங்களின் அகிகார அட்டவணை, ஒவ்வொரு ஸ்தலமும், சேர சோழ பாண்டிய முதலிய நாடுகளில் இன்ன நாட்டில் உள்ள தென்பதின் விவரம், ஷை ஒவ்வொரு ஸ்தலமும் இன்னின்ன ரயில்வே ஸ்டேஷனுக்குச்சமீபத்திலுள்ளது, அந்த ரயில்வேஸ்டேஷனிலிருந்து இன்ன திசையில் இத்தனை மைல் தூரத்தில் உள்ளது என்பதின் விவரம், ஷை ஸ்தலங்களைப்பற்றிய விசேஷக் குறிப்புகள் முதலியன. (2) சேர சோழ பாண்டிய முதலிய நாடுகள் ஒவ்வொன்றிலும் பாடல் பெற்றஸ்தலங்கள் இத்தனை, அந்நாடு ஒவ்வொன்றையும் பற்றிய சிறப்பும் பதிகங்கள் இத்தனை, பொதுப் பதிகங்கள் இத்தனை என்பதின் விவரம். (3) அறுபத்து மூன்று நாயன்மார்கள் ஒவ்வொருவரின் திருநாமம், அவர் அவதாரமான ஸ்தலம், மாதம், நக்ஷத்திரம், அவர் முத்தியடைந்த மாதம், நக்ஷத்திரம் இவற்றின் விவரம். (4) சோழநாட்டில் காவேரிக்கு வடகரையில் உள்ள 63 க்ஷேத்திரங்கள், தென்கரையில் உள்ள 127 க்ஷேத்திரங்கள், ஆக மொத்தம் 190 க்ஷேத்திரங்கள் ஒவ்வொன்றின் திருநாமம், அந்த க்ஷேத்திரங்கள்தோறும் எழுந்தருளியிராநின்ற சிவபெருமானது திருநாமம், அவர் பாகத்தமைந்த அருட்சத்தியாகிய தேவியினது திருநாமம், ஆங்காங்குள்ள புண்ணிய தீர்த்தங்கள், விருக்ஷங்கள், முக்கிய மான்மியங்கள், அந்தந்த க்ஷேத்திரங்களின்மீது திருப்பதிகங்கள்பாடிய நாயன்மாரின் திருநாமங்கள், அத்திருப்பதிகங்களின் தொகை, ஒரு க்ஷேத்திரத்தினின்று மற்றொரு க்ஷேத்திரத்திற் கேகும் திக்கு, கடிகை தூரம், வழிமுதலிய விவரங்கள். (5) ஈழநாட்டில் உள்ள க்ஷேத்திரங்கள் 2, பாண்டிய நாட்டில்உள்ள க்ஷேத்திரங்கள் 14, சேரநாட்டிலுள்ள க்ஷேத்திரம் 1, கொங்குநாட்டில் உள்ள க்ஷேத்திரங்கள் 7, நடுநாடு என்னும் மகத நாட்டில் உள்ள க்ஷேத்திரங்கள் 22, தொண்டைநாட்டில் உள்ள க்ஷேத்திரங்கள் 32, துளுவ நாட்டில் உள்ள க்ஷேத்திரம் 1, வடநாட்டில் உள்ள க்ஷேத்திரங்கள் 5—ஆகிய இவற்றிற்கும் மேற்கண்ட விவரங்கள்.

## சிவக்ஷேத்திராலய மகோத்ஸவ உண்மை விளக்கத்தில் அடங்கிய முக்கியமான விஷயங்கள்:

1. **சிவ விளக்கம்:**—சிவபெருமானது பல திருநாமங்களின் பொருள், சிவபெருமானது திரு உரு விளக்கம், சிவபெருமான் திருத்தாண்டவம் செய்தருளும் கோலத்தின் விளக்கம், சிவபெருமானது திருச்சிகை, திருமுடி, திருநேத்திரம் திருமுகம், திருவடி, மான், மழு, கங்கை முதலியவற்றின் தத்துவார்த்த விளக்கம்.
2. **க்ஷேத்திர, ஆலய விளக்கம்:**—சிவ ஸ்தலங்களின் விசேஷங்கள், அண்டமும் சரீரமும் சமம் என்பதின் விளக்கம், மூத் தானம், மும் மண்டலம், பதினான்கு லோகம், மலைகள், தீவுகள், சமுத்திரங்கள், கிரகங்கள் ஆகிய இவற்றின் விளக்கம்; புறத்தும் அகத்தும் உள்ள இருவகை ஆலயங்களின் உண்மை விளக்கம், புறத்தே காணப்படும் ஆலயத்துள் மூலஸ்தான மண்டபம், ஆயிரக்கால் மண்டபம், பிரகாரங்கள், பஞ்சசபைகள், ஆலயக் கதவு, ஸ்தூபி, கோபுரவாயில், துவஜ ஸ்தம்பம், மூவித லிங்கங்கள், நந்தி, பலிபீடம், திருவாசி, திரைச்சீலை, திருவலகிடல், திருமெழுகிடல், திருவிளக்கிடல் முதலியவற்றின் இரகசியார்த்தங்கள்.
3. **மகோத்ஸவ விளக்கம்:**—சிவாலய பிரதக்ஷிணம், நமஸ்காரம், பலவித அபிஷேகங்கள், முரசு முதலிய வாத்தியங்கள், உத்ஸவங்களில் செய்யப்படும் சோடசோபசார, தசோபசார, பஞ்சோபசாரங்கள், பலவித யாகங்கள், கும்பங்கள் துவஜ ஆரோஹணம் முதல் அவரோஹணம் வரையில் ஒவ்வொருநாளும் செய்யப்படும் திருவிழாவின் வாஹனாதிகள் முதலியவற்றின் தத்துவார்த்தங்கள்

Reg., No. M - 2527.






# யாதவ மித்திரன்.

யாதவமக்களின்
முன்னேற்றங்கருதிவெளிவரும்
மாதப்பத்திரிகை.



| தொகுதி | ஏஜோற்பத்புரட்டாசிமீ | பகுதி |
|---|---|---|
| 3 | 1931 ௵ செப்டம்பர்மீ | 2 |


## பொருள் அடக்கம்.


| | |
|---|---|
| | 33 |
| கடவுள் வணக்கம் | 33 |
| நம் பெண்டிரும் கல்வியும் | 39 |
| நைனியப்ப பிள்ளை | 42 |
| அங்கதன் அருந்திற | 45 |
| அடக்கமுடைமை | 50 |
| சுகாதாரம் | 54 |
| மனிதர் வாழ்க்கை | 56 |
| காமாக்ஷிபாய் | 58 |
| வள்ளல் பாரி | 60 |
| குசேலர் | 62 |
| கால்நடை வைத்தியம் | 64 |
| விகடம் | |






Managing Editor.
இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,

## யாதவமித்திரன்.

ஆசிரியர் கூட்டத்து அங்கத்தினர்கள்

(Editorial Board Members.)

தலைவர்.

1. திருவாளர், ஆ. கார்மேகக்கோனார் அவர்கள்
தலைமைத்தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

2. ,, ச. செல்லம் அவர்கள் (யாதவர்) சுசீந்திரம்.
3. ,, J. சக்கரபாணி நம்பியார் அவர்கள், பி. ஏ., பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வைஸ் பிரசிடெண்ட்,
ஜில்லாபோர்டு, திருநெல்வேலி.
4. ,, V. கிருஷ்ணரெட்டியார் அவர்கள் (யாதவர்) பி. ஏ. பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வேலூர்.
5. ,, தி. அ. முத்துசாமிக் கோனாரவர்கள், வித்வான்,
திருச்செங்கோடு.
6. ,, K. வீராசாமிப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், முனிசிபல் உயர்தர கலாசாலை,
திண்டுக்கல்.
7. ,, R. வேங்கடா சலம்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர்,
S. P. G. உயர்தரக் கலாசாலை, தஞ்சாவூர்.
8. ,, M. V. வேணுகோபாலப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், E. L. M. F. ஹைஸ்கூல்
புரசபாக்கம், சென்னை.
9. ,, ஐயம்பெருமாள் கோன் அவர்கள், தமிழாசிரியர்,
ஸெயின்ட் ஜோஸப் காலேஜ், திருச்சினாப்பள்ளி.
10. ,, K. கோபால கிருஷ்ணன் அவர்கள், B. Sc. (Hons.)
M. R. A. S. பர்மா.

### வேண்டுகோள்.

வியாசங்கள் எழுதுவோர் தெளிவாகவும் நூஷணைகளின்றியும் முழுவிலாசத்துடன் சமூக முன்னேற்றத்திற்குரியனவும் அறிவு வளர்ச்சிக்குரியனவுமாகிய பொது விஷயங்களைப்பற்றிச் சுருக்கமாகவும், நடை எளிதாகவும் எழுதியனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோரும், விளம்பரங் கொடுக்க விரும்புவோரும் அடியிற்காணும் விலாசத்திற் கெழுதுக.

யாதவமித்திரன் ஆபீஸ், ஸ்ரீ கோபால் மஹால்,
வடக்குச் சித்திரைவீதி, மதுரை



# யாதவமித்திரன்.

ஒரு மாதப்பத்திரிகை.


எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.


| தொகுதி 3 | பிரஜோத்பத்தி௵ புரட்டாசி௴ 1931-௵ செப்டம்பர்௴ | பகுதி 2 |
|---|---|---|


## கடவுள் வணக்கம்.

மின்னிலங்கு திருவுருவும் பெரியதோளும்
கரிமுனிந்த கைத்தலமும் கண்ணும் வாயும்
தன்னலர்ந்த நறுந்துழாய் மலரின் கீழே
தாழ்ந்திலங்கு மகரம் சேர் குழையும் காட்டி
என்னலனும் என்னிறையும் என் சிந்தையும்
என்வளையும் கொண்டு என்னை யாளும் கொண்டு
பொன்னலர்ந்த நறுஞ்செருந்திப் பொழிலினூடே
புனலரங்கம் ஊரென்று போயினாரே

திருமங்கை ஆழ்வார்.

## நம் பெண்டிரும் கல்வியும்.

"குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகும் அழகல்ல — நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு." — நாலடியார்,

என் அருமைக் குலப் பெருமக்களே!

உலகில் தோன்றிய ஒவ்வோருயிரும் செய்தற் கமைந்த செயலொன்றுண்டு. கடவுள் கட்டளைப்படி அஃது அமைவதாகும்.

உலகப் படைப்பில் மக்கள் தொகுதியே அறிவாற்றல்களால் தலை சிறந்து விளங்கக் காண்கின்றோம். மக்கள், தங்கள் அறிவாலும் ஒழுக்கத்தாலும் பிறவுயிர்களைக் கீழ்ப்படுத்தியாளும் தன்மை வாய்ந்தவர்களாக இருக்கின்றார்கள். ஆகலின், கடவுள் மக்களுக்கு ஏற்படுத்தியுள்ள கடமை மற்ற உயிர்களுக்கு அவரால் ஏற்படுத்தப் பட்ட கடமைகளுள் தலை சிறந்து விளங்குகின்றது. எனவே, மக்களாகிய நம்முள் ஒவ்வொருவரும் அக்கடமையை நம்மாலியலு மளவு இனிது செய்ய முயலவேண்டும். அங்ஙனமாயின், நமக்கேற் பட்டுள்ள அக்கடமைதான் யாது? பணி செய்து கிடத்தலே ஆம்! மக்கட்கும் மற்றுள உயிர்கட்கும் நாம் ஆற்றும் தொண்டு இறை வருக்காற்றும் இனிய திருத்தொண்டாகு மன்றோ? இதுவே நம் நாட்டு வேதம் விதித்த விதியாகும்.

பெருமக்களே, நம் தமிழ் நாட்டுப் பெரு முனிவராகிய திரு நாவுக்கரசு சுவாமிகள் "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்று கூறினார். தாயுமானவர் என்னும் சைவப் பெருந்தகையார், ஓதியருளிய போதத்தைச் சிறிது உற்று நோக்குவோம்—சிந்திப்போம்:

"அன்பர்பணி செய்யவென்னை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே."

ஆகையினால், ஒருவனோ ஒருத்தியோ மக்கள் தொகுதிக்கும் மற்றுள உயிர்க்கும் ஆற்றும் திருத்தொண்டைப்போல மோட்சத் திற்குச் செல்லும் வழியை இனிது விளக்கிக் காட்ட வல்ல தூண்டா விளக்கு வேறொன்று இல்லையென்றே இயம்பலாம். எனவே, மக்கட்குப் பணி செய்து கிடப்பதே நம் அருங்கடன் என நாம் கொள்ளுதல் வேண்டும். உலகுயிர்த் தொகை முழுவ தற்கும் தொண்டியற்றல் நம்மால் இயலாது எனினும், நம் சமூக முன்னேற்றத்திற்காகவாவது ஆவன செய்தல் நம் கடமையன்றோ? இக்கருத்தே, யான் அத்தகைய திருப்பணி யாற்றும் வல்லமை வாயாதவனாக விருந்தும், என் கடமையை என சமூகத்திற்கு இயன்ற வரையிற் செய்ய முன் வருமாறு என்னைப் பெரிதுந் தூண்டியது.

என் அருமைக் குலப் பெரு மக்களே, யான் நம்முடைய சமூகத்தை—சற்றேறக்குறைய மூவாயிரத்து ஐந்நூறு ஆண்டு



களுக்கு முன் உலகத்தின் அஞ்ஞான இருளகற்றவந்த மெய்ஞ் ஞானச் சுடராகிய திருக்கண்ண பிரானின் தோற்றத்தால் விளக்க முற்று விளங்கிய நம் சமூகத்தை—நினைக்குந்தோறும், அஃது இந்நாள் அடைந்திருக்கின்ற இழிதகு நிலையினைக் காணப் பெரிதும் நடுநடுங்குகிறேன். கலை நலம் பெரிதும் வாய்ந்த கண்ணிய மிக்க ஆடவரும் பெண்டிரும் நம் சமூகத்தில் தோன்றி, செயற்கருஞ் செயல் பல ஆற்றி மறைந்தனர். அவர்தம் கால் வழியில் தோன் றிய நாம் அவர்களைப் பின்பற்றி நடத்தல் வேண்டாவா?

இந்நாள் நம் சமூகம் இருக்கும் நிலையை ஆராயும்போது, இச் சமூகத்தை உயர்த்துவதற்கான வழிகளில் உழைப்பதற்கு நாம் துயிலும் சோம்பலும் நீங்கி எழவேண்டும் எனப் புறச் சமூகங் கள் நமக்கு அறிவுறுத்துகின்றன. ஆதலின், நாம் விழித் தெழு ந்து பற்பல சீர்திருத்தத் துறைகளில் முயலவேண்டும். அத்துறை களில் இன்றியமையாதது நம் பெண்டிர்க்குத் திருத்தமான முறையிற் கல்வி பயிற்ற வேண்டுவது என்பதைத் துணிவாகக் கூறுகிறேன்.

யான் 'நம் பெண்டிர்க்குக் கல்வி' என்று கூறுவதால், அவர் களுக்கு நாம் சர்வகலாசாலைப் பட்டப் பரீட்சைகளில் தேறிப் பட் டம் பெறுதற்கான கல்வியைப் புகட்டவேண்டும் என்பது எனது கருத்தன்று. ஆனால், அவர்கள் இல்லக்கிழத்தியர் என்னும் சீரிய பெயர்க்கு ஏற்ப இல்லற வொழுக்கங்களை இனிதறிந்து குடும்பத் தைச் செவ்வையாக நடத்துதற்காக வேண்டுங் கல்வியை அவர் களுக்குக் கற்பிக்க வேண்டுமென்பதே எனது கருத்து.

"கணவனும் மனைவியுங் கருதின் வேறலர்
குணமுறு மிருடற் குயிரொன் றவரால்"

எனுங் கருத்தைச் சற்றுக் கவனிப்போம்: கணவனுடைய உடல் நலம் முதலியவற்றைக் கவனிக்கும் பொறுப்பு மனைவியைச் சார்ந்த தல்லவா? அவளே கணவன் புகழ்க்கும் இழிவுக்கும் காரணமாவள் என்பது மிகை யாகாது. நம் செந்தமிழ் நாட்டுத் தெய்வப் புலமை வாய்ந்த திருவள்ளுவ நாயனாரின் பொன் மொழிகளைச் சிறிது கூர்ந்து நோக்குவோம்:

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்?"

"இல்லதென் இல்லவள் மாண்பானால்? உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை?"

"புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை."

"தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்."

"மனைத்தக்க மாண்புடைய ளாகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை."—குறள்.

உண்மையுங் கற்பும் வாய்ந்த மனையாள் இங்ஙனம் போற்றிக் கூறப்படுதலால், அவளைக் கணவனுக்கு உயிர் என்று சொல்லுவதால் வரும் இழுக்கென்ன?

இனி விஷயத்தைக் கவனிப்போம். இந்திய நாட்டுப் பெண்மணிகள் குடும்ப தேவதைகளாக விளங்குவதால், குடும்ப வாழ்க்கைக்கு இன்றியமையாத சிறந்த கல்வியே அவர்களுக்குக் கற்பிக்கப்படல் வேண்டும். நம் பெண்டிர்க்குத் தம் தாய் மொழியிற் சிறந்த பயிற்சி அளித்தல் வேண்டும். அவ்வாறு அளித்தால், அவர்கள் அம்மொழியில் அமைந்துள்ள இல்லற ஒழுக்க நூல்களையும் தாய் நாட்டில் தோன்றித் தம் சீரிய செயல்களால் புகழுடம்பு நிறுவிச்சென்ற மங்கையர் மணிகளின் வாழ்க்கை வரலாறுகளையும் ஓதியுணர்ந்து தம் வாழ்க்கையைப் பண்பும் பயனும் உடையதாக்கிக் கொள்ளுவார்கள். நம் நாட்டில் தோன்றிய அரும்பெறல் நங்கையர் திலகங்களாகிய ஸ்ரீ ஆண்டாள், காரைக்காலம்மையார், திலகவதியார், அவ்வையார், கண்ணகி, மாதரி முதலியவர்களைப் பற்றிய வாழ்க்கை வரலாற்றுச் செய்திகள் இந்நாள் நம் செல்வியர்களிலும் தங்கைமார் தமக்கைமார்களிலும் எத்தனை பேருக்குத் தெரியும்? நாம் அவர்களைக் குறைகூறுவதாற் பயனென்ன? அவர்கள் அவற்றைத் தெரிந்துகொள்ளும்படி அவர்களைப் பழக்கினவர்கள் இல்லையே! திருவள்ளுவர் மனைவியாராகிய வாசுகியார் என்னும் கற்பிற் சிறந்த காரிகையாரைப்பற்றி நம் பெண்டிருள் மிகச் சிலரே அறிந்திருத்தல்கூடும் என்றெண்ணுகிறேன். திருவள்ளுவர் தம் மனைவியார் இறந்தபோது மனமுருகிப் பாடியதாகக் காணப்படும் செய்யுள் இங்குக் கவனிக்கத் தக்கது.

"அடிசிற் கினியாளே, அன்புடை யாளே,
படிசொற் றவறாத பாவாய், — அடிவருடிப்



பின்றூங்கி முன்னெழும் பேதையே, போதியோ!
என்றூங்கு மென்கண் ணிரா!"

திருவள்ளுவப் பெருந்தகையார் தம் மனைவியாருடன் இருந்து நடத்திய இன்ப வாழ்க்கையை இச் செய்யுளில் நன்கு சித்திரித்துக் காட்டியுள்ளார். நம் சகோதரிகள் வாசுகியம்மையாரின் முன் மாதிரியான வாழ்க்கை வரலாற்றை இனிது உணர்ந்திருப்பார்களாயின், அதனால் ஊக்கப்பட்டுத் தங்கள் இல்வாழ்க்கையைச் கூடுமான அளவு பண்பும் பயனும் உடையதாக்கிக் கொள்ள இயலும் அன்றோ? பெரியாழ்வார் ஸ்ரீ ஆண்டாளைப் பழக்கிய முறையில் பழக்கப்பட்டால் நம் சமூகத்தில் எத்தனை பெண்மணிகள் சிறப்புற்று விளங்குவார்கள்!

ஆதலின், நம் சகோதரிகளையும் புதல்வியர்களையும் தேசிய முறைகளைப் பின்பற்றிக் கல்வி பயிலச் செய்வதே நமது கடமையாகும். நம் பெண்மணிகள் தாய் மொழிப்பயிற்சி பெறுவதோடமையாமல் சமையல் தொழிலிலும் முதல்தரமான பயிற்சி பெற வேண்டும். ஏனெனில், நாம் நெடுநாள் இவ்வுலகில் உடல் நலமும் மன உரமும் பெற்று வாழ வேண்டுமானால் நாம் உண்ணும் உணவு சரியான முறையில் அமைந்திருத்தல் வேண்டும் அன்றோ?

"மாறுபா டில்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபா டில்லை உயிர்க்கு." — குறள்

என்னுங் குறட்பா இங்குக் கவனிக்கத் தக்கதாம். நான் இவ்வாறு கூறுவது ஆங்கில மொன்றே கற்று, மேனாட்டு முறைகளிலேயே பழகியுள்ள நம் சகோதரர்களில் சிலருக்கு இது வியப்புக் கிடமாகத் தோன்றலாம். ஆயினும், இவ்வுண்டி முறையினமைந்ததே நம் உயிர் வாழ்க்கை யென்பதை நான் துணிந்து கூறுவேன்.

"உடம்பா ரழியில் உயிரா ரழிவர்;
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார்;
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே."—திருமந்திரம்

என்னுந் திருமூலர் திருவாக்கைக் கூர்ந்து கவனியுங்கள்.

'உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே'

என்னு மடியும் நம் சிந்தனைக்குரியதாம் அன்றே?

நம் சகோதரிகளுக்கு மருத்துவநூல் (Medical Science) பயிற்சியும் சிறிது இருத்தல் வேண்டும். அவர்கள் பிள்ளைப் பேறு

முதலிய வற்றைச் சீர் பெறக் கவனிக்கும் திறம் பெறவேண்டும். சிசுக்களை யாதரிக்கும் முறைகளில் நன்கு பழகுதலும் வேண்டும். தக்க காலத்தில் தக்க உதவி செய்து பராமரிக்கும் தாய் மாரில்லாமையால் நம் நாட்டில் குழவிப் பருவத்திலே மடிந்தொழியும் குழவிகள் இத்தனை என்று கணக்கிட்டுக் கூற முடியாது.

சோர்ந்த மனத்தைச் சுகமுறச் செய்யும் நுட்பக் கலைகளுள் இசைக்கலையும் ஒன்றாகும். சில நோய்களை நீக்கும் ஆற்றலும் இசைக்குண்டு என்பர் அநுபவம் வாய்ந்த பெரியோர். ஆதலின், நம் பெண்மணிகளில் பலர் பண்டைக் காலத்தில் இசை ஞானமும் பெற்றிருந்தார்களெனத் தெரிகின்றது. சுருங்கக் கூற வேண்டுமானால், நுட்பக் கலைகள் பலவற்றுக்கும் பாத்திரங்களாக அமைந்தவர்கள் பெண்மணிகளென்றே சொல்லலாம். கலைமகளி னுருவத்தைக் கவனியுங்கள்; அவர் இரு கைகளில் யாழ் என்னும் இசைக்கருவி அமைந்திருக்கின்றது. ஒரு கை கலை நூலுடன் விளங்குகின்றது. மற்றொரு கையில் செபமணி மாலை ஒளிர்கின்றது. இவ்வுருவமே நுண்கலை பலவற்றிற்கும் பெண்களே பாத்திரங்கள் என்பதை விளக்க வில்லையா?

‘இல்லற மல்லது நல்லற மன்று’ என்னும் வாக்கியம் இல்லறத்தின் மாட்சியை இனிது விளக்குவதால், இல்லறமே நல்லறம் பலவற்றிற்கும் பிறப்பிடம் எனக் கூறலாம். ஆதலின், இல்லக் கிழத்தியர் என்னும் பெயர்க்கு உரிமை பூண்ட பெண்மணிகளை முதலில் கல்வியில் வல்லவர்களாக்கிச் சீர் திருந்தச் செய்வது உலகத்தையே சீர் திருத்துவதற்கு ஒப்பாகும்.

பெருமக்களே, இறுதியாக நம் பெண்மணிகளுக்குச் சர்வகலா சாலைப் பட்டங்களுக்குரிய கல்வியளித்தலைப் பற்றி ஒரு சில சொல்லக் கருதுகின்றேன்: நம்முட் பெருஞ் செல்வர்களாக இருப்பவர்கள் தங்கள் புதல்வியர்க்குப் பட்டப் படிப்புக்கு வேண்டுவன செய்யலாம். அங்ஙனம் செய்வோர் தம் குடும்பத்தில் அப்புதல்வியர்க்கு மேலான பட்டப்படிப் பில்லாவிட்டாலும் சமத்துவக்கல்வியுடைய மாப்பிள்ளைகளேனும் கிடைப்பார்களா என்பதையும் கவனித்துக் கொள்ளவேண்டும். ஏனெனில், கணவனிடம் உயர்வில்லாவிடினும், சமத்துவமேனும் இல்லாவிட்டால், ஒரு மனைவி அவனை விரும்பிப் போற்றுதல் எவ்வாறியலும்? ‘நேசமில் வதுவை நாச காரணமே’ ஆகும் அல்லவா?



“எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்
எண்ணுவம் என்ப திழுக்கு.’—குறள்.

அன்பர்களே! இதுகாறும் நம் பெண்மணிகளின் கல்வியைப் பற்றி என் அறிவுக்கும் உலகானுபவத்திற்கும் பெரியோர் கருத்திற்கும் பொருந்தியனவாக யான் கருதிய சிலவற்றை எழுதினேன்.

“சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.”—குறள்.

ஆதலின், இக்கருத்துகளை நாம் செய்கையாக மாற்றுதற்கு முயல வேண்டும் என நான் உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்.

திரு. மே. வீ. வேணுகோபால் பிள்ளை.

## நைனியப்ப பிள்ளை.

ரா. தேசிகன்,

(305-ம் பக்கம் தொடர்ச்சி.)

இந்தியா கம்பெனியார் கவர்னரோடு செய்த தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டுவர ஆரம்பித்தபோது இந்துக்கள் ஆற்றொணா ஆத்திரமடைந்தனர். கிறிஸ்தவர்கள் தூண்டுதலின் பேரில் துய்லிவியே (Duiivier) 1715௵ பிப்ரவரி௴ 4௳ நடக்கவிருந்த இந்துக்கள் உற்சவத்தைத் தடைப்படுத்திவிட்டான். ஆகவே இந்துக்கள் எல்லோரும் புதுச்சேரியினின்று புறப்பட்டு வேற்றூர் சேர்ந்தனர். நான்கு நாட்கள்வரையில் நகரம் ஜன சஞ்சாரமின்றி பாழடைந்த தோற்றத்துடனிருந்தது. இதுகண்ட துய்லிவியே இந்துக்களின் மதவிஷயங்களில் இனி எவ்வித குறைவும் நேரா வண்ணம் அவர்களுக்கு வேண்டுவன செய்து கொடுக்கப்படுமென்று உறுதிகூறி அதைத்தெளிவாகப் பிரசித்தப்படுத்தினான். ஊரினின்று வெளியேறிய குடிமக்கள் மறுபடி புதுச்சேரி திரும்பினர். பிரான்சுதேசம் சென்ற ஹெபேர் கிறிஸ்தவக்குழுவினரோடு இனி ஒத்துழைப்பதாக வாக்குறுதி தந்ததன்மேல், பதினாலாவது லூயின் அபிமானம் பெற்று புதுச்சேரிக்குத் திருப்பி அனுப்பப்பட்டான்.

புதுச்சேரி வந்ததும் ஹெபேர், தான் முன்னர் பெரிதும் மதித்திருந்த நைனியப்ப பிள்ளையை எவ்வழியிலேனும் தூரத்தி விடவேண்டுமென்று எண்ணினான். 1715௵ பிப்ரவரி௴ 4௳ நடந்த சம்பவத்தில் இராஜத்துரோகக் குற்றஞ்செய்ததாகக் கற்பனை செய்து நைனியப்ப பிள்ளையையும் அவரைச்சேர்ந்த சில தனவந்த இந்துக்களையும் கைதுசெய்து, தானும் உடனிருந்த ஒரு விசாரணைக் கூட்டத்தாரால், நைனியப்ப பிள்ளையைத் திறந்த ஒரு பொது வெளியில் கசையால் அடிக்கவேண்டுமென்றும், அவர் 8800 வராகன் அபராதம் தரவேண்டுமென்றும், மூன்றாண்டு சிறைச்சாலையிலிருக்கவேண்டுமென்றும், அதன் பிறகு அவர் தேசப்பிரஷ்டம் செய்யப்படவேண்டுமென்றும் தீர்ப்புக் கூறச்செய்தான்.

இத்தீர்ப்பு நிறைவேற்றத்தின் கொடுமையைக்கண்ட சென் மலோ (Saint malo) வர்த்தகர்கள், நைனியப்ப பிள்ளைக்கு உதவி புரியவந்தனர். அவர்களில் சிறப்பாக துய்ப்ளேக்ஸ் (Dupliex) மனைவியின் முதல்நாயகனாகிய ழாக்வேன்சான் (Jacques Vincent) மிகத்தீவிரமாக வேலை செய்தான். பிரதானிகர் நைனியப்ப பிள்ளை தன்வழக்கைப் புனராராய்ச்சி செய்தல் வேண்டுமென்று அரசருக்கு விண்ணப்பமனுப்பினார். சென்மலோ வர்த்தகர்களின் தலையீட்டால் நைனியப்ப பிள்ளையை உடனே விடுவிக்கவேண்டுமென்றும், அவருக்குப் பிரதானிகர பதவியைத் திருப்பிக்கொடுக்க வேண்டுமென்றும் பாரீஸ் நகரிலிருந்து ஹெபேருக்கு ஆஞ்ஞை பிறப்பிக்கப் பட்டது. இவ்வாஞ்ஞை 1717௵ ஆகஸ்டு௴ புதுச்சேரிக்கு வந்தது. ஆனால் அது வருவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் நைனியப்பிள்ளை, தான் ஓர் ஆண்டாக அனுபவித்து வந்த சிறைச் சாலைக் கொடுமைகளுக்கு ஆற்றாராகிச் சென் லூய் (Saint Louis) கோட்டையின் * சிறையினுள்ளே உயிர் துறந்துவிட்டார். அவருக்கு

* புதுச்சேரியிலிருந்த சென்லூய்கோட்டை 1761-ம் ஆண்டில் இங்கிலீஷ்காரரால் அழிக்கப்பட்டுவிட்டது. தரையில் மறைந்து கிடந்த அக்கோட்டையின் வாயற்படியின் இருப்பிடத்தைக் கண்டுபிடித்து புரோபசேர் துய்ப்ரேய் அவர்கள் இரண்டு வருடங்களுக்குமுன் பூமியைத்தோண்டி அதன் அஸ்திவாரங்களை வெளிப்படுத்தினர். தோண்டப்பட்ட இடம் அப்படியே விடப்பட்டு, அதன்முன்பாகக் கோட்டையின் அமைப்பு, விபரம் வரைந்த ஒரு கல் நாட்டப்பட்டிருக்கிறது. இவை புதுச்சேரி கவர்ன்மெண்டு மைதானத்தின் தென்கிழக்கு மூலையில் இருக்கின்றன.



விதித்திருந்த அபராதம். 8800 வராகனுக்கு அவர் சொத்துக்கள் யாவும் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன. ஹெபேரும் அவன் மைத்தனும் நைனியப்பபிள்ளையின் நகைகளையும் ரொக்கங்களையும் அபகரித்துக்கொண்டனர்.

1718-ம்௵ பிப்ரவரி௴ 7௳ பிரான்சு அரசரால் நியமிக்கப் பட்ட விசாரணைக்குழுவினர் ஹெபேரும் அவன் மைத்தனும் தவறுகள் பல இழைத்திருக்கின்றனர் என்று அபிப்பிராயப்படவே, ஹெபேர் தன் ஸ்தானத்தினின்றும் நீக்கப்பட்டான். 1718-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில், அப்போது அதிகாரத்திலிருந்த, லாபிரே வொஸ்தியேர் (La Prevostiere) ஹெபேருக்கும் அவன் மைத்தனுக்கும் சொந்தமான உடமைகளை ஜப்திசெய்து முத்திரையிட்டான். இது செய்யப்படுவதற்குமுன் ஹெபேருக்குப் பிரான்சு தேசத்திலிருந்து கிடைத்த ஒரு இரகசியக் கடிதத்தினால் அவன் தனக்குத் தீங்கு தரக்கூடிய பத்திரங்கள், கடிதங்கள், சாசனங்கள், முதலிய யாவையும் அழித்துவிட்டதுமன்றித் தன் சொத்துக்களில் பலவற்றைச் சென்னையில் பத்திரப்படுத்திவிட்டான்.

முன்சொன்ன விசாரணைக்குழுவினர் நைனியப்ப பிள்ளையைப் பற்றிப் புனர் விளக்கஞ்செய்து அவர் எம்முறையிலும் குற்றவாளியல்ல என்று தீர்மானித்தனர்.

இத்தீர்மானத்தால், காலஞ்சென்றுவிட்ட நைனியப்ப பிள்ளையைப்பற்றி எவ்வித பழிச்சொல்லுமின்றி, எவரும் அவரைப் பெருந் தூய்மையாளரென்று எண்ணும்படி நேர்ந்தது.

அதன்பின்னர் பலர் யோசனையின்பேரில், தன் குடும்பத்துக்கு நேர்ந்த நஷ்டங்களை ஈடுபடுத்திக்கொள்ள, நைனியப்ப பிள்ளையின் மூத்தகுமாரர் குருவப்பபிள்ளை பிரான்சுதேசம் சென்றார். அங்கு அரசரின் ஆலோசனைசபை அவர் முறையீடுகளைப் பரிசீலனை செய்து 10060. வராகன் குருவப்ப பிள்ளையின் குடும்பத்துக்கு இந்தியா கம்பெனி கொடுக்கவேண்டுமென்று முடிவு செய்தது. இத்தொகை ஹெபேர் நைனியப்ப பிள்ளையின் சொத்துகளை அநீதி முறையில் கைப்பற்றி விற்றுச் சேர்த்து அபகரித்ததாகும். குருவப்ப பிள்ளை பாரீஸ் நகரத்திலேயே 1904-வராகன் பெற்றுக்கொண்டார். மற்றதைப் புதுச்சேரியில் அவரும் அவர் சகோதரர்களும் 1723-ம் ஆண்டு ஆகஸ்டு௴ 26௳ பெற்றுக்கொண்டனர். எனினும் அவர்கள் சொத்துக்கள் முழுதும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

# “அங்கதன் அருந்திறல்”

திரு. தி. மூ. பாஸ்கரத் தொண்டைமான். B. A.

(19-ம் பக்கம் தொடர்ச்சி.)

“மாருதியின்னுஞ் செல்லின் மற்றிவனன்றி வந்து
சாருதல் வலியாரில்லை என்பது சாலுமன்றே
யாரினி யேகத்தக்கார் அங்கதன் அமையும் ஒன்னார்
வீரமே விளைப்பரேனும் தீதின்றி மீளவல்லான்”

என்று இராமன் கூறும் நயஞ் சான்ற சொற்கள் அங்கதனது ஆற்றலை அளவிட்டுரைக்கப் போதிய சான்றாகும். அங்கதனும்.

“மாருதி அல்லனாகில் நீ யெனும் மாற்றம் பெற்றேன்
யாரினி என்னோ டொப்பார்—” என்று தன்

தலைவன் தனக்கிட்ட பணியின் பெருமையினை நினைந்து நினைந்து இன்ப முறுகின்றான்.

தூதுசென்ற அங்கதன், கொடுந்தொழில் மடங்கல் அன்னான் எதிர் சென்று நின்றதும்

“இவண்வந்த நீயார், உன் கருமம் என்ன?” என்று அரக்கர் கோன் வினவ, அதற்கு

“பூத நாயகன் நீர் சூழ்ந்த புவிக்கு நாயகன் அப்பூமேல்
சீதை நாயகன் வேறுள்ள தெய்வ நாயகன் நீ செப்பும்
வேதநாயகன் மேனின்ற விதிக்கு நாயகன் தான் விட்ட
தூதன்யான் பணித்த மாற்றம் சொல்லிய வந்தேன்-”

என்று தன் தலைவனது பெருமையையும் தான் கொண்ட கருத்தை யும் நலஞ்சான்ற மொழிகளால் நவின்றான்

“இந்திரன் செம்மல் பண்டோர் இராவணன் என்பான் தன்னை
சுந்தரத் தடந்தோ ளோடும் வாலிடை தூங்கச் சுற்றிச்
சிந்துரக் கிரிகள் தாவித் திரிந்தனன் தேவருண்ண
மந்திரக் கிரியால் வேலை கலக்கினான் மைந்தன்-”



என்று தன்னை இராவணனிடம் அறிமுகப்படுத்தும் வாயிலால் அங்கதன் கூறும் அழகிய மொழிகள் அங்கதனது புகழ் குன்றாத பெருவலியையும் அவனது மனத்திட்பத்தையும் பெரிதும் விளக்குவதாகும். அங்கதன் வரலாறு உணர்ந்த அரக்கர் கோன் இவனை இராமனிடம் இருந்து பிரித்துத் தன்பால் சேர்த்துக் கொள்ள விரும்பிச் சூழ்ச்சி மொழிகள் பல சொல்லியும் அதற்கிணங்காது

“வாய்தரத்தக்க சொல்லி யென்னையுன் வசஞ் செய்வாயேல்
ஆய்தரத் தக்கதன்றோ தூது வந்தரச தாள்கை
நீதரக் கொள்வன்யானே யிதற்கினி நிகர் வேறெண்ணின்
நாய்தரக் கொள்ளுஞ் சீய நல்லரசென்று—” என்பதாக

இகழ்ந்துகூறி அவன்றன் ஏழை மதியை நினைந்து நகுகின்றான். தன் முயற்சி பயன்படாதது கண்ட இலங்கைவேந்தன் இவனிடம் நீ வந்த காரியம் உரை யென்று சொல்ல, அதற்கு அங்கதன் ,‘தேவியை விடுக, அன்றேல் செருக்களத் தெதிர்ந்து தன் கண் ஆவியைவிடுக” என்று அஞ்சாது கூறும் மாற்றம் போற்றத்தக்கதொரு பொருளாகும். இதற்கு இராவணன் இசையாது, இறுமாந்து சொன்ன சொற்களைக் கேட்ட அங்கதன் மீண்டும் இராமனையடைந்து, அரக்கர்கோன் உள்ளக் கருத்தை அண்ணலுக்குரைத்து “மூர்க்கன் முடித்தலை அற்றபோதன்றி ஆசையறான்” என்று அழகாக எடுத்துரைத்து மகிழ்ந்தான். தூதுவனுக்கு இன்றியமையாத, அன்பு, அறிவு, ஆராந்த சொல்வன்மை இவையாவும் பொருந்திய தலைமகனாய் மட்டும் அமையாது, இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவர்க்கு உறுதி பயப்பதாம் தூது” என்று வள்ளுவர் அருளிய பொய்யாமொழிக்குத் தலைசிறந்த சான்றாய் அமைந்து அங்கதன் புகழ்குன்றாத பெருமகனாய் இலங்குகின்றான்.

இனி வானரசேனைக்கும் அரக்கர் சேனைக்கும் நிகழ்ந்த போரில் அங்கதன் அஞ்சாத நெஞ்சோடும் எஞ்சாத வலியோடும் போர் புரிந்த பான்மையைக் கவியரசர் கம்பர் ஏற்ற இடந்தோறும் போற்றியுரைக்கின்றார். இவ்வாறு போர்புரிந்த அங்கதன், இந்திரசித்தன் விடுத்த மலரவன் கணையால் மயங்கி வீழ்ந்ததைக் கண்ட இராமன் புலம்புகின்ற நிலையை

“விடைக் குலங்களின்நடுவனோர் விடைகிடந்தென்னக்
கடைக்கண் தீயுக அங்கதக் களிற்றினைக் கண்டான்

படைக்கலங்களைச் சுமக்கின்ற பதகனேன் பழிபார்த்து
அடைக்கலப் பொருள் காத்தவாறு அழகிதென் றழுதான்"

என்று கவியரசர் கூறுகின்றார். வானரவீரனாப வாலியால் தன்னிடம் அடைக்கலம் என்று ஒப்புவிக்கப்பட்ட அங்கதன் தனக்காக ஏற்ற ஒருபணியில் மாண்டுமடிந்தனன் என்பதைக்கண்ட இராமன். அடைக்கலம் புகுந்த உயிரைக் காக்கத் தம் ஆருயிர் கொடுத்த ஆன்றோர் பெருமையையும் தன்னிடம் அடைக்கலமாக அளிக்கப்பெற்ற அங்கதனைத் தானிழந்த சிறுமையையும் எண்ணி யெண்ணி ஏங்குகின்றான். ஆற்றல் மிகுந்த அனுமன் கொணர்ந்த அருமருந்தினால் உயிர் பெற்றெழுந்த அங்கதன் இளையவீரனுக்கு உற்ற துணைவனாய் இந்திரசித்தன் சென்றுள்ள நிகும்பலைக்குச் சென்று அங்கு இந்திரசித்திற்கும் இலக்குவனுக்கும் நேர்ந்த பெரும்போரில் இலக்குவனது துணையாய் அமைந்து போர் புரிந்தான். இளையவீரனது அம்பிற்கு இலக்காகி இந்திரசித்தன் தலையும் உடலும் வேறாகி மாநிலத்தில் மாண்டு வீழ்ந்தபோது, அங்கதன் அவனது தலையினைத் தன் கைகளில் தாங்கி, இராமன் முன்னே விரைந்துவந்து சேர்ந்தான். இந்திரசித்தனது இணையற்ற வலியையுணர்ந்த இராமன்,

"தென்தலையாழி சூழ்ந்த திண்மதில் இலங்கை காக்கும்
புன்தலைக் கள்வன் பெற்ற புதல்வனை இளவல் வீழ்த்த
வன்தலை யெடுத்து நீமுன் வருதலால் வானரேச!
என்தலை எடுக்கலானேன் இனிக்குடை எடுப்பேன்"

என்று அங்கதனிடம் அன்போடு கூறிய மொழிகள் அவன்றன் பெருமையை இராமன் மதித்துள்ள தன்மையை விளக்கும்.

அரக்கர் கோனையும் அரக்கர் சேனையையும் முடித்து வெற்றி பெற்று மீண்ட வீரனுடன் அங்கதனும் அயோத்தியை அணுகினான். அங்கு இராமன், திருமுடி சூட்டிய பொழுது வானரவீரனை வாலியின் மைந்தன் உடைவாள் ஏந்தும் உரிமை பெற்றான் என்பது கருதற்பாலது. பின்னர் இராமவீரன் இவனுக்குத் தோளணி யொன்றும் அன்புடன் அளித்து விடை கொடுத்தனுப்பும் பான்மையை யாரே கணிக்கவல்லார். அங்கதனது அருந்திறனைப்போற்ற விரும்பி,

"அங்கத மிலாத கொற்றத் தண்ணலும் அகிலமெல்லாம்
அங்கத னென்னும் நாமம் அழகுறத் திருத்துமா போல்



அங்கதங் கன்னற் றோளாற்கு அயன் கொடுத்ததனை யீந்தான்
அங்கதன் பெருமை மண்மேல் ஆரறிந்தறையகிற்பார்

என்று நயஞ் சான்ற மொழிகளால் கவிஞர் எடுத்துரைக்கின்றார்.

இதுவரை கூறிய வற்றால், அங்கதன் வானர நாட்டின் வீரனாய் வாலியின் ஒப்பற்ற திருமகனாய் இலங்கி, இராமனது செம்மை சான்ற பணியை ஏற்று விளங்கிய பெருமகன் என்பதும், அவனது அஞ்சா நெஞ்சமும் எஞ்சாதவலியும் யாவரும் போற்றும் பெருமையுடையது என்பதும் அவன் அன்பு அறிவுடைமை ஆராய்ந்த சொல்வன்மை முதலிய இன்றியமையாத குணங்கள் நிறைந்து விளங்கி அதனால் ஒப்பற்ற தூதுவனாய் இலங்கினான் என்பதும் விளக்கமுறும்.

---

# அடக்கமுடைமை.

திரு. தி. ஐயன்பெருமாள் கோன்.

புத்திமான் பெரிய அரசன்; அவனுக்குத் தன்னுள்ளேயே ஒரு ராஜ்யமுண்டு:- அறிவை ஆள்பவனுக்கிச் சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்து செங்கோலைச் செலுத்தும். அவனுடைய அந்தக்கரணங்களெல்லாம் வணக்கமுள்ள ஏவலாளர்களைப்போல அவனைப் பணியும். அந்த ராஜ்யம் சிறிது ஒடுக்கமுள்ளதாகக் காணப்பட்டாலும், அதன் அரசன் மிகுந்த செல்வாக்கும், ராஜரிகமுமுள்ளவனாகிச் சக்கரவர்த்தியிலும் மேலாவான். அந்தக்கரணத்துக்கும் அறிவுக்கும் ஒற்றுமையின்றி என்றைக்கும் நம்முள் ஊர்க்கலம் போலச் சண்டை நடந்துகொண்டேயிருக்கும். இவ்விரண்டினுள் எது மேற்கொள்ளுமோ அதற்குத் தக்கபடிதான் நாம் நல்லோராவதும் தீயோராவதும். நாம் இந்திரிய, நிக்கிரகஞ்செய்து, அதை அறிவோடு இணங்கச்செய்ய வல்லோமாயின், அதைப்போல

பேரானந்தம் வேறொன்றுமில்லை. பகைவரது கூரிய அம்பினும், அடங்காப்புலன்களே கொடியனவாம். அவற்றிற்கு நாம் ஆட்பட்டிருத்தலானது பகைவரிட்ட பெருவிலங்கினுங் கொடியது. "தன்னைக் குடிகெடுக்கும் நெஞ்சிற்குற்றேவல் செய்யின் பிடிபடுக்கப் பட்டகளிறு" இயற்கையிற் சினமுள்ள ஒருவன் எப்பொழுதும் சான்றோரினத்திருத்தல்வேண்டும். இவ்வாறு செய்வதினால் அவன் எளிதில் நற்குணமுள்ளவனாகலாம். ஸகவாசமானது மிகவும் முக்கியமானது. அதனால் ஒழுக்கமும் குணமுமாத்திரமல்ல நமது விருப்பமும் நம்மையறியாமலே சீர்ப்படும். தன்னையடக்கி யாள்பவன் இவ்வுலகத்தையும் ஆள்கிறான். நாம் மற்றவர்களையடக்கி ஆள்வதிலும் நம்மையே அதிகமாக அடக்கி ஆளவேண்டும்.

"நின்னை யறப்பெறு கிற்கிலேனன் னெஞ்சே
பின்னையான் யாரைப் பெறுகிற்பேன்—நின்னை
அறப்பெறு கிற்பெனேற் பெற்றேன் மற்றீண்டு
துறக்கந் திறப்பதோர் தாள்"

பிறரிழைத்த சிறு பிழைகளை எண்ணாமல் மறப்பதே நன்று. அவற்றை மறப்பதினால் உயர்ந்தோராவோம். மறவாமல் தீங்கு செய்தவர்க்குத் தீங்கிழைப்போமாயின் அவரினும் இழிந்தோராகவேண்டும்.

"அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்த றலை"

சினமானது மனதிற்குள்ளே உண்டாகிற ஓர் வகையான ஜ்வரமாம். ஜ்வரம் நீங்கியபின்பு துர்ப்பலமுண்டாவது போலவே, சினங்கொண்டவர்களுக்கும், அது நீங்கினபின்பு தேகத்தில் பலக்குறைவுண்டாகும். இந்திரியங்களை எல்லாம் ஒருங்கே யடக்கியாள்வது சிலருக்கு அதிகவருத்தமாதலால், அவர்கள் அவற்றை ஒருவாறு பொருந்தும்படி செய்யமுயல்வது நன்று.

"உணர்ச்சி யச்சாக உலாவண்டி லாகப்
புணர்ச்சிப் புலனைந்தும் பூட்டி—உணர்ந்ததனை
ஊர்கின்ற பாக னுணர்வுடைய னாகுமேல்
போகின்ற தாகும் பிறப்பு"

பிழைபடக் கூறும்படி வழக்கப்படலாகாது. நமது நாவினின்றும் வார்த்தைகள் வெளிப்படுமுன்னமே அவற்றை ஆராய்ந்து



பார்த்தறிந்து சொல்லவேண்டும். முன்னதாகவே யோசித்துப் பாராவிடில் பின்பு வார்த்தைகள் நமது நாவினின்றும் பதறி வெளிப்படாதிரா.

"காவா தொருவன்தன் வாய்திறந்து சொல்லுஞ்சொல்
ஓவாதே தன்னைச் சுடுதலால்—ஓவாதே
ஆய்ந்தமைந்த கேள்வி அறிவுடையார் எஞ்ஞான்றும்
காய்ந் தமைந்த சொல்லார் கறுத்து"

நமது சினம் செல்லுமிடமுமுண்டு, செல்லாத இடமுமுண்டு. நம்மினும் மேலானோரைச் சினந்துகொள்ளுதல் புத்தியீனம். கீழானோரிடத்தில் செலுத்துதல் இழிவாகும்.

"செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கின் என்? காவாக்கால் என்?"

அறிவினும் இந்திரியங்களே முற்பிறந்தவை. நாம் பிறக்கும்போதே இந்திரியங்கள் கூடப் பிறக்கின்றன. நாம் அறிவுடையாராதற்குப் பிறந்து சிறிதுகாலம் செல்கிறது. இந்திரியங்களை அவற்றின் போக்கின்படி விடாமல், அடக்கிக் கொள்ள வேண்டும். ஒரு கோட்டையைப் பிடித்துக் கொள்வதிலும் கரணங்களையெல்லாம் நமது வசமாக்கிக் கொள்ளுதலே சிறந்தது. பிரமாணம் செய்து நாவைக் கெடுத்துக் கொள்ளாமலும், பகவானுடைய நாமத்தை வீணில் வழங்காமலும் இருத்தல் வேண்டும். ஹேல் என்னும் நியாயாதிபதி, "ஆசையற்றவனே தனிகன்." "தன்னைத் தானடக்கப் பெற்றவனே பெரியோன்." மரணத்தை ஆனந்தத்தோடு எதிர்பார்ப்பவனே சந்தோஷமுள்ளவன். மற்றவைகளைப் பற்றியோ வெளியில் நான் கவலைப்படமாட்டேன். மேற்சொன்ன மூன்றுனுள் முற்கூறிய இரண்டைப் பற்றிக்கூட நான் அதிகக் கவலைப்படேன். மூன்றாவதைப் பற்றி எவ்வளவு கவலை வைத்திருந்தாலும் தகும். என்று சொல்லுகிறார். கோபம்வரும் போதே அதை வேரோடு களைந்து விடவேண்டும். ஆரம்பத்தில் அப்படிச் செய்யாவிட்டால், அது வேர்கொண்டு விருத்தியாகி ஆதியில் "நகத்தாற்கிள்ளி எறிவதைப் பின்பு கோடாரி கொண்டு வெட்டுவது போலாகும்." எவ்விடத்தில் அறிவும் நீதியும் ஆள்கின்றனவோ அங்கே அமைதியும், ஸமாதானமும், பல்கிப் பெருகும். அடக்கமுடையவர்களிடத்தில் ஆனந்தங் குடிகொளும்.

மிதமான செல்வமும் பெருந்தன்மையு மிருந்தால் அவ்விடத்தில் அச்சமாவது பொறாமையாவது கொஞ்சமேனுமிரா. இப்படி வாழ்ந்திருத்தலே இன்புற்று வாழ்ந்திருத்தல் என்று சொல்லப்படும். பொல்லாங் கிழைத்ததற்காக அதிகாரத்தை வகிக்க வேண்டுமென்று விரும்புகிறவர்கள் சிலரே.

ஒன்றைப்பற்றி வாதிக்கும்போது அகங்காரத்தோடும், ஆத்திரத்தோடும் பேசலாகாது. ஏனெனில், உண்மை பகைவருடைய எதிர்வாதத்தினாலும், தன்னை வாதிப்பவர்களின் சினத்தீயினால் அதிகமாய் வருந்தும். ஆத்திரப் படாமல் அமர்ந்து பேசினால் மட்டுமே உண்மை அறிவிற்குப் புலப்படும். நாம் அந்தக் கரணங்களை யெல்லாம் நமது வசமாக்கிக் கொண்டால் மட்டுமே நமக்கு மனநிலையுண்டேயன்றி அவற்றிற்கு ஆட்படுவதாலன்று. செல்வம், பலம், இவற்றால் மனநிலையுண்டாகாது. அடக்கமான மனச்சாக்ஷியும் கபடமற்றதும் உருக்கமுடையதுமான மனமோவென்றால், மனதைநிலைபெறச் செய்யும். மூத்தோர் வார்த்தையைக் கேளாமல் எந்தக்கருமத்திலும் நாம் பிரவர்த்திப்பது கூடாது. இளமைப் பருவமானது எக்கருமத்தையும், எளிதில் முடிப்பதற்கேற்ற தென்றாலும், யோசனை கேட்பதில் மூத்தோர்சொல்வார்த்தையே அமிர்தமாகும். பாராட்டப்படாத இறுமாப்பு மறைந்துபோம். அதைப் பாராட்டுகிறவன் உறுதியற்றவனாகவாவது அல்லது குற்றமுள்ளவனாகவாவது ஆகவேண்டும்.

நம்மிடத்தில் இவ்வுலக இன்ப இச்சை குடிகொண்டிருந்தால் அது காரணமாகத் தெய்வபத்தி குன்றிப்போம். ஆதலால், நாம் இவ்வுலக இன்பத்தைத் துறந்து பகவானுடைய கிருபைக்கும், பாத்திரராகும்படி பார்க்கவேண்டும். இவ்வின்பம் என்றைக்கும் அழிவற்றது. ஈச்வரகடாக்ஷமிருந்தால் அது ஏழுவகையான விஷநோய்க்கு மருந்தாகும். புல்லறிவைப்போக்கி ஞானத்தைத்தரும். சோம்பலைக்கொன்று பகுத்தறிவை நுட்பமாக்கும். மறதியைப் போக்கி ஞாபகசக்தியை நிலை நிறுத்தும். அச்சத்தை அகற்றி ஆண்மையைத் தரும். மடங்கொன்று அறிவகற்றும். தெய்வநிந்தையைப் போக்கிப் பக்தியைத்தரும். வீண் பெருமையை ஒழித்து விவேகஞ்செறிந்த வினயந்தரும்.

பிறர் செய்யும் நிந்தனைக்காகக் கிலேசப்படலாகாது. யாரென்ன நிந்தித்தாலும் மௌனமாய்ப் பொறுத்திருத்தலே நன்று.



"மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தந்
தகுதியான் வென்று விடல்"

தெய்வசங்கல்பத்துக்கு மாறாக ஒன்றும் நடவாது. நம்மைப்படைத்த கடவுள் நமக்குச் செய்யவேண்டியவையெல்லாம் அறிந்திருக்கிறார். ஒவ்வொருவருடைய நிலைமையையும் நன்றாய்ச் சீர்தூக்கிப் பார்த்தால் ஒருவரைப்போலவே எல்லோருடைய நிலைமைகளும் நல்லதாகவே இருக்கும். நாம் பிறருடைய செய்கைகளைப்பற்றி விசாரியாமலே நாம் செய்யவேண்டியவற்றைச் செய்யவேண்டும். நற்குணங்கள் பலவற்றுள்ளும், 'நாவடக்கம்' மேலானது. நாம் நாவடக்கமுள்ளவர்களாகவிருந்தால் நமது குற்றம் வெளிப்படாமல் மற்றவர்களுடைய குற்றங்களை அறிவது எளிதாகும். நாம் பெரியோருடைய அநுஷ்டானத்தை அநுஷ்டிக்கையில் குற்றமுள்ளவற்றை நீக்கிக் குணமானவைகளை மட்டுமே கொள்ளவேண்டும். யாரும் சினத்தைப் பொருளென்று கொள்ளலாகாது.

"சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று."

ப்ரோடா என்னும் வித்வான் கோபமுள்ளவர்கள் தலைகீழாய் நிற்பவர்களைப்போல இருக்கிறார்களென்றும், அவர்களுக்குத் தங்களைப் போலவே எல்லாம் விபரீதமாய்த் தலைகீழாகக் காணப்படுமென்றும் சொல்லியிருக்கிறார். தலை கீழும் கால் மேலுமாய் நிற்பவர்களுக்குத் தலைகீழாய்த் தோற்றும் வண்ணமே, கோபமுள்ளவர்களுக்கும் எல்லாம் மாறாகவே தோற்றும். கோபம் சிலகாலங்களில் மட்டும் நம்மண்டை வருகிறதுண்டு. ஆனால், அடிக்கடி நாமே அதை வலிய வரவழைத்துக் கொள்ளுகிறோம்.

"அறிவதறிந்தடங்கி அஞ்சுவதஞ்சி
உறுவ துலகு வப்பச்செய்து—பெறுவதினால்
இன்புற்றுவாழும் இயல்புடையார் எஞ்ஞான்றும்
துன்புற்று வாழ்தல் அரிது."

---

குறிப்பு:—நமது மித்திரனின் சந்தாப் பணத்தை மணியார்டரில் அனுப்பும்படி சந்தாதாரரைக் கேட்டுக் கொள்கிறோம், வீ பியில் அனுப்புவதனால் வீண்செலவு நேரும் என்பதைக் கவனிக்கவும்.

# சுகாதாரம்.

திரு. சு. ஆண்டியப்பா.

உலகத்திலுள்ள எந்த மனிதனை வேண்டுமானாலும் அழைத்து உனக்கு எது வேண்டும், எது வேண்டாமென்று கேட்டால் உடனே அவன் எனக்கு இன்பம்வேண்டும் துன்பம்வேண்டாமென்றே சொல்லப்பார்க்கலாம். ஆகையால் ஒவ்வொருவரும் இன்பம் அடைதற்காகவே பிறந்திருக்கிறோம் என்பது மறுக்க முடியாத உண்மையல்லவா?

"சுவரிருந்தால் சித்திரம் வரையமுடியும்" என்பது பழமொழி. அதுபோல உடம்பு இருந்தாலொழிய இன்பமடைய முடியாது. ஆகவே இன்பமடைய வேண்டுமானால் இன்பமடைவதற்கு ஏதுவாயிருக்கும் உடம்பைவளர்க்கப்பாடுபடவேண்டும். உடம்பைவளர்க்கப் பயிற்சி செய்யவேண்டும்.

ஆனால் நம்மில் பெரும்பான்மையோர் மனிதவுயிர் வாழ்விற்கு இன்றியமையாத சாதனம் ஆகாரமென்றே சொல்வார்கள். ஆனால் ஆகாரமில்லாமல் சிலர் சில நாட்கள் வரையிலும் உயிரோடிருப்பதை யாவரும் அறிவார்கள். அயர்லாந்து தேசத்தில் மாக்ஸ்வினி என்ற ஓர் தேசாபிமான தீர புருஷர் சுதந்திர மில்லாமல் உயிர் வாழமனமொவ்வாதவராய் 83 நாள் ஆகாரம் உட்கொள்ளமறுத்து 84 வது நாளில் விண்ணுலகடைந்தா ரென்பது பத்திரிகை வாசிக்கும் அனேகர் அறிவார்கள். தவிரவும் தேகத்தில் மாமிச பலமில்லாத நம் அவதாரபுருஷோத்தமாகிய மகாத்துமாகாந்தியடிகள் ஹிந்து முஸ்லீம் சச்சரவுக்காக மனம் வருந்தி 21 நாளுண்ணாவிரதம் இருந்து நிறைவேற்றியதை அறியாதார்யாருளர்? இங்ஙனமிருக்க நமது உயிர் வாழ்விற்கு ஆகாரத்தைவிட இன்றியமையாத வேறுசாதனமும் இருக்கிறதென்றும் உறுதியாகக் கூறலாம். அஃது எதுவெனில் அதுவே சுத்தவாயு எனப்படும். மீன்களுக்குத் தண்ணீர் எவ்வளவு அவசியமோ அதேபோல் மனிதர்களுக்குக் காற்று மூலாதாரமாயுள்ளதென்பதை மறுக்க எவராலும் இயலாது நீரிலிருந்து கரையிலெடுக்கப்பட்ட மீன்கள் எங்ஙனம் உயிர்வாழ முடியவில்லையோ அதேபோன்று நாமும் தண்ணீரில் முங்கிவிட நேர்ந்தால் இறந்துவிடுகிறோம். காரணம் நாம் உட்கொள்ளுகிற பிராணவாயு தண்ணீரினுள் கிடையாமையினாலேயே காற்றில்லாமல் ஒரு நிமிடமேனும் மனிதர்கள் உயிர்வாழ முடியாதென்பதறிந்தே எல்லாம் வல்ல இறைவன் வலியவர் எளியவரென்ற வித்தியாசமில்லாமல் யாவர்க்கும் எளிதில் கிடைக்குமாறமைத்தார்போலும்.

ஆகவே மனித ஜீவிதத்திற்கு இன்றியமையாத சுத்த வாயு விஷயத்தில் இந்தியர்களாகிய யாதவமக்களாகிய நாம் எவ்வளவு சிரத்தையுடையவர்களென்பதை நினைத்தால் மிகப் பரிதாபம். சுகாதாரவிஷயத்தில் நாம் ஐரோப்பியர்களிடம் கற்றுக்கொள்ள வேண்டிய அரியவிஷயங்கள் எவ்வளவோ இருக்க அதை நாம் கவனியாமல்நமதுசீதோஷ்ணஸ்திதிக்குச்சற்றும் பொருந்தாத வீண் ஆடம்பரமான உடைகள், காப்பி, டீ, பீடி, ஸிகரட், சுருட்டு முதலிய விஷவஸ்துக்களை உட்கொள்ளவுமே படித்து, கடைசியில் அதுவே நாகரிகம் எனவும் நினைத்துப் பொருள் நஷ்டத்தோடு போகாமல் உயிர் நஷ்டத்திற்கும் ஆளாகி விடுகிறோம். தவிரவும் நம்மை நாகரிகமுள்ளவர்களென்று நினைக்கும் அறிவில்லாத நமது பந்துமித்திரர்களையும்கூடக் கெடச் செய்து விடுகிறோம்.

நம் நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரபுக்களின் வீடுகளை நாம் நோக்குவோமாயின் நோய்களே குடிகொண்டிருக்கும். நம்மில் அனேகசெல்வர்களும் அறிவாளிகளும்கூடச் சுத்தக் காற்றில்லாதவிடங்களில் வீடுகட்டவும், இருக்குமிடங்களைச் சாக்கடை முதலியவைகளால் அசுத்தப்படுத்தவும் பின் வாங்குவதில்லை. ஆகவே பெரும்பாலரான நமது இந்தியர்கள் பலவித நோய்களுக்கிரையாகி அற்பவயதிலேயே மரணமடைகிறார்கள். காரணம் சுகாதாரவிஷயத்தில் நமக்கு அறிவில்லாமையும் கவனமில்லாமையுமே. நம்முடைய சுகாதாரக்குறைவால் சாதாரணமாய் வருகிற சிரங்கு, வயிற்றுவலி, முதலிய நோய்களையும் கூடக் கடவுள் செயலென்றும் விதியென்றும் சொல்லிக்கொள்கிறோம். அவ்விதமிருக்க நமது அகாலமரணத்தை என்னென்று சொல்வது.!

ஜர்மனி, அமெரிக்கா, பிரான்ஸ் இங்கிலாந்து முதலிய தேசங்களிலுள்ளவர்கள் திடகாத்திரர்களாய், எண்பது தொண்ணூறு வயது வரையில் நோயற்ற வாழ்வு வாழ்கின்றார்களே நாம் சொல்லுகிற விதி அல்லது கடவுள் செயல் அவர்களுக் கில்லையா? நாம் எடுத்த காரியங்களுக் கெல்லாம் விதி என்று, நாம் கெடுதற் கொரு காரணமுமாய் விடுகிறோம். தடுக்க முடியாத சம்பவங்களைக் கடவுள் செயலென்று சொல்லலாமேயன்றிக் கண்வலியைக்கூட விதியென்று சொல்வது எவ்வளவு மதியீனம். கருணை நிதியான கடவுள் ஐரோப்பியர்கள் சுகஜீவியராய் நூறுவயதாகவும் வாழ வேண்டுமென்றும், இந்தியர்கள் நோய்வாய்ப்பட்டு அற்பவயதிலேயே இறந்து விட வேண்டுமென்றுமா இவ்வுலகத்திலுள்ள ஆன்மகோடிகளைச் சிருஷ்டித்தருளினர்? அப்படியானால் அவர் மகாவஞ்சகராய்த் தானிருக்க வேண்டும். ஓ எங்கும் நிறைந்து விளங்கும் கடவுள் அப்படி அன்று! அன்று!!

நமது யாதவமக்கள் வாழும் சில இடங்களில் சுகாதாரவிஷயத்தைச் சிறிதுகூட எண்ணுவதில்லை. அவரது வீட்டில் சமைக்கும் இடமும், படுக்கும் இடமும், மாடுகட்டும் இடமும் அருகிலேயே இருக்கும்: "மாட்டுக் கொட்டாய் வீட்டிற் கட்டேல்" என்றபடி மாட்டை நமது வீட்டிற்குள் கட்டுவதினால் பலவித அசுத்தக் காற்றுகள் அதினின்றும் உண்டாகி அதையே நாம் உட்கொண்டு நோயை அடைகிறோம். நாம் இருக்கும் இடத்திற்கும் மாடு கட்டும் இடத்திற்கும் வெகுதூரம் இருக்கவேண்டும். சுகாதாரத்தை எவ்வளவுக்கெவ்வளவு கவனித்து நடக்கிறோமோ அதற்குத் தகுந்தவாறு சுகத்தையும் உடம்பு பலத்தையும் அடையலாம்.

நாம் சாப்பிடும் நீரையும் நன்றாகக் காய்ச்சிப்பின் உண்ணவேண்டும். "காய்ச்சியாறின நீர் கரும்பினுமினிது" காய்ச்சாது உண்போமானால் அதிலுள்ள சில பூச்சிகள் நமது உடம்பில் சென்று காலரா முதலிய வியாதிகளை உண்டாக்கும். நாம் விற்கும் பால், மோர்இவைகளைச் சுத்தமானபாத்திரத்தில் கறந்து விற்கவேண்டும், கூடியவரையில் பாலில் ஒரு சொட்டாவது தண்ணீர் விடாமல் கொடுக்கவேண்டும். நம் மூத்தோர்களில் சிலர் தண்ணீர் விடாமல் கொடுத்தால் பாவமென்றும், மாட்டில் பால் குறைந்துவிடுமென்றும் சொல்லுகிறார்கள், அது முற்றிலும் தவறென்றே யான் எண்ணுகிறேன். தண்ணீர் விட்டு விற்கும் சிமாட்டிகளிற் சிலர் சுத்தமான தண்ணீரைக்கூட விடாமல் குளங்களினின்றும் கேணியினின்றும் எடுத்து வந்து அப்படியே



ஊற்றி விடுகிறார்கள். இதை அருந்தி நோயுற்றவர் எத்தனை பேர் அவர்கள் விற்பதற்காகக் கொண்டுவரும் மோர்ப்பானைகளைப் பார்த்தால் அடுக்கடுக்காக ஊத்தைகள் ஊறியிருப்பதைப் பார்க்கலாம், இது சுகாதாரத்திற்கு முற்றிலும் விரோதமாகும்.

நம்மவரில் சிலர் உண்ணு முறைகளைப் பார்த்தால் மிகப் பரிதாபம். வேளாவேளைகளில் சாப்பிடாமல் சமயம் கிடைத்த பொழுது சாப்பிடுகிறதும் அதுவும் அவசரமாகவும், சுத்தமாக இல்லாமல் கையில் கிடைத்ததை வயிற்றில் போட்டு நிரப்புகிறார்கள். அது மிகவும் தவறு. மேலும் நோய்க்குக் காரணமாகவும் முடிகிறது.

நாம் உண்ணும் உணவுகளை அடியிற்கண்டவற்றை அனுசரித்து நடந்தால் நோயின்றி வாழலாம்.

"நன்றாய் மென்று தின்றாலே நன்று,
அவசரத்துண்ணல் ஆரோக்கியமன்று
பசித்தாலன்றிப் புசித்தல் கூடா.
தினமும் இருமுறை உணவேசாலும்.
இலைக்கறி தயிரை இரவிலுண்ணேல்.
மரக்கறி உணவே மக்கட்கு ஏற்றது."

பெரியோர்களே! நீங்கள் சுகாதாரத்தில் அளவுகடந்த அக்கரை காட்டுங்கள். வீடும், பொருளும், உணவும் சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள். உங்களது பிள்ளைகளுக்கும் பாழாய்ப்போன காப்பிக் குடியைச் சிறுவயதிலேயே கொடுத்து உடல் வளத்தைக் கெடுத்து விடாதீர்கள்- பிள்ளைகளுக்கு முன்னோர்கள் சிறுவயதில் கொடுத்து வந்த மருந்துகளையே கொடுங்கள். நாகரிகமென நினைத்துக் கிளாஸ்கோ பெட்டிப்பால் போன்றவற்றை வாங்கிக் கொடுத்துக் கெடுத்து விடாதீர்கள்.

பெண்களுக்கும் காப்பியைக் கொடுத்துக் குழந்தைகளுக்குக் கொடுக்கப் பாலில்லாமல் வருந்துவதைக் கண்டாவது நிறுத்துங்கள்.

"தேநீர் காப்பியைத் தீண்டலும் வேண்டா
கொக் கோத்தாளும் கூடாப் பொருளே"

சிவக்கக் காய்ச்சிய பாலே சிறந்தது என்றபடி காப்பிக்குப் பதிலாகப் பாலைமட்டும் ஊட்டுங்கள். மேற் கூறிய வற்றை அனுசரித்து நடந்து வருவோமானால் பூரண ஆயுளைப்பெற்று இன்பமுடையவர்களாக வாழலாமென்பது திண்ணம்.

# மனிதர் வாழ்க்கை.

## தொண்டரடிப்பொடி யாழ்வார்.

(11ம்-பக்கத் தொடர்ச்சி)

கு. மணிவண்ணன்.

திருவரங்கப் பெருமாளரையர் அருளிச்செய்த தனியனில் தொண்டரடிப் பொடியாழ்வார் பெருமை முழுவதும் அடங்கியிருக்கிறது. மனமே; உனக்கு ஒன்றும் சிந்தனை வேண்டுவதில்லை. திருமாலைப்பாடும் தொண்டரடிப் பொடியாழ்வாரையே எப்பொழுதும் பேசிக்கொண்டிரு என்றதனால் ஆழ்வார் பெருமை எம்பெருமாள் பெருமைக்கு ஒப்பாயிருக்கிறதென அறியலாம்.

"மற்றொன்றும் வேண்டாமனமே! மதிளரங்கர்
கற்றினம் மேய்த்த கழலிணைக் கீழ்—உற்ற
திருமாலைப்பாடும்சீர்த் தொண்ட ரடிப்பொடியெம்
பெருமானை எப்பொழுதும் பேசு"

என்பது தனியன். இவ்வுலக வாழ்க்கை எவ்வித இக்கட்டுகள் நிறைந்துள்ளன வென்பதை நன்றாய் அனுபவித்தறிந்தவராதலினால் அதைத் தெளிவாக நமக்கெல்லோருக்கும் விளங்க உரைத்து, அவ்வகையான இடர்கள் நீங்க என்ன உபாயம் என்றும், அவ்வுபாயத்தின் பெருமையையும் நன்றாக எடுத்துரைத்ததனால் ஆழ்வார் பெருமையை எப்பொழுதும் பேசு என்றார். அப்படிப் பேசுவோமானால் நாம் கெட்டவழிகளில் திரும்பாமல் நல்லவழியிலேயே போக நேரிடும். மற்றும் இவ்வாழ்வார் தொண்டர்களிடத்துள்ள கைங்கரியத்தை மேற்கொண்டார். 'கைங்கரியம் தர்மத்திலே புகும்' என்றபடி கைங்கரியம் ஒரு மனிதனுக்குச் சித்திக்குமானால் அதுவே அவனுக்கு மோக்ஷ சாம்பிராச்சியமாகும் என்பதில் ஐயமில்லை. ஆழ்வார் தொண்டாவது எம்பெருமானுக்குப் புஷ்ப மாலையைச் சமர்ப்பிப்பது தான். பெரியாழ்வார், ஆண்டாள் முதலியோரும் இக்கைங்கரியத்தையே மேற்கொண்டிருந்தனர். இம்



டுமன்று. இதற்கு மேலானதாகிய பாக்களினாலாகிய திருமாலையையும் எம்பெருமானுக்குச் சமர்ப்பித்தார். எவ்வாறு? 'திருப்பள்ளி' யெழுச்சி என்ற பத்து அழகிய பொருள் நிறைந்த பாக்களினால் எம்பெருமானைத் துயிலினின்றுஎழுப்பிச் சமர்ப்பித்தாராம். அதனால் நாம் முதல் முதல் செய்யவேண்டுவது என்னவெனில் எம்பெருமானுக்குப் பல்லாண்டு சமர்ப்பிப்பதேயாகும். அவன் பல்லாண்டு பல்லாண்டா யெழுந்தருளியிருந்தால் நமக்கு ஒரு சிறிதளவும் துன்பம் அணுகாது. "முட்ட மூட்டப் பஞ்சமேயானாலும் பாரம் அவனுக்கு அன்றோ-நெஞ்சமே அஞ்சாதே நீ." என்றார் பெரியாரும்.

தொண்டரடிப்பொடியாழ்வார் என்பது காரணப் பெயராகும். அவரது முதற்பெயர் விப்ரநாராயணன் என்பது. அவர் செழுமை மிகவும் உள்ள சோழநாட்டின்கண் புள்ளம் பூதலகுடி என்ற திவ்யதேசத்துக்கருகிலுள்ள திருமண்டங்குடி என்னும் பதியில் பிறந்தவர். தனுர்மாசத்தில் கேட்டை நக்ஷத்திரத்தில் வநமாலையின் அம்சமாய் ஒரு பிராமணரது குமாரராய் அவதரித்தார். சிறுவயதிலேயே கல்வித்துறையில் ஆழ்ந்து பலவித சாஸ்திரங்களிலும் தேர்ச்சியடைந்தார். பிறகு சேனை முதலியாரால் பஞ்சசமஸ்காரங்கள் அருளப் பெற்றுப் பக்தியில் ஈடுபட்டார். தக்கவயது வந்ததும் தாய் தந்தையர் பிள்ளைக்குக் கலியாணம் செய்து மகிழவேண்டுமென்ற விருப்பம் அதிகரிக்க, விப்ரநாராயணரைப் பார்த்து இல்லற தருமத்தைப் பற்றியும், அதன் நோக்கங்கள், அனுபவங்கள், தருமங்களைப்பற்றியும் தெளிவாக எடுத்துக் கூறினார்கள்.

"துறந்தார்க்கும், துவ்வா தவர்க்கும்,
இறந்தார்க்கும், இல்வாழ்வான் என்பான் துணை"

என்றபடி துறந்த சந்நியாசிகளுக்கும் பிரமச்சாரிகளுக்கும், பிதிர்க்களுக்கும் இல்வாழ்வானே துணையாயிருக்கிறான். அம்மூவர்களையும் காப்பாற்றும் பாரம் அவனையே சார்ந்தது. அப்பாரபத்தின்று நீந்துவது அரிது-சிந்திப்பதும் பெருமை எனப்பலவாறு உரைத்தனர். ஆனால் விப்ரநாராயணருடைய மனது

"இருள் இரியச்சுடர்மணிகள் இமைக்கும் நெற்றி
இனத்துத்தி அணிபணம் ஆயிரங்கள் ஆர்ந்த
அரவரசப் பெருஞ்சோதி அனந்தன் என்னும்
அணிவிளக்கும் உயர் வெள்ளை அணையைமேவி
திருவரங்கப் பெரு நகருள் தெண்ணீர்ப் பொன்னித்
திரைக்கையால் அடிவருடப் பள்ளிகொள்ளும்" (தொடரும்.)

# காமாக்ஷிபாய்,

அல்லது

# காதலர் வெற்றி.

(முன் 32-ம் பக்கத் தொடர்ச்சி.)

திரு. ரா. கோவிந்தராஜன்.

கோபிநாதன் என்னும் அருமை வாய்ந்த ஆத்மாபாயின் குமாரன். அவன் பெயருக்கேற்றவாறு ரூபலாவண்யத்தில் மன்மதனையும், குணத்தில் தர்மராஜனையும் ஒத்து அதிக மேம்பட்டவனாக இருந்தான். சரியான தேகக்கட்டுடையவன். அதிகமாகப் பருத்தும், அதிகமாக மெலிந்துமிராமல் நடுத்தரமான அவனது தேகம் சிவந்த பொன் போன்ற நிறத்தையும் இருபது அல்லது ஒன்றிரண்டு ஏறக்குறைய வயதையுமுடைத்தது. சுமார் ஐந்தரை அல்லது ஆறு அடி உயரமுள்ளவன். அவனது கெம்பீரத்தோற்றம் பார்ப்பவர்களைப் பரவசப்படுத்திப் பிரமிக்கச் செய்யும். பூரணச்சந்திரன் உதயமானால் நிர்மலமான வானத்திடை எப்படி பளிச் சென்று வெளிச்சத்தை இன்பவாரியாக அளிப்பானோ அதுபோல அவனது முகம் அளவு மீறிய பிரகாசம் பொருந்தியதாயிருந்தது. அவனைக் காணுவோர் யாவரும் வசீகரிக்கும் தன்மையாயிருந்த அவனது முகத்தைப் பன்முறை உற்று நோக்காமலிரார். அதிகம் வர்ணிப்பானேன்? தேவலோகத்தில் வசிக்கும் கந்தர்வர்களை யொத்த கோபிநாதனைக் காணும் ஒவ்வொரு மங்கையும்! பருவகாலப் பெண்மணிகளும் அவன் மீது அளவு மீறிய காதல் கொண்டு மன்மதாவஸ்தைப் படுவார்களென்பதில் சந்தேகமில்லை. அளவிடா அழகை யுடைய அம்மன்மதரூபன் அச்சமயம் தன் தாயின் துயரத்தில் ஈடுபட்டவனாய்த் துக்கசாகரத்திலாழ்ந்து, வாடி வதங்கியிருந்தான். அவனுடையதாய் கௌரியினிடத்து அலறிய போது எல்லாவற்றையும் மறைவிடமிருந்து பார்த்த கோபிநாதனின் மெய், மனம் யாவும், குன்றியது. ஆத்மாபாய் தற்கொலையென்று சொல்லியபோதெல்லாம், அவனுடைய உடல் கிடு கிடுவென்று நடுநடுங்கிக் கொண்



டிருந்தது. அவள் சபதம் செய்து ஓய்ந்தபோதே அவன் தன்னையுமறியாமல், அவனது மனதும் தேகமும் பதை பதைக்க, "அம்மா" "வென்றலறினன். அவன் அலறியது போலவே அவனது தேகமும் கட்டிலடங்காமல் துடித்துக் கொண்டிருந்தது. தன் அருமந்த குமாரன் அவ்விதம் அலறிவந்ததைக் கண்ட ஆத்மாபாய் எவ்விதம் தாய்க் கோழியானது கழுகுகளையும் கருடன்களையும் கண்டமாத்திரத்தில் தன் குஞ்சுகளை அவைகள் அடித்துக் கொண்டு போகாவண்ணம்; தன் குஞ்சுகளைக் காக்கும் பொருட்டுத் தன் சிறகுகளினால் அணைத்துக் கொள்ளுகிறதோ அதுபோல ஆத்மாபாய் தன் குமாரனைச் சிறுகுழந்தையைப்போல் அணைத்துக் கொண்டாள். தாயும் சேயும் இவ்விதம் அலறி ஒருவருக்கொருவர் அணைத்துக்கொண்டதைக்கண்ட சீனிவாசன் அப்படியே பிரமித்துப்போய் அசைவற்று நின்றுகொண்டிருந்தான். ஆத்மாபாய் தான் இது வரையில் கௌரியினிடம் வாய்விட்டலறிக் கொண்டிருந்த தனைத்தையும் தன் மைந்தன் மறைவிடமிருந்து அறிந்துவிட்டானோவெனக் கவலைப்பட்டாள். இதுவரையில் தன் மைந்தனுக்கு எவ்வித சங்கதிகளையும் சொல்லி அவனைக் கஷ்டத்திற் குள்ளாக்காமலிருந்த ஆத்மாபாய் தன் மகன் எப்பொழுதும்போல் சந்தோஷமாகக் காலங்கழிப்பது வீணாகப் போயிற்றோவென வியாகுலப்பட்டாள். பிறகு தன் மனதைத் தானே ஒருவாறு தேற்றிக்கொண்டு, தன் குமாரனை நோக்கி, "ஆ குழந்தாய் கோபிநாதா! ஐயோ கண்மணி, என்ன சமாசாரம்? இவ்வளவு நேரம் நீ எங்கிருந்தாய்? நீ சீனிவாசனுடன் வெளியில் உலாவப்போனாயென்றல்லவா எண்ணியிருந்தேன். என்ன குழந்தாய்! ஏன் உன் உடல் இப்படித் துடிக்கிறது? ஏதேனும் ஆபத்துநேரிட்டதா? இதென்ன உன் கையில் கடிதம்? என்ன கோபி! ஒன்றுங் கூறாமல் விசனப்படுகிறாய்? உன் கண்களில் கண்ணீர்காண, கண்மணி, என் மனம் சகிக்கவில்லை, என்ன சங்கதி சொல் கண்மணி?" என்று நடுங்கிய குரலுடன் கேட்டாள். அதற்குக் கோபிநாதன், தன் படபடத்த நெஞ்சத்துடன், தன் தாயாரைநோக்கி, "அம்மணி, ஆபத்து,-வேறு யாருக்கு மில்லை யம்மணி. கடவுள் சித்தம் நமக்கேதான், அவ்வித ஆபத்து நேரிட்டிருக்கின்றது" என்று மிக்க துயரத்துடன் கண்ணீர் விட்டுக் கலக்கமுற்றுக் கூறினன்.

(தொடரும்)

# வள்ளல் பாரி.

## கலாசாலை மாணவர்களின் களியாட்டு.

(15-ம்பக்கம் தொடர்ச்சி.)

திரு. காந்திதாசன்.

கொடையாற் சிறந்து, கற்பகத்தருவை யொத்துவிளங்குங் கோமானாகிய, "பாரி வேந்தன்" மாதம் ஒருமுறை கல்லூரிகட்குச் சென்று, மாணவர் மாணவிகளின் கல்வித் திறமையையும், உபாத்தியாயர்கள் போதிப்பதையும், உசாவிக் கேட்டுவருவான். கலாசாலை மாணவ மாணவிகள், அரசன் வருகையையே எதிர்நோக்கி இருப்பார்கள். ஒவ்வொரு வகுப்பையும் தனித்தனியே பார்வையிட்டு, மாணவர் மாணவிகளின் கல்வியைப்பற்றிச் சம்பாஷிப்பான். சில கவிகளைச் சொல்லச்சொல்லி பதவுரை கருத்துரை விருத்தியுரை செய்யச் சொல்வான். தானே சில கவிகளைச்சொல்லி அதற்கு உரைகேட்பான். சித்திரக்கவி வரையச் சொல்வான். முதலடியும், கடையடியுங் கொடுத்து, கவிபாடி முடிக்கச் செய்வான். சந்த விருத்தங்கள் பாடச் சொல்லிச் சந்தோஷமடைவான். ஆரம்பக் கலாசாலை மாணவ மாணவிகள், அரசன் வருகையையே எதிர்நோக்கி இருப்பார்கள். மற்ற கலாசாலையிலுள்ளவர்களும் அதிக ஆவலாகவே இருப்பார்கள். ஒவ்வொரு வகுப்பிலும் உள்ள குழந்தைகட்குத் தின்பண்டங்கள், பொருள்கள் வழங்குவான். மறுமுறை வரும்பொழுது இதிலும் நன்றாகக் கற்றிருக்கவேண்டும் என இன்மொழி கூறி வருவான். கல்லூரி மாணவர் மாணவிகளோ, நமது அரசர், இன்றுதான் வந்தார், மறுமுறைவர நீண்டநாள் செல்லுமோ என்று நாளை எண்ணி எண்ணி ஏக்கமுறுவார்கள். நாள் சமீபித்தவுடன் நாளை வருவார், இன்று வருவார், என்று அவர்கள் அடையும் ஆனந்தம் அளவிடற்கரியதாகும். நமது அரசர் வருவார், நம்முடன் சம்பாஷிப்பார், தின்பண்டம் தருவார், வெகுமதியளிப்பார், நன்கொடை ஈவார், பரிசு வழங்குவார், புதுக்கவி புனையச் சொல்வார், புதிய வியாக்யானம் செய்வார், என மாணவர்கள், ஒருவரோடொருவர் காதலத்துடன் உரையாடிக் களிப்பது மிகு வேடிக்கையாக விருக்கும். ஒவ்வொரு வருடமும் பங்குனிமீ பத்



தாந் தேதிக்குள் மாணவர்களின் பரிக்ஷை முடிந்துவிடும். கடைசி நாளில் பரிக்ஷை தேறிய விபரப் பட்டியல் வெளிவரும். அன்று தினத்தையே மிகவும் முக்கியதினமாக மாணவ மாணவிகள் நோக்கி நிற்பார்கள். ஒரு வகுப்பிலுள்ள மாணவர்கள் பரிக்ஷைக்காலம் முடிந்ததும், மறுவகுப்புக்கு மாற்றப்படுவார்களே யன்றி, முன்னிருந்த வகுப்பிலேயே இரார்கள். ஏனெனில் ஒவ்வொருவரும் பரிக்ஷைதேறாமலிரார்கள். அதனாலேயே அவர்கள் அந்தந்த வருஷ முடிவில் மறு வகுப்புக்கு மாற்றப்படுவார்கள்.

ஏதனால் இவ்விதம் தேர்ச்சியடைந்து மேல்வகுப்பு வருகிறார்க ளென்றால், பகலில் கலாசாலைப் படிப்புடனில்லாது, இரவு நேரங்களிலும் பாடங்கற்பிக்கத் தனித்தனியே அறுவர்க்கொருவராக ஆண்பிள்ளைகட்கும், பெண்பிள்ளைகட்கும், பாடங்கற்பிக்க உபாத்தியாயர்கள் நியமிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு பிள்ளைகளும், தினந்தோறும் விடிய ஒரு சாமத்திற்கு முன்னெழுந்து, தம்பாடங்களை முதலிலிருந்து படித்து முடித்துவிடுவார்கள். அதன் பின்பே பாடசாலைக்கு வருவார்கள். அதனாலேயே சீக்கிரம் கல்வி கற்கவும், பரிக்ஷையில் தேறவும், பட்டம்பெறவும், ஏதுவாகவிருந்தது. ஒவ்வொருவருடமும், சித்திரைமாத முடிவிற்குள் பட்டங்கள் வழங்கப்பட்டுவிடும். கல்வியில் இவ்வளவு சிறப்புக்கொண்டிருத்தற்குக் காரணம், ஒருவனது வாழ்நாளில் தேடற்குரிய பொருள் கல்விப்பொருள் செல்வப்பொருள் என்னும், இரண்டுமட்டுந்தான் என்றும், அவற்றுள் கல்விப்பொருளே உயிருக்கு உயிரானது என்றும், நன்குணர்ந்திருந்ததினாலும், ஆண்மக்கள் மட்டுமன்றிப் பெண்மக்களும் கல்வியில் கட்டாயந் தேர்ச்சியுறவேண்டும், என்ற சமகொள்கை கொண்டதாலும், பாரி வேந்தன் ஆண் பெண் இருபாலர்க்கும்பேதமின்றி ஒரே விதமாகக் கல்வி கற்பிக்கச் செய்து மகிழ்வடைந்தான்.

(தொடரும்)

# குசேலர்.

(24-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. வீராசாமி பிள்ளை.

பாசபந்தத்தானுண்டாகும் பிறப்பிறப்பை நீக்கும் நெறிகண்ட குசேலர் துவாரகைபோகும் நெறிதேடிப்புறப்பட்டார். துவாரகை அண்மையில் இருக்கும் என்றெண்ணி, தோட்கோப்பாகிய ஆற்றுணாவும் (கட்டமுதும்) இல்லாதவராய், வழிச்செல்லும் பிரயாணிகளை வினவி வழிதெரிந்து, அநேக காவதம் கடந்துசென்றார்.

செல்லுங்கால், கிளைவழிகளைக்கண்டு மனந்திகைத்து, வருந்தி நின்று தன் அறிவினால் நிதானித்தறிந்து, செல்லும் வழிநெடுகத் தங்கித்தங்கி, ஆங்காங்குள்ள மலை வளங்களையும், சோலைகளின் வணப்பையும் கண்டு இறும்பூதெய்தி, (ஆச்சரியப்பட்டு) இயற்கை அமைப்பின் பெருமையை நுணுக ஆராய்ந்து சென்று வழிபறித்துச் செல்லும் கள்வர் ஒளிந்து வசிப்பதையும், கரடி புலி, சிங்கம், முட்பன்றி, காட்டுப்பசு, யானை முதலிய கொடிய வனவிலங்குகள் வசிக்கும் காடுகள் பலவற்றையும் கடந்து, பற்பல வளமிகுந்த நாடுகளையும், நகரங்களையும், குறுநிலமன்னர் வாழும் பறம்புகள், ஆறுகள், நீர்வளமுள்ள தேயங்களையும் கடந்து செல்லுங் காலத்தில், தவத்தால் உடல்வற்றித் தசையின்றி உலர்ந்த யாக்கையை உடைய குசேலர் மிக வருந்தி இளைத்துக் களைத்து, இனி "நாம் இன்னுமுள்ள வழியை எவ்வாறு கடந்து செல்லுவோமென்று, ஆராய்ந்து மெல்ல நடை ஓய்ந்துநின்று, ஒரு சிற்றூரை நெருங்கினார்; அப்போது, தீயின் வெப்பத்தால் உடலை வருத்துகின்ற முதிர் வேனிற் பருவம் எய்தியது.

நிலம், நீர், காற்று, நினைப்போர்தம் மனம், கண்கள் கால் கைகள் கொதிப்பேறவும், விண்ணுலகமும் தீயெழவும், அத்தீயின் வெப்பத்தால் பூமிவெடித்து அக் கமர்வழியே நாகலோகந் தோன்



றவும் அதில் தனக்குப் பகைவனாகிய சூரியபகவானே வந்துவிட்டானென்று, கேதுவென்னும் நாகவிஷனும், அவன் பரிசனங்களாகிய நாகங்களும் போயொழிந்துகொள்ளவும், அக்கமர் வெடிப்புகள் இயங்கின.

சூரியவெப்பத்தால் தடாகம், கால்வாய், கிணறு, ஆறு முதலிய நீர் நிலைகள் வரண்டுபோயின; உதார குணமுள்ளவனென்று நடித்துக்காட்டும் உலோபிகள் பின்சென்ற வறுமைநோயாளர் போலத் திருகிய கொம்புகளையுடைய மான்கள் நீர் வேட்கையால் பெருகிய நீர்போல் தோன்றும் கானலை ஓடிச்சென்று பார்த்து, ஏமாந்துபோயின. துன்பம் வந்தகாலத்தில் அடுத்திருந்தவரை விட்டுப்பிரியவும் உறவினர்போல நீர்நிலைகளை அடுத்திருந்த பறவையினங்கள் அந்நீர் நிலையைவிட்டு ஓடிநீங்கின. வடவாமுகாக்கினி போன்ற இந்த முதிர்வேனிலில் நம் குசேல முனிவர் மரநிழலிலிருந்தும் பள்ளமுள்ள இடங்களை ஆராய்ந்து பார்த்தும் பருகுவதற்கு நீர் கிடைக்காததால் தாகத்தாலும், பசியாலும் வருந்தி, வாய்புலர்ந்து தனக்குள் எண்ணுவாராயினர்.

"அந்தோ பசியும் தாகமும் வருந்துகின்றனவே, வழிநடந்த இளைப்பால் நித்திரையும் வருகின்றதே, சூரியன் அஸ்தமிக்கும் பொழுதும் ஆயிற்றே. இவ்வூரில் நமக்கு எவரும் தூங்குவதற்கு இடங்கொடுப்பார்களோ, நமக்கு யாரும் பழக்கமுள்ள எவரையும் காணோமே" என்று பலவாறு எண்ணித் துன்புற்றார். பிறகு வழியிலுள்ள ஒரு கோயிலில் படுத்து நித்திரைசெய்து அன்றிரவைக் கழித்து, சூரியன் புறப்பட ஒரு ஜாமத்துக்கு முன்னே வழிநடக்கலானார். முன் நடந்த இளைப்பிலும் பசி தாகத்தாலும் நடக்க நடக்கத்தொலையாத தூரத்தைக் கடந்து செல்லும்போது கானகத்திலுள்ள வேல்போன்ற முள் தைக்கவும் அதன்வழியே உதிரம் பெருகக் காலூன்றமுடியாமலும் முள் வாங்கும் கருவியின்றியும், மனமெலிந்தும் முகம்புலர்ந்து, ஓரிடத்தில் அமர்ந்து மனதில் உதித்தவற்றை எண்ணுவாராயினர், "தன் மனதின்படி ஒரு காரியத்தைச் செய்தால் அது சுகத்தைத்தரும், தனக்கு ஞானோபதேசம் செய்யும் குருவின் மொழிப்படி செய்பின் அது சிறந்ததேயாகும். உட்பகையுள்ள அயலார் மொழிகேட்டுச் செய்யில் துன்பந்தருவதாகும். பெண்களின் பயனற்ற மொழிகேட்டு ஒரு காரியத்தைச் செய்யில் பூலோகமழியத்தக்க கேட்டையுண்டாக்கும். (தொடரும்)

# கால்நடை வைத்தியம்.

(302-ம் பக்கம் தொடர்ச்சி)

## வெக்கை.

பதிப்புரிமை செய்யப்பட்டது.

திரு. S. பெருமாள் கோன்.

அன்றியும் அவைகள் பெரும்பாலும் சௌஸ்தமடைகின்றன. தோலில் கொப்புளங்கள் ஒன்றும் காணாமல் கொடூரமான சீத பேதிக் குறிகள் இருந்து கொண்டே இருந்தால் பெரும்பாலும் மரணம் நேரிடுகின்றது. கால்நடைகளின் சொந்தக்காரர்களாகிய சுதேசிகளிற் சிலர் இந்த வியாதியை ஒருவகை வைசூரி என்று கருதுவது தப்பல்ல. இந்த வியாதிகண்ட பிராணியின் தோலில் கொப்புளங்கள் தெளிவாகக் காணப்பட்டால் அவர்கள் இந்த வியாதியை அம்மையென்று சொல்லுகிறார்கள். இரப்பை குடல் இவைகளின் உள்தோல் மிகவும் பாதிக்கப்பட்டு அதனால் இரத்தக் கழிச்சலும் சீதக்கழிச்சலும் கண்டால் அவர்கள் இந்த வியாதியை உள்ளம்மை என்று சொல்லுகிறார்கள். இந்த வியாதிகண்ட சில பிராணிகள் முக்கியமாக வியாதிதீவிரமாய்க் கண்டால் வசமற்று ஜன்னிக் குறிகாட்டிப் பல இடங்களிலும் பாய்ந்து கீழேவிழுந்து உணர்ச்சியற்றுச்சாகின்றன. கண்கள்மூக்குத்துவாரங்கள்வாய் இவைகளிலிருந்து பிசுபிசுப்பான நீர் வடிந்தும் ஈறுகளும் வாயின் உட்பக்கத்து மற்றபாகங்களும் தோலுரிபட்டு இரணமாவதும் சீதபேதியாவதும் தோலில் கொப்புளங்கள் உண்டாகிற பட்சத்திலே அவைகளும்தான். இந்த வியாதிக் குரிய மிகமுக்கியமான குறிகள் எப்போதும் காணப்படுகின்றன வென்பதையும் ஞாபகத்தில் வைக்க வேண்டும்.

வியாதி ஆரம்பமுதல் சௌக்கியம் அல்லது மரணமாகும் வரையில் இந்த வியாதியின் காலமானது இருபத்திநான்கு மணிநேர முதல் பன்னிரண்டு அல்லது பதிமூன்று நாள் வரையிலுமாகும். ஆனால் அது சாதாரணமாக மூன்று நாளுக்குமேல் ஒன்பது நாளுக்குள்ளேயே இருப்பதாகக் காணப்படுகின்றது இந்த வியாதிக்கு மருந்து கொடுத்துச் சிகிச்சை செய்வதனால் பெரும்பாலும் பிரயோ



ஜனமில்லை யென்று முதலிலேயே சொல்லிவிடலாம். நம் தேசத்தில் மருந்து கொடுப்பதினால் அனுகூலம் உண்டாகிறது. இந்த வியாதி இந்த தேசத்தில் அப்போதைக்கப்போது நூதனமாக வெளியிலிருந்து கொண்டுவரப்படாமல் அவ்விடத்திலேயே உற்பத்தியாகிறதென்பதும் பல சந்தர்ப்பங்களில் அது சாந்தமாய்க்காணுகிறதென்பதுமே. இந்த வியாதிகண்டிருக்கிற பிராணிக்குச் சிகிச்சை செய்கையிலேயே அதற்குச்சரியான ஆகாரம்கொடுத்து நன்றாகப்போஷித்து பலம் குறையாமல் ஆதரிப்பதுதான் முக்கியமானவிஷயம்.

கறியுப்பு அல்லது பேதி உப்பைப்போன்ற மலத்தைப்போக்கத் தக்க உப்புகளைக் கொடுத்தால் வியாதிகண்ட பிராணிகளுக்கு முதலில் தோன்றும் மல பந்தம் நீங்கும் மலம் போகிறவரையிலே ஷை உப்புகளை வேளைக்கு மூன்றேமுக்கால் ரூபாயெடைமுதல் ஏழரை ரூபாய் எடையாகச் சிறுதளவாய்த் தினந்தோறும் ஒருவேளை அல்லது இரண்டுவேளை கொடுக்கலாம். இளஞ்சூடாயுள்ள வெந்நீரில் எண்ணெய் சேர்த்து இரண்டல்லது மூன்று தடவை அப்பானத்தின் மூலமாய் உள்ளே செலுத்தலாம். பலமானபேதி மருந்துகள் கெடுதி விளைவிக்கும். ஆகையால் அவைகளைக் கொடுக்கக்கூடாது தினந்தோறும் மூன்று அரைக்கால் ரூபாயெடைமுதல் ஆறுஅரைக்கால் ரூபாயெடைவரையில் (க்வினைன்) கொடுத்தால் சில பிராணிகளுக்கு அனுகூலமுண்டாகலாம் கழிச்சல் ஆரம்பித்து இருபத்திநான்குமணி நேரம் கழிந்த பின்பு 13 நிர். மருந்துப் பட்டியிற் கண்டிருக்கிறபடி செய்த துவர்ப்பாயுள்ள மருந்து பானத்தைக் கொடுத்தபின்பு கழிச்சல் நிற்கும் வரையில் பன்னிரண்டுமணி நேரத்திற் கொருதரம் கொடுத்துக் கொண்டுவரலாம் வியாதிகண்ட கால்நடையின் தேகத்தை நன்றாய்ப் போர்த்தி, சூடாக வைத்திருக்கவேண்டும். (ஆகாரம்) நன்றாகக் காய்ச்சி வெந்து நீறான பக்குவமாயிருக்கிற அரிசிக்கஞ்சியை ஆகாரமாகக் கொடுக்கவேண்டும் வியாதியின் ஆரம்பத்தில் மல பந்தம் இருக்கிறவரையிலும் தண்ணீர் கொடுக்கலாம். பேதி ஆரம்பித்த பின்போவென்றால் இளவெந்நீர்தான் கொடுக்கவேண்டும். அதுவும் சிறுஅளவாய் கொஞ்சநேரத்திற்கு ஒருதரமாகக் கொடுக்கவேண்டும் பேதி ஆரம்பித்தபிறகு ஜலம் கொடுப்பதைவிடக் கஞ்சி கொடுப்பது நல்லது கூடியவரையிலும் தண்ணீருக்குப் பர்த்தியாகக் கஞ்சிகொடுத்துப் பிராணியின் தாகத்தைத் தீர்க்கவேண்டும். பேதி நின்ற பின்பு மருந்து கொடுப்பதை நிறுத்திவிடவேண்டும்.

பிராணியைக் கவனமாய்ப் போஷித்து வரவேண்டும் அரிசிக்கஞ்சியையும் கொஞ்சம் பச்சைப்புல் அல்லது அகத்திக்கீரையையும் ஆகாரமாகக் கொடுக்கவேண்டும் கொஞ்சம் உப்பை ஷை கஞ்சியில் சேர்த்துக் கொடுக்கலாம் அல்லது இந்துப்புகட்டி ஒன்றை வியாதிகண்ட பிராணி நக்கும்படியாக அதற்கு எட்டுந்தூரத்தில் வைக்கலாம் வெக்கை நோய்கண்டு தெளிந்துவரும் மாடுகளுக்குக் கடினமான உலர்ந்த நார்த்தன்மையுள்ள தீனியை எந்த முகாந்தரத்தைக் கொண்டும் கொடுக்ககூடாது ஏனென்றால் அப்படிப்பட்ட தீனி சரியாய் ஜீரணமாகாமல் அஜீரணத்தையாவது இரைப்பையையும் குடலையும்பற்றிய வேறு வியாதிகளையாவது மலப்பையையும் குடலையும் பற்றிய வேறு வியாதிகளையாவது உண்டாக்கும் அல்லது வியாதியைத் திரும்பவருவித்துவிடும்.

(வெக்கைநோய் முற்றிற்று)

கால்நோய் வாய்நோய் என்ற வியாசம் (தொடரும்)

## விகடம்.

ஒரு பிச்சைக்காரன் ஒரு வீட்டில் பிச்சை கேட்டான்.

எஜமானன்:—அம்மா வீட்டில் இல்லையே என்றான்.

(அதற்கு)

பிச்சைக்காரன்.—நான் பிச்சை கேட்டேனே தவிர அம்மாளைக் கேட்கவில்லை ஐயா.

... ... ...

ஒரு வீரன் நான் ஆயிரம் பேருடைய காலை இதோபாரும் வெட்டி வந்திருக்கிறேன் என்றான்.

சூரன்:—அடே முட்டாள்! தலையை வெட்டுவதல்லவோ சுத்த வீரத்தனம்?

வீரன்:—அதற்கு நானென்ன செய்வேன் முன்னமேயே ஒருவன் தலைகளையெல்லாம் வெட்டிக்கொண்டு போய்விட்டான் என்றான்.

.... .... ...

ராமன்:—என்ன அனுமந்தாசாரியாரே! எங்கே சென்றிருந்தீர்? எப்போது வந்தீர்?

ஆசாரி:—என் பேர் உமக்கெப்படித் தெரிந்தது?

ராமன்:—என்னவோய் இப்படிக் கேட்கிறீர்; உமது முகத்தைப் பார்த்தால் தெரியவில்லையா?

... ... ...

வைகாசிமீ கடைசிக்குள் ஆர்டர் கொடுப்பவர்களுக்கு விலை ரூ 2.

ஸ்ரீராமஜெயம்.



## யாதவமித்திரன் சந்தாதார்களுக்கோர்

# அறிவிப்பு.

மயர்வற மதிநல மருளப்பெற்ற பரமகாருண்யரான ஆழ்வார்கள் பன்னிருவர்களால் அருளிச்செய்யப்பெற்ற தமிழ் வேதமாகிய

# நாலாயிர திவ்யப்பிரபந்தம்.

பெரியவாச்சான் பிள்ளை, மணவாள மாமுனிகள் முதலான பூர்வாசாரியர்கள் வியாக்யானங்களுக்கிணங்கிய குறிப்புரையுடனும் ஆழ்வாராதிகள் ஆப்டோன் கலர்ப்படங்களுடனும் சுத்தப் பதிப்பில் வெளியாயிருக்கிறது. யாதவமக்களது ஒவ்வொரு கிருகத்திலும் பிரபந்தம் இருந்து தீரவேண்டியது அவசியமாகையால், இதன் விலை ரூபா [illegible]க்கு நமது சந்தாதாரர்களுக்கு மாத்திரம் பிரதி ஒன்றுக்கு ரூபா இரண்டுவீதம் கொடுப்பதாகத் தீர்மானித்திருக்கிறது. பிரபந்தத்திற்கு ஆர்டர் கொடுப்பவர்கள் விபரமான விலாசத்தையும் சந்தா நம்பரையும் குறித்தனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மானேஜர்.

54-B



| | விலை | | | சந்தாதாருக்குக் குறைந்த விலை. | | |
|---|---|---|---|---|---|---|
| வால்மீகி ராமாயணம் வசனம் | 15 | 0 | 0 | 13 | 0 | 0 |
| கம்பராமாயணம் வசனம் | 4 | 0 | 0 | 2 | 8 | 0 |
| பாரதம் வசனம் | 8 | 0 | 0 | 6 | 0 | 0 |
| பாகவதம் வசனம் | 4 | 0 | 0 | 2 | 8 | 0 |
| பக்தவிஜயம் வசனம் 6 பாகம் | 6 | 0 | 0 | 4 | 8 | 0 |
| அஷ்டப்பிரபந்தம் | 3 | 8 | 0 | 3 | 0 | 0 |
| குருபரம்பரா ப்ரபாவம் | 3 | 0 | 0 | 2 | 4 | 0 |
| பகவத்கீதை | 1 | 8 | 0 | 0 | 12 | 0 |
| விஷ்ணு புராணம் | 3 | 0 | 0 | 2 | 4 | 0 |
| வில்லிபாரதக்கவி (அரும்பத உரையுடன்) | 4 | 0 | 0 | 2 | 8 | 0 |
| கம்பராமாயணக் கவி | 8 | 0 | 0 | 5 | 0 | 0 |
| ராமர் அஸ்வமேதயாகம் | 2 | 0 | 0 | 1 | 0 | 0 |
| ஆதிபர்வம் | 2 | 0 | 0 | 1 | 0 | 0 |
| விராடபர்வம் | 1 | 4 | 0 | 0 | 12 | 0 |
| ஆனந்த ராமாயணம் | 6 | 0 | 0 | 5 | 0 | 0 |
| நித்யானு சந்தானம் | 0 | 12 | 0 | 0 | 8 | 0 |
| முதலாயிரம் | 1 | 0 | 0 | 0 | 12 | 0 |
| விநோத ரச மஞ்சரி | 1 | 8 | 0 | 1 | 0 | 0 |
| நைடதம் (விசேட உரையுடன்) | 4 | 0 | 0 | 3 | 0 | 0 |
| திருக்குறள் (தெளிபொருள் விளக்க விரிவுரையுடன்) | 3 | 8 | 0 | 2 | 8 | 0 |
| நாலடியார் (உரை) | 1 | 8 | 0 | 1 | 2 | 0 |
| நளவெண்பா (மூலமும் விருத்தியுரையும்) | 2 | 8 | 0 | 1 | 14 | 0 |
| அகத்தியர் தேவாரத் திரட்டு | 1 | 4 | 0 | 1 | 0 | 0 |
| ராமலிங்கஸ்வாமி அருட்பா | 4 | 0 | 0 | 2 | 8 | 0 |
| மூவர் தேவாரம் அடங்கன்முறை | 5 | 0 | 0 | 3 | 8 | 0 |
| கந்தபுராண வசனம் | 4 | 0 | 0 | 3 | 0 | 0 |
| விநாயகபுராண வசனம் | 4 | 0 | 0 | 3 | 0 | 0 |
| சூடாமணி நிகண்டு 1-முதல் 12 | 1 | 8 | 0 | 0 | 14 | 0 |

இன்னும் மற்ற வைஷ்ணவ சம்ப்ரதாயப் புத்தகங்களும் தமிழ், தெலுங்கு, நாகரம், கிரந்தம், இங்கிலீஷ் நாவல்களும் இருக்கின்றன. வேண்டியவைகளுக்கு விபரமாக எழுதினால் சகாயமாக அனுப்பி வைக்கிறோம். தபால் செலவு வேறு.

## யாதவ மித்திரன் சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| இந்தியா, சிலோன், பர்மா முதலிய உள்நாட்டிற்கு வருஷம் 1-க்கு | ரூ | 1—0—0 |
| பினாங்கு சிங்கப்பூர், முதலிய வெளிநாட்டிற்கு வருஷம் 1-க்கு | ரூ | 1—8—0 |

தனிப்பிரதி விலை அணா 2.

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தாக் கிடையாது.

மாதிரிப் பிரதி வேண்டுவோர்
இரண்டரையணா, தபால் தலை அனுப்பவேண்டும்.

1. சந்தாதாரராய்ச் சேர்கின்றவர்கள் பெயரையும் விலாசத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

2. எப்பொழுதும் சந்தாத் தொகையை முன் பணமாகச் செலுத்தவேண்டும். வி. பி. மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். சந்தாத்தொகையை முன்பணமாக மணியார்டர் செய்தால் 2-அணாத்தான் செலவாகும். வி. பி. மூலம் பத்திரிகையை வரவழைப்பதில் 3-அணா அதிகச் செலவாகும். ஆதலால் முன்னாடி மணியார்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்வதே நலம்.

3. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் அவ்வருஷ ஆவணி மாதம்முதல் கணக்கு வைக்கப்பட்டு ஆவணி மாதப் பத்திரிகை முதல் சேர்த்தனுப்பப்படும்.

4. யாருக்கேனும் சஞ்சிகை வந்து சேராவிட்டால் அம் மாதமுடிவிற்குள் தங்கள் சந்தா நம்பருடன் தெரிவித்துப் பெற்றுக் கொள்ளலாம். அதற்குப் பின்னர் தெரிவித்தால் விலை செலுத்தியே பெற்றுக் கொள்ளவேண்டும்.

5. இடம் மாறும் சந்தா நேயர்கள் தங்கள் புது விலாசத்தைத் தெரிவித்து, அது விபரத்தைத் தபாலாபீஸாரிடமும் அறிவித்துவிட வேண்டும்.

6. சந்தா நம்பரைக் குறிப்பிடாத கடிதங்களைக் கவனிக்க முடியாது. பதில் விரும்புவோர் தபால் தலை அனுப்பவேண்டும்.

### விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| 1-பக்கத்திற்கு | ரூ | 10—0—0 |
| ½-பக்கத்திற்கு | ரூ | 5—8—0 |

நீண்டகால விளம்பரங்களுக்கு யாதவ மித்திரன் ஆபீஸிற்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

---

ஐந்தாவது யாதவமகாநாடு போட்டோ படங்கள்.

வேண்டியவர்கள் யாதவமித்திரன் ஆபீஸுக்கு விபரமாகத் தெரியப்படுத்தவும். உடன் முன் பணமாக ரூ 1—5—0 மணியார்டர் மூலம் அனுப்பிவைக்கவும்.

64 D

யாதவ மகா ஜனங்களுக்கு ஒரு

# வேண்டுகோள்.

---

யாதவ சகோதரர்களே !

நமது யாதவ மித்திரன் கல்வி, பொருளாதாரம், ஆசாரச் சீர்திருத்தம் முதலிய துறைகளில் சிறந்த அறிஞர்களால் எழுதப் பெற்ற அருமையான கட்டுரைகளைக்கொண்டு யாதவ மக்களின் முன்னேற்றத்தையே முக்கியமாகக் கருதி மாதம் ஒருமுறை வெளி வருகின்றது.

எல்லா யாதவ மக்களும் உடனே சந்தாதாரய்ச் சேர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

எல்லா யாதவ மக்களிடமும் யாதவமித்திரனைப் பரவச் செய்தல் சமுதாயப் பற்றுடையவரின் முதற்கடமையாகும்.

யாதவமித்திரன் நம்மவர் வாழும் ஒவ்வொரு கிராமங்களி லும் உலாவவேண்டும். ஒவ்வொரு யாதவரிடத்திலும் யாதவமித் திரன் மாதாமாதம் சமுதாய விஷயங்களைத் தெரிவிக்கும்படி செய்ய வேண்டும். இதுவே சமுதாயச் சீர்திருத்தத்திற்கு அறிகுறி.

இப்பொழுது விலாசம் தெரிந்த சிலருக்கே பத்திரிகை அனுப்பப்பட்டிருக்கிறது. ஏனையோர் விலாசம் தெரிவித்துப் பத் திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆகையால் யாவரும் பத்திரிகை படித்துப் பயன் பெறு மாறும், இப்பத்திரிகையை வாசிக்கும் அன்பர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்குத் தெரிந்த பத்திரிகை படிக்கும் ஆற்றலுள்ள நமது யாதவ சகோதரர்களின் விலாசங்களைத் தயைசெய்து எழுதி யனுப்புமாறும் வேண்டுகிறோம்.

மானேஜர்,

**யாதவ மித்திரன் ஆபீஸ்,**

**ஸ்ரீ கோபால் மஹால்.**

**வடக்குச்சித்திரை வீதி, மதுரை.**

எக்ஸெல்ஸியர் பவர் பிரஸ், மதுரை:-1931.

8 **Reg., No. M-2527.** 64 E



# யாத[illegible] மித்திரன்.

யாதவமக்களின்

முன்னேற்றங்கருதிவெளிவரும்

மாதப்பத்திரிகை.


| தொகுதி 3 | ஸ்ரீ ஜோதி ஐப்பசி மீ 1931 வரு அக்டோபர் மீ | தமி 3 |
|---|---|---|






பொருள் அடக்கம்.


[illegible] 65

[illegible]

ஓர் இ[illegible] பெண்மணியின் [illegible]

[illegible]

மனித வாழ்க்கை

யாதவர் திருப்பள்ளி யெழுச்சி

அறிவுடைய ஆண்களுக்குக் கல்வி எதற்கு 8[illegible]

[illegible] 86

பிணியும் மருந்தும் 90

சமூகக்கிளர்ச்சிக் குறிய குறிப்புகள் 95

காமா[illegible]பாய் அல்லது காதலர்வெற்றி




Editor

648

# யாதவமித்திரன்.

ஆசிரியர் கூட்டத்து அங்கத்தினர்கள்

(Editorial Board Members.)

தலைவர்.

1. திருவாளர், ஆ. கார்மேகக்கோனார் அவர்கள்
தலைமைத்தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

2. ,, ச. செல்லம் அவர்கள் (யாதவர்) சுசீந்திரம்.
3. ,, J. சக்கரபாணி நம்பியார் அவர்கள், பி. எ., பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வைஸ் பிரசிடெண்டு.
ஜில்லாபோர்டு, திருநெல்வேலி.
4. ,, V. கிருஷ்ணரெட்டியார் அவர்[illegible] (யாதவர்) பி. ஏ. பி.
ஹைகோர்ட வக்கீல், வேலூர்.
5. ,, தி. அ. முத்துசாமிக் கோனாரவர்கள், வித்வான்,
திருச்செங்கோடு.
6. ,, K. வீராசாமிப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், முனிசிபல் உயர்தர கலாசாலை,
திண்டுக்கல்.
7. ,, R. வேங்கடா சலம்பிள்ளை அவர்கள் (யாதவர்)
தலைமை[illegible]சிரியர்,
P. G. உயர்தர[illegible]ல, தஞ்சாவூர்.
8. ,, M. V. [illegible]கோபாலப்பிள்ளை [illegible]கள், (யாதவர்)
தமிழாசிரியர், E. L. M. [illegible] ஹைஸ்கூல்
புரசபாக்கம், சென்னை.
9. ,, ஐ[illegible] பெருமாள் கோன் அவர்கள், தமிழாசிரியர்,
ஸெயின்ட் ஜோஸப் காலேஜ், திருச்சிறாப்பள்ளி.
10. ,, K. [illegible]பால கிருஷ்ணன் அவர்கள், B. Sc. (Hons.)
M. R. A. S. பர்மா.

## வேண்டுகோள்.

வியாசங்கள் எழுதுவோர் தெளிவாகவும் நூதனகலை[illegible]றியும் முழு விலாசத்துடன் சமூக முன்னேற்றத்திற்குரியனவும் அறிவு வளர்ச்சிக்குரியனவுமாகிய பொது விஷயங்களைப்பற்றிச் சுருக்கமாகவும், நடை எளிதாகவும் எழுதியனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோரும், விளம்பரங் கொடுக்க விரும்புவோரும் அடியிற்காணும் விலாசத்திற் கெழுதுக.

யாதவமித்திரன் ஆபீஸ், [illegible]கோபால் மஹால்,
வடக்குச் சித்திரைவீதி, மதுரை.

65

# யாதவமித்திரன்.

## ஒரு மாதப்பத்திரிகை.

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

| தொகுதி 3 | பிரஜோத்பத்தி௵ ஐப்பசி௴ 1931-௵ அக்டோபர்௴ | பகுதி 3 |
|---|---|---|

## கடவுள் வணக்கம்.

பெரும் புறக்கடலை அடலேற்றினைப்
பெண்ணை ஆணை எண்ணில் முனிவர்க்கருள்
தருந்தவத்தை முத்தின் திரள் கோவையைப்
பத்தராவியை நித்திலத் தொத்தினை
அரும்பினை அலரை அடியேன் மனத்தாசையை
அமுதம் பொதியின் சுவை
கரும்பினைக் கனியைச் சென்று நாடிக்
கண்ணமங்கையுள் கண்டு கொண்டேனே
திருமங்கை யாழ்வார்.

## வீட்டுப் பழக்கம்.

திரு. மே. வீ. வேணுகோபால்பிள்ளை.

"தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்; ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? சிறுமையிற் கல்வி சிலையில் எழுத்து; இளமையிற் கல்," என்னுந் தொடக்கத்தனவாகிய பழமொழிகள் மக்களின் இளமை வாழ்க்கையைப்பற்றி நம் முன்னோர்களால் பண்டைக்காலத்தே

வழங்கப்பட்டு, இன்றும் நம்மிடையே வழங்கிவருவனவாகும். இம் முதுமொழிகளை ஆராய்வோமானல், நாம் நம் மக்களைப் பழக்கும் முறையில் எவ்வளவு முனைந்து உழைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பது தெளிவாக விளங்கும்.

மக்கள் சீர்திருத்த மடைவதற்குக் குடும்பமே பயிற்சிக்கூட மாக அமைந்திருக்கின்றது. அவர்கள் தங்கள் பிற்கால வாழ்க்கையைச் சீர்பெற நடத்துவதற்கும், அவ்வாறு நடத்த வகையறியாமல் பலரும் இகழ்ந்து பேசச் சீர் கெட்டு நிற்பதற்கும் பெரிதும் கருவியாக அமைவது இப்பழக்கமே என்பதை உலகானுபவம் வாய்ந்தோர் அனைவரும் நன்கறிவர். ஆகவே, தம் மக்கள் முன்னேற்றத்தைக் கருதுவோர் கவனித்து நடத்தற்குரிய சிலவற்றை ஒருவாறு விளக்கவேண்டுமென்பதே இச்சிறிய கட்டுரையின் நோக்கமாகும்.

பெற்றோருள் பலர் தம் மக்கள் முன்னிலையில் தாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதை உணராதிருப்பதால் ஏற்படும் தீமை மிகப் பெரிது. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வங்களாகத் தம் மக்களுக்கு அமைவதால், முதன் முதல் அவருடைய மக்கள் பின்பற்றிப் பழகுவதற்கு அமைபவை அப்பெற்றோரின் குணங்குறி செய்கைகளே யாகும். இதுபற்றியே "முன்னோர் செல்வதுபோலப் பின்னோருஞ் செல்லும்; தாயைப் போலும் பிள்ளை, நூலைப்போலும் சேலை; தந்தை யறிவு மகனறிவு" என்னும் பழமொழிகள் நந்தமிழ் நாட்டில் பரவி வழங்கத் தொடங்கின.

பெற்றோர் நல்லொழுக்க முடையவராக இருந்தால், அவர் மக்களும் பெரும்பாலும் நல்லொழுக்க முடையவர்களாக இருப்பதை நாம் காண்கிறோம். பெற்றோர் தீயொழுக்க முடையவராயிருந்தால், மக்களும் அவ்வொழுக்கங்களை யேற்றுக் கொள்வது இயற்கை தானே? தந்தை குடியனாகவும், சூதாடியாகவும், மக்கள் அருவருக்கத் தக்க பிற செயல்களைச் சிறிதும் அஞ்சாமற் செய்பவனாகவும் இருப்பானானல், அவனுக்கு மக்களாகத் தோன்றும் பாவம் வாய்ந்த பிள்ளைகளில் சிலரேனும் அவன் குணங்களைப் பின்பற்றி நடந்து, தம் பிற்கால வாழ்க்கையில் அத்தீய தொழில்களில் தம் தந்தையைக் காட்டிலும் தலை சிறந்து நிற்பதும் நாம் கண்கூடாகக் காண்பது தானே? "தீய ஒழுக்க முடையவர் மக்களிலும் ஒரு சிலர் நல்வழிப்பட்டு நடக்க நாம் காண்கின்றோமே" என்றால், அப்படி யமைவது



அபூர்வத்தி லொன்றாக அல்லவோ காணப்படுகின்றது? இனி நல்லொழுக்கம் வாய்ந்த பெற்றோர் தம் பிள்ளைகளைப் பழக்கும் முறைகளைக் கவனித்தால், எவ்வளவு மகிழ்ச்சி விளைகின்றது! நீதிவாதியாக விளங்கும் ஒருவன் தன் பிள்ளையை நீதிபதி நிலைக்குக் கொண்டுவர முயல்கின்றான்; தன் கருத்திற்கேற்பத் தன் மைந்தனைப் பழக்குகின்றான்; கல்வி கற்பிக்கின்றான்; பெரியோர் கூட்டங்களில் அவனை அழைத்துச் சென்று அவர் தம் குணத்தோடு அவனைப் பழகச் செய்கின்றான். அதனால், அம்மைந்தன், கலைநலம் பெற்று, நல்லொழுக்க முடையனாய், நல் வழிகளில் பெரிதும் முயன்று, தன்னையும், தன்னைப் பெற்றோரையும், தன் சுற்றத்தவரையும் பலரும் புகழ்ந்து பேசத்தகுந்த உயர் பதவியை யடைகிறான். ஆதலின், தன் பிள்ளையின் உயர்வை நாடும் தந்தை, தான் முதலில் உயர்வடைய வேண்டுவது இன்றி யமையாதென்பது புலப்படுகின்றது. சுருங்கக் கூற வேண்டுமானல், ஒரு தந்தை தன் மக்கள் எவ்வகையில் முன்னேற்ற மடைதல் வேண்டுமெனக் கருதுகின்றானே, அவ்வகையில் தானே தன் மக்களுக்கு முன் மாதிரியாக நடந்து காட்டல் வேண்டும். 'குல விச்சை கல்லாமற் பாதி வரும்' என்னும் அனுபவ மொழி, தம் முன்னோர் செய்யுந் தொழிலில் மைந்தர் தம்மை யறியாமலே ஓரளவு பயிற்சி பெறுவதை விளக்குவதன்றோ?

சில பெற்றோர் தம் மக்கள் முன்னிலையில் நல்லொழுக்க முடையோர் அருவருக்கத் தகுந்த அவையல் சொற்களைப் பேசி வாய்ப் போரிடுவர். அவையல் சொற்களாவன:- கற்றோரும் ஒழுக்கம் வாய்ந்தோருமாகிய பெரியோர் கூடியுள்ள அவையில் பேசத்தகாத சொற்களாகும். பெற்றோர் அத்தகைய சொற்களைப் பேசி வாய்ப் போரிடுவதை அவருடன் நாளும் இருந்து பழகும் அவர் மக்கள் காதாரக் கேட்டு, மனமாரக் கொண்டு, அருவருப்பு நீங்கித் தங்கள் பிற்கால வாழ்க்கையில் அத்தகைய சொற்களைத் தங்கள் பெற்றோரைப் பார்க்கிலும் பெரும் பழக்கத்துடன் அஞ்சாது பேசத் தொடங்குகின்றார்கள். ஆதலின், தம் மக்களுக்கு முன் மாதிரியாக அமையும் பெற்றோர் அப்படிப்பட்ட சொற்களை மக்கள் முன்னிலையில் ஒரு போதும் பேசுதல் அடாது. அவர்கள் என்றும் இனிய சொற்களையே பேசித் தங்கள் மக்களை அவற்றில் பழக்கமுடையவர்களாகச் செய்யப் பெரிதும் முயல வேண்டும். அதனால் மக்களுக்கு இனியும் நன்மைகள் அளவிறந்தனவாகும். இதனுடன் அமையா

மல், அறஞ் செய்தல், நல் விருந்தினரை அன்புடன் வரவேற்று உபசரித்தல், பெரியோரை வணக்கத்துடன் பாதுகாத்தல், அயலாரிடம் பணிவு தோன்ற நடந்து கொள்ளுதல், தெய்வ வழிபாடு இயற்றல், சுற்றத்தாரைத் தழுவிப் பாதுகாத்தல் முதலிய சிறப்புறு செயல்கள் இந்நாளிற் கல்லூரிகளிற் பழகியறிதல் அருமையாதலின், அவற்றை மக்கள் வீட்டிலேயே பழகவேண்டியிருத்தலின், பெற்றோர் அத்தகைய தொழில்களிலும் அவர்களுக்கு வழி காட்டிகளாக அமைதல் இன்றியமையாததாகும்.

குழந்தைகளின் வாழ்க்கைச் சீர்திருத்தத்திற்குத் தாய் காரண கர்த்தா ஆவள். ஆதலின், அவள் தனக்கு ஓய்வு ஏற்படும்போதெல்லாம் தன் குழந்தைகளுக்கு நம் நாட்டில் ஒழுக்கத்திற் சிறந்து விளங்கிய பெருமக்களின் சரித்திரங்களைக் கதைகளாகக் கூறிவருதல் பெருநலம் பயக்கும். இம்முறையைக் கையாளுவதால், குழந்தைகள் பெரியவர்களாகிப் பாஷையைக் கற்றுப் பெரிதும் முயன்று தெரிந்து கொள்ளவேண்டிய பல அருமையான ஒழுக்க முறைகளைத் தங்கள் இளமைப் பருவத்திலேயே எளிதிற் கற்று இலக்கியப்பற்றுமுடையவர்களாவார்கள். பாட்டிமார்கள் குழந்தைகளுக்கு இராவிற் கதைசொல்லும் வழக்கம் இந்நாளில் காணப் பெறவில்லையே! லிட்டன் பிரபு என்னும் ஆங்கிலப் புலவர் தாம் எழுதிய "ரியஞ்சி" என்னும் நவீனத்தின் முகவுரையில் தமக்கு இளமையிலேயே இலக்கியப்பற்று உண்டானமைக்குத் தம் தாயே காரணமாவள் எனக் கூறியிருத்தல் ஈண்டுக் கவனிக்கத்தக்கது. இந்திய நாட்டு வீரமன்னர்களுள் ஒருவராகிய சிவாஜி மன்னருக்கு அவர் இளமைப்பருவத்தில் அவர் தாய் கூறிவந்த வீரமணிகளின் வாழ்க்கை வரலாறுகளே அவரை வீரவாழ்க்கைக் குரியவராக்கின என்பது நாம் அம்மன்னர் வாழ்க்கை வரலாற்றிற் காணும் உண்மையன்றோ? இத்தகைய சான்றுகளை எடுத்துக் காட்டவேண்டுமென்றால், அவை எண்ணிலடங்காதனவாதலின் இக்கட்டுரை இடந்தராது.

தன் மக்களை உடல் தூய்மையிலும் உடைத்தூய்மையிலும் பழக்குவதும் தாய்க்கு ஏற்பட்ட கடமையேயாகும். காலையில் எழும் பழக்கமும், நீராடும் பழக்கமும், தூயஉடைகளை உடுக்கும் பழக்கமும் மக்களின் உடல் வன்மையையும் மன வன்மையையும் உயர்த்தத் தகுந்தவைகளாகும். ஆதலால், தாய்மார்கள் தம் மக்களைப் பேணுதலின்பொருட்டு இதிலும் நற்கருத்தைச் செலுத்தவேண்டும்.



இத்தகைய செயல்களைப் பெண் மக்கள் செய்ய வேண்டுமானால், இவைகளைப்பற்றித் தெள்ளத் தெளிய விளக்கும் நூல்கள் சிலவற்றை அவர்கள் படித்தறிய வேண்டும். ஆகையால், கணவர் தம் மனைவியர்க்கு இத்துறைகளில் அறிவை வளர்க்கத் தகுந்த நல்ல நூல்களை வாங்கிக் கொடுத்து அவர்களை வாசிக்கச் செய்தல் வேண்டும்; தீய வழக்க ஒழுக்கங்களைப் புனைந்து கூறுங் கட்டுக் கதைகளாகிய நவீனங்களைப் பெண் மக்கள் வாசியாமலிருப்பது அவர்களுக்கும் அவர்கள் குடும்பத்திற்கும் நன்மை பயக்கும் என்பது உண்மை. இதை நம் பெண் மணிகள் கவனிப்பார்களாக.

சில பெற்றோர் தம் மக்களைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி மாதந்தோறுஞ் செலுத்தவேண்டிய ஆசிரியர் கூலியைச் செலுத்தி விட்டால், தம் கடமை முடிந்து விடுகிறது என்று எண்ணுகின்றனர்: இதைப்போன்ற தவறான கொள்கை வேறு இல்லை. பெற்றோர் தம் மக்களுக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களை அடிக்கடி கண்டு தம் மக்களைப்பற்றி அளவளாவுதல் வேண்டும். அடிக்கடி காண இயலாமற் போயினும், ஓய்வு நேரும்போதாவது அவ்வாறு செய்தல் நலம். பள்ளிக்கூடத்து ஆசிரியர்களுக்கும் பெற்றோருக்கும் அறிமுகமில்லாமையால், இந்நாளில் பள்ளிக்கூடங்களில் அடாதன செய்து பாழாகும் மாணவர் பலர் என்பது நாம் சொல்லாமலே விளங்கும். வீட்டில் ஒழுங்கு தவறாமல் நடக்கும் மாணவருட் சிலரும் பள்ளிக்கூடங்களில் ஒழுங்கு தவறி நடத்தற்கு இதுவே காரணம்.

பள்ளிக்கூடத்திற் படிக்கும் மாணவர்களுக்குக் கல்வியில் விருப்பம் அதிகரித்தற்கு அயல் நாட்டவர் கையாளும் முறையொன்று நாமும் கையாளுதற் குரியதே. அயல் நாட்டவர், தம் மனைகளில் தம் மக்களின் கண்ணையுங் கருத்தையுங் கவரத்தகுந்த நூல்கள் பலவற்றை வாங்கிச் சேர்க்கின்றனர். பிள்ளைகள் ஓய்வு நேரங்களில் அவற்றுள் தமக்கு விருப்பமான நூலையெடுத்து வாசிப்பதில் பொழுது போக்குவார்கள். இவ்வாறு பழகுவதால் அவர்கள் பொது அறிவு எவ்வளவு உயர்வடைகிறது! வீட்டிலுள்ள பெரியோர்களும் ஓய்வு நேரங்களில் நல்ல நூல்களை வாசிப்பதைத் தங்கள் வழக்கமாகக் கொண்டால்தான் பிள்ளைகளுக்கும் அத்துறையில் விருப்பமுண்டாகும். அவ்வாறு பெற்றோர் தாம் முன்மாதிரியாக நடந்து காட்டாமல் தம் மக்களைப் "படியுங்கள்; படியுங்கள்," என்று வாய்ப்பறைபடித்துக் கொண்டிருப்பது உண்மைப்பயன் விளைக்காத வீண் தொழிலேயாகும். 'தானே கனியாத பழம் தடிகொண்டடித்தால் கனியுமா?' என்னும் முதுமொழி இங்குக் கவனிக்கத்தக்கது.

# ஓர் இடைப் பெண்மணியின் அன்பு.

திரு. தி. அ. முத்துசாமிக் கோனார்.

உலகத்துள்ள எல்லாவுயிர்களும் விரும்பற்பாலன இகபர இன்பங்களே ஆம். அவ்வின்பங்களை ஊட்டவல்ல முதல்வன் உயிர்க்குயிராகிய இறைவன். மனம், வாக்கு, காயம் என்னும் திரிகரணங்களாலும் உண்மைப் பக்தி புரிவதால் கடவுள் பரமேசுவரனின் அருள் சுரக்கும். உண்மை யன்புடையவர் எத்தேயத்தவராயினும், எக்குலத்தவராயினும், எந்தவேடத்தவராயினும், எத்தொழிலினராயினும், எவ்வயதினராயினும் எம்மதத்தினராயினும் அவர் கடவுளின் பேரருள் பெற்று அவர் சமீபத்து வாழ்வர்.

மாசற்றநெஞ்சினர் எக்குலத்தவராயினும், எந்த நதி தீர்த்தங்களாலும், குடம் குடமான பால், தயிர், இளநீர், பன்னீர், தேன் முதலியவைகளால் அபிஷேகம் புரியினும், அரிய இனிய பழவர்க்கங்களையும் சித்திரான்னங்களையும் நிவேதிப்பினும், ஆடினும் பாடினும், மந்திரங்களை ஜபிக்கினும் தானதர்மங்கள், சத்திரங்கள் ஆலயங்கள் கட்டுவிக்கினும் நிரம்பிய திருவருள் உண்டாகமாட்டாது. அன்பு என்பது இருக்குமாயின் கடவுள் ஓடிவந்து இரட்சிப்பர் என்பது உண்மை. முதியராயினும், இளையராயினும், ஆணாயினும், பெண்ணாயினும் பக்தி யென்பதிருந்தால் ஆபத்தைப் போக்கலாம், மரணத்தைப் போக்கலாம். ஆறுவழிவிடும், விட மூர்ச்சை நீங்கும், உலகம் போற்றும் நிலையில் வாழலாகும். பசும் புல் அடர்ந்தும், கம்பு, சோளம், சாமை, கடலை முதலிய தானியங்கள் நன்றாகப்பயன் தரும். விசாலமான பூமியும், பலபசுக்கள், எருமைகள், ஆடுகளாகிய நிரைகளையுடைய இடையர் வீடுகள் பல விளங்குவன ஓர் ஊர். அதனை இடைப்பாடி என்பார்கள். வடமொழியில் அதனைக் கோபாலபுரம் என்று கூறுவர். பால், தயிர், நெய் விருத்தியும் நிலவளத்தாலும் தலைமை பெற்ற நாராயணக்கோன் என்று பெயரினன் அவ்வூரில் வாழ்ந்தனன். அவனுக்கு ஒரு ஆண்



குழந்தை இளமையாக இருக்கும்பொழுதே தந்தை பரகதியுற்றனன். அக்குழந்தையை வைத்துக்கொண்டு அவர் மனைவி சுந்தரம் என்னும் மாது இருந்தனள். தன் கணவன் இருந்த காலத்தை விட மிகச் சிறப்பாக வாழ்ந்தனள். தங்களுக்குள்ள கால் நடைகளையும் மற்றும் தானிய வர்க்கங்களையும் கவனித்து விருத்தி செய்யும் திறமை பெற்ற மாது. சிவ பக்தி, அடியார் பக்தி மிக்குடையவள். அவ்வூரில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ நஞ்சுண்டேசுரர் ஆலயத்துக்குச் சென்று நெய்த்தீபங்களிட்டு, வலம் செய்து தொழுதுவருவது வழக்கம். ஒரு நாள் சாயந்திரம், சிறிய தன் மகனை அழைத்துக் கொண்டு ஊர் அருகில் உள்ள சரபங்க நதியைக் கடந்து நந்தவனத்துக்குச் சென்று வில்வபத்திரம் கொய்து கொண்டிருந்தாள். சிறுவனைப் பாம்பு கடித்து விட்டது. மயங்கி விழுந்துவிட்டான். எடுத்தாள், துவண்டு போய்விட்டான். குழந்தைக்கு வேண்டுவன செய்து கொண்டிருந்தால் பிரதோஷகாலம் தாண்டிவிடும் என்ற நோக்கத்தால் குழந்தையை நஞ்சுண்டேசுரர் பார்த்துக் கொள்ளட்டும் என்று வில்வ பத்திரப் பொட்டணத்தைக் கையில் எடுத்துக் கொண்டு நதிக்கரை வந்தாள். போம்போது நடையாக இருந்த நதி நீர் பெருகிவிட்டது. இதைப் பார்த்திருந்தால், வழக்கமாகச் செய்து வரும் பிரதோஷதரிசனம் தவறிப்போம், என நினைந்து கரைபுரண்டு செல்லும் நதியுள் இறங்கினாள். முழங்கால் ஆழமாகவே நீர் இருந்தது. கரை சேர்ந்தாள். ஸ்ரீ நஞ்சுண்டேசுரர் ஆலயத்துள் புகுந்தாள். வில்வத்தைக் கொடுத்தாள். விதிப்படி சுவாமிதரிசனம் செய்தாள். பூஜகர் முடிவில் பிரசாதம் கொடுத்தார். அணிந்துகொண்டு பக்கத்திருப்போர்க்கும் பிரசாதத்தை நீட்டினாள். நந்தவனத்தில் விஷத்தால் மாய்ந்த குழந்தை விஷம் நீங்கப்பெற்று நதிவழிவிட நடந்து வந்து அருகில் நின்ற குழந்தை அதைப் பெற்று அணிந்துகொண்டான். நதியோரத்திருந்த மாந்தர்கள் நதிப் பெருக்கில் இறங்கி நதி வழிவிட்டதும், பின்பு சிறுவன் அம்மா அம்மா என்று வந்து இறங்கக் குழந்தைக்கு நதி வழி விட்டதும் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். சிவபிரானுக்குத் தொண்டு செய்தவர்கள் எவ்வித ஆபத்திலும் அழுந்தார்கள். சுகத்தையே அடைவார்கள் என்பது நிச்சயம்.

இச் செய்யுள் இடைசை மாலையிற் கண்டது.

ஆறு வழிகாட்ட அரவு விட நீங்கியெழும்
பேறுயர் மாதுசெய் பெற்றார்கள்-மாறிலா—
உள்ளத்தாருள்ளத்தே ஓங்கிடைசை நஞ்சுண்ட,
வள்ளற் பெருங்கருணை வந்து.

# குசேலர்.

(61 ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. வீராசாமி பிள்ளை.

பெண்களின் மொழிகேட்டு அழிந்தார் பலர் என்பது தெரிந்திருந்தும் அந்தோ மனையாள் சொல்லுக்கு இணங்கி நான் என்ன காரியம் செய்துவிட்டேன். இதுகாறும் நடந்து உடல் மெலிந்து மூர்ச்சித்து வருந்துகிறேன் நம்பெருமான் ஆட்சிபுரியும் துவாரகா பட்டணம் அணித்தாக இருக்குமென்றல்லவோ நடந்து அநேக காவதம் கடந்தேன். வழிப்போக்கரை வினவினால் இன்னும் நெடுந்தூரம் இருக்கும் என்றல்லவோ கூறுகின்றனர் இன்னம் அவந்தியென்னும் ஊரின் எல்லை முடியவில்லையே. துவாரகாபுரியை எப்போதுகாண்பேன். தேகத்தில் சக்தி குறைந்துவிட்டதே, நாவிலும் நீர் வற்றிக்கண்ணும் பஞ்சடைந்து விட்டதே, என்செய்வேன். ஆ! கண்ணா! இதுதான் உன் திருவிளையாட்டோ! உன்னை நினைக்க நினைக்க உன்னைக் காணுவோமென்னும் ஆசையால் சிரமம் சிறிது நீங்கினவெனினும் அதோ தெரிகின்ற மேலைக்கடலை எவ்வாறு கடப்பேன் "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடிசேராதார்" இக்கருங்கடலைக் கடக்கவழி தெரியாத யானோ பிறவிப் பெரும் கடலைக் கடப்பேன். அறவாழி அந்தணனாகிய கண்ணபிரான் திருவடி சேவித்தலன்றோ பிறப்பாகிய ஆழி (சமுத்திரம்) யைக்கடப்பேன். இம்மேலைச்சமுத்திரம் கடக்க யாருடைய உதவியை நாடுவேன். இறைவனருளால் மரக்கலம் ஊக்கும் ஒருவரால் மரக்கலமேறிச் சென்றாலும், கரையேறியபின் அத்துவாரகையின் கண்ணுள்ள எவர் என்னை மதிப்பார்? கொஞ்சமும் ஆலோசியாமல் வழிநடக்கத் தொடங்கினேனே! ஆகா! "எண்ணித்துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவ மென்பதிழுக்கு" என்ற பெரியார் முதுமொழியை நினைக்காமல் இவ்வளவுதூரம் வழிநடந்து வந்துவிட்டேனே!

"மாமகுடமுடிதரித்த மன்னவரெல்லாரும் கப்பங்கட்டக் காத்துக் கொண்டிருக்கும் ஸ்ரீகண்ணபிரான் முன்றிலில் நிற்கக்கூட நான் அருகனல்லனே, கண்ணபிரான் முன்றிலில் நிற்கும்பாக்கியம் என[illegible]



[illegible]ரிதில் கிடைத்தாலும் அப்பெருமானின் அரிய சேவை ஏழையா[illegible]ய அடியேனுக்கு எளிதாகக் கிடைக்குமோ? அவன் சேவை கிடைத்தபோதிலும் கற்பகத்தை அடைந்தும் அதன் பயனற்ற காயைக் கேட்க முயற்சித்தல்போல பீதக ஆடையணிந்த அப்பெருமான் சன்னிதானத்தில் அரிதிற் சென்று அற்பமாகிய செல்வத்தையா நான் விரும்புவது" என்று உள்ளத்தில் பல விதமாக எண்ணி, அக்குசேலர் பெருமூச் செறிந்து, விரைவாக நடந்து மேலைச்சமுத்திரக் கரையைக் கண்ணுற்றார்.

அக்கடல் சங்குகளைத் தன்னிடத்தே ஏந்தி, பூமியாகிய திட்டுகளைப் படைத்து, மீன் ஆமை முதலிய உருக்களைக் கொண்டு, பல உயிர்களைக் காத்து, அழகிய செவ்வாய் போன்ற பவளங்களையுடையதாய், பொன்னைப் பெருக்கிய கரியநிறத்தோடு கண்ணனை ஒத்திருந்தது; இதைக் கண்டதும் குசேலருக்கு அகமும் புறமும் அளாவிய அளவிடற்கரிய ஆனந்தம் உண்டாயிற்று.

அக்கடற்கரையில் எவ்விடத்தும் அலை யெடுத்து வீசுகின்ற மணிகளும் முத்துகளும் பலகறையும் மீன்களும் மற்றும் கடல் படு பொருளும் ஒன்றோடொன்று கலந்து முற்றங்களில் குப்பையாக்குவதையும், பரத சாதிக்குடிகள் வலைவீசுந்தொழில் உடையாராய் பனை மடலால் வேய்ந்த குடிசைகளில் வாழ்வதையும், குயில் போன்ற சொல்லையுடைய மாதர்கள் தங்கள் விழிகளுக்குப் பகையாகிய மீன்களை வகிர்ந்து உப்பிட்டுக் காயவைத்து விற்று மகிழ்வதையும், பரதர்கள் பல மரங்களைச் சேர்த்துச் செய்த படகுகளில் ஏறி மீன் பிடிப்பதற்காக எங்கும் ஒலிக்கின்ற சப்தமும் மீனைப் பிடித்துக் கரையேறுபவர்களின் சப்தமும், காயவைத்த மீன்களைக் கவரவரும் பறவைகளை ஓட்டுபவர்களின் ஒலியும் மீன்விற்கும் பரத மாதர்களின் ஆரவாரமும் எங்கும் நிரம்பி ஒலிப்பக்கேட்டும் மீன் விற்கும் பரதமாதர்களின் கண்வலையில் சிக்கி மயங்குகின்ற வாலிபர்களையும் சிற்றிடை வலைச்சிமார்கள் தெருத்தோறுங் கூறிவிற்கும் வற்றலாகிய மீனின் (கருவாட்டின்) நாற்றத்தைக் கூந்தலில் சூடிய தாழம்பூ போக்கி நறுமணம் கமழச்செய்வதையும் குறிஞ்சி, முல்லை, மருதம் ஆகிய மூன்று நிலங்களில் வாழும் மாந்தர்கள் மழை வளத்தை விரும்புவது போல, இந்த நெய்தல் நிலத்தில்வாழும் பரதர்கள் [illegible]ப்புவிளைவுக்கு ஆதாரமான வெயில் வளத்தை விரும்புவதையும் [illegible]ண்டு, குசேலர் வியப்புற்று ஒரு புன்னைமரத்தின் நிழலில் தங்கி

இளைப்பாறிக் கொண்டிருந்தார். கடலில் செல்லும் மரக்கலத்தை கண்டு "இம்மரக்கலத்தைச் செலுத்தும் மீகாமனுக்குக் கொடு நம்மிடத்தில் இம்மியளவும் பொன்னில்லையே. நம்மைப் பணம் கேட்காமல் அவன் செலுத்துவதற்குரிய சிறப்பும் நம்மிடத்தி லில்லையே. செந்தாமரை இதழையொத்த திருக்கண்களையுடைய கண்ணபிரான் சேவைக்குச் செல்லுகிறே னென்று சத்தியமாய்ச் சொன்ன போதிலும் அவன் மனமிரங்க மாட்டானே. என்ன செய்வோம் முகமன் கூறிக் கெஞ்சியிரப்பதே சரி" யென்று மெதுவாய்த் தான் வீற்றிருந்த புன்னை மரத்தை விட்டெழுந்து மீகாமனிடம் சென்று அவன் மனமிரங்குமாறு இன்னுரைகள் பல கூறி வேண்டிக் கொள்ள அம்மீகாமன் கண்ணன் திருவருளால் மனமிரங்கங்கொள்ளவும் நம் குசேலர் மரக்கலம் ஏறினர். பாய்மரத்தையுடைய மரக்கலம் கப்பலோட்டும் மாலுமியின் வன்மையால் அதிவிரைவில் சமுத்திரத்தின் நீர் கிழியவோடி துவாரகைக்குச் செல்லுந்துறையில் சேர்ந்தது. "கண்ணன் கழலினை நண்ணும் மன" முடைய குசேலர் துவாரகைக்கு இறங்கும் ஜனங்களுடன் உள்ளத்தே வெள்ளமெனப் பெருகும் உவகையோடு தானும் கரையில் இறங்கினர்.

(தொடரும்)

## மனிதர் வாழ்க்கை.

### தொண்டரடிப்பொடியாழ்வார்.

(55ம் பக்கத் தொடர்ச்சி)

கு. மணிவண்ணன்,

சர்வேஸ்வரனை ஸ்ரீரங்கநாதனையே நாடிற்று. திருவேங்கடமுடையானை நாடவில்லையாம். ஏன் என்றால் வேங்கட "விருஷபாத்திரி" என்னும் பெயருள்ள மலையாகிய ரிஷபத்தின்மீது ஆரோகணித்துப் பயிர்களாகிய மக்கள் சுகமாக உய்யும் வண்ணம் யாதொ தீங்கும் அணுகாதவாறு, குடியானவனொருவன் எவ்வாறு த



வயலுக்குக் காவலிருப்பானோ அவ்வாறு இருக்கிறானும் எம்பெருமான். அவனிடத்திலே போய்ப் பல்லாண்டு பாடுவது அவன் முன் சென்றதும் "என்ன நேர்ந்தது? உபாயம் என்ன வேண்டும்?" என்று கேட்கக் கூடியவனாக இருக்கிறானும். ஆனால் ரங்கநாதனோ எனக்குக் "குடிகளைக் காக்குந் தொழிலிலேயிருந்து அதிகக் களைப்பு மேலிட்டது. ஆதலால் சிறிது களைப்பாறுவோம்" என்று.

"கங்கையின் புனிதமாய காவிரி நடுவுபாட்டு
பொங்கு நீர் பரந்துபாயும் பூம்பொழி லரங்கந்தன்னுள்
எங்கள்மால் இறைவன் ஈசன் கிடந்ததோர் கிடக்கைகண்டும்'

"வண்டினம் முரலும் சோலை மயிலினம் ஆலும் சோலை
கொண்டல் மீதணவும் சோலை குயிலினம் கூவும்சோலை
அண்டர் கோன் அமரும் சோலை அணிதிரு வரங்கமென்னா"

என்ற மிக அழகும் குளிர்ச்சியும் பொருந்திய காவிரியாற்றின் நடுவில் பள்ளிகொண்டிருக்கிறானும். அப்படி யுள்ளவன்தான் பல்லாண்டு பாடுவதைக் கேட்டு மகிழ்வன். ஆனதால் ஆழ்வாரும் பூமாலைக் கைங்கரியஞ் செய்துகொண்டு திருமாலையைச் சமர்ப்பிக்கப் போகிறவராதலினாலே அவர் மனம் திருவரங்கனிடம் நாடிற்றாம்.

மேலும் விப்ரநாராயணர் மனிதர் வாழ்க்கை நூறு பிராயம் ஆகியிருந்தபோதிலும், பாதி உறக்கத்திலும், மற்றும் பாதி பிணிபசி மூப்புத்துன்பம் என்றபடி கழிந்து வருகிறதானாலும்,

"பெண்டிரால் சுகங்களுய்ப்பான் பெரியதோ ரிடும்பை பூண்டு
உண்டிராக் கிடக்கும்போது உடலுக்கே கரைந்து நைந்து"

என்பதை நன்றாய் முற்றும் உணர்ந்தவராதலினால் ஸ்ரீரங்கம் போகாமல் என் நாளைக் கழிப்பேனோ என்று பிடிவாதமாயிருக்க, தாய் தந்தையரும் தகுந்த புத்திமதிகளைச் சொல்லி அவர் கருதியபடி செல்ல விடைகொடுத்து அனுப்பினார்கள்.

விப்ரநாராயணர் ஸ்ரீரங்கம் சேர்ந்து கைங்கரியங்களில் முதன்மையான பூச்சாத்தலை மேற்கொண்டு, ஒரு நந்தவனம் உண்டுபண்ணி, பலவித புஷ்பங்களை உண்டாக்கி, அவைகளைத் தொடுத்துப் பகவானுக்குச் சமர்ப்பித்து வந்தனர். ஸ்ரீரங்கநாதனுக்கும் தன் பக்தன் சமர்ப்பித்துவந்த மாலை மிகவும் போக்கியமாயிருந்ததாம்.

கோதைப்பிராட்டியார் சூடிக்கொடுத்த மாலையை மிக போக்கிய மாகக் கொண்டவனல்லவோ அவன்! இப்படி நாள் பல செல்ல விப்ரநாராயணரின் பெருமை எங்கும் பரவிற்று. ஆனால் அவர் பெருமையை நிலை நிறுத்தவேண்டுமல்லவா? முன்னொரு காலத்தில் பகவான் நரசிம்மாவதாரஞ் செய்து இரணியவதம் முடித்தபொழுது, இரணியனின் மகன் அங்கிருந்த எம்பெருமானின் மாவுருவம் ஒன்றைக்கண்டு அதைக் கட்டித்தழுவ ஆசை யேவிட்டனர். அப்பொழுது திருமால் அவனைப் பார்த்து நம்முடைய வனமாலையின் அவதாரமாய் விப்ரநாராயணர் என்பார் அவதரிக்கப் போகின்றனர். நீ வேசையர் குலத்தில் தேவதேவி யென்னும் பெயரோடு வளர்ந்து வருவாய். விப்ரநாராயணர் ஸ்ரீரங்கம் சேர்ந்து மாலைக் கைங்கரியம் செய்து கொண்டிருப்பார். அப்பொழுது உன் எண்ணம் ஈடேறும்' என்று அருளிச் செய்தார். அதன் பிரகாரமே தேவதேவி யென்பாள் ஒருநாள் சோழநாட்டு அரசன் சபையில் தன் திறமைகளைக் காட்டிப் பொருள்பெற்றுத் திரும்புங்கால் விப்ரநாராயணர் ஏற்படுத்திய நந்தவனத்தில்வந்து தங்கிப்போகும்படி நேரிட்டது. அவ்வனம் மிக அழகாகக் காணப்பட்டதனால் அதற்குரியவர் யாரோ அவரைக் காணத் தேவதேவி இச்சை கொண்டாள். நந்தவனத்தைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வரும்பொழுது அவள் திருமாலைத் தொண்டரைக் கண்ணுற்றனள். உடனே அவர் அழகும், தோற்றமும் அவள் மனதைக் கவர்ந்து கொண்டன. இது உண்மையைத் தன் சேடிமார்களுக்குத் தெரிவிக்க அவர்கள் தொண்டரின் பெருமையையும், அவர் பிரம்மசார்ய விரதத்தையும் தெளிவாக எடுத்துரைத்து அவள் கொண்டுள்ள எண்ணம் வீண்; முடியாத காரியமாகும் என்று சொல்ல, தேவதேவி யானவள் தன் மனம் அவரையே நாடிற்று என்றும், ஆதலால் எவ்விதத்திலாகிலும் அவரை வசப்படுத்தித் தன் இஷ்டத்தை நிறைவேற்றுவேன் என்றும் சபதஞ் செய்து கொண்டு, தன் தோழிமார்களை அவரவர்கள் விடுதிகளுக்கு அனுப்பிவிட்டாள்.

பின்பு தேவதேவி சந்நியாசிபோல் காஷாய உடையணிந்து நிரபராதிபோல் ஆபரணாலங்கிருதம் ஒன்றுமின்றி விப்ரநாராயணர் முன்தோன்றிச் சாஷ்டாங்கமாகத் தண்டம் சமர்ப்பித்து, 'சுவாமி, நான் பரமஏழை. எனக்கு ஒருவரும் துணையில்லை, ஆகையால் சந்நியாசி தர்மத்தையடைந்து பகவத் கைங்கரியத்தை யடைய மிக



[illegible]ளாக இருக்கிறேன். தேவரீர் அடியாளை ஆட்கொண்டு [illegible]ரும்படி பிரார்த்திக்கின்றேன்'

"[illegible]லேன் காணியில்லை உறவு மற்றொருவரில்லை
பாரில் நின்பாதமூலம் பற்றிலேன் பரமமூர்த்தி!
காரொளி வண்ணனே! என் கண்ணனே! கதறுகின்றேன்
ஆருளர் களைகண் அம்மா! அரங்கமா நகருளானே!"

என்று கதற, தொண்டருக்கு மனமிரங்கி அவள் கூறியபடியே அவளை ஆதரித்து, தன் கைங்கரியத்திற்கும் உதவியாக வைத்துக் கொண்டிருந்தார், நாள் பல சென்றன. விப்ரநாராயணருக்குக் காமம் என்றதில் மனதேயில்லாமல் கைங்கரியத்திலேயே ஈடுபட்டுக் கொண்டிருந்தார். தேவதேவியும் மிகப் பொறுமையுடன் தக்க சமயத்தை நாடியிருந்தாள். எம்பெருமானும் சங்கல்பத்தை ஈடேற்றி வைக்க வேண்டுமென்று எண்ணினவராய் ஒருநாள் ஓயாப்பெருமழை பெய்வித்தார். தேவதேவியும், விப்ரநாராயணரும் முழுதும் நனைந்தார்கள். அவர்கள் தரித்திருந்தது ஒரே வஸ்திரமே. தங்கியிருந்தது ஒரு சிறு குடிலையே. இச்சமயத்தில் பகவான் தொண்டர் உள்ளத்தில் உலகப்பற்றைக் கொஞ்சம் ஏற்படுத்த அவரும் அதற்கு இணங்கினவராய், ஒற்றை வஸ்திரத்தோடு நனைந்து குளிரால் வருந்திய தேவதேவியைப் பார்த்து ஆசைமொழிகள் செப்பலாயினர். தன்னிடமுள்ள மற்றொரு வஸ்திரத்தைக் கொடுத்து அதை உடுத்திக்கொள்ளும்படி செய்தனர். இப்படியாக இருவரும் அன்று முதல் மனமொத்து அளவளாவி வாழ்ந்து வந்தனர். தேவதேவியின் சபதமும், பகவானுடைய பிரதிக்ஞையும் ஈடேறின.

நாள் பல சென்றன. தேவதேவி விப்ரநாராயண ரிடமிருந்த பொருள்களை யெல்லாம் கவர்ந்து கொண்டு, தன் காதலையும் தீர்த்துக் கொண்டவளாய், தன் இல்லம் சேர்ந்தாள். விப்ரநாராயணர் அவள் மேலுள்ள அன்பு மேலிட்டால், பிரிவைச் சகியாது அவளைத் தொடர்ந்து செல்ல, அவள் தன் ஆட்களுக்குச் சொல்லி விட்[illegible] வெளிப்புறத்திலேயே நிறுத்திவைக்கும்படி செய்தனள். [illegible] விப்ரநாராயணர் என்ன செய்வார்! தெருத் திண்ணையிலேயே [illegible]த்துக்கொண்டு, தன் நிலைமையைப் பற்றி மிக வருந்தினர்.

வேசையின் சேர்க்கை இவ்வளவு கொடியதாய் இருக்கிறது. பலகவன் பொருளுக்கு ஆசைப்படுவான். எமனோ ஆவியைக்

கொண்டு செல்பவன், உடலோ ஒருவித உபயோகமு மற்றது. அப்படிப்பட்ட உடல், பொருள், ஆவி மூன்றையும் கொள்ளை கொள்பவர் வேசையர் ஆவர். "ஆன முதலில் அதிகம் செலவானால் மானமழிந்து மதிகெட்டு, போனதிசை எல்லார்க்கும் கள்ளனாய், ஏழ்பிறப்பும் தீயனாய், நல்லார்க்கும் பொல்லனாம் நாடு" என்பதை வேசையர் மோகத்தில் வீழ்ந்து பொருள் முதலிய அனைத்தையும் இழந்து துன்பமடைபவர்களுக்கே சொல்லலாம். ஆழ்வாரும்,

"சூதனாய்க் கள்வனாகித் தூர்த்தரோடிசைந்த காலம்
மாதரார் கயற்கணென்னும் வலையுள் பட்டழுந்துவேனை
போதரே யென்று சொல்லிப் புந்தியுள் புகுந்து தன்பால்
ஆதரம் பெருகவைத்த அழகனூர் அரங்கமன்றே" என்றும்

"மெய்யெல்லாம் போகவிட்டு விரிகுழலாரில் பட்டு
பொய்யெல்லாம் பொதிந்து கொண்ட போழ்க்கனேன் வந்து நின்றேன்"

என்று கூறியுள்ளார்.

பெரியாழ்வாரும்.

"ஆசைவாய்ச் சென்ற சிந்தையராகி
அன்னை அத்தன் என் புத்திரர் பூமி
வாசவள் குழலாளென்று மயங்கி
மாளுமெல்லைக்கண் வாய் திறவாதே"

என்றார். ஆனதால் பரத்தையர் சகவாசத்தைக் கனவிலும் கருதாதிருப்பதே உத்தமம். தற்காலம் கலிகால மாகையால், அவர்கள் அதே தொழிலாக உள்ளார்கள். ஒரு பெண் பிள்ளையை நம்தாயென்றும், ஒரு ஆண்பிள்ளையை நம் சகோதரனென்றும் நினைப்பதை விட்டு, இவ்வாறு தொழிலாகவேயுள்ள வேசையர்களை ஆதரிப்பது முற்றுந் தவறாகும். ஆழ்வார்களுக்கும் இவ்வித இடையூறுகள் நேர்ந்திருக்கிறதென்றால் அற்ப மானிடர்களாகிய நமக்கு இன்னும் அதிகமாகவே தோன்றும். இருந்தாலும் ஒரேவிதமான நிலையுள்ள மனதோடு, எம்பெருமான் சர்வமயம் என்பதை நன்கு மனதில் ஊன்றி அவனடியைத் தியானித்திருப்போமாக.

(தொடரும்)

யாதவர்,

# "திருப்பள்ளி யெழுச்சி."

திரு. ஆரியூர்-வ- பதுமநாப பிள்ளை,

பாடியன.

சமரசக் கதிரவன் சார்ந்தனன் கிழக்கில்;
சத்தியப் பேரொளி பரந்த தெங்கணுமே;
நமது புன் பேதைமை இருள் மறைந்ததுவே;
நற்றொண்டர் மொழிகளும் சங்க நல்லொலிபோல்
இமயந் தொட் டெழிற்குமரியின் முனை வரையும்
எங்கணும் முழங்கின; மழுங்கிய(து) அச்சம்;
எமதிறை கோவிந்தன் இணையடி இறைஞ்சி
யாதவரே! பள்ளி எழுந்தருளீரே! (1)

பொழிலிடைச் சுரும்பினம் பூமது உணல்போல்,
போத மெய்திட தெய்வ சரிதைந லின்பம்
மொழிவரு மகிழ்வொடு செவி வழி நுகர்வர்;
முகுந்தன தருட்புகழ் வழுத்துவர் பலரும்:
இழிசெயலினர் வலி ஒடுங்கியே மறைந்தார்;
எங்கும் புத்துணர்ச்சியே பரவிய தினிதில்:
எழிலிறை கண்ணனின் திருவுளம் மகிழ
யாதவரே! பள்ளி எழுந்தருளீரே! (2)

கவலையற்(று) உரிமையிற் களிக்கும் புட்குலங்கள்
ககனத்தில் பறந்தெங்கும் திரிவதை நிகர்த்து
உவகையோ(டு) உயர் தொண்டர் பலவிடங்களிலும்
உயர் பணி செய எங்கும் உலவுகின்றனரே!
அவப்பொழு(து) இனிச் சிறிதாயினும் கடத்தல்
அவமானம் அலவோ நம் ஆயர்கட் கினிமேல்,
எவருமே வியந்திட பணி புரிந்திடவே
யாதவரே! பள்ளி எழுந்தருளீரே! (3)

'புல்லிய சோம்பரைத் துறந்தெழுந் திருந்தே
புறப்படுவீர் தொழில் புரிந்திட' எனவே
சொல்லிடல் போற் கூவும் சேவல்கள் போல
தொண்டர்கள் பயன் கருதாப் பணி புரிய
நல்லியல் மனத்தொடு உழைத்திட அழைப்பார்;
நாரணர்க்கே அடிமைப்பட்டு வாழ்வீர்!
இல்லினிற் பெருஞ் செல்வம் எனும் பசுப்பேனும்
யாதவரே! பள்ளி எழுந்தருளீரே! (4)

கன்று தாய் நினைந்(து) 'அம்மா' எனக் கதறல் நிகர்த்து,
கரும வீரர்கள் பலர் தினந்தொறும் படும்பல்
வன்றுயர் அகன்றிடத் தாயருள் பெறவே
வழுத்துவர் பாரத மாதாவின் பெயரை;
அன்பொடும் அனைவரும் பணிசெயல் வேண்டும்;
ஆயர் உட்பிளவுகள் அகன்றிட வேண்டும்;
இன்ப ஒற்றுமையினைப் பரப்பிட வேண்டும்;
யாதவரே! பள்ளி எழுந்தருளீரே! (5)

கதிரவன் ஒளியினால் தடத்திடைக் கமலம்
களிநுற விரிதல்போல், மெய்யறிவொளியால்
மதி நனி விரிந்திட, பொருளிலா மூட
வழக்கங்கள் இழிவெனும் உணர்(வு) உதித்ததுவே!
நதியினிற் படிந்திட நடந்தனர் பலரும்;
நாடும் ஒற்றுமைப் புனல் ஆடுதல் வேண்டும்;
எதிபதி உடையவர் சமயம் பின்பற்றும்
யாதவரே! பள்ளி எழுந்தருளீரே! (6)

கருணையின் பெருக்கினால் கலந்துறவாடி
காவறியா மனத் தன்பர்களோடும்
திருவிளையாடல்கள் பலவும் செய்திடவே!
தெய்வத் தன்மையினையும் சிந்தியாதவனாய்
அருள் திரு நாரணன் தோன்றிய குலமாம்
ஆயர் தங்குலம்: அதன் சிறப்பினை உணர்ந்தும்
இருள்பெரு மயக்கத்தொ(டு) உறல் இனி நலமோ?
யாதவரே! பள்ளி எழுந்தருளீரே! (7)



"கண்ணனுக்கினியநற் குல மெங்கள் குலமே;
காவலர் பாவலர் பலர்ப் பெற்ற குலமே;
வெண்ணெய் பால் தயிர் தந்து வளம் கூட்டும் குலமே;
மெய்யுணர் வைணவத் தனிப்பெருங் குலமே;
தண் முல்லை நிலத்துறை பழந்தமிழ்க் குலமே;
தனக்கிணை இல்லாத குலம்"-என மகிழ்வீர்!
எண்ணறு பிள(வு) இன்று எய்தில், என் பயனும்?
யாதவரே! பள்ளி எழுந்தருளீரே! (8)

கல்வியில் விழைவின்றிக் காலத்தைக் கழித்தீர்!
காட்டிலும் மேட்டிலும் ஆட்டினை ஓட்டிப்
புல் வெளித் திரிதலே குலத்தொழில் எனவே
புகன்று பல் பொழுதுகள் போக்கினீர் பழுதே!
செல்வர்கட்(கு) அஞ்சியே சிறுமைப்பட்டீரே!
தினமும் நம் குமாரரைப் பயில்வித்(து) அம் முறையில்
இல்லினை அறிவின்றி ஏங்கச் செய்தீரே!
யாதவரே! பள்ளி எழுந்தருளீரே! (9)

தங்குல வளர்ச்சியில் ஆர்வங்கொள் பலரும்
தத்தம் முன்னேற்றத்தின் பொருட்டுழைக்கின்றார்;
நங்குலத்தவர் இன்னும் துயில்வது நலமோ?
நாட்டினில் சிறப்புறும் வேட்கையும் இலையோ?
எங்குலத்திறை கண்ணன் இணையடி பரவி,
இழிவுறு பேதைமை இனி விரைந்தகற்றி
இங்கு நன்மதிப்பொடும் இலங்கிடல் வேண்டும்;
யாதவரே! பள்ளி எழுந்தருளீரே! (10)

---

குலாபிமானிகளே! நீங்கள் இவ் யாதவர் திருப்பள்ளி எழுச்சியை அசிரத்தையாக எண்ணிப் படிக்காமல் விட்டு விடவோ அல்லது ஒரு முறை படித்து நிறுத்திவிடவோ செய்யாதீர்கள். இதனைப் பன்முறை படித்து, "தங்குல வளர்ச்சியில் ஆர்வங்கொள் பலரும் தத்தம் முன்னேற்றத் தின் பொருட்டுழைக்கின்றார். நங்குலத்தவர் இன்னும் துயில்வது நலமோ நாட்டினிற் சிறப்புறும் வேட்கையும் இலையோ?" என்ற தொடர்களை மனத்திற் பதித்து இனிக் குலமுன்னேற்ற மார்க்கங்களையும் சிறிது கவனியுங்கள். ப-ர்.

# அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கென்றால் அறிவுடைய ஆண்களுக்குக் கல்வி எதற்கு?

திரு. சா. ஆண்டியப்பா.

அன்பர்களே! நமது தமிழ்நாட்டில் பலர் கடவுளால் படைக்கப்பெற்ற ஜீவராசிகளில், பகுத்தறிவுடன் படைக்கப்பட்ட மக்கள் கூட்டத்தில் ஒரு சாராரை உயர்த்தியும், மற்றொரு சாராரை மிகத் தாழ்த்தியும் நடத்தி வருகின்றனர்.

பிறப்பினால் உயர்வு தாழ்வு என்பது கிடையாது. அப்படி இருக்க நமது நாட்டிலுள்ளோர் ஒருவருக்கொருவர் தீண்டக்கூடாதென்றும், தாம் உண்ணும் உணவுகளைப் பார்க்கக்கூடாதென்றும், சொல்லி அதைச் செயலிலும் காட்டி அடிமைப்படுத்தி வருகின்றனர். இதைப் போன்றே நம் குடும்பத்திலுள்ள அன்னைகளை, சகோதரிகளை, மிகவும் கொடுமையாக அடிமைப் படுத்தி வாழ்கின்றனர். அந்தோ! அவர்கள் மோகத்தை அடக்கும் கருவிகளாக, அடுப்பூதிகளாகக் கருதப்படுகின்றனர்.

கடவுளால் வித்தியாசமில்லாமல் படைக்கப்பட்ட ஆண், பெண், மக்களில் நம் பெரியோர்களால் பெண்கள் அறிவிலிகள், பேதைகள், அடிமைகள், கோழைகள் எனச் சொல்லப்பட்டு அதையே தற்காலத்தில் உண்டாக்கும் சில புத்தகங்களில் எழுதி மற்றுள்ளவர்களும் படித்து அவ்விதம் சொல்லுகின்றனர்.

பெண்கள் படிக்கக் கூடாது, படித்தால் புருஷர்களுக்கு மாறாக நடப்பார்கள், சமைப்பதற்குத் தெரியாமல் போய்விடும் எனச் சொல்லி அதற்குத் திருஷ்டாந்தமாக அரை குறையாகப் படித்து புத்தியில்லாமலிருக்கும் சில பெண்களைச் சொல்லுகின்றனர். உலகில்



படியாமல் கெட்டவர்களும், படித்துக் கெட்டவர்களும் ஆண், பெண் இருபாலரிலும் இருக்கின்றனர். அப்படியிருக்கப் பெண்கள் மாத்திரம் கெட்டுவிடுவார்கள் என்று சொல்வது அறியாமையாகும். படித்த ஆண் மக்கள் புத்தியில்லாமலிருப்பதை நாம் பார்க்கவில்லையா? அவ்விதமிருக்கிறார்களென்று நினைத்து ஆண் மக்களைப் படிக்கவேண்டாமென்று சொல்லக் கூடியவர் ஒருவரும் இல்லையே. இதிலிருந்து ஆண்களுக்கென்று ஒரு சட்டம் கடவுளால் விதிக்கப் பட்டிருக்கிறது என்று தானே நீங்கள் நினைக்கிறீர்கள்?

முன்காலத்தில் பெண்கள் வீரமுடையவர்களாகவும், பண்டிதைகளாகவும், கணவருக்கு ஏற்ற சமயத்தில் தக்க நியாயத்தை எடுத்துச் சொல்லி அவர்களை நல்வழிப்படுத்திய பெண்களும் இருந்தார்களென்றும் நாம் நூல்களில் வாசிக்கவில்லையா? பெண்ணாய்ப் பிறந்த ஔவைப் பிராட்டியாரின் சரித்திரத்தைப் படித்த உங்களுக்கு இன்னும் பெண்களிடத்தில் இரக்கம் வரவில்லையா? சாவித்திரி, தமயந்தி, கண்ணகி, வாசுகி, போன்ற கற்புடைய பதிவிரதா சிரோன்மணிகளின் சரித்திரத்தைப் படிக்கும் உங்களுக்கு இன்னும் அபிமானம் வரவில்லையே? பெரியோர்களே! படித்தவர்கள் கெட்டுப் போய் விடுவார்களென்று எந்த நூலிலாவது கூறப்பட்டிருக்கிறதா? கூறப்பட்டிருந்தாலும் அது தகுதியுடையதுதானா என எண்ணிப் பாருங்கள்.

பெண்கள் படித்தால் இப்பொழுது அவர்களிடம் இருக்கும் அறிவும், ஒழுக்கமும், மழுங்கிவிடுமென்றெண்ணுகின்ற அன்பர்களே! இயற்கையிலேயே அறிவுடைய நீங்கள் ஏன் பள்ளியில் சென்று வீணாகக் காலத்தையும் பொருள்களையும் செலவு செய்து படிக்கிறீர்களென்பதுதான் சிறியேனது கேள்வி? படித்தால் கெட்டுவிடுவார்கள் என்றெண்ணக்கூடிய நீங்களே படிப்பதைப் பார்க்க ஆச்சரியமாய்த் தோன்றுகிறது. ஆனால் சிலர் ஆண்கள் படித்தால் கெட்டுப்போக மாட்டார்கள், பெண்கள் படித்தால்தான் கெட்டுப் போய்விடுவார்களென்று சொல்லலாம். அவ்விதம் எண்ண வேண்டாம், புதிதாக அவர்களுக்கென்று தயார் செய்யாமல் நீங்கள் அறிவு வளர்ச்சிக்காகப் படிக்கிறதையே அவர்களுக்கும் ஊட்டுங்கள். அவ்விதம் ஊட்டுவீர்களேயானால் உங்களைப் போன்று அவர்களும் அறிவு பெற்று உங்களோடு ஒத்துழைக்க முன் வருவார்களென்பது திண்ணம். இருபாலரும் கற்றுள்ளதேசமே முன்னேறும்.

மேற்கூறியவற்றிலிருந்து அறிவு வளர்ச்சி பெறவேண்டியது இருபாலருக்கும் அவசியம் என்பது நன்கு விளங்குகிறதல்லவா? இனிமேலாவது பெண்களது அறிவை வளர்க்க முன் வாருங்கள். எந்த வேலையையும் கல்வியறிவுடையர்கள்தான் திறமையாகச் செய்ய முடியும். அது போல அடுப்பூதும் பெண்களுக்கு நாம் கல்வி கொடுத்தால் முதலில் அவர்கள் தமது தொழிலாகிய சமையலில் மிகச் சுத்தமாகவும், சிக்கனமாகவும், செய்வார்கள். எத்தனை வீடுகளில் கல்வியறிவில்லாத பெண்கள் செய்யும் வேலைகளைப் பார்க்க அருவருப்பாயிருக்கிறது. மேலும் அவர்கள் குடும்பத்திலுள்ள உறவினர்களிடம் நடந்து கொள்ளும் விதம்தான் நாம் பார்க்கவில்லையா. படித்தவர்க்கும் படியாதவர்க்கும் வித்தியாசமுண்டும்.

பெரியோர்களே! உதாரணமாக ஒரு வண்டியை எடுத்துக் கொள்ளுவோம். இவ்வண்டியானது குறிப்பிட்ட ஒரு இடத்தைப் போய்ச்சேர அதில் பூட்டப்பட்டிருக்கும் எருதுகள் இரண்டும் ஒருமனப்பட்டு இழுத்தால்தான் நாம் கஷ்டமில்லாமல் போய்ச்சேரலாம். அது போல ஒரு குடும்பமானது செவ்வையாக நடைபெறத் தலைவியும், தலைவனும் ஒருமனப்பட்டு வாழ இருவருக்கும் அறிவுவேண்டும். பெண்களுக்கு முதலில் கல்வியறிவு கொடுக்க மறுத்துப் பின் அவர்களையே நமது பிள்ளைகளுக்கு வாழ்க்கைத்துணைவியாகத் தேர்ந்தெடுத்து அவர்கள் துன்பப்படுவதைப் பார்த்துங்கூடப் பலபேர்கள் இதில் கருத்துக்கொள்ளாதிருக்கின்றனர். கல்வியறிவில்லாத பெண்கள் வாழும் குடும்பத்தை நாம் பார்த்தால் அவர்கள் அற்ப விஷயங்களில் போட்டுக்கொள்ளும் சண்டைகள் சொல்லமுடியா? எந்தக் காலத்திலும் மூடரும் அறிவுடையவரும் ஒற்றுமையாக இருந்து வாழமுடியாது. ஆதலால் அறிவு படைத்தவர்களென்று எண்ணிக் கொண்டிருக்கும் ஆண் பிள்ளைகளாகிய அன்பர்களே! ஆண்டவனால் பெண்களுக்குக் கொடுத்திருக்கும் அறிவையும் மழுக்கிக் கொண்டிருந்தது போல் இனிமேலும் இராமல் அவசியம் பெண்களைப் படிக்க வையுங்கள். இன்றே அதற்கான முயற்சியைத் தேடுங்கள்.

யாதவகுல அன்பர்களே! பெண்பிள்ளைகளைப் படிக்கவைக்கச் சிரத்தை யெடுத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு இடத்திலும் சங்கங்கள் நிறுவிப் பெண்களையும் அங்கத்தினர்களாகச் சேர்த்து அவர்களையும் சீர்திருத்தமுடையவர்களாக்குங்கள். தற்காலம் யாதவ இளைஞர்களெல்லாம் நன்றாகப் படித்து வருகின்றனர். படித்தவர் படித்த



[illegible]யே விரும்புவார்கள். தாங்கள் எடுத்துக்கொள்ளும் வாழ்க்கைத் துணைவியும் கற்றவர்களாகத்தான் இருக்கவேண்டுமென்று கருதுவர். தற்சமயம் யாதவகுலத்தில் 4-வது வகுப்புவரை படித்த பெண்ணைப் பார்க்க முயற்கொம்பாயிருக்கிறது. இனிமேலும் அவ்விதம் இராமல் பெண்களுக்குப் பலதுறையிலும் கல்வியைப் புகட்டிச் சீர்திருத்தமுடையவர்களாக்குங்கள். கல்வியறிவு புகட்டாது வழக்கமென்று சொல்லி மறுத்துக்கொண்டிருந்ததைப் போல் இனிமேலும் இருப்பீர்களானால் வருங்காலத்து அறிவுலகத்தில் எம்போன்ற இளைஞர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பது திண்ணம். நமது சமூகத்தைவிட்டுப் பிறசமூகத்தில் சென்று கலப்புமணம் செய்து இன்புற்று வாழ்வரேயன்றி கல்வியறிவில்லாத இத்தகைய பெண்களோடு ஒத்து வாழ எண்ணார்கள்.

யாதவகுலப் பெண்மணிகளே! நீங்கள் வருங்காலத்துக் கண்மணிகள், உங்களாலேயே நமது சமூகம் நன்னிலையில் வரவேண்டியிருக்கிறது. நீங்கள் எவ்விதம் இருக்கிறீர்களோ அதுபோல்தான் உங்களது பிள்ளைகளும் இருக்குமாதலால் நீங்கள் ஒழுக்கத்திலும், அறிவிலும், சுகாதாரத்திலும் சமூக சீர்திருத்தத்திலும் வருங்காலத்துப் பிள்ளைகளுக்கு வழிகாட்டியாயிருக்க முன் வாருங்கள். இவ்விதம் நீங்கள் செய்து வருவீர்களானால் நமது சமூகம் சீக்கிரத்தில் முன்னேற்றமடையும். நமது யாதவ நண்பனும் வெளிவந்து 3 வருடமாக இதைத்தான் அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கிறான். இதைக் கடைப்பிடித்தொழுகுவாரைப் பார்த்தால் அற்பமென்றே தெரிகிறது. காரணம் சமூகம் இருக்கும் கீழான நிலையை நன்றாக உணரவில்லை. வயதில் முதிர்ந்த பெரியோர்களும் கூட இவ்விஷயத்தை எடுத்துச் சொல்லும்போது நம்மை வெறுக்கிறார்கள். நான் இவ்வியாசம் எழுதக் காரணமும் பல பெரியாரோடு பேசிக்கொண்டிருக்கும்போது அவர்கள் பெண்களுக்குப் படிப்பு எதற்கு? படிக்கவைத்துவிட்டால் அவர்களுக்குப் பணிவிடை செய்வதற்கு ஆள் வேண்டியிருக்கிறது. சொல்வதை அனுசரித்து நடக்கமாட்டார்கள். என்றெல்லாம் சொன்னார்கள். இதற்கெல்லாம் தகுந்த நியாயங்களை எடுத்துச் சொல்லியும் அறியாமையால் மூழ்கியிருக்கும் அவர்களுக்குத் தெரியவில்லை. அதனால்தான் பத்திரிகைமூலமாவது அம்மாதிரிப் பெரியோர்களுக்குத் தெரிவிப்போமென எண்ணி எழுத முன் வந்தேன்.

அன்பர்களே! சிறியேன் முற்கூறிய விஷயங்களையெல்லாம் நன்றாய் உங்களது அறிவைக் கொண்டு எண்ணிப் பார்த்து நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுகிறேன். காலசக்கரம் சுழன்றுகொண்டே வருவதால் மெத்தனமாக இராமல் ஆண், பெண், இருபாலருக்கும், முக்கியமாகக் கூறுமிடத்துப் பெண்களுக்கு நன்றாகக் [illegible]யறிவு புகட்டி அவர்களை நல்வழிப்படுத்துங்கள். இதற்கு எல்லாம் வல்ல நம் இறைவனும் துணை புரிவாராக.

# பிணியும் மருந்தும்.

திரு. வீராசாமிபிள்ளை.

"நோய் நாடி நோய்முத லாடி யது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்"

இதன் பொருள். (ஆயுள் நூலைக்கற்ற பண்டிதர்கள் சிகிச்சை செய்யுங்கால்) நோயுள்ளாரிடம் நிகழ்கின்ற நோயை அஷ்டவிதப் பரிசைகளாலும் இன்ன நோய் என்பதைத் துணிந்தறிந்து பிறகு அந்நோய் வருதற்குரிய காரணங்களைச் சுருதி யுக்தி அநுபவங்களால் நன்காராய்ந்து தெளிந்து அந்நோயைத் தீர்க்கும் உபாயமாகிய மருந்தின் தன்மையை அறிந்து, அம்மருந்துகளைச் செய்யும் வழியறிந்து (நோயாளிக்குத் தக்க மருந்தை) ஆராய்ந்து தவறுதல் உண்டாகாமற் செய்யக் கடவர்"

ஆயுர்வேதம் நன்குணர்ந்த பெரியோர்களும்; மணி, மந்திர, ஔஷத வன்மையுடைய சித்த புருஷர்களும், அந்நோயினைத் தொகுத்து நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பது எனக் கூறியிருக்கின்றனர். அவற்றுள் சில பிணிகளை மருந்து கொடுத்தும், சில நோய்களை சஸ்திரம் (கத்திகொண்டறுத்தல்) காரம் க்ஷாரம் முதலிய சிகிச்சைகளைச் செய்யும் வைத்தியராயினோர் சுகப்படுத்துவர்; இன்னும் கற்றறிந்த பண்டிதர் சிகிச்சையை மூன்றுபாகுபாடுபடுத்தி தேவவைத்தியம், மானுட வைத்தியம், இராக்ஷத வைத்தியம் எனக் கூறுவர். தேவவைத்தியம் பஸ்ம, சிந்தூரம், பதங்க முதலிய கொண்டு செய்வது. மானுடவைத்தியம் வனமூலிகைகள் வேர்வகைகள் முதலிய சாகவஸ்துக்களால் கஷாயம், மாத்திரை, லேகியம், சூர்ணம், வடகம், கற்கம், எண்ணெய் கிருதம் முதலியவைகளைச் செய்து சிகிச்சை செய்வது. இராக்ஷதவைத்தியம் கத்திகொண்டறுத்தல், துளையுற்ற ஊசியில் மருந்தை நிரப்பித் தேகத்தில் இடமறிந்து உட்செல்லப்பீச்சிட்டு இரத்தம்வழியாகச் சிகிச்சைசெய்தல் காரம் க்ஷாரம் ஆகியவற்றாலும் வேது கொடுத்தல் புண்ணுக்கல் முதலிய சிகிச்சைகளாலும் சுகப்படுத்தல். இம்மூவகை வைத்தியத்தைத் தொகைவகை விரிவாகக் கூறும் நூல்கள் பலவுள; இவைகள்



வைத்தியராயினோர்க்கு மாத்திரம் பயன்தரும். வைத்தியர், வைத்தியரல்லார், பெண்கள் முதல் பேதையராயினோர் யாவரும் எளிதில் அறியக்கூடிய விதமாக "நோயும் மருந்தும்" என்னும் தலைப்புக் கொண்டு நம் யாதவமித்திரன் மாதந்தோறும் பரக்கக்கூறிவருவதை உய்த்துணர்ந்து இரக்ஷண்ணிய கர்த்தாவாகிய கண்ணபிரான் திருவருளால் சுகம் பெறுவாராக.

## கக்குவான் (கக்குவாய்)

இத்தொத்து நோய் உலகில் பரவிக் குழந்தைகளையும் வயது முதிராத சிறுவர்களையும் துன்புறுத்தும். இது, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்களையுடைய கார்காலம், கூதிர் காலங்களில் தான் விசேஷமாய்ப் பரவும்; இது முற்கூறியகாலவரையறையின்றியும் பரவுவதுண்டு. இந்நோய் குழந்தைகட்கேனும் சிறுவர்க்கேனும் ஒரு முறை கண்டு குணமுற்றால் பின்பு ஆயுள் பரியந்தம் வருவதில்லை. இது அற்ப சுரத்தையும், வாந்தியையும் பூர்வரூபமாகப் பெற்றிருக்கிறது.

இந்நோய் ஆரம்பத்தில் ஜலதோஷம் கண்டிருப்பதுபோல் தோன்றிப் பின்னர் ஒருவித தொனியோடு இருமல் உண்டாகும். இந்தக் கொடிய இருமல் விட்டு விட்டு வந்து ஒரே சேர்க்கையாய்க் கண்டார் அச்சமுறும்படி (உயிர் நீங்கி வருமோ என்னவோ என்று பயப்படும்படி) கஷ்டப் படுத்தும். இது குழந்தைகள் பருகும் பாலின் தோஷத்தாலும், ஜலதோஷத்தாலும் வாய்வு அதிகரித்து, மார்பினுள்ளிருக்கிற சிலேஷ்மத்தை (கபத்தை) ஒவ்வொரு வேளை இளக்கும் தருணத்தில் பிறக்கும். அப்போது மிகுந்த சப்தத்தோடு பிரபலமான துரித இருமல் உண்டாக்கும். சில வேளைகளில் இரத்தமும் கபத்தோடு வெளியாவதுமுண்டு; இந்நோய் உயிருக்கே சில காலங்களில் இறுதி கொடுப்பதும் உண்டு. இந்த நோய் இரண்டு மூன்று வாரங்களாவது இரண்டு மூன்று மாதங்களாவது இருந்து நோயுற்ற சிறு குழந்தைகளைத் துன்புறுத்தும். இது 8, 10, 20 நாட்கள் வரையில் இருமலும் சுரமும் அதிகமாய்க் காணும். ஜலதோஷம், மூச்சடைப்பு, திணறல், தேக உஷ்ணம், நெஞ்சில் கர்முர் என்னும் சப்தம் இவைகளும் காணப்படும். சப்த வேணுவைக் கொண்டு கேட்டால் கடலிரைச்சல் போல் தொனி கேட்கும். இந்நோய் விட்டு விட்டு வரும்போது குழந்தை படுக்கையில் தங்க

மாட்டாது. இருக்க இருக்கப் பத்து நாளைக்குப் பிறகு, சுரம் கொ சமாய்த் தணிந்து சிறிது வேர்வையும் பிறந்து தணியும்; அப்போ சிறிது வலித்துக் கொண்டு தாங்க முடியாமல் ஏங்கும், இருமும். கண்களில் ஜலம் கலங்குவதோடு முகம் தேகம் யாவும் செவந்து காணும், பல் கடிப்பும் உண்டாகும். இவ் இருமல் வருவது குழந்தைகட்குத் தெரியுமாகையால் எழுந்து ஓடித் தன் தாய் தந்தையர்களையாவது தூண்களையாவது கட்டிக்கொண்டு இருமும். மூச்சிணாலோடு ஓயாத இருமல் உண்டாவதால் கண்கள் பிதுங்கிக் கலங்கிச் செவந்து தோன்றும்; இருமும்போது சுவாசாசயத்துக்குச் செல்லும் மூச்சுக்கு உள்வழியின் துவாரம் சிறிது நெருக்குற படியால் செல்ல மாட்டாமல் இழுப்புப் போன்ற ஒரு சத்தம் உண்டாகி ஏங்கலை உண்டாக்கும். இந்த ஏங்கலைக் கொண்டே இது கக்குவான் என்பதை யாவரும் உணருவார்கள். இது குறுமாந்தம் என்ற கொடிய இழைப்பு வியாதிபோலவே இருமல் சத்தம் உண்டாகும். இத்தாங்கொறு வியாதி சிறிது நேரம் விட்டவுடனே குழந்தை வியாதி இல்லாதது போலவே ஓடி விளையாடும். ஒருவேளை இருமல் நிற்கும்போது தின்ற சாதம் குடித்த பால் முதலியவற்றை வாந்தி பண்ணும். குழந்தை அப்படி வாந்தியெடுத்த போதிலும் தின்பண்டங்களில் அதிக விருப்பம் காட்டும்.

இருமல் வருகிறகிரமம் ஒரு ஒழுங்காய் இருக்கும். அல்லது ஒழுங்குதவறி வருவதும் உண்டு; ஒரு தினத்துக்கு இரண்டு மூன்று தடவையாவது அதற்கு மேலாவது இருமல்வரும். ஒரு மணி நேரத்துக்குள் அநேகதடவை வந்து வந்து தொந்தரவு செய்தலும் உண்டு. சிலவேளை இக்கக்குவான் வியாதி இரண்டு மூன்று வாரத்துக்குள் சௌக்கியமாய்விடும். சிலவேளை மாதக்கணக்காயும் இந்நோய் நீங்குவதில்லை. பிரதமத்தில் கூறியபடி மழை காலத்தில் இந்நோய்கண்டால் விரைவில் தணத்துக்குவராமல் பேயாட்டம் ஆட்டி வைக்கும். இந்த வியாதியோடு வேறு கப சம்மந்தமான வியாதிகள் வலிப்புகள் தொந்தமாய் வருவதுண்டு. குழந்தைகள் இருமும் அதிர்ச்சியால் மலம் மூத்திரம் இவைகள் வெளிப்படுவதுண்டு.

இந்த வியாதி அற்பமாய் இருந்தால் மருந்தொன்றும் வேண்டியதில்லை. எனினும், குழந்தைக்குக் கம்பளிப்போர்வை உடை இவைகளைத் தரிப்பித்து, குளிர்காற்று, வாடைக்காற்று இவைகளில் குழந்தைகளைத் தங்கவிடாமல் வீட்டு அறைக்குள் வைத்துப் பா



க்கவேண்டியது. சத்துள்ள உணவுகொடுத்து ஸினிக்தகாரிகளான (நாவில் குளிர்ச்சியுடன் நீர் பெருக்குவதான) கஞ்சியினங்கள் முட்டை, பால், கீரையினங்கள், கற்கண்டு, தேன் முதலியவைகள் கொடுக்கவேண்டியது. நடுமுதுகில் கடுகு அரைத்துப் பற்றுப்போடலாம். அல்லது கற்பூரத்தைலம் அமனிபூசுதைலம் ஊமத்தைத் தைலம் இவைகளைத் தேய்த்துவந்தால் சுகந்தரும். ரோகம் அதிகரித்து உக்கிரதசையடைந்தால் வேப்பெண்ணெய்த்தைலம் முதலிய தந்து கபத்தை வாந்தி செய்விக்கவேண்டும். படிக்காரம் (சீனக்காரம்) பொடிசெய்து இரண்டு மூன்று உளுந்து நிறை தேனில் கலந்து கொடுக்கலாம். தூதுளைச்சாறு பசுவின்நெய் இவை வகைக்கு ஒரு உத்தரணி எடுத்து அதில் கோஷ்டம் 1காசெடை நுணுக்கிக் கலந்து காய்ச்சி வைத்துக்கொண்டு விரலால் தொட்டு நாவில் அடிக்கடி தடவி வரலாம். இதனால் நோயின் உக்கிரந்தணியும். நத்தை வவ்வாலின் சதை முதலையின் சதை மந்தி என்னும் குரங்கின் சதை, புலிச்சதை இவைகளில் ஒன்றை பச்சையாகவேனும் வற்றலாகவேனும் எடுத்து நெய்யிலிட்டுக்காச்சிப் பொரித்துப் பக்குவம் பண்ணிக் கொடுக்கலாம். மாட்டுத்தோலைச்சுட்டு தேனில் கலந்து கொடுத்துக் குணம் கண்டதுண்டு; மைனா என்னும் நாகணவாய்ப் புள்ளை மயிர்போக்கிச் சிதைத்து நெய்யில் பாகப்படுத்திக் கொடுத்துக் குணமாய் இருக்கிறது. மீன் நெய் தினமும் வியாதி குணப்படும் வரையில் கொடுத்து வரலாம்.

இவ்வியாதியால் வருந்தும் குழந்தைகட்கு "வியாக்கிரியாதி ரசாயனம்" என்னும் மருந்தொன்று கையில் இருப்பது நன்று. அதனைப் பரோபகாரம் கருதி அடியில் எழுதியிருப்பதைக் காண்க. இவ்வியாதி அணுகாதென்று கற்றறியாப்பேதைப்பெண்கள் வெங்காயத்தைமாலைபோல்கோர்த்துக்கட்டுவார்கள். நாய் உருவம் அடித்த காசு, புங்கங்காய் இவைகளில் ஒன்றையாவது இவ்விரண்டையாவது கோர்த்து இடுப்பில் கட்டுவார்கள். நாயின் மூத்திரம், குரங்கின் மலம் இவைகளையும் கொடுப்பார்கள். இதற்குச் செய்யும் சிகிச்சைகள் அனந்தம். என்ன சிகிச்சை செய்தாலும் முடிவுவரையில் இந்த பரிதாபமான வியாதி வசத்துக்கு வராது.

### "வியாக்கிரியாதி ரசாயனம்"

ஆடாதோடையிலைச்சாறு பலம் $3\frac{1}{2}$ துளசிச்சாறு பலம் $2\frac{1}{2}$ கண்டங்கத்தரிச்சாறு பலம் $1\frac{1}{4}$ தேன் பலம் 8. இவைகளை ஒரு

இருப்புச்சட்டியிலிட்டு, சுக்கு மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லி வற்றல் தான்றிக்காய் இலவங்கம், இலவங்கப்பட்டை ஏலரிசி சிற்றரத்தை பேரரத்தை, அதிமதுரம், தாளிசப்பத்திரி சாதிக்காய் சாதிப்பத்திரி இவை வகைக்கு விராகனெடை ½ உலர்த்தி இடித்து வடிகட்டின சூர்ணத்தை முன்கூறிய தேன் சாறுகளோடு கூட்டி அடுப்பிலிட்டு மெதுவாய்க் காச்சி, துழாவிக்கொண்டேயிருந்து நீர் சுண்டி ரசாயனமாய்வரும் பாகுபதத்தில் எடுத்துக் கண்ணாடிப் பாத்திரத்தில் வைத்துக்கொண்டு சுக்குவான் உள்ள பிள்ளைகட்கு காலை, நண்பகல், மாலை ஆகிய மூன்றுவேளையும் இஷ்டரசாயனத்தை விரலால் தோய்த்து நாவில் தடவி உட்கொள்ளக் கொடுக்கவேண்டியது. இரவிலும் 3.வேளை உட்கொள்ளக் கொடுத்துவரலாம். சிறிது சிறிதாய் இரண்டு மூன்று நாள் கொடுத்தால் நோயின் உக்கிரமும் விர்த்தியும் குறைந்து சுகத்தைக் கொடுக்கும்.

## சமூகக் கிளர்ச்சிக்குரிய குறிப்புகள்.

நல்லிருக்கை எஸ். காளிலிங்கம்.

எனதன்புள்ள, யாதவகுல மஹாஜனங்காள்!

உலகில் தற்காலம் ஒவ்வொரு சமூகமும், "கல்வி, தொழில், பொருள், நாகரிகம், ஒற்றுமை, செல்வாக்கு," ஆகிய மானிட இயற்கைக்குகந்த சர்வநலன்களிலும், படிப்படியாக முன்னேற்றமடைந்து வருவதை நீங்கள் கவனித்தீர்களா? பிறமதஸ்தர்கள் எங்ஙனம் உன்னத நிலையைக் கைப்பற்றுகிறார்களென்பதைச் சற்றுலோசியுங்கள். ஏனைய சமூகத்தினர்கள் கூட்டங்கள் கூடி, தினே-தினே, பேசி முடிவு செய்கிறார்களே! அக்கூட்டங்களெதற்கு? அதனாலடைந்த நன்மையாது? ஒவ்வொரு சிற்றூர்களிலும் மற்ற சமூகத்தவர்கள் சபைகள் ஏற்படுத்தியிருக்கிறார்களே! அந்தச்சங்கங்களின் மூலமாக அவர்களின் ஜாதியத்திற்கோ, கல்வி நலனுக்கோ, பிறநலன்களுக்கோ, எவ்வகையால் உரிமைகளைச் சாதித்துக் கொள்ளுகிறார்கள்? சுருங்கக் கூறுமிடத்து "சங்கங்களால்" சமுதாய வர்க்கத்திற்கு அதிக நன்மைகளுண்டெனக் கருதப்படுகிறது.



### "சபைகளும், சங்கங்களும், அதனாலாய நன்மைகளும்."

பொதுவாக நாடு நகரங்கள் செழிப்பதும், கல்வி கேள்விகளில் சிறந்தோங்குவதும், கைத்தொழில், வியாபாரம், இவைகளில் அபிவிருத்தியடைவதும், சமூக சீர்திருத்தத்திற்கும், பொது ஜன சேவைக்கும் அடிப்படையாகத் திகழ்வதும், "சங்கங்களும், சபைகளுமேயாகும்." அயர்லாந்து சுயராஜ்ஜிய மடைந்ததும், பிரான்ஸ் குடியரசானதும், அமெரிக்கா சுதந்தரம் பெற்றதும், சர்வ தேசங்களும் கட்டுப்பாட்டுடன், ஜெனியாவில் நேச பான்மையுடன் கூடுவதும், மேற்குறித்த "சங்கங்களின்" இடைவிடாத ஒத்துழைப்பின் பலனல்லவோ! இன்று நம்மையாண்டு வரும் ஆங்கில அரசாங்கமும் "பார்லிமெண்ட்" என்னும் மஹா சபையாலேயே அரசாட்சிசெய்து வருகிறது. சங்கங்களில்லாத எந்த ஊரும், எந்த மதமும், எந்த ஸ்தாபனங்களும், ஆப்பில் வாச்ச கடுபோலாகுமென்பதைத் தற்கால நாகரிக உலகிலுள்ள எவர்களும் மறுக்க முடியாத உண்மையாகும். மேல் நாடுகளிலுள்ள எந்த மனிதனும், ஒரு சங்கத்தின் அங்கத்தினனாக விருப்பான். ஏனெனில்? அம்மனிதன் ஒரு அரசாங்கத்தின் மூலமடைய முடியாத நன்மைகளை, ஒரு சங்கத்தின் மூலமடைய முடியும். மேல்நாட்டார் தங்களுடைய மதத்தையும், கல்வியையும், கொள்கைகளையும், உலகம் பூராவும் பாவச் செய்ததற்கும் சாதகமாயிருந்ததெது வென்றால், அவர்களால் ஏற்படுத்தப்பட்ட சங்கங்களேயாகும். அச்சங்கங்களினால் தங்கள் வியாபாரத்தையும், கீழ்நாடுகளில் நிலைநாட்டிப் பொருளீட்டிப் புகழடைந்தார்கள். மேல்நாட்டாரின் கொள்கைகளைப் பரப்ப நம்மிந்திய நாட்டில் 700. பெருஞ் சங்கங்களிருக்கின்றன. அவைகளும் 1929 வருடத்தில் நான்கு கோடிப் பவுன்கள் ஆதரவுக்காக அயல் நாடுகளிலிருந்து வந்திருக்கின்றன. மேல் நாட்டார்கள் சங்கங்களுக்காக எவ்வளவு பெரும் பொருள் செலவு செய்கிறார்களென்பதைக் கவனியுங்கள். ஏன்? அவர்களுடைய மதமும், ஜனங்களும், உலகில் உன்னத ஸ்தானத்திலிருக்க வேண்டுமென்ற உயரிய நோக்கங்களுக்காகப் பொருட் செலவைப் பாராது சங்கங்களமைக்கின்றார்கள்.

### "யாதவகுலப் புராதனப் பெருமை."

நமது புராதன யாதவ சமூகமானது அநேக நூற்றாண்டுகள் வரை உன்னத நிலைமையிலிருந்ததற்குப் பல ஆதாரங்களிருக்கின்றன. தற்போதைய உலகவாழ்வில் இதர மதத்தினர் இங்கு குடியேறு

வதற்கு முன், பூர்வம் சந்திரவம்சமென்ற யாதவ குலத்தவர்கள் "விஜய நகரத்தைப் பல நூற்றுண்டுகளாக ஆண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் நமது முன்னோர்களாகிய," மகாபாரதத்தில் குறிப்பிட்டிருக்கும் வீரர்களது சந்ததியாகும். வட இந்தியாவில் கூர்ஜரத்தில் அரசு செலுத்தி வந்த "யாதவ அரசர்கள்" தங்கள் அரசாட்சியைப் பரப்புவதற்காகத் "தட்சணத்தில்" படையெடுத்து வந்து விஜயநகரத்தைக் கைப்பற்றி, விஜயநகரத்தவர்களது ஆதியிடமாகக் கூறப்படும் "ஆனைக்குந்தி" யெனும் பிரபல ராஜதானியில் வெகு காலம், அரசியல் நடாத்தி, சங்கங்களமைத்து, அதன் வாயிலாகக் கல்வி கேள்விகளில், உணர்ச்சி பெற்று, நாடு, நகர, நல்லமைப்பு முதலின்னும் இன்றிமையாப் பல சீர்திருத்தச் சிறப்புகளை, ஏனைய மதத்தினர் கண்டு திகைக்கச் செய்து, பற்பல நன்மைகளையும் சீரிய சிறப்பினைகளையும் அடைந்துள்ளார்கள்.

ஆனைக்குந்தியில் அரசு செலுத்தி வந்த யாதவ அரசர்களினது ராச்சிய விஸ்தீரணம், சிறியதாகவிருந்த போதிலும், சுதந்தரமாகவும் பலமுடையதாகவு மிருந்தது, என்று முகம்மதிய சரித்திராசிரியர் "பெரிஷ்டா" எழுதியிருக்கிறார். கி. பி. 1320 வருடத்தில் டில்லிப் பாதுஷா "முஹம்மது துக்ளாக்," பெருஞ் சைனியங்களுடன் "தக்ஷிணத்தின்" மீது படையெடுத்து வந்து, யாதவ அரசாட்சியைக் கைப்பற்றுவதற்காக, 12. வருடகாலமாகக் கோரமான யுத்தம் நடத்தியும் யாதவ வீரர்கள் வீரத்துடன் எதிர்த்து நின்றும், கடைசியாக அரசாங்கம் வலுவிழந்ததால், வேறு உதவியில்லாமலும், எதிரிகள் கையில் சிக்காமலும், யாதவ வீரர்கள் வடநாட்டு ராஜதந்திரர்களைப் போல் தத்தம் பெண்மக்களை அக்கினியில் பிரவேசிக்கச் செய்து, கத்தியுங்கையுமாகக் கோட்டைக்கு வெளியில்வந்து, சத்துருக்களின் மத்தியில் நுழைந்து, வீரத்துடன் போர்புரிந்து யுத்தகளத்தில் உண்மை வீரர்களது ரத்தப்படுக்கையில் படுத்தார்கள். மன்னனும் தன் மக்களைப் போர்முனைக்கனுப்பி அரச உரிமைக்காகவும், வீரத்தின் பெருமைக்காகவும், போராடிய அன்னார் கடைசியில் யுத்தகளத்தின் செவ்விய இரத்தப் பிரவாகத்தில் வீரத்துடன் மூழ்கினார்கள். இறுதியில் அரசனும் போராடி யுத்தகளத்தில் உயிர் துறக்கும் தருவாயில், ஓ, என்னரியமதமே! உன்புராதன பெருமைக்காகவும், உன்னுடைய வீரஞ் செறிந்த சமூகத்துக்காகவும், உனக்காய், உயிரை ஈந்த என்வீரர்களையும், என்மக்களையும் நினைத்துக்கொள்.



## சென்னை யாதவ வாலிபர் சங்கம்.

(ஜார்ஜ் டவுன் பிராஞ்சு.)

1931-ம் வருஷம், ஆகஸ்டு 30-ம் தேதி ஞாயிற்றுக்கிழமையன்று சென்னை, ஜார்ஜ் டவுன் யாதவ வாலிபக் கிளைச்சங்கத்தின் முதல்ஆண்டுநிறைவிழா, வேலூர் திருவாளர் வரதாரெட்டியார் பீ.ஏ., பி. எல்., அட்வகேட் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் சென்னை புரோகிரசிவ் ஸ்கூல் ஹாலில் நடை பெற்றது. செங்கோட்டை திரு. எல். சட்டநாதக்கரையாளர், பீ. ஏ. அவர்கள் "யாதவர்களின் வருங் காலம்" என்னும் விஷயத்தைப்பற்றித் தமிழ்மொழியில் தெளிவாக வும் விரிவாகவும் பேசினார். அவர், கல்வியே முக்கிய மென்றும் அதை அடையவே முயலவேண்டு மென்றும், நம் குலத்தொழிலாகிய ஆகாத்தலேயே ரசாயன முறைகளில் நடத்திவந்தால் அதிக ஊதியம் பெறலாம் என்றும், யாதவ வாலிபசங்கங்களை அங்கங்கே ஏற்படுத்தி அதன் கொள்கைகளை எல்லோருக்கும் தெளிவுறச் சொல்லுதலன்றி, பல பிரிவினர்களுக்குள்ள வேற்றுமைகளை அறவே யொழிக்கவேண்டு மென்றும் கூறினார். பிறகு அக்கிராசனர் அவர்கள் நம் முன்னேற்றத்திற்கும் நம் நாட்டின் முன்னேற்றத்திற்கும் தீண்டாமையை யொழிக்கவேண்டு மென்றும், சர்வ கலாசாலை பட்டப்படிப்பு பிரயோசனமில்லைஎன்றும், கைத்தொழில்முறைகளைச் சார்ந்த படிப்பையே அன்னிய நாடுகளுக்குச் சென்று கற்று நம் தேசத்தில் கைத்தொழில் முறைகளை முன்னேற்றமடையச் செய்ய வேண்டும் என்றும், இவைகளெல்லாவற்றிற்கும் சரீரத்தைக் காப் பாற்றுதலே முக்கியம். தேகாரோக்கியம், தேகாப்பியாசம் அத் தியாவசியம் என்றும் கூறி முடித்தார். பின்பு வந்தனோபசாரம் முடிந்தவுடன் கூட்டம் இனிது கலைந்தது.

கு. மணிவண்ணன், பி. ஏ. (காரியதரிசி.)

---

## பாளையங்கோட்டை!

பாளையங்கோட்டையில் யாதவ இளைஞர்களிடையே சமூக நல் லுணர்ச்சியை உண்டு பண்ணும் பொருட்டு அன்பர் சிலர் முயன்று ஒரு கூட்டங் கண்டார்கள். அதன் முதல் கூட்டம் கனகவிலாஸ் மந்திரத்தில் வைத்து ஸ்ரீமான் பிச்சை யாதாஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. சங்கத்தின் நோக்கத்தைப்பற்றித் திருவானர்க

ளான வானுவாமலை, ஜோதிநாயகம், ஜயராஜ், ராமசாமி, எட்வின் தாமஸ், ராஜா சுடலைமுத்து, தேவதாஸ் முதலியவர்கள் பேசினார்கள். அது முடிவில் அடியில் வருமாறு நிர்ணயிக்கப்பட்டது. புத்தக சாலை நிறுவல், சமூகச் சீர்திருத்தத்தொண்டு, தேகப்பயிற்சி முதலியவற்றை முக்கியமாகக் கொள்ளவேண்டுமென்பது. இச்சங்கத்திற்கு மாணவர்கள் உள்பட அறுபது அங்கத்தினர்கள் இதுவரையில் சேர்ந்திருக்கிறார்கள். 10 அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு காரியக்கமிட்டி நியமனஞ் செய்யப்பட்டிருக்கிறது. இக் கூட்டத்திற்கு ஸ்ரீமான் ஜோதிநாயகம் அவர்களைத் தலைவராகவும் ஸ்ரீமான் வெங்கிடாஜலதாஸ் அவர்களைக் காரியதரிசியாகவும் பொக்கிஷதாராகவும் தேர்ந்தெடுத்தார்கள். அங்கத்தினர் ஒவ்வொருவரும் 2 அணா வீதம் மாதாமாதம் செலுத்தவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. ஸ்ரீ கனகவிலாசத்தில் ஒரு வாசிப்புச்சாலையும் "ஹாக்கி" விளையாட்டுச்சாலையொன்றும் திறந்திருக்கிறார்கள். விளையாட்டிற்குத் தலைவர்களாக ஸ்ரீமான்களான தங்கய்யாதாஸ், எட்வின் தாமஸ், என்பவர்களைத் தீர்மானித்துத் தினசரி விளையாட்டு நடைபெற்று வருகிறது. 35 மாணவர்களுக்குக் குறையாமல் இதில் கலந்து கொள்ளுகிறார்கள். இவருள் சுப்பய்யா, தங்கய்யா, ராமசாமி, வேலாயுதம், தருமராமானுஜம், ராமதாஸ், எட்வின் தாமஸ், ஜார்ஜ் ஜயராஜ், ராமசாமி, நவநீதகிருஷ்ணன், ஆதிமூலம், முத்தையா, வேலாயுதம், நடராஜன் முதலியோர்கள் பந்தய விளையாட்டிற்குச் சென்று வெற்றிபெற்று வருகிறார்கள்.

இத்தகைய நன் நோக்கங்களோடு உழைத்து வரும் பாளையங்கோட்டை யாதவ இளைஞர் சங்கத்திற்கு யாதவ கனவான்கள் இயன்ற உதவிபுரிய வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எஸ். வெங்கிடாஜலதாஸ், (காரியதரிசி.)

## திண்டுக்கல்!

யாதவர் வாலிப சங்கம் 12—10—31-ஆம் தேதியில் ஸ்தாபிக்கப்பட்டு, புரட்டாசி கடைசிசனிக்கிழமை அன்று பஜனை கோஷ்டிகளுடன் ஒரு பெரிய ஊர்வலம் வந்து அன்று இரவு 12-மணி சுமாருக்குத் தீர்த்தம் திருத்துளாய் பிரசாதம் முதலியவைகள் சுமார் 250 ஜனங்களுக்கு மேல் சங்கத்தின் சார்பாக நிறைவேற்றப்பட்டது.



ஷை சங்கத்தில் சுமார் 105 அங்கத்தினர்கள் தேர்ந்தெடுத்து ஷை அங்கத்தினரைக் கொண்டு பொதுக் கூட்டம்கூடி அதில் இருந்து காரியகமிட்டிகள் 16 பேர் தேர்ந்தெடுத்து ஷை சங்கத்தில் சுமார் 3 கூட்டங்கள் நடைபெற்று, சென்ற கூட்டத்தில் கனம் S. பெருமாள் கோனார் உபாத்தியாயர் அவர்கள் சங்கம் செய்யவேண்டிய வேலையைக் குறித்தும் ஒற்றுமை என்னும் விஷயத்தைப்பற்றியும் உபந்நியாசம் செய்தார்.

ஸ்ரீமான் A. கிருஷ்ணக் கோனார் அவர்கள் முன்னேற்றம் பக்தி என்ற விஷயத்தைப் பற்றி உபந்நியாசம் செய்து கூட்டத்தை அமர்த்தப்பட்டது.

ஷை சங்கம் கனம் R. K. சாமிநாயுடு (யாதவர்) தலைமையின் கீழ் 12—10—31ல் ஸ்தாபனம் செய்யப்பட்டது.

இச்சங்கத்தில் முக்கிய காரியகமிட்டிகளும் சில அங்கத்தினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திரு. கே. காயாம்புக்கோனார், செக்ரட்டேரி.

## காமாக்ஷிபாய்,
### அல்லது
## காதலர் வெற்றி.

(முன் 57-ம் பக்கத் தொடர்ச்சி.)

திரு. ரா. கோவிந்தராஜன்.

ஆத்மா:—ஆபத்தா, நமக்கா, என்ன ஆபத்து? எவ்விதம் நமக்கு ஆபத்து நேரிட்டது? சொல்லடா கண்மணி கோபி! என்ன மேன் மேலும் துக்கப்படுகிறாய்? சீனிவாசா என்ன சங்கடம் நேர்ந்தது? உனக்குத் தெரியாதா? நீயாவது கூறு சீக்கிரம்" என்று சீனிவாசனைப்பார்த்து ஆத்மாபாய் கேட்டாள்.

சீனிவாசன்:—அம்மா எனக்கொன்றும் புரியவில்லை. நாங்களிருவரும் சற்று கோட்டை மைதானம் வரை சென்று வரலாமென்று வீட்டை விட்டு வாசற்படியைத் தாண்டினோம். அப்பொழுது தபால்காரன் தம்முடைய பெயர் விலாசத்திற்கு வந்த ஒரு கடிதத்தைக் கோபியினிடம் கொடுத்துவிட்டுப் போனான். கோபி அக்கடிதத்தைப் பிரித்துப் படிக்கும் பொழுதே அவனது முகம் வரவரக்கோபக்குறியும் துக்கமுமடைந்தது. பிறகு திடீரென்று உள்ளே விரைந்து வந்தான். அவன் பின்னே மனக்கலக்கத்துடன் நானும் அவனைத்தொடர்ந்து வந்தேன். இருவரும் இந்த அறைக்குள் வந்தபோது தாங்கள் கௌரி பட்டத்தருகில் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்ததைக் கண்டோம். உடனே கோபி என்னைச் சந்தடி செய்யாமலிருக்கும்படி சைகை செய்யவே நாங்களிருவரும் அதோ அம் மறைவில் ஒளிந்திருந்து தாம் கௌரியினிடம் முறையிட்டவைகளை யாவற்றையும் கேட்டோம். அவ்வளவுதான் எனக்குத் தெரியும். அக்கடிதத்தில் கோபிக்குக் கோபத்தையும் துக்கத்தையும் உண்டாக்கக் கூடிய சமாசாரம் இன்னது என்றுகூட இன்னும் எனக்குத் தெரியவில்லை" என்றான்.

ஆத்மா:—என்ன, கோபி, என்னகடிதமது? யார், எனக்கு என்ன சமாசாரம் எழுதியிருக்கின்றார்கள்? சொல் குழந்தாய். என்ன மௌனமாக இருக்கின்றாய்? என்று கோபிநாதனைக் கேட்டாள்.

கோபிநாதன்:—அம்மணி, தாயே, நான் சண்டாளன். என்னைப் பத்து மாதம் சுமந்து கஷ்டப்பட்டு ஈன்றெடுத்துப் பாலூட்டித் தாலாட்டிச் சீராட்டிவளர்த்த என் தாயே! லோகத்தில், தாய் தந்தை குரு தெய்வம் என்பார்கள். நான் தங்களுடைய வயிற்றில் கருவிலிருந்த பத்துமாத காலமாகத் தங்களுடைய போஷணையினாலும், தங்களுடைய இரத்த சாரத்தினாலும், தங்களுடைய தேக சிரமத்தினாலுமன்றோ நான் இப் பூலோகத்தில் வந்துதித்தேன்? தாங்களன்றி இம் மாநிலத்தில் நான் எவ்விதம் ஜெனித்திருக்கமுடியும்? ஆகையினால் தாங்களன்றோ எனக்கு முதற்கடவுள்? அப்படிக்கிருக்க, தாயே! தாங்கள் இவ்வுலகில் கஷ்டங்களினிடையே அகப்பட்டுத் தவிப்பதை நான் பாபி என் உணர்ச்சியினாலறிந்தும், என் பாழுங்கண்களால் பார்த்துக் கொண்டு வாளாவிருக்கின்றேனே. (தொடரும்)

வைகாசிமீ" கடைசிக்குள் ஆர்டர் கொடுப்பவர்களுக்கு விலை ரூ 2.

96A

ஸ்ரீராமஜெயம்.



## யாதவமித்திரன் சந்தாதார்களுக்கோர்

# அறிவிப்பு.

யர்வற மதிநல மருளப்பெற்ற பரமகாருண்யரான ஆழ்வார்கள் பன்னிருவர்களால் அருளிச்செய்யப்பெற்ற தமிழ் வேதமாகிய

# நாலாயிர திவ்யப் பிரபந்தம்.

பெரியவாச்சான் பிள்ளை, மணவாள மாமுனிகள் முதலான பூர்வாசாரியர்கள் வியாக்யானங்களுக்கிணங்கிய குறிப்புரையுடனும் ஆழ்வாராதிகள் ஆப்டோன் கலர்ப்படங்களுடனும் சுத்தப் பதிப்பில் வெளியாயிருக்கிறது. யாதவமக்களது ஒவ்வொரு கிருகத்திலும் பிர பந்தம் இருந்து தீரவேண்டியது அவசியமாகையால், இதன் விலை ரூபா நாலுக்கு நமது சந்தாதாரர்களுக்கு மாத்திரம் பிரதி ஒன்றுக்கு ரூபா இரண்டுவீதம் கொடுப்பதாகத் தீர்மானித்திருக்கிறது. பிரபந்தத்திற்கு ஆர்டர் கொடுப்பவர்கள் விபரமான விலாசத்தையும் சந்தா நம்பரையும் குறித்தனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மானேஜர்.

| | விலை | | | சந்தாதாருக்குக் குறைந்த விலை. | | |
|---|---|---|---|---|---|---|
| வால்மீகி ராமாயணம் வசனம் | 15 | 0 | 0 | 13 | 0 | 0 |
| கம்பராமாயணம் வசனம் | 4 | 0 | 0 | 2 | 8 | 0 |
| பாரதம் வசனம் | 8 | 0 | 0 | 6 | 0 | 0 |
| பாகவதம் வசனம் | 4 | 0 | 0 | 2 | 8 | 0 |
| பக்தவிஜயம் வசனம் 6 பாகம் | 6 | 0 | 0 | 4 | 8 | 0 |
| அஷ்டப்பிரபந்தம் | 3 | 8 | 0 | 3 | 0 | 0 |
| குருபரம்பரா ப்ரபாவம் | 3 | 0 | 0 | 2 | 4 | 0 |
| பகவத்கீதை | 1 | 8 | 0 | 0 | 12 | 0 |
| விஷ்ணு புராணம் | 3 | 0 | 0 | 2 | 4 | 0 |
| வில்லிபாரதக்கவி (அரும்பத உரையுடன்) | 4 | 0 | 0 | 2 | 8 | 0 |
| கம்பராமாயணக் கவி | 8 | 0 | 0 | 5 | 0 | 0 |
| ராமர் அஸ்வமேதயாகம் | 2 | 0 | 0 | 1 | 0 | 0 |
| ஆதிபர்வம் | 2 | 0 | 0 | 1 | 0 | 0 |
| விராடபர்வம் | 1 | 4 | 0 | 0 | 12 | 0 |
| ஆனந்த ராமாயணம் | 6 | 0 | 0 | 5 | 0 | 0 |
| நித்யானு சந்தானம் | 0 | 12 | 0 | 0 | 8 | 0 |
| முதலாயிரம் | 1 | 0 | 0 | 0 | 12 | 0 |
| விநோத ரச மஞ்சரி | 1 | 8 | 0 | 1 | 0 | 0 |
| நைடதம் (விசேட உரையுடன்) | 4 | 0 | 0 | 3 | 0 | 0 |
| திருக்குறள் (தெளிபொருள் விளக்க விரிவுரையுடன்) | 3 | 8 | 0 | 2 | 8 | 0 |
| நாலடியார் (உரை) | 1 | 8 | 0 | 1 | 2 | 0 |
| நளவெண்பா (மூலமும் விருத்தியுரையும்) | 2 | 8 | 0 | 1 | 14 | 0 |
| அகத்தியர் தேவாரத் திரட்டு | 1 | 4 | 0 | 1 | 0 | 0 |
| ராமலிங்கஸ்வமி அருட்பா | 4 | 0 | 0 | 2 | 8 | 0 |
| மூவர் தேவாரம் அடங்கன்முறை | 5 | 0 | 0 | 3 | 8 | 0 |
| கந்தபுராண வசனம் | 4 | 0 | 0 | 3 | 0 | 0 |
| விநாயகபுராண வசனம் | 4 | 0 | 0 | 3 | 0 | 0 |
| சூடாமணி நிகண்டு 1-முதல் 12 | 1 | 8 | 0 | 0 | 14 | 0 |

இன்னும் மற்ற வைஷ்ணவ சம்ப்ரதாயப் புத்தகங்களும் தமிழ், தெலுங்கு, நாகரம், கிரந்தம், இங்கிலீஷ் நாவல்களும் இருக்கின்றன. வேண்டியவைகளுக்கு விபரமாக எழுதினால் சகாயமாக அனுப்பி வைக்கிறோம். தபால் செலவு வேறு.



# அஷ்டோத்தர சத நாமாவளி

சமஸ்கிருத உச்சரிப்புக் கிணங்க தமிழில் திருத்தி அச்சிடப்பட்ட தேவதைகளின் அர்ச்சனைக் குரிய நாமாவளிகள் அடங்கியது.

## முதல் பாகம் விலை அணா 6

[இதில் அடங்கிய நாமாவளிகளாவன]

1. விநாயகர் ஷோடச (16 நாமங்கள்)
2. விநாயகர் அஷ்டோத்தர சத (108)
3. சிவன் நாமங்கள்
4. சிவகாம சுந்தரி ஷை
5. சுப்ரஹ்மண்யர் ஷை
6. கிருஷ்ணன் ஷை
7. ராமர் ஷை
8. லக்ஷ்மி ஷை
9. ஆஞ்சநேயர் ஷை
10. சரஸ்வதி ஷை
11. நவக்கிரஹம்: சூரியன்
12. சந்திரன்
13. அங்காரகன்
14. புதன்
15. குரு
16. சுக்ரன்
17. சனி
18. ராகு
19. கேது
20. வெங்கடேசர் அஷ்டோத்ரம்
21. ரங்க நாதர் ஷை
22. பார்த்த ஸாரதி ஷை
23. வரத ராஜர் ஷை
24. நருஸிம்ஹர் ஷை
25. அநந்த பத்மநாபர் ஷை
26. ஸம்பத் குமாரர் ஷை
27. சங்காராசாரியர் ஷை
28. வித்யாரண்யர் ஷை

சமஸ்கிருத உச்சரிப்புக் கிணங்க தமிழில் திருத்தி அச்சிடப்பட்ட

## சகஸ்ர (1000) நாமங்கள்

ஸ்ரீ சிவ சகஸ்ரம் விலை அணா 2
,, விநாயகர் ஷை விலை அணா 2
,, சுப்ரமண்யர் ஷை விலை அணா 2
,, விஷ்ணு ஷை விலை அணா 2
,, ராமர் ஷை விலை அணா 2
,, ந்ருஸிம்ஹர் ஷை விலை அணா 2
,, ஹநுமார் ஷை விலை அணா 2
,, காயத்ரீ ஷை விலை அணா 2
,, தேவீ ஷை விலை அணா 2
,, லலிதா ஷை விலை அணா 2
,, சரஸ்வதி ஷை விலை அணா 2
,, லக்ஷ்மி ஷை விலை அணா 2

## 2-ம் பாகம் விலை அணா 8

[இதில் அடங்கிய நாமாவளிகளாவன]

1. காயத்ரீ அஷ்டோத்ரம்
2. தேவீ ஷை
3. தேவீ கட்க மாலா ஷை
4. லலிதா ஷை
5. உமா ஷை
6. கங்கா ஷை
7. பாலா ஷை
8. காவேரீ ஷை
9. அந்ந பூர்ணீ ஷை
10. வல்லீ ஷை
11. தேவ சேனா ஷை
12. சிவகாமி ஷை
13. காளி ஷை
14. துர்க்கா ஷை
15. அர்த்தநாரீஸ்வரர் ஷை
16. உமா மஹேஸ்வரர் ஷை
17. கைலாஸ நாதர் ஷை
18. தக்ஷிணா மூர்த்தி ஷை
19. நந்திகேஸ்வரர் ஷை
20. ஹரிஹரர் ஷை
21. ஹரிஹர புத்ரர் ஷை
22. மிருத்யுஞ்ஜயர் ஷை
23. பைரவர் ஷை
24. சண்டேஸ்வரர் ஷை
25. ஸோமாஸ் கந்தர் ஷை
26. வீரபத்ரர் ஷை
27. நடேசர் ஷை
28. கணேச ஷோடச மூர்த்தி நாமம்
29. கணேச அஷ்டோத்ர சத நாமம்
30. ஷண்முக ஷோடச நாமம்
31. ஷண்முக ஸப்த விம்சதி நாமம்
32. ஷண்முக ஏக பஞ்சாசத் நாமம்
33. ஷண்முக அஷ்டோத்ர சத நாமம்
34. ஸ்ரீமந் நாராயணர் ஷை
35. சடகோபர் ஷை
36. ராமானுஜர் ஷை
37. வேதாந்த தேசிகர் ஷை

## சகஸ்ர நாம கதம்பம்

ஷை 12 சகஸ்ரங்களும் ஒரு கட்டடம்
விலை ரூபா 1-8-0

சகஸ்ரங்கள் எல்லாவற்றிலும் முதன்மை பெற்ற ஓங்கார சகஸ்ரம் என்னும் பிரணவ ஸ்தோத்திரம்: விலை அணா 2

**தண்டியலங்காரம் மூலமும் உரையும்:** இந்நூல் தண்டி என்னும் ஆசிரியரால் இயற்றப்பட்டது. காவ்ய தர்சம் என்னும் வடமொழி அலங்கார சாஸ்திரத்தின் தமிழ் மொழிபெயர்ப்பா யுள்ளது. அணி இழந்த பெண் எங்ஙனம் வனப்புறுளோ, அங்ஙனமே அலங்காரமற்ற நூலும் அழகி தன்றும். தமிழில் அணி இலக்கணத்தை மாத்திரம் விரித்துணர்த்தும் பழைய தமிழ் நூல் இத் தண்டி யலங்காரம் ஒன்றே. இதன் விலை ரூபா 1-12-0.

**சோணசைலமாலை மூலமும் உரையும்:** ஸ்ரீ சிவப்பிரகாச ஸ்வாமிகள் இயற்றிய அரிய நூல். நூதனமாய் இயற்றப்பட்ட விருத்தியுரையுடன்: விலை அணு 12.

**ஸ்ரீ நால்வர் நான்மணிமாலை மூலமும் உரையும்:** ஸ்ரீ சிவப்பிரகாச ஸ்வாமிகளால் சொற்சுவை, பொருட்சுவை, சாஸ்திரக் கருத்துகள் முதலிய அமைய இயற்றப்பட்ட அரியநூல்: நூதனமாய் எழுதப்பட்ட விருத்தியுரையுடன்: விலை அணு 12.

**திருவாரூர் நான்மணிமாலை மூலமும் உரையும்:** ஸ்ரீ குமாரகுருபர ஸ்வாமிகள் இயற்றிய அரிய நூல்: நூதனமாய் எழுதப்பட்ட விருத்தியுரையுடன்: விலை அணு 8.

**திருவெங்கைக் கோவை மூலமும் உரையும்:** அகப்பொருள் இலக்கணத்திற்கு ஓர் சிறந்த இலக்கியமாக விளங்குவதும், துறைமங்கலம் சிவப்பிரகாச ஸ்வாமிகள் அருளியதும் ஆகிய இவ் வரிய கோவை நூல், தமிழ்த் துறையில் இறங்கும் மாணவர்க்கும், தமிழ்க் கடலுள் படிந்து திளைத்து முழுகும் புலவர்க்கும் இன்றியமையாத தாகும்: இதன் விலை ரூ.2-8.

**விவேகசிந்தாமணி மூலமும் உரையும்:** இந் நூல் சிறுவரும் கற்றுணர்வதற்குத் தகுதியான தெளிவான பாடல்களையுடையதாகவும், நீதிகளை எளிதில் போதிக்கக் கூடியதாகவும் இருத்தலால், இது கல்வி பயிலும் மாணவர்க்கும், மற்றவர்களுக்கும் மிக உபயோகமான நூலாகும்: இரண்டு பாகமும் சேர்ந்தது: இதன் விலை ரூபா 1-2 0

**அஷ்டப் பிரபந்த மூலம்:** திவ்ய கவி பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் இயற்றியது. செய்யுள் முதற் குறிப்பகராதியும், நூலாசிரியர் சரித்திரமும்: விலை ரூபா 1

**மாதர் ஒழுக்க இலக்கணம்:** ஸ்திரீகள் நடந்துகொள்ள வேண்டிய முறைமைகளைப்பற்றிக் கூறும் சிறந்த நீதி நூல்: இனிய வசன நடை உள்ளது விலை அணு 4

**ஸ்ரீ குசேலோ பாக்கியானம்:—** குசேலாது திவ்விய சரித்திரத்தைக் கூறும் இந்நூல் வல்லூர் தேவராஜப் பிள்ளை என்னும் வித்வ சிரோமணியால் சொற்சுவை, பொருட்சுவை, அலங்கார முதலிய நிறைய, 772 திருவிருத்தங்களால் இயற்றப்பட்டது; ஒவ்வொரு செய்யுளிலும் வரும் கடின பதங்களுக்கு விசேஷ அரும்பதக் குறிப்புரையுடன் கூடியது விலை ரூபா 1-8-0

**நீதிசூடாமணி உரை** (திருக்குறளின் நீதிகள் அடங்கியது) (புதியபதிப்பு) விலை அணு 12.

**நீதிநூற் கோத்து:** (1-ம். பாகம்) ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வெற்றி வேற்கை, வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி: மூலமும் உரையும் விலை அணு 8.

**நீதிநூற் கோத்து:** இரண்டாம்பாகம் இதில் இனியது நாற்பது, இன்னா நாற்பது, களவழி நாற்பது, கார் நாற்பது, நான்மணிக்கடிகை, ஏலாதி, திரிகடுகம் இவை மூலமும் உரையும் அடங்கியுள்ளன. விலை ரூபா 2.

**நீதிசெய்யுள் திரட்டு·** இதில் பல· அரிய நூல்களில் இருந்து நீதிகளைக் கூறும் செய்யுள்கள் எடுத்து திரட்டப்பட்டுள்ளன: விலை அணு 2

**பாரத நீதி:** வடமொழியில் வியாஸ பாரதத்தில் சொல்லியுள்ள நீதிகள் அடங்கியது விலை அணு 2

**நீதி வெண்பா:** தெளி பொருள் விளக்க விரிவுரையுடன் விலை அணு 4.

**நீதி சாரம்:** தெளிபொருள் விளக்க விரியுரையுடன விலை அணு 4.

**ஆத்திசூடி,** கொன்றை வேந்தன், வெற்றிவேற்கை (இராமாநுஜ கவிராயர் விருத்தியுரையுடன்) விலை அணு 12.

## (3) புராணம்

**காஞ்சிப்புராண வசனம்:** (ஸ்ரீ சிவஞான முனிவர் பிருதிவி ஸ்தலமாகிய காஞ்சி க்ஷேத்திரத்தின் மீது பாடி அருளிய காஞ்சிப்புராணச் செய்யுள்களின் கருத்துக் கிசைய செந்தமிழ் வசன நடையில் இயற்றப்பட்ட அரிய ஸ்தல புராணம்) விலை ரூபா 2-8-0

**மார்க்கண்டேய புராண வசனம்:** (பதினென் புராணங்களில் ஒன்றாகிய மார்க்கண்டேய புராணத்தின் கருத்தை சமஸ்கிருதத்தில் இருந்து தமிழில் இனிய வசன ரூபமாக இயற்றிய அரிய நூல்) விலை ரூபா 1-8-0

**சீகாளத்தி புராணம் மூலமும் உரையும்:** சீ - சிலந்தி, காளம்-பாம்பு, அத்தி-யானை: இம் மூன்றும் பூஜை செய்த திவ்ய க்ஷேத்திரமாகிய சீகாளத்தியின் மீது ஸ்ரீ கருணைப் பிரகாச சுவாமிகள், வேலைய சுவாமிகள், சிவப்பிரகாச சுவாமிகள் இம் மூன்று வித்வசிரோமணிகளும் பாடியருளிய திவ்ய ஸ்தல புராணம்: இந்த க்ஷேத்திரமானது பஞ்சபூத ஸ்தலங்களுள் மகா மகிமை வாய்ந்த வாயு ஸ்தலமாய் அமைந்தது நூதனமாய் எழுதப்பட்ட உரையுடன் விலை ரூபா 2-8-0.

**வேதாரண்ய புராணம்:** (பரஞ்சோதி முனிவர் அருளிச்செய்தது: சருக்கம் 18, செய்யுள் 1178 அடங்கிய திவ்ய ஸ்தல புராணம்: விலை ரூபா 1-0-0

**திருநாவலூர் புராணம்:** ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவதார க்ஷேத்திரமாகிய திருநாவலூரின் மீது பாடப்பெற்ற திவ்ய ஸ்தலபுராணம்: சருக்கம் 9. திருவிருத்தம் 514 அடங்கியது அணு 4.

**அருணாசல புராண வசனம்:** பஞ்சபூத ஸ்தலங்களுள் மிகச் சிறப்புற்ற தேயு ஸ்தலமாகிய ஸ்ரீ அருணாசலத்தின் மகிமையை விளக்கும் பொருட்டு, சைவ எல்லப்ப நாவலர் என்னும் வித்வ சிரோமணி செய்யுள் ரூபமாய் இயற்றியுள்ள அரிய நூலின் இனிய தமிழ் வசனம்: விலை ரூபா 1.

**அரிச்சந்திர புராண வசனம்:** ஆசு கவிராயர் செய்யுள் ரூபமாய்ப் பாடியுள்ள அரிச்சந்திர புராணத்தின் கருத்தை எல்லோரும் உணர்ந்துகொள்ளுமாறு, அதனை இனிய வசன நடையில் இயற்றியுள்ள அரிய நூல்: விலை ரூபா 1-8-0.

**ஆத்திச்சூடிப் புராணம் மூலமும் உரையும்:** கோ பர்வதமாலை என்னும் இவ்வரிய நூல், ஷை பர்வதத்தில் எழுந்தருளியுள்ள ஆதி சத்தீச நாதர் பேரில் ஸ்தோத்திரமாக, ஔவையார் அருளிய ஆத்திசூடி நீதிசூத்திரக் கருத்துக்களையும், அறுபத்து மூன்று நாயன்மார் முதலிய சிவனடியார் சரித்திரங்களையும் சேர்த்து, ஒவ்வொரு செய்யுளின் முதலிலும் ஆத்திசூடி நீதி வாக்கியம் ஒன்று வருமாறு பாடியுள்ள விருத்தப் பாக்கள் அடங்கப் பெற்றது. இந் நூலில், ஒவ்வொரு செய்யுளுக்கும் விளக்கமான பதவுரை யொன் றெழுதப்பட்டு, ஒவ்வொரு செய்யுளின் உரை முடிவில் அதில் அடங்கிய சிவனடியார் சரித்திரம் இனிய வசன நடையில் விரிவாக எழுதப்பட்டுள்ளது: இதன் விலை ரூபா 2.

**திருக்கழுக்குன்ற ஸ்தல புராண வசனம்:** உருத்திர கோடி மஹா க்ஷேத்திர மென்னும் ஷை ஸ்தல புராணத்தின் கருத்தை எல்லோரும் உணருமாறு தமிழில் வசன ரூபமாய் இயற்றியுள்ளது: நேர்த்தியான ஆப்டோன் படங்களுடன்: விலை ரூபா 2.

**பெரிய புராண, திருவிளையாடற் புராண வசனச் சுருக்கம்:** (பாக்கெட் அளவு) விலை ரூபா 1-4-0

**சிவராத்திரி மான்மியம்:** சிவராத்திரியின் மகிமையைப் பற்றி நூதனமாய் எழுதப்பட்ட அரியவசனம்: விலை அணு 5

## (4) தோத்திரம்

**பன்னிரு திருமுறைத்திரட்டு:** (இதில், முதல் எழு திருமுறைகளாகிய மூவர் அருளிய தேவாரமும், எட்டாந் திருமுறையாகிய, ஸ்ரீ மாணிக்கவாசகர் அருளிய திருவாசகமும் திருக்கோவையாரும், ஒன்பதாந் திருமுறையாகிய திருமாளிகைத் தேவர் முதலியோர் அருளிய திருவிசைப்பாவும், சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டும் பத்தாந் திருமுறையாகிய, திருமூல நாயனார் அருளிய திரு மந்திரமும், பதினோராந் திருமுறை ஸ்ரீ திருவால வாயுடையார் முதலியோர் அருளிய திருப்பிரபந்த மாலையும் பன்னிரண்டாந்திருமுறையாகிய ஸ்ரீ சேக்கிழாரருளிய பெரிய புராணமும்: ஆகிய இப் பன்னிரு திருமுறைகளி னின்றும் அரிய பாடல்கள் எடுத்துத் திரட்டப்பட்டுள்ளன): இதன் விலை ரூபா 2-8-0

**ஸ்ரீ கந்தர் அநுபூதி உரை:** அணு 8

**ஸ்ரீ கந்தர் அலங்காரம் மூலமும் உரையும்** அணு ௨

**ஸ்ரீ கந்தர் அந்தாதி உரையும்:** அணு 6

**ஸ்ரீ கந்தர் சஷ்டி கவசம் மூலமும் உரையும்:** விலை அணு 5

**அகஸ்தியர் தேவாரத்திரட்டு மூலமும் உரையும்:** இப் பதிப்பில் சைவ சமயாசாரியர்களாகிய திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள் இம் மூவர் சரித்திரமும், கால நிர்ணயமும் புதியதாய் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளன: விலை ரூபா 1-4-0.

**திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணச் செய்யுள் திரட்டு:** மூலமும் உரையும்: விலை ரூபா 1

**சிவபூஜைத் திரட்டு:** (சைவ சமயாசாரியர் நூல்களிலிருந்து சிவபூஜைக்குரிய செய்யுள்கள் திரட்டப்பட்டது. அணு3

**தேவார திருவாசகத்திரட்டு:** இதில் திருஞான சம்பந்தர் திருநாவுக்கரசர், சுந்தர மூர்த்திகள் இம்மூவர் தேவாரத்தினின்றும், மாணிக்கவாசகர் திருவாசகத்தினின்றும் அருமையான பாடல்கள் எடுத்துத் திரட்டி அச்சிடப்பட்டுள்ளன: மேற்படி நால்வர் சரித்திரச் சுருக்கத்துடன்: விலை அணா 8.

**நாலாயிர திவ்விய பிரபந்த சாரம்:** இதில் ஆழ்வார்கள் அருளிய தமிழ் வேதமாகிய நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் அடங்கிய செவிக்கினிய செந்தமிழ்ப் பாசுரங்கள் திரட்டி அச்சிடப்பட்டுள்ளன: இதன் விலை அணா 8.

**சந்நிதிமுறைப் பிரபந்தங்கள்:** திருவருட் பிரகாச வள்ளலார் என்னும் சிதம்பரம் இராமலிங்க ஸ்வாமிகள் மீது பாடப்பெற்ற அரிய ஸ்தோத்திரங்கள்: அணா 8

**108 திருப்பதித் திருப்புகழ்:** இவ்வரிய நூல் பரம பாகவத கோத்தமராகிய குரவை இராமானுஜ தாஸர் அருளிச்செய்தது: இதில் ஒவ்வொரு செய்யுளின் தலைப்பிலும் அதனதன் சந்தக் குழிப்பும், ஒவ்வொரு செய்யுளின் ஈற்றிலும் பெருமான் திருநாமமும், பிராட்டியார் திருநாமமும், ஆழ்வார் மங்களா சாசனமும், சமீப ரயில்வே ஸ்டேஷனிலிருந்து திருப்பதியின் தூரமும் விளக்கிக் காட்டப் பட்டுள்ளன: இதன் விலை அணா 8

**புஷ்பவிதியும், புஷ்ப பலனும்:** புஷ்பங்களைக் கடவுளுக்குச் சாத்தவேண்டிய விதிகளும், அதனால் உண்டாகும் பலன்களும்: (செய்யுள் ரூபமானது:) ... விலை அணா 3.

**தோத்திரப்பா மாலை:** ... விலை அணா 8.

## (5) சதகம்

**சதகத் திரட்டு (முதல் பாகம்):** (1) அறப்பளீசுர சதகம் (2) குமரேச சதகம் (3) திருவேங்கட சதகம் (4) தண்டலையார் சதகம் (5) கோவிந்த சதகம் (6) எம்பிரான் சதகம் (7) சிவசங்கர சதகம்: ஆக 7 சதகங்கள் அடங்கியது: அணா 12.

**சதகத் திரட்டு (2-ம் பாகம்:** (1) கைலாச நாதர் சதகம் (2) ஐயங் கொண்டார் சதகம் (3) குருநாத சதகம் (4) அலை யாம்பிகை சதகம் (5) அருணாசல சதகம் (6) அண்ணாமலைச் சதகம் (7) வடவேங்கட நாராயண சதகம் (8) தொண்டை மண்டல சதகம் (9) கோகுல சதகம் (10) திருத்தொண்டர் சதகம்: ஆக 10 சதகங்கள் அடங்கியது: விலை ரூபா 1.

**அறப்பளீசுர சதகம் மூலமும் உரையும்:** இச் சதகத்தில் ஒவ்வொரு செய்யுளும் ஒவ்வொரு சிறந்த நீதியைக் கற்பிப்பதாயிருப்பதால், இச் சதகம் இளைஞர்களும், ஸ்திரீகளும், மற்றெவரும் வாசித்துணர வேண்டிய நூலாகும்: அணா 12

**குமரேச சதகம் மூலமும் உரையும்:** அறப்பளீசுர சதகத்தைப் போலவே சிறந்த நீதிகளடங்கியது விலை ரூபா 1.

**ஸ்ரீ பர்த்ருஹரி வைராக்கிய சதகம் மூலமும் உரையும்:** ஸ்ரீ சங்கர பூஜ்ய பகவத் பாதாசாரிய ஸ்வாமிகளின் குருமூர்த்தியும், ஸ்ரீ கோவிந்த பகவத் பாதாசாரிய ஸ்வாமிகளின் புத்திரருமாகிய ஸ்ரீ பர்த்ருஹரி என்னும் அற்புத பிரஹ்மநிஷ்டர் இயற்றிய அரிய நூல்: விலை அணா 3

**ஸ்ரீ பர்த்ருஹரி நீதி சதகம் மூலமும் உரையும்:** விலை அணா 3.

**ஸ்ரீ பர்த்ருஹரி சிருங்கார சதகம்:** மூலமும் உரையும்: விலை அணா 3.

## (6) சரித்திரம்

**ஸ்ரீ நால்வர் சரித்திரம்:** அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகிய சைவசமயாசாரியரின் திவ்ய சரித்திரம்: அவரவர் கால நிர்ணயத்துடன்: அணா 3

**திருவள்ளுவ நாயனார் சரித்திரம்:** ,, 3

**ஔவையார் சரித்திரம்** ... ,, 4

**சாவித்திரி சரித்திரம்** விலை அணா 1

**திருவெண் காட்டடிகள் சரித்திர வசனம்:** பட்டினத்துப் பிள்ளையார் என்னும் திருவெண் காட்டடிகளின் விரிவான சரித்திரம்: ஸ்வாமிகள் அவதார முதல் விதேக முத்தி வரையில்: அணா 12.

**ஸ்ரீ சங்கர விஜயம்:** ஆதி சங்கரர் திவ்ய சரித்திரம்: ஸ்ரீ சங்கரர், சாரதாம்பாள் படங்களுடன் விலை ரூபா 1-4-0

**ஸ்ரீ ராமானுஜ விஜயம்:** விசிஷ்டாத்வைத மத ஸ்தாபகரும், ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்திற்கு ஆசார்ய புருஷராய் விளங்கியவருமாகிய ஸ்ரீ ராமானுஜாசாரியரின் விரிவான சரித்திரம்: ஸ்வாமிகள் படத்துடன்: விலை ரூபா 2.

**ஸ்ரீ மாத்வ விஜயம்:** த்வைத மத ஸ்தாபகரும், சகல லோக பிராணதாரமான ஸ்ரீ வாயு தேவரின் அவதார புருஷருமாகிய ஸ்ரீ மத்வாசாரியரின் விரிவான சரித்திரம்: ஸ்வாமிகள் படத்துடன்: விலை ரூபா 1.

**ஸ்ரீ பக்தலீலாம்ருத வசனம்:** 82 பக்தர்களின் திவ்விய சரித்திரம்: இனிய வசன நடையில் எழுதப்பெற்றது: ரூ. 3.



**ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்:** ஸ்ரீ விவேகாநந்த ஸ்வாமிகளின் குரு மூர்த்தியாகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் அற்புத சரித்திரமும், கதாமிர்தமும், அவர் திருவாய் மலர்ந்தருளிய உபதேச ரத்ன மாலையும்: விலை ரூபா 1-4-0.

**ஸ்ரீ விவேகாநந்த விஜயம்:—** ஸ்ரீ விவேகாநந்த ஸ்வாமிகளின திவ்விய சரித்திரமும், அவர் செய்த அற்புதமான பிரசங்கத் திரட்டும்: விலை ரூபா 2.

**ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் விரிவான சரித்திரம்:** ஜனன முதல் மஹா சமாதி வரையில்: 41 அத்தியாயம், 703 பக்கம்: ஸ்வாமிகள் உருவப் படத்துடன்: விலை ரூபா 3.

**ஸ்ரீ விவேகாநந்தர் விரிவான சரித்திரம்:** (படங்களுடன்) (521 பக்கம்: கொண்டது 1-ம் பாகம்) விலை ரூபா 2. (540 பக்கம்: கொண்டது 2-ம் பாகம்) விலை ரூபா 2. (777 பக்கம்: கொண்டது 3-ம் பாகம்) விலை ரூபா 3.

**பச்சையப்ப முதலியார் சரித்திரம்:** தென்னிந்தியாவில் பிரக்யாதி பெற்ற தர்மப் பிரபுவாகிய காஞ்சிபுரம் பச்சையப்ப முதலியார் சரித்திரமும், அவர்மீது பல வித்வான்கள் பாடிய பாடல்களும் கீர்த்தனங்களும் அடங்கியது: முதலியார் உருவப் படத்துடன் கூடியது விலை அணா 10.

**திவ்ய தேச யாத்திரையின் சரித்திரம்:** வட இந்தியாவிலுள்ள பல திவ்ய தீர்த்த, திவ்ய ஸ்தலங்களில் மஹிமையும் விசேஷங்களும், அந்த ஸ்தலங்களுக்கு இந்நூலின் ஆசிரியர் செய்த யாத்திரையும் (இந்தியா தேசப் படத்துடன்): ரூபா 2

**தக்ஷிண இந்தியர் சரித்திரம்:** தென் இந்தியாவிலுள்ள திவ்ய தீர்த்த, திவ்ய க்ஷேத்ர, திவ்ய பர்வதாதிப் பிரதேசங்களின் முக்கிய விவரங்கள் அடங்கியது: விலை ரூபா 5.

**ஸ்ரீமத் கம்பராமாயண வசனம்:** (மகா கவி கம்ப நாட்டாழ்வார் அருளிய ராமாயணச் செய்யுளின் கருத்துக்கிசைய செந்தமிழ் வசன நடையில் இயற்றப்பட்ட அரிய இதிகாச நூல்.)

| | | |
|---|---|---|
| அயோத்திய வசனம் விலை ரூ. | 1 | 0 |
| ஆரண்ய காண்ட வசனம் | 1 | 0 |
| கிஷ்கிந்தா காண்ட வசனம் | 1 | 0 |
| சுந்தர காண்ட வசனம் | | |

**ஸ்ரீ திலகர் விசாரணை:** ஸ்ரீ திலகர் சரித்திரமும் படமும் அடங்கியது அ. 12

**தங்கீதத்தின் சரித்திரம்** விலை அணா 4

**சிவக்ஷேத்திர விளக்கமும், சிவக்ஷேத்திராலய மகோத்ஸவ உண்மை விளக்கமும்:** சிவ க்ஷேத்திரங்களைப் பற்றிய சகல முக்ய விஷயங்களும் அடங்கியது: விலை ரூபா 1-8-0

## (7) நிகண்டு

**பிங்கல நிகண்டு மூலமும் உரையும்:** பிங்கல நிகண்டு என்பது பிங்கல முனிவரால் இயற்றப்பெற்றது: இவர் ஆதி திவாகரம் இயற்றிய திவாகர முனிவர் புத்திரர். திவாகர முனிவர் இயற்றிய ஆதி திவாகரமானது மிக விரிவாய் அளவின்றிப் பரந்து கிடந்தலின், அவர் புத்திரராகிய மேற்படி பிங்கல முனிவர் அதனைச் சுருக்கி வரையறுத்து இப் பிங்கல நிகண்டை இயற்றினர். இப் பிங்கல நிகண்டு சங்கமருவிய நூலாய் இருப்பதோடு, ஏனைய நிகண்டுகளிலுள்ள பதங்களும், அவற்றிக்கு மேற்பட்ட பதங்களும், பல நூல்களாலும் உணரப்படும் பொருள்களும் அடங்கபெற்றுள்ளது. இதன் விலை ரூபா 2-8-0

**உரிச்சொல் நிகண்டு மூலமும் உரையும்:** இஃது காங்கேயர் என்னும் வித்வ சிரேஷ்டரால் இயற்றபெற்றது: பத்துத் தொகுதிகள் அடங்கியுள்ளது இதன் விலை அணா 8.

## (8) ஜோதிடம்

**ஜோதிட விதானமாலை மூலமும் உரையும்:** (25-படலங்கள் அடங்கியது முதல் ஏழு படலங்களால் கிரகங்களைப் பற்றிய பலா பலன்களையும், அவற்றை கணிக்கும் முறையையும், ஏனைய 18 படலங்களால் சகல கிரியைகட்குரிய நாட்களையும், சுபாசுப, யோகாவயோகங்களையும் பற்றிக் கூறும் அறிய ஜோதிட நூல் விலை ரூபா 1.

**அம்மணீயம், ஐயாசாமீயம், இராஜேஸ்வரம்:** அரிய ஜோதிட நூல்கள் உரையுடன் விலை அணா 8.

## (9) இலக்கணம்

**யாப்பிலக்கண வினா விடை:** யாப்பிலக்கணம் கற்றுச் செய்யுள்பாட ...யோகமான வசன நூல் விலை அணா ...

**அணியிலக்கண வசனம்:** அணியிலக்கணம் கற்று இலக்கியத்தில் பழகு...வருக்கு உபயோகமான வசன நூல் ...பாப் பா 4

...உரையுடன் ...மாலை என்னும் வெண் ...ழுத்த பாட்டியல்

36 J

| (10) பலவித புத்தகங்கள் | ரூ. | அ. |
|---|---|---|
| கிறிஸ்துமத கண்டனத் திரட்டு இதில் கிறிஸ்து மதத்தை கண்டனம் செய்து இந்து மதத்தை ஸ்தாபித்து எழுதியுள்ள 18 நூல்கள் அடங்கியுள்ளன விலை ரூபா 1-8. | | |
| வேதப் பொருள் சார சங்கிரக வசனம் | 0 | 4 |
| சதா சிவரூபம் மூலமும் உரையும் | 0 | 4 |
| ஸ்ரீ சரஸ்வதி அந்தாதி மூலமும் உரையும் | 0 | 6 |
| கல்லாடயந்தாதி உரையுடன் | 0 | 5 |
| சகல கலாவல்லி மாலை மூலமும் உரையும் | 0 | 2 |
| ஞானத்தின் பிரிவுகள் | 0 | 2 |
| காங்கிரஸ் மஹா சபை | 0 | 4 |
| ஜாதிபேத விளக்கம் | 0 | 4 |
| டில்கவுண்டு மாலை | 0 | 1½ |
| இந்தியா மகுடாபிஷேக வாழ்த்து | 0 | 1 |
| மன்மதன் ஒப்பாரி, ரதி புலம்பல் | 0 | 4 |
| திருவாதவூரர் புராண வசனம் | 0 | 3 |
| புவனேம்பிகை வேள்வி விளக்கம் | 0 | 2 |
| தன் வந்திரி நாடி, ஜுரம், ஜன்னிபாத சிந்தாமணி (வசனம்) | 0 | 2 |
| விஷப்பிரதி விஷத் திரட்டு | 0 | 2 |
| சீதாசாரத் தாலாட்டு | 0 | 1 |
| தாலாட்டுப் பிரபந்தம் | 0 | 4 |
| இராஜயோக வித்யா வினாவிடை | 0 | 1 |
| ஸ்ரீ ஜகத்குரு ஆதிசங்கரர் பரம்பரை | 0 | 2 |
| சிகாளத்திக் கலம்பகம் | 0 | 2 |
| பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடல் திரட்டு | 0 | 3 |
| ஆரியர் சந்தியா வந்தனம் | 0 | 1 |
| மஹாதேவ மாலை | 0 | 2 |
| ...ராஜபதி மாலை | 0 | 2 |
| ...வசாக்ஷி மாலை | 0 | 2 |
| ...தமுறைகண்ட வாசகம் | 0 | 5 |
| வீரசைவ வினாவிடை | 0 | 5 |
| ...த்தி | 0 | 2 |
| ...தலயாத்திரைப் பொதுவிதி | 0 | 6 |
| ...வகாரவளித் திரட்டு | 0 | 3 |
| ஸ்ரீ விநாயகர் அகவல் (ஔவை அருளியது) | 0 | 1½ |
| ...ஜுக்தி மோக்ஷம் | 0 | 2 |
| ...வ தூஷண பரிகாரம் | 0 | 4 |
| ...சங்க பீடிகை, கிறிஸ்துமத கண்...ன வஜ்ஜிர கு...ாம் | 0 | 1½ |
| ...ந்தசோமந்திரம் | 0 | 2 |
| சிவானுபூதி வெண்பா | 0 | 8 |
| அறிவானந்த அமலம் | 0 | 12 |
| திருவுந்தியார் உரை | | |
| ...ஷட் பிரபந்தங்கள் | 0 | 2 |

| பலவித புத்தகங்கள் | ரூ. | அ. |
|---|---|---|
| ஸ்ரீ அன்னி பிஸண்டு அம்மாள் சரித்திரம் (படத்துடன்) | 0 | 6 |
| மனமோகனராஜன் சரித்திரம் | 0 | 1½ |
| கடன் பட்டகந்தன் சரித்திரம் | 0 | 1½ |
| அவிவேகபூரணகுரு சரித்திரம் | 0 | 1½ |
| புருஷோத்தமவேஷ பூசகி சரித்திரம் | 0 | 1½ |
| தமிழறியும் பெருமாள் கதை | 0 | 6 |
| ஸ்ரீ மீனாக்ஷியம்மன் பிள்ளைத்தமிழ் | 0 | 4 |
| குடாரம் (திருக்குறளைப்பற்றியது) | 0 | 1 |
| ஒருதுறைக்கோவை உரையுடன் | 0 | 6 |
| பணவிடு தூது | 0 | 2 |
| ஞான சூடாமணி வசனம் | 0 | 2 |
| உபயனுர்த்த தீபிகை | 0 | ½ |
| திருமங்கல்ய தாரண விதி | 0 | ½ |
| நானுஜீவ வாதக் கட்டளை வசனம் | 0 | 1 |
| ௸ செய்யுள் | 0 | 1 |
| ஆண், பெண் பிள்ளைத் தாலாட்டு | 0 | ½ |
| வாசகக் குறிகள் | 0 | ½ |
| சிவநாமத்துவிதக் கீர்த்தனை | 0 | 8 |
| ஸ்ரீ வைஷ்ணவ சமய தீபம் | 0 | ½ |
| விநோகவி மஞ்சரி | 0 | 2 |
| ஏரெழுபது, திருக்கை வழக்கம், செம்பொற்சிலை எழுபது | 0 | 4 |
| சிவாநந்த போதம் | 0 | 4 |
| பரமாநந்த தீபம் | 0 | 2 |
| சிவபோக சாரமும், சிவஞான விளக்கமும் | 0 | 2½ |
| சிதம்பர ரகஸ்யம் | 0 | 1 |
| சுகர் கைவல்யம் | 0 | 3 |
| கைவல்லிய நவநீத மூலம் | 0 | 3 |
| வேதாந்த சூளாமணி மூலம் | 0 | 3 |
| பஞ்சாக்ஷரப் பதிபசு பாசவிளக்கம் | 0 | 1½ |
| சித்தாந்த தத்துவ லக்ஷணம் | 0 | 1 |
| பஞ்சீகரண வேதாந்த சித்தாந்தம் | 0 | 2 |
| ஓங்காரத்தின் மகத்துவம் | 0 | 1 |
| அஷ்டாக்ஷர மகத்துவம் | 0 | 1 |
| ஏகாந்த சேவை | 0 | 1 |
| கலியுக தர்மம் | 0 | 1½ |
| போதாசிரியை (சுவாத்து...நிரூபணம்) | 0 | 2 |
| அபரோக்ஷாநுபூதி வசனம் | 0 | 2 |
| சிவப்பிரகாச வெண்பா | 0 | 2 |
| சிவாநந்த மாலை | 0 | 4 |
| சைவ சித்தாந்த வரலாறு | 0 | 4 |
| சித்தாந்தப் பிரகாசிகை | 0 | 2 |
| ஸ்ரீ தத்துவ ...க மாலிகை | 0 | 1 |
| பிரஸ்...யந்தம் | 0 | 2 |
| ...மூர்த்தி பாடல் | 0 | 8 |
| நல்லொழுக்கம் கள் | 0 | ½ |
| நல்லொழுக்கம் வசனம் | 0 | ½ |
| ஔவைக் குறள் மூலம் | 0 | ½ |

96 K

## யாதவ மித்திரன் சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| இந்தியா, சிலோன், பர்மா முதலிய உள்நாட்டிற்கு வருஷம் 1-க்கு | ரூ | 1—0—0 |
| பினாங்கு சிங்கப்பூர், முதலிய வெளிநாட்டிற்கு வருஷம் 1-க்கு | ரூ | 1—8—0 |

தனிப்பிரதி விலை அணா 2.

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தாக் கிடையாது.

மாதிரிப் பிரதி வேண்டுவோர்

இரண்டணாவை, தபால் தலை அனுப்பவேண்டும்.

1. சந்தாதாரராய்ச் சேர்கின்றவர்கள் பெயரையும் விலாசத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

2. எப்பொழுதும் சந்தாத் தொகையை முன் பணமாகச் செலுத்தவேண்டும். வி. பி. மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். சந்தாத்தொகையை முன்பணமாக மணியார்டர் செய்தால் 2-அணாத்தான் செலவாகும். வி. பி. மூலம் பத்திரிகையை வரவழைப்பதில் 3-அணா அதிகச் செலவாகும், ஆதலால் முன்னாடி மணியார்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்வதே நலம்.

3. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் அவ்வருஷ ஆவணி மாதம்முதல் கணக்கு வைக்கப்பட்டு ஆவணி மாதப் பத்திரிகை முதல் சேர்த்தனுப்பப்படும்.

4. யாருக்கேனும் சஞ்சிகை வந்து சேராவிட்டால் அம்மாதமுடிவிற்குள் தங்கள் சந்தா நம்பருடன் தெரிவித்துப் பெற்றுக் கொள்ளலாம். அதற்குப் பின்னர் தெரிவித்தால் விலை செலுத்தியே பெற்றுக் கொள்ளவேண்டும்.

5. இடம் மாறும் சந்தா நேயர்கள் தங்கள் புது விலாசத்தைத் தெரிவித்து, அது விபரத்தைத் தபாலாபீஸாரிடமும் அறிவித்துவிட வேண்டும்.

6. சந்தா நம்பரைக் குறிப்பிடாத கடிதங்களைக் கவனிக்க முடியாது. பதில் விரும்புவோர் தபால் தலை அனுப்பவேண்டும்.

### விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| 1-பக்கத்திற்கு | ரூ | 10—0—0 |
| ½-பக்கத்திற்கு | ரூ | 5—8—0 |

நீண்டகால விளம்பரங்களுக்கு யாதவ மித்திரன் ஆபீஸிற்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

ஐந்தாவது யாதவமகாநாடு போட்டோ படங்கள்.

...வேண்டியவர்கள் யாதவமித்திரன் ஆபீஸுக்கு விபரமாகத் தெரியப்படுத்துவ...ன் முன் பணமாக ரூ 1—5—0 மணியார்டர் மூலம் அனுப்பிவைக்கவும்.

இ. ...

96

யாதவ மகா ஜனங்களுக்கு ஒரு

# வேண்டுகோள்.

யாதவ சகோதரர்களே!

நமது யாதவமித்திரன் கல்வி, பொருளாதாரம், ஆசாரச் சீர்திருத்தம் முதலிய துறைகளில் சிறந்த அறிஞர்களால் எழுதப் பெற்ற அருமையான கட்டுரைகளைக்கொண்டு யாதவ மக்களின் முன்னேற்றத்தையே முக்கியமாகக் கருதி மாதம் ஒருமுறை வெளி வருகின்றது.

எல்லா யாதவ மக்களும் உடனே சந்தாதாராய்ச் சேர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

எல்லா யாதவ மக்களிடமும் யாதவமித்திரனைப் பரவச் செய்தல் சமுதாயப் பற்றுடையவரின் முதற்கடமையாகும்.

யாதவமித்திரன் நம்மவர் வாழும் ஒவ்வொரு கிராமங்களி லும் உலாவவேண்டும். ஒவ்வொரு யாதவரிடத்திலும் யாதவமித் திரன் மாதாமாதம் சமுதாய விஷயங்களைத் தெரிவிக்கும்படி செய்ய வேண்டும். இதுவே சமுதாயச் சீர்திருத்தத்திற்கு அறிகுறி.

இப்பொழுது விலாசந் தெரிந்த சிலருக்கே பத்திரிகை அனுப்பப்பட்டிருக்கிறது. மனையோர் விலாசந் தெரிவித்துப் பத் திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆகையால் யாவரும் பத்திரிகை படித்துப் பயன் பெறு மாறும், இப்பத்திரிகையை வாசிக்கும் அன்பர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்குத் தெரிந்த பத்திரிகை படிக்கும் ஆற்றலுள்ள நமது யாதவ சகோதரர்களின் விலாசங்களைத் தயைசெய்து எழுதி யனுப்புமாறும் வேண்டுகிறோம்.

மானேஜர்,
**யாதவ மித்திரன் ஆபீஸ்,**
ஸ்ரீ கோபால் மஹால்.
வடக்குச்சித்திரை வீதி, மதுரை.

எக்ஸெல்ஸியர் பவர் பிரஸ், மதுரை:-1931.

Reg., No. M-2527.

96 M



# யாதவ மித்திரன்.

யாதவமக்களின்
முன்னேற்றங்கருதிவெளிவரும்
**மாதப்பத்திரிகை.**


| தொகுதி | பிரஜோற்பத்தி கார்த்திகை மீ 1931 வரு நவம்பர் மீ | பகுதி |
|---|---|---|
| 3 | | 4 |






பொருள் அடக்கம்.


| | |
|---|---|
| கடவுள் வணக்கம் | 97 |
| சுதேசபாஷாபிமானம் | ,, |
| பெண்களும் கிராமங்களும் | 100 |
| காருத்தன் கன்னிப்போர் | 103 |
| குசேலர் | 109 |
| மனிதர் வாழ்க்கை | 112 |
| பிணியும் மருந்தும் | 115 |
| கால்நடை வைத்தியம் | 117 |
| சமுத்திரகுப்தன் சாஸனம் | 119 |
| கலிகால விநோதம் | 121 |
| விகடம் | 124 |
| சமூகக்கிளர்ச்சிக் குரிய குறிப்புகள் | 125 |
| யாதவ அங்கத்தினர் | 128 |


2 DEC



Managing Editor.

# யாதவமித்திரன்.


96 W

ஆசிரியர் கூட்டத்து அங்கத்தினர்கள்

(Editorial Board Members.)

தலைவர்.

1. திருவாளர், ஆ. கார்மேகக்கோனார் அவர்கள்
தலைமைத்தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

---

2. ,, ச. செல்லம் அவர்கள் (யாதவர்) சுசீந்திரம்.

3. ,, J. சக்கரபாணி நம்பியார் அவர்கள், பி. எ., பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வைஸ் பிரசிடெண்டு.
ஜில்லாபோர்டு, திருநெல்வேலி.

4. ,, V. கிருஷ்ணரெட்டியார் அவர்கள் (யாதவர்) பி. ஏ. பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வேலூர்.

5. ,, தி. அ. முத்துசாமிக் கோனாரவர்கள், வித்வான்,
திருச்செங்கோடு.

6. ,, K. வீராசாமிப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், முனிசிபல் உயர்தர கலாசாலை,
திண்டுக்கல்.

7. ,, R. வேங்கடாசலம்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர்,
S. P. G. உயர்தரக் கலாசாலை, தஞ்சாவூர்.

8. ,, M. V. வேணுகோபாலப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், E. L. M. F. ஹைஸ்கூல்
புரசபாக்கம், சென்னை.

9. ,, ஐயப்பெருமாள் கோன் அவர்கள், தமிழாசிரியர்,
ஸெயின்ட் ஜோஸப் காலேஜ், திருச்சிறாப்பள்ளி.

10. ,, K. கோபால கிருஷ்ணன் அவர்கள், B. Sc. (Hons.)
M. R. A. S. பர்மா.


## வேண்டுகோள்.

வியாசங்கள் எழுதுவோர் தெளிவாகவும் தூஷணைகளின்றியும் முழுவிலாசத்துடன் சமூக முன்னேற்றத்திற்குரியனவும் அறிவு வளர்ச்சிக்குரியனவுமாகிய பொது விஷயங்களைப்பற்றிச் சுருக்கமாகவும், நடை எளிதாகவும் எழுதியனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோரும், விளம்பரங் கொடுக்க விரும்புவோரும் அடியிற்காணும் விலாசத்திற் கெழுதுக.

யாதவமித்திரன் ஆபீஸ், ஸ்ரீ கோபால் மஹால்,
வடக்குச் சித்திரைவீதி, மதுரை


THE REGISTRAR
2 DEC 1921



திரு. S. சட்டநாதக் கரையாளர், அவர்கள்,

M. A., B. L.

[128-ம் பக்கம் பார்க்க]

# யாதவமித்திரன்.

## ஒரு மாதப்பத்திரிகை.

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

தொகுதி 3 | பிரஜோத்பத்தி௵ கார்த்திகை௴ 1931-௵ நவம்பர்௴ | பகுதி 4

### கடவுள் வணக்கம்.

பரனே! பஞ்சவன் பௌழியன் சோழன்
பார்மன்னர் மன்னர்தாம் பணிந்தேத்தும்
வரனே! மாதவனே! மதுசூதா!
மற்றோர் நல்துணை நின்னலால் இலேன்காண்
நரனே! நாரணனே! திருநறையூர் நம்பீ!
எம்பெருமான்! உம்பராளும்
அரனே! ஆதிவராகம் முனையாய்!
அழுந்தூர் மேல்திசை நின்ற அம்மானே!

திருமங்கையாழ்வார்.

## சுதேச பாஷாபிமானம்.

திரு. அ. முத்துசாமிக்கோனார்.

நமது தேசமானது தமிழ் அரசர்களாகிய சேரன், சோழன், பாண்டியர்களாலும், மற்ற வேந்தராலும், ஆண்டு வரப்பட்டது. அதனால் தமிழ்ப் பாஷைக்குப் பெருமையிருந்தது. வீட்டுக் கணக்கு வர்த்தகக் கணக்கு, ராஜாங்கக் கணக்குகளெல்லாம் தமிழ்ப் பாஷையிலேயே எழுதப்பட்டு வந்தது. ராஜாங்க அதிகாரிகளும் தமிழ் கற்ற நிபுணர்களாக இருந்தார்கள். இலக்கிய இலக்கணங்களும் நீதிபோதமாகிய புராண இதிகாசங்களும் தமிழ் மொழியில் புகட்டப்பட்டு வந்தது. தமிழ் கற்றவர்களுக்கு மிகுந்த பெருமை இருந்தது. செல்வர்கள் இவர்களை ஆதரித்து வந்தார்கள். "கற்றோர்க்

குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு'' எனப் புகழுண்டாயிற்று. அரசர்களும் கல்வி கசடறக்கற்று, பல நீதி நூல்களும் சமய நூல்களும் செய்திருக்கிறார்கள். குலசேகர பாண்டியன், அதிவீரராம பாண்டியன், வரதுங்க பாண்டியன், உக்கிரப் பெருவழுதி முதலியவர்கள் செய்த புராணங்கள் நமக்கு அறிவை விளக்குகிறதல்லவா? அன்றிப் பெண்கள் நாயகமாகிய, சூடிக்கொடுத்த நாச்சியார், காரைக்கால் அம்மையார் முதலிய பெரியார்களும் அருளிய திருமுறைகள் எவ்வளவு மேன்மைதரத்தக்கன? ஔவைப் பிராட்டியின் தமிழ்ப் பெருமை வாணிதேவியின் அவதாரமெனப் புகழப்படுகின்றதல்லவா? இவர்கள் படிப்பினாலும், அரசர்களும் உதார புருஷர்களும் தமிழ்மொழி வல்லுனராக இருந்ததாலும் பிரபுக்களும் அரசர்களும் புலவர்களுக்கு விரும்பியவாறு ஈந்துவந்தனர்.

இப்பொழுது நம் ராஜாங்கபாஷை இங்கிலீஷா ஆனதால், அரசாங்க நடவடிக்கைகளும் அந்நியதேச வர்த்தகம் முதலிய நடவடிக்கைகளும் முக்கியமாக அப் பாஷையிலேயே நடைபெறுவதாக இருப்பதுபற்றி ஆங்கிலேய பாஷை இன்றியமையாததாக இருக்கிறது. சிற்சில சமயங்களில் ஆங்கிலம் அறியாதவன் படியாதவனாய்க் கருதப்படுகிறான். ஆகையின் நம்மவர்கள் அந்த மட்டில் கொள்ளாமல் நம் தேச பாஷையை மிகவும் அலட்சியம் செய்கிறார்கள். சுதேசிகள் நிறைந்துள்ள ஒரு பெருங்கூட்டத்தில் அவர்கள் மனதில் பதியும்படி சொல்லவேண்டிய சங்கதிகளையும், இங்கிலீஷில் பேசுகிறார்கள். அந்த இங்கிலீஷ்ப் பாஷையை நன்றாக எழுத வாசிக்கத் தெரியாத கற்றுக்குட்டிகளும் கடைத்தெரு, சந்தைக் கூட்டங்களிலும் கூட இங்கிலீஷ் பேச ஆரம்பித்து விடுகிறார்கள். கேட்பவர்கள் "ஐயா, அந்தப்பேச்சு எனக்குத் தெரியாது நமது பேச்சில் சொல்லுங்கள்'' என்னவும் மறுபடியும் இங்கிலீஷில் பேசுவதும் உண்டு. இதனால் நம் தமிழ்ப் பாஷையில் பேசுவது கண்யக் குறைவென்றும் ஆங்கிலம் பேசுவது மிகக் கௌரவம் என்றும் எண்ணப்படுகிறதல்லவா? இதனால் இங்கிலீஷ் வாசிப்பதும், பேசுவதும் கூடாதென்னும் கருத்தன்று இங்கிலீஷ் படித்த கூட்டத்திலும், பேசவேண்டிய இடத்திலும்தான் பேசவேண்டும். தங்களைத் தாங்கள் தாங்கிக்கொள்ளவும் பழகவும் தகுதியான யூனியன், பஞ்சாயத்து, தாலூக்கா போர்ட்டு நடவடிக்கைகளிலும் இங்கிலீஷ் நடத்துகிறார்களானதால் தேச பாஷை மிகப் புறக்கணிக்கப்படு



றது. நமது மஹாத்மா காந்தியடிகள் பல இடங்களில், தாம் பேசிய பேச்சில் "தற்காலத்து மேல்நாட்டுக் கல்வியும், நாகரிகமும் எனக்குப் பிடிப்பதில்லை. நம் நாட்டு ஜனதன ரிஷீச்வரர்களின் கல்வியறிவு, ஒழுக்கங்களை தரும் என்றும், தேச பாஷைகளைக் கொன்று புதைத்து அம் மேடையின்மேல் இங்கிலீஷைப் பிரதிஷ்டைசெய்து வைப்பதா? தேசாபிமானம்?'' என்றும் வந்தனோபசாரம் இங்கிலீஷில் வாசித்துக் கொடுத்தபொழுது, "தேசபாஷையாகிய தமிழிலல்லாமல் ஆங்கிலமொழியில் எழுதியது எனக்குத் திருப்தி இல்லை என்றும், "எனக்குத் தமிழ் தெரியாதென்றால் சொல்லிக்கொடுங்களென்றும்'' உருக்கத்தோடு கூறிய வார்த்தைகள் என் கருத்தைக்கொண்டது? வந்தனோபசாரம் கொடுப்பவர்கள் தமிழ்க் கூட்டத்திலுள்ள அத்தனை பேர்கள் மனதிலும் அதில் எழுது மொழிகள் பதிய வேண்டுமென்பதன்றோ? கேட்பவராகிய தனக்குத் தமிழ் விளங்காவிட்டால் தெரிந்த பாஷையில் சொன்னால் போதும் என்பதே.

நமது தேசபாஷை முறைப்படிப்பானது, தெய்வ பக்தி, குரு பக்தி தாய் தந்தையர் பற்று மற்றைப் பிரஜைககளுக்கு எளிதாகப் புகட்டவல்லது; ஆதலின் அதனை மிகுந்த சிரத்தையுடன் பல வகையிலும் விருத்திப்படுத்த வேண்டியது தேசாபிமானிகளின் கடனாகும்.

தமிழ்ப்பிள்ளைகள் அம்மா, அப்பா, பால், பழம்,முதலிய சொற்களைத் தமிழில் அறிந்து ஆங்கிலத்தில் காணுவதுபோல், பாடசாலையில் கற்கும் மாணவர்கட்குக் கணிதம், சரித்திரம், பூகோளம், சாஸ்திரங்கள் தேசபாஷையிலேயே புகட்டி இங்கிலீஷில் தெரியச்செய்ய வேண்டும். அப்படியல்லாவிட்டால் ஆங்கிலத்தில் அறிந்த வார்த்தைக்குத் தமிழில் என்ன பெயர் என்று ஒரு தமிழன் கேட்கவேண்டியவனாகிறான். இது மிகவும் பரிதாபம்.

ஜப்பான் தேசத்தில் தேச பாஷையைப் பிரதானமாயும், ஆங்கிலத்தை இரண்டாவது பாஷையாகவும் வாரத்தில் மூன்று அல்லது நான்குமணி நேரந்தான் சொல்லிவைக்கிறார்கள். அப்படி இருந்தாலும் பள்ளிகளில் போதகர்கள் சொல்லிவைக்கும் மாதிரி, முறை, முதலிய திறமையால், காலேஜ்களில் ஆங்கிலத்திற் செய்யும் உபந்நியாசங்களைக் கிரகித்துக்கொள்ளும் சக்தியை அந்த மாணவர்கள் செக்கண்டரி ஸ்கூல்களில் அடைந்தவர்களாகையால் மேற்கண்ட பாடங்களைத் தேசபாஷையின் மூலம் மாணாக்கர் மனதில் பதியச்

செய்தால், இந்த மாணாக்கர் காலேஜ்களில் ஆங்கிலேய போதகர்கள் உபந்நியாசங்களைக் கிரகிக்காமற் போவதற்கு யாதொரு காரணத்தையும் காணவில்லையே, என்ற பொருளில் பாபு ராமாநந்த சட்டர்ஜீயரவர்கள் சொல்லுகிறார். ஆனதால் கல்வி யிலாக்காத் தலைவர்கள் தேசபாஷையை விருத்திக்கு வரும்படி செய்யவேண்டும். அன்றியும் B. A. M. A. பட்டதாரிகளும் ஜனங்கத்தவர்களும் தேசபாஷையில் மிகுந்த கவனம் செலுத்தவேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு பாஷையும், தொழிலும் பெருகுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு தேசம் முன்னுக்குவரும் என்பதற்கு யாது தடை?

நாட்டுக் கோட்டைச் செட்டிப்பிள்ளைகள் எத்தனை நோட்டுப் புத்தகங்களில் கணக்கு வைத்தாலும் பழயமாதிரி ஓலைக்கணக்கு வைத்தே எழுதப்பட்டு வருவதைக் காணலாம். இதனால் இச் சிலவர்கள் தமிழ்மொழிக் கணக்கு, தமிழில் கற்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்பதன்றி, எழுத்தும் எழுதிக் கற்றுக்கொள்ளுகிறார்கள். இது சிறந்த அபிமானமன்றோ?

## பெண்களும், கிராமங்களும்.

திரு. ச. செல்வம்.

கவி ஸார்வ பௌமன் ஸ்ரீ ரவீந்திர நாதத் தாகூர் அவர்கள் எழுதிய நகரமும் கிராமமும் என்ற அரிய கட்டுரையின் முற்பகுதியில் கிராமங்களைப் பெண்களுக்கு உவமானமாக எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். இவ்வுவமைக்கு மானிட சமூகத்தின் தொட்டில் இயற்கை நலனுடைமை, வாழ்க்கையோடியைதல், உடலுறு நோய் போக்குதல், மனோ வியாதிகளை மாய்த்தல், உணவளித்தல், மகிழ்வித்தல், எளிய வாழ்வில் ஈடுபடுத்தல், அழகிய சடங்குகளுக்கு ஆதரவளித்தல் கடமையைச் செய்து பூரிப்படைதல், பேராசைகொண்டால் பெருங்கேட்டை விளைவித்தல் என்ற சாதாரண தருமங்களைக் கொண்டிருக்கிறார்கள். அதன் விளக்கம் அடியில் வருமாறு:—

மானிட சமூகத்தின் தொட்டில்:—பெண்கள்—மானிடர் யாவரும் குழந்தைப் பருவத்தில் பெண்கள் பாதுகாப்பிலேயே இருந்து



வளர்ந்து மனிதர்கள் ஆனபடியால் அவர்கள் மானிட சமூகத்தின் தொட்டில்கள் என்று அழைக்கப்பட்டனர்.

கிராமங்கள்:—மானிடர் முதலில் கனி, கிழங்கு, தானிய வகைகளை அருந்தி அவை சுலபமாகக் கிடைக்கத் தகுந்தவாறு ஆங்காங்கு சிறு கிராமங்களை அமைத்து வாழ்ந்துவந்தனர். பின் தேவைகளும் ஆசையும் அதிகரிக்க நகரங்களை நிர்மாணஞ்செய்யத் தலைப்பட்டனர். சிறு கிராமங்களே பின்னர்ப் பெரும் நகரங்களாயின. மானிட சமூகத்தின் முதல் தோற்றம் கிராமங்களில் ஆதலால் கிராமங்களை மானிட சமூகத்தின் தொட்டிலெனப் பட்டது.

இயற்கை நலனுடைமை:—பெண்கள்—இயல்பாகவே பெண்கள் நற்குணமுடையோர்கள். சேர்க்கையாலேயே அநேகமாய் அவர்களுக்குத் தீக்குணங்கள் உண்டாகின்றன.

கிராமங்கள்:—இயற்கையின் உதவி கிராமங்களில் ஏராளமாகக் கிடைக்கப் பெற்றிருக்கின்றன. மலை, மரம், செடி கொடி, நதி, ஏரி முதலியன மருவிக் கிராமங்கள் பல நலனு மெய்துகின்றன.

வாழ்க்கை யோடியைதல்:—பெண்கள்—நமது வாழ்விற்குப் பெருந்துணை தருவது பெண்மணிகளாம். இன்பத்திலும் துன்பத்திலும் அவர் நம்மோடு ஈடுபடுகின்றனர்.

கிராமங்கள்:—மானிட வாழ்க்கைக்கு மிக முக்கியமான பசுபரிபாலனம், கிருஷி என்ற தொழில்களுக்குக் கிராமங்களே பேராதரவளிக்கின்றன. மானிட வாழ்க்கை கிராம வாழ்விலே கட்டுண்டு கிடக்கின்றது எனக் கூறினும் மிகையாகாது.

உடலுறு நோய் போக்கல்:—தங்கள் குடும்பத்தில் எவருக்கேனும் பிணிவந்தால் பெண்கள் தங்கள் அனுபவ வைத்திய முறையால் ஔடதங்களைக் கொடுத்து அதை மிக ஆத்திரத்தோடு போக்குகிறார்கள். பெண்கள் வைத்திய முறையிலும் பயிற்சி பெற்றிருக்க வேண்டுமென்பது கருத்து.

கிராமங்கள்:—நகரங்களில் காசம் முதலிய நோய் வாய்ப்பட்டு துன்பமடைகின்ற பலர் கிராமாந்தரங்களுக்கு வாசஞ்செய்யச் செல்லுகிறார்கள். அங்குள்ள நல்ல காற்று, சுத்தஜலம் முதலியன அவர்கட்கு ஔடதமாகின்றன. பிரபல வைத்தியர்களும் நோய் வாய்ப்பட்ட பலரைக் கிராமாந்தரங்கட்குச் செல்ல உபதேசிக்கிறார்

கள். ஆகவே கிராமங்கள் நோயாளிகளின் உடலை நலனுறச் செய்யும் பொக்கிஷங்களாக இருக்கின்றன.

மனோ வியாதிகளை மாய்த்தல்:—பெண்கள்—மனோ வியாதியால் தன் கணவன் மாழ்கும்போது இன் சொற்களால் அவர்களுக்குத் தேறுதல் கூறுவது மாதின் இயல்பன்றோ?

கிராமங்கள்:—துன்பத் தொடர்பான காலங்களில் யார்க்கும் மனோ வியாதி உண்டாவதியல்பு. அதை மாற்ற மருந்தொன்றில்லை. இயற்கையன்னை களிநடமாடும் மலை, சோலை அருவி, முதலியவற்றைக் காண்டலால் மனோவியாதி மாயும். இவ்வியற்கை யன்னை கிராமங்களுக்கே அருள் சுரந்திருக்கிறாள். ஆகையால் அம்மையார் திருவருளைக்கொண்ட கிராமங்களுக்கு மாந்தர்களினது மனோ வியாதியை மாய்த்து விடுதற்குச் சக்தியுண்டு.

உணவளித்தல்:—பெண்கள்—அறுசுவையுண்டி யமுதை ஆதரவாயட்டு அன்போடளிப்பது நம் பெண்டிரே யன்றோ?

கிராமங்கள்:—நமது உணவுப் பொருள்களான பல்வகைப் பொருள்களும் கிராமங்களிலிருந்தே கிடைத்து வருவதால் கிராமங்களை நமக்கு உணவளிக்கு மிடமாகக் கூறப்பட்டது.

மகிழ்வித்தல்:—பெண்கள்—காதலர் மனதை மகிழ்விப்பாராவரெனக் கூறத் தேவையில்லை.

கிராமங்கள்:—ஜன நெருக்கத்தாலும் தொழில்களைச் செய்யும் பற்பல ஆலைகளாலும், அமைதியின் உஷ்ணம், துர்க்கந்தம், தொத்து நோய் முதலியவற்றை உண்டுபண்ணுகின்ற நகரத்தில் வாசஞ்செய்து இன்னலுறும் மக்களுக்குக் கிராமாந்தரங்களின் இயற்கை நலன் மிகவும் மகிழ்வை யூட்டுவனவெனக் கூறலாம்.

எளியவாழ்வில் ஈடுபடுத்தல்:—பெண்கள்—குடிசைத்தொழில் பல செய்தும் உண்டி உடைகளைத் தானே செய்தும் வருகிறார்கள். வீண் செலவுகளை இவர்கள் வெறுக்கிறார்கள். பெண்களின் உயரிய குண விசேஷம் இதுவேபோலும்.

கிராமங்கள்:—பலவிதமான வினோதங்களால் பெரும் பொருளை நாள்தோறும் வீண் செலவுசெய்ய நகரத்தில் வசதி அதிகம். ஆனால் இவ்வசதி கிராமங்களில் கிடையாது. எளிய முறையில் வாழ்வை நடாத்திக்கொள்ளவே கிராமத்தில் வசதி அனுமதிக்கிறது.



அழகிய சடங்குகளில் ஈடுபடுதல்:—பெண்கள்-ஆடவரைவிடப் பெண்களே சடங்குகளில் பெரும்பாலும் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது யாவருமறிந்த விஷயமேயாகும்.

கிராமங்கள்:—மணவினை முதலிய சடங்குகளில் கிராம ஜனங்கள் யாவரும் ஐக்கியமாகக் கலந்துகொள்வார்கள். நகரங்களில் இங்ஙனம் கலந்துகொள்ள வசதியுமில்லை, கலந்துகொள்ளவும் மாட்டார்கள். கிராமங்களே சடங்குகளில் ஈடுபடச் செய்கின்றன.

கடமையைச்செய்து பூரிப்படைதல்:—கிராம ஜனங்கள் யாவரும் கிராமத்திடமிருந்து வேண்டியன பெற்று வருகின்றனர். கிராமமும் மிக சந்தோஷமாகக் கொடுத்து வருகிறது. அதாவது அக் கிராம மக்களுக்கு என்றுங் கொடுத்துதவத் தளரா வளமுடையதாய்க் காணப்படுகிறது. பூரிப்படைதலும் இதுவே.

பேராசையால் பெரும் நஷ்டமாக்குதல்:—பெண்கள்—மாதரை அவர்கள் சக்திக்கு மிகுந்த வேலைகளைச் செய்யத் தூண்டினால் மெல்லியவரான அவர்கள் நோய்வாய்ப்படுவார்கள். பின்னர் அவரிடமிருந்து ஒரு பயனையும் எதிர்பார்க்க இயலாதாகிவிடும்.

கிராமங்கள்:—அக் கிராம ஜனங்களுடைய தேவைகளுக்கும் அது கொடுக்கும் சக்திக்கும் மீறி ஒரு கிராமத்திலிருந்து பக்கத்து நகருக்கு அதன் செல்வத்தைக் கொண்டுபோனால் கிராம ஜனங்கள் வறுமை யடைவார்கள். பின்னர் அவர்க்குப் பசி வந்திட அதனைப் பரிகரிக்க முடியாமல் பத்தும் பறந்து போமல்லவா?

# “காகுத்தன் கன்னிப்போர்”

தொ. மூ. பாஸ்கரத் தொண்டமான், பீ. ஏ.

“விரிந்திடுதீ வினைசெய்த வெவ்விபதி வினையாலும்
அருங்கடையின் மறை அறைந்த அறஞ்செய்த அறத்தாலும்
இருங்கடகக் கரதலத்து எழுதரிய திருமேனிக்
கருங்கடலைச் செங்கனிவாய்க் கவுசலை யென்பவள் பயந்தாள்”

என்பது முனிவர் மொழிந்த முது மொழியாக, இராமகாதையில் இராமன் பிறப்பு இலங்கக் காண்கின்றோம், இக்கலைகளின் பெருங்கடல் கடந்த கல்வியாளனான காகுத்தனின் கன்னிப்போர்

கன்னிப்போராயே அமைந்தது போற்றத் தக்கதொரு பொருளாகும். இவ்விராமனோ இளவயதுடையவன், படை யூற்றமில்லாத சிறியவன்; அவன் ஏற்று நிற்கும் போரையும், அப்போரில் அவனது அம்பிற்கு இலக்காய் நிற்கும் அரக்கியின் ஆற்றலையும் ஒப்பிட்டு நோக்கில் உவமை சிறிதும் இன்று என்று காண்போம். இப்போரேற்று நிற்குமுன், இவன் விற்பயிற்சியாவது உடையவன் இவன் என்றாலோ அதுவுமில்லை. இந்த நிலையில் ஏற்றபோரில் வெற்றி பெற்ற வீரனது வீரமே வீரம். இந்தக் காகுத்தன் கன்னிப் போரைக் கவியரசர் கம்பர் பெருமான் தமது கவிநலத்தில் அமைத்துக் காட்டும் திறன் நாம் கண்டு மகிழ்வதற்குரிய ஓர் இடமாகும். இந்தப்போர் இராமனே உவந்தேற்ற போர் என்பர் சிலர். அன்று முனிவிதியை மேற்கொண்டு மாமுனி பணிமாறாத காகுத்தன் இக் கன்னிப்போரை ஏற்று நின்றான் என்பர் சிலர். இவ்விருவரது கூற்றையும் உற்றுநோக்கி, இத்தாடகை வதையின் தன்மையை ஆராய்வோம். முனிவன் பின் போந்த மன்னவன் மைந்தன், கண்டால் நயனமும், நினைத்தால் உள்ளமும், சொன்னால் சொல்லிய நாவும் வேகும் வெம்மையையுடைய கடுஞ்சுரத்தைக் காண்கின்றான். அறநெறி வழாத அரசனது நாட்டில் நீர்வளமும் நிலவளமும் எவ்விடத்தும் குறையா என்பது தமிழர் தம் கொள்கையாதலின் தன் தாதை தயரதன் தண்ணளியால் உலகு புரக்கும் பொழுது, இக் கடுஞ்சுரம் ஒன்றும் அவனது அரசியலில் இருக்கவேண்டுவது அவசியமின்றே என்று எண்ணுகின்றான் காகுத்தன், பின்னும் இப்பாலை வனம், பொன்விலைப் பாவையர் மனம்போல் பசையற்றிருப்பதற்குக் காரணம், திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளின் நெற்றிக்கண்ணின் வெப்பத்தால் நேர்ந்ததாயிருக்கலாமோ என்ற ஐயமும் இவன் உள்ளத்தில் எழுகின்றது, இவ்வையங்களைத் தீர்த்து, இதன் உண்மை யறிவான் விரும்பி,

> "சுழிபடு கங்கையந்தொங்கல் மௌலியான்
> விழிபட வெந்ததோ வேறுதானுண்டோ
> பழிபடா மன்னவன் படைத்த நாட்டினூங்
> கழிவதென் காரணம் அறிஞ கூறென்று"

இராமன் முனிவனைக் கேட்கிறான். கேட்டகேள்விக்கு முனிவர் மாற்றுரையாது, இராமனை நோக்கி.

இன்னுயிர்



கொன்றுழல் வாழ்க்கையள் கூற்றின் தோற்றத்தள் அன்றியும் ஐயிருநூறு மையன் மா ஒன்றிய வலியினள் உறுதிகேள், எனத் தாடகையின் கதையைச் செப்பவிரைகின்றார் விஸ்வாமித்திரர். அவளது வெருவரு தோற்றத்தையும், அவளது ஆற்றலையும், அவளது வரலாற்றையும் விரித்துரைத்து, அவள் தன் மக்களாம் மாரீசனும் சுவாகுவும் பழிபடா மன்னவன் படைத்த நாட்டினை அழித்துத் திரியும் திறனையும் இயம்பி,

> "உளப்பரும் பிணிப்புறு உலோப மொன்றுமே
> அளப்பருங் குணங்களை அழிக்குமாறுபோல்
> கிளப்பருங் கொடுமைய அரக்கி கேடிலா
> வளப்பரு மருதவை பழித்து மாற்றினாள்"

என்று வனம் பொருந்திய பாலையாகமாறிக் கிடப்பதற்குக் காரணம் இன்னது என்று காட்டிக் கூறுகின்றார்.

முற்றும் துறந்த முனிவர் புனைவனபுனைந்து, புதுவது புதுக்கித் தம் ஆற்றல் முழுவதையும், தாடகையின் ஆற்றலையும், அவளது கொடிய செய்கையையும் எடுத்துரைப்பதில் செலவழித்து, இராமனுக்குச் சினமூட்ட விரும்பியும், அக்கோமகன் தன்னிடம் இயற்கையாய் அமைந்த அமைதியோடு,

> "கொங்குறை நறைக்குல மலர்ச்செனிகுலுக்கா
> எங்குறைவ தித்தொழிலி யற்றுபவள்"

என்று கேட்கின்றான். அவ்வுரைகேட்ட முனிவன், அவள் இவ்வனத்தில் உறைபவளே என அவளது உறைவிடம் கூறுமுன், அப்பெருமகளே இராமனது தோற்றத்தில், மைவரை நெருப்பெரிய வந்ததென வந்து சேர்கின்றாள் "அவளது தோற்றத்தையும் அவள் தொடங்கிய வினையின் பயனையும், அவள் வந்த பரிசினையும் உணர்ந்தும் இப் பெருந்தகையான இராமன், "பெண்ணென மனத்திடை நினைந்து" தான் போரேற்று நிற்க நினைத்திலன். அவளது ஆவி உண்ண அடுகணை தொடுக்கிலன். இந்த நிலையில் இராமனைக் கண்ட மாதவர் இப்பெருமகளைக் கொல்வதே நீதிமுறையாகும் என்று கூறி, அதற்குச் சான்று பகர விரைகின்றார். "மன்னர் மன்னவன் காதல்! பிறப்பினால் இவள் பெண் தோற்றமுடையவளேயாயினும், உருவத்தாலும், அவள் ஏற்று நிற்கும் தொழிலாலும், பெண் தன்மை இழந்த பெரியாளாகவே விளங்குகின்றாள். பெண்ணைக் கொல்லுதல் பாபம், அது அரசதருமம் அன்று, என்று கூறலை

யாயின், பிருகுவின் மனைவியான கியாதியைத் திருமாலும், குமதி என்பவளை இந்திரனும் கொன்றுள்ள செயல்களை உற்று நோக்குக. மற்றும் எல்லாவிடத்தும் கொலை தீது, என்று எனக்கு நீதி கூறுவாயாயின், தீச் செயல் புரிவோர் எப்பாலராயினும், அவர்க்குச் சிறிதும் இரக்கம் காட்டாது ஒறுத்தலே முறையாகும். அதுவே அரசதருமமும் ஆகும்'' என்று பன்னிப் பன்னி, இத்தாடகையைக் கொல்லவேண்டுவது அவசியமே என்று பல காரணங்களை எடுத்துக் காட்டுகின்றார் முனிவர் பெருமகன். முனிவரது உள்ளத்தில், தான் வலி இக்கருமஞ் செய்தான் இராமன் என்னும் பழி தன்னைச் சேர்வதைக் காட்டிலும், அக் கோமகனே சிந்தை பொருந்தி அவ்வரக்கியைக் கொல்வது தன் கடனே என்பதை உணர்ந்து செய்வதே பொருத்தமுடைத்து என்று கருதி அதற்கு வேண்டும் முயற்சிகள் பலவும் செய்து பார்க்கின்றார். ஆனால் அப்பெருமகனோ தாடகையை வதைப்பது தன்கடன் அன்று என்பதை உணர்ந்தவனாய், முனிவரது ஏவலையே எதிர்பார்த்த வண்ணம், விற்குனியாது நிற்கின்றான். இனி, தனது முயற்சி பயன் படாதது கண்ட முனிவர்

"ஈறினல்லது பார்த்திசைத் தேனிவட்
சீறினல்லது செப்புகின்றேனலேன்
ஆறின்றது அறனன்று அரக்கியைக்
கோறியென்றெதிர் அந்தணன் கூறினான்"
"ஐயனங்கது கேட்டற னல்லவும்
எய்தினாலது செய்கவென் றேவினால்
மெய்ய நின்னுரை வேதமெனக்கொடு
செய்கையன்றோ அறஞ்செய்யுமா றென்றான்"

முனிவர் தம் பணியைத் தலைமேற்கொண்ட காருத்தன் முனிவர் தம் பணியை முடிப்பது கடனெனக் குறித்தானேயன்றி, தான் ஏற்று நின்ற செயலைத் தனக்கு வந்த செயலாகக் கொண்டிலன் என்பதே கம்பர்தம் கருத்தாய் இலங்கக் காண்கின்றோம். இக்கருத்தையே கம்பர் பலவிடத்தும் வலியுறுத்தவும் பார்க்கின்றோம். வயதின் இளமையாலும் போரின் முதன்மையாலும், போருக்கிலக்காய் நின்ற அரக்கியின் ஆற்றலாலும், இராமசரிதத்திலேயே இராமனது புகழிற்கு முக்கியமான ஒரு சான்றாய் இவ் வெற்றி அமைந்திருக்க, இவ்விராமகாதையில் வரும் மற்றும் பாத்திரங்கள் பலரும் இவ்வெற்றியை எடுத்தியம்பாதே செல்கின்றார். என்பது குறிக்கத் தக்கது. மைந்தனைப் பிரிந்த தயரதன், தன் காதல் மைந்தனது புகழை,



இவனை அறுவராக்கிய வசிட்டர் எடுத்தியம்பக்கேட்ட பொழுது அப்பெருமகனைப் "பெற்றவன்றினும் பிஞ்ஞகன் பிடித்த அப் பெருவில் இற்ற அன்றினும், எறிமழுவாளன் இழுக்கம் உற்ற அன்றினும் பெரியதோர் உவகையனாய்" இலங்குகின்ற பெருமையைப் போற்றி புரைக்கும் கம்பர் கவிகலத்தில் தாடகையை வதைத்த பெருமைஇடம் பெற்றிலது. இராமகாதை முழுவதையும் ஆய்ந்து பார்த்தாலும், இவ்வரிய செயலைப் போற்றுவார் விசுவாமித்திரரையன்றி வேறொருவருமிலர் என்று காண்போம். அரக்கரில் ஒன்றிரண்டு பேர் இப்போரைப்பற்றிப் பேசுவார்கள் ஆனால் அதுவும் ஆத்திரத்தால் பேசும் சொற்களேயன்றி இராமனது ஆற்றலைப் புகழ்ந்து பேசும் சொற்களாக அமையவில்லை என்பது வெள்ளிடைமலை. ஆனால் பணியேவிய முனிவன் மட்டும், எவ்விடத்தும், எவரிடத்தும், எக்காலத்தும், இராமன் தாடகையை வதைத்த பெருமையையே எடுத்தெடுத்தியம்பி மகிழ்கின்றான். கற்பிழந்த காரிகை கல்லாயமைந்திருக்க, அக்கல்லில் இராமனது பாததுளியின் பரிசமெய்தவும், சாபம் நீங்கி நிற்கின்றனள். அவ்விடத்து, இக்கோமகனது கால்வண்ணத்தைப் போற்ற விரும்பிய முனிவர், மழை வண்ணத் தண்ணலே, உன் கைவண்ணம் அங்குக் கண்டேன் கால்வண்ணம் இங்குக் கண்டேன்" என்று கூறித் தாடகையைக் கொன்ற புகழை இராமனுக்குப் புனைந்து பார்க்கின்றார். பின்னும் கோதமன் காதலன் சதானந்தரிடம் இவ்விராமனை அறிமுகம் செய்து வைக்கும் வாயிலாய்,

வடித்தமாதவ! கேட்டி! இவ்வள்ளல் தான்
இடித்த வெங்குரல் தாடகையாக் கையும்
அடுத்தென் வேள்வியும் கின்னன்ன சாபமும்
முடித்து என்னிடர் முடித்தானென்று"

போற்றி புரைக்கின்றார். இம்மட்டன்று, இன்னும் ஜனகனது பேரவையில் மன்னன் மைந்தனின் குலமுறை கிளத்தி அவனது ஆற்றலைப் போற்றியுரைக்கும் மாற்றமாய்,

அலைபுருவக் கடலுருவ ஆண்டகைதன் நீண்டுயர்ந்த
நிலைபுருவப் புயவலியை நீயுருவ நோக்கையா
உலைபுருவக் கனலுமிழ்கட் டாடகைதன் உரமுருவி
மலைபுருவி மாமுருவி மண்ணுருவிற்றொருவாளி"

என்று தான் கொண்ட கருமத்தை மறவாது ஏற்ற இடந்தோறும் இம்முனிவர் பெருமான் போற்றியுரைக்கின்றார்.

இவையெல்லாம் ஒரு புறமிருக்க இன்னும் ஒரே ஒரு இடமட்டும் உற்று நோக்கத் தக்கதாய் அமைந்திருக்கின்றது. இராமனது முடி சூட்டை நிறுத்துவான் விரும்பி, சூழ்ச்சி செய்யத்துணிந்த கிழக்கூனி, தன் தலைவியையடுத்து, இராமனது முடிசூட்டுவிழா நாளையே அமைந்துள்ளது என்று கூறி அவளது மனத்தில் இராமன்பால் ஓர் குற்றங் கற்பிக்க விரும்பியவள், வேறொரு செயலையும் எடுத்தாளாது, இத்தாடகை வதையையே எடுத்தியம்புகின்றாள்.

ஆடவர் நகையுற ஆண்மை மாசுறத்
தாடகை எனும் பெயர்த் தையலாள்படக்
கோடியவரிசிலை இராமன் கோமுடி
சூடுவன் நாளை வாழ் வீதெனச் சொல்லினான்

இதனால் கேகயர் கோமகளின் மனம் திரும்பியதும் திரும்பாததும் ஆராய்ச்சி செய்யப்புகுந்தேமல்லேம். மற்றும் இராமனது புகழையும், இச் செயலை உரையாணியாகக் கொண்டு ஆராயப் புகுந்தேமல்லேம். ஆனால் ஒன்று மட்டும் கூற விரைகின்றேம். இப் பெண்ணைக் கொன்ற பெரும்பிழை, இராமனது பகைவர்கள் இராமன்பால் ஓர் குற்றம் கற்பிக்க விரும்பிய காலையில் ஓர் வாயிலக்காக அமைந்ததேயொழிய, புகழ் பொருந்திய செயலாக அமையவில்லை என்பதே கவியரசர் கம்பர் கருத்தாகும். அதுவே கொள்ளற்பாலது.

இக்கருத்தை வலியுறுத்தவும், இப்பழி இராமனைச் சாராது முனிவரைச் சாரவும் உதவி புரிந்த பெருமகன் நமது கவியரசர் கம்பரேயாவர். முனிவிதியை மேற்கொண்டு நின்றவனே இராமன் என்பதும், இந்தத் தன்னலத்தொரு பொருள் தனக்கு மேலிலாத இராமன் ஏற்றுநின்ற போர் கவியரசர் கம்பர் கவிநலத்தில் மாமுனிபணி மாறாத காகுத்தன் கன்னிப்போராய் அமைந்திருக்கிறதென்பதும் இதுவரை கூறிய ஒரு சில சான்றுகளால் தெள்ளிதில் விளங்கும்.

சந்தா நேயர்களே! "தங்கள் தங்கள் சந்தாத் தொகையை முன்கூட்டியே மணியார்டரில் அனுப்புவீர்களானால் அதில் அணு ஆறும் வீண்சிரமமும் நமக்கு லாபமாகும்." என்று பன்முறையும் நமது மித்திரன் பகர்ந்து வருகின்றான். நாம் அதனை மறந்து வருகின்றோம். இம்முறையாவது மறவாமல் மணியார்டர் மூலம் சந்தா அனுப்புவீர்களாக! (ப-ர்)

# குசேலர்.

(74-ம் பக்கத் தொடர்ச்சி.)

திரு. வீராசாமி பிள்ளை.

நீலோற் பலமலர் போன்ற கண்களையும் பவளம்போன்ற அதரங்களையுமுடைய மாதர்களின் மோகத்துக்கு இடந்தராத நம் குசேலர் தேவர்களுக்கு விருப்பமான காரியங்களைச் செய்யும் ஸ்ரீகண்ணபிரான் நித்தியவாசம் பண்ணும் துவாரகபுரியைக் கண்ணுற்றும் தூரத்தே தெரிகிற திரிவிக்ரமாவதாரங்கொண்ட ஸ்ரீமந் நாராயணனைப்போல் அண்டமுகடு அளாவிய கோபுரங்களைக் கண்ணுற்றும், களிப்பெனுங் கடலுள் ஆழ்ந்து கல்விக்கடலின் எல்லை கண்ட குசேலர் இவற்றின் எல்லை காணாதவராய்ப் பரவசமுற்றார்.

கொடிகளையுடைய மதிள்கள் மேகத்தைத் தன்னிடத்தே வளைத்து மழைபொழியச்செய்யு முயர்வையும் பகைவரைக் கொல்லும் இயந்திரங்களைக் கொண்டு ஆழமாய் அடிப்பாறையிலுள்ள நீர்நிலையில் முதலைகள் வசிப்பதாய் விளங்கும் அகழியின் ஆளத்தையும் பரப்பையும் கண்டு வியப்புற்று, அவ்வகழியில் பிரதிபலிக்கும் துவாரகாநகர் தேவலோகத்தைத் தன்னிடத்தே கொண்டதுபோல் இவ்வகழி தோன்றுகிறதென்று உட்கொண்டு கார்மேகனாகிய திருக்கண்ணபிரானைக் கண்டதுபோல மகிழ்வெய்தி வழிநடப்பினா...ரிய துன்பங்களை நீக்கி, அதிவிரைவாக நடக்கத் தொடங்கினார். ...வகமாய்வரும் குதிரைகளுக்கும் மும்மதம் பொழியும் யானைகளுக்...ம் தேர்களுக்கும் அஞ்சியும் அரிபார்ந்த மதர்த்த கண்களையுடைய மாதர்களுக்கு ஒதுங்கியும் நடப்பவரானார். என் செய்வார்! இவர் துவாரகைபோலொத்த அணிநகரை இதுகாறும் கண்டறியார். ஆகையால், முன்னும் பார்ப்பார் பின்னுமுண்டாகும் தொனியால் பின்னும் பார்ப்பார். திரும்பித்திரும்பி நோக்கி நடுங்குவார். பூமியின் ஊர்ந்து செல்லும் பிராணிகளுக்குத் தன் நடையால் ஏதாவது துன்பம் நேருமோவென்று மெதுவாய்ப் போவார். வழியிலுள்ள மா

நிழலிற் சென்றால் அந்நிழலில் வசிக்கும் ஜெந்துக்களுக்குத் துன்பம் உண்டாகுமோ வென்று வெளியில் சூரிய வெப்பத்துக்கு ஆற்றாராய்த் தலைக்குமேல் தன்னிரண்டு அகங்கைகளைக் கவித்துக்கொண்டு செல்லுவார். பாகனுக்கு அஞ்சாத உரல் போன்ற கால்களையுடைய யானைகளின் பந்திகள் வேகமுள்ள குதிரைகளைப் பிணித்துவைத்திருக்கும் குதிரைச்சாலைகள் வாள், வில் முதலிய படைக்கலங்களைப் பயிற்றுவிக்கும் கல்லூரிகள் ஆகாயம் அளாவிய தேர்நிலைகள் இவைகள் மிகுந்து கண்ணைக்கவரும் பெரிய துவாரகையின் வெளிநகரைப் பார்த்துப் பெருமகிழ்வெய்திச் செல்லும்போது, பிடியென்னும் பெண் யானையும் களிறு என்னும் ஆண் யானையும் கூடிவிளையாட உயர்வதுபோல அழகிய பெண்களும் வீரர்களாகிய ஆடவரும் கூடிப் பொன்னாற் செய்த விசிறியும் பந்தும் கையில் கொண்டு ஒருவர் மேலொருவர் நீர் இறைத்துக் களிப்போடு மகிழ்ந்தாடும் தடாகங்கள் நிறைந்து விளங்கும் இடைநகரையும் அதிலுள்ள அகழியையும் கடந்து சிங்கம், புலி முதலிய பொறிகளைப் பெற்ற வாயிலைத் தடையறக்கடந்து சென்றார். ஆங்கு சிறிது நின்று "இந்தப் பெரிய வாயிலினாலலவோ துவாரகை என்று இந்நகருக்குப் பேரிட்டனர்" என்னும் உண்மைப் பொருள் தெரிந்து உள்ளே நுழைந்தார். ஆங்கே உட்செல்லும் அரசர்களும் அவர் தம் நால்வகைப்படையும் வெளியே வரும் அரசர்களும் அவ்வரசர்களின் படையும் நெருக்குவதனால் குசேலர் தன் இரண்டு கைகளையும் உயரத்தூக்கியும் துன்புற்றும் வியர்வையரும்பிக் களைத்தும் சோர்வுடன் செல்லுங்கால் மலைபோல் பருத்த தோள்களையுடைய வீரர்களின் மார்பிலணிந்த மாலைகளும் அகன்ற மார்பிற் பூசிய சந்தனக்கலவைகளும், மாதர்களின் மார்பிலணிந்த கஸ்தூரி கலந்த குங்குமச்சேறும், அவர்கள் கூந்தலிற் சூடிய மலர்களிற் படிந்து காய்ந்த சுண்ணமும் ஒன்றுசேர்ந்து நம் குசேலர் தேகத்திற்பட்டு நறுமணங் கமழ்வதோடு அவர் கந்தையும் "கம கம" என்று கமழத் தொடங்கிற்று.

இங்ஙனம் குசேலர் கணிகையர் அந்தணர் அரசர்வீதி கடந்து இடைச்சேரியின் வழியாகச் சென்றார். ஆங்கு யாதவர்கள் தங்கள் தங்கள் மூவினங்களாகிய ஆடு, மாடு, எருமைகட்குப் பலவகை உணவுகொடுத்து வளர்த்துக் காப்பதையும், கடாக்களை ஒன்றோடொன்று முட்டவிட்டு வெற்றி தோல்விகண்டு ஆரவாரிப்பதையும், ஆயர்கள் தங்கள் கரியமேனியில் வெளிய கற்பூரத் திருநாமங்களிட்டு கம்பளங்கள் போர்த்திக் காடுகளுக்குப் போய்க் கன்றுகள் மேய்த்து மதியோடக் கார்க்கோடல் பூவும், மருதோன்றிப் பூவுஞ் சூடி, கைகளில் கோலும் உறிக்கலசமும் கொண்டு புழுதியாடிய மேனியோடு வருவதையும் கழுத்தில் கட்டியமணிகள் சப்திக்க வரும் நிரைக்கூட்டம் கன்றுக்கூட்டங்களையும், கனைத்திளங்கற்றெருமை கன்றுக்கிரங்கி நினைத்து முலைவழியே நின்று பால்சோரக் கனைத்துச் சேறாக்கும் வீடுகளையும், கொடிதோன்றும் தோரண வாயில்களையும், யாதவமங்கையர் முல்லைமலர் சூடிய கூந்தல் அவிழவும் உடலில் வேர்வைதோன்றவும் வல்லிபோன்ற நுண்ணிய இடை அசையுந்தோறும் நோயுறவும் காந்தல் மலர்போன்ற கைவிரல்கள் செந்நிறம் பெறவும், முன்கையில் அணிந்த வெள்ளிய சங்குவளையல்கள் ஒலிக்கவும், வெண்மையான தயிரைக் கடைகின்ற சப்தம் கொல்புலியின் முழக்கம்போல் வீதிதோறும் முழங்குவதையும், யாதவ வீரர்கள் பாந்த இடங்களுக்குச் சென்று கொல்லும் ஏறுகளைத்தழுவி வெற்றிமாலையுடன் திரும்பிவருவதையும்; பொலங்குழல் கொண்டு இனிய கீதங்களால் ஸ்ரீகண்ணபிரான் திருப்புகழ் பாடிவருவதையும், மாதர்கள் வரிப்பாடல் குரவைக் கூத்துகள் மகிழக்காண்பதையும் தயிர், பால், வெண்ணெய், நெய் இவைகளை உறிகளிலும் குடங்களிலும் நிரப்பிவைத்திருப்பதையும், முன்றில் தோறும் தயிர்ப்பானைகளை விளக்கி வெயிலில் உலரவைத்திருப்பதையும், கண்டு பரவசப்பட்டு வந்த இளைப்பும் நீங்கினார்.

வெண்மையான சன்னச்சம்பா அரிசியால் சமைத்த சோறும், பாற்குழம்பும், தயிரும் நெய்யும் பல சுவையுள்ள கறிகளும் பாகமுறச்சமைத்து உண்பவர்க்குப் பொன்னும் கொடுக்க விருந்தினர் வறியவர்களைக் கூவியழைப்பதையும் யாதவச் சிறுமிகள் பசுவின் சாணத்தால் வீடுமெழுகிக் கோமயந்தெளித்து முத்துப்பொடிகளால் கோலமிட்டு வாயில்நிலைகளில் குங்குமம் பசுமஞ்சளால் மங்களமுறப் பூசிவைத்திருக்கும்மங்களக்காட்சியும் கண்டுவந்த இளைப்பும்நீங்கினார்.

வேதங்களால் புகழப்படும் இவ் யாதவர் குலத்தில் பிறந்தவர்களே புனிதராவார். சாந்தமும், சத்தியமும், கடைப்பிடித்துப் பிராணஹிம்சையை அறவே ஒளித்தவர்கள். இவர்கள் கண்ணன் திருவடியன்றி வேறு தெய்வங்களைத் தொழாதவர்கள். இவர்கள் இல்லாத நாடு, நகரம், எங்குமில்லை. இவர்கள் பசுப்போன்ற குணங்களையுடையவர்களாய் வாழ்தலினாலன்றோ சத்துவகுணமுடையவரென்கிறார்கள் என்று தம்மனதுள் பலபலவெண்ணி மகிழ்ந்தார். (தொடரும்)

# மனிதர் வாழ்க்கை.

## தொண்டரடிப்பொடியாழ்வார்.

(78ம்-பக்கத் தொடர்ச்சி)

கு மணிவண்ணன்.

சூரியன் அஸ்தமனமாகிவிட்டது. இருள் சூழ்ந்து கொண்டது. விப்ரநாராயணன் தேவ தேவியின் வீட்டுத் தெருத்திண்ணையில் படுத்துக்கொண்டவராய் தூக்கமும் பிடிக்காமல் எம்பெருமானை நினைத்துக்கொண்டு மனமுருகுவாராயினர். இது பிராட்டியாருக்குத் தெரிந்தது. உடனே பெருமானைப் பார்த்து ஒரு பக்தன் இவ்வாறு கஷ்டப்படுவதையும் பார்த்துக்கொண்டு இருக்கலாமோ எனப் பெருமாளும் மனம் சம்மதித்தவராய்ப் புறப்பட்டு சந்நிதிக்கு வந்து சேர்ந்தார். அங்கிருந்த பொன்வட்டில்களிலொன்றை எடுத்துக் கொண்டு ஒரு பரிசாரகன் போல உருவம் மாறிக்கொண்டு, தேவ தேவியின் வீட்டிற்கு வந்து கதவைத் தட்டினார். அவள் கதவைத் திறக்க, பகவான் "இந்தப் பொன்வட்டிலை விப்ரநாராயணர் உம்மிடம் சேர்த்து வருமாறு சொல்லியனுப்பினார்" என்று சொல்லி, அந்த வட்டிலையும் அவளிடம் கொடுத்துவிட்டு மறைந்துவிட்டார். பிறகு, தேவ தேவியானவள் வெளியில் வந்துபார்க்க, விப்ரநாராயணர் தெருத்திண்ணையின் மீது சயனித்திருப்பதைக்கண்டு, அவரை எழுப்பி உள்ளே அழைத்துக் கொண்டுபோய், உபசாரங்கள் செய்து. ஆசைமொழிகள் பல பேசி, நடந்த சம்பவத்தையும் சொன்னாள். தொண்டர் அதைக்கேட்டு ஆனந்தமடைந்தவராய், கருணை வள்ளலாகிய எம்பெருமானைப்பற்றிச் சிந்திப்பாராயினர். பகவான் தன் தொண்டர்களுக்குப் பணிசெய்வதே கடமையாகக் கொண்டவன்.

"பற்றலர் வீயக் கோல் கையில் கொண்டு
பார்த்தன் தன் தேர்முன் நின்றானை"
"வன்றுணை பஞ்சபாண்டவர்க் காகி
வாயுரை தூது சென்றியங்கும்"



"வியந்துதி செய்யப் பெண்ணுருவாகி
அஞ்சுவை யமுதம் அன்றளித்தானை"

என்பதனால் பகவான் எவ்வித சபலமுள்ளவன் என நன்று தெரிகிறது. நம்மாழ்வாரும்,

"பத்துடை யடியவர்க் கெளியவன் பிறர்களுக்கரிய
வித்தகன் மலர்மகள் விரும்பும் நம் அரும்பெறலடிகள்
மத்துறு கடைவெண்ணெய் களவினில் உரலிடையாப்புண்டு
எத்திறம்! உரலினோடிணைந் திருந்தேங்கிய எளிவே"

என்று பெருமாளினுடைய சௌலப்யமான குணங்களை விளங்க உரைத்தார். மதுரகவி யாழ்வார்,

"கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்
பண்ணிய பெருமாயன் என்னப்பனில்"

என்று மிகவும் சிறிய தாம்புக் கயிற்றினால் தன்னை யசோதையினால் கட்டுண்ணும்படி செய்துகொண்ட 'மாயன்' என்றார்.

மறுநாள் பொழுது விடிந்தது. எம்பெருமான் சந்நிதியில் அர்ச்சகர் வந்து திருக்காப்பு நீக்குங்கால், ஒரு பொன்வட்டில் குறைவ தைக் கண்டார்கள். எல்லோரும் பயந்தவர்களாய் இச்சமாசாரத்தை அரசனிடம் தெரிவித்தனர். அரசன் உடனே எல்லோரையும் வர வழைத்து விசாரிக்க உண்மை வெளிப்படவில்லை. அவன் மிகவும் துக்கத்திலாழ்ந்து தாம் உண்மையைக் கண்டுபிடிக்காமல் யாரைத் தண்டிப்பது என்று மனம் வருந்தி, கடைசியில் இதுவும் எம்பெருமான் திருவிளையாட்டு என மனந்தேறி, தான் சந்தேகப்பட்டவர்களையெல்லாம் சிறையில் வைக்கும்படி கட்டளையிட்டான். அன்றிரவு பகவான் அரசனுடைய கனவில் தோன்றி உண்மையைக் கூற, மறுநாள் காலையில் அரசன் மிகுந்த சந்தோஷத்தோடு, விப்ரநாராயணரை அழைத்துவரச் சொல்லி அவர் காலைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து தான்தெரியாது ஆராய்ந்ததைப் பொறுத்தருள வேண்டுமென்று வேண்டிக்கொண்டவராய், சிறையிலிருந்து எல்லோரையும் வெளிப்படுத்துமாறு உத்தரவு பிறப்பித்தான். அவர்களும், இதுவரையில் சாதாரண மனிதனைப்போல் தன் கடமைகளைச் செவ்வனே செய்துவந்த விப்ரநாராயணருடைய பெருமையை நன்குணர்ந்து போற்றினர். நாராயணரும் இவ்வுலக வாழ்க்கையை

அநித்தியமென்று தள்ளிவிட்டு, ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய ஸ்ரீபாத தூளியாய், அவர்கட்குக் கீழ்ப்படிந்து, அடிமை பூண்டொழுகி அதனால் 'தொண்டரடிப்பொடி' என்னும் திருநாமம் பெற்றனர்.

இவ்வாறு ஞானக்கண் பெற்ற தொண்டரடிப் பொடியாழ்வார், காலந்தாழ்த்தாது ஸ்ரீரங்கநாதன் திருக்கோயிலை அடைந்து, பள்ளி கொண்டிருக்கும் எம்பெருமானை, 'திருப்பள்ளியெழுச்சி' என்னும் பத்துப் பதிகங்களினால் எழுப்பி, 'திருமாலை' யாகிய பதிகங்களைச் சமர்ப்பித்தாராம். முதலில் எம்பெருமான் எவ்வித தோற்றமும், உருவமும் உள்ளவர் என்று வர்ணிக்கிறார்.

"பச்சைமா மலைபோல் மேனி, பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா! அமரரேறே! ஆயர் தம் கொழுந்தே! என்னும்
இச்சுவை தவிரயான் போய் இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே!"

என்றும்,

"வெள்ளநீர் பரந்து பாயும் விரிபொழிலரங்கந் தன்னுள்
கள்வனார் கிடந்தவாறும் கமலநன் முகமும் கண்டும்"
"புனத்துழாய் மாலையானே, திருமறுமார்வ'

என்றும் கொண்டாடுகிறார்.

பின்பு எம்பெருமான் குணத்தையும், கருணையையும் பற்றி,

"நாவலிட் டுழிதருகின்றோம் நமன்தமர் தலைகள் மீதே
நின் நாமம் கற்ற ஆவலிப் புடைமைகண்டாய்",

"இத்தனை யடியரானார்க் கிரங்கும் நம் அரங்கனாய
பித்தனைப் பெற்றும் அந்தோ! பிறவியுள் பிணங்குமாறே"

"அறம்சுவ ராகிநின்ற 'அரங்கனார்க்காட்செய்யாதே",

"தலையறுப் புண்டும் சாகேன் சத்தியம் காண்மின் ஐயா
சிலையினால் இலங்கைசெற்ற தேவனே தேவனாவான்"

"மெய்யர்க்கே மெய்யனாம்",

"காம்பறத் தலைசிரைத்துன் கடைத்தலை யிருந்துவாழும்,
சோம்பரை உகத்திபோலும் சூழ்புனலரங்கத்தானே"

என்று அருளியுள்ளார்.

(தொடரும்.)

# பிணியும், மருந்தும்.

திரு: கே. வீராசாமி பிள்ளை.

## கீல்வாதம்.

இதற்கு, சூலைக்கட்டு, கணுச்சூலை, முடக்குவாதம், வாதசூலை எனப் பல நாமங்கள் கூறுவார்கள். இது உடலில் பலகாரணங்களால் சேர்ந்த வெட்டை நீரால் உண்டாவது, வெள்ளை ஒழுக்கு, குதிகளில் உண்டாகிய புண், வெட்டை இவைகள் உடைய மாதர்கள் ஆடவர்களின் சேர்க்கையால், ஆடவர்க்கும், பெண்பாலர்க்கும் பெரும்பாலும் உண்டாகும். சிறுபான்மை இரத்தக்கெடுதலாலும், குளிர்ச்சியான இடவசத்தாலும் உண்டாகும். இது முழங்கால், முழங்கை தோள்கள்முதலிய பெரியகீல்களைச் சுற்றியிருக்கும் ஜவ்வுகளின் தாபனத்தால் உண்டாகி மூட்டுகளிலிருந்து தொடை, இடுப்பு, இவைகளில் பரவி இருதயம்வரையில் செல்வதுமுண்டு, கீல்வாதம் தீக்ஷணமாய் இருக்கும்போது சுரம் காயும். இச்சுரம் தீவிரமாய்ப் பயப்படும்படியும் இருக்கும்.

இலக்ஷணங்கள்:—கால் கைகளில் வலியுடன் பிறந்து வேதனை கொண்டு பெரிய மூட்டுகள் வீங்கி, தாங்கொணாத வலியுண்டாகும். உடலில் காய்ச்சல் உண்டாகும். நோயாளர் மனவேதனையோடு வெருண்டு ஏங்கி விழிப்பார்கள். கால்கைகளை அசைக்க அவர்களால் முடியாது. தேகத்தைத் தொட்டாலும் வருத்தமுண்டாகும். உடலில் நாற்றமுள்ள வியர்வை அரும்பும். நாடிகள் வேகமாய்ப் படபடவென்று ஓடும். எனினும் வாதநாடி அழுந்திநடக்கும், மலம் வெளிப்படாது. நாவில் மாவுபடியும். மூத்திரம் குறைந்து செவந்து மட்டியாய் இறங்கும். வலியும் வீக்கமும் ஒரு மூட்டிலிருந்து நிமிஷத்தில் ஓடி மற்றொரு மூட்டில் பாயும், அப்போது அந்த இடத்தில் வீக்கமும் வலியும் அதிகரிக்கும், மூட்டிலிருந்து வாய்வு இருதயத்துக்குச் செல்லாமல் வேண்டிய பரிகாரஞ் செய்யவேண்டும். இருதயத்துக்கு வந்தால் நோயாளியைக் கொன்றாலும் கொல்லும். இவ்விதமாக இடம் விட்டு வேறிடம் செல்லும்போது ஓடுவாதம் ஓடுசூலை என்றுஞ் சிலர் கூறுவார்கள். துர்நீராலும் வெள்ளை வெட்டையாலும் கீல்வாதம் கண்டால் இராக்காலத்தை ஒருயுகமாக நோயா

ளர் கடப்பார்கள் (அவ்வளவு கொடியவேதனை யுண்டாகும் என்க) தொடையின் பின்புறத்தில் இந்நோய் கண்டால் "கிருத்திரசிவாத சூலை,, என்பார்கள். கிருத்திரசி=தொடைநரம்பு.

சிகிச்சை (அல்லது) பரிகாரம்:—இவ்வாத சூலைக்குக் கொடுக்கும் மருந்துகள் அனந்தம். வீக்கமுள்ள இடங்களில் கடுகுபற்றுப் போடலாம். இரசசம்பந்தமான மருந்துகள் கொடுத்துக் குணம் காணலாம். இம்மருந்தை உட்கொண்டு புளி, மஞ்சள், மிளகு, கடுகு, நீக்கிக் கடும்பத்தியமாயிருந்தால் 7, 8 நாளைக்குள் வியாதி நீங்கி எழுந்து நடக்கும் வன்மையுண்டாகும். (இரசசம்பந்தமான மருந்துகளை வைத்தியர் ஆயினோர்பால் கேட்டுத்தெளிக.) இங்கிலீஷ் யூனானி மருந்துகளால் சீக்கிரம் குணத்துக்கு வராமல் முழங்காலில் கட்டுக் கட்டிக்கொண்டு படுக்கையில் இருப்பவர் பலரைப் பார்க்கலாம். ஆனால், தொளையூசிப் பீச்சிடும் ஜெர்மன் மருந்தால் சீக்கிரம் குணத்துக்குவரும். சில சந்தர்ப்பம் கைத்திறமை இல்லாத ஆங்கில வைத்தியரால் மோசம் ஆவதுமுண்டு. வேக்காட்டில்லாத (புடம் போதாத) ரசமருந்தால் பல்லுதிர்ந்து வாய்புண்ணாகி வருந்துவதையும் பார்க்கலாம். இத்தகைய மருந்தைச் சாப்பிடுவதைவிட வியாதியால் கஷ்டப்பட்டாலும் நன்று. சில மாதங்களுக்குப் பிறகு தானே இவ்வியாதிபோய்விடும். "பொட்டாஷ் ஐயோடிட்" என்னும் உப்பை 4 குன்றி எடைக்குமேற்படாமல் நன்னாரிவேர்க் கஷாயத்தோடு கலந்து ஒரு நாளைக்கு 3 தடவையுட்கொண்டு வந்தால் சிலவாரங்களில் கஷ்டமில்லாமல் குணத்துக்கு வரும். ஊமத்தனிலையை வாட்டி வீக்கத்தின் மேல் போடலாம்.

அபினி பூசுதைலம் தேய்க்கக் குணந்தரும். மயனத்தைலம் அதாவது மெழுகுதைலம் பூசித்தேய்க்கலாம். போஸ்தக்காய் என்னும் கசகசாகாயின் தோலைக் கஷாயம்செய்து வீக்கங்களில் ஒற்றடம் கொடுக்கலாம். இதனால் வேதனை தணியும். கீல்வாத ரோகிகள் கம்பளி யுடையுடுத்தி, சீதளமும் ஈரமும் தம்மிடம் அணுகவிடாமற் காத்து, பத்தியமாய் உண்டு சாராயம் முதலிய லாகிரிப்பொருளை அறவே நீக்க வேண்டியது. பரமோபகாரத்துடன் எழுதிய இம்மருந்து அநேகருக்குக் குணஞ்செய்தது. இதனைச் செய்து நோயாளர் உண்டால் கடவுள் கிருபையால் விரைவில் குணமுறுவார்கள். ஆமணக்கனெய்ப்படி ½ (1) நாட்டு ஏலம் விராகனெடை 3. (2) இலவங்கம் (கிராம்பு) விராகனெடை 1. முலைப்பாலில் மூன்றுநாள் ஊற



வைத்து (3) ரசகற்பூரம் விராகனெடை 1½. பருத்தியிலைச்சாறு அரைக்கால்படி பிழிந்து வடிகட்டி இச்சாற்றால் முன்கூறிய மூன்றையும் அச்சாறு செல்லுமட்டும் விட்டு நன்றாய் அரைத்துச் சுண்டினதும் குறித்த ஆமணக்கு நெய்விட்டு 2 மணிநேரம் அரைத்தும் பிங்கானில் விட்டு மெல்லிய துணியால் வேடுகட்டி வெயிலில் 3 நாள் வைத்து எடுத்து உபயோகிக்கவேண்டும். ஒவ்வொருநாளும் காலையில் ஒரு தேக்கரண்டியால் பாதி சாப்பிட்டு, புளி, நல்லெண்ணெய் கடுகு உளுந்து கடுகு நீக்கி வெந்நீரன்னம் உட்கொண்டு வந்தால் ஒருவாரத்துக்குள் வலியும், வீக்கமும் நீங்கி நோயாளர் கடவுள் கிருபையால் சுகமுறுவார்கள்.

## கால்நடை வைத்தியம்.

### கால்நோய் வாய்நோய்.

(64-ம் பக்கம் தொடர்ச்சி)

பதிப்புரிமை செய்யப்பட்டது.

திரு. S. பெருமாள் கோன்.

இந்த நோய்க்குக் கோமாரி கால்கோமாரி வாய்கோமாரி கால்நோய் வாய்நோய் காலை காற்காலை வாய்காலை முதலிய பெயர்கள் வழங்குகின்றன. இது பிராணிகளின் வாய் கால் பால்மடி இவைகளில் கொப்புளங்களோடு காணும். தொத்துகிற ஒருவகைச் சுரம். இந்த வியாதி சில சமயங்களில் வாய்மட்டிலும் சில சமயங்களில் கால் மட்டிலும் காணுகிறது. இந்த வியாதி சில பிராணிகளுக்கு முதலிலே வாயில் உண்டாகி, பின்பு காலில் உண்டாகிறது. வேறு சில பிராணிகளுக்கு முதலிலே காலில் உண்டாகி, பின்பு வாயில் உண்டாகிறது. இந்த வியாதி மாடு செம்மறியாடு வெள்ளாடு பன்றி கோழி ஆகிய இவைகளுக்கு வருகிறது. இந்த வியாதி கண்டிருக்கும் பசுக்களின் பாலைக் குடித்ததனால் மனிதரும் இந்த வியாதியினால் பீடிக்கப் பட்டிருக்கிறார்கள். இந்த வியாதி நம் தேசத்தில் எல்லாப் பாகங்களிலும் ஏறக்குறைய எப்போதும் பரவியிருக்கிறது. ஒரு பிராணியின் ஜீவகாலத்தில் பலதரம் இந்த வியாதி அதற்கு உண்டாகலாம். தொத்துவதனால் தான் எப்போதும் இந்த வியாதி வருகிறது. ஆனால் சில சமயங்களில் எங்கிருந்து தொத்திவந்ததென்று கண்டு பிடிப்பது கஷ்டமாயிருக்கிறது. அது சாதாரணமாக மாடுகளினாலேயே

ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டு போகப்படுகிறது. ஆனால் வேறே ஜந்துக்கள் அல்லது மனிதர் மூலமாகவும் ஷெ வியாதி பரவலாம். அன்றியும் இந்த வியாதி உள்ள இடத்திலிருந்து வரும் தீனியோடும் ஷெ வியாதி தொத்திக் கொண்டு வரக்கூடும். இந்த வியாதியின் விஷம் உள்ளேயே விருத்தியடையுங் காலம் இருபத்திநான்கு மணிமுதல் மூன்று அல்லது நான்குநாள் வரையிலுமென்று அனுபவத்தினால் தெரியவருகிறது. நடுக்கம் கண்டு பின்பு காய்ச்சலுண்டாவதும் வாயும் கொம்புகளும் கால்களும் சூடாயிருப்பதும் வியாதிகண்ட பிராணி நாக்கினால் உதடுகளை நக்குவதும் வாயில் நீர் சுரப்பதும் தான் முதலில் தோன்றும் குறிகள். பின்பு வாயிலும் காலிலும் கொப்புளங்கள் தோன்றுகின்றன. பசுக்களுக்கு பால்மடியிலும் முலைக்காம்புகளிலும் ஷெ கொப்புளங்கள் தோன்றுகின்றன. இந்தக் கொப்புளங்கள் கொதிநீர் பட்டுண்டாகும் கொப்புளங்கள்போல் இருப்பதோடு அவரைவிரை யளவு பருத்தவைகளாயிருக்கின்றன. இந்தக் கொப்புளங்கள் சில சமயங்களில் மூக்குத் துவாரத்தின் உள் தோலில் காணப்படுகின்றன. அவைகள் பதினெட்டு மணிமுதல் இருபத்திநான்கு மணிநேரத்தில் உடைகின்றன. அப்படி உடைந்த இடங்களில் சிவந்து புண்ணாயிருக்கிற பொட்டுகள் தோன்றுகின்றன. இந்தப் பொட்டுகள் சீக்கிரம் ஆறிப்போகும் அல்லது புண்களாக மாறும். வாயில் முக்கியமாகப் பாதிக்கப்படுவது நாக்குத்தான். ஆனால் ஈறும் வாயின் மேற்புறமும் கன்னங்களின் உட்புறமும் சில சமயங்களில் பாதிக்கப்படும். காலில் உண்டாகும் கொப்புளங்கள் காலில் தோலில் குளம்போடு சேருகிற இடங்களிலும் குளம்பு பிளவுகளுக்கு இடையிலும் காணப்படும். வாய் மிகவும் புண்ணாயிருப்பதனாலும் காய்ச்சல் இருப்பதனாலும் வியாதி கண்ட பிராணி தீனி தின்கிறதில்லை. எந்தக் கால் பாதிக்கப்பட்டிருக்கிறதோ அந்தக் கால் மிகவும் நொண்டும். வியாதிகண்ட பிராணி எருதாயிருந்து வேலைக்கு விடப்பட்டிருந்தால் வியாதிக் குறிகள் மிகவும் கொடூரமாகிக் கால்கள் வீங்கி அநேகமாகக் குளம்புகளகன்று விடும். சில சமயங்களில் காலில் பிளவைகளும் உண்டாகலாம். பால் மடியிலும் முலைக்காம்புகளிலும் கொப்புளங்கள் உண்டானால் இரண்டிலும் வீக்கமும் தொட்டால் நோவும் உண்டாகும். இந்த வியாதிகண்ட பசுவின் பாலைக் கன்று குடித்தால் அதற்கும் இந்த வியாதி உண்டாகும். கறவைப் பசுக்களுக்கு இந்த வியாதி கண்டால் அவைகளின்



பால்மடியில் கொப்புளமுள்ள பாகங்களைப் பால் கறக்கிறவன் நெருக்கிப்பிடிப்பதனால் முலைக்காம்புகள் மிகவும் ரணமாகும். பால் முழுவதும் கறக்கப்படாததனால் பால்மடி சில சமயங்களில் வீங்கி அழற்சியடையும். இந்த வியாதிகண்ட பசுவைக் கறந்தபின் கறந்த கையை ஜாக்கிரதையோடு நன்றாகக் கழுவாவிட்டால் அந்தக் கையின் மூலமாக இந்த வியாதி சுகமாயுள்ள பசுக்களின் மடிக்கும் வந்து சேரும். செம்மறியாடுகளுக்கு இந்த வியாதி கண்டால் மேலேகூறிய குறிகளைப் போன்ற குறிகளே காணப்படுகின்றன. ஆனால் சாதாரணமாக அவைகளின் கால்கள்தான் மிக அதிகமாகப் பாதிக்கப்படுகின்றன. இந்த வியாதி கண்ட செம்மறியாடுகள் மெலிந்து போகின்றன.

(தொடரும்.)

## கலிங்க நாட்டில்
# சமுத்திர குப்தன் சாஸனம்.

கோவை. திரு. இ. கு. நாராயணசாமி முதலியார்.

சமீபத்தில் நமக்குக் கிடைத்த சமுத்திரகுப்த சக்கரவர்த்தியின் சாஸனமொன்றில், அவனது தென்தேசத்திற்கு விஜயம் மும்முறையும் கலிங்கநாட்டினின்றே ஆரம்பிக்கப் பட்டதென்றும், அம்மன்னபிரான் வெகுவாகக் கலிங்கநாட்டைக் கடந்து செல்லவில்லையென்றும், இந்துதேச வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றார்கள். இதற்கு அச்சாஸனத்தில் "கௌராலக மண்டராஜா", "காஞ்சேயக விஷ்ணுகோப", என்றுள்ள பிரயோகங்களை ஆதாரமென்கிறனர். "கௌராலக" என்ற பதத்தை, "கைலரக" என்று திருத்திவாசித்தால் அது 'கேரள தேசீயப் பிரபு' என்ற பொருள்படு மென்றும்; இதுபோலவே "கஞ்சி" என்பது பல்லவரின் தலைநகராகத் தென்றிசையில் பிரசித்தி பெற்றிருப்பதனால் "காஞ்சேயக" என்ற மொழிக்கு 'காஞ்சீபுரத்தின் தலைவன்' என்பது பொருளாமென்றும், இச்சாஸனத்தை கி. பி. 1888-ம் ஆண்டில் முதன்முதல் பிரசுரித்த 'பிளீட்' என்ற துரைமகனார் அபிப்பிராயப்பட்டனர். அதுமுதல் நாளதுவரைக்கும் அதாவது இந்த நாற்பத்து மூன்றாண்டுகளாக அப்பொருளே சரியானதென்று சாஸனபரிசோதகர்கள் ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

மேலே காட்டிய வரலாற்று ஆசிரியர்கள் கூறுவதற்கேற்ப சமுத்திரகுப்தன் கலிங்கத்தைக் கடந்து காஞ்சி, கோளம் வரையி லும் செல்லவில்லை யென்பதற்கு ஏற்ற ஆதாரம், கலிங்கநாட்டின் கணுள்ள சிற்றூர்களில் இவன் செலவுபற்றி வழங்கப்படும் செய்தி களே போதிய சான்றுயாகும்.

கௌராலக என்ற சொற்றொடரைச் சாஸனத்திற் கண்டபடியே கொண்டால், 'குரால' என்ற மொழிதென்படும். குரால என்பது குராலயம் என்பதின் குறுக்கப்பெயராம். கோளம் என்பது கோரால என்பதின் மரூப்பெயர். கோரால என்பது கோராலயம் (சேராலயம்) என்பதின் குறுக்கம் என்பது எளிதாகப் புலப்படும். இவ்வாறே தேவளம்-தேவாலம் என்பவற்றிற்கு, தேவாலயம் என்பதே பொரு ளாம். இது ரூப நிஷ்பத்திரகோ—(சேர) ஜாதிஸ்தானம் கோளம் (கோளம்) ஆனதுபோல் குருஜாதிஸ்தானம், கௌராலயம் அல்லது கௌராலம் ஆயிற்று. இவற்றில் விபரீதபரிணாமம் எதுவுமில்லை.

இனி, குரு என்னும் ஜாதி நிலையங்கள் கலிங்கத்தில் இருந்திருப் பின், அவற்றிலிருந்து குருராஜ்யம் கலிங்கத்திலிருந்த தென்றும், அதற்கு அதிபதியான 'மண்டராஜா' அல்லது 'கௌரால மண்ட ராஜா' என்பவன் ஒருவன் இருந்திருக்க வேண்டுமென்றும் ஒரு வாறு ஊகித்தல் பொருந்தும்.

பழைமையான விஜயநகர (கலிங்க)ப் பேரரசர்களின் புகழ்ப்பா மாலையில் ஓரிடத்தில் அப்பிரபுவின் வீரம் பெருமைகளில் "குருகௌ டல நாபதுபுட்டே நாகரா பெடபெடலாடே" என்ற சொற்றொடர் காண்கின்றது. இச்சொற்றொடரால் அப்பொழுது கலிங்கத்தில் குரு—கௌடர்கள் போன்றவர்கள். பிரசித்தி பெற்றவராக வாழ்ந் திருக்கவேண்டு மென்றுதோன்றுகிறது. இதற்கேற்பக் குருஜாதிகள் என்ற பகுதியினர் வாழ்ந்து வந்த கிராமங்கள் அவர்கள் பெயருடன் இன்னும் விசாகபட்டினம், கஞ்சம் ஜில்லாக்களில் காணப்படுவது இதனை மெய்ப்பிக்கக் கூடியனவாம்.

இங்ஙனம் காணப்படும் கிராமங்களை மொத்தமாகக் கணக்கிட் டால் கஞ்சத்தில் ஆறும், விசாகபட்டினத்தில் ஒன்றும், வொசியில் ஏழும் ஆகப் பதினான்கு ஆகின்றன. எஞ்சியவனைத்தும், வேறுதிசை யில் இருப்பதால் இக்கலிங்கநாட்டுக் குருராஜ்யம் சமுத்திரகுப்த சாஸனத்திலுள்ளபடி மகாகாந்தார ராஜ்யத்தைப்போல அங்கிய ராஜ்ய (Forest Kingdom)மாக இருக்கவேண்டுமென்று யூகிப்ப தற்கு ஏதுக்களிருக்கின்றன.



இவ்வாறு குருராஜ்யத்தை அரசுபுரிந்துகொண்டிருந்த மண்ட ராஜேந்திரனை சாஸனங்களில் கௌரால மண்டராஜா வென மாறு படக் கூறப்பட்டதனால் சாஸனவெழுத்துக்கள் தெளிவாக எழுதப் படவில்லை என்பதே எமது அபிப்பிராயம்.

இவ்வாறே "காஞ்சேயக" என்பது கலிங்கநாட்டின் கிராமத் தில் வழங்கப்படுகின்ற பெயர்களுக்குப் பொருத்தமாகவுள்ளன. எவ்வாறெனில், கஞ்சத்தில் அகஸ்தாலூகாவில்—கஞ்சிபல்லி-கஞ்சி கண்டி என்றும், சத்திரபுரம் தாலூகாவில்—கஞ்சர்யம் என்றும், டெக்கலிதாலூகாவில்—கஞ்சிபூரு என்றும், பெயர்களிருப்பதே.

மேற்காட்டிய கிராமங்களனைத்தும், பல்லவர்கள் நாட்டிலேயே காணப்படுவதனால், இக் காஞ்சீபுர ராஜ்யம் பல்லவராஜ்யமே என்று சொல்லக் கூடியதாக இருக்கின்றது. இங்ஙனம் கலிங்கத்தில் கௌராக—காஞ்சேயக ராஜ்யம் மறைமுகமாயிருந்து கி. பி. நான் காம் சகாப்தம் மத்திய காலத்தில் சமுத்திரகுப்தனின் அதிகாரத் திற்கு உட்பட்டிருக்க வேண்டுமென்று கூறுவது மிகையன்று.

# கலிகால விநோதம்.

திரு. வ. பதுமநாபபிள்ளை.

"கட்புல னாகாமையினால் கடவுளில்லை;
கதைசொல் புராணங்கள் பெரும் பொய்களாகும்;
உட்புகுந்து பார்த்திடில், பார்ப்பனர்கள் மோசம்
உணரலாம்; சமயங்கள் எவையும் வேண்டாம்;
திட்டுவதே மேற்கொள்ளும் சிறந்த தொண்டு;
தேறுவீர்"—என்றுரைத்துத் திரிவோர் காலம்!
கட்டமின்றி சுகித்திருப்போர் நிறைந்த காலம்!
கலிகாலம் காணுமிந்தக் காலந்தானே! (1)

புதியதொரு நாகரிகப் பித்தினாலே
பொருள் வீணிற் பலவழியில் கழிக்குங் காலம்;
"விதியும் இல்லை; புண்யம் இல்லை; பாவம் இல்லை;
வெந்நரகம் சுவர்க்கம் இல்லை; விரும்புமாறு
மதி சென்ற விதமெல்லாம் நடந்து கொண்டு
மகிழ்ந்திருக்கலாம்"--என்போர் பெருகுங் காலம்;
கதி இலராய்ப் பலர் திகைத்துக் கலங்குங் காலம்;
கலிகாலம் காணுமிந்தக் காலந்தானே! (2)

வருடமெலாம் வயல்களிலே உழைத்திட்டாலும்
வரிக்கும் வருவாயின்றி வருந்துங் காலம்;
அருளிலராய்ப் பல உயிரைப் பலி கொடுப்போர்,
அவை அளியாவிடில் தெய்வம் அடங்காச் சீற்றம்
பெருகிவருத் திடுமெனவே பேசுங்காலம்;
பித்தலாட்டம் செய்வோர் பிழைக்குங் காலம்;
கருவினிலே வஞ்சனைகள் தொடருங் காலம்;
கலிகாலம் காணுமிந்தக் காலந்தானே! (3)

இருப்பனவற்றில் திருப்தி யின்றி என்றும்
எண்ணரிய பொருள்களிலே இச்சை கொண்டு
திருக்கு பல செய்தும் நலம் எய்திலாராய்
தினம் வருந்தும் வஞ்சகர்கள் மிகுந்த காலம்;
விருந்துண்ட மனையினிலே கலகம் மூட்டி
வேடிக்கை பார்த்திடுவோர் பெருகுங் காலம்;
கருத்தில் பல கள்ளநினை வுடையோர் காலம்;
கலிகாலம் காணுமிந்தக் காலந்தானே! (4)

மாணவர் ஆசிரியர்களை மதியாக் காலம்;
மைந்தர்தம் தந்தையரை அவமதிக்குங் காலம்
பேணும் பல நகைகளிலே பித்துக் கொண்டு
பெண்கள் புருடரை நித்தம் பிடுங்குங் காலம்;
கோணை வழியையே மகிழ்ந்து கொள்ளுங் காலம்;
கொள்ளை கொலை எங்கும் நிகழ் கொடுமைக் காலம்;
காணும் பஞ்சம் வருடந்தொறும் விளையுங் காலம்;
கலிகாலம் காணுமிந்தக் காலந்தானே! (5)



இதம் உரைப்போர் தமைப் பலரும் தூற்றுங் காலம்;
இளித்த வாய் வஞ்சகரைப் போற்றுங் காலம்;
பதவி உயர்ந்தோர் பிறரைப் பழிக்குங் காலம்;
படாடோபங்களில் பலரும் மயங்குங் காலம்;
மதம் மிகுந்த மாமனார் பழிக் கஞ்சாமல்
மருகியின் மேல் மையல்கொண் டலையுங் காலம்;
கதறுவோர் தந்துயரம் மதியாக் காலம்;
கலிகாலம் காணுமிந்தக் காலந்தானே! (6)

பாவையரை வெறி நோக்காய்ப் பார்க்குங் காலம்;
பத்தினியை அடிமையெனப் புடைக்குங் காலம்;
சேவை செயக் கோயில்புகுந் தெங்கும் சுற்றி
தீய நினைவே கொண்டு திரிவோர் காலம்;
ஆவலொடு வரும் விருந்தை மதியாக் காலம்;
அகங்காரிக்கே சிறப்பை அளிக்குங் காலம்;
காவலுக்கு வாசலில் நாய் கட்டும் காலம்;
கலிகாலம் காணுமிந்தக் காலந்தானே! (7)

நாண் மடம் அச்சம் பயிர்ப்பைக் கைவிட்டோராய்
நாரியர் தம் மனவழியே நடக்குங் காலம்;
ஆண்களிடம் அச்சமது குடிகொள் காலம்;
அணங்குகள் பால் ஆண்டகைமை அமையுங் காலம்;
வீண் பெருமைக் கதை அளப்போர் மிகுந்த காலம்;
வேதாந்தம் வாயளவில் விளம்பும் காலம்;
காண்பவரை வாதுசெய அழைக்குங் காலம்;
கலிகாலம் காணுமிந்தக் காலந்தானே! (8)

மனையில்படுத் திருந்தபடி மணாளர் தம்மால்
மாதர் பல வேலைகளும் வாங்குங் காலம்;
மனைவி கொண்ட சினம் நீங்கக் காலில் வீழ்ந்து
"மன்னிப்பாய்; இனிப் பிழைகள் மறந்துஞ் செய்யேன்;"
என உரைத்துக் கெஞ்சி பல கூத்துமாடி
இளித்த வாயொடு கணவர் ஏங்குங் காலம்;
கனம் அனைத்தும் மனை அடையின் ஒடுங்குங் காலம்;
கலிகாலம் காணுமிந்தக் காலந்தானே! (9)

சைவர்க்கும் வைணவர்க்கும் சண்டை ஓங்கிச்
சத்தியமும் மெய்யன்பும் தளருங்காலம்;
வைவதிலே பற்பலரும் மகிழுங் காலம்;
மாதா பாரததேவி வாடுங் காலம்;
உய்வகையை ஒரு சிறிதும் உன்னாக் காலம்;
உண்மை நெறிகளைச் சிறிதும் உணராக் காலம்;
தெய்வபக்தி சிறிதளவும் சேரார் காலம்;
சிறுமை மிகுங் கலிகாலம் தேறுவீரே! (10)

அன்பர்களே! இத்தகைய இவ்வுலக வாழ்க்கையிலே, மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொள்வீர்களாக. இவற்றில் குறிக்கப்பட்டுள்ள குறைபாடுகள், உங்களிடம் அமையாது ஒழியுமாறு இறைவன் இன்னருள் செய்வானாக. இப்பாக்கள், நீங்கள் வஞ்சகர்களிடத்தினின்றும் தப்பித்துக்கொள்ளத் துணை செய்வன ஆகுக.

## விகடம்.

உபாத்தியாயர்:—பையன்களைப் பார்த்து "இந்தக் கணக்குத் தெரியவில்லையா? உங்கள் நால்வருக்கும் 100 வாழைப்பழம் 60 கொய்யாப்பழம் கொடுத்துவிட்டால் ஒவ்வொருவனுக்கும் என்ன வரும்" என்று கேட்டார்.

சிறு பையன்:—வயிற்றுவலி வரும்.

... ... ... ...

எஜமா:—அடே துஷ்டப் பயலே! சம்பிரதாயமாய்ப் பேசுகிறாயே! நீயெனக்கு உண்மையுள்ள வேலைக்காரனானால் ஏன் அவனிடம் ரூபாயிரண்டு வாங்கினாய்?

வேலைக்காரன்:—ஐயா! தாங்களே யோசியுங்கள். நான் உண்மையுள்ள வேலைக்காரன் ஆனதால் தான் தாங்கள் வந்தவுடன் இந்த விபரமெல்லாம் உள்ளபடியே யுரைத்தேன்.

எஜமா:—நல்லது அவர்கள் உன்னிடத்தில் யாரிடமும் சொல்லாதே என்று இரண்டு ரூபாய் கொடுத்தார்களே! நீ என்னிடம் சொல்லிவிட்டதால், எஜமானிக்கு நீ உண்மையுள்ள வேலைக்காரன் அல்லவே?

வேலை:—ஐயா! வேறுயாரிடமும் சொல்லாதே என்றார்களே தவிரத் தங்களிடம் சொல்லவேண்டாம் என்று என்னிடம் சொல்லவில்லையே. ... ... ...

வைத்தியர்:—அப்பா! படியிலுட்காராதே தோஷம்.

பையன்:—என்னகாணும் "நிலையிற்பிரியேல்" என்று ஒளவையார் கூறியிருக்கிறாள். அதிலிருக்கப்படாதென்கிறீர்கள்.

... ... ... ...

# சமூகக் கிளர்ச்சிக்குரிய குறிப்புகள்.

நல்லிருக்கை திரு. எஸ். காளிலிங்கம்.

எனதன்புள்ள, யாதவகுல மஹாஜனங்காள்!

இறந்துபட்ட என் பிரஜைகளான, "செல்வருக்காய்"க் கண்ணீர் சிந்து. இனி உன் தலைவிதி எவ்விதமாகுமோ? இரத்தம் சிந்திய என்னுடல் நைகின்றது! நீ!(?) நீடூழி காலத்திற்கு உன் இயற்கைப் பெருமையுடன் நிலைக்கக் கடவாய்," என வீரஞ்செறிந்த மொழியுடன் தன் குலத்தை வாழ்த்தி மாண்டார். அவர்களது கோட்டை எதிரி கையிலகப்பட்டாலும், அவர்களது மேலான மானத்தையும், ஜாதிக் கௌரவத்தையும் காப்பாற்றிக் கொண்டுபோய் விட்டார்கள்.

இவ்வித மகோன்னத செயல் புரிந்துவந்த நமது யாதவ அரசர்களுக்குப்பின், சந்திரனில்லா வானம்போல் இருள் சூழ்ந்து காலச்சக்கரச் சுழலிலகப்பட்டு அறிவிற்சிறந்த தலைவர்களிவ்வாறு, அவரவர்களின் நடக்கைக்குகந்தவாறு கட்டுப்பாடில்லாமல்சோம்பல்களினாலும், அதனாலேற்பட்ட மந்தமதியினாலும், சங்கங்களையும், மதக்கோட்பாட்டையும், சரிவரக் கவனித்து நடத்தாமலும், கல்வி என்ற வித்தை எட்டி வித்தைப்போல் நினைத்துக் கற்காது ஒழிந்தும், ஒரு சில கற்ற வகுப்பாரும் தங்களின் பின் சந்ததிகளுக்குக் கல்விப்பயிற்சி கொடுக்காததாலும், எண்ணுமெழுத்துமற்று, மூடமதியினராய்ச் சீவியத்தை நடத்தத் துணிந்த நமது குலத்தவர்களை நினைக்க, நினைக்க மனம் பேதலிக்கின்றது. என்னே! காலத்தின் போக்கு! உலகத்தின் வீரத்திற்கு உறைவிடமாகிய ஒரு சாராரின் உயரியமாண்பு, விவரிக்கவொண்ணாத நிலைக்கு வந்துவிட்டது. தற்காலத்திய வகுப்பாரைக் கண்டால் நாம் நாணத்தக்க நிலைக்கு வந்திருப்பதை, ஒவ்வொரு யதுகுல வாலிபர்களும் உணர்ந்து உற்றுக் கவனியுங்கள். இதுசமயம் பிறசமூகத்தினின்றும், கல்வி, கேள்வி, நாகரிகம், ஒற்றுமை, செல்வாக்கு ஆகியவைகளில் நமது சமூகத்தார் பிற்போக்காளர்களென உலகத்தாரால் கருதப்பட்டு எள்ளி நகையாடக்கூடிய அவ்வளவு தாழ் நிலையிலிருக்கிறது.

## "இளைஞர் எழுச்சி இன்றியமையாதது:"

ஞாலமுழுவதும் இது போழ்து எங்கணும் தோன்றியுள்ள பிறப்புரிமைப் போராட்டம், இளைஞர் எழுச்சியினின்றே தோன்றியதென்பதை எவரும் அறிவர். இளைஞர் எழுச்சி இன்றேல் எம்மதமும் உன்னத ஸ்தானத்திற்குயரா. இதுபோழ்து நமது யதுகுல இளைஞர் வாழ்வு நிலையும் அவர்களின் கல்வியும் எவ்வாறிருக்கிறதென்பதை நினைந்து எனதுள்ளம் புண்படுகின்றது. இளைஞர் வாழ்வின் போக்கை நோக்கும்போது எனது மனம் வருந்துகின்றது. என் செய்வது? இளைஞர்கள் நமது சமூக உயர்வின் உயிர் நரம்புப் பொக்கிஷமாவார்கள். அவ்விளைஞர் வாழ்வு கல்வியின்றி நிலைகுலையுமாயின் "யாதவகுல" நிலை என்னாகும்? நமது சமூக மக்கள் வாழ்வு நிலை என்னாகும்? இளஞ் சகோதரர்களே! உங்கள் மாட்டுப் பெரியோர்கள் வைத்த அன்புக்கு, வாழ்விற்குரிய சகல நலங்களையும் அவர்களுக்கு நல்குங்கள். வாழ்விற்கு முதற்படியாக அமைந்துள்ளதும் இயற்கைத் திருவருளால் பெற்றதுமான, "இளமை"யைக் கல்வியின்றி, தீநெறியிற் சென்று இடர்பட்டுழலாது "ஒழுக்கத்தை உயிரென ஓம்பி, கலைபயின்று, உடலை நற்பயிற்சியிற் பழக்கவும், உள்ளத்தை உண்மை மயமாக்கவும், சமூகத்தை நாகரிக வாழ்வுடன் தழைத்தோங்கச் செய்யவும், இன்னல்களும், வேற்றுமையும், நிறைந்த வாழ்விலே வெற்றி காண்பதற்கும், யாவரும் சமமென்ற உணர்ச்சி உண்டாக்கும். அன்பு நிறைந்த அற நிலையமாகிய "சங்கங்களை" உண்டாக்கி அதன் வாயிலாகச் சமூகத்தைத் தழைத்தோங்கச் செய்யல் ஒவ்வொரு யாதவ இளஞ் சகோதரர்களும், பெரியோர்களும், முயன்றிட வேண்டும். அதற்குரிய ஆற்றல்கள் உங்களிடமுண்டு. இளைஞர்கள் விரும்பியவாறு, ஊக்கத்தால், உறுதியால், முயற்சியால், யாவும் பெறலாம்.

பெரியோர்களே! எனது இளஞ்சகோதரர்களே! உங்கள் ஊர்களில் சங்கங்களை யுண்டாக்கி நமது சமூக அயர்வைத் தட்டியெழுப்புங்கள். கல்வி இல்லாதவர்களுக்குக் கல்வியைப் புகட்டுங்கள். ஒற்றுமை இல்லாதவர்களுள் ஒற்றுமை யுண்டாக்குங்கள். சமூகத்தீயொழுக்கங்களையும், விரும்பத்தகாத நாகரிகத்தையும், விவாகசம்மந்தமாயுள்ள மூடக்கொள்கைகளையும் நமது ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லி விளங்கச்செய்து நாகரிகத்தைப் பரப்புங்கள். சகோதர இளைஞர்களே! உங்களால் நமது யாதவசமூகம் குன்றின்மேலிட்ட தீபம்போல் துலங்கவேண்டுமென்பதைப் பால்ய உள்ளத்தில் பசுமரத்தாணிபோல் பதியவையுங்கள். சமூக முன்னேற்றத்திற்கு, சங்கங்கள் ஆங்காங்கு நிறுவவேண்டுவதவசியம். அடுத்த வியாசத்தில் "சங்கங்களை" அமைக்கவேண்டிய நிருவாக விதிகளை எழுதப்படுமென்பதைத் தாழ்மையுடன், எனது சகோதர சமூகத்தவர்களுக்கு விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன்.



## யாதவ வாலிப சங்கம்.

பாளையங்கோட்டை!

இச்சங்கத்தின் மாதாந்தரக்கூட்டம் சென்ற அக்டோபர்மீ 19வ திங்கட்கிழமை S. A. பொன்னையாதால் உபாத்தியாயர் (லெண்ட்க்லேவியர் காலேஜி) அவர்கள் தலைமையின் கீழ் கனகவிலாஸ் மந்திரத்தில் மிக்க விமரிசையாக நடைபெற்றது.

திருவாளர் P. M. சுப்பையா II U. C. லெண்ட்க்லேவியர் காலேஜி. அவர்கள் "நட்பு" என்பது பற்றி அரிய உபந்நியாசம் செய்தார்கள். அவர்களுக்குப்பின் திருவாளர் தருமர். ராம்தாஸ் நவநீதகிருஷ்ணன். பிச்சையாதால் முதலியவர்கள் பேசினார்கள். தலைவர் அவர்கள் நட்பு. என்பதை விளக்கிக்காட்டக் கம்பராமாயணத்திலிருந்தும் மகா பாரதத்திலிருந்தும் (Bible) பைபிளிலிருந்தும் உதாரணம் எடுத்துக் கூறினார்கள்.

பின்னர் விஷயாலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

திருவாளர் K. செங்குதால் அவர்கள் கோகுலமிடம் பணத்தை இச்சங்கத்திற்கு மனமுவந்து தருவதாய்ச் சொன்னதற்கு இச்சங்கமானது நன்றி செலுத்துகின்றது.

கோகுல லைப்ரேரியிலுள்ள பணத்தை இச்சங்கத்திற்குக் கொடுத்து உதவவேணுமாய் ஷை அங்கத்தினர்களை இச்சங்கம் தயவாய்க் கேட்டுக் கொள்ளுகிறது.

நம் யாதவ மக்களின் முன்னேற்றங் கருதி வெளியாகும் நம்குலமித்திரனை நம்மக்களியிடையே பரவச்செய்யும்படியாயும், மற்றும் நம் சங்கத்திலுள்ள ஒவ்வொரு அங்கத்தினர்களும் நம் அருமைக்குழந்தையாம் யாதவமித்திரனை ஆதரிக்க வேண்டுமாயும் இச்சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது.

சுசீந்திரம் திருவாளர் செல்லம் அவர்களால் அனுப்பப்பட்ட கோகுல கீதம் என்னும் புஸ்தகம் வரப்பெற்றோம். புஸ்தகத்தில் நம்குல சீர்திருத்தம் பற்றி வெகு அழகாய்ப் பாடியுள்ளார்கள். அப்புஸ்தகத்தை ஒவ்வொரு அங்கத்தினர்களும் வாங்கிப்படித்து ஆதரிக்கவேணுமாய் இச்சங்கம் கேட்டுக் கொள்ளுகிறது. வாழ்த்துப்பாக்கள் பாடச் சங்கம் இனிது முடிவுபெற்றது.

நாகபட்டணம்!

ஏற்கனவே பிரசுரம் செய்யப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 22-11-31 ஞாயிற்றுக்கிழமை மாலை 3-மணிக்குத் தஞ்சை ராவ்பஹதூர் ராமநாதன் செட்டியார் ஹாலில் சில யாதவ நண்பர்கள் ஒரு கூட்டம்கூடி வருகிற 7வது மாகாண யாதவ மகாநாட்டைத் தஞ்சையில் நடத்திவைக்கும் விஷயமாக ஆலோசித்தார்கள். யாவருக்கும் மேற்படி மகாநாட்டைத் தஞ்சையில் நடத்துவதில் ஆட்சேபனையில்லாமல் ஊக்கம் அதிகரித்திருந்தது. வேண்டிய ஏற்பாடுகளைப்பற்றி யோசனைசெய்யச் சில குறிப்பிட்டபேர்கள் வாராததால் மேற்படி கூட்டம் 6—12—31 ஞாயிற்றுக்கிழமை மாலை 3-மணிக்கு மறுபடியும் கூடி ஒரு முடிவைச் செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

T. M. இராஜகோபாலன்.
யாதவசங்க காரியதரிசி, நாகை.

128

## திருவாங்கூர் சட்டசபையில்

# யாதவ அங்கத்தினர்.

ச. செல்லம்.

சென்னை மாகாண 6-வது மகாநாடு செங்கோட்டையில் நடைபெற்றது நண்பர்களுக்கு ஞாபகமிருக்கலாம். இம்மகாநாட்டு வரவேற்புக் கழகத்தலைவர் ஸ்ரீமான் S. சட்டநாதக் கரையாளர் M. A., B. L., அவர்கள், இவ்வாண்டு திருவாங்கூர் சட்டசபைக்கு ஏற்பட்ட தேர்தலில் கூடுதல் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்ற செய்தியை மிக மகிழ்ச்சியோடு யாதவ மக்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். சென்னை மாகாணத்திலே மிகச் சிறப்புள்ள யாதவகுலங்களில் ஒன்று செங்கோட்டைக் கரையாளர் குடும்பம். கடவுளருளால் இவர்கள் கல்வியுஞ் செல்வமுங் கைக்கொண்டு வாழ்வோர்கள். இவருள் எஸ். சுப்பிரமணியக் கரையாளர் பி. ஏ. என்பவர் மிக உதாரசீலர். ஏழைகளுக்கு இரங்கும் இயல்பினர். இன்னார் காலகதி யாவதற்குச் சின்னாள் முன்புதான் 'ரூவ் சாகிப்' பட்டம் கிடைத்தது.

திருநெல்வேலி மகாநாட்டில் ஸ்ரீ சுப்பிரமணியக்கரையாளர் அவர்களின் மரணத்திற்காக அனுதாபத் தீருமானமொன்று நிறைவேறியது. ஞாபகமிருக்கலாம்- இவர்கள் பல தருமஸ்தாபனங்கள் நிறுவியுளார்கள். அதில் சட்டநாதன் ஆங்கிலக் கலாசாலை தலை சிறந்து விளங்குகிறது. நமது சமுதாயச் சீர்திருத்த இயக்கத்திற்கு இப்பெரியாரின் பேருதவி கிடைக்காமற்போனது நமது துரதிர்ஷ்ட மென்றே கூறவேண்டும். அதை அன்னார் புதல்வர் ஸ்ரீ சட்டநாதர் அவர்கள் நிறைவேற்றிக் கொடுப்பார்கள் என்பதில் ஐயமில்லை அன்றியும் ராமநாதபுரம் மகாநாட்டில் தலைமை தாங்கி நமது சமூகத்திற்குப் பெரும் ஊக்கமூட்டிய மகா-ள-ள-ஸ்ரீ முத்து சுவாமிக் கரையாளர், அவர்கள் யாரெனில் ஸ்ரீ சட்டநாதரின் பெரிய தந்தையார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே நமது யாதவசமூகம் செங்கோட்டைக் கரையாளர் குலத்தினிடம் பெரும் மதிப்பைக் கொண்டிருக்கிறதென்பதும் அது போல அவர்களும் சமுதாயத்தினிடம் பேரன்பு பூண்டு ஊழியங்கள்புரிந்து வருகிறார்கள் என்பதும் நன்கு விளங்குகிறது. ஆகையால் திருவாங்கூர் யாதவமக்கள் ஸ்ரீ சட்டநாதர் அவர்களுக்குத் திருவாங்கூர் சட்டசபையில் அங்கத்தினர் பதவி கிடைத்ததினால் பெரும் மகிழ்ச்சியடைகிறார்கள். தம்மைத் தெரிந்தெடுத்து அனுப்பின தேசத்திற்குச் செய்யுந் தொண்டோடு சமுதாயத்திற்கும் ஊழியஞ் செய்யச் சிந்திப்பார்களாக.

128 A

வைகாசிமீ கடைசிக்குள் ஆர்டர் கொடுப்பவர்களுக்கு விலை ரூ 2.

ஸ்ரீராமஜெயம்.



### யாதவமித்திரன் சந்தாதார்களுக்கோர்

# அறிவிப்பு.

மயர்வற மதிநல மருளப்பெற்ற பரமகாருண்யரான ஆழ்வார்கள் பன்னிருவர்களால் அருளிச்செய்யப்பெற்ற தமிழ் வேதமாகிய

# நாலாயிர திவ்யப் பிரபந்தம்.

பெரியவாச்சான் பிள்ளை, மணவாள மாமுனிகள் முதலான பூர்வாசாரியர்கள் வியாக்யானங்களுக்கிணங்கிய குறிப்புரையுடனும் ஆழ்வாராதிகள் ஆப்டோன் ப்ளாக்படங்களுடனும் சுத்தப் பதிப்பில் வெளியாயிருக்கிறது. யாதவமக்களது ஒவ்வொரு கிருகத்திலும் பிரபந்தம் இருந்து தீரவேண்டியது அவசியமாகையால், இதன் விலை ரூபா நாலுக்கு நமது சந்தாதாரர்களுக்கு மாத்திரம் பிரதி ஒன்றுக்கு ரூபா இரண்டுவீதம் கொடுப்பதாகத் தீர்மானித்திருக்கிறது. பிரபந்தத்திற்கு ஆர்டர் கொடுப்பவர்கள் விபரமான விலாசத்தையும் சந்தா நம்பரையும் குறித்தனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மானேஜர்.

| | விலை | | | சந்தாதாருக்குக் குறைந்த விலை | | |
|---|---|---|---|---|---|---|
| வால்மீகி ராமாயணம் வசனம் | 15 | 0 | 0 | 13 | 0 | 0 |
| கம்பராமாயணம் வசனம் | 4 | 0 | 0 | 2 | 8 | 0 |
| பாரதம் வசனம் | 8 | 0 | 0 | 6 | 0 | 0 |
| பாகவதம் வசனம் | 4 | 0 | 0 | 2 | 8 | 0 |
| பக்தவிஜயம் வசனம் 6 பாகம் | 6 | 0 | 0 | 4 | 8 | 0 |
| அஷ்டப்பிரபந்தம் | 3 | 8 | 0 | 3 | 0 | 0 |
| குருபரம்பரா ப்ரபாவம் | 3 | 0 | 0 | 2 | 4 | 0 |
| பகவத்கீதை | 1 | 8 | 0 | 0 | 12 | 0 |
| விஷ்ணு புராணம் | 3 | 0 | 0 | 2 | 4 | 0 |
| வில்லிபாரதக்கவி (அரும்பத உரையுடன்) | 4 | 0 | 0 | 2 | 8 | 0 |
| கம்பராமாயணக் கவி | 8 | 0 | 0 | 5 | 0 | 0 |
| ராமர் அஸ்வமேதயாகம் | 2 | 0 | 0 | 1 | 0 | 0 |
| ஆதிபர்வம் | 2 | 0 | 0 | 1 | 0 | 0 |
| விராடபர்வம் | 1 | 4 | 0 | 0 | 12 | 0 |
| ஆனந்த ராமாயணம் | 6 | 0 | 0 | 5 | 0 | 0 |
| நித்யானு சந்தானம் | 0 | 12 | 0 | 0 | 8 | 0 |
| முதலாயிரம் | 1 | 0 | 0 | 0 | 12 | 0 |
| விநோத ரச மஞ்சரி | 1 | 8 | 0 | 1 | 0 | 0 |
| நைடதம் (விசேட உரையுடன்) | 4 | 0 | 0 | 3 | 0 | 0 |
| திருக்குறள் (தெளிபொருள் விளக்க விரிவுரையுடன்) | 3 | 8 | 0 | 2 | 8 | 0 |
| நாலடியார் (உரை) | 1 | 8 | 0 | 1 | 2 | 0 |
| நளவெண்பா (மூலமும் விருத்தியுரையும்) | 2 | 8 | 0 | 1 | 14 | 0 |
| அகத்தியர் தேவாரத் திரட்டு | 1 | 4 | 0 | 1 | 0 | 0 |
| ராமலிங்கஸ்வமி அருட்பா | 4 | 0 | 0 | 2 | 8 | 0 |
| மூவர் தேவாரம் அடங்கன்முறை | 5 | 0 | 0 | 3 | 8 | 0 |
| கந்தபுராண வசனம் | 4 | 0 | 0 | 3 | 0 | 0 |
| விநாயகபுராண வசனம் | 4 | 0 | 0 | 3 | 0 | 0 |
| சூடாமணி நிகண்டு 1-முதல் 12 | 1 | 8 | 0 | 0 | 14 | 0 |

இன்னும் மற்ற வைஷ்ணவ சம்ப்ரதாயப் புத்தகங்களும் தமிழ், தெலுங்கு, நாகரம், கிரந்தம், இங்கிலீஷ் நாவல்களும் இருக்கின்றன. வேண்டியவைகளுக்கு விபரமாக எழுதினால் சகாயமாக அனுப்பி வைக்கிறோம். தபால் செலவு வேறு.

## யாதவ மித்திரன் சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| இந்தியா, சிலோன், பர்மா முதலிய உள்நாட்டிற்கு வருஷம் 1-க்கு | ரூ | 1—0—0 |
| பினாங்கு சிங்கப்பூர், முதலிய வெளிநாட்டிற்கு வருஷம் 1-க்கு | ரூ | 1—8—0 |

தனிப்பிரதி விலை அணா 2.

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தாக் கிடையாது.

மாதிரிப் பிரதி வேண்டுவோர்
இரண்டரையணா, தபால் தலை அனுப்பவேண்டும்.

1. சந்தாதாரராய்ச் சேர்கின்றவர்கள் பெயரையும் விலாசத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

2. எப்பொழுதும் சந்தாத் தொகையை முன் பணமாகச் செலுத்தவேண்டும். வி. பி. மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். சந்தாத்தொகையை முன்பணமாக மணியார்டர் செய்தால் 2-அணாத்தான் செலவாகும். வி. பி. மூலம் பத்திரிகையை வரவழைப்பதில் 3-அணா அதிகச் செலவாகும். ஆதலால் முன்னாடி மணியார்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்வதே நலம்.

3. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் அவ்வருஷ ஆவணி மாதம்முதல் கணக்கு வைக்கப்பட்டு ஆவணி மாதப் பத்திரிகை முதல் சேர்த்தனுப்பப்படும்.

4. யாருக்கேனும் சஞ்சிகை வந்து சேராவிட்டால் அம்மாதமுடிவிற்குள் தங்கள் சந்தா நம்பருடன் தெரிவித்துப் பெற்றுக் கொள்ளலாம். அதற்குப் பின்னர் தெரிவித்தால் விலை செலுத்தியே பெற்றுக் கொள்ளவேண்டும்.

5. இடம் மாறும் சந்தா நேயர்கள் தங்கள் புது விலாசத்தைத் தெரிவித்து, அது விபரத்தைத் தபாலாபீஸாரிடமும் அறிவித்துவிட வேண்டும்.

6. சந்தா நம்பரைக் குறிப்பிடாத கடிதங்களைக் கவனிக்க முடியாது. பதில் விரும்புவோர் தபால் தலை அனுப்பவேண்டும்.

### விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| 1-பக்கத்திற்கு | ரூ | 10—0—0 |
| ½-பக்கத்திற்கு | ரூ | 5—8—0 |

நீண்டகால விளம்பரங்களுக்கு யாதவ மித்திரன் ஆபீஸிற்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

---

ஐந்தாவது யாதவமகாநாடு போட்டோ படங்கள்.
வேண்டியவர்கள் யாதவமித்திரன் ஆபீஸுக்கு விபரமாகத் தெரியப்படுத்துவதுடன் முன் பணமாக ரூ 1—5—0 மணியார்டர் மூலம் அனுப்பிவைக்கவும்.

128 D

யாதவ மகா ஜனங்களுக்கு ஒரு

# வேண்டுகோள்.

யாதவ சகோதரர்களே!

நமது யாதவ மித்திரன் கல்வி, பொருளாதாரம், ஆசாரச் சீர்திருத்தம் முதலிய துறைகளில் சிறந்த அறிஞர்களால் எழுதப் பெற்ற அருமையான கட்டுரைகளைக்கொண்டு யாதவ மக்களின் முன்னேற்றத்தையே முக்கியமாகக் கருதி மாதம் ஒருமுறை வெளி வருகின்றது.

எல்லா யாதவ மக்களும் உடனே சந்தாதாராய்ச் சேர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

எல்லா யாதவ மக்களிடமும் யாதவமித்திரனைப் பரவச் செய்தல் சமுதாயப் பற்றுடையவரின் முதற்கடமையாகும்.

யாதவமித்திரன் நம்மவர் வாழும் ஒவ்வொரு கிராமங்களி லும் உலாவவேண்டும். ஒவ்வொரு யாதவரிடத்திலும் யாதவமித் திரன் மாதாமாதம் சமுதாய விஷயங்களைத் தெரிவிக்கும்படி செய்ய வேண்டும். இதுவே சமுதாயச் சீர்திருத்தத்திற்கு அறிகுறி.

இப்பொழுது விலாசந் தெரிந்த சிலருக்கே பத்திரிகை அனுப்பப்பட்டிருக்கிறது. ஏனையோர் விலாசந் தெரிவித்துப் பத் திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆகையால் யாவரும் பத்திரிகை படித்துப் பயன் பெறு மாறும், இப்பத்திரிகையை வாசிக்கும் அன்பர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்குத் தெரிந்த பத்திரிகை படிக்கும் ஆற்றலுள்ள நமது யாதவ சகோதரர்களின் விலாசங்களைத் தயைசெய்து எழுதி யனுப்புமாறும் வேண்டுகிறோம்.

மானேஜர்,
**யாதவ மித்திரன் ஆபீஸ்,**
ஸ்ரீ கோபால் மஹால்.
வடக்குச்சித்திரை வீதி, மதுரை.

எக்செல்ஸியர் பவர் பிரஸ், மதுரை:-1931.

F77

Reg., No. M - 2527.

128 E







# யாதவ மித்திரன்.

யாதவமக்களின்
முன்னேற்றங்கருதிவெளிவரும்
மாதப்பத்திரிகை.



| தொகுதி | பிரஜோற்பத்தி மார்கழி 1931 டிசம்பர் | பகுதி |
|---|---|---|
| 3 | | 5 |







பொருள் அடக்கம்.



| | |
|---|---|
| கடவுள் வணக்கம் | 129 |
| பொங்கல் வாழ்த்து திருவ... | 130 |
| முன்னவன் முன்னம் முடி | 133 |
| வள்ளல் பாரி | 137 |
| ...வேல் அசதி | [illegible] |
| பத்தர் வாழ்க்கை | 145 |
| ஓர் மனைவியின் வேண்டுகோள் | 147 |
| கால்நடை வைத்தியம் | 148 |
| சமூக முன்னேற்றச் சங்க வீதிகள் | 150 |
| யாதவ முன்னேற்றம் கொண்ட சிலர்கள் | 151 |
| சமுதாயக் கிளர்ச்சிகள் | 155 |
| ஓர் கண்டனம் | 158 |
| சந்தோஷச் செய்திகள் மாதா பரிசு | 159 |
| இனோ ஜூர் பரிசு | 160 |



FEB 1932







Managing Editor.
இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,

7 - FEB 192

# யாதவமித்திரன்.


## ஆசிரியர் கூட்டத்து அங்கத்தினர்கள்

## (Editorial Board Members.)

### தலைவர்.

1. திருவாளர், ஆ. கார்மேகக்கோனார் அவர்கள்
தலைமைத்தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

---

2. ,, ச. செல்லம் அவர்கள் (யாதவர்) சுசீந்திரம்.
3. ,, J. சக்கரபாணி நம்பியார் அவர்கள், பி. ஏ., பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வைஸ் பிரசிடெண்டு.
ஜில்லாபோர்டு, திருநெல்வேலி.
4. ,, V. கிருஷ்ணரெட்டியார் அவர்கள் (யாதவர்) பி. ஏ பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வேலூர்.
5. ,, தி. அ. முத்துசாமிக் கோனாரவர்கள், வித்வான்,
திருச்செங்கோடு.
6. ,, K. வீராசாமிப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், முனிசிபல் உயர்தர கலாசாலை,
திண்டுக்கல்.
7. ,, R. வெங்கடா சலம்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர்,
S P. G. உயர்தரக் கலாசாலை, தஞ்சாவூர்.
8. ,, M. V. வேணுகோபாலப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், E. L M F ஹைஸ்கூல்
புரசபாக்கம், சென்னை.
9. ,, ஐயம்பெருமாள் கோன் அவர்கள், தமிழாசிரியர்,
ஸெயின்ட் ஜோஸப் காலேஜ், திருச்சிராப்பள்ளி.
10. ,, K. கோபால கிருஷ்ணன் அவர்கள், B. Sc. (Hons.)
M. R. A. S. பர்மா.


## வேண்டுகோள்.

வியாசங்கள் எழுதுவோர் தெளிவாகவும் தூஷணைகளின்றியும் முழுவிலாசத்துடன் சமூக முன்னேற்றத்திற்குரியனவும் அறிவு வளர்ச்சிக்குரியனவுமாகிய பொது விஷயங்களைப்பற்றிச் சுருக்கமாகவும், நடை எளிதாகவும் எழுதியனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோரும், விளம்பரங் கொடுக்க விரும்புவோரும் அடியிற்காணும் விலாசத்திற் கெழுதுக.

யாதவமித்திரன் ஆபீஸ், ஸ்ரீ கோபால் மஹால்,
வடக்குச் சித்திரைவீதி, மதுரை

128



திருவாளர் அப்பாத்துரை என்ற ராமகிருஷ்ணபிள்ளை B. A.

இவர் நமது குலமுன்னேற்றத்திற்கு உழைத்தலே தம் வாழ் நாளில் பிரதானமாகக் கொண்டவரும் யாதவமகாநாடு என்னும் நமது பெரிய சமூகக்கிளர்ச்சியை உற்பத்தி செய்தவரும் செய்து கொண்டு வருபவரும் சென்னை ஸ்ரீயதுகுல சங்கத்தின் உபதலைவரும் (Vice-President) செங்கல்பட்டு ஜில்லா போர்டு அங்கத்தினரும் சென்னையிலுள்ள பல சாஸ்வதநிதி டைரக்டராக(Director) விளங்குபவருமாகிய சென்னை புரசவாக்கம் திருவாளர் M. அப்பாத்துரைப்பிள்ளை யவர்களின் ஜேஷ்டபுத்திரர். இவர் சமீபத்தில் சென்னை சர்வ கலாசாலை பீ. ஏ., பட்டம் பெற்றுள்ளார். இச்செய்தி நம்குல முன்னேற்றத்தில் ஒரு பகுதி யென்பதனை எடுத்துக் காட்டி மகிழ்வெய்துகின்றோம். இன்னும் இவர் தம் வாழ்நாளில் பல நற்பதவிகளைப் பெற்று இனிது வாழ இறைவன் திருவருளை வழுத்துகின்றோம்.

(ப-ர்.)

128.1
129

# யாதவமித்திரன்.

## ஒரு மாதப்பத்திரிகை.

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.


| | | |
|---|---|---|
| தொகுதி 3 | பிரஜோத்பத்தி௵ மார்கழி௴<br>1931௵ டிசம்பர்௴ | பகுதி 5 |


### கடவுள் வணக்கம்.

நாவகாரியஞ் சொல்லிலாதவர்
நாடொறும் விருந் தோம்புவார்
தேவகாரியம் செய்து வேதம்
பயின்றுவாழ் திருக்கோட்டியூர்
மூவர் காரியமுந் திருத்து
முதல்வனைச் சிந்தியாத அப்
பாவகாரிகளைப் படைத்தவன்
எங்ஙனம் படைத்தான்கொலோ.

பெரியாழ்வார்.

மூவர் காரியமாவன:—மதுகைடபர்கள் வேதத்தைப் பிரமனிடத்தினின்று பறித்துக்கொண்டு போய்விட்டபோது பிரமன் "கண்ணிழந்தேன், தனமிழந்தேன்" என்று முறையிட அதை மீட்டிக் கொடுத்தமையும், பரமசிவன் பிரமனது சிரத்தைக் கொய்து பிச்சேறி மூவுலகுந்திரிய அக்ஷயமென்று பிக்ஷையிட்டு அவரது ஆபத்தைப் போக்கியமையும், இந்திரன் மகாபலி கையிலே இராச்சியத்தைப் ...ப் பறிகொடுத்து முறையிட அதை மீட்டிக் கொடுத்தமையும், ...னுமிவை போல்வனவாகிய அனந்தவிதமாவனவுமாம்.

## தமிழ்ப் புலவர்
## மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்கள் பாடியது.

### பொங்கல் வாழ்த்து.

நிலை மண்டில ஆசிரியப்பா.

சீரார் கல்வி சிறந்தொளி ரன்பீர்
மார்கழித் திங்கள் மகிழ்நனி சிறக்க
ஆர்கலி யுலகில் அமைந்த தாகலின்
ஏர்திகழ் மதியோ டின்பம் பெருகவும்
பொங்கு மங்களம் எங்கும் தங்கவும்
இனிய காலையில் இன்னிசை பலரும்
ஓதி யோதி யுலக முதல்வனை
ஏத்தின ரன்றியு மெய்திய தையில்
பொங்கலோ பொங்கல்! பொங்கலோ பொங்கல்!
பொங்குக பொங்குக பொங்குக பொங்கலென்
றெங்கு மிசைத்த இன்னிசைக் கொப்பப்
பொங்குக வாழ்க்கை பொங்குக செல்வம்
இங்குமக் கென்றும் இறைவனின் அருளால்
பொங்கல் நாட்பல பொலிந்தோங் குகவே.

## திருவள்ளுவர் திருக்குறள்.

திரு: ரா. தேசிகன்.

---

வடமொழியில் வேதங்கள் எவ்வாறு சிறந்து விளங்குகின்றனவோ, அவ்வாறே தென் மொழியில் திருவள்ளுவர் திருக்குறள் சிறந்து விளங்குகிறது. திருவள்ளுவர் திருக்குறள் தமிழுக்கே ஒரு உயர்வை அளித்து, அதன் சீரிய அணிகலனாய்த் திகழ்கிற அதன் பெருமையும், அதன் உயர்ந்த தன்மையும் செப்பக்கரமன்



அறம், பொருள், இன்பம், வீடு என்ற புருஷார்த்தங்கள் நான்கினையும் திருவள்ளுவர் மிக்க சுருக்கமாகவும், தெளிவாகவும் திருக்குறளில் தெரிவித்திருக்கிறார். அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என முப்பாலாக மாத்திரம் திருக்குறள் பிரிக்கப்பட்டிருக்கிறதேயெனின், நான்காவதாகிய வீட்டைப் பற்றியது அறத்துப்பாலில் அடங்கியிருக்கிறது.

மனித வாழ்க்கைக்கு வேண்டியபொருள் அனைத்தும் திருக்குறளில் அமைந்து கிடக்கின்றன. ஒருவன் தன் வாழ்நாளைச் செம்மையுற நடத்த வேண்டுமெனின், அதற்கு வேண்டிய வழிகளை அவன் திருக்குறளில் கண்டு கொள்ளலாம்.

அருங்குறள் ஆயிரத்தி முந்நூற்றி முப்பதையுடைய திருவள்ளுவர் நூலை ஒருவன் கற்றுவிட்டானானால், அவன் மேலும் படிக்க வேண்டிய நூல் மற்றொன்றில்லை. ஏனெனில் அவன் அறிந்து கொள்ள வேண்டியதனைத்தும் திருக்குறளிலேயே இருக்கின்றதினால் என்க.

"எல்லாப் பொருளும் அதன் கண்உள; அதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லை."

திருவள்ளுவர் தாம் ஆக்கிய நூலுக்குச் சிறப்புப்பாயிரம் பெறக்கருதி, புலவர் பெருமான் ஒருவரை நோக்கிச் செல்லுங்கால், வழியில் ஒரு குளத்தில் அப்புலவர் துணி தோய்த்துக்கொண்டிருந்ததைக் கண்டு, அவரை அணுகி, தாம் கொண்டுவந்த நூலைப் பார்வையிடுதல் வேண்டுமென்று மிகுந்த வணக்கத்தோடு அவரை வேண்டலும், அவர் "நாம் துணி தோய்த்துக்கொண்டிருக்கும் போதும் நம்மை இத்தகைய துன்பம் விட்டபாடில்லை" என்று சினமுற்று, திருவள்ளுவரை விளித்து "நீர் கொண்டுவந்த நூலில் என்ன இருக்கிறது?" என்று கேட்க, திருவள்ளுவர். "ஐய, எளியேன் எழுதிய நூலில் எல்லாமிருக்கின்றன." என்று விடை கூறலும், புலவர் மேலுஞ்சினந்து தாம் துணி தோய்த்துக் கொண்டிருந்த கல்லைக்காட்டி "இதோ கிடக்கும் கல் உமது நூலில் இருக்கிறதா?" என்று வினவ, வள்ளுவர் "பெரியீர்! அக்கல்லும் அடியேன் நூலில் அடங்கியிருக்கிறது. அதை,

வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல்.

என்றபாவில் பாருங்கள் என்று பகரப் புலவர் வியப்புற்று, வள்ளுவரை வாழ்த்தி, அவர் நூலைப் பெருமைப்படுத்தி அனுப்பினாராம். ஆகவே, திருக்குறளில் இல்லாததொன்றில்லை யென்பது மறுக்கொணாததொன்று.

குறள் என்பதற்குச் சிறியது என்று பொருள். பெரிய விடயங்கள் குறளாகிய சிறிய பாக்களிலே குவிந்து கிடக்கின்றன. இந்நுண்மை கூர்ந்து கவனிப்பார்க்குப் புலனாகும். ஒரு கடுகினுள்ளே ஏழு கடல்களையும் புகுத்திவைத்தாற்போல ஒரு சிறிய குறளிலே அளவிடற்கரிய பொருள்களைத் திருவள்ளுவர் திரட்டி வைத்திருக்கிறார். ஒரு கடுகை யுடைத்து அதனுள் ஏழு கடல் நீர் இருக்கக் கண்ட ஒருவன் எங்ஙனம் வியப்புறுவானோ, அங்ஙனமே குறளை ஆராயப்புகுமொருவன் அதனுள் காணும் எண்ணிலாப் பொருள்களை எண்ணி யெண்ணி வியப்புறுகிறான். இவ்வுண்மை கண்டே இடைக்காடரும்,

கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்

என்றார். நம் ஔவையாரும் இதனை இன்னும் மிகைப்படுத்தி,

அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்.

என்று கூறினார்.

நான்முகப் பெருமானே திருவள்ளுவராய் அவதரித்துத் திருக்குறளை எழுதினாரென்று கருதப்படுகிறது.

நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்
றான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த—நூன்முறையை
வந்திக்க சென்னிவாய் வாழ்த்துக நன்னெஞ்சஞ்
சிந்திக்க கேட்க செவி.

இதுபற்றியே திருவள்ளுவருக்குத் தேவர், தெய்வப் புலவர், நான்முகனார் என்ற பெயர்களும், அவருடைய நூலுக்குத் தெய்வநூல், பொய்யாமொழி, தமிழ் மறை, உத்திரவேதம், தெய்வமொழி, முதுமொழி, பொதுமறை வள்ளுவர் வைப்பு என்ற பெயர்களும் எந்நாட்டாராலும் புகழ்ந்து பாராட்டி வழங்கப்படுகின்றன.

---

# "முன்னவன் முன்னம் முடி"

திரு. தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், பி. ஏ.

பொன்னையும் பொருளையும் பெரிதென மதித்து நீதி மன்றங்களில் எல்லையற்ற வல் வழக்காடுதலே உடன் பிறந்தாரது ஒழுக்கமாய் நிகழும் இக்காலத்தில் அயோத்தி நகரில் மன்னர் மக்களாய்த் தோன்றி அண்ணன் தம்பியாய் இலங்கிய இருவரது வரலாற்றை அறிவது முறையேயாகும். இராமன் பால் இறவாத அன்பு பூண்டொழுகியவன் இலக்குவன் என்பது சொல்லாமலே அமையும். இருவரும் வேறு வேறு தாயார் வயிற்றில் பிறந்தும், ஒரு சிறிதும் வேற்றுமையின்றி ஒத்த அன்புடையவராய் இலங்கிய பெருமையை உன்னுந் தோறும் நாம் ஆரா உவகையெய்துகின்றோம். இலக்குவன் இராமன் பால் இறவாத அன்பு பூண்டு அவனது ஏவலைச் செய்வதே தன் கடன் எனக்கொண்டு வாழ்ந்த பெருமகன் என்பது வெள்ளிடை மலைபோல் தெள்ளியோரது உள்ளமுணரும்.

"தருவனத்துள் யானியற்றுந் தவவேள்விக்
கிடையூறாத் தவஞ் செய்வோர்கள்
வெருவரச் சென் றடைகாம வெகுளியென
நிருதர் இடைவிலக்கா வண்ணம்
செருமுகத்துக் காத்தி என நின் சிறுவர்
நால்வரினுங் கரிய செம்மல்
ஒருவனைத் தந்திடுதி" என்று இரந்து நின்ற முனிவனுடன் தயரதன் "வந்த நம்பியைத் தம்பி தன்னொடும்" அனுப்பும் பான்மையில், இலக்குவன் அவ்விளவயதிலேயே இராமனைப் பிரியாத அன்பன் என்பது விளக்க முறுகின்றது. முனிவன் கேட்டதும் ஒரு மகனைத்தான், கொற்றவனும் "திருவின் கேள்வனைக் கொணர்மின் சென்றென" இராமன் ஒருவனையே அழைத்து வரும்படி ஏவலாளர்கட்குக் கட்டளையிடுகின்றான். இருந்தும், நம்பியுடன் தம்பியும் புறப்பட்ட தன்மையில், இருவரும் இணைபிரியாத் துணைவர்கள் என்பதைக் கவிஞன் அழகாக எடுத்துரைக்கின்றார்.

இனித் "தாய்வரங் கொளத் தந்தை யேவலால்."

சடைமுடியும் மரவுரியும் தரித்து, இராமன் தாங்கரும் தவம் மேற்கொண்டு பூழி வெங்கானம் நண்ணி, புண்ணியத் துறைகளாடப் புறப்படுகின்றான். இவ்வுரை கேட்ட இளையோன்.

"கண்ணிற் கடைத்தீயுக நெற்றியிற் கற்றை நாற
விண்ணிற் சுடரும் சுடர்தோன்ற மெய்ந்நீர் விரிப்ப
உண்ணிற்கு முயிர்ப் பெருமூதை பிறங்க நின்று"

மூட்டாத காலக்கடைத்தீயென மூண்டெழுந்த நிலையை" விளக்கும் கம்பரது கவி நலம் அழகுடையதே யாகும்.

"சிங்கக் குருளைக் கிடுதீஞ் சுவையூனை நாயின்
வெங்கட் கடுங்குட்டியை யூட்ட விரும்பினாளோ"

என்று இலக்குவன் கொதித்துக் கூறும் மொழிகள் அவனது மனநிலையை விளக்குவதாகும். இவனது சீற்றத்தைத் தணிப்பவர் ஒருவருமில்லாத நிலையில் இராமன் இவன் முன் வந்து ஆறுதல் மொழிகள் பலகூறி இவனது சீற்றத்தைத் தணிக்கவும் அண்ணல் தன் சொல்லிற்கு அடங்கியவனாய் "தெவ்வர் சொல்லும் சொல்லுஞ் சுமந்தேன் இரு தோளெனச் சோம்பி யோங்கும் கல்லுஞ் சுமந்தேன் கணைப்புட்டிலும் கட்டமைந்த வில்லுஞ் சுமக்கப் பிறந்தேன்" என்று தன்னைத் தானே நொந்து சீற்றம் துறந்து நிற்கின்றான். இணைபிரியாத் துணைவனான இலக்குவனும் அண்ணல் தன் பின்னே செல்லப் புறப்படுகின்றான். சோதரர் இருவரும், அன்னையாம் சுமித்திரையிடம் விடைபெறச் சென்றார்கள். மரவுரி தரித்த மக்கள் இருவரையும் கண்ட மங்கை மனம் கலங்கி அடிதொழுத மக்களை அன்புடன் எடுத்தணைத்துக்கண்ணில் நீரருவிசோரக் கலங்கி யழுது கரைகின்றாள். பின்னர் தன் காதற்றிருமகன் இலக்குவனை நோக்கி "அப்பா! இனி உனக்கு அவ்வனமே இவ்வயோத்தி, இராமனே தந்தை, சீதையே தாய்" என்று சொல்லியதோடமையாது. "நீ இவனுக்குத் தம்பி என்ற முறையல்லாது அடியவன் போல ஏவல் செய்தலே முறையாகும். இன்னும் இம்மணி நகர்க்கு அவன் மீண்டும் வருவானேல் நீயும் வா. அன்றேல் முன்னவன் முன்னம் முடிந்திடு" என்று கூறும் கனிந்த மொழிகள் கற்றோர் உளத்தை முற்றும் கசிந்திளகும்படி உருக்குவதாகும்.



"பின்னும் பகர்வாள் மகனே இவன் பின் செல் தம்பி
என்னும் படியன்று அடியாரினின் ஏவல் செய்தி
மன்னும் நகர்க்கே இவன் வந்திடின்வா அதன்றேல்
முன்னம் முடி என்றனள் பால் முலை சோர நின்றாள்"

என்று கவியரசர் கூறும் அன்பு ததும்பும் சொற்கள் கருங்கல் மனத்தையும் கரைப்பனவாகும். இலக்குவன் தான் தன் தமையனிடம் மாறாத காதலுடையான் என்றால் அவனை ஈன்ற தாயும் அவனை விடப் பன்மடங்கு தன் மக்கள் பால் ஆறாத அன்புடையவளாய் இலங்குகின்றாள். தன் மக்களினும் நன் மகனாய் இராமனைப் போற்றும் பான்மைவாய்ந்த சுமித்திரையைப் பங்கயில் குணத்துப்பரதன், கங்கையிரு கரையுடைய நாவாய் வேந்தனிடம் அறிமுகப்படுத்தும் வாயிலாய்ப் போற்றி யுரைக்கும் நயம் சாலவும் அழகுடையதாகும்.

"அறந்தானே என்கின்ற அயல் நின்றாள்
தனை நோக்கி ஐய அன்பின்
நிறைந்தானை உரையென்ன நெறி திறம்பாத்
தன் மெய்யை நிற்பதாக்கி
இறந்தான்றன் இளந் தேவியாருக்கும்
தொழுகுலமாம் இராமன் பின்பு
பிறந்தானும் உளன் என்னப் பிரியாதான்
தனைப் பயந்த பெரியாள்"— என்று தன் புகழ்

தன்னினும் பெரிய தன்மையனான பரதன், இலக்குவனையும் அவனது அன்னையையும் போற்றும் பான்மையொன்றே இருவரது பெருமைக்கும் போதிய சான்றாகும்.

இத்தகைய இணைபிரியா இயலமைந்த இலக்குவன் தன் தாய் மொழியை ஆதரித்துப் போற்றும் முறை ஆராய்தற்குரியதாகும். வெய்ய கானகத்திடை கால் வருந்த நடந்து சென்ற கமலக்கண்ணனையும் அவன் காதலியாம் சீதையையும் அவர் தம் நிலைமையையுங் கண்டு மனங்கரைந்து சோர்வதும், கானகத்தே அவர்கட்குக் காயும் கனியும் கொய்து கொணர்வதும் இரவு முழுவதும் அவர்கள் தூங்கும் போது கண்ணிமையாமல் காவல்புரிவதுமே இலக்குவனது தினசரி வாழ்க்கையாக அமைந்தது. தாயுரைதலை மேற்கொண்ட தனையன் தன் அண்ணனிடம் அடியவன் போல் பணிசெய்யும் பான்மை அழகுடையதாகவே அமைந்துள்ளது. இவர்கள் மூவரும் கானகத்

தினிடையே காளிந்தி நதியைக் கடக்க நேர்ந்த காலையில் மூங்கிலால் ஒரு தெப்பம் ஒன்றமைத்து அதில் அண்ணலையும் அவன்றன் தேவியையும் இனிதே யிருத்தி, ஒரு கையால் தெப்பத்தைத் தாங்கி மற்றொரு கையால் ஆற்றில் நீந்திச் சென்ற இலக்குவனது செயற் கருஞ்செயலை.

"வாங்கு வேய்ங்கழை துணித்தனன் மாலையின் கொடியால்
ஓங்கு தெப்ப மொன்றமைத்து அதின் உம்பரின் உலம் போல்
வீங்கு தோளண்ணல் தேவியோடினிது வீற்றிருப்ப
நீங்கினான் அந்த நெடுநதி யிருகையால் நீந்தி"

என்று கவியரசர் போற்றி யுரைக்கின்றார். இராமனும் சீதையும் அயர்ந்து தூங்கும் பொழுது கண்ணிமையாமல் நின்று காவல் செய்த இலக்குவனது ஆரா அன்பினை அறிந்த வேடர் வேந்தன்.

"அல்லையாண் டமைந்த மேனி அழகனும் அவளும் துஞ்ச
வில்லையூன்றிய கையோடும் வெய்துயிர்ப்போடும் வீரன்
கல்லையாண்டுயர்ந்த தோளாய் கண்கள்நீர் சொரியக் கங்குல்
எல்லை காண்பளவும் நின்றான் இமைப்பிலன் நயனம்"

என்று பரதனிடம் போற்றியுரைக்கின்றான். இராமன் பால் மாறாத காதலுடையவனாய் அவனை விட்டுப் பிரியாதபடி அவனுக்கு ஏவல் செய்யும் இலக்குவனது தன்னலமற்ற தொண்டினை உணர்ந்த பரதனும் "யானென்று முடிவிலாத துன்பத்துக்கு ஏதுவானேன். அவன் அது துடைக்க நின்றான்" என்று இலக்குவனது அன்பைப் பாராட்டும் மொழிகள் நயஞ்சான்றதாகும். இன்னும் தானும் சீதையும் தங்கி உறைவதற் கேற்ற பர்ணசாலையைத் தம்பி தனி நின்று முடித்ததைக் கண்ட இராமன், தாரை தாரையாகக் கண்ணீர் சொரிந்து "குன்று போலக் குலவிய தோளினாய் என்று கற்றனை நீ யிது போல்" என்று ஏங்கி, தம்பியின் அளப்பரிய அன்பினுக்கு எல்லை காணாது மயங்குகின்றான்.

இனிக் கானத்திடையே அரக்கர் கோன். இழைத்த வஞ்சனையால் மங்கையைப் பிரிந்த மன்னன் மைந்தர்கள், கவந்தன் வாழும் காட்டை அடைந்தார்கள். "எவ்வுயிரும் கையால் வளைத்து வயிற்றடக்கும் கவந்தன்" கையிற் சிக்குகின்றனர். அவ்வாறு சிக்கிய காளையர் இருவரில் இராமன் இலக்குவனை நோக்கி.

( தொடரும். )

# வள்ளல் பாரி!

## இளமையின் சக்தி.

(59-ம் பக்கம் தொடர்ச்சி)

திரு. காந்தி தாசன்.

பொன் மயிலும் சொன் மயிலும் போத மகிழ்சிறந்து விளையாட, எல்லா வளப்பங்களும் சிறிதுங் குறைவின்றி ஒருங்கே வாய்க்கப் பெற்றதும், அழகால் அமராவதியையும், செல்வத்தால் அளகாபுரியையும், அடக்கியாளுந் தன்மையதா யமைந்ததும், அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்று சொல்லப்படும் ஆறு அங்கங்களையுடையதும், இப்பூமியில் கடவுளால் படைக்கப் பட்ட இயங்கியற் பொருள், நிலையியற்பொருள் ஆகியஇரண்டினுள்ளும் மிக்க உயர்ந்திருந்ததும், பெருமை வாய்ந்ததுமாகிய பறம்பு மலை(பிரான் மலை) யின் தாழ்வரையிலிருந்து மலையுச்சிவரை கருங்கல்லினும் பெரிய கோட்டைகட்டி, நீதிதவறாது செங்கோல் செலுத்தி, தன்னுயிர் போல் மன்னுயிரைப் பாது காக்கும் பாரிவேந்தன் அரசாளுங் காலத்தில், அவனது ஆளுகைக்குட்பட்ட குடிகள் அடைந்துள்ள இன்பத்தை இவ்வள வவ்வள வென்று அளவிட்டுச் சொல்ல வியலாது. அரசனுக்கியல்பான "திண்மை, கொடை, அறிவு, ஊக்கம்" என்னும் இந்நான்கு குணங்களையும்

"அஞ்சாமை ஈகை அறிவூக்கமிந் நான்கு
மெஞ்சாமை வேந்தற் கியல்பு"

என்னும் தேவர் திருமறைக் கொப்ப சிறக்கப் பெற்று மலர்தலையுலகிற்கு உயிரெனச் சிறந்த மன்னவனாக இருந்தான். அந்தப் பாரிக்கு,

"தூங்காமை கல்வி துணிவுடைமை யிம் மூன்று
நீங்கா நிலனாள் பவற்கு"

என்னுங் குறளுண்மையை நிலை நாட்ட அரசனுக்கு நீங்கா திருக்கத் தக்க குணங்களாகிய தூங்காமை, கல்வி, துணிவுடைமை" யாகிய இம்மூன்றும் அவனிடத்திலிருந்தன. அம்மன்னவன் தனக் கோதிய "இராஜ தரும" த்திற் சிறிதுந் தவறாது ஒழுகித் தீயன வற்றையெல்லாம் அறவே யொழித்து

"சோர்வு விடுத்துச் சுயேச்சை யடைந் துலகில்
வீரனாய் வாழ விரும்பு"

என்னும் "அறநூல்" வழி நின்று ஆட்சிபுரிந்ததோடல்லாது வீண் வேற்றுமைகளும், காலத்திற்கு வேண்டாத பழக்கங்களும், முன்னேற்றத்திற்கு முரணான மூடக் கொள்கைகளும் ஒழித்து, வீரத்திற்குறையாது மானத்தோடு அரசாண்டு வந்தான். "தூய்மை, நேர்மை, உண்மை, நன்மை, தவம், உறுதி, ஒப்புரவு, அமைதி, பொறுமை, எளிமை, சால்பு, அறிவாண்மை" முதலிய அருங் குணங்களைப் பெற்று, அருட்பணி புரிதலே அவனது கடனாக விருந்தது. அவன் தனக்குப் பொருள் வரும் வழிகளை மென்மேலும் உண்டாக்கலும், அங்ஙனம் வந்த பொருளை ஒரு வழித் தொகுத்தலும், தொகுத்தவற்றைப் பிறர் கொள்ளாமற் காத்தலும், காத்தவற்றை "அறம், பொருள், இன்பங்" களின் பொருட்டுச் செலவு செய்தலுமாகிய திறமையுள்ளவனாக விருந்தான். பெரியோர் திருநாட்களைக் கொண்டாடி எல்லா வகுப்பினரையும் சமரசப்படுத்துவான். திருநாட்களை எல்லாம் பெருநாட்களாகத் திகழச் செய்வான்.

(இளைஞர்கட்கு ஹிதோபதேசம்.)

இரப்போர்க்குமட்டு மின்றி இயற்கைப் பொருளுக்கீந்த பெருந்தியாகியும் நறுங்குணங்களமைந்தவனும், பொன்னும், மணியும் பரிசளிக்குங் கையை யுடையவனும், வாய்மை திறம்பாதமன்னனுமாகிய பாரி வேந்தனவன், அவ்வளவில் அமையாது இளைஞர்களை ஒன்று கூட்டி ஹிதோப தேசஞ்செய்வான். "ஹே! இளைஞர்காள்! நாட்டிற்கு ஆதரவு வீரஇளைஞர் களாகிய நீங்களே! எழிலுந்திருவும் இளமையினிடமேயுள்ளன. இளமையே நாட்டின் சக்தி! வீரம், அன்பு, அழகு, இன்பம், தேசு, சக்தி, தைரியம், சுகம், சுத்தம், சுதந்தரம் என்னும் குணங்கள் இளமை என்னுஞ் சொல்லில் ஒலிக்கின்றன. இக்குணமே உருவாய்த் திரண்ட வாலிபர்கள் கையிலேயே நாட்டின் முன்னேற்றம் உள்ளது. "வீட்டிற்கு உயிர் இனிய மக்களே நாட்டிற்கு உயிர் வீரவாலிபர்களே!" வீரவாலிபர்களின் வாழ்வு, நாட்டின் சரித்திரம் அவர்களுடைய இளமையான களிப்பே, நாட்டின் இன்பம் இளைஞரே. இளைஞரே! நாட்டை இளமைப் படுத்துங்கள். நீங்கள்தான் நாட்டின் நரம்புகள். இளமையின் சக்தி அளவற்றது. அது செய்தற்கரியது ஒன்று மில்லை. சமரசமும், அறவுணர்ச்சியும், சுதந்தர சக்தியும், அதிகமாகவேண்டும். ஜனநாயக முழக்கம் எண்டிசையும் பரவவேண்டும். எதிரொலிக்கவேண்டும். தமிழணங்கு மொழியரசி யாகவும், தமிழிலக்கியம் புதியதுறைகளிற் பொலியவும், தமிழர் வீரமும், செல்வமும், அறிவும், ஒழுக்கமும், ஆற்றலும் பெற்று, உலகெல்லாம் கொண்டாடப் படவும் வேண்டும்' அறத்தூதர்கள் வாலிபர்களாகிய நீங்களே! இத்தகைய பெ காரியங்களை முன்னணியில் நின்று வெற்றியுடன் நிறைவேற் தங்கள் வாழ்வை அர்ப்பணிக்க நாடு யாரைக் கூவி யழைக்கின்ற



இளந் தமிழ் வீரர்காள்!, உங்களையும் உங்கள் அருட்பணியையும் நமது நாடு எதிர் பார்க்கின்றது. நீங்கள் வருங்காலப் புத்தர்கள். புத்தரைப் போன்று நாட்டிற்காக இரங்கி ஆருயிர்ப்பணிக்கே உங்கள் வாழ்வை அர்ப்பணிக்க வேண்டும். நமது நாடு இளம் வீரர்களாகிய உங்கள் ஊழியங்களையே எதிர் பார்க்கின்றது. நமதுநாட்டின் புகழ்க்கோட்டையை உங்கள் சமரச முயற்சியாலேயே உயர்த்தவேண்டும். தொழில் முன்னேற்றம், கல்வியபிவிர்த்தி, இயற்கை வாழ்வின் இன்பம், சுகாதார மேன்மை, வியாபார விரிவு, செல்வப் பெருக்கு எல்லாம் இளைஞர்களாலேயே இயலும். ஹே வீர இளைஞர்காள்! இளைஞர் ஒன்று சேர்ந்தால் எல்லாம்கைகூடும். இளைஞர்களே! உங்கள் ஒற்றுமையே நாட்டின் வெற்றி! உங்கள் ஒழுக்கமே நாட்டின் ஒழுக்கம். பறம்பு நாடும், பாரத நாடும் வாழ்க!" என்று தனது இளமைப் பருவத்திற் கொப்ப சமயம் நேர்ந்தபோதெல்லாம் இளைஞர்கட்கு உபதேசிப்பான்.

## பெண்ணுக்கும் ஆண்மை வேண்டும்!

செஞ்சொற்சுவையறிந்த செல்வன் "தென்னாட்டு மேருகிரி" என்றும், "தமிழ் நாட்டு இமயகிரி" என்றும், எல்லோராலும் புகழப்பட்டதுமாகிய பறம்புக் கோமான் பாரிவேளானவன் பெண் மக்களை வரவழைத்து ஹிதமாகவே பேசுவான். லோகமாதாவின் உருவங்களே! லக்ஷ்மிதேவியின் அவதாரங்களே! சரஸ்வதி தேவியின் சொரூபங்களே! ஔவைப் பிராட்டியின் அருஞ் சகோதரிகளே! நீங்கள் வீர இளைஞர்களுடன் ஒத்துழைத்து சத்தியபாமையைப் போலவும் கைகேசியைப் போலவும் வீரமணிகளாக வேண்டும். ஸ்ரீராதாவைப் போன்று தேசத்தின் மீது பக்தைகளாக வேண்டும். நாங்கள் பெண்மக்கள் ஆண்மை எதற்கென எண்ணிச் சபலச் சித்தங் கொள்ளக்கூடாது. பெண்மக்களாகிய உங்களுக்கும் கல்வி, வீரம் முதலியன வேண்டும். சிறந்த பண்டிதைகளாகி ஆண்மையோடு வாழவேண்டும் "சர்வம் சக்திமயம் ஜகத்" என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது என்று மிக்க அன்போடு அவர்களுக்கு உபதேசம் செய்துவருவான்.

(தொடரும்.)

# ஐவேல் அசதி.

(ஓர் சிற்றாராய்ச்சி)

கோவை. திரு. சி. கு. நாராயணசாமி முதலியாரவர்கள்

எழுதுவது.

இப்பெயர் புனைந்த இடையர் மரபினனான இளஞ்செம்மல் ஒருவன், அருந்தமிழ் மூதாட்டி அவ்வையாரால் பாடப் பெற்றானென்பது அவ்வையார் வரலாறு, சோமேசர் முதுமொழி வெண்பா, கொங்குமண்டல சதகம், நந்தமண்டல சதகம், புலவர் புராணம் முதலிய நூல்களால் அறியப்படுகின்றது. அவைகளில் அவ்வையார் அசதியின்மீது பாடிய கோவைப் பாடலன்றி அவ்வுபகாரியைப் பற்றிய விவரமான வரலாறு காணுமாறில்லை. அவ்வையார் வரலாறுகளில் 'அசதி' யைப்பற்றிக் குறிப்பாகக் காணப்படும் செய்திகள்:—ஐவேல் அதாவது ஐந்து வேலமரங்கள் ஒருங்கே யமைந்த முல்லை நிலத்துச் சிற்றூர் பாண்டிநாட்டின் கண்ணுள்ளதென்றும், அசதியென்பான் ஆடு மேய்க்குந் தொழிலுடையானென்றும், அவன் தனது பெயரைக் கூறவும் மறந்த நனிபேதை என்றும் அறியப்படுவனவே. இவற்றை வெளியிட்டவர்கள் திருவாளர்கள். S. அனவரதவிநாயகம் பிள்ளை M A. L T. அவர்களும்; மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்களுமேயாவர். இவ்விருவர்கள் கல்வி, கேள்வி, புலமை, ஆராய்ச்சி முதலியவைகளில் மிக்குயர்ந்தோர். இவர்கள் எழுதிய அசதியின் வரலாறுகள், திருச் செங்கோட்டுத் தலவாசியும், தமிழ்வித்துவானுமாகிய திரு. தி. அ. முத்துச்சாமிக் கோனாரவர்கள் வெளியிட்டுள்ள கொங்குமண்டல சதகத்தின் 45ஆம் செய்யுளாலும், வரலாற்றாலும், குறிப்பாலும் தவறுதலுடையனவாகவும், முரண்பாடுடையனவாகவும் காணப்படுகின்றன.

வரலாறாவது:—

"ஐவேலி என்னும் சிற்றூர் சேலம்ஜில்லா சங்ககிரிதாலூகா சங்ககிரிதுர்க்கம் ரயில் நிலயத்திற்குக் கிழக்கில் இரண்டு மைல் தூரத்திலுள்ளது. இவ்வூர் சங்ககிரி மிட்டாதார்க்குச் சார்ந்த ஒரு



சிறு கிராமம். இது அரசரிமைப் பதிவில் இடம் பெற்றிருக்கிறது. தற்பொழுது அக்கிராமம் நத்தமாய்ப் போயினும், இடையர் மரபினர் வீடு இருநூறுடையதாய் இப்பொழுது 'இடையப்பட்டி' என்ற பெயருடன் இலங்குகின்றது. அசதியென்பான் செல்வனும், சேனைத் தலைவனுமாக விளங்கிய நாளில் ஓர் இரவில் தனது இல்லத்தை நாடிவந்த தமிழ் மூதாட்டியாரை அவன் எதிர்கொண்டழைத்து இருக்கை நல்கி, இனிதுபசரித்துப் பொன்னிலை பரப்பிப் போனகம் பரிமாறியுண்ணச் செய்தான். அந்நன்றிபாராட்டி அவ்வையார் அவன் மீது "ஐவேலசதிக்கோவை" என்ற பெயரில் இனிய பிரபந்தம் பாடி அவனை மகிழ்வித்தார்" என்பது.

'ஐவேலி' எனப்படும் சிற்றூர் பாண்டி நாட்டகத்துள்ளதென்று கூறவந்த புலவர்கள் அதற்குரிய ஆதாரம் காட்டினார்களில்லை. கொங்குமண்டல சதகப்பதிப்பாளர் ஐவேலி என்னும் கிராமம் கொங்குமண்டலத்தில் உளதென்பதற்கு.

"தெய்விக மான தமிழ்ப்புல வோர்கள் தினமுளங்கொள்
பொய்தீ ருரையெம் பிராட்டியா ரௌவை புனைந்துபுகழ்
செய் கோவை யேற்ற திறலோனசதி செழித்து வளர்
மைதாழ் பொழிறிக ழைவேலி யுங்கொங்கு மண்டலமே"

என்று கொங்குமண்டல சதகப்பாடலை உதாரணங் காட்டியிருக்கின்றனர். உதாரணங்காட்டி வலியுறுத்தப்படும் எந்தச் செய்தியும் உண்மையெனக் கொள்ளுதல் அறிவுடையோர்களது கடமை. ஆகவே ஐவேலி கொங்கு நாட்டகத்தென்பது பெறப்படுகின்றது.

இனி, அவ்வையார் வரலாறுகளில் ஐவேல் அசதியைப் பற்றி மேற்காட்டிய பிள்ளையவர்களும், முதலியாரவர்களும் வெளியிட்டுள்ள குறிப்புக்களை வாசகர் கவனிக்க இங்குக் குறிப்பிடுகின்றோம். அவை:—

"ஒரு காலத்து அவ்வையார் காட்டுமார்க்கமாய்ப் போய்க்கொண்டிருந்த பொழுது அவரைப் பசிநோய் வருத்த அவர் அங்கு

---

இதன் பொருள்:—"தெய்வத் தமிழ்ப் புலவர்கள் சிந்திக்கும் ஔவையாரால் கோவை யென்னும் பிரபந்தத்தைப் பாடக்கேட்ட அசதி என்னும் உபகாரி வசித்த ஐவேலியும் கொங்குமண்டலம் என்பதாம்."

ஓர் ஆட்டிடையன் ஆடு மேய்த்திருத்தலைக் கண்டு அவனை யணுகி, 'நீ கொண்டுவந்திருக்கும் உணவில் எனக்குக் கொஞ்சம் கொடுப்பாய்' என்றனர். அவனும் அங்ஙனம் கேட்ட அவ்வையார் விருப்பத்தின்படி அவ்வுணவில் பாதியை முகங்கோணாது அகமகிழ்ந்து அவர்க்கு உபசரித்திட்டு உண்ணச்செய்தான். அவ்வையாரும் அவன் அன்புக்குவந்து அவ்வுணவையுண்டு பசிக்களை தீர்ந்தனர். தினைத்துணை உபகாரத்தையும் பனைத்துணையாகக் கொள்வது பெரியோரது இயல்பானதால் அதன்படி அவ்வையார் பசியறிந்துதவிய அவ்வுபகாரியைத் தமது திருந்திய நாவால் சிறப்பிக்கவெண்ணி, 'உன் பெயர்' என்ன என்றனர். அவன் தன் பெயர் மறந்த பேதையாதலால் 'அசதி' என்றான். அசதி யென்றதால் அவன் குறித்தது பெயர் அப்பொழுது தன் ஞாபகத்தில் இல்லை யென்பது. பின்னர், 'உன் ஊரையாவது சொல்' என்றனர். அதனையும் அவன் 'மறந்தேன்' என்றனன். அதன் பின் அவ்வையார் 'உன் ஊரிலுள்ள அடையாளங்களையேனும் சொல்' எனக் கேட்க, அவன் என் ஊரில் 'ஐந்து வேலமரங்களுண்டு' என்றனன். அவன் பேதைமைக்குப் பெரிதும் இரங்கிய அவ்வையார், தன் பெயரையும் மறந்ததனால் அவனுக்கு மறதி என்னும் பொருளைத் தரும் "அசதி" என்னும் பெயரையும்; அவன் ஊரிலே ஐந்து வேலமரங்கள் உண்டு என்றமையால் அதற்கு 'ஐவேல்' என்ற பெயரையும் அமைத்துக் கொண்டு "அசதிக்கோவை" என்ற பெயரில் நவரஸங்களும் நனிசிறக்கச் செய்யுட்களெல்லாம் அகரத்தையே முதன்மையாகக் கொண்டு மோனை நலம்பொலிய இனிய பிரபந்தம்பாடி முடித்தனர்" என்பது.

இக் குறிப்புக்கள் தவறு என்பதற்கு மேலே காட்டிய உதாரணங்களே யன்றி அசதிக் கோவைப் பாடல்களும் சான்றாகக் கொள்ளுதற்குரியன. அக்கோவையுள் ஐவேலசதி மிகச்செல்வனும், பெருஞ் சேனைகளுக்குத் தலைவனும், அரியவீரனும், அறிஞனும், சீலனும், ஏழை பங்காளனும், ஈகையுடையானும், விளங்கு புகழாளனுமாக மேம்பட்டிருந்தான் என்பவற்றிற்குரிய பாடல்களே இனிது காணப்படுகின்றன. இவனது இத்தகைய மேலான அமுத குணங்களைக் கண்டபின்னரேயே தமிழ்ப் பெருமாட்டி அவனது செவ்வியைத் தமது சீரிய நாவால் திறம்படப் பாராட்டிப் பாடியிருக்க வேண்டும். அப்பாடல்களுள் சிலஅடியில் வருமாறுகாண்க.



"அற்றரைத் தாங்கிய வைவேலசதி யணிவரை மேல்
முற்று முகிழ்முலை யெவ்வாறு சென்றனள் முத்தமிழ் நூல்
கற்றார் பிரிவுங் கல்லாத ரிணக்கமுங் கைப் பொருளொன்
றற்றா ரிளமையும் போலே கொதிக்கு மருஞ்சுரமே" (1)

அருஞ்சஞ்சலங் கொண்டவைவே லசதியகல் வரையி
னிருஞ்சஞ்சலஞ் சொல்ல வேண்டுங் கொலோ வெனத் தன்னை மொழி
தருஞ்சஞ் சலமும் தனிவைத்துப் போனவர் சஞ்சலமும்
பெருஞ்சஞ் சலங்கொண்டு யானிருந்தே னொருபெண் பிறந்தே. (2)

அழற்கட்டுக் கட்டிய வைவேலசதி யணிவரையின்
மழைக்கட்டுக் கட்டிய மாளிகை யேலொரு மங்கை நல்லாள்
உளக்கிட் டுரியிட்டு முவ்வுழக் கிட்டுரி நாழியிட்டு
குழற்கட் டவிழ்த்துட னங்ஙனின்றே மயிர் கோதினளே. (3)

அலைகொண்ட வேற்காத் தைவேலசதி யணிவரை மேல்
நிலைகொண்ட மங்கைதன் கொங்கைக்குத் தோற்றின நீரினங்கள்
குலையுண் டடியுண்டுடன் கையினி லெற்றுண்டு குட்டுமுண்டு
விலையுண் டடியுண்டு கண்ணீர் ததும்பவும் வெட்டுண்டவே. (4)

அறங்காட் டியகாத் தைவேலசதி யகன் சிலம்பின்
திறங்காட்டுங் கஞ்சத் திருவனையீர்! முக நீண்டகுமிழ்த்
திறங்காட்டும் வேலுஞ் சிலையுங் கொல்யானையுந் தேருங்கொண்டு
புறங்காட் டவுர்தருமோ சிலைக்காமன் றன் பூசலிலே. (5)

ஆலவட்டப் பிறை வைவே லசதி யணிவரைமேல்
நீவட்டக் கண்க ணேரொக்கும் போதந்த நேரிழையாள்
யாலைவிட்டுச் சுற்றி வட்டமிட் டோடி வரவழைத்து
வேலைவிட்டுக் குத்தி வெட்டுவனாகில் விலக்கர்தே. (6)

ஆய்ப்பாடி ஆயர்த மைவேலசதி யணிவரையிற்
கோப்பா வவளெழிற் கொங்கைக்குத் தோற்றிபக் கோடிரண்டு
சீப்பாய்ச் சிறுக்கரியாய்ச் சிமிழாய்ச் சின்ன மோதிரமாய்க்
காப்பாய்ச் சதுரங்கமாய்ப் பல்லக்காகிக் கடைப்பட்டதே. (7)

ஆதித்தனைக் கண்டரவந் தொடவந் நகரிலுள்ளார்
பாலித்த முத்தும் பவளந் தொட்டா யிந்தப் பைங்கொடியாள்
சேனைத் தலைவனைச் செங்கோ லசதியைச் சேர்ந்தொருநாள்
கூடித் தழுவுவ மென்று தொட்டா டன் குவிமுலையே. (8)

ஆடுங் கடைமணி யைவேலசதி யகன் கிரியில்
நீடுங் கயற்கண்ணியா டந்தவாசை நீகழ்த்தரிதால்
கோடுங் குளமுங் குளத்தருகே நிற்குங் குன்றுகளுங்
காடுஞ் செடியு மவளாகத் தோன்றுமென் கண்களுக்கே. (9)

ஆராயிரங் கொண்ட வைவே லசதி யகன் கிரியில்
நீராடப் போகும் நெறிதனிலே யந்தி நேரத்திலே
சீரான குங்குமக் கொங்கையைக் காட்டிச் சிரித்தொரு பெண்
போரான் பிடிபிடி யென்றே நிலவும் புறப்பட்டதே. (10)

மேற்காட்டிய கோவைப் பாடல்களுள், 'சேனைத் தலைவனைச் செங்கோலசதியை' என்ற சொற்றொடர் அசதி தண்ட நாயகன் என்பதையும்; 'அலை கொண்ட வேற்கரத்தை வேலசதி;' 'அழற்கட்டுக் கட்டியவைவேலசதி' என்னும் சொற்றொடர்கள் அசதி கூரிய வேலேந்திப் பகைவரை வெற்றி காணும் வீரன் என்பதையும்; 'அறங்காட்டிய கரத்தைவேலசதி; 'அற்றாரைத் தாங்கியவை வேலசதி' என்ற சொற்றொடர்கள் அசதியின் தர்மசிந்தையையும்; ஈகையையும்; 'ஆடுங்கடைமணியையவேலசதி' 'ஆலவட்டப்பிறை வைவேலசதி' என்னும் சொற்றொடர்கள் அசதி பெரிய மாளிகையுடைமையையும்; நீதி கோடா நெறியினையும்; 'ஆராயிரங்கொண்டவைவேலசதி' 'ஆய்ப்பாடி ஆயர்தம் ஐவேலசதி' என்னும் சொற்றொடர்கள் அசதியின் கீர்த்தியையும், தான் இடையர் மரபினன் என்பதையும் இனிது விளக்குதல் நன்கு தெளியக் கூடியன.

மேலேகாட்டிய உதாரணங்களால் ஐவேலசதியின் பிறப்பகம் அதாவது ஜன்மதேசம் கொங்குமண்டலத்தின் சங்ககிரிதுர்க்கத்திற்கு அண்மையில் உள்ள தென்பதும்; அவன் கற்றாரைக் காதலித் தேற்றிப் போற்றி உபசரிக்கும் அறிவுடைச் சிலன் என்பதும்; கற்றோர் புகழும் கனமுடையான் என்பதும்; மாபெரும் வீரன் என்பதும்! விளக்குகின்றனவேயன்றி அசதி ஆடுமேய்க்கும் மடமைத் தொழிலுடைமையும், தன் பெயரைக் கூடக் கூறத் தெரியாத கனிபேதைமைத் தன்மையும் அறிவிக்கின்றதா யில்லை.

ஔவையார் அசதியின்மீது கோவை பாடினார் என்பதற்கு அடியிற் காட்டும் நூல்கள் சான்றாம். அவை வருமாறு:—

"ஐவே லசதி யிரவினி லௌவைக் கமுதளித்து
மெய்வேதம் போனிற்குங் கோவைகொண் டோன் புவி மீதிற்றவஞ்
செய்வோன் றனிலும் பசுக்காவன் மிக்கெனச் செய்யு மன்பன்
மைவேலை வண்ணன் சதியுடனே வாழ்ந்த மண்டலமே.

(நந்த மண்டலம்.)

"பன்னு மசதிநன்றி பாராட்டிக் கோவைநூல்
சொன்னாளே யௌவைமுன்பு சோமேசா—மன்னுத்
தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரி வார்."

(சோமேசர் முதுமொழி வெண்பா.)

# மனிதர் வாழ்க்கை.

## தொண்டரடிப்பொடியாழ்வார்.

(114ம்-பக்கத் தொடர்ச்சி)

திரு. கு. மணிவண்ணன்.

ஸ்ரீரங்கநாதன் காவேரியின் நடுவில் ஆதிசேஷ சயனத்தின்மேல் எழுந்தருளி இருப்பது எப்படி இருக்கிறதென்றால், இவ்வுலகத்தி லுள்ள எல்லா ஜீவராசிகளையும் சுவர்க்கத்திற்கு அனுப்பின பிறகு தான், அவர் அச்சயனத்திலிருந்து எழுந்திருப்பார்போல் தோன்றுகிறதாம். "குடதிசை முடியை வைத்து, குணதிசை பாதம் நீட்டி, வடதிசை பின்பு காட்டி, தென்திசை இலங்கை நோக்கி" சயனித்திருக்கிறாராம். தன் பக்தன் விபீஷணாழ்வானுக்கு ஏதாவது தீங்கு வருமோ என்று அவன் இருக்கும்படியான இலங்கையை நோக்கிச் சயனித்திருக்கிறாராம். மற்றும் ஒரு தாயானவள் தன் குழந்தையைத் தொட்டிலில் போட்டுவிட்டு அது விளையாடுவதைச் சற்று தூரத்தில் படுத்துக்கொண்டு பார்த்து மகிழும் குணமுடையவள். அது போல எம்பெருமான் தன் குழந்தையாகிய விபீஷணாழ்வானை இலங்கையாகிய தொட்டிலில் போட்டுவிட்டு, தான் சற்று தூரத்தில் சயனித்துக்கொண்டு, பார்த்து மகிழ்கின்றாராம்.

"மற்றுமோர் தெய்வமுண்டே? மதியிலா மானிடர்காள்!
உற்றபோதன்றி நீங்கள் ஒருவனென் றுணரமாட்டீர்
அற்றமே லொன்றறியீர் அவனல்லால் தெய்வமில்லை
கற்றினம் மேய்த்த வெந்தை கழலிணை பணிமின் நீரே."

என்றிவ்வாறு அவன்தான் ஒருவன் தெய்வம் அவன்தான் கண்கண்ட தெய்வம் என்பதாக நிச்சயிக்கின்றார்.

இவ்வுலகத்தின் கண்ணுள்ள மானிடர்களாகிய நாம், "பொய்த்தவ நிலையுள் நின்றும், 'பெண்டிரால் சுகங்களுய்ப்பான் பெரியதோரிடும்பை பூண்டு" என்ற ஆழ்வார் அருளிச் செயலின்படியும்,

"சூதனாய்க் கள்வனாகித் தூர்த்தரோ டிசைந்த காலம்
மாதரார் கயற்கணென்னும் வலையுட்பட் டழுந்துவேனை
போதரே யென்று சொல்லிப் புந்தியுள் புகுந்து தன்பால்
ஆதரம் பெருகவைத்த அழகனூர் அரங்கமன்றே"

என்ற ஆழ்வார் அருளிச் செயலின்படியும்,

"ஊரிலேன் காணியில்லை உறவுமற் றொருவரில்லை"
"மனத்திலோர் தூய்மைஇல்லை வாயிலோ ரின்சொலில்லை"
"தவத்துளார் தம்மி லல்லேன், தனம்படைத்தாரி லல்லேன்"
"மெய்யெல்லாம் போகவிட்டு விரிதழலாரல் பட்டு [நின்றேன்"
பொய்யெல்லாம் பொதிந்துகொண்ட போழ்க்கனேன் வந்து
"உள்ளத்தே யுறையும் மாலை உள்ளுவா னுணர்வொன் றில்லா
கள்ளத்தேன் நானும் தொண்டாய்த் தொண்டுக்கே கோலம் பூண்டு."

என்ற ஆழ்வார் அருளிச் செயலின் படியும்,

நமது வாழ்நாளைக் கழித்து வருகின்றோம். நம் தோற்றத்திற்குக் காரணனாகிய அந்த ஸ்ரீமந் நாராயணனை ஒரு சிறிதளவும் நினைக்கச் சாவகாசம் இல்லாமல் பாதவிக்கிறோமே! என்ன பாபம்! என்ன பரிதாபம்! 'நாராயணா' என்றால் ஓடி வருபவன் நம் பக்கத்தில் என்றும் வீற்றிருக்க நாம் கவலைப்பட வேண்டுவது யாது. பக்தன் பிரஹலாதாழ்வான் சொல்லை மெய்ப்பிக்கவில்லையா! சபரி, விபீஷணர் முதலானோர்களை மகிழ்விக்கவில்லையா? அடியார்க்கிரங்கும் பித்தனன்றோ அவன்! அவன் சுபாவமும் சொரூபமும் "காரேய் கருணை வள்ளல்" ஆயிற்றே! நமக்குப் போக போக்கிய வஸ்துவா யிருப்பது அவனது திருக்கமலப் பாதங்களே. அதை நாம் பின்பற்றி அவனுடைய திருநாமங்களில் சிலவற்றை நாவாரச் செப்புவோமானால் நம் பாவங்களெல்லாம் பறந்து போகுமே. நாராயணனென்னும் நாமம் எப்படிப் பட்டது என்றால், திருமங்கையாழ்வார் தெளிவாகச்சொல்லியுள்ளார்.

"குலந்தரும் செல்வந் தந்திடும்
அடியார் படுதுய ராயினவெல்லாம்,
நிலந்தரஞ் செய்யும் நீள் விசும் பருளும்
அருளொடு பெருநில மளிக்கும் [செய்யும்
வலந்தரும், மற்றுந் தந்திடும், பெற்ற தாயினுமாயின
நலந்தருஞ்சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணாவென்னும் நாமம்."



"வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக—செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவே என்று."
"அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை யிடுதிரியா—நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்."
"வாயவனை யல்லது வாழ்த்தாது கைஉலகம்
தாயவனை யல்லது தாம் தொழா—பேய்முலைநஞ்சு
ஊணாக உண்டான் உருவொடு பேரல்லால்
காணாகண் கேளா செவி."

என்று பொய்கையார், பூதத்தார்கள் கதறி இருக்கின்றனர். அப்படிப்பட்ட திருநாமத்தைச் சிறிது நேரமாகினும் ஒரு நாளில் நாம் சிந்தனை செய்து இகபரசாதனங்களை ஒருங்கடைந்து எதற்கும் ஒப்பற்ற பெரும்பேறான நித்யானந்தத்தை அனுபவிப்போமாக.

---

# ஓர் மனைவியின் வேண்டுகோள்.

திரு. சு. ஆ.

ஒழுக்கவதியான ஓர் மாது தன் நாயகரிடம் சமர்ப்பித்துக் கொண்ட பத்து வேண்டுகோள்:—

1. அதிகாலையில் நான் துயிலெழும்போது தாங்களும் தினமும் எழுந்து தங்கள் அடிகளை நான் பணியும்போது அடியாளை ஆசிர்வதிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

2. குழந்தைகள் முன்பும் அன்னியர்கள் முன்பும் இவ் வேழையை அவமதித்து நிந்திக்காமலிருக்க வேண்டுகிறேன்.

3. வீட்டிலிருந்து வெளியேபோய்த் திரும்பிவருவதற்கு அதிக மானால் தாங்கள் போகுமிடத்தை முன்னரே தெரிவிக்கக்கூடிய மாயிருந்தால் தெரிவித்துப்போகவும் பிரார்த்திக்கிறேன்.

4. தாங்கள் எப்பொழுது வெளியே போய் எப்பொழுது திரும்பி வருவீர்களென்று அறிவிக்கும்படி விரும்புகிறேன்.

5. வேளாவேளைகளில் எனது அபிப்பிராயங்களையும் வெளியிட்டுக்கொள்ள அனுமதியளிக்கும்படி விண்ணப்பிக்கிறேன்.

6. வீட்டுச் செலவுக் காகக் குறிப்பிட்ட ஓர் தொகையை மட்டும் அடியாளிடம் அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

7. தாங்களே ஒரு காரியத்தைச் செய்து முடித்துக் கொள்ளலாமென்று தெரியும்போது அதற்காக அனாவசியமாக அன்னியர்களை எதிர் பார்க்காமலிருக்க வேண்டிக் கொள்கிறேன். (அன்னியர்களென்பது அவளையே)

8. தாய் தந்தையர்களின் செய்கைகளைக் குழந்தைகள் இலகுவில் கிரகித்து அதன்படி நடக்கும் தன்மையுடையார்களெனத் தாங்களே ஓர் கால் தெருவித்திருக்கிறபடியால் அவர்கள் முன்னிலையில் வெறுப்பான எந்தச் செய்கைகளையும் செய்யாமலிருக்கும்படி என்னை எச்சரிக்கவும் வேண்டுகிறேன்.

9. அடியாள் நாள்தோறும் சிறிது நேரம் புஸ்தகங்கள் வாசிப்பதற்கு அனுமதி கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

10. எப்பொழுதாகிலும் தங்களது பத்தினியான அடியாளை அழைக்க நேர்ந்தால் "ஏ, அங்கே என்ன செய்கிறாய் ஏ, இங்கே என்ன செய்கிறாய்" என்றோ அல்லது இது போன்ற வேறு சொற்களாலோ அழைக்காமலிருக்க வேண்டிக்கொள்கிறேன்.

## கால்நடை வைத்தியம்.

119-ம் பக்கத் தொடர்ச்சி.

பதிப்புரிமை செய்யப்பட்டது.

திரு. S. பெருமாள் கோன்.

பன்றிகளுக்கு இந்த வியாதிகண்டால் அவைகள் கால் நோவினால் துன்பமடைகின்றன. அவைகளின் குளம்பு கழன்று விழுவதும் அபூர்வமல்ல. அவைகள் வேதனைப்படுவதை அனேக சமயங்



களில் கீச்சிடுவதனால் தெரிவிக்கின்றன. இந்த வியாதிகண்ட பிராணிகள் வெக்கைநோய் கண்டவைகளென்று சில சமயங்களில் தப்பாகக் கருதப்படுகின்றன. ஆனால் நம் தேசத்தில் காணப்படும் கால் நோய் வாய் நோயின் குறிகளில் கழிச்சல் ஒன்றாக இல்லை. வெக்கை நோயின் விஷயத்திலோ என்றால் கழிச்சலும் சீதபேதியும் தப்பாமல் உண்டாகின்றன. மேலும் வெக்கைநோயின் கால்கள் பாதிக்கப்படுவதில்லை. ஒரே காலத்தில் ஒரு பிராணிக்கு வெக்கை கால் நோய் வாய் நோய் என்ற இரண்டு வியாதிகளும் காணக்கூடுமானாலும் அப்படி நேருவது அபூர்வம். இந்த வியாதிகண்ட பிராணியைச் சரியாகப் பாதுகாக்கும் பட்சத்திலே காய்ச்சல் குறிகளெல்லாம் மூன்றல்லது நான்கு நாளில் மாறிப் பத்தல்லது பதினைந்து நாளில் ஷை பிராணி விசேஷமாய் மெலிந்து போகாமலே சொஸ்தமடைந்துவிடும். ஆனால் வியாதிகண்ட பிராணிகள் விஷயத்தில் ஜாக்கிரதையாயிராமல் அவைகளில் எருதுகளாயுள்ளவைகளை வேலைக்கு விட்டிருந்தால் காய்ச்சல் கொடூரமாகிப் பசி குறைந்து ரணங்கள் காலுக்கும் குளம்புக்கும் இடையே விருத்தியாவதனால் குளம்புகள் கழன்று விழுந்து விடக்கூடும். கால்கள் அதிகமாக வீங்கி அவைகளில் பிளவைகள் உண்டாகிப் பத்தல்லது பதினைந்துநாளில் மரணம் சம்பவிக்கும். இந்த வியாதி சில பிராணிகளுக்குக் கொடூரமாகவும் சில பிராணிகளுக்குச் சாந்தமாகவும் காணுகிறது.

(சிகிச்சை) வியாதிகண்ட பிராணியை நிழலுள்ள சுத்தமான கொட்டிலில் கட்டிவைக்கவேண்டும்; அந்தக்கொட்டிலின் தளத்தை வெகு சுத்தமாக வைத்திருக்கவேண்டும். அந்தக் கொட்டிலில் நல்ல காற்றோட்டமிருக்கும்படி செய்யவேண்டும். வியாதிகண்ட பிராணியின் வாயை முதலில் இளஞ்சூடாயுள்ள வெந்நீரினாலும் பின்பு 18 நிர் அல்லது 19 நிர் மருந்து பட்டியிற் குறித்த மருந்து நீரைக் கொண்டும் தினத்துக்கு இரண்டு மூன்று வேளை கழுவவேண்டும். தினத்துக்கு இரண்டுவேளை இளஞ் சூடாயுள்ள வெந்நீரினால் கால்களைக் கழுவி ஒற்றடம்கொடுத்து எல்லா அழுக்கையும் முக்கியமாகக் குளம்புப் பிளவுக்கு இடையிலுள்ள அழுக்கையும் ஜாக்கிரதையாக நீக்கிப் புண்களுக்கு 26. 29நி. மருந்துபட்டியிற் குறித்த இரணமருந்தைப் போடவேண்டும். பால் மடியையும் முலைக்காம்புகளையும் புண்ணுள்ள மற்ற பாகங்களையும் சுத்தமாக வைத்து அவைகளுக்கு மேற்குறித்த மருந்தையே அடிக்கடி போடவேண்டும். ஈக்கள்

புண்களில் முட்டையிட்டு, புழுக்கள் உண்டாவதை இம்மருந்து தடுக்கும். காய்ச்சல் அதிகமாயிருக்கும்போது 5. 6. நிர் மருந்துப்பட்டியிற் குறித்த மருந்துப் பானத்தைத் தினத்துக்கு இரண்டு வேளை கொடுக்கவேண்டும். பச்சைப் புல்லாவது அல்லது அகத்திக்கீரையாவது தீனியாகக் கொடுக்கவேண்டும். நீர் மயமாயுள்ள அரிசிக் கஞ்சியை வேண்டிய மட்டிலே கொடுக்கலாம். அதில் தினத்துக்கு ஒரு வேளை அல்லது இரண்டுவேளை இரண்டல்லது மூன்று அவுன்ஸ் அதாவது ஐந்து ரூபாயெடைமுதல் ஏழரை ரூபாயெடை வரையில் வெல்லப்பாகும் ஒரு அவுன்ஸ் அதாவது இரண்டரைரூபா யெடை கறியுப்பும் கலந்து கொடுக்கவேண்டும். சிற்சில கிராமங்களில் நோய் கண்ட பிராணிகளைக் காற்துழைச்சு காலின் பின்புறத்தில் குளம்புக்கு மேலே மயிர் திரளாக முளைத்திருக்கும் பாகவரையில் தண்ணீர் அல்லது சேற்றில் அழுந்தும்படி நிறுத்திக் கட்டிவைக்கும் சிகிச்சையானது ஈக்கள் புண்களில் முட்டையிடாதபடி தடுக்கிறமட்டிலே நல்லதுதான். ஆனால் இதனால் சிலசமயங்களில் மணல் அல்லது சேறானது குளம்புக்கும் கால் ரோமத்திற்கும் இடையிலுள்ள வெடிப்புகளுக்குள்ளே நுழைந்து வேதனையை உண்டுபடுத்திக் குளம்புகள் கழன்று விழுந்து விடும்படியும் செய்கிறது. (தொடரும்)

# "சமூக முன்னேற்றச் சங்கவிதிகள்"

திரு. எஸ். காளலிங்கம்.

அன்புள்ள, சமூகாபிமானிகளே!

பெரும் நகர்களில் நமது சமூகப் பெரியார்களின் அரும்பெரும் முயற்சியால், யாதவகுலம் நலனுக்குரிய பல "சங்கங்கள்" நிறுவியும், அதன் நோக்கங்களும், அமைப்பும் விரிந்தும், அதன் வாயிலாகப் பல நன்மைகளை நமதுமரபு அடைந்து இளஞ் சூரியனைப்போல் விருத்தியடைந்து வருவதை, "யாதவமித்திரன்" வாயிலாக வெளிவந்துள்ளதை நண்பர்களறிவார்கள். ஆயினும் நங்குலமக்கள் வதியும் ஒவ்வொரு "சிற்றூர்களிலும் சங்கங்கள்" உண்டாக்கவேண்டுவதவசிய மென்பதைக் கருதியே, சங்கங்கள் அமைக்கவேண்டிய



அமைப்பை எளிதான நடைமுறைக்குக் கொண்டுவர, கீழ்க்கண்ட முறைகள் சாலச் சிறந்ததாக ஒப்புக்கொள்ளுகிறீர்களா? என்ற [illegible]த்துடன் நமது யாதவகுலப் பெருமக்களுக்குச் சமர்ப்பிக்கிறேன்.

## "விதிகள்"

1. பெயர்:—இச்சங்கம் "யதுகுல சங்கம்" எனவும், அல்லது குலாபிமானிகளின் இஷ்டத்திற் குகந்தவாறும் அமைக்கலாம்.

2. நோக்கங்கள்:—மத அபிவிருத்தி, சமூகத்தவர்களுக்குள் சகோதரதத்துவ உணர்ச்சி, அவர்களின் அன்பு, அடக்கம், புத்தி வளர்ச்சி, தொழில், நாகரிகம், சரீரபலம், தேசிய உணர்ச்சி, இவைகளில் மக்கள் முன்னேற்றமடைய வேண்டியவைகளுக்குச் சாதகமாக உழைப்பதே சங்கத்தின் நோக்கமாகும்.

3. அங்கத்தினர்கள்:—இச்சங்கமானது பரிபாலனர்களாலும், உள்ளூர், வெளியூர், ஜீவிய, கௌரவ, இணை, மாணுக்கர்களென, ஆறுவகை அங்கத்தினர்களாலும், அமைந்திருக்கும். யாதவ மக்கள் யாவருக்கும் அங்க உரிமையுண்டு.

அ:—உள்ளூர் அங்கத்தினர்கள்—சங்கக் கட்டடத்திலிருந்து ஆறு மைல் தூரத்திற்குள் வசிப்பவர்கள்.

ஆ:—வெளியூர் அங்கத்தினர்கள்—சங்கக் கட்டடத்திலிருந்து ஆறு மைல் தூரத்திற்கப்பால் வசிப்பவர்கள்.

இ:—ஜீவிய அங்கத்தினர்கள்—சந்தாவை முன்பணமாக மொத்தமாய்ச் செலுத்துபவர்கள்.

ஈ:— கௌரவ அங்கத்தினர்கள்—பரிபாலனர்களும், கௌரவ அங்கத்தினர்களும், எத்தேசத்தாராயு மிருக்கலாம். ஆயினும் இவர்கள் சங்கத்திற்குச் செய்த அல்லது செய்துவருகிற சிறந்த உதவிக்காகவோ, அல்லது அவர்களின் சிநேகம் விரும்பப்படத்தக்கதாய் இருப்பதற்காகவோ, நிர்வாக சபையாரால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களாய் இருப்பார்கள்.

[illegible]இணை அங்கத்தினர்கள்—யாதவர்களல்லாதவர்களாயும், சங்[illegible]த்தின் நோக்கங்களிலே அனுதாபப்பட்டு அங்கத்தினர்களா[illegible]ப் பிரியப்பட்டவர்களாயு மிருப்பார்கள்.

ஊ—மாணுக்க அங்கத்தினர்கள்—கல்வி கற்கும் மாணவர்களாவார்கள். இவர்களுக்கு மாத்திரம் சந்தாக் கிடையாது.

4. பராமரிப்பு:—இச்சங்கப் பராமரிப்பு கீழ்க்கண்ட அங்கத்தினர்க ளடங்கிய ஒரு நிர்வாக சபையின் சுவாதீனத்திலிருக்கும். நிர்வாக சபை அங்கத்தினர்களின் பெயர். ஒரு சபாநாயகர், இரண்டு உதவிச் சபாநாயகர், ஒரு கௌரவ பிரதமகாரிய[illegible] ஒரு கௌரவ பொக்கிஷதார், ஆறு உள்ளூர் அங்கத்தினர்[illegible] இவர்கள் ஆண்டுதோறும் நடைபெறுகிற வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தெரிந்தெடுக்கப்பட வேண்டும்.

அவ்விதம் தெரிந்தெடுக்கப் பட்டவர்கள், சங்கவிதிக்கு உட்பட்டு நடப்பதாகத் தங்கள் நோக்கங்களை கௌரவப் பிரதமகாரியதரிசியோடு கூடிய, "சபா நாயகருக்கு" எழுதித் தெரிவித்துக்கொள்ள வேண்டும்.

சபையில் இடைக்கிடையேநேரிடும் காலியானஸ்த்தானத்திற்குத் தகுந்த மெம்பர்களைத் தெரிந்தெடுக்க நிர்வாகசபைக்கு அதிகாரமுண்டு. ஆனால் அவ்வித நியமனங்கள், அடுத்த பொதுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட வேண்டும். ஒரு நிர்வாக அங்கத்தினர், தொடர்ச்சியாய் மூன்று கூட்டங்களுக்கு வராதிருந்தால் அவருக்கு எச்சரிக்கை செய்து, சங்க க்ஷேமப்பண்டுக்கு அவரிடமிருந்து, அபராதத் தொகை வசூலிக்கவேண்டும்.

சங்கத்திற்குக் கூடியவரை ஒவ்வொருவரும் மெம்பராகச் சேர்ந்து சந்தாப் பணம் செலுத்த முற்படவேண்டும்.

சங்க நடவடிக்கைகள் பூராவும் தமிழில் நடத்தப்படவேண்டும்.

வருடாந்தப் போதுக்கூட்டம்—சங்கத்தின் வருடப்பூர்த்தியான சில தினங்களுக்குள் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெற வேண்டும். அக்கூட்டத்தின் விளம்பரத்தைப் பதினைந்து தினங்களுக்கு முன், அங்கத்தினர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். மேலும் கீழ்க்கண்ட விஷயங்களை அக் கூட்டத்தில் பரிசீலனை செய்து தீர்மானிக்க வேண்டும்.

கடந்த வருடத்தில் சங்க வாயிலாக மத அபிவிருத்[illegible] செய்த ஊழியமும், அதனாலேற்பட்ட முன்னேற்றமும், மற்றுமுள்ள அரியகாரியமும் யாதெனக்கவனித்துக் குறிப்பெழுதி யாதவப்பொதுமக்களுக்குத்தெரிவிக்கச்செய்யவேண்டும்.



ஆ. கடந்த வருடக் கணக்குகளைப் பரிசோதனை செய்து வரப்போகிற வருடத்திற்கு, நிர்வாக சபை அங்கத்தினர்களையும், ஒரு கணக்குப் பரிசோதகரையும் தெரிந்தெடுக்க வேண்டும்.

இ. கடந்த வருடத்தில் நமது குலப் பொதுஜனக் கோரிக்கைகளைச் சங்கத்திலிருந்து, கவனிக்கப்பட்டதா, அவைகளுக்குத் தக்க பரிகாரங்கள் செய்யப்பட்டதா என்று கவனிக்க வேண்டும்.

6. கூட்டங்களாவன—ஆறு மாதங்களுக்கு ஒரு முறையாவது பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறவேண்டும்.

அ. அவசியகாரணமாகவும் மத அபிவிருத்தியினிமித்தமும் எந்தத் தினத்திலாவது நிர்வாக சபையார் பிரத்தியேகப் பொதுக் கூட்டங்கள் நடப்பிக்கலாம்.

ஆ. மாதமொருமுறை நிர்வாக சபைகூடி "மத அபிவிருத்தி, கல்வி விருத்தி, நாகரிகம், தொழில், பொதுமக்கள் சௌகரியம், சுகாதாரம்," இவைகளைக் கவனிக்கவேண்டும்.

7. கூட்டங்கள் நடைமுறை—பொதுக் கூட்டங்கள், பிரத்தியேகப் பொதுக்கூட்டங்கள், வருடாந்தப் பொதுக்கூட்டங்கள் ,ஆகிய இவைகளை நடத்துவதற்கு, வாக்கு சுதந்திரமுள்ள அங்கத்தினர் களில் மூன்றில் ஒருபங்கு அங்கத்தினர்களாவது ஆஜராயிருத்தல் வேண்டும். நிர்வாக சபை நடத்த ஆறுபெயர்கள் தேவை.

8. தலைமைவகித்தல்—எல்லாக் கூட்டங்களிலும் சபா நாயகர் தலைமைவகிக்க வேண்டும். அவர் வராத காலங்களில் உதவி சபா நாயகர்களில் ஒருவர் தலைமைவகிக்க வேண்டும். இவர்களும் வராத காலங்களில், வந்திருக்கும் அங்கத்தினர்கள் போதுமானவர்களா யிருந்தால் தங்களில் யாரையாகிலும் ஒருவரை அக்கிராசனராகத் தெரிந்தெடுத்துக் கூட்டத்தை நடத்தலாம்.

(தொடரும்)

## தேரிருவேலி யாதவ வாலிப சங்கம்.

தேரிருவேலி யாதவ இளைஞர்களினிடையே சமூக நல்லுணர்ச்சியை உண்டுபண்ணும் பொருட்டு,
நானது பிரஜோத்பத்திஸு கார்த்திகைமீ 9உ செவ்வாய்க்கிழமை
அன்பர் சிலர் முயன்று ஒருகூட்டம் கூடினார்கள். அதன் முதல் கூட்டம்
ராமசுவாமி மண்டபத்தின் கீழ் ஸ்ரீமான் இ. பெரியகருப்பக் கோனார் அவர்
களின் தலைமையில் நடைபெற்றது. இச்சங்கத்திற்கு வாலிபர்கள் 37 பேர்
கள் இதுவரை சேர்ந்திருக்கிறார்கள். இக்கூட்டத்திற்கு ஸ்ரீமான் இ. பெரிய
கருப்பக் கோனாரவர்கள் தலைவராகவும் ஸ்ரீமான் பூ. பெரியசாமிக் கோனா
ரவர்கள் பொக்கிஷதாராகவும் நம் யாதவசர்க்கின் நா. முனியஸாமிக்கோனார்
காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள். அங்கத்தினர் ஒவ்வொரு
[illegible]ரும் மாதம் 2 அணாவீதம் செலுத்தவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

நா. முனியஸாமிக்கோனார், காரியதரிசி.

## யாதவ முனிஸிபல் கௌன்சிலர்கள்.

திருநெல்வேலி:— திரு அய்யம்பெருமாள் கோனார்.
திரு பெருமாள் கோன்.
திண்டுக்கல்:— திரு சொக்கலிங்கக் கோனார்.
பாளையங்கோட்டை:—திரு ராமசாமிக் கோனார்.
திரு S. ராமசாமிதாஸ்.
திருச்சி:—ஸ்ரீதோட்டா. திரு R. வேணுகோபால்செட்டியார்.
திரு ராமசாமிக்கோனார்.
திரு M: தாமோதரக் கோனார்.
திரு K. T. ஆறுமுகம்பிள்ளை (யாதவர்)

இவர்கள் போட்டா போட்டியின்றி பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப் பெற்று முனிஸிபல் கௌன்ஸிலர் ஸ்தானம் அடைந்திருக்கின்றனர் என்பதுணர்ந்து யாதவ சமூகம் மகிழ்வடைகின்றது. இவர்கள் குலமுன்னேற்றம் கருதிப் பேருதவிபுரிந்து வருகிற நம் குலமணிகள் ஆவார்கள். இவர்கள் இன்னும் இத்தகைய பல உயரிய பதவிகளை அடைந்து உடல் நலத்துடன் பல்லாண்டு இனிது வாழ நம்பெருமானது திருவடித்தாமரையை இறைஞ்சுவோமாக.

ப-ர்

### பாளையங்கோட்டை, யாதவகுல சங்கம்!

இச்சங்கத்தின் மாதாந்தரக்கூட்டம் நவம்பர் ஸ்ரீ 8உ ஞாயிற்றுக்கிழமை காலை 10-மணிக்கு, திருவாளர் ஈஸ்வரமூர்த்தியாபிள்ளை உபாத்தியாயர் (ஸெண்ட்க்ஸேவியர் காலேஜ்) அவர்கள் தலைமையின் கீழ் கனகவிலாஸ் மந்திரத்தில் மிக்க விமரிசையுடன் நடைபெற்றது.

திருவாளர் R. தருமர் அவர்கள் கல்வி என்பதைப் பற்றிப் பிரசங்கம் செய்தார்கள் அவர்களுக்குப்பின் திருவாளர் நவநீதன், M. சுப்பையா, C. M. ராமதாஸ், S. வானமாமலைக்கோன், S. A. பொன்னையாதாஸ் முதலியோர் பேசினார்கள். தலைவரவர்கள் முடிவுரையில் கல்வி என்பதுபற்றி விரிவாயும் தெளிவாயும் பல மேற்கோளுகளுடன் எடுத்துச் சொன்னார்கள்.

பின்னர் விஷயாலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

கோகுல லைப்பேரியிலுள்ள அங்கத்தினர்கள் தங்கள் லைப்பேரியிலுள்ள பணத்தில் ரூபாய் நான்கு மனமுவந்து நம் சங்கத்துக்குக் கொடுத்து உதவியதற்கு இச்சங்கம் அவர்களுக்கு நன்றி செலுத்துகின்றது.

கடைசியாக வாழ்த்துப்பாக்கள்பாடச் சங்கம் இனிது முடிவுபெற்றது

S. Venkatachalam காரியதரிசி.

## சமுதாயக் கிளர்ச்சிகள்.

### தஞ்சை.

1931ஹ டிஸம்பர்ஸ்ரீ 6உ ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்குத் தஞ்சாவூர் திரு. ராவ்பகதூர் ராமநாதன் செட்டியார் அவர்கள் ஹாலில் யாதவர்களின் பொதுக்கூட்டமொன்று கூடிற்று. அக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கும்படி திருத்துருப்பூண்டி K. V. ராகவபிள்ளையவர்களை திரு P. கந்தசாமிபிள்ளையவர்கள் பிரேரேபிக்க திரு R. வேங்கடாசலம்பிள்ளையவர்களால் அப்பிரேரேபனை ஆமோதிக்கப்பட்டது.

ஷை கூட்டத்தில் சென்னைமாகாண ஏழாவது யாதவர் மகாநாட்டை இத்தஞ்சையில் நடத்துவதுபற்றித் தலைவரவர்களும், நாகை திரு A. K. கோபாலசாமி பிள்ளையவர்களும் திரு R. வேங்கடாசலம் பிள்ளையவர்களும் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டார்கள்.

ஷை 7வது யாதவர் மகாநாட்டைத் தஞ்சாவூர் ஜில்லாவுக்காகத் தஞ்சை நகரில் நடத்துவதென டாக்டர் திரு T. குப்புசாமிபிள்ளையவர்கள் பிரேரேபிக்க திரு P. கந்தசாமிபிள்ளையவர்களால் ஆமோதித்து திரு A. K. கோபாலசாமிபிள்ளையவர்களால் ஆதரித்து இத்தீர்மானம் எல்லா யாதவமக்களுக்கிடையில் ஏகமனதாய் நிறைவேறியது.

ஷை மகாநாட்டை நடத்துவதற்காக நன்கொடைகள் மூலமாகவும் வரவேற்புக்கழக அங்கத்தினர்களிடம் ரூபாய் ஐந்துவீதம் நூறு டிக்கட்களும், பிரதிநிதிகளிடம் ரூபாய் ஒன்று வீதம் ஆயிரத்தைந்நூறு டிக்கட்களும் வெளியிட்டு வசூலிப்பதெனத் திரு S. வீராச்சாமிபிள்ளையவர்களால் பிரேரேபிக்க திரு T. A. பொன்னுச்சாமிபிள்ளையவர்களால் ஆமோதித்து இத்தீர்மானம் சபையோர்களால் ஏகமனதாய் நிறைவேறியது.

ஷை மகாநாட்டிற்கு வேண்டிய காரியங்களைச்செய்யக் காரியக் கமிட்டியாகக் கீழ்க்கண்ட பதினொரு திருவாளர்களை நியமிக்கப் பட்டிருக்கிறது.

1. திருத்துருப்பூண்டி — திரு K. V. ராகவபிள்ளையவர்கள்
2. மன்னார்குடி — திரு ஜகந்நாதபிள்ளையவர்கள்
3. நாகை — திரு T. M. ராஜகோபாலபிள்ளையவர்கள்
4. நன்னிலம் — திரு சௌரிராஜன் அவர்கள்
5. கும்பகோணம் — திரு S. G. வேங்கட்டராமன் அவர்கள்
6. தஞ்சை — திரு P. கந்தசாமிபிள்ளையவர்கள்
7. ஷை — திரு கோ. வேங்கடாசலம்பிள்ளையவர்கள்
8. ஷை — திரு T. A. பொன்னுச்சாமிபிள்ளையவர்கள்,

| | | |
|---|---|---|
| 9. | ஷை | திரு N. கோவிந்தசாமிபிள்ளையவர்கள் |
| 10. | ஷை | திரு A. வாசுதேவபிள்ளையவர்கள் |
| 11. | ஷை | திரு R. வேங்கடாசலம் பிள்ளையவர்கள் |

ஷை கமிட்டியில் திரு A. வாசுதேவபிள்ளையவர்களையும் திரு K. V. ராகவ பிள்ளையவர்களையும் ஜாயிண்ட் செக்ரடெரிகளாகவும், திரு P. கந்தசாமி பிள்ளையவர்களைப் பொக்கிஷதாரராகவும் தெரிந்தெடுக்கப்பட்டு திரு S. குப்பு சாமி பிள்ளையவர்களால் பிரேரேபித்து திரு கே. கந்தசாமிபிள்ளையவர் களால் ஆமோதிக்க இத் தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது.

திரு R. லக்ஷ்மிநாராயண பிள்ளை.
காரியதரிசி.

## பாளையங்கோட்டை:

நாளது டிசம்பர்மீ 6வ ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்குப் பாளையங் கோட்டை முனிசிபல் தேர்தலில் வெற்றி பெற்ற (1) மகா.ா.ா.ஸ்ரீ ராமசாமிக்கோனார் அவர்கள் (2) S. ராமசாமிதாஸ் அவர்கள். (Teacher St. Xavieer's College) ஆகிய இரண்டுபேர்களுக்கும் இச்சங்கத்தின் சார்பில் உபசாரப்பத்திரம் கனகவிலாஸ் ஹாலில் வாசித்துக் கொடுக்கப்பட்டது.

அவ்வமயம் அன்பர் S. வானமாமலைக்கோன் குலசேகராழ்வார் வைப வம் என்பது பற்றிப் பிரசங்கம் செய்தார்கள். ஒற்றுமையாகத் திருவாளர் S. H. பொன்னையாதாஸ் அவர்கள் பேசினார். ஸ்ரீ திருமலைசாமி ஐயங்கார் அவர்கள் Tamil Pandit St. Xavieer's College அக்கிராசனம்வகித்தார்கள்.

திரு. S. வெங்கடாஜலதாஸ்.
காரியதரிசி.

## (ஜார்ஜ் டவுன், சென்னை)

சென்ற டிசம்பர்மீ 29ந் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 5-மணிக்கு, சென்னை, ஜார்ஜ் டவுன், யாதவ வாலிப சங்கத்தார், செங்கோட்டையில் நடந்த சென்ற ஆறாவது யாதவ மகாநாட்டுக்கு வரவேற்புக் கழகத்தலைவரா யிருந்து அம் மகாநாட்டை எம் மகாநாட்டுக்கும் நிகரற்றதாகும்படி அவ்வளவு சிறப்புடன் நடத்தி வைத்தவராகிய திருவாளர். எஸ், சட்டநாதக் கரை யாளர் எம். ஏ., பீ. எல்., எம். எல். சி. அவர்களுக்குப் புரோகிரசிவ் யூனியன் ஸ்கூல் ஹாலில் வரவேற்பு உபசாரம் நடத்தினார்கள். திரு. எஸ். முத்துக் கிருஷ்ணதாஸ் பீ. ஏ., எல். டி., திரு. மருதநாயகம்பிள்ளை கடையநல்லூர் ஜமீன், திரு. கா.. தேசிகப்பிள்ளை புதுவை. இவர்களும் வரவேற்கப் பட்ட னர். திரு. ராஜாஜிப். டி. சி. ஆதிகேசவலுபிள்ளை. பீ. ஏ., பி. எல்., வேர



தம் பிள்ளை, அட்வொகேட், திரு. டி. எஸ். வேணுநாதக் கோன், எப். சி. ஐ., எம். ஆர். ஏ. எஸ், திரு. எஸ். ஆர். குருசாமிபிள்ளை, மெட்ரூஸ் மெயில், திரு. எம். சித்தாராம்பிள்ளை. மெட்ரூஸ் மெயில், திரு. பி. எம். ராம கிருஷ்ணபிள்ளை, திரு. எஸ். ரத்னவேலுக் கரையாளர், செங்கோட்டை, திரு. கண்ணபிரான்பிள்ளை, பீ. ஏ., திரு. சி. வி. திருவேங்கடம்பிள்ளை. திரு. ஏ. சடகோபப்பிள்ளை, இன்னும் அநேக குலமக்களும், ஜார்ஜ் டவுன் சங்கத்தின் தலைவர், உபதலைவர்களும், குழுமியிருந்தனர்.

முதலில் புகைப்படம் எடுக்கப் பட்டதும், விகட சம்பாஷணைகளினால் விருந்தினரையும், மற்றமுள்ளோரையும் சந்தோஷிப்பித்தார். பிறகு சிற் றுண்டி அருந்தி இனிது முடிவுற்றது. திரு. சி. ராதாகிருஷ்ண பிள்ளை அவர்கள் தலைமைவகித்தார். கடவுள் வணக்கம் ஆனதும் விருந்தினரெல்லாம் மாலைகள் சூட்டப்பெற்று உபசாரம் செய்யப் பட்டனர். திரு. வி. ஆர். வரதப்பிள்ளை அவர்கள் பீ. ஏ., எல். சட்டநாதக் கரையாளருடைய குடும் பத்தின் பெருமையைப் பற்றியும், அவர்கள் யாதவமக்களுக்காகச் செய்து வரும் அரும்பெருங் காரியங்களைப் பற்றியும், மேற்சொன்னோருடைய குண விசேஷங்களைப் பற்றியும் பேசினார். பின்பு, ஜார்ஜ் டவுன் வாலிப சங்கம் செய்துவரும் தொண்டுகளைக் குறித்தும், முக்கியமாய் ஏழைமக்களுக்கு உப காரச்சம்பளம் கொடுத்தற் பொருட்டு ஓர் நிதிசேகரத்தைப்பற்றியும், அதற் காகவே மேற்படி சங்கத்தார் 'சீதா கல்யாணம்' என்னும் நாடகத்தைக் கூடிய சீக்கிரம் நடத்தப் போவதைப்பற்றியும், தற்பொழுது அண்ணாப் பிள்ளைத் தெரு, கார்ப்பொரேஷன் பள்ளிக்கூடத்தில் மாலை 6-மணிமுதல் 8-மணிவரையில் தினந்தோறும் எல்லோருக்கும் ஓர் இரவு இலவசபாடசாலை நடந்து வருவதைப்பற்றியும், இவைகளுக்கெல்லாம் நிதி அவசியமென்றும், இந்நகரின் கண்ணுள்ள யாதவப் பெருமக்கள், கோவில்களுக்காகவும், உற் சவங்களுக்காகவும், பெருந்திரவியம் செலவழிக்கத் தயாராயிருக்கிறார்களே யன்றி சமூக முன்னேற்றத்திற்காக ஓர் சிறிதும் கவனிக்காமலிருப்பது விசனிக்கத் தக்கது என்றும் கூறினார். கடைசியாகச் சமூக முன்னேற்றங் கருதி ஒவ்வொரு யாதவரும், தன் தன் நிலைமைக்கு ஏற்றவாறு சரீர சகா யமோ, அல்லது திரவியசகாயமோ ஒவ்வொருவரும் கண்டிப்பாகச் செய்து தரவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார்.

பின்பு திரு. டி. சி. ஆதிகேசவலு பிள்ளை, பீ. ஏ., பி. எல், யதுகுல மகாசங்கத்தின் தலைவர் அவர்கள், ஜார்ஜ் டவுன் கிளைச்சங்கமானது சமூக முன்னேற்றங்கருதி ஆற்றிவரும், பல செயல்களைப்பற்றியும், சீக்கிரத்தில் நடைபெறப்போகும் சீதாகல்யாணம் என்னும் நாடகமானது நிதி சேகரம் செய்யத்தக்க ஏற்றதோர் உபாயந்தான் என்றும் கூறினார்.

திரு. எல். சட்டநாதக் கரையாளர். எம். ஏ. பி. எல், சி. திருவாங்கூர், விருந்தினர் அவர்கள், சங்கத்தார் வரவேற்புக்குத் தன் சந்தோஷத்தைப் பற்றியும், எல்லா வாலிபச் சங்கங்களிலும், ஜார்ஜ் டவுன் சங்கமே உன்

மையாகச் சமூக முன்னேற்றங்கருதிப் பற்பல தொண்டுகள் புரிந்து வரு[illegible]தாயும், அதனால் நம் யாதவ சமூகமானது சீக்கிரத்தில் ஒற்றுமை யடைந்து பலப்படுமென்றும், வாலிபர்கள்தான் அவ்வாற்றல்களுக்குத் தகுந்தவர்கள் என்றும் கூறிச் சங்கம் செய்துவரும், பற்பல காரியங்களுக்குத் தன் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டார்.

அவைத்தலைவர் தம் முடிவுரையில் திரு. சட்டநாதக் கரையாளர் அவர்கள், திருவாங்கூர் சட்டசபைத் தேர்தலில் வெற்றிபெற்றது குறித்துக் களிபேருவகை கொள்வதாகவும், வகுப்புப் போட்டிமிகுந்துள்ள இச் சமயத்தில் அவரடைந்த வெற்றி, நமது சமூகத்திற்கே, ஏற்பட்ட ஓர் வெற்றியென்றும், அவர் தம்மைப் பெரும்வாரியான வாக்குரிமைகளால் தேர்ந்தெடுத்த வாக்காளர்களுக்குத் தொண்டு புரிவதோடு, நமது குல மக்களின் முன்னேற்றங்கருதியும், மேற்படி சட்டசபையில் வேண்டிய தொண்டு புரியுமாறும், வேண்டிக்கொண்டார். காலஞ்சென்ற ராவ் சாகிப். சுப்ரமணியக் கரையாளர் அவர்கள் செங்கோட்டையில் ஸ்தாபித்த உயர்தரப் பாடசாலையை, எஸ். சட்டநாதக் கரையாளர் அவர்கள் இடையறாது நடந்து வருவதற்கேற்ற முறைகளை அனுஷ்டித்து வருவது பற்றியும், இன்னும் பலதருமங்கள் செய்வதைப் பற்றியும், அவரைக் கொண்டாடியது மல்லாமல், சென்னை, ஜார்ஜ டவுன் யாதவர் இளைஞர் சங்கம், மேற்கொண்டுள்ள சமூகத்தொண்டாற்றுகளைக் குறித்தும், குறிப்பிட்டு, அவைகளுக்கேற்ற உதவி புரியுமாறும், வேண்டிக்கொண்டதோடு, சட்டநாதக் கரையாளர் அவர்கள், நீண்ட ஆயுளும், நீங்காத செல்வமும் பெற்று பெரும்புகழடையுமாறுமாறும், ஆயர்குல விளக்காம் மாயமுகில் வண்ணனாகிய கண்ணபிரானை வேண்டிக்கொண்டார்.

காரியதரிசி கு. மணிவண்ணப் பிள்ளை அவர்கள் எல்லோருக்கும் வந்தனமளிக்கையில், திரு. எம். சீத்தாராம் பிள்ளை அவர்கள் நாடகம் நடத்தும் பொருட்டு, எடுத்துக்கொள்ளும் பிரயாசையைப் பற்றியும், விருந்தினரெல்லோரும், நெடுங்காலம் இனிது வாழுமாறு கடவுளைப் பிரார்த்தித்ததுமன்றி, சில சமயங்களில் சங்கத்தார் அவர்கள் உதவியை நாடிச் செல்லக் கூடுமென்றும், கூறி வந்தனோபசாரம் அளிக்கக் கூட்டம் இனிது முடிந்தது.

## ஓர் நன்கொடை.

### யாதவ இளைஞர் சங்கம்.

ஜார்ஜ் டவுன், சென்னை.

சென்னை நகரவாசியாகிய காலஞ்சென்ற திருவாளர் பெரும்பாடு துரைசாமிப்பிள்ளை அவர்களுடைய திருக்குமாரத்தியாகிய மிஸ். பி. கமலம்மாள் என்பவர்கள், மேற்படி சங்கம் நடத்திவரும் இரவு இலவச பாடசாலையின் மூலதன சேகரத்தின் பொருட்டு நன்கொடையாக ரூ. 10. அனுப்பி வைத்தார்கள். நம் குலப்பெண்ணொருவர் கல்வியின் அபிவிருத்தியின் பொருட்டு இவ்வளவு ஊக்கம் எடுத்துக்கொண்டு உதவி புரிந்தமைக்காக சங்கத்தார் தங்கள் சந்தோஷத்தையும், நன்றி யறிதலையும் செலுத்துகின்றனர். நம் குலமக்கள் அனைவரும் இவ்வாறே இலவச இரவுப் பாடசாலைக்கு உதவி செய்யுமாறு மிகத் தாழ்வுடன் வேண்டிக்கொள்கிறோம்.

கு. மணிவண்ணப்பிள்ளை. பீ. ஏ. காரியதரிசி.



## சந்தோஷச் செய்திகள்.

### திரு. ரா. தேசிகன்.

1. புதுச்சேரியினின்று பிராஞ்சு கொச்சின் சைனா மித்தோ என்ற நகருக்குச் சென்று, அங்கு சுமார் 30 வருடகாலமாகப் பிரபல கவர்ன்மெண்ட் கண்ட்ராக்டராகவும், அரசியல் வாதியாகவும் இருந்துவரும் திருவாளர் முத்து. கோவிந்தராசுபிள்ளை அவர்களுக்குப் பிராஞ்சுக் குடியரசுத் தலைவர் ஷெவாலியே-தெ-லா-லெழியோந்தேனேர் (Chevalier de la Le'giond' honneur = Knight) என்னும் பட்டத்தை அளித்திருக்கிறார். புதுச்சேரியிலிருந்து கொச்சின் சைனாவுக்குப் போகும் இந்தியர் பலருக்கு ஸ்ரீமான் பிள்ளை அவர்கள் பேருதவிகள் பல புரிந்து வருகிறார். அத்தேசத்தில் அவர் அரசியல் கக்ஷித் தலைவராயிருந்து வருவதால் அரசாங்கத்தாரிடம் அவருக்குச் செல்வாக்கு அதிகமாக இருந்து வருகிறது. பிரஞ் இந்திய யாதவர்களில் இவரே மேற்படி பட்டத்தை முதன் முதலாகப் பெற்றிருக்கிறார். அவரைப்பாராட்டிப் புதுவை யதுகுல சங்கத்தார் அவருக்கு ஒரு வாழ்த்துக் கடிதம் அனுப்பியிருக்கின்றனர்.

2. புதுவை எல்லையம்மன் தேவஸ்தான நிர்வாக சபையில் ஏற்பட்ட காலிஸ்தானத்துக்குப் பிரஞ் இந்தியா கவர்னர் புதுவை யாதவ சங்கத்தின் அங்கத்தினரும், ரிடையர்டு சர்வேயருமாகிய திரு அ. கிருஷ்ணசாமிபிள்ளை அவர்களை நியமித்திருக்கிறார். இந்நியமனம் மிகவும் பாராட்டத்தக்கது.

## மாதர் பரிசு.

### தேர்ச்சி விவரம்.

சுக்லவருஷம் ஐப்பசிமாதம் முதல் பிரமோதூதவருஷம் ஆடி மாதம் வரை பிரசுரம் செய்யப்பட்டிருந்த மாதர்பரிசில் தேர்ச்சி பெற்றவர்களுடைய பெயரும் விலாசமும் பரிசு விவரமும் இதனடியில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவர்களுடைய வியாசங்கள் அடுத்த மித்திரனில் வெளிவரும்.

பரிசாளர் காந்திதாஸன், பர்மா.

| விஷயம். | பெயரும் விலாசமும். | பரிசுத்தொகை |
|---|---|---|
| மாதர்கடமை. | ஸ்ரீமதி தங்கம்மாள்: முடவன்குளம், ராதாபுரம் P. O திருநெல்வேலி. | 10—0—0 |
| பெண்மக்கள் நிலை. | ஷை யார் | 10—0—0 |
| பெண்உலகு. | A. ரங்கசாமிநாயுடு (யாதவர்) குமாரத்தி, ஸ்ரீமதி நாகரத்தினம்மாள் தச்சநல்லூர், | 10—0—0 |
| மாதர்கள்முன்னேற்றம் | ஸ்ரீமதி செண்பகவல்லித்தாயார். C/o K. லக்ஷ்மணசாமி பிள்ளை நீர் 22, காமாண்டித்தெரு, பாண்டிச்சேரி. | 10—0—0 |

தஞ்சை, யாதவர் சங்கம்!

27—9—31 ஞாயிற்றுக்கிழமை காலை 9-மணிக்கு இச்சங்கத்தின் நிர்வாக சபையார் கூட்டம்கூடி 1—142 முதல் 156 முடிய உள்ள விண்ணப்பங்களின் திருவாளர்களை அங்கத்தினர்களென அங்கீகரித்தும் 2 நப்பர் லீடாம் பின் கிரயமொப்பியும்3—154நிர் திருவாளர்களை நிர்வாக சபையினராக அங்கீகரித்தும் 4—28—9—31 முதல் நிர்வாக சபையார் ஒன்று சேர்ந்து அங்கத்தினர்களைச் சேர்த்தல், சந்தாத்தொகையை வசூல் செய்தல் முதலியன செய்வதெனவும்; ஏகமனதாய்த் தீர்மானங்களாயின.

R. Letchiminarayanan. காரியதரிசி.

## வாலிபர் உலகு!

# இளைஞர் பரிசு!

1. இளைஞர் கடமை என்பது யாது?
2. பெண்மக்களுக்கேன் சம உரிமை வேண்டும்?
3. யாதவரென்போர் யார்?
4. கலப்பு மணமேன் செய்தல் வேண்டும்?
5. ஆணுக்குப் பெண் அடிமையா?
6. விதவா விவாஹம் வேண்டற்பாலதே!
7. பெண்ணுக்கும் ஆண்மை வேண்டும்!
8. மாதர் மறுமணம் யாதளிக்கும்?
9. இளமை மணமேன் ஏற்றதல்ல?
10. யாதவ தருமம் என்ப தியாது?

என்னும் பத்துக் கட்டுரைகளையும்“யாதவமித்திரன்”பத்திரிகையில் “வாலிபருலகு” என்னுந் தலைப்பில் எழுதியனுப்புவோருக்குப் பத்துப் பரிசு வழங்கப்படும். கட்டுரை எழுதுவோர் சந்தாதார்களாகவும் இருபது வயதுக்கு உட்பட்டவர்களாகவு மிருக்கவேண்டும். ஒவ்வொரு கட்டுரைகளும் பத்திரிகையில் வெளியானவுடன் “ஸ்ரீ கோபால் மஹாலி”லிருந்து பரிசுகளளிக்கப்படும். கட்டுரையுதவுவோர் இதில் எதைவேண்டுமானாலும் முதலில் எழுதியனுப்பலாம். பெண்மக்களுக்கு ஏற்கனவே இடமளித்துவிட்டபடியால் இதில் அவர்கள் கலக்கக்கூடாது. இது சம்பந்தமாக எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக்கொள்ளப் படமாட்டாது. மார்ச்சு மாதத்துக்குள்ளாக அனுப்ப வேண்டும்.

காந்திதாசன் பர்மா.

160 H

## யாதவ மித்திரன் சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| இந்தியா, சிலோன், பர்மா முதலிய உள்நாட்டிற்கு ஒரு 1-க்கு | ரூ | 1—0—0 |
| பினாங்கு சிங்கப்பூர், முதலிய வெளிநாட்டிற்கு ஒரு 1-க்கு | ரூ | 1—8—0 |

தனிப்பிரதி விலை அணா 2.

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தாக் கிடையாது.

மாதிரிப் பிரதி வேண்டுவோர்
இரண்டரையணா, தபால் தலை அனுப்பவேண்டும்.

1. சந்தாதாராய்ச் சேர்கின்றவர்கள் பெயரையும் விலாசத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

2. எப்பொழுதும் சந்தாத் தொகையை முன் பணமாகச் செலுத்தவேண்டும். வி பி. மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். சந்தாத்தொகையை முன்பணமாக மணியார்டர் செய்தால் 2-அணாத்தான் செலவாகும். வி. பி. மூலம் பத்திரிகையை வரவழைப்பதில் 3-அணா அதிகச் செலவாகும். ஆதலால் முன்னாடி மணியார்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்வதே நலம்.

3. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் அவ்வருஷ ஆவணி மாதம்முதல் கணக்கு வைக்கப்பட்டு ஆவணி மாதப் பத்திரிகை முதல் சேர்த்தனுப்பப்படும்.

4. யாருக்கேனும் சஞ்சிகை வந்து சேராவிட்டால் அம் மாதமுடிவிற்குள் தங்கள் சந்தா நம்பருடன் தெரிவித்துப் பெற்றுக் கொள்ளலாம். அதற்குப் பின்னர் தெரிவித்தால் விலை செலுத்தியே பெற்றுக் கொள்ளவேண்டும்.

5. இடம் மாறும் சந்தா நேயர்கள் தங்கள் புது விலாசத்தைத் தெரிவித்து, அது விபரத்தைத் தபாலாபீஸாரிடமும் அறிவித்துவிட வேண்டும்.

6. சந்தா நம்பரைக் குறிப்பிடாத கடிதங்களைக் கவனிக்க முடியாது. பதில் விரும்புவோர் தபால் தலை அனுப்பவேண்டும்.

### விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| 1-பக்கத்திற்கு | ரூ | 10—0—0 |
| ½-பக்கத்திற்கு | ரூ | 5—8—0 |

நீண்டகால விளம்பரங்களுக்கு யாதவ மித்திரன் ஆபிஸிற்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

ஐந்தாவது யாதவமகாநாடு போட்டோ படங்கள்.
வேண்டியவர்கள் யாதவமித்திரன் ஆபீஸுக்கு விபரமாகத் தெரியப்படுத்துவதுடன் முன் பணமாக ரூ 1—5—0 மணியார்டர் மூலம் அனுப்பிவைக்கவும்.

யாதவ மகா ஜனங்களுக்கு ஒரு

# வேண்டுகோள்.

---

யாதவ சகோதரர்களே!

நமது யாதவ மித்திரன் கல்வி, பொருளாதாரம், ஆசா சீர்திருத்தம் முதலிய துறைகளில் சிறந்த அறிஞர்களால் எழுதப் பெற்ற அருமையான கட்டுரைகளைக்கொண்டு யாதவ மக்களின் முன்னேற்றத்தையே முக்கியமாகக் கருதி மாதம் ஒருமுறை வெளி வருகின்றது.

எல்லா யாதவ மக்களும் உடனே சந்தாதாராய்ச் சேர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

எல்லா யாதவ மக்களிடமும் யாதவமித்திரனைப் பரவச் செய்தல் சமுதாயப் பற்றுடையவரின் முதற்கடமையாகும்.

யாதவமித்திரன் நம்மவர் வாழும் ஒவ்வொரு கிராமங்களிலும் உலாவவேண்டும். ஒவ்வொரு யாதவரிடத்திலும் யாதவமித்திரன் மாதாமாதம் சமுதாய விஷயங்களைத் தெரிவிக்கும்படி செய்ய வேண்டும். இதுவே சமுதாயச் சீர்திருத்தத்திற்கு அறிகுறி.

இப்பொழுது விலாசந் தெரிந்த சிலருக்கே பத்திரிகை அனுப்பப்பட்டிருக்கிறது. ஏனையோர் விலாசந் தெரிவித்துப் பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆகையால் யாவரும் பத்திரிகை படித்துப் பயன் பெறுமாறும், இப்பத்திரிகையை வாசிக்கும் அன்பர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்குத் தெரிந்த பத்திரிகை படிக்கும் ஆற்றலுள்ள நமது யாதவ சகோதரர்களின் விலாசங்களைத் தயைசெய்து எழுதியனுப்புமாறும் வேண்டுகிறோம்.

மானேஜர்,
**யாதவ மித்திரன் ஆபீஸ்,**
**ஸ்ரீ கோபால் மஹால்,**
**வடக்குச்சித்திரை வீதி, மதுரை.**

எக்ஸெல்வியர் பவர் பிரஸ், மதுரை:-1931.

600 008